# கைவிடாத கடவுள்

---

வி. டி. சகாயம்.

[பதிப்புரிமை ஆக்கியோனுக்கே.]

*1965*

Linguist;
velly
stian Books;
umenical Theology
as a token of
and fellowship
years.

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக *(மத்தேயு 10:8)* உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

*95* சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வழியில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*


*WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599*

*Email: wordofgod@wordofgod.in*

Dedicated to the
Rt. Rev. Dr. STEPHEN NEILL, M.A., D.D.

Renowned Scholar, Author and Linguist;
formerly Bishop of Tinnevelly
and General Editor, World Christian Books;
and now Professor of Missions and Eucumenical Theology
at the University of Hamburg, as a token of
gratitude for Christian friendship and fellowship
with the author over many years.

pp. 132, 177, 213.

# நூன்முகம்

கடவுள் தமது வேலைக்கு மக்களைத் தெரிந்தெடுக்கும் முறைகளும், அவர்களை ஆயத்தப்படுத்தும் வழிகளும் வெவ்வேறானவை. அவற்றில் ஒருமுறை இந்நூலில் எனது வாழ்க்கைமூலம் வெளியிடப்படுகிறது.

ஏறக்குறைய நாற்பதாண்டுகளாக இதின் குறிப்புகள் எழுதப்பட்டன. 1925ல் தொடங்கி 1964ல் அவை முடிகின்றன. ஆண்டவர் கொடுக்கும் தாலந்துகள், வாய்ப்புகள், அவற்றை நிறைவேற்றுவதில் ஏற்படும் இன்னல்கள் யாவும் அவர் சித்தம் நிறைவேறவே ஒருமித்துச் செயல்படுகின்றன. உலகம் முழுவதும் ஒருவனுக்கெதிர்த்து நின்றாலும், உள்ளதை உள்ளதென்று கூறும் பழக்கமுடையோருக்கு ஏற்படும் சிக்கல்களையும், அவற்றினின்று கடவுள் அவர்களைத் தப்புவிக்கும் முறைகளையும் இதில் காணலாம்.

அத்தகையவர்களுடைய பற்பல தவறுதல்களைக் கூடப் பொருட்படுத்தாமல் கடவுள் தம் நோக்கத்தை நிறைவேற்றுவதையும், அவருடைய பிரதிநிதிகள் சிலர் அவ்வடியார்களைப் பகைப்பதையும், மறுபடியும் பிறவாத ஜென்மச் சுபாவத்தார் பலர் பல இடங்களில் இன்றையச் சபைத் தலைவர்களாக அமைந்து அதிகாரஞ் செலுத்துவதையும் இந்நூல் சுட்டிக் காட்டலாம்.

இந்நூலில் தென் திருவாங்கூரில் ஐம்பது ஆண்டுகளுக்குமுன் நிலவிய வாழ்க்கை முறை, சாதிக்கொடுமை, திருச்சபை நிருவாகம் போன்றவைகளும், மொழியாராய்ச்சிக்குரிய சில புதுமைக் கருத்துக்களும் இடம் பெறுகின்றன.

பெருமைக்கென்று இந்நூல் எழுதப்படவில்லை. உத்தம இருதயத்துடன் கடவுளைத் தேடிக் கண்டடைந்து அவர் நடத்தும் வழிகளில் அஞ்சாமல் செல்லத் துணியும் வாலிபர் சிலராகிலும் எழவேண்டுமென்பதே எனது நோக்கம். ஆண்டவருடைய கரத்தில் தங்களை முற்றிலும் ஒப்புவித்துவிடுகிறவர்களை அவர் ஒருநாளும் கை

விடுகிறதில்லை என்னும் ஒரே கருத்து இந்நூல் முழுவதிலும் நிலவியிருப்பதால் இதற்கு "கைவிடாத கடவுள்" என்ற பெயர் கொடுத்தேன்.

இந்நூலை எழுதியது நான். அதைத் திருத்தியது பலர். அவர்களுள் என் மனைவியே முதலிடம் பெறுவர். வாழ்க்கை முழுவதும் என்னைத் திருத்திவரும் அவர்களது ஆலோசனையால், சிற்சில நிகழ்ச்சிகளைப் பிறர் அறிந்திருப்பது நல்லது என நான் எண்ணியும், அவை பிறருக்கு நோவூட்டும் எனக்கருதி கூறாமல் விடுத்தேன். இப்புத்தகத்தின் அட்டைப்படத்தை வரைந்து அதை அழகுபடுத்திய எனது நண்பரும், அயலகத்தாரும், ஆண்டவருக்குள் எனது சகோதரருமாகிய கே. சந்திரசேகரன் அவர்களுக்கும்; கைப்பிரதியைப் பலமுறைப் படித்துத் திருத்தம் செய்ய உதவின ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியரும், 'தேசோபகாரி'யின் துணையாசிரியரும், எனது நண்பருமான இரா. குட்டிக்கண், எம்.ஏ. அவர்களுக்கும்; இந்நூல் முழுவதையும் அச்சுத்தொகுப்புக்கேற்ற முறையில் அழகாய் எழுதிக்கொடுத்தத் திருமதி ஆனி டானியல் அவர்களுக்கும்; அதைப் படித்துப் பொறுமையுடன் தமிழிலக்கணப் பிழைபோக்க உதவிய ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரித் தமிழாசிரியர் த. இயேசுதாஸ், எம்.ஏ. அவர்களுக்கும்; இந்நூலினை அழகிய முறையில் அச்சிட்டு உதவிய லண்டன் மிஷன் அச்சகத்தினருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நாகர்கோவில்–3,
ஏப்ரில், 1965.

---

# உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| நாட்டுச் சிறப்பு | 1 |
| குடும்பம் | 10 |
| பிள்ளைப் பருவத்திலே | 21 |
| இராவழி நடந்தேன் | 35 |
| திருந்தவில்லை | 49 |
| வேலை வந்தது | 59 |
| மருத்துவப் படிப்பு | 68 |
| ஊழியத் தொடக்கம் | 78 |
| ஆப்பிரிக்காவில் | 104 |
| மருந்தருந்தாப் பக்தி | 112 |
| கண்ணோடு கண்ணினை | 129 |
| பேய்களைத் துரத்துதல் | 135 |
| மெய்ஞ்ஞானபுரம் | 151 |
| ஆத்ம தத்வம் | 161 |
| கல்லூரி மாணவன் | 179 |
| என்.எம்.எஸ். | 202 |
| அசரியா பிஷப்புடன் | 214 |
| தொண்டர் நடுவில் | 230 |
| இதைப் படிக்கவேண்டாம் | 264 |
| யோசேப்பை அறியாத பார்வோன் | 281 |
| இன்னலுக்குள் மின்னல் | 298 |
| சிற்சில கடிதங்கள் | 305 |
| நாகர்கோவில் வந்தேன் | 313 |

# நாட்டுச் சிறப்பு

மாதந்தவறினும் மழைதவறு மலையாள நாட்டின் புகழைப் புலவர்களாலும் தெளிவாகக் கூற இயலாது. மாவும், பலாவும், மற்றுங்கனி மரங்களும், தென்னையும் கமுகும் அடர்ந்து வளரும் காடு இது. அடுக்கடுக்காகத் தொடர்ந்தெழும் எண்ணற்ற குறு மலைகளும், சிறு நதிகளும் எவ்வெவர் கண்களையுங் கவரும். திருவனந்தபுரம்—கன்னியாகுமரிச் சாலையில், இருபத்தேழாம் மைல் பக்கம் இரவிபுதூர்க்கடைக்கும், காஞ்சிரபுரம் (கோடு) என்னும் ஊருக்கும் இடைப்பட்ட இடத்தினின்று வடக்கு நோக்குகையில் காணுங்காட்சியைக் கண்படைத்தோர் என்றும் மறவார்.

இவ்விடத்திலிருந்து எதிட்டுப் பார்க்கையில் பற்பல சிறு குன்றுகளும், இடையிடையே வயல் நிலங்களும் பச்சைப்பசேரெனக் கண்ணைக்கவரும். வனைத் தொழுஉம் கோதை, பறளி (தாம்பிரபரணி) என்ற இரு ஆறுகள் வெவ்வேறு திசைகளிலிருந்து மூன்று மைல்களுக்கப்பால் மூவாற்றுமுகம் என்னுமிடத்தில் ஒன்று சேருகின்றன. அங்கிருந்து இரண்டு மைலுக்குக் கிழக்கில் ஒவ்வொரு ஆற்றிலும் ஒரு நீர்வீழ்ச்சியுண்டு. மழைகாலங்களிலும், பெருவெள்ள வேலைகளிலும் அவற்றின் இரைச்சல் கடலிரைச்சலுடன் போட்டியிடுவது இராக்காலங்களில் கேட்கப்படும். வானின்று கீழ் நோக்கின், இருவால்களையுடைய ஒரு பாம்பு சீறியோடுவதெனத் தோன்றும். ஏழு மைலுக்கப்பால் தேங்காய்ப்பட்டினத்தில் கடலில் கருநீரை இந்நதி இறைக்க முயல்கையில், கடல் எனக்கு வேண்டாம் என்றாற்போல் தன் உயர்ந்த அலைகளால் ஆற்றை உந்தித்தள்ளும்.

பெருவெள்ளக் காலங்களில் மலைகளின் வள்மை பூண்ட இயற்கை உரங்களை இவ்விரு ஆறுகளும் கொண்டு வந்து கரையோரங்களை மிகச் செழிப்பாக்குகின்றன. தென்னையும் கமுகும் திரண்டு வளரும் அச்சோலைகளை மக்கள் தோட்டவாரம் என்றழைப்பர். செழிப்பான இடங்களுக்கிடும் பொதுப்பெயர் இது. காரணப்பெயரென்ற அளவில் பற்பல இடங்களைத் தோட்டவாரம் என்றழைப்பர். எனினும் இக் காரணப்பெயரையே தன் பெயராகக்கொண்ட தோட்டவாரம் என்ற ஒரு ஊர் இவ்வாற்றுச் சந்திப்பில் இருக்கிறது. சில நடுப்பகல் வேளைகளிலும் கூடச் சூரியனைக் காண இயலாவண்ணம் சோலைகள் அங்கு அருணனை மறைக்கும். தென்னை மரங்களின் காய்கள் மிகுதியாயும், பருத்துமிருக்கும். காற்றில், ஒன்றையொன்று பிணைந்தாற்போல் ஆடிவிளையாடும் நெட்டையான பாக்கு (கமுகு) மரங்களில் சிறுவர் ஒன்றினின்று இன்னொன்றில் எளிதாய்த் தாண்டுவர். பலா, ஆயினிமரத்தின் பழங்களைத் தின்பாரின்றி ஆற்றில் மிதித்துக் கழுவி, அவற்றின் கொட்டைகளை மட்டும் பாதுகாக்க மக்கள் எண்ணுவர். தானாய் விழுந் தேங்காய்களை வழிப்போக்கர் எவரும் எடுத்துச் செல்லலாம். வண்டினங்கள் அங்கு ஓயாத ரீங்காரம் செய்யும். பறவைகள் பல, இனிமையாய்ப் பாடும். இயற்கையழகில் மகிழ்ப்பழகினோர் இவ்விடத்தைக் கண்டால் இங்கேயே கூடாரமடிப்பது நல்லது என்று எண்ணுவர். அந்தத் தோட்டவாரமே நான் பிறந்த ஊர். அங்கு யாவும் அழகே. மனிதனின் குணமும் அவ்வாறிருப்பின்....!

அழகே உருவெடுத்தாற்போல் தோன்றும் இப் பகுதியில் என்னைத் தோன்றச் செய்த அழகிற்சிறந்த கோமானை நான் இன்றும் என்றும் போற்றித் துதிப்பேன்.

---

# ஊரும் பேரும்

பாட்டாளி, கூட்டாளி, தொழிலாளி, முதலாளி போன்ற சொற்களில் வரும் 'ஆள்' அதே கருத்தில் 'மலையாளி' என்ற சொல்லிலும் வருகிறது. மலைத்தொடர்புடைய மக்கள் மலையாளிகளெனப்படுவர். மலைநாட்டை ஆளுகிறவன் என்றோ, மலைக்கும் ஆழ் கடலுக்கும் இடைப்பட்ட நாட்டிலிருப்பவனென்றோ மலையாளி என்ற சொல்லுக்குப் பொருளில்லை. வட ஆற்காட்டின் ஜவ்வாது மலைகளில் தங்குவோர் இன்றும் மலையாளிகளென்றே அறியப்படுகின்றனர். அங்கு மலையாள மொழியேயில்லை. கடலும் நெடுந்தூரத்திலேயே உள்ளது. நாளிகேர மரங்கள் (தென்னை) நாடெங்குந் தோப்பு (தொகுப்பு) களாகக் காணப்படுவதாலும், அது அந்நாட்டவரின் முக்கிய வருவாய்க்குக் காரணமாயிருப்பதாலும் கேரளம் என்ற பெயரும் இதற்குண்டு.

இது பிராமணர் ஆதிக்கம் நிறைந்திருந்த நாடு. இதின் தோற்றத்தைப்பற்றிய ஒரு பழங்கதையை, அன்னவரே இவ்வாறு நூல்களில் எழுதி ஏனையோரை நம்பச்செய்தனர்.

ஜமதக்கினி என்பான் ஒரு முனிவன். அவன் தவம்புரிந்த இடம் வடநாடு. அவன் மனையாள் ரேணுகா. அவள் கற்புக்கரசி. அவள் தனது கற்புக்கடையாளமாய் நாடோறும் நதியில் சென்று குளித்துத் திரும்புகையில், ஆற்று மணலால் ஒரு குடம்செய்து அதில் நீர் ஏந்தி வீடு சேருவாள். இவளது கற்பைச் சோதிக்க எண்ணினன் பிரமன். அவன் தன்னை ஒரு அழகிய மனிதனாய் மாற்றி ஆற்றின் மீது பறந்தான். ஆற்றிற்கு வந்த அப்பெண் அவனது உருவத்தைத் தண்ணீருக்குள் காணநேர்ந்ததால், அவளது கற்பு குலைந்ததாம். ஆகையால் அன்று குடம் உருவாகாமை கண்டு திகைத்து, அழுகையுடன் கணவனிடஞ் செல்

லவே, அவன் தன் மகன் பரசுராமனை நோக்கி, கற்பிழந்த அவனது தாயைக் கொல்லக் கட்டளையிட்டான். மகனும் அவ்வாறே செய்து முடித்தான்.

கொலை செய்த பரசுராமன் தன் பாவம் நீங்கக் காடு சென்று தவம்புரியவே, பரம தரிசனம் அடைந்து "நீ போய் ஒரு மழுவை எடுத்துத் தெற்கே கடலில் எறி; அது விழும் இடம் மட்டுந்தரை தோன்றும்; அத்தரையைப் பிராமணருக்குத் தானமாய்க் கொடுப்பாயாக" என்ற கட்டளை பெற்றனன். அவ்வாறே அவன் கோகர்ணம் (Goa) சென்று தன் மழுவை எறியவே அது கன்னியாகுமரியில் விழுந்தது. கடல் பின் வாங்கி நிலம் மேலிட்டது. அவ்விடம் பிராமணருக்குக் கொடுக்கப்பட்டது. இதுதான் இந்நாட்டின் தோற்றத்தைப்பற்றிய பழங்கதை.

இதில் சில உண்மைகள் இருக்கலாம் (உள). இந்நாடு கடலினின்று எழுந்ததற்கு ஆதாரங்கள் உண்டு. குழித்துறை, காட்டுத்துறை, திரிப்புணித்துறை முதலிய பல ஊர்கள் தற்போது கடலினின்று ஏறத்தாழ 10 மைல் தூரத்திலிருப்பினும், அவை ஒருகாலம் கடற்கரையிலுள்ள துறைகளே எனக்கொள்ளுதல் பொருந்தும். மலையடிவாரத்திலிருக்கும் 'கடுக்கரை' என்ற ஊர் (நாகர்கோவிலிலிருந்து சுமார் 10 மைல் வடக்கில்) ஒருகால் 'கடற்கரை' யாகவிருந்த தென்பாரும் உளர். தானதருமம் செய்வதிலும், அன்னியரை உபசரிப்பதிலும் இந்நாட்டார் பெயர்பெற்றவர்கள். இவ்விடத்தின் செழிப்பு அதற்கொரு காரணமாயிருக்கலாம். பிராமணருக்குத் தருமஞ் செய்தது பற்றி இந்நாட்டிற்குத் 'தரும பூமி' என்ற பெயரும் உண்டு. அண்மையில் வரை சிறு பான்மையினரான பிராமணரது ஆதிக்கம் இங்கு மலிந்திருந்தது. மண், பெண், பொன் யாவும் அன்னவருக்கே உரியதென்று மக்கள் அறியாமையால் நெடுங்காலம் எண்ணி வந்தனர். "என்றெ அச்சன் பிராமணனாணு" (நான் பிராமணனுக்குப் பிறந்தவன்)

என்று பெருமை பாராட்டும் மக்கள் இன்றும் இந்நாட்டில் சிலருண்டு. தற்காலத்திலும் இந்நாட்டில் நம்பூதிரிப் பிராமணத் தொடர்புடைய சில இனத்தவர் அறிவு, ஆற்றல் இவற்றில் முன்னிற்கின்றனர். இதனால், சில கருத்துக்கள் மேற்கூறிய கதைக்குள் மறைந்து கிடக்கின்றன என்பது புலனாகும்.

---

## என் குலம்

சான்றோர் என்றும், நாடார் என்றும் அறியப்பட்டு வரும் மக்கள், பண்டைக்காலத்தில் எங்கிலிருந்தனரோ தற்போது அது தெளிவாயில்லை. மதுரையில் ஆண்டுவந்த பாண்டியர்கள் அவர்களே என்று சாதிப்பாரும், சான்றுபகர்வாருமுண்டு. புத்தமார்க்கம் நாடெங்கும் பரவிய காலததில் இவர்கள் அம்மதத்தைத் தழுவினரென்றும், ஆதலின் பிராமண மார்க்கத்தாரால் தீராப்பகையாய்ப் பகைக்கப்பட்டாரென்றும் கூறுபவர் உண்டு. நாடாள்வார் என்பதின் மரபே நாடார். இந்த வடிவத்தில் அச்சொல கல்வெட்டுகளில் காணப்படுகிறது. அப்படியே 'சாணான்' என்று வெறுப்பாய் வழங்கப்படுஞ்சொல் 'சான்றேன்' அல்லது 'சான்றான் என்பதின் மாற்றமாகும. (கன்றுக்குட்டி-கண்ணுக்குட்டி, ஒன்று—ஒண்ணு இவைபோல்) திட்டவட்டமான சரித்திரக் குறிப்புகள் இல்லாத நம்நாட்டில் இன்னவரின் குலவரலாறு மறைந்துபோனது நூதனமல்ல.

நாடார் என்ற சொல்லுக்கு நாட்டிலே உள்ளவர்கள் என்ற பொருள் மிகப் பொருந்தும். பழங்குடி மக்கள் என்ற பொருளில் இச்செரல் வழங்கப்படும. ஆயினும், இங்குள்ள மிகப்பழங்குடிகள்,

இன்று மேற்குத்தொடர்மலைகளில் வாழும் ஊராளி, நாயாடி, முதுவான், பளியர், காணி போன்ற இருபத்திரண்டு பிரிவான காட்டுமக்களேயாவர். அப்படியாயின் ஆரியர் வருகைக்குமுன் இங்கிருந்த திராவிடரும் இப்பழங்குடி மக்களுக்குப்பின் வந்தோரே. இவர்களில் சிலர் தாங்களே சிதறிப்போன யூத குலத்தவர் என்றுகூட நினைத்துக்கொள்ளுகின்றனர்.

ஒன்றுமட்டும் உண்மை. தென்னாட்டில், காலாகாலங்களிலேற்பட்ட வகுப்பு வாதங்களிலெல்லாம், பிராமணர் முதல் மற்றெல்லா இனத்தவரும் இவர்களுக்கெதிராகச் செயல்பட்டிருக்கின்றனர். இன்றும் இவர்களில் பலர் கிறிஸ்தவரானபின் திருச்சபையிலுங்கூடத் தனிமையாகவே போராடுகின்றனர்.

சில நூற்றாண்டுகளுக்குமுன் இவர்கள் பிறரால் மேற்கொள்ளப்பட்டபோது, இடம் பெயர்ந்து சென்றனர். சென்ற இடங்களில் தங்கள் குலப்பெயரை பெரும்பாலும் மாற்றிக்கொண்டனர். சிலர் வணிகத்

[எனது பூட்டனாரின் தந்தை பண்டார முக்கந்தர், மெய்ஞ்ஞானபுர மிராஸ்தாராக இருந்த காலத்தில், C.M.S. Missionary யாக வந்த பெரிய தோமாஸ் ஐயரால் சுவிசேஷத்தை ஏற்று, முதல் கிறிஸ்தவராகி, மெய்ஞ்ஞானபுரம கோவில்கட்ட நிலம் வழங்கினார்கள் என்றும், அப்பூட்டனார் குமார வீரமார்த்தாண்ட பாண்டிய பரம்பரையினர் என்றும், என் பாட்டியார் நான் கல்லூரி மாணவியாய் Early South Indian History படித்துக் கொண்டிருந்த காலத்தில் கூறினதுண்டு. விருதுநகர் நாடார்கள் தங்களை இன்றும் க்ஷத்திரியர் என்றே கூறுவர். தாங்கள் ஏற்படுத்திய மகளிர் பாடசாலைக்கு 'க்ஷத்திரிய வித்தியாசாலை' என்ற பெயர்தான் இட்டனர்.—P. J. Sundararaj, Secretary,-Editor, Tamilnad Christian Literature Committee 1964.]

துறையில் சிறப்புற்றுத் தங்களை விசேஷமான வைசியர் என்ற பொருளில் 'ஸ்ரேஷ்டி' என்ற சொல்லின் மரூஉவாக 'செட்டி' என்றழைத்துக் கொண்டனர். இன்றும் கடைகளிலிருப்போர் எவரையும் 'செட்டியாரே' என்றழைக்கும் வழக்கத்தை நோக்குக! செட்டிநாட்டின் பெண்மக்கள் இன்றும சிறந்த முறையில் பனையோலைக்கூடை பின்னுதலில் கைவிடாதிருப்பது சிந்திக்கத்தக்கது.

கொங்குநாட்டில் இவர்கள் தங்களைக் 'கவுண்டர்' என்று அழைத்துக்கொண்டனர். 'மாரோங்கவுண்டர்' என்பது இன்னும் வழக்கழியாத சொல்லே. சேலம் ஜில்லாவில் இவர்கள் தங்களை 'மூப்பனார்' என்று அழைத்துக்கொண்டனர். ஊர் மக்கள் என்ற கருத்தில், வடக்கே இவர்கள் 'கிராமிணி' என்று அறியப்படுகின்றனர். செட்டிகளே தங்கியிருக்கும் ஊர் இன்றும் 'சாணார் பாளையம்' என்று அழைக்கப்படுகிறது. தென்னாட்டில் இஸ்லாமிய மார்க்கத்தைத் தழுவிய பலர் இக்குலத்தோரே. அவர்களுடைய குடும்பப்பெயர்களும், முறைகொண்டாடும் வழக்கங்களும் இதற்குத் தெளிவான சான்றுகளாகின்றன.

அமரர் புராணம் எழுதியவர்; இவர்களே இக்காலக் கடவுளர்களாய் நாடெங்கும் வணங்கப்படுகின்றனர் என்பதற்குப் பல ஆதாரங்களைக் காட்டுகின்றார். மாண்டுபோன மக்களைக் கடவுளாக்கத் தயங்காத நம் நாட்டில், சில நாடார் குலக்கடவுளர்களும் இருப்பதில் விந்தையெதுவுமில்லையல்லவா? குமரிக்கருகிலுள்ள சாமிதோப்பில் இன்றும் தொழப்பட்டுவரும் முத்துக்குட்டி நாடார், தாமரைக்குளம கிறிஸ்தவ ஆலயத்தில் கோயில்கூட்டியாய்ச் சென்ற நூற்றாண்டில் பணியாற்றியவரே. இங்குள்ள உருவச்சிலைகளில்லாத ஒரே கடவுள் வணக்கம, வாரமொருமுறை கூடித்தொழுதல், அருளுரைகள் நிகழ்த்தல், ஆண்களும பெண்களும் ஒன்றுபோல் அன்பின் விருந்துண்ணல் யாவும் கிறிஸ்து

சமயப்பழக்கங்களினின்று கடன் கொள்ளப்பட்டனவேயாம்.

மேலும் 1920 ம் ஆண்டில் நெல்லைமாவட்டத்தின் ஏரல் என்ற ஊரின் பஞ்சாயத்துத் தலைவராய் உழைத்து, நடுவயதில் கொள்ளை நோயால் சடுதியில் மாண்டுபோன அருணசலம் நாடார், இன்று அங்கு ஒரு ‘குட்டிக் கடவுளாய்’ப் பூசிக்கப்படுவதைக் காணுமிடத்து, அமரர் புராணம் ஆக்கியோன் கூற்றிலும் உண்மையுண்டு எனக் கொள்ளலாம். கன்னடப்பகுதியின் பில்லவரும் மத்தியப்பிரதேசத்தில் ‘கலாற்’ என்ற (கள் + ஆள் = கலால்—குத்தகை) மக்களும் இக்குலத்தவரே எனலாம். மேற்கூறிய இனத்தவர் யாவருடைய பழமைகளிலும் வரலாற்று உண்மை புதைந்திருக்கிறது.

இச்குலத்தவர் தென்னாட்டின் தென் மூலையிலேயே கும்பலாய்க் காணப்படுகின்றனர். அவர்களது முன்னோர் தங்களை மேற்கொண்டவர்களுக்கு அஞ்சி ஒதுங்கி, இப்பக்கங்களின் தேரிக்காடுகளைத் தஞ்சமாக்கி, அங்குள்ள பனைமரங்களைப் பற்றிப் பிடித்து வாழ்க்கை நடத்தியிருக்கின்றனர் என்பதைப் பலரும் இன்று ஒப்புக்கொள்கின்றனர். இந்தியாவின் பல பாகங்களில் பனை மரங்கள் வளரினும், அதைக் கொண்டு வாழ்க்கை நடத்தி அதைக் கற்பக மரமாக்கினவர்கள் இவர்களே எனல் தகும்.

தற்போது இவ்வகுப்பினர் பலர் செல்வத்திலும், கல்வி முதலிய பல துறைகளிலும் விரைவாய் முன்னேறிவருவதால், அவர்களில் சிலர் தங்கள் முன்னோர் பனைமரத்தொடர்புடையவர் என்பதை ஒப்புக்கொள்ள விரும்பாமல் வெட்கப்படுகின்றனர். சோம்பலுக்கும், சூதுவாதுக்கும் வாய்ப்புக்கொடாத அத்தொழிலால் கிடைக்கும ஊதியம் அதற்கென்று செலவு செய்யப்படும் உடல் வலிமைக்கு ஈடாகா. இததொழிலால் கிடைத்த சிற்சில குணங்களாகிய மனத்திருப்தி, விடா முயற்சி, சிக்கனம், பிடிவாதம், தன்மானங்காத்தல்,

சுதந்தரநாட்டம் போன்றவைகள் வேறு பல குலத்த வரிடம் இவ்வளவாய்க் காணப்படுவதில்லை. மாமேறு கையிலும், இறங்குகையிலும் பிடியைவிடா திருத்தலால் அமைந்த விட்டுக்கொடாத தன்மை பல பிணக்குகளுக் கும், நீதிமன்ற வழக்குகளுக்கும் காரணமாயிருக்கலாம்.

முன்னோரைப் பின்திரும்பிப்பார்ப்பதால் பயனில்லை. என் முன்னோர் பாண்டிய மன்னர்களோ, அல்லது பல்லக்குகளின் முன் பறைசாற்றி நடனமாடியவர்க ளோ எனக்கு அக்கரை இல்லை. "அட்டாலும் பால் சுவை குன்று" தென்றவண்ணம், இவர்கள் தங்கள் சான்றோர் குலக்குணங்களை இழந்துபோகவில்லை. குறை பாடுகள் பல இவர்களிலுமுண்டு. எனினும் இவர்களு டைய தற்கால நிலைமை யாது என்பதுவே ஆராய்வ தற்குரியது.

கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டாம். கற்ப னையும் தேவையில்லை. இவர்களது விடுதலையும், கிறிஸ்து மார்க்கம் இந்நாட்டில் பரவியதும் ஒரே காலத்திலேயே யாகும். ஒரு நூற்றாண்டு காலத்தில் இவர்கள் அடைந் திருக்கும் முன்னேற்றம் யாவரையும் வியப்படையச் செய்திருக்கிறது. தமிழ்நாட்டில் இவர்களுக்கு முன் னிற்பவர் சிறுபான்மையினரான பிராமணர் மட்டுமே எனலாம். இந்தியாவில் பார்ஸி, சிரியன்கிறிஸ்தவர் களைத் தவிர மகளிர் கல்வியில் இவர்கள் மற்றெவ்வி னத்தவரையும் வெல்லுவர். தென்னாட்டின் வணிகமும் இவர்கள் கைவசமாயிற்று எனலாம். கிறிஸ்து மார்க் கம தென்னிந்தியாவின் பற்பல குலத்தவர் நடுவில் சென்ற நூற்றைம்பது ஆண்டுகளாய் வளர்ந்து வரினும் அவர்களுக்குள் இந்த வகுப்பினரே அதிகமாக முன் னேறியிருக்கின்றனர். இதே வாய்ப்புகள் வேறு பல ருக்கும் கிடைத்திருப்பினும் இத்தனை முன்னேற்றம் அன்னவரில் காணப்படவில்லை. இவைபோன்ற உண் மைகளால் இம்மக்கள் ஒடுக்கப்பட்டனரென்றும், அந் நிலை மாறினால் முன்னேறக் கூடிய உள் வலிமை கொண்

டவரென்றும் விளங்கும். சென்ற பத்தாண்டுகளாகத் தமிழகத்தை ஆண்டுவந்த முதல் அமைச்சரும், காங்கிரஸ் கட்சியை இன்று நாடெங்கும் ஊக்குவிக்கும் கறைபடா மாபெரும் தேசியத் தலைவருமான திரு. காமராஜ் அவர்களும் இக்குலத்தேயுதித்தவர் என்பது மேற்கூறியவற்றிற்கு ஏற்ற ஆதாரமாகும்.

---

# குடும்பம்

என் இனத்தாரில் பலர் இன்றும் குறைவிலும், தாழ்விலும் இருந்து தவிக்கிறார்கள். அக்காலத் திருவிதாங்கூரின் தென்பகுதியில் வாழும் இவர்களது நிலைமையை உற்றறிய வேண்டியது மிக் முக்கியமாதலால், இவ்வதிகாரத்தில் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

திருவிதாங்கூர் என்ற பெயருடைய நாடு, சுமார் 200 ஆண்டுகளுக்கு முன், பற்பல சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தது. ஒருவருக்கொருவர் பல முறையும் போர் புரிந்துவந்த அவர்கள், மார்த்தாண்டவர்மா என்னும் மன்னனால் ஒரு குடையின் கீழாக்கப்பட்டனர். இந்நாட்டின் தென்பாகம் இன்றும் 'நாஞ்சில் நாடு' என்றழைக்கப்படுகிறது. நன்செய் நிலங்கள் இங்கு அதிகமாதலால் இப்பெயர் வந்ததென்பர். நாஞ்சிக்குறவர்கள் இதை ஆண்டதால் இப்பெயர் வந்திருக்கவுங்கூடும். திருவிதாங்கோடு என்ற ஊரைத் தலைமை இடமாய்க் கொண்டிருந்ததால் நாடும் அப்பெயராலேயே 1947 வரை அழைக்கப்பட்டது. 1956 நவம்பர் வரை அது திருவிதாங்கூர்—கொச்சியின் கூட்டாட்சியின் ஒரு பாகமாயிருந்தது. இந்தியா மொழிவாரி மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டபோது, கன்னியா

குமரியிலிருந்து சுமார் 30 கல்வரை அமைந்திருக்கும், அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், விளவங்கோடு என்ற நான்கு தாலுகாக்களும் சேர்ந்து கன்னியாகுமரி மாவட்டமாக்கப்பட்டு, தாய்த்தமிழகத்துடன் இணைக்கப்பட்டது. ஏனைய பாகம் கேரளமாயிற்று.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருவாரியானோர் நாடாரே. தென்கேரளத்தில் அவர்களது தொகை குறைவு. தமிழ் மொழி, திருவனந்தபுரத்திற்குத் தெற்கே 14 மைல் தூரத்தில் இருக்கும் கேரளத்தைச்சார்ந்த அமரவிளை என்ற ஊர் வரையும் பேசப்படுகிறது. அங்கிருந்து தனி மலையாளம் ஆரம்பமாகிறது. அமரவிளைக்கும், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தக்கலைக்கும் இடைப்பட்ட சுமார் 20 கல் தொலைக்குட்பட்ட இடங்களில் தமிழும், மலையாளமுங் கலந்து வழங்கப்படுகிறது. இங்குள்ள பாமர மக்கள் வழங்கும் பல சொற்கள் தூய தமிழின் சிதைவேயாகும். அவை அவ்வடிவத்திலேயே யாழ்ப்பாணத்திலும் வழங்கப்படுவதால், இவர்களுக்கும், யாழ்ப்பாணத்தவருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டெனக் கூறலாம். அத்தியட்சர் கால்டுவெல் பண்டிதர், இவர்கள் வட இலங்கையிலிருந்து வந்தவர்களெனவே கருதுகின்றனர். 'ஓம்' (ஆம்), 'வந்தினும்' (வந்தனர்), 'போச்சினும்' (போயினர்) 'வெள்ளென' (அதிகாலையில்) 'ஒக்கலை' (இடுப்பு) 'செமபாதி' (செம்மையான பாதி = நள்ளிரவு) போன்ற சொற்கள் ஒன்றுபோல் இவ்விரு இடங்களில் மட்டும் வழங்கப்படுகின்றன.

தெற்கே செல்லச் செல்ல, நாடார்கள் செல்வமும், செல்வாக்கு முடையோராய்க் காணப்படுகின்றனர். பிழைப்பிற்கென மலையாள நாட்டுள் சென்ற இவர்கள், பல முறையிலும் பிறருக்கு அடிமைப்பட்டுப் பிழைக்க நேரிட்டது. அந்நிய மொழி பேசின இவர்களை மலையாளிகள் இழிவாய் எண்ணி, அடிக்கடிப் பலவித சங்கடங்களுக்குட் படுத்தினர். அக்கொடுமைகள் இன்றும் முற்றிலும் ஒழிந்தபாடில்லை.

இவ்விரு மொழிகளும் சந்திக்கும் இடங்களில் பற்பல சண்டை சச்சரவுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வூர்களில் மக்கள் தங்களையும், தங்கள் பொருட்களையும் பாதுகாக்க மிக விழிப்பாயிருக்க வேண்டியதாயிற்று. அக்காரணத்தால் இவர்களில் பலர், சிலம்பம் முதலிய உடற்பயிற்சிகளில் இன்றும் நிபுணராய்க் காணப்படுகின்றனர். சிலம்பக்கலை இவர்களிடமே தோன்றிற்று என்பாரும் உளர். அது எவ்வாறாயினும் இங்கு இவ்வித்தை இன்றும் பழக்கத்திலிருந்து வருகிறது. எனது முன்னோரும், இனத்தோர் பலரும் இக்கலைப் பயிற்சியுடையோரே.

பிடிவாதமும், நீதிமன்றவழக்கும் இவர்களில்மிகுதி. கைப்பெலனில் மட்டுமல்ல, வாய்ப்பேச்சிலும் இவர்கள் திறம்படைத்தோரே. இவர்களது முன்னேற்றத்தில் ஏற்பட்ட இடையூறுகளே இவற்றிற்குக் காரணமாகும்.

என் தந்தையின் பாட்டனார் ஒரு உடற்பயிற்சி அரங்கம் நிறுவி, பல சீடரை அப்பியாசப்படுத்தியவர். அவருடைய திறமையைப் பற்றிக் கூறப்படும் பல நிகழ்ச்சிகளில் ஒன்று கீழ் வருமாறு:

மலையாள மன்னர் குழித்துறை வந்து, அங்கிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள திக்குறிச்சி ஊர் ஆலயத்தில் தொழ விரும்பி, தனது சர்வாதிகாரியை நோக்கி, மறுநாட் காலையில் அங்கு செல்லுவதற்கு வேண்டுவன செய்யக் கட்டளையிட்டார். சர்வாதிகாரி திகைத்து, 3 மைல் நீளமான வழியை ஒரே இரவில் செவ்வை பண்ண எவராலாகும் எனக்கலங்கினன். அரசன் கோபமடைந்து, தனது குடிமக்களில் அதைச் செய்ய எவரேனும் அப்பக்கமில்லையோ என்று வினவ, அவ்வூர் அதிகாரியால் அழைக்கப்பட்டுவந்த, எனது முற்பாட்டனை பூதத்தான் நாடார் அரசனை வணங்கி நின்றார். அரசன் தனது விருப்பத்தை அவரிடம் கூற, "திரு ஒலை கிடைத்தால் அடியேன் செய்து முடிப்பது

திட்டம்'' என்ற உறுதியளித்தனர். அவரால் அழைக்கப்படும் எவரும் கட்டளைக்குக் கீழ்ப்படிய அரசனிடமிருந்து மீட்டுப்பெற்று, முதல் முதல் சர்வாதிகாரியையே அழைத்து, திகைத்து நின்ற அவனிடம் திருவெழுத்தைக் காட்டி "எடு மண்வெட்டியை" என்றதும், அவனோடு கூட, உயர் ஜாதியார் எனக் கருதப்பட்ட மக்கள் பலரும் கீழ்ப்படிந்து வேலைசெய்து, மூன்று மைல் நீளமான காட்டுப்பாதை ஒரே இரவில் பழுது பார்க்கப்பட்டு, அரசனது விருப்பம் நிறைவேற்றது.

அரசன் மகிழ்ச்சியுடன், நெடுஞ்சாலை அமைத்தோரை அழைப்பித்து, அவருக்கு வேண்டியது யாதெனக் கேட்கலாம் என, அவர், கடவுளருளால் தனக்கு ஒரு குறைவுமில்லை எனவும், அரசனுக்குப் பிரியமாயின், மாண்டு போகும் தனது குடும்பத்தாரின் உடல் சாமபலைக் கடலில் கொண்டுபோய்க் கொட்டுவதற்குத் தனது வீட்டிலிருந்து கடல் வரைக்கும் (சுமார் 10 மைல்) ஒரு சிறிய பாதை கிடைத்தால் நலம் என மட்டும் கேட்டுக்கொண்டார். அரசன் அவ் விருப்பத்தை நிறைவேற்றியது மட்டுமன்றி, அவரது வீட்டிலிருந்து பார்த்தால் தெரியக்கூடிய இடம்வரைத் தீர்வையின்றி அவருக்கு இனமாக அளிக்கக் கட்டளையும் இட்டார். மேடும் பள்ளமுமான இடமாதலின் அப்பூமியின் பரப்பு அதிகமல்ல. அதின் 312 பங்கில் ஒன்று எனக்கும் கிடைத்தது. அதை நான் 1964 மே மாதம் ரூ 75க்கு விற்றேன்.

பூதக்தான், ஏறத்தாழ நூறு வயது மட்டும் உயிரோடிருந்தார். அவர் தனது முதிர் வயதில் ஆறு, எட்டு வயது இளைஞர்களான என் தந்தையையும், அவரது அண்ணனையும் தனது நீண்ட தாடியைப் பிடித்துத் தொங்கவிட்டு அவர்களுடன் விளையாடியதாக என் அப்பா என்னிடம் சொல்லியிருக்கிறார்.

இவர்களது சமய வழிபாட்டைப் பற்றியும் ஒரு கூற்று. திருவனந்தபுரத்தில் கோயில்கொண்டிருக்கும் அனந்தபத்மனுபனே, மரமேறிப் பிழைத்த அனந்தன் என்று கூறுகிறார்கள். பனையேறும் தொழிலுக்குத் தேவையான பணிமுட்டுகள் பூவ பொன்னுல் செய்யப்பட்டு, அக்கோயிலில் இன்றும் இருப்பது இதற்குச் சான்ருகும். அவனது தம்பி கேசவனே எனது ஊரை ஒட்டிய திருவட்டாற்றில் ஆதிகேசவப்பெருமாளாக்கித் தொழுகின்றனர். இவ்விருவருக்கும் ஆண்டில் இருமுறை, ஒரே நாளில் ஆற்றில் ஆடுதல் (ஆருட்டு) ஆகிய முழுக்குவிழா மிகச்சிறப்பாய்க் கொண்டாடப்படுகிறது. எனினும் இவ்வாலயங்களுக்குள் சென்று தொழும் வாய்ப்பு என் இனத்தாருக்கு இருந்ததில்லையென்றே சொல்லலாம். அவருள் அறிவும் செல்வமும் படைத்த ஒரு சிலரே இந்துமார்க்க அனுசாரிகள். மற்ற யாவரும் பேய் வணக்கக்காரரே.

முன்னேரை வணங்குதல் இவர்களிலுண்டு. நான் சிறுவனுய் வளர்ந்த குடும்ப வீட்டில் 'தெற்கது' என்ற பாகம் தூயதாகக் கருதப்பட்டு வந்தது. அக்கால வீடுகளின் முன் சுற்றுக்கட்டின் தென்மேற்கு மூலே "பூசைப்புரை". ஒரு சிறு அறையான அதற்குள் ஒரு திரிசூலமும், திருநீறும் வைக்கப்பட்டிருந்தன. பெண்கள் அந்தப் பக்கத்தில் செல்வதேயில்லே. குடும்பத்தலேவன் முக்கியமான காரியங்களைச் செய்ய எண்ணுகையில், உபவாசம் பண்ணி அங்கேயே நித்திரை செய்வது வழக்கம். இரவு கனவில் மாண்டுபோன முற்பிதாக்கள் தோன்றி ஆலோசனே அளிப்பர் என்பது அவர்களது நம்பிக்கையாகும்.

கோழி முதலியவற்றைப் பலியிடும் வழக்கமும் என் இனத்தாருக்கு உண்டு. இருண்ட இரவில், ஆற்றின் மணல்மீது குருத்தோலேயால் ஒரு சிறு தேவதையை உண்டுபண்ணி இசக்கி என்றழைத்துக் கூடு

மானல் கொஞ்சம் சாராயமும், கோழி. இரத்தமும் கொடுத்துத் திரும்புவதும் வழக்கம். இந்த இசக்கியம் மனே, சிலப்பதிகாரத்தில் மதுரை இடைச்சி, மாதரி வழிபட்டு வந்த இயக்கியம்மன் என்பர். இது, நோய் நொடிகளால் நொந்தவேளைகளிலோ, அறுவடை முடிந்த பின்னரோ நடைபெறும.

---

# வி. டி. சகாயம்

**தந்தை.** *குமாரன் என்பது எனது பாட்டனர் பெயர். இது முருகனுகிய குமாரக்கடவுளைத் தொழுப வருக்கிடும் பெயரே. என் பாட்டனருக்கு ஐந்து ஆண்களும் ஒரு பெண்ணும் பிறந்தனர். இவர்கள் பத்மநாபன், இராமன், வேலாயுதன் முதலியோர். என் தகப்பனரான வேலாயுதன் நான்காவது மகன். அவருடைய சிறு பிராயத்தில் எக்காரணத்தை முன்னிட்டோ இவர்கள் யாவரும குடும்பமாகக் கிறிஸ்துமார்க்கத்தைத் தழுவினர். பத்மனுபன் பரமானந்தமும், ராமன் அருமைநாயகமும், வேலாயுதன் வேதநாயகமுமாயினர். எனது பெரிய தகப்பனர் 1945ல் இறக்குமட்டும் இராமன் என்றே அறியப்பட்டார். கிறிஸ்தவ மிஷனரிகளிடமிருந்து பலர் பெறும் உலக நன்மைகளை இவர்களில் எவரும் பெற்றதில்லை.

எனது தகப்பனர் மட்டுமே அக்காலத்தில் பள்ளிக்கனுப்பப்பட்டார். ஐந்து சகோதரரில் ஒருவருக்கு

---

*ஆதிகாலத்தில் தமிழரின் குறிஞ்சி நிலக்கடவுளாயிருந்து, இடைக்காலத்தில் ஆரியரால் சுப்பிரமணியன்=நல்லபிராமணன்—என்ற பெயரால் சிவனுக்கு மகனுக்கப்பட்டவர். சேயோன் என்ற தீ நிறச் சிவப்பனே சிவனும். சிவனுந் தனித் தமிழ் கடவுளே!!!

மட்டுமே எழுதப்படிக்கத் தெரியாது. 1897 லேயே 'மெட்றிக்குலேஷன்'வரை எனது தகப்பனர் படிக்கும் வாய்ப்புப்பெற்று ஆசிரியப்பணியாற்றியது பெருங் கிருபையென்றே சொல்லவேண்டும்.

தாய். குளச்சல் என்ற கடற்கரையூரின் வடக்கே இரண்டு மைல்தொலேயில் கொல்லமவெட்டி என்ற இடத்தில், இராமன், சங்கரநாதன் என்ற இரு வாலிபர், அக்காலம் மயிலாடியில் நற்செய்தி கூறியறிவித்த மீட் ஐயரிடஞ்சென்று, சமயக்கொள்கைகளைக் கற்றுத் திருமுழுக்குப்பெற்றனர். சங்கரநாதன் சத்தியநாதனுய் மாறினர். அவர் ஐந்து ஏக்கர் நிலத்தை அன்று மிஷனுக்கு விட்டுக்கொடுத்தார். அவ்விடத்திலேயே இன்று மத்திகோடு ஆலயமும, உயர்நிலைப்பள்ளியும் அமைந்திருக்கின்றன. சத்தியநாதனுக்குப் பிறந்த பத்மனுபனைப் பரமானந்தமாய் மாற்றி ஒரு கிறிஸ்தவப் பெண்ணை மணமுடித்துவைத்ததில் அவர்களுக்கு ஆறு பிள்ளைகள் பிறந்தனர். அவர்களில் 'ஞானவடிவு என்ற மகளை முற்கூறிய வேதநாயகம ஆசிரியருக்கு 1900ல் மணமுடித்துவைத்தனர்.

இத்தம்பதிகளுக்கு இரண்டாம் மகவாய்ப் பிறந்த சிறுவனுக்குத் தேவசகாயம எனப்பெயர் சூட்டினர். அந்த வேதநாயகம் தேவசகாயமே இன்று வி. டி. சகாயம்.

1904 ஜனுவரி 28 திங்கள் காலை ஐந்து மணிக்கு நான் பிறந்ததாகச் சொல்லுகிருர்கள். எனது பள்ளிக் குறிப்புகளில் 1905 என்றே காண்கிறது. ஒரு வயதைக் குறைக்கவென்றே என் தகப்பனர் செய்த ஒரு உபாயம் இதுவாயிருக்கலாம். அக்காலங்களில் மாத்திரமல்ல, இக்காலங்களிலுங்கூட இவ்வழக்கம் சில கிறிஸ்தவர்களுக்குள்ளும இருக்கிறது. தம்பி உத்தியோக ஓய்வு பெற்ற பின்னும் அண்ணன் வேலைபார்த்துவரக் காரணம் இதுதான்.

# தாயை இழந்தேன்

என் தாயாருக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். என் அக்காளுக்குப்பின் நானும், 1907ல் ஒரு தங்கையும் பிறக்கவே, என் தாயார் நோய் கண்டு 1908 ஜூலை 6ல் இறந்துபோனார்கள். எங்கள் தாயைப் புகழாதவர் எவ் ஊரில் எவரும் இல்லை. என் தகப்பனார் பெரிய முன்கோபியாய் இருந்ததால், அவருடன் வாழ்க்கை நடத்துவதற்குப் பெரும பொறுமை வேண்டியிருந்திருக்கும். அத்துடன் அவர்களுடைய நற்குணத்திற்கு வேறு சில காரணங்களுமுள.

அவர்கள் பெற்றோர் நற்செய்திப்பணியில் ஈடுபட்டவர்களே. இருவரும் படித்து வந்த காலத்தில், அவர்கள் விருப்பத்திற்கிசைய அவர்களுடைய பெற்றோர் அவர்களைத் தம்பதிகளாக்கிவைத்தனர். நூறு ஆண்டுகளுக்கு முன்னர், சொற்பப்படிப்புங்கூட, அதிகமதிப்பையும், வருவாயையும் கொடுக்கக்கூடியதாயிருந்தது. கால்நடையாய், எட்டு நாள் நடந்து, மதுரை சென்று, பசுமலையில் இறையியல் பயின்று திரும்பினவர் பரமானந்தம் என்ற என் பாட்டனார். அவருடன் படித்த பலர், அக்காலம் இலங்கை, மலேயா போன்ற அயல் நாடுகளுக்கும, தேயிலைத்தோட்டங்களுக்குஞ்சென்று பெரும் பொருள் தேடினர். இவரோ, மிஷன் ஊழியமே போதுமென்று, மாதம் மூன்றே ரூபாய் வருவாயில் அமர்ந்தவர். ஐம்பது ஆண்டுகள் வேலைக்குப்பின் ஊதியம் இருபது ரூபாயாக உயர்ந்தது. ஒயில்வி என்ற பெயருடைய எனது பாட்டியும வேதாகம ஸ்திரீயாகப் பணியாற்றினர். அவர்களது மாத ஊதியம் ஒன்றரை ரூபாய் மட்டுமே. ஆறு பிள்ளைகள் அவர்களுக்கிருந்தும் குறைவின்றி அவர்களுடைய குடும்பங்கள் நழைத்ததற்கு அக்கால விலைவாசிகள் மிகக்குறைந்திருந்ததும், கொஞ்சம் குடும்பச் சொத்துகளிருந்ததுவுங் காரணங்களாகும.

அக்கால வழக்கப்படி, சீதனமாக என் தாயாருக்கு அளிக்கப்பட்ட சில வெண்கலப் பணிமுட்டுகளில் ஒன்ருன, ஒரு சிறு அழகிய குத்து விளக்கை, இன்றளவும் ஒரு ஞாயகச் சின்னமாக நான் வைத்திருக்கிறேன். அன்று என் தாயாருக்கு ஒரு ஆயிரம் வெள்ளிப்பணம் சீதனமாகக் கொடுத்தார்களாம். இது நூற்றுநாற்பது ரூபாய்க்குச் சரி. என் தங்கையுடைய திருமணத்தின்போது இதற்கு இருபத்தொரு மடங்கு கொடுக்கவேண்டியதாயிற்று. காலத்தின் மாறுதல் இது.

1908-ல் அவர்கள் பேறுகாலத்தையொட்டிய நோயுற்றதால், இன்றளவும் பெயர்பெற்றிருக்கும் நெய்யூர் ஆஸ்பத்திரிக்கு அவர்களைக்கொண்டு சென்றனர். பிழைக்கமாட்டார்கள் என்று தெரியவந்ததால், அவர்களை மாட்டுவண்டியிலேற்றி, ஏழு மைல்களுக்கப்பாலுள்ள, கல்லங்குழி மிஷன் வீட்டுக்குக் கொண்டுவந்தனர். நான் ஊர்ப் பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டிருந்த மாலை நேரம் அது. அன்றிரவு எங்களது இனஜனத்தார் பலர் வந்து கூடினர். மறுநாட்காலையில் கூட்டம் மறுபடியும் அதிகரித்தது. யாவரும் துக்க முகத்துடன் காணப்பட்டனர். காலை சுமார் பத்து மணிக்கு நான் என் தாயார் படுத்திருந்த அறைக்குள் சென்றேன். கட்டிலோரமாய் நின்ற என்னை அவர்கள் கட்டி முத்தமிட்டனர். பின், அப்பாவைக் கூப்பிடு எனவே நான் அப்படியே செய்தேன். "எப்போ காண்பேனோ" என்ற பாட்டை அவர்கள் விரும்பியபடி யாவரும் பாடினர். துன்பங்கள் மாறும் என்ற அடியை அவர்களும் பாடினதாகச் சொல்லுகிருர்கள். பதினொரு மணிக்கு அவர்கள் தன் ஆண்டவரிடம் அமைதியாய்ச் சென்றுவிட்டனர்.

என் தந்தை மாலை மாலையாய்க் கண்ணீர் விட்டழுதார். பாட்டியும் அறைக் கதவைப்பூட்டி அங்கு மிங்கும ஒடிக்கதறிஞர்கள். நான் ஜன்னல் மேலேறி "பாட்டி, சோறு", என்று பசியால் கத்தினேன். மா

ணத்தின் கொடுமையை நான் அன்று உணரவில்லை. அவையாவும் எனது ஞாபகத்திலிருக்கின்றன.

எனது தாயின் புகைப்படம் எதுவுமில்லை. ஆயினும், அவர்களது உருவம் இன்றும் என் கண்முன் நிற்கின்றது. நாலரை வயதுக்குள் நடந்த வேறு சில காரியங்களும் என் நினைவில் இருக்கின்றன. என்னை விட மூன்று வயது மிகுந்த என் தமக்கைக்கு, எங்கள் தாயாரைப்பற்றிய ஞாபகம் ஒன்றுமேயில்லை.

கல்லங்குழியிலிருந்து தோட்டவாரம் ஐந்து மைல் தூரம். நாட்டு வழக்கப்படி அவரவர் தோட்டங்களிலேயே மரித்தோரை அடக்கம்பண்ணுவார்கள். எனது தாயாரை அப்படிச்செய்யவில்லை. எனது பாட்டனூர் சுவிசேஷகராய் அங்கு பணியாற்றியமையால் அவர்களது உடல் அவ்வூர்க்கோயில் விளாகத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. தவிரவும், நடு வயதில் மாண்டவர்கள் மீந்த காலமளவும் ஆவியாய் ஊரில் சுற்றித்திரிவர் என்ற அக்கால மூட நம்பிக்கையும் அப்படிச் செய்ததற்கு மற்றொரு காரணமாகலாம். அன்று அவர்களுக்கு வயது முப்பத்தொன்று மட்டுமே.

அன்று பெட்டியைக் குழிக்குள் இறக்குவதை நான் பார்த்துக்கொண்டே நின்றேன். சில மாதங்களாய் ஆலயத்தில் பிரசங்கம் செய்வோர், இயேசு சுவாமி மரித்தோரை எழுப்பினதைக்குறித்துப் பேசினல், ஆராதனை முடிந்ததும், என் தாயாரின் சமாதியருகில் சென்று உற்றுப்பார்ப்பேன். ஒரு முறை அதின் மீது ஒரு நெடும் வெடிப்புக் காணப்பட்டது. நிச்சயமாகவே அவர்கள் திரும்பி வருவார்கள் என்று சிலநாட்கள் ஆவலோடு எதிர்பார்த்தேன்.

என் தாயார், தன் மரணத்துக்குப் பல நாட்களுக்கு முன்னமே, தன் முடிவைக்குறித்துப் பலருக்கும் 'ஆண்டவர் அதை எனக்குக் காட்டினூர்' எனக் கூறியிருந்தார்கள். தான் ஒரு ஏணியில் ஏறுவதாகவும்,

நாளும் கூடவே அவர்களோடு சேர்ந்து ஜீவிக்கவும் அடிக்கடிக் கனாக்கண்டு, தன் தயாகிய என் பாட்டியிடம் 'எனது இரு பெண்களில் ஒன்று ஏறுமல், ஒரே மகன் ஏறவது எனக்குப்பிரியமில்லை', என்பார்களாம். அவர்களுடைய எண்ணத்திற்கிசையுமாப்போல் எனது தங்கை ஒன்றரை வயதில் இறந்துபோனாள். அந்த ஏணி விசுவாசவாழ்க்கையாகிய ஏணி என்பதே எனது கருத்து.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தைந்தில், கட்டப்பட்ட அவர்களது கல்லறையில் பின்வரும் மொழிகள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

**ஞானவடிவு வேதநாயகம்.**

தோன்றல்: 18-12-1877. மறைதல்: 6-7-1908.

"அவள் விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது"

Erected in 1945 by her son

**The Rev. V. D. Sahayam, M.A.,**

Missionary to The Gonds, C. P.

# பிள்ளைப் பருவத்திலே

தாயில்லாது வாழ்ந்த காலம் ஏறக்குறைய ஓராண்டு. என் தகப்பனார் மிஷன் பள்ளி ஆசிரியர். அக்காலம் அவர் கற்பித்த இடம் மாத்தூர். என் வீட்டிலிருந்து அது இரண்டு மைல் தூரம். என் தமக்கைக்கு அன்று எட்டும், எனக்கு ஐந்தும் வயது. என் தந்தை என்னைத் தன் தோள் மீதேற்றிச் சுமந்து செல்வார். தமக்கை எங்களைத் தொடர்வாள். அரிசியும், உழுந்தும் கொண்டு சென்று, நடுப்பகலில் கஞ்சி காய்த்துத் தேங்காயுடன் உண்டு, மாலையில் நடந்தும், தோள் மீதேறியும் வீடு திரும்புவேன். பள்ளி நிர்வாகம் அக்காலம் அதிகக் கண்டிப்பாயிருந்ததில்லை. சிற்றூர்களில் புத்தகங்கள் அன்று நுழையத் தொடங்கவில்லை. ஏட்டினின்றே எழுத்துப்படித்தேன்

சிறுவருக்குப் படிப்புத் தொடங்கும்போது, அந்நாட்களில் நடைபெற்ற வழக்கம் இன்று இல்லை. ஆசிரியரை விருந்துக்கழைத்து, குடும்பத்தில் நெருங்கினோரையுங்கூட்டி, குழந்தையை ஆசிரியர் பக்கம் அமரச் செய்வர். ஆசிரியர் மணலில் 'அ' என்று எழுதுவார். பின் சிறுவனின் ஆள் காட்டி விரலை அவர் பிடித்து மணலில் 'அ' என்ற எழுத்தை உச்சரித்தவாறே எழுதச் செய்வார். அவ்வாறே சில ஆண்டுகளுக்குப்பின் ஓலையிலெழுதப்படிக்கையில் 'எழுத்தாணி எடுத்தல்' என்ற வழக்கம இருந்தது. அப்பொழுதும் தங்கள் நிலைமைக்கேற்ப ஆசானுக்கு உடுதுணியும மேலாடையும் விருந்தின்பின் கொடுத்துக் காணிக்கையாக ஒரு பணம் (14 பைசா) முதல, ஓரிரு ரூபாய்வரையுங் கொடுப்பார்கள். சுற்றுவட்டாரத்தில் எனது தகப்பனார் ஒருவரே உபாத்தியாயர் என்று அறியப்பட்டவர். எனது ஆறுவயதிற்குமுன், இப்படிப்பட்ட தருணங்களில், நானும் சிலமுறை அவருடன் சென்றிருக்கிறேன்.

மாத்தூர் பள்ளியில் சிறுவருடன் விளையாடிப் படித்து, பிற்பகலில் தூங்கி எழுந்து, மாலை வீடுதிரும்

புவேன். என் தந்தையும் அப்பள்ளியிலிருந்த ஒரே குறும் வாங்கில் (bench) நடுப்பகலில் சிறிது தூங்குவார். மாணவர் யாவரும் தரையிலே தான் 'பத்மாஸன'த்தில் அமரக் கற்பிக்கப்பட்டிருந்தனர். ஒரு முறை அவர், அப்படித் தூங்குகையில் 'இன்ஸ்பெக்டர்' வந்துவிட்டார். அவர் என் அப்பாவின் பள்ளித் தோழன்! மாலை வீடு திரும்பியதும அவரே மறுபடியும் சமையல் செய்து உணவளிப்பார். இந்தக் காலம ஏறத்தாழ ஒரு ஆண்டு மட்டுமே.

வெள்ளி மாலை வந்ததும், நாங்கள் மூவரும் பள்ளியிலிருந்து நேரே கல்லங்குழியிலிருந்த 4 மைல்) என் பாட்டி வீட்டிற்குச் செல்வது வழக்கம். திங்கள் காலை மறுபடியும் கண்ணீருடன் பள்ளிக்குத் திரும்புவேன். இரண்டு நாட்களாய்ப் பாட்டி வீட்டின் சுதந்தரத்தை ருசித்தபின், திங்கள் காலை பள்ளிக்குச் செல்லாதிருக்கப் பல உபாயங்களைச் செய்து அடிக்கடி நான் வெற்றியடைந்திருக்கிறேன். குறிப்பாய்த் திங்கள் காலையில் வயிற்று வலி வரும். வேப்பெண்ணெய் குடித்தாலும் நீங்காது! அப்பொழுது என் அப்பா அக்காளை மட்டும அழைத்துச் செல்வார். உடனே வயிற்றுவலியும் நீங்கும். அவ்வாரம் முழுவதும் ஒரு சுகவீனமும் வருவதில்லை. ஐந்து வயதுச் சிறுவனுக்குத் தந்திரம் தெரியாது என்று எண்ணிய என் முதியோரின் புத்தியே புத்தி! அன்பு அறிவை வென்றிருக்கிறது.

அடுத்த ஆண்டில் என் தந்தை, என் பாட்டியின் ஆலோசனையின் பேரில் தமது ஊராகிய ஈத்தவிளையில் யோசேப்பு என்பவர் மகளாகிய எலிசபேத் என்னும் அம்மாளைத் திருமணஞ் செய்து கொண்டார். நானும் அன்று அவருடன் செல்ல அழுதேன். வழக்கம் அல்லாதபடியால் என்னைக் கூட்டிச் செல்லவில்லை. புதிதாய் வரப்போகும் அம்மையாரைச் 'சித்தி' என்று நான் அழைக்க வேண்டுமென்று அன்று பெரியோர்கள் எனக்குக் கற்பித்தனர்.

# பள்ளிப் பருவம்

1910-ம் ஆண்டு, எனது வீட்டிலிருந்து ஒரு மைல் தூரத்திலுள்ள திருவட்டாறு மலையாளப் பள்ளிக்கு நான் அனுப்பப்பட்டேன். பறளி (பஃறுளியும் இதுதானோ?) என்று முன்னரும், தாமிரவருணி என்று இக்காலமும் அறியப்பட்டு வரும் சிற்றாறு, முப்பத்தாறு மைல் நீளமே உடையது. இதில்தான் பெருஞ்சாணி அணை (ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் பாண்டிய மன்னரால் கட்டப்பட்ட பாண்டியன் அணைக்கு அருகில்) கட்டப்பட்டிருக்கிறது. இந்த ஆற்றினால் முப்பக்கமும் சூழப்பட்டிருக்கும் செழிப்பான ஊரே வரலாற்றுச் சிறப்புப்பெற்ற திருவட்டாறுகும். முகிலனது படை தோற்ற இடமும், இராமையன் தளவாய்—மந்திரி—பிறந்த இடமும் இதுவேயாகும்.

இவ்வூர் கி. பி 2-ம் நூற்றாண்டைச் சேர்ந்த புறநானூற்றுப் புலவரால் சிறப்புறப் பாடப்பெற்றதுமாகும். புறநானூறு 396 ம் பாட்டில் வாட்டாற்று எழினி ஆதனைக் குறித்தும்,வாட்டாற்றைக் (திருவட்டாற்) குறித்தும் கூறப்படுவதை நோக்குவோம். "நீர்வளம் சிறந்த வாட்டாறு என்னும் ஊர் உரியன் ஆகிய எழினி ஆதன்; ஊக்கமில்லாதார்க்கு வலியாகி துணை செய்வன்; அறிவில்லார்க்கு அறிவு துணை செய்வன்" . . . "கழனிகள் நீர் நிறைந்திருப்பதால் நீர்மேல் பூக்கள் பூத்திருப்பதும், கீழ் நீரில் மீன்கள் வழங்குவதும், விளைந்து முற்றிய நெல் வயல்களில் புள் இனம் படிந்துண்ணுவாறு உழவர் அரிப்பறை முழக்குவதும்,கள் நிறைந்த பனைகளில் கோசர்கள் கள்ளுண்டு மகிழ்ந்து குரவையாடி இன்புறுவதும வாட்டாற்று நாட்டில் காணப்படும் நிகழ்ச்சிகளாகும்." [குறிப்பு: 25-ம் பக்கம் பார்க்க.]

அக்காலம் என் இனத்தார் பலர் மலையாளம் படித்ததில்லை. நாங்கள் தாழ்ந்த வகுப்பினராகக் கருதப்பட்டோம். நான் அங்கு இரண்டாம் வகுப்பில் சேர்க்

கப்பட்டேன். என்னைச் சோதனை செய்ய கொடுக்கப்பட்ட எழுத்துக் கணக்குகளை நான் மனக்கணக்காகவே செய்து, மூன்றும் வகுப்பிற்குத் தகுதியுடையவனெனக் காட்டியும், தலைமை ஆசிரியர் 'இவன் சிறுவன், ஆகையால் இரண்டாம் வகுப்பிலேயே இருக்கட்டும்' என்று முடிவு கட்டிவிட்டார்.

அன்று வகுப்புகள் 'ப' வடிவத்தில் அமைக்கப்பட்டிருக்கும். என்னையும், என் இனத்தாரையும், வகுப்பின் கடைசியில் ஒதுக்கி வைத்தனர்; எனது தந்தை என்னோடுகூடத் தனது மாணுக்கர் சிலரையும் இங்கேயே அனுப்பி வைத்தார். இது, தங்களை உயர் ஜாதிக்காரர் என எண்ணிக் கொண்டிருந்தோருக்கு மிகவும் வெறுப்பைக் கொடுத்தது. அப்பொழுதே நான அக்கொடுமையை உணர்ந்து, உள்ளம் நொந்தேன். எனது அக்காளை அங்குள்ள பெண் பாடசாலையில் சேர்க்க முயலவே, அதிகாரிகள் மறுக்க, என் தந்தை அக்கால உயர் கல்வி அதிகாரிக்கு (அவர் ஆங்கிலேயர்) எழுதி அனுமதி பெற்று அக்காளும் அங்கேயே சேர்க்கப்பட்டாள். இம்மட்டோடு நின்று விடாமல் 1914-ல், பெண்கள் பள்ளிகளில் முதல் முதல் தையல் கற்றுக் கொடுக்க ஏற்பாடாகவே, என் தந்தை எனது சிறியதாயாரைப் பல எதிர்ப்புகளின் மத்தியிலும் அப்பள்ளியிலேயே தையல் ஆசிரியையாக நியமிக்கச் செய்தார். அன்று ஒரு சில கிறிஸ்தவர்கள் மட்டும் அரசாங்கப்பள்ளிகளில் ஆசிரியராயிருந்தனர். இக்கிறிஸ்தவ ஆசிரியர்கள் ஒன்றும் இரண்டாம் வகுப்புகளில் படிக்கும் நாயர் குழந்தைகளையுங்கூட 'வாருங்கள், இருங்கள்' என மிக மரியாதையாக அழைப்பது வழக்கம். அச்சூழ் நிலையிலும் எனது சிறிய தாயார் முப்பத்தைந்து ஆண்டுகளாக அதே பள்ளியில் பணியாற்றி, ஓய்வுபெற்று, பத்தாண்டுகாலம் ஓய்வுகால ஊதியமும் பெற்று, 1959 ஏப்ரில் 19-ல் மறுமை புகுந்தனர்.

சாலை வழியாகப் பள்ளிக்கூடஞ் செல்கையில் பிராமணர்கள் எங்களைப் பார்த்து, "ஒத்திப்போ, ஒத்திப்

போ" என்று கத்துவர். அந்நாட்களில் வேண்டுமென்றே சாலையில் நான் ஒரு ஓரமாய் நடந்து, என் அக்காளை மறு ஓரமாய் நடக்கச் செய்து, பிராமணர் வரும் வேளையில், நாங்கள் இருவரும் இருபுறமிருந்தும் அவர்கள் நேருக்கு நெருங்க முயல்வோம். அவர்கள் எங்களை வைதாலும், அவர்களைத் 'தீட்டுப்படுத்துவதில்' எனக்கு ஒரு தனி மகிழ்ச்சி இருந்தது. ஒரு முறை கோயிலுக்குப் பால்கொண்டு போனவன் ஒருவன் என்னை வழியிலே கண்டு ஒதுங்க, அவ்வழி வந்த நாயொன்று பால் குவளையை நக்கியும, அவன் அதைப் பொருட்படுத்தாது என் நிழலுக்கே விலகிச்சென்றான். அப்பிராமணர் அரசாங்கப்பள்ளிகளில் ஆசிரியராயிருப்பினும், ஆலய ஊட்டுப்புரைகளில் சென்று உண்டு வருவது அக்கால வழக்கம்.

எனது தாய்மொழி தமிழாதலின், மலையாளம் படிப்பது எனக்குச் சற்றுக் கடினமாய்த் தோன்றிற்று. சீக்கிரத்தில் நான் மலையாளிகளில் ஒருவனைப்போலப் பேசவும், எழுதவும் திறமைபெற்றேன். இன்றும் என் மலையாளப் பேச்சைக் கேட்பவர்கள் நான் தமிழனென்பதை நம்பத் தயங்குவர்.

---

(23-ம் பக்கம் பார்க்க.)

குறிப்பு: [வாட்டாற்றைக் குறித்த புறநானூற்றுக் குறிப்பு, இக்காலமும் மிகப்பொருந்தும். கள் என்பது பனைமரத்தின் பதநீரைக் குறிக்கும். குரவை போடும் வழக்கமும் அங்குண்டு. அங்கிருக்கும் 'கடவுளை' வாட்டாற்றான் என்றே இன்றும் துதித்துப் புகழ்கின்றனர்.]

# ஆங்கிலங் கற்றல்

ஆங்கிலம் படிப்பதற்காக 1913ல் எனது வீட்டிலிருந்து நான்கு மைலுக்கப்பாலுள்ள தொடிவெட்டி* ஆங்கிலப் பாடசாலையில் என்னைச் சேர்த்தனர். அதுவரை மிஷன் கீழிருந்த அப்பாடசாலை, அவ்வாண்டில் தான் அரசாங்கத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. நாடோறும் எட்டு மைல் நடந்து, தோப்புகளில் கட்டுச் சோறும் உண்டு, காலையும், மாலையும் வழிநெடுக விளையாடி அங்கு இரண்டாண்டுகள் கழித்தேன்.

என் தந்தை அன்புள்ளம் படைத்தவராயினும், முற்கோபியாயிருந்தார். அக்காலம் பள்ளி ஆசிரியர்களில் சிலர் குழந்தைகளை மிகவும் குரூரமாய் நடத்தினர். என் தந்தையும் அதற்கு விதி விலக்கல்ல. என் தாய்மாமனான திரு. மனோன்மணி (Retired Munsiff) எனது தாயாரின் திருமணத்திற்கு முன்னரே எனது தந்தையின் மாணவர். அத்தருவாயில், எனது தாயாரின் திருமண ஏற்பாடுகளைக் கேள்விப்பட்ட என் பாமனார் "அக்காளை அந்த உபாத்தியாருக்குக் கொடுக்கவே கூடாது, அவர் அடித்துக் கொன்று போடுவார்," என்றாராம். அப்பக்கம் முழுவதும் "உபாத்தியார் வருகிறார்," என்றால் நடுக்கம்தான்.

ஒருமுறை நான் எனது ஒன்றாம் படிவத் தோழன் ஒருவனிடமிருந்து, பென்சிலை வெட்டுவதற்காக வாங்கிய கத்தியைத் தவற விட்டு விட்டேன். அதின் கிரயம் சுமார் 18 பைசா. அதன் விலையைக் கொடுக்கவும் வழியின்றி, இன்று, நாளை, எனச் சில நாட்களைக் கடத்தினேன். என் தந்தையிடம் சொல்லவும் அஞ்சினேன். கடைசியாக அதைக் கொடுக்க மார்க்கமின்றி, வெட்கத்தாலும், துக்கத்தாலும் பாடசாலை செல்லுவதையே

*தொடிகள் - படிகள் — வெட்டிய ஒரு பெரிய கற்பாறை அங்கிருக்கிறது. அதால் இப்பெயர் வந்தது.

நிறுத்தினேன். காலையில் வீட்டிலிருந்து புறப்பட்டு, பகல் உணவை மலைமீதேறிச் சாப்பிட்டுவிட்டு, மாலையில் வீடுதிரும்புவேன். மூன்று நாட்களுக்குள் அச்செய்தி என் தந்தைக்குத் தெரிய வந்தது.

எனது வீட்டுக்கருகில் என் தந்தையின் பள்ளித் தோழரும், நண்பருமாகிய நாயர் குல ஆசிரியர் ஒருவர் இருந்தார். சந்திர சேகரன் என்னும் பெயருடைய அவரது மகன் என்னுடன் படித்து வந்தான். பள்ளி செல்லாத நாட்கள் புதன், வியாழன், வெள்ளி. அக்காலம் சனியும், ஞாயிறும் விடுமுறை நாட்களே. சனிக்கிழமை பிற்பகலில் என்னை நாலு மைலுக்கப்பாலுள்ள குலசேகரம் மிஷன் ஆஸ்பத்திரிக்கு என் தந்தை அழைத்துச் சென்றார். அந்த நாயர் ஆசிரியரும்; அவரது மகனும் எங்களுடன் பாதித்தூரம் மட்டும் வந்து வேறு வழி திரும்பினர். சந்திர சேகரனிடம், நான் பள்ளி செல்லாததைக் குறித்து என் தந்தையிடம் சொல்லக் கூடாதென வெகுவாய்க் கெஞ்சினேன். அவனும் அதற்கிசைந்தான். எனினும் வழிபிரிந்து செல்லும வேலையில் உண்மையை உளறிவிட்டான். அப்பொழுது எனக்கு வயது பத்து.

வழி நெடுக ஆலமரங்கள் அடர்ந்து வளர்ந்து நின்றன. அதன் விழுதொன்றை அறுத்து, எஞ்சிய தூரம் முழுவதும் அதனால் என்னை என் தந்தை துரத்தித் துரத்தி அடித்தார். பொதி சுமக்கும் கழுதையைப் போலவும், வாய்விடா வண்டி மாடு போலவும் அடிக்கப்பட்டேன். சீர்பட வேண்டுமென்றே நான் இவ்வாறு நடத்தப்பட்டாலும் என் குணம் மாறவில்லை. பிரம்படியை நான் சிறு பருவத்தே நன்கு ருசித்தவன். எனது அழுகைக் குரல் கேட்டு என்னை விடுவிக்க அடிக்கடி அண்டை வீட்டுக்காரரான என் தந்தையின் தமையனர் ஒருவர் வருவதுண்டு.

திங்கள் காலையில் என்னைப் பள்ளிக்கனுப்பி, என்னிடம தலைமை ஆசிரியருக்கு ஒரு எழுத்தையும் கொடுத்

தார். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதை நான் அறியவில்லை. பள்ளிசெல்லாத குற்றத்தை மன்னிக்குமாறு எழுதியிருக்குமென்றே எண்ணி, எழுத்தைக் கொண்டு கொடுத்தேன். அதைப் பார்த்த அவர் "நீ வகுப்பிற்குப் போகலாம்," என்று என்னை அனுப்பி விட்டு, சற்றுப்பின் பாடம் நடந்து கொண்டிருந்த போது அவர் வகுப்பில் வந்து, யாவரும் கேட்க அவ்வெழுத்தைப் படித்தார். "எனது மகன் தேவசகாயம் சென்ற வாரம் மூன்று நாட்கள் எனது அனுமதியின்றிப் பள்ளிக்கூடம் வரவில்லையென்று அறிகிறேன். அவனை ஒவ்வொரு வகுப்பிற்கும் அழைத்துச்சென்று ஆறு அடி வீதம் அடிக்கும்படித் தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்" என எழுதப்பட்டிருந்தது.

அத்தலைமை ஆசிரியர், அப்பள்ளிக்கூடத்திலிருந்த எட்டு வகுப்புகளிலும் என்னைக் கொண்டுபோய், என் தந்தையின் விருப்பத்தை எழுத்தெழுத்தாய் நிறைவேற்றி முடித்தார். அந்த ஒரே நாளில் எனக்குக் கிடைத்த அடிகள் நாற்பத்தெட்டு. அந்தத் தர்மராஜ ஐயருக்கும் அன்று புத்தி எங்குதான் போயிற்றோ*. இதனால் என் தந்தை என்னைப் பகைத்தார் என்பதல்ல. அவருக்கு அன்பிருந்தும் அறிவுடன் அது செயல் படவில்லை என்று எண்ணுகிறேன்.

அந்நாட்களில்தான் முதல் முதல் பாடசாலைகளில் பேச்சுப் போட்டி இடம்பெற்றது. பத்து வயதுச் சிறுவனான நான், ஒரு முறை, என் தந்தையிடமிருந்து கற்ற கதை ஒன்றைப் பெரியோர் பலர் மத்தியில் மலையாளத்தில் தைரியமாய்ச் சொன்னேன். அது, நாவல் மரத்தில் தனது ஈரலை வைத்து விட்டு, முதலை மீதேறி ஆற்றைக்கடந்த குரங்கின் கதைதான். இதுவே எனது

---

*ஐந்து தரம் அடிக்கப்பட்ட பவுல்கூட ஒரே வேளையில் ஒன்று குறைய நாற்பது அடிகள்தான் அடிக்கப்பட்டார் (2 கொரி. 11:24).

முதல் மேடைப் பேச்சு. இக்காலத்தில் இக்கதையை நான் மனச்சான்றை மாற்றி வைத்துவிட்டுச் செயல் படும நபர்களுக்கு ஒப்பிட்டுக் கூறவதுண்டு.

1914 ல் நான் ஐம்பத்து நான்கு நாட்கள் குடல் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, ஆஸ்பத்திரியில் இருந்தேன். எற்ற வாகன வசதிகள் இல்லாத அக்காலத்தில் என்னை நீளமான துணித் தொட்டில் ஒன்றில் கிடத்தி, அதை நீண்டதோர் மூங்கில் தடியில் தொங்கவிட்டு, இருவர் ஐந்து மைல் தூரம் தோளில் சுமந்து சென்றனர்.* வியாதியாயிருந்தபோது என் தந்தையின் அடிகளுக்குத் தப்பினபடியால் என்பிணி நீங்கக்கூடாது என ஊக்கமாய் நான் ஜெபித்த நாட்களுமுண்டு. அக்காலம் எற்ற மருந்துகளில்லையாயினும் கிருபை மிகுந்த பரம நந்தை என்னைத் தமக்கென்று என் தாயின் கர்ப்பதிலிருந்தே பிரித்தெடுத்தமையால் நான் மரணத்தினின்று காக்கப்பட்டேன். ஆனால் அவ்வாண்டில் படிப்பில் தோல்வியுற்றேன்.

---

# நாகர்கோவிலில்

அடுத்த ஆண்டில் நான் நாள்தோறும் பத்து மைல் நடக்கப் பெலனற்றிருந்த படியால், என்னை நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவப் பாடசாலையில் சேர்த்தனர். அப்பாடசாலையில் ஆசிரியராய்ப் பணியாற்றிய எனது தாய்மாமன் திரு. மனோன்மணி அவர்களது வீட்டில் சிலமாதங்களும், ஏனைய மாதங்கள் மாணவர் விடுதியிலும் தங்கினேன். அப்பொழுது பிறமொழியாக சமஸ்கிருதம படிக்க வாய்ப்புக் கிடைத்தது. அம்மொழி பிற்காலத்தில் நான் இந்தி மொழி கற்கப் பேருதவி

---

* இக்காலமுங்கூட பிணியாளிகளைக் கொண்டுபோக இதுவே சாலச்சிறந்தமுறை என்பதற்கையமில்லை.

யாயிருந்தது. அடுத்த ஆண்டில் சற்றுப் பெலனடைக் தமையாலும், என் மாமனூர் நாகர்கோவிலை விட்டு விட்ட படியாலும் இரண்டாம் மூன்றும் படிவங்களுக் குத் தக்கலைக்கு* அனுப்பப்பட்டேன். அப்பொழுது அங்கிருந்து மூன்று மைலுக்கு அப்பாலிருக்கும் கட மலைக்குன்றில் எனது பாட்டனூர் புது வீடு கட்டி அதில் குடியேறினர். காடாயிருந்த இடத்தில் கட்டப்பட்ட முதல் வீடு அதுவேயாகும். தினமும் காலை பழைய ஏற்பாட்டையும், மாலை புதிய ஏற்பாட்டையும் நான் வாசிக்க, ஒழுங்காய்க் குடும்ப ஜெபம் செய்வோம். குடும்பச் சொத்தைப் பற்றிய சிறியதொரு எல்கை வழக்கு இருந்ததை என் பாட்டா மனதில் கொண்டு, அதற்குக் காரணம் தனது மூத்த மருமகளே என எண்ணி "எங்கள் சத்திராதிகள் செய்யும் சூட்சிகளை அபத்தமாக்கும் ஆண்டவரே" என்று சொல்லாமல் அவர் ஜெபத்தை முடிக்கவே மாட்டார். ஒரு நாள் நான் "பாட்டா! மாமியும் (மூத்த மருமகள்) நாடோறும் ஜெபிக்கிறார்கள். அவர்களும் இவ்வாறே ஜெபித் தால் கடவுள் யாருடைய ஜெபத்தைக் கேட்பார்?" என்று கேட்டேன். அவர் சற்று கோபப்பட்டாரெ னினும், அன்று முதல் ஜெபத்தின் அப்பாகத்தை விட்டு விட்டார். இளமையிலேயே பிழையைச் சுட்டிக்காட்ட நான் தயங்கவில்லை.

அங்கு ஒரு முறை மலையாள எழுப்புதல் பிரசங் கிமார் வந்தனர். அவர்கள் பெரும்பாலும சத்தமிடும் வெண்கலங்களே. எனினும் அவர்களது பேச்சு என்

---

*தக்கலையைச் சுற்றிப் பண்டைக்காலத்தில் நாட்டின் தலையிடமாய் விளங்கின பத்மநாபபுரம், கேரளபுரம், திருவிதாங்கோடு (அதங்கோடு), இரணியல் ஆகிய நான்கு பேரூர்கள் இருக்கின்றன. பத்மநாபபுரத்தில் சுமார் 600 ஆண்டுகளுக்கு முன் இரும்பை உபயோகப் படுத்தாமலே முழுவதும் மரத்தால் கட்டப்பட்ட அரண்மனையை, இன்றும் வந்து பார்க்கும் அயல் நாட் டாரில் ஆச்சரியப்படாதோர் இல்லை.

லைத் தொட்டது. நான் ஒரு புதிய தீர்மானஞ் செய்
தேன். என்னோடு சண்டை போட்டுப் பேசாமலிருந்த
ஒரு பள்ளித் தோழனோடு ஒப்புரவாக வேண்டுமென
ஊக்கமாய் ஜெபித்தேன். அடுத்த நாள் அவன் தானா
கவே என்னிடம் வந்து பேசினான். கடவுள் ஜெபத்
தைக் கேட்கிறவர் என்பதை நான் எனது வாழ்க்கை
யில் அறிந்த முதல் நாள் அது. அன்று எனக்கிருந்த
மகிழ்ச்சிக்கு ஓர் அளவில்லை.

1918-ல் திருவிதாங்கூரில் ஆங்கிலக் கல்வியின்
நூற்றாண்டு விழா (1818-ல் மீட், மால்ட் என்ற மிஷ
னரிமார் நாகர்கோவிலில் முதல் ஆங்கிலப்பள்ளியை
நிறுவினர்.) கொண்டாடப்பட்டது. நான் கற்ற பாட
சாலையில் நடைபெற்ற பேச்சுப் போட்டி முதலியவற்
றில் நானும் கலந்து கொண்டு பரிசுகளும் பெற்றேன்.

தக்கலைப்பள்ளியில் ஜாதி அடிப்படையில் பகல்
உணவு அருந்த அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.
ஆனால் கிறிஸ்தவர்களுக்கென்று ஒன்றில்லை. அப்பொ
ழுது, அப்பாடசாலையில் படித்த பதினேழு கிறிஸ்தவ
மாணவர்களையும் தலைமை ஆசிரியரிடம் நானே கூட்டிச்
சென்று, அவரைப் பேட்டிகண்டு, அக்குறையை
நீக்கினேன். எனது குடும்பத்தினரிடம் இருந்த
"முன்னிற்கும்" குணத்தைக் கடவுள் எனக்கும் தந்தி
ருப்பதால் அவரை நன்றியுடன் போற்றுகிறேன்.

நான் அங்கு படிக்கையில் (இரண்டாம் படிவம்)
மாணவருக்கு மதிப்பு எண் சீட்டுக் (progress card)
கொடுக்கும் வழக்கம் புகுத்தப்பட்டது. ஒரு தேர்வில்
எனக்கு எல்லாப் பாடங்களிலும், நல்ல மதிப்பெண்கள்
கிடைத்திருந்தும், கணக்குப் பாடத்தில் ஐம்பதிற்கு
எட்டு மாத்திரம் எனத் தலைமை ஆசிரியர் குறிச் சீட்
டைக் கொடுத்தார். உடனே நான் "ஐயா! அது
தவறு. நான் எல்லாக்கணக்குகளையும் சரியாய்ச் செய்
திருக்கிறேன். என் விடைப்பத்திரத்தைப் பார்க்க
வேண்டும்." என்று அழுகையுடனும், தைரியத்துடனும்

கேட்டேன். அவர் வகுப்பாசிரியருடன் கலந்து, விடைப் பத்திரத்தைச் சரி பார்த்து, எனக்கு "நாற்பத்தெட்டு, முதல் மதிப்பெண்" என்று கூறி மகிழ்ந்தார். அறியாமையையும், அநியாயத்தையும் எதிர்க்கும் குணம் அச் சிறுவயதிலேயே என்னில் காணப்பட்டது ஆண்டவரது கிருபையே. ஆண்டவர் அளித்திருந்த கிருபையை அங்கு நிலைநாட்டினேன் என்று எண்ணுகிறேன்.

தக்கலையில் நடுத்தரப் பாடசாலையே இருந்தமையால் உயர் நிலைப்பள்ளிக் கல்விக்காக நான் மீண்டும் நாகர் கோவிலுக்கனுப்பப்பட்டேன். 1918-ல் ஸ்காட் கிறிஸ்தவ உயர்நிலைப் பள்ளியில் நான்காம் படிவத்தில் சேர்க்கப்பட்டு, மாணவர் விடுதியில் (தங்குசாலையில்) தங்கினேன். அவ்வாண்டில் முதலாம் உலக யுத்தம் முடிவடைந்ததையொட்டிப் பாடசாலைகளிலும் ஆர்பாட்டங்கள் நடைபெற்றன. மாணவர்களுக்கு இரண்டு நாட்கள் விடுமுறையும், இனிப்பும் வழங்கப்பட்டன. எங்கள் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

முதல் ஆண்டில் எல்லாப் பாடங்களிலும் மிகவும் திறமையுடன் காணப்பட்டேன். வகுப்பறைகளில் ஏதாயினும் வேடிக்கையாகப் பேசி மற்றவர்களைச் சிரிக்க வைத்து, அதனால் சில ஆசிரியர்களின் கோபத்திற்கும் ஆளானேன். அக்கால ஆசிரியர்கள் பலவகையினர். ஒருவர் குட்டிப் பயில்வான் போன்றவர். அவர் வீட்டில் ஒழுங்காய் விறகுவெட்டி, தண்ணீர் இறைத்து உடம்பைப் பக்குவப்படுத்தியவர். வேறொருவர், அக்காலம் முதல் முதல் செயற்கைப் பல் வைத்திருந்தபடியால், எங்களுக்கு அது வேடிக்கையாய்த் தோன்றியது. சிலர் வெற்றிலை போடுதல், வாயினுள் பொடிபோடுதல் முதலிய பழக்கங்களையுடையவர்கள். இப்படிப்பட்ட ஆசிரியர்கள் பலரில் எனது மதிப்பிற்கும், அன்பிற்கும் உரியவராயிருந்தவர் எனக்கு விருப்பப் பாடங்கற்பித்த பிரபலக் கணித ஆசிரியரான திரு. பெஞ்சமின் பி.ஏ., எல்.ற்றி. அவர்களே.

இவர் தற்பொழுதைய (1964) ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூ ரித் தலைவர் திரு. அருமைராஜ் அவர்களின் தந்தையாவார். குறும்புத் தன்மையால் பலராலும் வெறுக்கப்பட்ட என்னை அவர் அதிகமாக நேசிக்கக் காரணம், தமது குழந்தைப் பருவத்தில் அவரிலிருந்த குறும்புத் தன்மை யும் அன்று, கணிதத்தில் எனக்கிருந்த திறமையும் அன்று, என்னில் மறைந்திருந்த நற்குணங்களைப் பாராட்டும் அவரது பெருந்தன்மையே. நான் அவரது வகுப்பில் பெட்டிப்பாம்புபோல் இருக்கக் காரணம், அவரில் காணப்பட்ட நகைச்சுவையும், கற்பிக்கும் திறமையால் எவரும குறும்பு செய்ய இடங்கொடாதிருக்கும் சிறந்த பண்புமே யாகும்.

இதற்கு மாறாகத் தங்களை வெகு திறமைசாலிகள் என நினைத்துக்கொண்டு நகைப்பைப் பகைத்து, கட்டுப் பாட்டை நிலைநிறுத்தப் பிறந்தவர்கள் போல, வகுப் பறைகளைச் சிறைக்கூடம்போல் மாற்றியவர்களுமுண்டு. அக்காலத் தலைமை ஆசிரியரோ யாவரிலும நடுக்கத்தை யும், மதிப்பையும பிறப்பித்த உயர்திரு. பால் டானியல் எம.ஏ., எல்.ற்றி ஆவர். எழுத்திலும, பேச்சிலும், நிருவாகத்துறையிலும் ஒன்றுபோல் திறமைபூண்ட இப் பெரியார், முதல் முதல் எம.ஏ. பட்டம் பெற்ற இந்தியர் களில் ஒருவர் ஆவர். கறுத்த நிறமும், பருத்த உட லும், களைபொருந்திய முகமும், பரந்துயர்ந்த நெற்றியும், கண்டிப்பை வெளிப்படுத்தும் கூர்மையான கண்களும், அடர்ந்து படுத்த மீசையும, முட்டுமட்டும எட்டின சட்டையும், கால்களினிடையே பாய்ச்சிக் கட்டிய வேஷ்டியும, பொன் வண்ணச் சட்டமிட்ட கண்ணாடி யும், பெரிய தலைப்பாகையும், இசையுடன் ஒலிப்பினும் அதிகாரஞ் செறிந்த குரலும, இணைபிரியாத பிரம்பும் ஒருமுறை கண்டவர் எவரும் ஒருநாளும் எளிதில் மறந்து போகாத தோற்றமுடைய அவருடைய உருவத்தை மன தில் பதிக்கக்கூடியனவாயிருந்தன.

'போர்டிங்' பயிற்சி அதிக மனக்கிளர்ச்சியை உண்டுபண்ணியது. முதலாம் உலகப்போர் முடிந்த

காலம் அது. என்து வகுப்பில் மலையாளத்தை இரண்டாம் மொழியாகப் பயின்றவர்கள் நால்வரே இருந்தனர். முதலாம் ஆண்டில் ஏறக்குறைய எல்லாப் பாடங்களிலும் நானே முதல்வனாகயிருந்தேன். Geometry கணிதம் எனக்குப் பிரியமான பாடம். என் தந்தையும் கணிதத்தில் திறமைசாலி. எனது எட்டாம வயதிலேயே முந்திரி (1/320) வாய்ப்பாடு வரை மனப்பாடம் செய்திருந்தேன். ஒரு முறை ஆசிரியர் வகுப்பில் கொடுத்த ஒரு கேள்விக்கு அவரும் விடைகாண இயலாமல் போகவே, ஐந்து நாட்களாக இரவுபகலாய்ப் பாடுபட்டுக் கடைசியில் நானே அதற்கு விடை கண்டுபிடித்தேன்.

அக்காலம் காலை 9.15 மணிக்குப் பாடசாலையில் காலை ஜெபம் நடைபெறும். அங்கேயே கிறிஸ்தவ மாணவர்களது ஆஜரும் பதிவு செய்யப்படும். ஜெபத்தில் பங்குபெறாதோர் பிந்தி வந்தோராய்க் கருதப்பட்டனர். விருப்பமுள்ள ஐந்தாம்படிவக் கிறிஸ்தவ மாணவருக்குப் 'பீட்டர் கேட்டர்' என்ற வேதபாடப் போட்டித் தேர்விற்கான பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. அதைச் சேர்ந்த மாணவர் ஜெபத்திற்குச் செல்லாமலே 9.30க்கு வகுப்பிற்கு நேரடியாய்ச் செல்லலாம். ஆகையால் ஜெபத்திற்குப் போகாமலிருக்கவும், கால் மணி நேரம் பிந்திப்போகவும் இது ஏற்ற முறை என்று கண்டு நானும் அவ்வகுப்பில் சேர்ந்தேன். அவ்வகுப்பை நடத்தினவர் முன்கூறிய திரு. பால் டானியேலின் அண்ணனாகிய திரு. பால் அப்பல்லோஸ் என்பவர். மெலிந்த உடல் கொண்டவர். வெள்ளைப் பைஜாமாவும், நீண்ட சட்டையும் அணிபவர். தம்பியாலேயே அவருக்குச் செல்வாக்கிருந்தது. குறும்பு செய்யும் மாணவரிடம் "If you do that once again I will report to my brother" என்று இசையோடு கூறுவர். அந்த வகுப்பிலும் ஒரு ஆண்டு படித்தேன்.

---

# இராவழி நடந்தேன்

அக்காட்களில் பண நெருக்கடியால் நான் பட்ட பாடு கொஞ்சமல்ல. பெருவாரியான மாணவர்கள் பெற்ரேரிடமிருந்து கைக்காசு (Pocket money) பெறுவது வழக்கம். எனக்கோ அப்பாக்கியம் இருந்ததில்லை. மாதச் சம்பளத்தைத்தவிர (fees) வேருெரு காசையும் நான் தொட்டறியேன். அப்பொழுது எனது வகுப்பிற்கு மாதச் சம்பளம் ரூபாய் மூன்று. தங்குசாலேயில் உணவிற்கு மாதம் நாலேகால் ரூபாய்.

அக்கால ஒரு ரூபாய்க்கு 456 செப்புக்காசுகள். அந்த ரூபாய், பிரிட்டிஷ் ரூபாய் என்று அழைக்கப்பட்டது. ஒரு காசுக்கும வாங்கக்கூடிய பண்டங்கள் பல. திருவிதாங்கூர் மன்னருடைய நாணயத்தில் ஒரு ரூபாய்க்கு 448 காசு மட்டும். இதற்குச் சர்க்கார் ரூபாய் என்று பெயர். 16 காசு ஒரு சக்கரம்; 28 சக்கரம் ஒரு ரூபாய். கொடுக்கல் வாங்கல் யாவும் திருவிதாங்கூர் நாணயத்திலேயே நடைபெற்றன. பல மாணவருக்கும் சம்பளம் மாதாமாதம் மணி ஆர்டர் மூலம் பிரிட்டிஷ் ரூபாயாகவரும். எனக்கோ சர்க்கார் ரூபாயாகவே வரும்.

பீஸ் மாதந்தோறும் 10-ம் தியதி தவறினல் 8 சக்கரம் அபராதத்துடன் 20-ம் தியதியிலும், அது கடந்தவறினல் 21 சக்கரம் அபராதத்துடன் மாத முடிவில்தான் பெற்றுக்கொள்ளப்படும். சிலவேளைகளில் எனக்குப் பணம் பிந்தி வந்தாலும் அபராதமில்லாமலே வரும். அபராதம் கொடுக்கக் கடன்படவேண்டியதாயிற்று. பிந்தி வருகிற பணம், பீஸ் கட்டவேண்டிய அடுத்த முறைவருமவரைக் கையிலேயே இருந்தது பலவேளைகளில் சோதனைக்கிடமாயிருந்தது. இக்காரணங்களால் நாளடைவில் எனது கடன் அதிகரிக்க சம்பளப் பணத்திலிருந்து கடனைத்தீர்த்து விட்டு வகுப்புச் சம்பளத்தைக் கொடாமலிருந்து விட்டேன்.

ஒந்த பெயரும் 'எடுக்கப்பட்டுப்போயிற்று. என்ன செய்வதென்று தெரியாது, ஒருநாள் இரவு இரண்டு மணிக்கு எழுந்து, இராக்கதனைப்போலத் தனித்து 14 மைல் நடந்து குளச்சல் சென்றேன். அது கடற்கரை ஊர். ஆறு ஆண்டுகளுக்குமுன் கடலைக்காண ஒருமுறை மட்டும அவ்வூர் சென்றிருந்தேன். அப்பொழுது நான் சென்றது அழகியமண்டபம்—தெய்யூர் பாதை. நாகர்கோவிலிலிருந்து சென்ற பாதையோ எனக்குப் புதிது. சூரியன் உதிக்குமுன்னரே கடற்கரையை அடைந்தேன். பொழுது விடிந்ததும், அங்குள்ள தம்பு ஆபீஸில் வேலைசெய்து வந்த எனது நண்பர் ஒருவரைக் கண்டேன். அவர் எனது தகப்பனரிடம் 70 ரூபாய் கடன்பட்டவர். அதற்காக வழக்குப்பதிவு செய்தும் பயனில்லாது போயிற்று. ஆகையால் என் தந்தை அதில் கிடைக்கக் கூடியதை நான் பெற்றுக் கொள்ளலாமென்றும், அவ்வாறு ஏதேனும் கிடைத்தால் அத்தொகையை அவரிடம் சொல்லி விடவேண்டுமெனவும் என்னிடம் கூறியிருந்தார். அந்த நண்பர் எனக்கு ஏதாம ஒரு சிறு தொகை தருவதாக வாக்குப்பண்ணினமையால், மூன்று நாட்கள் அவருடனேயே தங்கியிருந்தேன். மூன்றும் நாள் அவர் என்னிடம் நேரில் சொல்ல வெட்கப்பட்டு, எனக்கு ஒரு சீட்டுக் கொடுத்தனுப்பினர். அதில் "என்னை நம்பிப் பயனில்லை; உனக்கு உதவிசெய்யமுடியாமைக்கு வருந்துகிறேன்" என்று எழுதியிருந்தார். நான், அவர் சாப்பிட்ட இடத்திலேயே, அவரது உத்தரவுடன் ஒரு வேளை கூடச்சாப்பிட்டு விட்டு, பகல் 11 மணிக்கு அங்கிருந்தும் புறப்பட்டேன்.

அங்கிருந்து திருவனந்தபுரத்திற்கு 36 மைல். எனது தாய்மாமனர் அக்காலம் அங்குள்ள உயர்நீதிமன்றத்தில் எழுத்தாளராகவிருந்தார். திருவனந்தபுரத்திற்கும் முன்பு ஒரு முறைதான் போயிருந்தேன். சுமார் 12 மணிநேரம நான் வெறுங்கையுடன் நடந்து

ஒரு வியாழன் இரவு 11·45க்கு மாமன் வீட்டை அடைந்தேன். அப்பொழுது எனக்கு வயது பதினைந்து.

எனது பீஸ் பணம் திருட்டுப்போய்விட்டதென்றும், அது என் அப்பாவிற்குத் தெரிந்தால் அதிகத் துன்பம் நேரிடும் என்றும் சொல்லி அவரை ஏமாற்ற முயன்றேன். என்னை நன்கறிந்த அவர் என் சொல்லை நம்பினது போலப் பாவித்து, திங்கள் காலை, என்னை நீடன் நேரடியாக மோட்டார் வண்டியில் நாகர்கோவிலுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி, தம்முடன் நிறுத்திக் கொண்டார்.

இதற்குள் என் தந்தை தற்செயலாய் நாகர்கோவில் செல்ல, என்னை அங்கு காணாது கலங்கி என்ன செய்வதென்றறியாமல் திகைத்தார். என் குணத்தை நன்கறிந்தவர். போதிய உலக ஞானமும் உடையவர். தங்குசாலையிலிருந்த எனது பெட்டியைப் பரிசோதித்து, நான் என்ன நிறச் சட்டையுடன் வெளியேறியிருக்கிறேன் என்பதைத் தெரிந்து கொண்டார். ஒரு குடை இரவலாக வாங்கிச் சென்றதையும் அறிந்து கொண்டார். உவமையில் இளையமகனைத் (கெட்ட குமாரனை) தந்தை தேடிச்செல்லவில்லை. துணிந்து சென்றவன், அதின் பலனை அனுபவித்தபின்—பன்றி மேய்த்து, பசியினால் செத்து—மனந்திரும்பித்தானே வர வேண்டியவன். என் தந்தையோ அன்று என்னைத் தொடர்ந்தார். அவர், எதிர்ப்பட்டோரிடமெல்லாம் "சாம்பல் நிறச் சட்டையணிந்து, குடையுடன் காலில் செருப்பின்றி நடந்து சென்ற கறுத்த ஒரு இளைஞனைக் கண்டீர்களோ" எனவினவிக் கொண்டே நடந்திருக்கிறார்.

நான் குளச்சலை விட்ட வியாழனன்று, நண்பகலில் அனல் புழுதி படிந்த ரோடு வழி நடந்து, வெள்ளியாவிளையில் வழியருகே இருந்த ஓர் அம்பலத்தில் வெயிலுக்காகச் சற்று ஒதுங்கினேன். அங்கேயிருந்த வழிப் போக்கனொருவன் என் வரலாற்றைக் கேட்க, நான்

அவனிடம் என் பயணத்தைப்பற்றிக் கூறியவற்றை, மாடு மேய்த்த சிறுவனொருவன் கேட்டுக்கொண்டிருந்தான். வெள்ளிக்கிழமை அவ்வழியே என்னைத் தொடர்ந்த என் தந்தை, தற்செயலாக அச்சிறுவனைக் கண்டு விவரமறிந்து, சனி காலை திருவனந்தபுரம் வந்தடைந்தார். என் மாமனார் கச்சேரிக்குப் புறப்படும் நேரமது. அவர், தனது அத்தானின் குணத்தை நன்கறிந்தவராகையால் "சகாயத்தை அடிக்கவேண்டாம்" என்று சொல்லி விட்டுத் தன் துறைக்குச் சென்றார்.

ஆனால் அன்று, நான் "பட்டபாடு குட்டைகொள்ளாது". அவர் என்னை கையப் புடைத்து, நண் பகல் வெயிலில், மூன்று மணிநேரம் ஒற்றைக்காலில் குனிந்து நிற்கவைத்தார். நண்பகல் உணவிற்கு வந்த என் மாமன் என் தந்தையைக் கடிந்து கொண்டு, என்னை விடுவித்து வீட்டிற்குள் அழைத்துவரவே என் உடம்பின் தசைகள் மரத்துப்போய் நான் மயங்கி விழுந்தேன். என் மாமனார் என்ன சொல்லியும் கேளாது, இரவு உணவிற்குப்பின் என் தந்தையும், நானும புறப்பட்டோம். நாங்கள் நடக்கவேண்டிய தூரம் 28 மைல். அக்காலம் இரவு வேளைகளில் திருவனந்தபுரத்திலிருந்து 18 மைல் தொலையிலுள்ள பாறசாலைமட்டும் மாட்டு வண்டிகள் காலியாய் வரும்.

---

## பயண முறைகள்

பெருவாரி மக்கள் நடந்தே தொலையூர்களுக்குச் செல்வர். கட்டுச்சோறுடன் பலர் சேர்ந்தே வழிப் பயணஞ்செய்வர். பயணத்தின் அலுப்பை உணராதிருக்கவும், திருடருக்குப் பயந்துமே அப்படிச்செய்தனர். பெருவழிப் பாதைகள் சல்லிபோடப்பட்டவை. மற்றவை செம்மண்ணினால் செப்பனிடப்பட்டவை. மாட்டு

வண்டிகள் பெருவாரியாய்ச் சுமைகளுக்கெனவே பயன்படுத்தப்பட்டன. பணமபடைத்தோர் வில்வண்டிகளை வைத்திருந்தனர். வாடகை வில் வண்டிகள் ஐம்பதாண்டுகளுக்கு முன் நடமாடத்தொடங்கின.

தபால் வண்டி என்ற ஒன்றும் அக்காலமிருந்தது. அது பெரிய நீண்ட வண்டி. அதின் உடல் மட்டும் பத்து முதல் பன்னிரண்டு அடி நீளமிருக்கும். அதில் பன்னிரு பயணிகள் ஏறுவர். நாகர்கோவில்—திருநெல்வேலி ஐம்பது மைல் தொலைக்கும் இந்தத் தபால் வண்டியில் ஒரு ஆளுக்கு இரண்டு அணா மட்டும்தான் கூலி. ஆறுபேர் ஒருபக்கம் முதுகைச் சாய்த்து இருந்த வண்ணமே கால்களை நீட்டி அமர, மறுபக்கத்திலும் ஆறுபேர் அப்படியே அமர்ந்து செல்வர். பனங்கிழங்கை அடுக்கிவைத்தாற்போல அது தோன்றும். சிலர் வசதிக்காக வண்டியின் பாதிப்பாகத்தைக் கூலிபேசிக்கொள்வர். வெள்ளைக்காரர் முழு வண்டியையும ஒரு ஆளுக்கென்றே அமர்த்திக்கொள்வர். இத்தகைய வண்டியொன்றில்தான் 1908ம் ஆண்டில் பங்களூரில் மரித்த டதி பண்டிதரின் உடல் நெல்லையிலிருந்து நாகர்கோயிலுக்குக் கொண்டுவரப்பட்டது.

இவற்றில் புறாக்கூடு வண்டி என்ற உயர் ரகம் ஒன்றும இருந்தது. அதில் காற்றோட்டத்திற்காய்ப் பலகணிகள் திறந்திருக்கும். அதற்குக் கூலி அதிகம். ஏழு மைலுக்கு ஒருமுறை இந்த வண்டிகளின் மாடுகளை மாற்றுவர். மாடு தேடிச்செல்கையில் பயணிகள் உணவருந்தி, உலாவி, உடல்சோர்வை மாற்றிக்கொள்வர். ஒரு மணி நேரத்தில் இந்த வண்டி இரண்டுமைல் செல்லும். திருநெல்வேலிப் பக்கங்களில் பயணிகள் கள்வருக்கு அஞ்சுவர். மலையாளத்து மந்திரவாதிகளுக்கும், பெயர்பெற்ற வர்மாணிகளுக்கும் மட்டுமே அக்கள்வர் அஞ்சுவர். ஒரு மலையாளத்தான் பத்து கள்வரை அடித்து, பயந்து விழச்செய்த விந்தைபோன்ற கதைகளை கிழவிகள் பெருமையாய்ப் பேசுவதை நானே கேட்டிருக்கிறேன்.

திருவனந்தபுரத்திலிருந்து காலியாய்த் திரும்பின வில்வண்டி ஒன்றில் என் தகப்பனார் ஏற்படுத்திருக்க, நான் அதைப் பிடித்துக்கொண்டு நடந்தேன். நடு இரவில் தூக்கமயக்கத்தால் நான் அவ்வண்டியில் மோத, அவர் தமது காலால் எனது கையை உதைத்து மாற்றினார். என் தகப்பனார் அன்பற்றவரல்ல! ஞாயிறு காலை தோட்டவாரம் சேர்ந்தோம். நான் ஆலயத்திற்குச் செல்லவில்லை. என் தந்தை தான் கண்டுபிடித்த மகனைப் பார்க்கும்படிச் சபையார் பலரை ஆராதனைக்குப் பின் வீட்டிற்கழைத்து வந்தார். பாவம் செய்த மாதை இயேசுநாதர், பிறயாவரும் போன பின்னர்தான் தனிமையில் கண்டித்தார். என் தந்தையோ பிறர் முன்னிலையில் என்னை அவமானப்படுத்தி என்னைச் சீர்ப்படுத்த நினைத்தார்.

மறுநாள் திங்கள் காலையில், திரும்பவும் பதினெட்டு மைல் நடந்து வகுப்புச்சம்பளப் பாக்கியைத் தீர்த்து, வகுப்பில் சேர்ந்து தங்குசாலைக்குள் புகுந்தேன்.

---

# நாகர்கோவில் தங்குசாலை

அக்காலம் அதில் 150 மாணவர் தங்கினர். பெரும்பாலோர் முழுச்செலவும் கொடுத்தனர். அது மாதம் நாலேகால் ரூபாய்தான். நான் நாலேகால் ரூபாய் கொடுத்தவர்களில் ஒருவன். காலை உணவு, "அகப்பைக்கு ஐந்து உழுந்து கலந்த அரிசிக்கஞ்சி. நாள்தோறும் நண்பகல் உணவு வெறும் மிளகுத்தண்ணீருடன் (தேங்காய், உப்பு, மிளகு, மஞ்சள், புளி மாத்திரம் கலந்தது) வெள்ளரிக்காய் இனத்தைச் சேர்ந்த இளவன்காயக் கூட்டும் சோறுமே. மாலையில் ஒன்றும்

கிடையாது. இதனில், வாரத்தில் நாலு நாள் மீன். இரண்டுநாள் இறச்சி. ஞாயிறு பருப்புடன் சோறு.

அங்கு காணப்பட்ட ஒழுங்கீனங்களை அகற்றுவது என்கடமை என அன்றும் நான் நினைத்துச் செயல் பட்டதால் பல பாடுகள் என்னைத் தொடர்ந்தன.

காலை ஐந்து மணிக்கு விழிப்பு மணி அடிக்கும். ஐந்து முப்பதிற்குக் காலை ஜெபம். ஆறாம் படிவ மாண வரே அதனை நடத்துவர். அவர்கள் சட்டம்பிள்ளைகள் என அழைக்கப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவருக் கும் மூன்று முதல் ஐந்துமாணவரின் பொறுப்பு அளிக்கப்பட்டிருந்தது. அவர்களைத் தண்டிக்கவும் அவர்களுக்கு உரிமை உண்டு. அவர்கள் கொடுக்கக் கூடிய மிகப்பெரிய தண்டனை, குற்றவாளிகளை பெஞ் சின் மேல் நிறுத்துவதே. சட்டம்பிள்ளைகள் ஒவ் வொருவருக்கும் ஒருவாரம் தங்குசாலை முழுவதையும் நடத்தும எல்லாப்பொறுப்புகளும் அளிக்கப்படும். அப் போது அவர் "வாரச்சட்டம்பிள்ளை" என அழைக் கப்படுவார். இந்த வாய்ப்பிற்காக யாவரும் ஆசை யுடன் காத்திருப்பர். ஏனெனில் பிற சட்டம்பிள்ளை களையும அவர்கள் அப்பொழுது தண்டிக்கலாம்.

ஜெபப்புத்தகம் இல்லாத இடம் இது. சுயமாய் சமயோசித ஜெபம் செய்யும வாய்ப்பு உண்டு. காலை யில் கீர்த்தனை பாடி அட்டவணைப்படி வேதபாகம் மாறிமாறிப்படித்து, தங்கவசனத்தை மனப்பாடம் பண்ணி, அதற்கு ஒத்தவாக்கியத்தை யாரைக்கொண் டேனும் வாசிக்கச்செய்து, யாவரும் எழுந்து நிற்கச், சட்டம பிள்ளை ஜெபம செய்வார். ஜெபம் நீண்டுவிட் டால் இடையிடையே இருமல், கனைத்தல், சற்று அயர்வுடன் கொட்டாவி போன்றவை மாணவர் மத்தி யிலிருந்து எழும். என்னிலும இவை எழுந்தன, ஜெபத்தின் இடையே "வேண்டிக்கொள்ளுகிறோம" போன்ற சொற்கள் வருமாயின், அதைத் தொடர்ந்து

சத்தமாய் "ஆமேன்" என்று சொல்ல ஒருநாளும் நான் தவறியதில்லை. இன்றும் நான் கூட்டங்களில் நீண்ட ஜெபத்தை விரும்புவதில்லை. உண்மையும் உருக்கமுமான ஜெபத்தை நான் அன்றும் அலட்சியம் செய்யவில்லை.

சனி இரவு தோறும் ஒரு பிரசங்கக் கூட்டம் நடைபெறும். சட்டம பிள்ளைகள் பிரசங்கிக்கவேண்டும். பிரசங்கங்களை எழுதி, முந்தின வியாழன் காலையில் தலைமை ஆசிரியரிடம் கொடுக்கவேண்டும். அவர் அதைத் திருத்திக் கொடுப்பார். தங்குசாலையுடன் தொடர்பில்லாத ஒருவர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகிப்பார். அந்நாட்களில் திரு. ஆகிமாஸ் ஆசிரியர் அதிகமாகத் தலைமை வகித்தார். பிரசங்கத்திற்குப்பின் தலைவர் தகுந்த முடிவுரை கூறுவர். எழுதிய பிரசங்கத்தை சிலர் அப்படியே வாசித்து விடுவர். சிலர் மனப்பாடமாய் ஒப்புவிப்பர். ஐயர்மார் பிள்ளைகள் பெற்றோரின் முயற்சியைப் பயன் படுத்துவர். இவை யாவும் அக்காலத்தில் பெரும்பாலும் வேடிக்கையாகவே கருதப்பட்டன. எனினும் பிற்காலத்திற்கு நல்லதொரு பயிற்சியாகவே இருந்தது என்பதில் ஐயமில்லை.

எனது முதல் பிரசங்க வாக்கியம் "பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும் பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது" என்ற சிம்சோனின் விடுகதையே. நியா. 14: 14. நான் இப்பொழுது அதைப்பற்றிச் சிந்தித்துப்பார்க்கையில், அக்கருத்து எனது பிற்கால வாழ்க்கைக்கு முன்குறியாய் என்னில் அமைந்திருந்தது என்று நம்புகிறேன்.

இளவயதில் என்னிடம் குறும்பு மலிந்திருந்தது. அதைப்பற்றி விளக்கமாய் இங்கு எழுதத்தேவையில்லையெனினும், எனது குணம் பிறருக்கு விளங்கச் சில நிகழ்ச்சிகளைக் கூறுவது தகுதியே.

கிறிஸ்தவ மாணவருக்கெனவே அமைக்கப்பட்டிருந்த அத்தங்குசாலைச் செலவிற்காய், அரசாங்கமும்

அதிகமான மான்யம் கொடுத்துவந்தது. அக்காலத் திருவிதாங்கூரில், நாகர்கோவில், திருவனந்தபுரம், கொல்லம், கோட்டயம் ஆகிய இடங்களில் மாத்திரம் உயர் நிலைப்பள்ளிகள் இருந்தமையால், கொல்லம வட்டாரத்துக் கிறிஸ்தவ மாணவரும் இங்கு வந்து தங்கினர். நாகர்கோவில் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம். தனித்தமிழ் பேசின அவர்கள் கிழக்கர் எனவும், மலையாளமும், மலையாளங்கலந்த தமிழும் பேசின மேற்கு வட்டாரத்தோர் மேற்கத்தியர் எனவும் அழைக்கப்பட்டனர். அவர்கள் தனித்தமிழரால் சற்று வெறுக்கப்பட்டனர். தமிழரின் ஆழ்ந்த அமைதி இவர்களில் குறைந்தே காணப்பட்டது. நாளடைவில் ஆங்காங்கே பல உயர் நிலைப்பள்ளிகள் தோன்றினமையால், தனிமலையாளிகளின் எண்ணிக்கை தங்குசாலையில் குறைந்தது. 1920இல் பதினைந்து பேர் மட்டுமே.

தனித்தமிழருக்கும், தனிமலையாளிகளுக்குமிடைப்பட்ட என்போன்ற இடை மலையாளிகள் எண்ணிக்கையில் சிறுத்திருப்பினும்; திறமையிலும், வலிமையிலும் குறைந்தவர்களாய்க் காணப்படவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் திரு. எ. நேசமணி, பிரபல மருத்துவர் மத்தியாஸ், உளநூல் பண்டிதர் ஜி. டி. போவாஸ், பள்ளியாடிப் பாஸ்டர் ஜெ. தேவசகாயம், போலீஸ் சூப்பிரண்டு சாமுவேல் ஆகியோர் அக்குழுவினரே. இவர்கள் இருமொழியும் அறிந்தவர். இவர்களே மேற்கத்தியத் தலைவர்கள். இவர்கள் மொழி அடிப்படையில் மலையாளிகளையும், இன அடிப்படையில் தமிழரையும் பின் தாங்குவர். இவர்கள் மலையாளிகளால் கிழக்கரெனவும், தமிழரால் மேற்கத்தியர் எனவும் ஒதுக்கப்பட்டனர். இவர்களிடம் பெருமைக்குரிய பண்புகளும சில காணப்பட்டன. கையடி, தடியடி, சிலம்பம வீசுதல் போன்ற உடற்கலைகள் பல, இவர்களது ஊர்களில் பெருமைக்குரிய முறையில் நிலவிவந்ததால், இவர்களில் பலர், தாங்களும் அவற்றில் தேறினவர் என வீம்பு கூறுவர். மிகைப்படக்கூறல் யாவருக்கும்

வரும் சோதனையன்றோ! என் காலத்தில் இந்த இடை நாட்டுக் கூட்டத்தார் பதினேழுபேர்மட்டும். அவர்களில் வயது குறைந்தவன் நானேயெனினும், கூட்டத்தலைவனாக என்னை நானே நியமித்துக்கொண்டு நடந்துகொண்டேன். தோற்றத்திலும், வயதிலும், என்னிலும் பெரியோர் பலர் அன்று என்னால் தாக்கப்பட்டனர்.

ஒரு நாள், பெற்றோருக்கொரே மகனும் பொருள் வசதியும் படைத்த மேற்கத்தியன் ஒருவனைக் கிழக்கத்தியர் சிலர் கூடி அடித்து, அவன் கண்ணாடியையும் உடைத்துவிட்டதைக் கண்ட நான், அன்றிரவே அவர்களில் இருவரைத்தாக்கி ஒருவர் முதுகில் காயம் காணுமாறு கல்லால் அடித்தேன். இவைபோன்றவற்றால் பலர் என்னை நீதிக்காகப் போடுகிறவன் என்று புகழ்ந்தனர். நானும் வீண்பெருமைகொண்டேன். அஃது அறியாமையின் காலமே.

"புத்திதெளிந்த போது" (லூக். 15: 17) என்று உவமையில் படிக்கையில், அதுமட்டும் அவன் புத்தி தெளிவற்றிருந்தான் எனக்கொள்ளலாம். "தாங்கள் செய்வதின்னதென்று அறியாதிருக்கிறார்களே" (லூக். 23:34) என்பதால், தவறு செய்யும் மக்கள் தாங்கள் செய்வதே சரி என்று நினைக்கும் இயல்பு வெளிப்படுகிறது. அப்படியே புத்தி மயங்கின அந்நாட்களில் நல்லாலோசனை கூறி என்னைச் சீர்ப்படுத்த பலர் விரும்பியும், என் தந்தையும், பள்ளி ஆசிரியர்களும்பல தண்டனைகள் அளித்தும் எனது புத்தி தெளியவில்லை.

1921-ம் ஆண்டில் பள்ளிச்சம்பளம் உயர்த்தப்பட்டதால் நாடெங்கும் அதை எதிர்த்துக் குழப்பமும், மறியல்களும் நடந்தன. நான் மறியல் முறையை முதன் முதல் கண்டது அச்சமயமே. தொற்று நோய் போல் அது நாடெங்கும் பரவினும், கிறிஸ்தவப் பள்ளிகள் அதற்குத் தப்பின. அண்மையிலுள்ள கோட்டாறு அரசினர் பள்ளி மாணவர் திரண்டு வந்து ஸ்காட்

கிறிஸ்தவ கல்லூரியும், உயர்நிலைப்பள்ளியும் இருந்த வளாகத்துள் புகுந்து ஆர்ப்பாட்டம் செய்தும், உயர் திரு. பால் டானியல், கல்லூரித் தலைவர் ம.தி. பாற்கர் ஆகியோரது திறமையால் குழப்பம் இங்கு பயன்படவில்லை. கட்டுப்பாடு மிக உறுதியாயிருந்த காலம் அது. அதற்கு முன்னிரவில் இதை எதிர்பார்த்த நான், ஆசிரியர்களும்கூட அடுக்கப்பயப்படும் திரு. பால் டானியல் அவர்களிடம், எனது மதியீனத்தின் துணிச்சலால் சென்று, "யார் வரினும் சமாளிக்கக்கூடிய திறமையுடைய சிலம்பக்காரர்களை நான் அழைத்து வரட்டுமா?" எனக்கேட்டேன். அவர் "பையன் நீ போகலாம்" என்று மட்டும் கூறி என்னை அனுப்பி வைத்தார்.

நான் மகாத்மா காந்தியைப் பற்றி முதல் முதல் கேள்விப்பட்டதும அப்பொழுதே. "ஒட்டைப் பல்லுடன் விரிந்த காதுகளையுடைய காந்தி, ராட்டினத்தின் தீர்க்கதரிசி" என்ற முகவரி கொண்ட ஒரு கருத்துப் படத்தைக் கண்டு, அவரை நானும் இழிவாகவே அன்று நினைத்தேன். அக்காலத்தில் நாளிதழ்கள் எதுவுமே தமிழில் இல்லை. வெள்ளைக்காரர் செய்வதெல்லாம் சரி என வகுப்பறைகளில் போதிக்கப்பட்டதை நானும் பூரணமாய் ஒப்புக்கொண்டேன்.

# தள்ளப்பட்டேன்

தங்குசாலை உணவு சுவையற்றது. காலைக் கஞ்சியைச் சுவையுடன் குடிக்க வறுத்த துவையல் பொடியை வாய்ப்புடைய சிலர் வீடுகளிலிருந்து தருவித்துக் கொள்வர். மாலை வேளைகளில் பசியை அகற்ற பொரி, மாவு, கருப்புக்கட்டி போன்றவற்றைப் பலரும் கொண்டு வந்தனர். மாதம் ஒருசக்கரம் (3½ புதுக்காசுக்குச் சரி) கொடுத்தவர்களுக்கு, புன்னைக்காயளவு அரைத்த தேங்காய்த் துவையல் கொடுக்கும் "துவையல் கம்பனிகள்" சில அக்காலங்களில் செயல்பட்டன. ஆனால் அவற்றில் ஒன்றிலேனும் சேரும் ஆடம்பர வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை.

ஒருமுறை என் தந்தை தங்குசாலைக்கு வரவே, எனது குறும்புகளின் பட்டியல் ஒன்று அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. யாவர் முன்னிலையிலும் அவர் என்னைத் தண்டிக்க எண்ணி, 42 அடி அடித்து, வெயிலில் ஒற்றைக்காலில் குனிந்து, கைவிரல் ஒன்று மட்டுந் தரையில் தொட நிற்கவைத்தார். அக்காலம் இத்தண்டனை ஊர்ப்பள்ளிக்கூடங்களில் வரன்முறையின்றி வழங்கப்பட்டது. இந்நிலையில் முதுகில் கல்லேற்றுதலும் உண்டு. நான் புத்தகங்களைச் சுமந்திருக்கிறேன். பிற்காலம், நான் உழைத்த ஒரு சபையில், அதின் தலைவர்கள் அடிக்கடி என்மேல் சீறிவிழுகையில், நான் அதைப் பொருட்படுத்தாதிருக்க, சீறிவிழுந்தோரே முள்ளில் உதைத்தோர் போலப் பின்வாங்கினர். இதற்குக் காரணம் இளமையில் நான் பட்ட பாடுகளிலிருந்து கிடைத்த பயிற்சியேயாகும்.

தங்குசாலையிலிருந்து நான், வெளியேறக் காரணமாயிருந்த ஒரு நிகழ்ச்சியை மட்டும் இறுதியாக இங்கு கூறிமுடிக்கிறேன். 192[illegible]ல் ஒருநாள் மாலை 6.30க்கு உணவு மணி அடித்தது. மாணவர் நூற்றைம்பது பேரும் தம்தம் தட்டுகளில் வைக்கப்பட்டிருந்த உணவை

எடுத்துக்கொண்டு பந்திப்பாய்களில் ஒழுங்காய் உட்கார்ந்தோம். அன்று புளிக் குழம்பில் உப்பு மிகக் குறைவு. இவ்விதமான குறைக்லேத் தலைவருக்குச் சுட்டிக்காட்ட உரிமையுடையோர் ஆரும் படிவ மாணவரான சட்டம்பிள்ளைகள் மட்டுமே. தலைவர், கையில் நீண்ட பிரம்புடன், அமைதியைக் காக்கும் பொருட்டுப் பந்தியின் ஊடே அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தார். "உப்புவேண்டும்" எனச் சட்டம்பிள்ளையான நான் ஒரு முறைச் சொன்னதை அவர் காதுகளில் ஏற்றுக்கொள்ளாததால், மறுமுறையும் "உப்பு வேண்டும்" என உரக்கக் கத்தினேன். எனது குரலை நன்கறிந்த அவர் என்னை யாவர் முன்பும் சிறுமைப் படுத்த எண்ணி "யார்லே அது?" எனக் கேட்டார். யாவரும் சிரிக்க நான் உடனடியாக அதே பாணியில் "நான்தான்லே" என மறுமொழி கூறினேன். சிரிப்பு முழக்கமாய் எழுந்தது. "முதுகில் அடிகொள்ளும பார்" என அவரும் முழங்கினர். அவரது சொற்கள் தகாதவை. சட்டம்பிள்ளைகளை "லே" என்று அழைப்பதோ, அடிக்க மிரட்டுவதோ அக்கால வழக்கமல்ல. சிரிப்பு மிகைப்பட்டுக்கொண்டேபோனது. யாவரும் பார்க்க நானும் எழுந்து நின்று "கை கன்னத்தில் படும்பார்" என்றேன். என்து மதியீனத்தை எவரும உணராது அதிகக் கூச்சலிட்டமையால் தலைவருக்குத் தோல்விபோலாயிற்று.

இரவு ஏழுமுதல் ஒன்பது மணிவரை அன்றும் வழக்கம்போல் படிப்பு நடந்தது. இரவு ஜெபத்தை ஆசிரியரே நடத்துவர். இரவு வாசிக்கும் வேத பாகத்தை மனம்போல் தெரிந்துகொள்ளலாம். அன்றிரவு அவர், நீதிமொழிகளின் பல வசனங்களை ஆங்காங்கே பொறுக்கியிருந்தார். அவையாவன. "மூடனுடைய வாய் அடிகளை வரவழைக்கும்....நொய்ய, நொய்ய இடித்தாலும் மூடத்தனம் அவனை விட்டு மாறாது...... கழுதைக்குச் சவுக்கும்......மூடனுடைய முதுகுக்குப் பிரம்பும் ஏற்றது" என்பவை. வழக்கமாய்ச் செய்யும

ஜெபத்தை ஏற்றெடுக்காமலே கர்த்தருடைய ஜெபத்தை மட்டும் சொல்லி அவர் அன்று ஜெபத்தை முடித்தார்.

மறுநாட்காலை ஜெபம் நடத்தும் முறை என்னுடையதாயிருக்கவில்லை. அதை நடத்தவேண்டிய சட்டம் பிள்ளையுடன் இரவிலேயே ஒழுங்குசெய்து எனது முறையை அவனுக்குக்கொடுத்து அக்காலை நானே தெரிந்துகொண்டேன். இப்படிமாற்றிக் கொள்வது ஒழுங்கீனமல்ல. நான் மேடையிலேறவும் யாவரும் விஞேதமான ஏதோ வருமென்ற எதிர்பார்ப்புடனேயே காத்திருந்தனர். கீர்த்தனை பாடினோம்; அன்றாடக வேத பாகததைபும் முறையே மாறி மாறிப் படித்தோம். தங்க வாக்கியததை மனப்பாடஞ் செய்தோம். ஒத்த வாக்கியமும் வாசிக்கப்பட்டது. யாவரும் எழுந்து நின்றனர். ஜெபத்தின் வழக்கமான முகவுரைக்குப் பின் "ஆண்டவரே உமது அருமையான உபதேசங்களுக்காக உம்மைத் துதிக்கிறோம். தன் சகோதரனை மூடன் என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்குப் பாத்திரவான் என்று சொல்லியிருக்கிறீர். கேற்றிரவு அப்படிச் சொன்னவரை எரிநரகத்தில் தள்ளிவிடாதேயும். மன்னியும்" என்று ஜெபித்து முடித்தேன்.

காலை 7.30 மணிக்கு உயர் திரு. பால் டானியல் பிரம்புடன் வந்து மேடை மீது நின்றார். பூனையைக் கண்ட எலிகள் போல யாவரும் நடுங்கி எழுந்து நின்று "Good morning Sir" என்று இராகம் பாடினோம். Sit down boys' என்று அவரும கூறினபின் தேவசகாயம் என்றதும், நான் சிறகொடிந்த பறவை போலவும், பூச்சரிந்த சேவல்போலவும், வால் விழுந்த நாய் போலவும் வெட்கத்தால் தலைகுனிந்து எழுந்து நின்றேன். சிங்கம உறுமுவதுபோல ஒரு முறை இருமியபின் "You may take up your box and go" (பெட்டியை எடுத்துக்கொண்டு போகலாம்) என்று சொல்லி 'குட்மானிங் பர்ய்ஸ்' என்று கூறிவிட்டுச் சென்றார் அன்றுடன் எனது தங்குசாலை வாழ்க்கை முடிந்தது.

[illegible]

[illegible]

வயதாகியிருந்த என் தகப்பனார் [illegible]. பள்ளியிலிருக்கும் வண்டியை வெளியேற்றிவிட்டதால் அவர் ஒருவாறு [illegible] அடைந்திருப்பார். ஆண்டு முடிவுத் தேர்தலுக்கு இரண்டு மூன்று மாதங்கள் [illegible] படிக்கவேண்டியதாலும், வனங்களைப் பலமுறை பரிக்ஷித்து [illegible] வேண்டியிருந்தபடியாலும், வேறு சில மாணவர் தங்கியிருந்த ஒரு வீட்டில் நானும் தங்க அவர் ஒழுங்கு செய்து சென்றார். வெள்ளிக்கிழமையில் பகல் நான்கு மைல் நடந்து கோட்டாறு சென்று, திங்கள் காலை திரும்பி நடந்து விடுதிச்சாலையை அடைய முயன்றேன்.

அப்படி ஒரு வெள்ளி மாலை வீடுநோக்கி நடந்து செல்கையில், அண்மையிலிருந்த கோட்டாறு பள்ளியில் படிக்கும் தன் வீடுசென்று கொண்டிருந்த ஒரு நாயர் வாலிபனை வழியில் கண்டு, இருவருமாய் நடந்து செல்லவே, நேரம் இருட்டிவிட்டது. அது டிசம்பர்

மாதம். ராமன்நாயர் என்ற அவனுடைய வீடு பத்மநாபபுரம் கோட்டைக்குள் இருந்தது. அஃது அமாவாசி இருட்டுக்காலம். அங்கிருந்து, வீடுகளும் வழிவிளக்குகளுமில்லாத சாலையில் எனக்கு எட்டுமைல் மேலும் நடக்கவேண்டியிருந்தது. அன்றே முதல் முதல் என்னைக்கண்ட அந்த மாணவன் என் கதைகளைக் கேட்டு அனுதாபங் கொண்டாலும், சாதிக்கொடுமையால் என்னை அன்றிரவு தன்னுடன் தங்க அழைத்துச் செல்ல அஞ்சினான். நாயர் வகுப்பினருடைய மலையாளப்பேச்சு எனக்கிருந்தாலும், என் நிறமோ என் குலத்தை மறைக்கக் கூடியதாயிருக்கவில்லை. தேவசகாயம் என்ற பெயரும், என்னைக் காட்டிக்கொடுக்கக் கூடியதாய் இருந்தது. ஆகையால் இருவருஞ்செய்த யோசனையால் அன்றிரவுக்கு மட்டும் என்பெயர் சகதேவன் (இது பஞ்சபாண்டவரின் கடைசித் தம்பி பெயர்) ஆக மாற்றப்பட்டு, நான் அவனுடன் தங்கி, மறுநாட் காலை இருட்டோடே எழுந்து நடந்து சென்று விட்டேன். அக்காலம் நாயர் வீடுகளில் கிறிஸ்தவர்கள் இராத்தங்குவதென்பது நினைப்பதற்கரிய செயலாயிருந்தது.

என்னைப்போன்றே, தங்குசாலையில் பற்பல குற்றஞ்செய்து வெளியேற்றப்பட்டோரும், அங்குள்ள கட்டுப்பாடுகளுக்கடங்கி நடக்க விருப்பமற்றோருமாகிய ஆறு வாலிபரான நாங்கள் ஒரு வீடு அமர்த்தி சமையலாள் ஒருவனுதவியால் உணவருந்திச் சில மாதங்களைத் தாண்டினோம்.* அக்காலங்களிலும் குறும்புக் குணம் மாறவுமில்லை, படிப்பில் அக்கரை தோன்றவுமில்லை. பெயர் ஓங்க வேண்டும் என்ற ஒரே அவா அந்நாட்களில் என்னை ஆட்கொண்டது.

மலையொன்றின் மீது கல்லை உருட்டி ஏற்றுவது கடினம். அங்கிருக்கும் கல்லைப்புரட்டிக் கீழேத்தள்ளுவதோ எளிது. விடாமுயற்சி, கடின உழைப்பு, தன்னெ

*தற்போதைய ஸ்டேட்பாங்குக்கு அடுத்தவீடு அது.

டுக்கும் இவற்ருல் மாக்கள் போன்றவர் மக்களாகின்ற னர். நற்பெயரும், துற்பெயரும் ஒன்று போல நாற் றிசையும் பரவும். நானும் புகழ் ஒன்றையே நாடின தால், எளிதில் அது கிடைக்கக்கூடிய முறைகளை மட்டும் தெரிந்துகொண்டு, கீழிறங்கிச் சென்றுகொண் டேயிருந்தேன். வகுப்பறைகளில் பாடங்களைக் கேட் டதைத்தவிர, அவற்றைப் படிக்காததால் இரண்டாம முறையும் பள்ளி இறுதித்தேர்வில் தோல்வியுற்றேன். அரசாங்கத் தேர்வில் பல பாடங்களிலும் போதிய மதிப்பெண்கள் கிடைத்த போதிலும், வகுப்பு ஆசிரி யர்களால் அளிக்கப்பட்ட மதிப்பெண் குறைந்திருந்த மையால், நான் ஒப்பேற முடியவில்லை. ஆகையால் என்னை அப்பாடசாலையிலிருந்து வேறு பாடசாலைக்கு மாற்றவேண்டுமென அடிக்கடி என் தந்தையைக் கேட்டுக்கொண்டேன்.

அதற்கிசைய, 1922ல் அமரவிளையில் திருமணஞ் செய்து கொடுக்கப்பட்டிருந்த எனது அக்காள் வீட்டில் தங்கி, அங்கிருந்து ஐந்து மைலுக்கு அப்பாலுள்ள நெல்லிக்காய்க்குழிப் பாடசாலைக்கு அனுப்பப்பட்டேன்.

---

# நெல்லிக்காய்க் குழி

அக்காலம் நாடார் மக்களிடையில் ஓர் எழுச்சி தோன்றிற்று. திருவிதாங்கூர் சட்டசபைக்கு பொன் னையா நாடார் என்ற ஒருவர் அரசனுல் தெரிந்து கொள்ளப்பட்டார். இவர் ராஜாக்கமங்கலத்தைச் சேர்ந்தவர். பெரும் சீமான். பூணூலணிந்திருப்பார். கலையார்வம் படைத்தவர். இசைக்கலையில் நிபுணர். நாதஸ்வரக் கருவியை திறம்பட உபயோகிப்பவர். இவர் அந்நாட்களில் சட்டசபையில் வாதாடினதின்

பயனுக் அரசாங்க கடபடிகளில் 'சாணுர்' என்ற முகவரி "நாடார்" என மாற்றப்பட்டது. அது வேறு பல வகுப்பினரும் தங்கள் தங்கள் குலப் பெயரை மாற்றிக் கொள்ள வழிதிறந்தது.

கடலில் மூழ்குவோர் (முங்குவோர் — முக்குவர்) பரவர், அவர்கள் பரதர் என்று தங்களை அழைத்துக் கொண்டனர். இவ்வாறு முதலிமார், சாம்பவர் முதலிய பல பெயர்கள் வழக்கத்தில் வந்தன.

ஆங்கிலக் கல்விக்கு மதிப்பு உயர்ந்து கொண்டிருந்த அந்நாட்களில், நாடார் வகுப்பினர் பலர் ஆங்காங்கே பல ஆங்கிலப் பாடசாலைகளை திறவினர். நெல்லிக்காய்க்குழிப் பாடசாலை திரு. சத்தியநேசன் என்னும் ஒரு பெரியாரால் திறவப்பட்டது. அவர் தமது 86 வயதில் 1964ல்தான் மறைந்தார்.

"ஓரூர்க்கழுதை எவ்வூர் சென்றாலுங் கழுதையே" என்பதற்கிசைய, என் குணம் மாறவேயில்லை. புதிய இடமாகையால், சற்று ஒழுங்காய் நடந்துகொள்ள முயன்றேன். அங்குள்ள யாவரும் படிப்பில் சற்றுப் பின்தங்கியோராதலின், நான் வகுப்பில் எளிதில் முதலிடம் பெற்றேன். அங்குள்ளோர் பலரும் 'இவன் ஏன் தோல்வியடைந்தான்' என ஆச்சரியமடைந்தனர். கணிதம், மலையாளம் இவற்றில் மிகத் திறமையுடன் காணப்பட்டேன்.

ஐந்தாம் படிவத்தில் நான் 'மார்த்தாண்ட வர்மா' என்ற ஒரு மலையாள நெடுங்கதை படித்தேன். அதின் மொழிநடை மிக அழகுபொருந்தியது. பன்முறை நான் அதைப் படித்தபடியால் அம்மொழிநடை என் நடையாயிற்று. அந்த நடையையே தமிழிலும் நான் பிற்காலத்தில் கடைப்பிடித்தேன். இம்மட்டும் அதைக் காப்பாற்றி வருகிறேன் என நினைக்கிறேன்.

அவ்வகுப்பில் எனக்கு மூன்றும் வருடமாகையால் பாடங்கள் எல்லாம் பழம பாடமாயிருந்தன. ஆகை

யால் நூல் நிலையத்திலிருந்து பல நூற்களை எடுத்துப் படிக்கத் தொடங்கினேன். அதோடு என் உடன் மாணவர் சிலருக்கு, கணிதம் முதலியவற்றை நானே கற்பித்தேன். மாணவன் என்ற முறையில் பல துறைகளிலும் பெயர் பெற்ற போதிலும் என் உள்ளத்தில் ஒருவிதச் சலிப்பும், மனநிறைவின்மையும் தோன்றின.

---

# மனந்திரும்புதல்

ஒழுங்கின்றி வெறுமையாயிருந்த உலகின்மேல்; அன்பேயாம கடவுளின் ஆவி அசைவாடி, அதை ஒழுங்குபடுத்தினது. அவ்வாறே அக்காலம கடவுள் என் உள்ளத்திலுங் கிரியை செய்யத்துவக்கினார். அவர் இதைச் செய்ய நெடுநாட்களாய் என்னோடு போராடிக் கொண்டிருந்தும், நான் அவருக்கு இடங் கொடுக்கவில்லை. அதனால் என் மனக் குழப்பங்கள் அதிகரித்தன. "இஸ்ரவேல் என்னை விரும்பவில்லை, ஆகவே அவர்கள் இருதயத்தின் கடினத்துக்கு அவர்களை விட்டுவிட்டேன்" சங். 81: 12 என்றபடி ஆண்டவர் என்னைவிட்டுப்பிடித்த காலம் அது.

மார்க்க சம்பந்தமான உண்மையைக் கண்டுபிடிக்கவேண்டுமென்ற ஆவல் அந்நாட்களில் எனக்குள் எழுந்தது. என்னைத் தமக்கெனப்பிரித்தாட்கொள்ளத் தீர்மானித்த ஆண்டவருடைய கிருபையின் வழியே அஃது என்பதை அக்காலம் நான் உணரவில்லை. கிறிஸ்து மார்க்கத்தின் உண்மையை அறியவேண்டுமென்று மட்டுமன்று, இதர மார்க்கங்களின் அடிப்படைக்கொள்கைகளும் மெய்யோ, பொய்யோ, என்று பகுத்தறிய அவாக்கொண்டேன். ஆகவே கடவுள் உண்டா இல்லையா என்ற கேள்விக்கே முதல் முதல் பதில் காணமுயன்றேன்.

அறிவில் தேறிய பலரிடம் இக்கேள்விக்குப் பதில் காணமுயன்று தோல்வியடைந்தேன். கையில் கிடைத்த புத்தகங்களையெல்லாம் புரட்டினேன். பலருடன் தருக்கம் செய்தேன். முடிவில் நானே வென்றேன் என எண்ணிப் பெருமை கொண்டேன். என்னைத் தங்கள் அறிவால் வென்று என் ஐயப்பாடுகளை நீக்க எனக்கு அறிமுகப்பட்டவர் எவராலும் அன்று கூடாமற் போயிற்று.*

அமராவதியிலிருந்து நெல்லிக்காய்க்குழி ஐந்து மைல் தூரம். நாடோறும் இதை நான் நடந்தே தொலைத்தேன். வகுப்பில் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் வெடுக்கெனப் பதில் கூறிவந்த நான், அந்நாட்களில் மௌனம் மேற்கொள்ளலானேன். இரவும் பகலும், கடவுள் உண்டா இல்லையா என்னும் ஒரே கேள்வியே என்னை அலைக்கழித்தது. காரண காரியங்களை ஆராய்ந்து, சில வேளைகளில் கேள்விக்கு முடிவு கண்டாற்போல் எண்ணி நிம்மதி கொண்டேன். இவ்வமைதி விரைவில் மறைந்து போகவே, மறுபடியும் தேடலானேன்.

---

*கடவுள் இருக்கிறார் என்று மெய்ப்பித்தல் கூடியதல்ல. எக்காரியத்தை நாம் உண்மைதானெனத் தெளிவுபடுத்த விரும்புகிறோமோ, அதற்கு, அதைவிடப் பெரிதான ஒரு உண்மையை ஒப்புக்கொண்டிருத்தல் வேண்டும். எப்படியெனில்

மனிதன் மரிப்பவன்
இவன் மனிதன்
ஆகையால் இவன் மரிப்பான்.

இதில் முதல் இரண்டிலுமிருந்து மூன்றாவது அடி பிறக்கிறது. இவன் மரிப்பான் என்பது, மனிதன் மரிப்பவன் என்பதற்குள் மறைந்திருக்கும். முதலடியை நம்பாவிடில் மூன்றும் அடி பிறவாது.

'ஆகையால் கடவுள் இருக்கிறார்' என்பது மூன்றும் அடியாக வரவேண்டுமானால், அதை அடக்கக் கூடிய ஏதோ ஒரு பெரிய உண்மை முதலாம் அடியாக வர வேண்டும். கடவுளைவிடப் பெரிதொன்றை நினைப்பதுவே கூடியதல்லவே. God cannot be proved. He must be assumed. He can only be experienced or realised.

ஞாயிறு ஆராதனைகளுக்கு நான் சென்று வந்த போதிலும், அங்கு கொடுக்கப்பட்ட திருமறை உபதேசங்கள் என்னைத்தொடவேயில்லை. உபதேசிகர்களை மிகவும் இழிவாய் எண்ணி, அவர்களுக்காகப் பரிதாபப்படுவேன். கடமையின்படி அவர்கள் ஏதோ சொல்வதே தவிர, எவ்விதத் தூதும் கடவுள் அவர்களுக்கு அளித்திருந்ததாகவோ, அத்தூதைத் தெரிவிக்கத் தாங்கள் பாரமடைந்ததாகவோ எனக்குத் தோன்றவில்லை.*

என் ஐயப்பாடுகளைத் தெரிவித்தபோது, அவர்களில் பலரும், "ஆழமாய் யோசியாதே தம்பி. இதெல்லாம் நமக்கு எட்டாது" என்றனர். என் உள்ளத்தின் அங்கலாய்ப்பை அவர்கள் அறிந்தவர்களல்ல. நாட்கள் செல்லச் செல்ல, என் மனக்கலக்கம் அதிகரித்தது. "கடவுளே இல்லை" என்னும் உண்மையை நான் கண்டுகொண்டேன் என நினைத்தேன். ஏனெனில் அவர் இருப்பதாக, நானறிந்த எவராலும் தெளிவுபடுத்த இயலவில்லை. எனவே என்னில் குழப்பம் அதிகரித்துக்கொண்டே போயிற்று. ஏறக்குறைய ஒரு மாத காலம் இப்படித் தாண்டிற்று. என் தமக்கை வீட்டாருக்கு நான் எனது கவலையைப்பற்றிக் கூறவில்லை.

அங்கலாய்ப்பு வரவர மிகுந்ததும், உணவருந்தவும் மனம் இடந்தரவில்லை. இக்கேள்விக்குப் பதில் கிடைக்கும் காலம் மட்டும், எதின்மேலும் எனக்கு விருப்பம் தோன்றவில்லை. இரவு நித்திரையும் வராதுபோயிற்று. படுத்தநேரமுதல் இராமுழுவதும் இதே நினைவால் தூக்கமற்றவனாய் சுமார் பதினைந்து நாட்களைப் போக்கினேன். உடல் மிக மெலிந்தது. பள்ளிக்குப் பத்து மைல் நடந்தும் வந்தேன். முகரூபம் மாறிவிட்டது. புத்தி தடுமாறிவிடுமோ என்னும் பயமும் என்னைப்பிடித்தது. எனது மனதை அடக்கி ஆளும் வல்லமை குறைந்தது. இறக்கத்தில் பிடி (brake) இல்லா

---

* இன்றும் பல ஊழியர்களின் நிலை அதுவேதான்.

மிதிவண்டிபோல் என் மனம் ஓடத்துவக்கிற்று. எங்கு விழுந்து நொறுங்குமோ என்னும் பயமும் அதிகரித்தது.

நிற்க, என் ஊரில் என் வீட்டுக்கருகில் பள்ளித் தோழனும், நண்பனுமான ஒரு நாயர்குல நண்பர் எனக்கிருந்தார். சந்திர சேகரன் என்பது அவர் பெயர். ஒரே வகுப்பில் படித்து வந்தோம. இளமையில் மூன்று நாட்கள் பள்ளிக்கூடத்துக்குச் செல்லாமல் மலையேறி நடந்ததை என் தகப்பனாருக்குச் சொல்லிக் கொடுத்த நண்பர் தான் இவர்: (37-ம் பக்கம் பார்க்க.) அவருடைய இனத்தில் பொன்னம்மாள் என்னும் ஒரு வாலிபப்பெண் குழந்தைப்பேற்றில் திடீரென்று இறந்து போனாள். வழக்கப்படி அவள் உடல் சுட்டு எரிக்கப்பட்டது. இரண்டு நாளளவும் அது எரிந்து கொண்டேயிருந்தது. நானும் அந்த நண்பனுமாய் எரியும் உடலைப் பார்க்கச் சென்றோம். மறுநாள் வெந்து வெளுத்த அவள் தலையோட்டின் ஒரு பாகத்தைச் சுடுகாட்டிலிருந்து எடுத்து மருந்து செய்யும் ஒரு வைத்தியருக்களித்தேன். திடீரென்று சாகும் மனிதரின் தலையோடு சிறந்த மருந்துகளுக்காக உபயோகப்படும் என்பது சிலரது எண்ணம். இதனை தைரியமாய் அதை எடுத்துச்செல்ல எவரும் எளிதில் துணிவதில்லை. ஆகையால் ஒரு முறையில் எனது சிலம்பக் கலைக்குருவான அந்த வைத்தியரும் "இதை ஏன் வீட்டில் கொண்டுவந்தாய்?" என்று என்னைக் கடிந்து கொண்டார். தூக்கமற்ற நாட்களுக்கு ஒரு வருஷத்திற்கு முன் நடந்த காரியம் இது.

ஆறுமாத காலத்துக்குமுன் நானும் சந்திர சேகரனும் வேறு சில வாலிபருமாய், என் வீட்டிற்கு ஒருமைல் தூரத்திலுள்ள சிதறால்* மலைக்கு வந்தோம். அங்கு பாறைக்குள் குடைந்த புத்த ஆலயம் ஒன்றிருக்கிறது.

---

*சித்திராலயம் பல உருவங்களை கோயில் குடையப்பட்ட பாறையிலேயே வெட்டிச் செதுக்கித்தோற்றுவித்திருப்பதால் இப்பெயர் வந்தது.

இது பிற்காலம் சமணர் கோயிலாக மாறித் தற்போது இந்துக்களின் பகவதி (காளி) கோயிலாயிருக்கிறது. இந்தியாவில் ஆங்காங்கே காணப்படும் பாறைக் குகைக் கோயில்களில் இதுவே, மிகத் தென்கோடியில் உள்ளது. இது அசோகன் காலத்தில் வெட்டப்பட்டிருக்கலாம் எனக் கருதுவாருமுண்டு. அங்கிருந்து திரும்புகையில் ஒரு குறுக்குவழி வந்தோம். அங்கு பிணம சுடப்பட்ட' இடங்களில் தென்னை, சேம்பு முதலிய செடிகள் நடப்பட்டிருந்தன. சுட்ட இடத்தில் சேம்பு நடவேண்டும் என்று இந்துக்கள் பலர் எண்ணியிருந்தனர் என்ற புதுக்கருத்து அந்நாளில்தான் எனக்குத் தெரியவந்தது.

அமாவிளையில் நான் மனங்கலங்கியிருந்த நாட்களின் இறுதியில், ஒரு நாள் நான் ஒரு கனவு கண்டேன். பொன்னம்மாள் என்னும் மேற்கூறிய வாலிபப்பெண் என்முன் நின்று, என்னைப் பெயர்சொல்லி அழைத்து 'நீ என் தலையோட்டை எடுத்துப்போட்டாயே. ஒரு தென்னைமரம் அங்கு நட்டுவிடு' என்றாள். அப்படிச்செய்ய நானும சம்மதித்தேன். மறுநாட் காலை பள்ளி செல்கையில் இக்கனவைத் தோழனொருவனுக்குச் சொன்னேன். அவன் கதையைக் கேட்டதும பயந்துபோனான். இரண்டு நாட்கள் தாண்டி, மறுபடியும் கனவு ஒன்று கண்டேன். பொன்னம்மாள் அழகி, ஆனால் அன்று கோபமுகத்துடன் அவள் காணப்பட்டாள். தரையில் படுத்திருந்த என்னைப் பிடித்துத் தரையோடு அமுக்கி, 'இன்னும் நடவில்லையா' என்று கூறினாள். கனவு தெளிந்ததும் என் உடலெல்லாம் வலியெடுத்தது. இவ்வலி சில நாட்களுக்கெல்லாம் இருந்தது. இந்நாட்களிலிருந்துதான் முன்னைய தூக்கமற்ற நாட்கள் ஆரம்பமாயின. நேரம் இருட்டியதும என் கண்முன் பொன்னம்மாள் வந்து நிற்பதாகத் தோன்றிற்று. 'வீண்' என்று நினைத்த நான் நடுங்கித் திகைக்கலானேன். இரவு ஒரு நிமிடமும் தூங்கமுடியாமல், தென்னை மரச்சோலையில் அலைந்து

திரிந்தேன். கடவுள் உண்டா என்னும் கேள்வியும், பொன்னம்மாள் தோற்றமும் என்னை ஏறக்குறைய பித்தனாக்கின எனலாம்,

மனதின் சந்தேகமும், பயமும் என்னை எவ்வள வாய் வேதனைப்படுத்தின என்பதை இப்படிப்பட்ட உணர்ச்சியடைந்தோர் மட்டுமே அறிவார். இதற்கு முடிவு காணாததால், பல வேளைகளிலும், உயிரை மாய்த்துக்கொள்வதே நலம் என்னும் எண்ணம கூட என் மனதில் அடிக்கடி எழுந்தது. எனது தற் கொலையால் குடும்பத்தாருக்குப் போலீசால் தொல்லைக ளேற்படுமே என்ற எண்ணமே என்னை அப்படிச் செய்யாதபடித் தடுத்தது. நெய்யாறு என்ற ஆறு அவ்வீட்டிலிருந்து அரைமைல் தூரமே. பெருவெள்ளம் அடிக்கடி அதில் வரும். ஆற்றில் விழுந்தேனும் சாக லாமா என்று நினைத்தால், நன்ருய் நீந்த அறிந்தவனு கையால் சாகமுடியாதே என்றும் அஞ்சினேன். சடுதி மரணமொன்றே எனக்கு விருப்பமாய்த் தோன்றிற்று. மின்னல் இடியால் வேளாவேளைகளில் மரணமடை வோரும் உண்டு. என்மேல் மின்னல் விழுந்தால் என் கவலையும் தீருமே என்று நான் அதனை வாஞ்சித் தேன்.

இரக்கத்தில் ஐசுவரியமுள்ள கடவுளோ என்னை என் போக்கிலே விட்டுப்பிடிக்கச் சித்தம்கொண்டார் போலும். பலர் அந்நாட்களில் என்னுடன் அன்பாய்ப் பேச வந்தனர். அவர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டு, நானே கவலையில் ஆழ்ந்து யோசிப் பேன். நான் தெளிந்த புத்தியுடையவனாயிருந்தேனு என்று தான் அவர்கள் அன்று என்னைப் பரிசோதித் தனர் போலும்.

---

# வேளை வந்தது

நீங்கள் என்னை முழு இருதயத்தோடும் தேடுவீர்களானால் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். எரே.29:13 என்பது வேதவாக்கியம். இதைவிட முழுமனதோடு தேடும் வழி எதுவும் எனக்கு அன்று புலப்படவில்லை. 1922. ஆகஸ்டு மாதம். 30ம் தேதி. (ஆவணி 14) ஒரு செவ்வாய்க்கிழமை. இரவு 7 மணி. என் அக்காளை அழைத்து "என்னால் தாங்க முடியவில்லை" என்று படுத்தேன். நெடுநாட்களாய் நான் போதிய உணவருந்தாமலிருந்ததைக் கவனித்தவர்கள் அவர்களே. என் அத்தானும் அக்காலம் தனது ஆசிரியர் அலுவல் காரணமாக வாரத்தில் வெள்ளி மாலைதோறுந்தான் வீடு வருவார். ஆகையால் என் அக்காள் பக்கத்து வீட்டாரை அழைத்து, 'என் தம்பிக்கு என்ன நேரிட்டதோ' வென்று அழத்துவக்கினார்.

நாட்டு வைத்தியர் ஒருவர் சிறிது நேரத்திற்குள் வந்து சேர்ந்தார். அவர் என் கை நாடியைப் பரிசோதித்து, வீட்டாரிடம் சிலகேள்விகள் கேட்டுவிட்டு, இதுவேறொன்றுமல்ல, 'துருக்கர் வீட்டினுள் பன்றி நுழைந்தாற்போல' கிறிஸ்தவ குடும்பத்தில் பேய்புகுந்திருக்கிறதென்றார். தூக்கம் வராத ஒன்றே பிறர் கண்ட நோய்க்குறி. மனக் கவலையைக் கடவுளே கண்டார். பல மருந்துகள் (சுக்கு, மிளகு போன்றவை) கலந்த கஷாயத்துடன் சில மாத்திரைகளை உரைத்துக் கலக்கிக் குடிக்கக் கொடுத்தனர். மறுத்தால் எனக்குப் பைத்தியம் எனத் தீர்மானித்துவிடுவார்களே எனக் கருதிக் கொடுத்த மருந்தை அருந்தினேன். தூக்கமோ வரவில்லை.

மறுநாட்பகல் முழுவதும் அந்நிலையிலேயே படுத்துக் கிடந்தேன். பார்க்க வந்தோர் பலர். எனது மைத்துனரும் அதைக்கேள்விப்பட்டு வந்து விட்டார். அவர் வந்தபின் இரவு அவருடைய இனத்தாரும்,

நண்பருமான ஓர் ஆசிரியரை அழைத்து வந்தார். அவர் கொஞ்சம் பாடக்கூடியவர். ஆர்மோனியமும் வாசிப்பார். அவரே, வித்வான் ப. பானுவேல் ஐயர். பிற்காலம் இவர் பல நூல்களை வெளியிட்டார். கன்னியாகுமரி ஆசிரியப்போதகர் இவர். முன்னாட்களில் அவருடன் நான் வாதாடிக் கடவுள் இல்லையென்று அவரை சம்மதிக்கப்பண்ணியிருந்தேன். ஆகவே அவர் சற்று பயத்துடனே எனதருகில் வந்தமர்ந்து சில பாடல்களைப் பாடத் துவக்கினார். என்னைத்தூங்க வைப்பதே பாட்டின் நோக்கமென அறிந்த நான் என் மனதிற்குள் சந்தேகத்துடன் பாட்டைக் கவனிக்கலானேன்.

அவர் பாடிய பாடல்களில் ஒன்று 'கருணாகர தேவா இரங்கி இந்தக் கட்டிலில் எழுந்தருள்வாவா,' என்ற காம்போதி ராகக் கீர்த்தனை. அது நாகர்கோவில் ஜான் பால்மர் தேசிகர் எழுதிய பாட்டு. ஜெபம் செய்ததற்கு நான் இடங்கொடுத்ததில்லை. ஆகையால் இந்தப் பாட்டை அவர் ஜெபமாய்ப் பாடினார்போலும்!

தீய எண்ணங்கள் பாற, நிகில் கவலைகள் மாறத்
திவ்ய சிந்தை உள் ஊற, ஸ்திரம் ஏறக்
காயம் உயிருக்கூடக் கர்த்தன்னோடுறவாடக்
காலை நல்லறம் நாடக், கர்த்தன் துதிபாட
கருணாகர தேவா—என்று அவர் பாடவே ஆண்டவரும் அவர் ஜெபத்தைக் கேட்டார் போலும்.

பின் மங்களத்திலும் அவர் ஒரு பாட்டைப் பாடினார். அது மங்களக் கீர்த்தனைப் புத்தகத்திலுள்ளது. அது ஆங்கிலத்திலுள்ள, 'Jesus the very thought of thee', 'How Sweet the name of Jesus sounds', என்ற பாடல்களைத் தழுவி எழுதியதுபோலும். 'தேன் இனிமையிலும் யேசுவின் நாமம்' என்ற தமிழ்க் கீர்த்தனையும் இந்த மங்களப் பாட்டிற்கு முன்னோடி என்று நினைக்கிறேன்.

'இயேசு என் அடிஸ்தானம்
ஆசு அவனில் அத்றே'—

என்பது அப்பாட்டின் பல்லவி.

'ஆஸ்வாசத்தின் பூர்ணத
யேசுவில் கண்டேன் ஞானும்'

என்பது இரண்டாம் வரி.

'இயேசு நான் நிற்கும் கன்மலை
என் நம்பிக்கை முழுவதும் அவரே
மன ஆறுதலின் பரிபூரணம்
இயேசுவிலேயே நான் கண்டேன்'

என்பதே அம்மலையாளப் பல்லவியின் கருத்து. இப்பாட்டை நான் இதற்குமுன் கேட்டதில்லை. அன்றே முதன் முதலாய்க் கேட்கலானேன். நோயால் என் உடல் மெலிந்து போயினும், என் நாதன் நொடிக்குள் வந்து உடலைப் புதுப்பிப்பார் என்பது அப்பாடலின் ஒரு சரணத்தின் கருத்து.

நாதநாமக்கிரியை. சாப்புத்தாளம்.

பல்லவி

இயேசு என் அஸ்திபாரம் ஆசை எனக்கவரே
நேச முசிப் பாறுதல் இயேசுவில் கண்டேன் யானும்

சரணங்கள்

1 என்ன மதுரம் அவர் நன்னய நாமச்சுவை
என்னகத்தில் நினைத்தால் இன்னல் பறந்திடுமே.

2 பஞ்சம் பசியுடனே மிஞ்சும் துயர் வந்தாலும்
அஞ்சிடேன் இவையை என் தஞ்சம் யேசி
ருக்கையில்

3 பாவத்தால் என்னில் வந்த சாபக்கறைகள் மாற்றி
சோபித நீதியுடை ஆபரணமாய் ஈவார்.

4 வியாதியால் எந்தன்து காயங்கெட்டுப் போயினும்
மாயத்தோற்றத்தை யேசு நாயகன் மாற்றிடுவார்

5 லோகம் என்னை எதிர்த்துப் போவென்று
சொல்லிடினும்,
சோகம் அடைவேனோ என் ஏகன் எனக்கிருக்க

6 ஆசை என் மணவாட்டி ஆக்குவேன் உன்னை எனும்
நேச உறுதியுரை இயேசு எனக்களித்தார்.

இப்பாட்டு* என்னை ஆழமான சிந்தனைக்குள்ளாக்கிற்று. அதை எழுதியவருக்கு எனக்கில்லாத ஒரு மன அமைதி கிடைத்திருக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று கடவுள் உண்டா, இல்லையா என்னும் கேள்விக்கு விடை காணமுயன்று பித்தன்போல அலைந்த எனக்கு, ஏன் அவர்தாமே குறுக்கிட்டுத் தம்மை வெளிப்படுத்தி இவ்வமைதியைத் தரக்கூடாதென்று என் மனதிற்குள் கேட்டேன்.

அப்பொழுது நான் சரீரத்திலிருந்தேனோ சரீரத்திற்குப் புறம்பேயிருந்தேனோ நான் அறியேன். தேவன் அறிவார். இரவு மணி 7-30. ஏறக்குறைய பன்னிரண்டு அடிச் சதுரமான ஒரு அறை. முழுவதும வேம்பாய் விரித்த அவ்வறையின் ஒரு மூலையில் நான் தாழம்பாயொன்றில் படுத்திருந்தேன். ஒரு கண்ணாடி விளக்கு அறையின் நடுவில் தொங்கி எரிந்தது. ஆர்மோனியம் வாசித்தவர் என் வலப்பக்கம வேம்பாய்மீது அமர்ந்து வாசித்துக்கொண்டிருந்தார். என் அக்காளும் மற்றவர்

---

*இப்பாட்டை 1925 ல் நான் மலையாளத்திலிருந்து தமிழில் எழுதினேன், 'ஆச' என்ற மலையாளச் சொல்லுக்கு நம்பிக்கை என்பதே பொருள். அந்நாட்களில் இதை நான் அறியவில்லை. ஆகையால் தமிழிலும் ஆசை என்றேன்.

களும் அறையில் துக்கத்துடன் என்ன செய்வதென்று அறியாமல் கவலையில் மூழ்கியிருந்தனர்.

நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்குப்பின், நான் இதை எழுதுகிறேன். இத்தனை ஆண்டுகளும் இதற்கு சாட்சியும் கூறிவருகிறேன். இன்றும் அது நேற்று நடந்தாற்போல் என் கண்களுக்குமுன் அத்தனை தெளிவாய் நிற்கக் காண்கிறேன். நான் கண்டது கனவோ? நனவோ! அக்காட்சியின் தன்மையை விளக்கவும் முயலேன். மனித நாவால் பேசக்கூடாததும், வாக்கிலடங்காததுமான நிகழ்ச்சியே அது (which are not lawful for a man to utter).

வேளை வந்தது. மனிதனின் தோல்வியே கடவுளின் முகப்படி. என்னால் ஒன்றும் ஆகாது என எண்ணும் தருணமே கடவுள் வேலைசெய்யத் தொடங்கும் வேளை. திராட்சரசம் முற்றிலும் தீர்ந்த போதே அவர்வேளை வந்தது. யோவான் 2: 4. தாகத்தால் சாகும்தறுவாயிலேயே, ஆகார் தூதனையும், நீரூற்றையும் கண்டாள். அதற்குமேல் பாரத்தை நான் தாங்க இயலாது என்று கண்ட கடவுள், தம்மை எனக்குள் வெளிப்படுத்தச் சித்தங்கொண்டார். ஊனக்கண் கண்டதோ, ஞானக்கண் திறந்ததோ நான் அறியேன். அவர் அறிவார். மத்தியான வேளையில் சூரிய ஒளிக்கும் மேலான ஒளி தமஸ்கு போம் பாதையில் பவுலுக்குத் தோன்றியது உண்மையே. ஆயினும் வெகுகாலஞ்சென்றபின் அதை பற்றிப் பவுல் எழுதுகையில், என் தாயின் வயிற்றிலிருந்தது முதல் என்னைப் பிரித்தெடுத்து, தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன் தம்முடைய குமாரனை எனக்குள் வெளிப்படுத்தினார் என்கிறார். கலா. 1: 14, 15.

அப். 9: 7ல் சத்தத்தைக் கேட்டவர்கள் ஆளைக் காணவில்லை என்றும், 22: 9ல் வெளிச்சத்தைக் கண்டவர்கள் சத்தத்தைக் கேட்கவில்லையென்றும் கூறியிருந்து, கண்டும் காணாதவர்களும், கேட்டும் உணராத

வர்களும் இருக்கக்கூடும் என்று நாம் எண்ணலாம். யாவருக்கும் வெளிச்சம்; பவுலுக்கோ வெளிச்சத்திற்குள் ஒரு புருஷர். முட்செடியில் (யாத். 3: 2) பற்றியெரிந்தது நெருப்பு; உற்றுப்பார்த்த மோசே கண்டது கர்த்தருடைய தூதன். பவுலின் கூட்டாளிகள் கேட்டது இடிமுழக்கம் போன்ற வெறும் சத்தம்; ஆயத்தப்படுத்தப்பட்ட பவுலுக்கு எபிரேயமொழியில், ஒரு தூது. இத்தகைய நிகழ்ச்சி அன்றும், இன்றும், என்றும் உண்மையே. ஒரே பிரசங்கம். அறிவுத்திமிர் கொண்டவருக்கு அது பயித்தியம். இரட்சிக்கப்படுகிறவர்களுக்கோ தேவ ஞானம். ஆலயப்பிரசங்கம், குறைகூறுவோருக்கு வெறும் சத்தம். துன்புற்ற நெஞ்சுக்குத் தேவாமிர்தம்.

அன்றிரவும் அவ்வாறே நடந்தது என்று எண்ணுகிறேன். படுத்திருந்த என் முன் திடீரென்று ஒருவர் தோன்றி "சகாயம் நீ தவறிப்போனாய்" என்று சொல்லக்கேட்டேன். 'போதும்' என்று சொல்லி என்னுடன் பேசினவரை உற்றுநோக்கி, என்னுடன் அவ்வறையிலிருந்த பிறரும் அவரைக் காண்கிறார்களா என அங்குமிங்கும் பார்த்தேன். ஆனால் அறையிலிருந்த மற்றெவரும் இதைக்காணவில்லை என்பதை உணர்ந்தேன். எவ்வாறெனில் ஆர்மோனியத்தில் ஒரு கட்டையை நானும் அழுத்த அந்தக் கட்டையும் சுரம் எழுப்பவே, பாட்டுப்பாடின நண்பர் நடந்தது ஒன்றும் அறியாது 'என்ன' என்று என்னைக் கேட்டார். அப்பொழுதுதான் கண்டது கனவல்ல என்பதை நான் நன்கறிந்து கொண்டேன்.

அந்நிமிடமே ஒரு நீரூற்று என்னுள்ளத்தில் பெருக்கெடுத்தாற்போல் தோன்றிற்று. பாட்டின் பொருள் உண்மையென்று கண்டுகொண்டேன். ஆறுதலின் பரிபூரணம் என்னுள்ளத்தை நிரப்பி, என் வாஞ்சையைத் திருப்தியாக்கிப் பிறருக்கும் அதைக் கொடுக்கத்தக்க முறையில் வழிந்தோடிற்று. யோவா. 4: 13; 7: 38.

சொல்லிமுடியாத ஓரமைதியும், இன்பமும் என்னில் நிரம்பக் கண்டேன். மேலும் அப்பாட்டையே பாடுமாறு அவரைக்கேட்டுக்கொண்டேன். சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டாத அந்த இன்பத்தை நுகர்ந்த நான், மேலும் உயிரோடிருக்கும் காலமளவும், அதைப் பிறருக்களிப்பதெற்கென்று மட்டுமே வாழ்வேன் என்று அக்கணமே தீர்மானம் செய்தேன். "நான் உன்னை உலக முழுவதிலும் சாட்சியாக்குவேன்", என்று என்னுடன் சொல்லும் சத்தமும் என் காதில் விழுந்தாற் போல் தோன்றவே பயமும் நடுக்கமும் பறந்துபோயின.

மகிழ்ச்சியின் மிகுதியால் என் முகரூபம் மாறிற்று. இதை மற்றவர்கள் கவனித்தார்களோ நானறியேன். பதினைந்து நாட்கள் ஒரு நொடிப்பொழுதேனும் தூங்காத நான் அன்றிரவு அயர்ந்து நித்திரை செய்தேன்.

மறுநாள் என்னை மாட்டுவண்டியிலேற்றிப் பதினான்கு மைலுக்கப்பால் திருவனந்தபுரம் ஆஸ்பத்திரிக்குக்கொண்டு சென்றனர். பயணிகளை ஏற்றிச்செல்லும் மோட்டார் வண்டிகள் அன்று பழக்கத்தில் வரவில்லை. என் இனத்தாரான ஒரு டாக்டர் (Late Dr. S. John, Surgeon General of Travancore State) என்னை நன்கு பரிசோதித்தபின் ஐந்து நாட்கள் அவர் மேற்பார்வையில் வைத்திருந்தார். நோய் ஒன்றும் இல்லையென்றும், மிகுந்த பெலவீனமாயிருப்பதால் அங்கேயே சில நாட்கள் இருக்கட்டும் என்றும (kept under observation) சொல்லிப்பின் அனுப்பிவிட்டார்.

என் காரியத்தைக் கேள்விப்பட்ட என் தகப்பனாரும், நண்பர் சிலரும் ஆஸ்பத்திரியில் என்னைப் பார்க்க வந்தனர். அவர்களிடத்திலெல்லாம் ஜெபம் செய்யச் சொல்லி, வேத வாக்கியங்களைக் குறித்து வினவத் துவக்கினேன். என் முன்காரியங்களை அறிந்தவர்கள் யாவரும் இதைக் கண்டு வியப்படைந்தனர். நான் கண்டதையும், கேட்டதையும் சில ஆண்டுகாலம் யாருக்கும் சொல்லவில்லை. ஏனெனில் இதென்னமாய் முடி

புரோ என்று கற்றுப்ப என்னை ஆவலுள்ளவனுயிருந்தேன்.

ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறியபின், பெலவீனத்தால், நாடோறும பத்து மைல் நடப்பது கடினமென்று கண்டு, எனது பள்ளித்தோழனொருவனை கோவிந்தன் நாடார் என்றவருடன் காட்டுவிளை என்ற இடத்தில் நான் தங்கிப் படிக்க ஒழுங்கு செய்தனர். தங்கியிருந்த வீடு ஆற்றங்கரையிலிருந்தது.

தென் திருவாங்கூரின் மரவேலைகள் மிகவும் விசித்திரமானவை. வீட்டுச்சுவர்களை மரத்தாலே செய்யும் வழக்கம் அந்நாட்களில் நிலைத்திருந்தது. நான் பிறந்த வீடும் மரவீடே. ஆனால் அது சிறியது. இங்கு நான் தங்கிய வீடு மிகப் பெரிது. "பதினறுகட்டு" என்பது அதன் பெயர். வராந்தையை எழுபது அடிச்சதுரமான அவ்வீட்டுக்குள் நான்கு முற்றங்கள் இருந்தன. அந்த வீட்டைப் பார்க்கவே பலர் தூர இடங்களிலிருந்து அந்நாட்களில் வருவதுண்டு. மேற்கூரை ஓடு போடப்பட்டிருந்தது. ஜன்னல் எதுவும் வீட்டிற்கில்லை. ஆயினும் வேண்டிய காற்று, வெயில், வெளிச்சம் முதலியவைகள் கிடைக்க முற்றங்கள் உதவின. முதற் பகுதியில் அன்னியர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். கழுக்கோல்கள் யாவும் பூவேலைசெய்த அழகிய மரங்கள். மூலைக்கழுக்கோல் ஒன்று மட்டும் அக்காலம் ஆயிரம் ரூபாய் பெறுமென்றனர். வாவிடை, வளை, முழுக்குவளை போன்ற ஊடுருவிச்செல்லும் தடிகளை நுண்ணிய அறிவுடன் மட்டுமே செய்யக்கூடும். இத்தக் கலை சீன நாட்டிலும, மலையாள நாட்டிலும் மட்டுமே இன்று காணப்படுகிறது. சீனத்தொடர்புகொண்ட கடற்கரையோரத்தில் மாத்திரம் இவ்வீடுகள் காணப்பட்டன. இன்று இக்கலை இந்துக்கோயில்களில்மட்டும் செயல்படுகிறது. மரம் குறைந்து மக்கள் எண்பெருகி, விலைவாசியுயர்ந்து, இரு உலக யுத்தங்கள் (1914–1918,

1939-1945) ஏற்பட்டதால் இன்று அக்குலைக்கு வேறு வாய்ப்பு இல்லை.

அந்நாட்களில் எனது வகுப்புத்தோழர் பலருக்கு நான் பாடம் சொல்லிக்கொடுத்தேன், ஒழுங்காய்ப் பணம் கிடையாததால் சிற்சிலவேளைகளில் ஓரிரு நாட்கள் உணவின்றியுமிருந்தேன். ஓர் இரவு மறுநாள் கணக்குப் பரீட்சை. சில நண்பருக்குக் கணக்குக் கற்றுக் கொடுக்க அழைக்கப்பட்டு, சடம்பு நாற்காலியொன்றில் சாய்ந்து பாடம் சொல்லிக்கொடுத்தேன். திடீரென்று எனக்கு ஒருவித மயக்கம்போல் தோன்றிற்று. மற்றவர்கள் பேச்சு எனக்குக் கேட்டபோதிலும் என்னால் பதில் சொல்ல இயலவில்லை. நண்பர்கள் நான் தூங்கிவிட்டேன் என நினைத்து, என் பெயரைக்கூறி அழைத்தும் பதில் இல்லாததால், தட்டி எழுப்ப முயன்றனர். நானோ மூர்ச்சையடைந்து விட்டேன். என்னைத்தூக்கி ஒரு கட்டிலில் கிடத்தி முகத்தில் தண்ணீர் தெளித்து, வீசி, கண்திறக்கச் செய்தனர். என்னைப் பரிசோதிக்கையில் என் வயிறு முதுகோடு ஒட்டியிருக்கக் கண்டு, இது பசியின் கொடுமையென்று அறிந்து, உடனே அவர்கள் கொஞ்சம் அரிசி வாங்கித் தாங்களே அதைக் கூழ் செய்து இரவு பன்னிரண்டு மணிக்கு எனக்களித்தனர். கஞ்சி வயிற்றிற்குள் போகவே உயிர் உடலுக்குள் மீண்டும் நுழைந்தது. பசியாயிருக்கிறவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் திருப்தியடைவார்கள் மத். 5: 6.

எனக்குள் ஏற்பட்ட மாற்றத்தின் திட்டமான விவரங்களைத் தைரியமாய்ப் பிறருக்குச் சொல்ல அந்நாட்களில் எனக்கு மிகுந்த அச்சம் இருந்தது. அன்றிருந்த உற்சாகமும், களிப்பும் நெடுநாள் நிற்குமோ என்னும் பயமே அதற்குக்காரணம். ஆயினும் நாள் செல்லச் செல்ல, "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன்" 2 தீமோத். 1: 12 என்ற உண்மை புலப்பட்டது. ஆவிக்குரிய கூட்டங்களில் செல்

டுதல், ஆராதனையில் பற்று, வேதத்தை நேசித்தல், நெடுநேரம் தனி ஜெபம் செய்தல் இவை எவரும் சொல்லாமலே எனக்கு விருப்பமாகத் தோன்றின. வேதத்தின் ஆழத்தை அறிய முயன்று பல நாட்களாக ஒரே வாக்கியத்தையே தியானித்திருக்கிறேன்.

எஞ்சிய அப்பள்ளியாண்டின் ஆறு மாதங்களும் படித்து மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் கண்ணியமாய் வெற்றிபெற்றேன். பின் என்னசெய்வதென்ற கேள்வி யெழுந்தது.

---

## மருத்துவப் படிப்பு

1923 ஜூன் மாதம் என் தந்தை என்னைத் தஞ்சை நகரில் L.M.P. என்ற வைத்தியப் பட்டத்திற்குப் படிக்க அனுப்பினர். எனக்கு அது பிரியமாய்த் தோன்றவில்லை. உபதேசியார் வேலை பார்க்கலாம் என்றேன். பிரசங்கியாய்ப்போக விருப்பமுண்டு என்றேன். இவற்றைக் கவனியாது எனது விருப்பத்திற்கு மாறாக என்னை வைத்தியம் படிக்க அனுப்பி வைத்தனர்.

தஞ்சைக்குச் சென்றபோதுதான் நான் முதல் முதலாய்ப் புகைவண்டி பார்த்ததும் ஏறினதும். திருவனந்தபுரத்தில் இன்று மீன் நிலையம் கட்டப்பட்ட இடத்திற்கப்பால் வேளி என்ற இடம் வரைத்தான் அக்காலம புகைவண்டி வந்தது. தென்காசி—விருதுநகர் குறுக்குப்பாதை அக்காலமில்லை. திருநெல்வேலி மார்க்கமாய் வண்டி மதுரைக்கு இரவு ஒன்பது மணிக்குச் சென்று சேர்ந்ததும், பலர் இறங்கிப் போனதைக் கண்டு, அதுதான் தஞ்சாவூர் என்று நான் இறங்

சீட்டையும் கொடுத்து, வெளியே வந்து, தஞ்சாவூர் மெடிக்கல் ஸ்கூலுக்குப் பாதை கேட்டபோதுதான், அது மதுரை என்றறிந்தேன். கையில் ஒரே மூட்டை மட்டும்தான் இருந்தது. அதில் இரண்டு வேட்டியும், ஒரு கோட்டும், என் வேதபுத்தகமும் வேறு சில துணிகளும் மட்டுமே இருந்தன. அம்மூட்டையுடன் திரும்பவந்து, வாயில் காப்போரிடம் கதையைச் சொல்லி, அவர் சீட்டுகளைப் பரிசோதித்த, தஞ்சை டிக்கட்டைத் திருப்பித்தரவே, மனமகிழ்ச்சியுடன் மறுபடியும் வண்டி ஏறினேன். அதற்குள் வண்டி நிரம்பிவிட்டபடியால் அன்றிரவு பத்து மணி முதல் காலை ஆறு மணி மட்டும் நின்றுகொண்டே பிரயாணஞ் செய்தேன்.

வீட்டிற்கு இருபது மைல் தூரத்தில் தங்கிப்படிக்கையிலேயே, ஒழுங்காய்ப் பணம் கிடையாததால் பல முறை வருந்திய எனக்கு, முன்னூறு மைல்களுக்கப்பால் என்னென்ன நேரிடுமோ என்ற பயமும் இருந்தது.

தஞ்சையில் ஆராதனைகளுக்கு St. Peters S.P.G. ஆலயத்துக்குப் போகையில், ஜெபப்புஸ்தகத்தைக் கையாடினதைக் கண்டதும், எனக்கு ஒரே வெறுப்பு ஏற்பட்டது. ஆங்கிலிக்கன் ஆராதனை முறைகளை நான் அதற்குமுன் கண்டதேயில்லை. (Free Church Worship) சுயாதீனச் சபையிலே பழகினபடியால் இப்படித் தோன்றிற்று. அவ்வெறுப்பு மாறி விருப்பம் ஏற்பட ஆண்டுகள் பல தேவைப்பட்டன.

படிப்பில் எனக்கு ஆர்வம் எதுவும் எழவில்லை. சுவிசேஷ ஊழியம் செய்யவேண்டும் என்றே வாஞ்சித்தேன். 1923-ல் அங்கு படித்த கிறிஸ்தவ வாலிபரைத் திரட்டி Christian Medicos Prayer Union என்று ஒன்று நிறுவினேன். தவிரவும் S.P.G. மிஷனரியாக உழைத்து வந்த ஐம்பது வயதுப் பிராயமுடைய Rev. G. H. Lamb என்பவருடன் பழகினேன்.

அவர் திருமணமாகாதவர். யாதும், எவருக்கும் ஈயும் பழக்கமில்லாதவர். மிகச் சிக்கனமாக வாழ்ந்தவர். இந்திய உணவையே பெரும்பாலும் விரும்பியவர். பட்லர் கொதிநீரைமட்டும் மேசையில்வைக்க, காப்பி, தேயிலை இவற்றைத்தாமே ஆயத்தப்படுத்திக் கொள்வார். எளிய கோலம் பூண்டவர். எவரையும் எளிதில் நம்பாதவர். ஆனால் சுவிசேஷ ஊழியம் செய்ய மிக வாஞ்சைகொண்டவர்.* வாரமொருமுறை தமது கைக்குள் வேலை செய்துவந்த பள்ளி ஆசிரியர், அனுதை மாணவர் முதலியோரைக் கூட்டித்தெருக்களில் பாடிப் பிரசங்கம் செய்வார். அவருடைய கூட்டங்களுக்கு நானும் சென்றேன். யாவருடனும் சேர்ந்து உற்சாகமாய்ப் பாடினேன். சில வேளை ஐந்து நிமிஷம் பேச எனக்கும் இடம் கொடுப்பார். அறிவில் குறையிருந்தும், என் உற்சாகத்துக்கு அளவில்லை.

தபசு நாட்களில் "சாஸ்திரியார் மண்டபத்தில்" வேதநாயகம் சாஸ்திரியாரின் குடும்பத்தினர்களால் நாற்பது நாட்கள் பாடு மரணத்தியானம் நடத்தப்பட்டது. காயமிருந்த பாலைபோல் பண்டைக்கால வழக்கம் மட்டும் அங்கு நிலைத்திருந்தது. இசை அறிவு அக்குடும்பத்தாரில் அதிகமாயில்லாவிட்டாலும், சாஸ்திரியாரின் பண்டைக்காலக் குறிப்புகளை வைத்துப்படித்துப் பாடம் சொல்லிக் கொடுப்பார்கள். பழைய பெயரை மதித்து, பலர் கூடிச்சென்று பொழுது போக்குவர். நானும் அக்கூட்டங்களுக்குப் பல தடவைகளிலும் சென்றேன். பாட்டு இனிமையாயிராவிடினும், வேத

---

(*இவர் நெல்லைமாவட்டத்தில் இடையன்குடி, கிறிஸ்தியா நகரம், புதியம்புத்தூர் போன்ற ஊர்களில் ஊழியஞ் செய்தகாலத்தில், பனையேறினவர்கள் மேல் பரிதாபங்கொண்டு, அவர்கள் மரத்தில் ஏருமலே எளிதில் பதநீர் எடுக்கும் மார்க்கமொன்றைக் கண்டுபிடிக்க, பனைமுட்டில் துளை உண்டுபண்ணி, அதனுள் கண்ணுடிச் சோதனைக்குழாயை (test-tube) மாட்டிப்பார்த்தவர்.)

விபாக்கியானங்கள் ஆழமாயிராதபோதினும் இயேசு நாதரைக் குறித்த கூட்டமென்று அறிந்து, அதொன்றின் நிமித்தமே அங்கு இழுக்கப்பட்டேன். இயேசு என் அன்பர் ஆனார். யார் அவரைக்குறித்து என்ன சொல்லினும், எழுதினும், அவற்றைக் கேட்கவும், படிக்கவும் ஆர்வம் எனக்குள் அதிகமாக எழுந்தது.

மாலை நேரங்களில் பொழுது போக்கவெண்ணித் தஞ்சைப் புகைவண்டி நிலையத்திற்கு மாணவர்களுடன் உலாவச் செல்வோம். சென்னைக்கு அவ்வழியாக மட்டுமே அக்காலம் வண்டிகள் சென்றுவந்தன. சீட்டில்லாப் பயணிகளைப் பிடித்துச்செல்வதை அடிக்கடி நான் அங்கு கண்டிருக்கிறேன்.

அக்காலம் அங்கு மாணவர் விடுதிகள் கட்டப்படவில்லை. தங்கள் தங்கள் வசதிபோல் பலர்கூடி வீடுகளை அமர்த்திச் சமையல்காரனை வைத்து உண்டுவந்தனர். நான் ஆறு கிறிஸ்தவ மாணவருடன் கீரைக்காரத் தெருவில் பன்னிரண்டு ரூபாய் வாடகையில் ஒரு வீட்டில் தங்கினேன்.

## வழிகாட்டி

தங்கின வீட்டில் சாப்பாட்டுக்காரியங்களை மாதம் ஒருவர் கவனிக்கவேண்டும். எனக்குரிய மாதமும் வந்தது. மாதா மாதம் இங்கும் வீட்டிலிருந்து ஒழுங்காகப் பணம் கிடைக்கவில்லை. பல கடிதங்கள் எழுதியும், பணம் வராததால் கவலை ஏற்பட்டது. என் மாதக் கணக்கு முடிந்தது. மற்ற ஐந்து பேரும் பணத்தைக் கொடுத்துவிட்டபடியால் அதைக்கொண்டு எல்லாக் கடைக் கடன்களையும கொடுத்துவிட்டேன். எனக்குப்

பணம் வராதபடியால் அரிசிக்காரிக்குக் கொடுக்க வேண்டிய பணம் கொடுக்கப்படவில்லை. அது சுமார் பத்து ரூபாய்தான். எனது வெட்கத்தையும் கவலையையும் கடவுளுக்குச் சொல்லி ஊக்கமாய் ஜெபித்து, பிற நண்பருடைய பரிதாபத்திற்கும், அவர்களால் அற்பமாய் எண்ணப்படுவதற்கும் அஞ்சி, வெட்கி, நாட்கள் சில கழித்தேன். மேலும் மேலும் வீட்டிற்கு எழுதியும் பயன் இல்லாதே போயிற்று. முடிவில் ஒரு தீர்மானத்துக்கு வந்தேன்.

எனது மேசைமேல் ஒரு கடிதம் எழுதிவைத்தேன். நான் ஒரு நெருக்கடியால் தஞ்சாவூரைவிட்டுப் போவதாகவும், சில நாட்களுக்குள் திரும்பி வருவதாகவும், வந்தபின் நான் போனதைப் பற்றி யாரும் என்னிடம் கேட்கக்கூடாதென்றும் அதில் எழுதியிருந்தேன். திருவனந்தபுரத்துக்குப்போக வேண்டுமென்பது எனது திட்டம். ரெயில் செலவுக்கும் கையில் காசு இல்லை. 'டிக்கட்' இல்லாமலே வண்டியேறிவிடுவது என்பது என் முடிவு. ஆயினும் அது தவறு என்று மனச்சாட்சி என்னை எச்சரித்தது. வேறு வழியிருந்தால் கடவுள் எனக்கு வெளிப்படுத்தட்டுமே என்று ஜெபித்தும், பயன் காணாததாலேயே இந்த நிலைக்குள்ளானேன். வீட்டைவிட்டு வெளியேறுமுன் ஜெபித்தேன். ரெயில் நிலையம் போகும் வழியில் ஒரு மரத்தடியில் நின்றும் ஜெபித்தேன். முடிவில் வண்டி நிலயத்தையடைந்து அங்குமிங்கும் போன வண்டிகளைப் பார்க்கிறவன்போல் சுற்றி நடந்தேன்.

இரவு மணி 7.30 க்கு ராமேஸ்வரம் எக்ஸ்பிறஸ் என்று அக்காலம் அறியப்பட்டிருந்த ஒரு வண்டி சென்னையிலிருந்து வந்து அங்கு நின்றது. 7.58க்கு அது புறப்படும் நேரம். இந்த இருபத்தெட்டு நிமிஷமும் அங்கு மிங்கும் நடந்து, ஏறுவதா, நின்று விடுவதா என்று திகைத்தேன். ஏறுவது தவறு என்ற அறிவு; வேறுவழியில்லையே என்ற தயக்கம்; கண்டுபிடிக்கப்பட்

டால் என்ன செய்வது என்ற பயம்; இடைவழியில் இறக்கி விட்டு விடப்பட்டால் இரக்க நேரிடுமே என்ற வெட்கம்; பொய் சொல்வதற்கிருந்த அச்சம் ஆகிய வற்றால் வெகுவாய்க் கலங்கினேன். கண்களை மூடி, "ஆண்டவரே! வழி ஏதுவும் இல்லையா? இக்குற்றத்தை நான் செய்ய அஞ்சுகிறேன்" என்று உருக்கமாக மன்றாடினேன். மணி 7.53. நிலையத்தில் முதல் மணி அடித்தது. பயணிகள் யாவரும் ஏறிவிட்டார்கள். கதவுகள் ஒவ்வொன்றாய் மூடப்பட்டன. 7.57 ம் ஆயிற்று. நானோ ஏறவில்லை. கடைசியாய் ஓரறைக் குள் ஏறி நின்று கண்களை மூடி "கடவுளே வழிகாட்டும்" என ஜெபித்தேன்.

அந்நாள் எனக்குக் கிடைத்த ஒரு நடத்துதல், இம்மட்டும் அந்த முறையில் வேறு ஒரு நாளும் கிடைத்ததில்லை. வண்டிக்குள் என்முன் ஒருவர் நின்றாற்போல் எனக்குத் தோன்றியது. அவர், அவ்வூரிலுள்ள ஒரு கிறிஸ்தவ நண்பர் பெயரைச் சொல்லி, அவரிடம் நீ போய்க் கேள் என்று சொன்னாற்போல் இருந்தது. இதற்குள் இரண்டாம் மணியும் அடித்து வண்டியும் புறப்பட்டது. போவதா அல்லது நான் கேட்டதாக நினைத்த வார்த்தைகளை நம்பி இறங்குவதா என்ற போராட்டத்தில், இறங்குவதே சரி என்று எண்ணி, இறங்கி, புதிய தைரியத்தோடு கீரைக்காரத் தெருவிலிருந்த வீட்டிற்கு வந்து, எனது மேசையில் வைத்துச் சென்ற கடிதத்தையும் எடுத்து மறைத்தேன்.

வண்டிக்குள் கண்ட காட்சி என்னமாய் முடியுமோ என்ற சந்தேகத்துடன் அன்று இரவு நித்திரை செய்தேன். காலையில் எழுந்து அரிசிக்காரி பணம் கேட்க வருமுன் வீட்டை விட்டு வெளியேறி பள்ளிப் பாதையில் நடந்துகொண்டிருந்தேன்.

முந்தின இரவு வண்டிக்குள் எனக்குச் சுட்டிக் காட்டப்பட்டவர் தேவதாஸ் என்ற ஒருவர். அவர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதரின் மைத்துனர். பண்

டித்தர் மக்கள் இவரை 'மாமா' என்று அழைத்ததால் யாவராலுமே இவர் 'மாமா' என்றுதான் அக்காலம் அறியப்பட்டிருந்தார். மெல்லிய உடலுடன் உயரமானவர். ஒழுங்காய் ஆலய ஆராதனைகளில் பாடம் வாசிப்பவர். லாம்ப் (Lamb) ஐயர் பிரசங்கக்கூட்டங்களிலும் இவர் பங்கு கொள்வார். அவரைக் கண்டு மரியாதை செலுத்தினதே தவிர, அதற்குமுன் ஒருநாளும்நான் அவருடன் பேசியிருந்ததில்லை. அப்படியிருக்க, அன்று காலை ஜெபத்துடன் நான் புறப்படவும், தூரத்தில் அவர் எதிரே வரக்கண்டு, ஆண்டவர் நடத்துதல் என்று எண்ணி அவருக்குப் வழக்கம்போல மரியாதை செய்தேன். அவரும் அதைத் திருப்பித் தந்துவிட்டுத் தமது அலுவலகத்திற்குள் நுழைந்து விட்டார். ஏமாந்த வண்ணமாய் என்ன செய்வது என்று அறியாதவனாய் அவ்விடத்திலேயே நின்று, கண்டதெல்லாம் வீணாய்ப் போயிற்றோ என்று கண்களை மூடி ஆண்டவரை வேண்டினேன். உள்ளேபோன 'மாமா' திரும்பிவெளியே வந்து, தூரத்தில் நான் நின்று கொண்டிருப்பதைக் கண்டு, என்னைச் செய்கையால் அழைத்து என்ன வேண்டுமென்று கேட்டார். கதை ஒன்றையும் சொல்லாமலே பத்து ரூபாய் தேவை என்றேன். அவர் உடனே தமது சட்டைப்பையிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்துக்கொடுத்தார். என் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஜெபத்தைக் கேட்கிறவர் உயிரோடிருக்கிறார் என்ற நம்பிக்கை உரங்கொண்டது. வண்டிக்குள் கண்டது நிறைவேறியது. அரிசிக்கடன் தீர்ந்தது.* மறுபடியும் மீதியுள்ள மாதங்களைத் தாண்டினேன்

1924 ஏப்ரில் மாதத்தில் முதல் வருஷ L.M.P. அரசாங்கத் தேர்வு நடந்தது. இரவும் பகலும் வேதம் படிப்பதும், பிரசங்க ஊழியத்தைப் பற்றிய கனுக்காண்

---

*1925 நவம்பரில் அதை நான் 'மாமா' விற்குத் திருப்பிக்கொடுத்தேன்.

பதுமே என்து வேலையாயிருந்தமையால், புத்திக்கூர்மையிருந்தும் பாடம் படியாதபடியால், பரீட்சையில் வெற்றிபெறவில்லை. இச்செய்தி மே மாதம் என் வீட்டில் தெரியவரவே எனது இன்னல் காலமும் தொடங்கிற்று.

அந்த ஒரே ஆண்டில் L.M.P. படிப்புக்காக அறுநூறு ரூபாய் செலவானதாக எனது தந்தை பல முறையும் சொல்லி வருந்தத் துவக்கினர். அக்காலம் அவருக்கு மாதச் சம்பளம பதிமூன்று ரூபாய்கள் மட்டுமே. என் சிறிய தாயாருக்கு மாதம் பதினறு ரூபாய்கள் சம்பளம். போதுமான நெல், தேங்காய், கருப்புக்கட்டி முதலிய யாவும் இருந்தபடியால், இந்தச் சொற்ப ஊதியத்தில் வறுமை நீங்கி, வாழக்கூடியதாயிருந்த போதிலும், என்னைப்படிப்பிக்க ஏற்ற வசதிகள் இல்லை. எனினும் திரும்பவும் படிக்கவைக்கப் பல முயற்சிகள் செய்தார். ஆயினும் அவை வெற்றிபெறவில்லை.

மருத்துவக் கலையில் வெறும் புத்தி மட்டும் போதுமானதல்ல, மிகுந்த உழைப்புத்தேவை. நுண்ணிய பாடற் கூறுகளைத் தெளிவாய் மனப்பாடஞ்செய்தல் வேண்டும். உயிரைக்காக்கவும் அழிக்கவும் வாய்ப்பு நிறைந்த இக்கல்வியை இன்று பலர் விரும்பினும் சிலர் தகாத முறைகளில் வெற்றிபெற விரும்புகின்றனர்.

# கலியாணப் பேச்சுகள்

நம்நாட்டில் படிக்கத் தகுந்த வாலிபரைச் செல்வந்தர் சிலர் தெரிந்தெடுத்துத், தங்கள் பிள்ளைகளை அவர்களுக்கு மணம் முடித்துப், பின்னர் அவர்களைப் படிப்பிக்கும வழக்கம உண்டு. எனது தந்தையும், நான் மருத்துவப் பரீட்சையில் தோல்வியடைந்தபோது, மேற்கூறிய முறையில் என்னைப் படிக்கவைக்க வெகுவாய் முயன்றனர். எனது தாய்மாமன் துணையால் என்னை ஒரு முலற ஒரு கடிதத்துடன் எழுபது மைலுக்கப்பாலிருந்த ஒரு அரசாங்க அதிகாரியிடம் அனுப்பினர். அவருக்குத் தனது முதல் மனைவிக்குப் பிறந்த ஒரு பெண் இருந்தாள். அவளது தந்தை வேலைநிமித்தம் தனியாகவே அங்கு தங்கியிருந்தார். ஓர் இரவு அவருடன் நான் தங்கித் திரும்பினேன். அப்பொழுது எனக்கு வயது பத்தொன்பது. ஒருவித வெட்கம் என்னை மேற்கொண்டது. மனதிற்குள் தெளிவான நடத்துதல் ஒன்றும தோன்றவில்லை. எனது மாமாவும் அந்தப் பெண்ணை ஒரு முறை எனக்குக் காட்டிக் கொடுத்தார். எனக்குள் திகிலும, கலக்கமும் எழுந்தன.

இன்னொரு முறை, மற்றொரு ஊருக்கு முன்போல் கடிதத்துடன் அனுப்பப்பட்டேன். ஆண்டவரே நான் இந்த இளமையிலே இதற்கு ஒப்புக்கொடுக்கவேண்டுமா என்று ஜெபித்துச் சென்றேன். அந்த வீட்டாரும் என்னை ஏற இறங்கப் பார்த்து அனுப்பினர்கள். முடிவு எனக்குத் தெரியாது. இப்படிப்பட்ட முறைகளில் சில விநோதக் கூத்துகளும் நடந்தன. ஒரு வீட்டில் குட்டையான வாயிலினூடே என்னைப் போகச் செய்தனர். பெண் அதிக உயரமானவள். யார் அதிக உயரம் என்பதைக் கண்டு கொள்ளவே இப்படிச் செய்தனர் போலும்!

இந்த மூன்று தடவைகளிலும் தோல்வியடைந்த பின் "இனி நான் எங்கும் போகேன்" என்று மறுத்

தேன். 'எந்தப் பெண்ணை ஒழுங்கு செய்தாலும் நான் ஆயத்தம் தான்' என்றும், 'எனது மருத்துவப்படிப்பைத் தொடர எனக்கு தேவ நடத்துதல் இல்லை' யென்றும் சொன்னேன். எனினும் அவற்றிற்குச் செவி கொடாத என் தந்தை, நான் கண்டிராத ஒரு பெண்ணை எனக்கெனக் குறித்து, அதை உறுதிப்படுத்தும் நாளையும் திட்டப்படுத்தி, ஒருநாள் காலையில் வீட்டிலிருந்து புறப்பட்டார். இதைக்கண்ட நான், எனது அறைக்குள் புகுந்து நெடுநேரம் ஜெபித்தேன். "ஆண்டவரே இது உமக்குப் பிரியமானால் நடக்கட்டும், இல்லாவிட்டால் என் தந்தையின் பயணத்தை வாய்க்கச் செய்யாதிரும்" என்றேன்.

ஐந்து மைல் நடந்து, அங்குள்ள என்தாயின் இனத்தார் சிலரைக் கூட்டிச் செல்லவேண்டும் என்பதே அன்று அவர் செய்திருந்த ஒழுங்கு. அங்கிருந்து பெண்வீடு மேலும் ஐந்து மைல். என் தந்தை, பாதி வழிசெல்லவும், பெண்வீட்டிலிருந்து ஒருவர் வந்து, பெண்ணின் சிற்றப்பா அதே வீட்டில் அன்று காலஞ்சென்று விட்டதாகவும், நிச்சயதாம்பூலம் மற்றொரு நாளுக்கு மாற்றிவைக்கவேண்டுமென்றும் தெரிவிக்கவே, அந்தப் பேச்சும் முடிந்தது. அதோடே பெண்தேடும் முயற்சி முற்றிலும் கைவிடப்பட்டது. 'கண்ணி தெறித்தது. குருவி தப்பிற்று' என்று நானும் முற்று நிம்மதியடைந்தேன்.

---

# உள்ளக் களிப்பும் ஊழியத் தொடக்கமும்

எனது வீட்டின் அருகாமையில் சுமார் மூன்னூறு அடி உயரமும் ஒரு மைல் நீளமுமான ஒரு சிறு பொற்றை உண்டு. அக்காலம் அம்மலை இயல்வளம் பொருந்தி, பெருமரங்களால் நிறைந்து, சிறிய நீரோடைகளுடன் அழகிற்சிறந்து, மனதைக் களிப்புறச் செய்யக் கூடியதாயிருந்தது. தற்போது அதில் உணவுப் பொருட்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. மாலை மூன்றுமணியானதும், யாரும் காணாமல் நான் அம்மலைக்குச் சென்று, இயற்கையின் அழகைக்கண்டு களிப்புற்று இறைவனைத் தொழுவேன். இன்றும் அங்கிருந்து மேற்றிசை நோக்கில், அடிவாரத்தில் தென்னை கமுகுச் சோலைகளடங்கிய ஆற்றோரம், சற்று அப்புறம் பச்சையான நெல் வயல் வெளிகள், ஒரு மைலுக்கப்பால் ஆயிரம் அடி உயரமான சித்திராலயம் (சிதருல்) என்ற பாறைக்கோயில் மலை, அதற்கப்பால் மலையும் பள்ளமும் சேர்ந்த அடுக்கடுக்கான மலைகள் ஆகியவைகள் எவர் கண்ணையும் பரவசப்படுத்தும். இவ்வழகிய சூழ்நிலையில், என்னைப் பிறப்பித்த இறைவனை நன்றியுணர்ச்சியால் கண்நிறைய நீர் ததும்பப் பலமுறையும் நான் போற்றுவேன்.

வெளியுலகத்தில் நான் கண்ட அமைதியும், அழகும் என்னுள்ளத்திலும் ஒருவாறு அக்குணங்களைத் தோற்றுவித்தன. என்னை மறந்தவனாய்ச் சில வேளைகளில் பாறைமீது படுத்து, முகங்குப்புற விழுந்து பணிவேன். உள்ளம் பொங்கி, எழுந்து நின்று சிலவேளை குதிப்பேன். காடு அடர்ந்த இடங்களையே நான் தெரிந்து கொண்டபடியால் பிறர் என்னைக் காண்பாரே என்ற அச்சம் இருந்ததில்லை. சிற்சில வேளைகளில் தனிமையில் பல மணிநேரம் அம்மலைக்குள் அமர்ந்து மகிழ்வேன். வேத புத்தகத்தின் சில வசனங்களைப்படித்து, அவற்

...ல் கருத்தை உணர்ந்து, மறுபடியும் துள்ளிக் குதித்து ஆடி மகிழ்வேன். யாரேனும் கண்டால் என்ன நினைப்பா என்ற எண்ணமும் எனக்குள் எழுந்ததில்லை. அமைதியின் வெள்ளம் உள்ளத்தில் ஊறி நிரம்பிப் பெருக்கெடுத்து வழிந்தோடவும் கண்டேன். தனி ஜெபத்தைப்போல் இனிமையான சந்தக்காரியமும் அக்காட்களில் எனக்குத் தென்படவில்லை. வேத புத்தகத்தை நேசிக்கும் அன்பும், அத்துடனேயே எழுந்தது. ஆயினும் அதின் ஆழமான கருத்தை அறிய அன்று இயலாதவனாகவே இருந்தேன்.

வேதத்தின் விளக்கமும், அதின் உட்கருத்தும் அக்காலங்களில் எனக்கு நன்கு விளங்காவிடினும், அதின் இனிமை சொல்லக்கூடாத அளவு பெருமிதமாகத் தோன்றிற்று. ஊமையன் கண்ட கனுப்போல, எனெழுந்த இன்பத்தைக் கூறக்கூடாதவனுப் நான் இருக்கிலும், வாய்ப்புக்கிடைத்தபோதெல்லாம் எனது உள்ளக் கிளர்ச்சியையும், மகிழ்ச்சியையும் யாவரும் அறிந்துகொள்ளக் கூடிய முறையில் பாடி, சாட்சி சொல்லவும் தொடங்கினேன். எனது ஊக்கத்தைக் கண்ட யாவரும், ஒரு நூதன வல்லமை என்னில் செயல்பட்டது என்பதை எளிதில் கண்டு கொண்டனர். அக்காட்களில் உண்மை (Sincerity) ஒன்றே என்னில் விளங்கிற்று; அறிவும் ஞானமும் குறைந்தே இருந்தன.

வாரந்தோறும் ஞாயிறு காலையில் எழுந்து சுற்றுப்புறத்திலுள்ளச் சிறிய சபைகளுக்குச் செல்வேன். ...ன் உபாத்தியார் மகன் என்று எல்லாரும் நன்கு அறிந்தபடியாலும், அக்கால உபதேசிமார் மிகப்படிப்புக் குறைந்தவர்களானதாலும், நான் பள்ளி இறுதித் தேர்வடைந்தவனானதாலும், எங்கு சென்றாலும் என்னைப் பிரசங்கம் செய்யக் கேட்டுக் கொள்வர். நான் என்ன பிதற்றினாலும் மிக நன்றாயிருந்தது என்று யாவரும் என்னைப் பாராட்டினர்.

பட்டம் பெற்ற அன்றைய குரு ஒருவரின் பிர சங்கத்தை இங்கு மாதிரியாக எழுதுகிறேன். அவர் அக்காலத்து விசாரணைப் போதகர். மிஷனரிகளுக்கு மந்திரி. சபைச் சொத்துக்களைப் பாதுகாத்து வந்தவர். உயர்ந்த தோற்றம், நரைத்தமீசை, வழுக்கைத் தலை, தலையில் ஒரு வெள்ளைப் பாகை, முட்டுமட்டும் எட்டின வெள்ளைச் சட்டை, கால்களின் நடுவே பாய்ச்சியுடுத் திய நீண்ட வேஷ்டி, அழகிய துணிக்குடை. (அந்நாட் களில் ஓலைக்குடைகள்தான் ஏராளமாயிருந்தன.) நாடன் செருப்பு இவைகளையுடைய கம்பீரத் தோற்றம். அவ் வுருவத்திற்குள் எவ்வளவு பக்தியும் வேத அறிவுமிருந் ததோ ஆண்டவரே அறிவார். எனினும் உலக ஞானம் மிகுந்தவர்.

ஒரு ஞாயிறு, காலை ஆராதனைக்காக மேற்கூறிய நாட்டு ஐயர் வில் வண்டி ஒன்றில் தோட்டவாரம் வந் திறங்கினர். பற்கள் பல விழுந்திருந்த போதிலும், அவர் வாயை விரிவாகத் திறந்துப்பேசினர். பேச்சில் ஒரு இராகம்!

"அன்பானவர்களே........நாஆன் ஒரு ஊருக் குப் போயிருந்தேன். அன்று அங்கு ஆலயத்தில் பெண்க ளும், பிள்ளைகளுமே தவிர ஆஆண்கள் ஒவருும் வரவில்லை. நாஆன் அவர்களைப் பாஆர்த்து, ஆஆண்கள் எங்.... கே....என்று கே........ட்டே....ன். அதற்கு அவர்....கள் யாவரும் மலைக்குப் போய் ஒளித்திருக்கிறார்கள் என்று சொல்லக் கே........ட்டே....ன். அப்பொழு....து நா....ன் எ....ன் மலைக்குப் போகவேண்டும். யுத்தத்திற்கு ஆள் பிடிக்க வந்தால் *இங்குள்ள பிறந்தி....(pine-apple)க் கா....ட்டிற்குள் ஒளிக்கலாமே....என்றேன். பார்த்தீர் களா........கிறிஸ்து மார்........க்கத்தின் மே........ன்மை" என்று முழங்கினர். இதைப் படிப்பவர்களுக்கு இச

---

*1917ல் முதலாம் உலக யுத்தத்தின் போது பட்டா ளத்திற்கு ஆள் சேர்த்த காலம் அது.

விநோதம் போல் தோன்றக்கூடும். அக்காலத்தில் இப்படிப்பட்ட பிரசங்கங்கள் சாதாரணம்.

எனது ஊர் உபதேசியார் ஓலைக்குடை பிடித்தவர். பனைமரம் ஏறும் தொழிலை ஒருகாலம் செய்தவர். வாசிக்கமட்டும் அறிந்தவர். என்றாலும் நல்லவர். பக்தியுள்ளவர். சிறு வைத்தியமும் செய்தவர். ஆகையால் அவருடைய ஊழியத்தை அந்நாட்களில் எவரும் குறை கூறினதில்லை.

இவரும் இவ்வாறுப் பேசக் கேட்டிருக்கிறேன்; 'ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான். அவன், யாக்கோபைப் பெற்றான்' என்ற வாக்கியங்களைப் படித்தபின், பண்டைக்காலங்களில் ஆண்கள்தான் பிள்ளை பெற்றார்கள். இப்பொழுது இயேசு நாதரின் கிருபையால் ஆண்கள் தப்பினோம். பிள்ளைபெறும் தொல்லையை பெண்களுக்கு மாற்றிக்கொடுத்திருக்கிறார் என்று நினைக்கிறேன் என்பார். தகுந்த அறிவும், பயிற்சியும், பக்தியும் இல்லாதவர்களை சபை ஊழியராய் நியமிக்கையில் இப்படிப்பட்ட விநோதவிளக்கங்களைக் கேட்கலாம். இந்நிலை இன்றும் முற்றிலும் அற்றுப்போகவில்லை*

---

*அக்காலமிருந்த வட்டாரத்துப் போதகர் ஒருவர், எனதுகீழுள்ள உபதேசியாரை நோக்கி "நல்ல பிரசங்கம் செய்யத் தெரியாவிட்டால், சத்தமாவது போடும் ஐயா" என்று ஆலோசனை கூறினாராம். பட்டதாரிகள் சிலருங்கூட இன்று இவ்வாலோசனையைப் பின்பற்றுகின்றனர்.

# வேலை தேடல்

வேலையில்லாத் திண்டாட்டம் என்பது இக்காலத்தில் மட்டுமல்ல, அக்காலமும் இருந்தது. அன்று நாட்டில் ஏகாதிபத்திய மகாராஜாவின் ஆளுகையாதலால், பிராமணர்களே எல்லாத் துறைகளிலும் ஏராளமாய் அமர்ந்திருந்தனர். மந்திரி (மந்திரம்—ஆலோசனை) திவான் என்ற உருதுச் சொல்லால் அறியப்பட்டார். பிராமணரே இப்பதவிக்குரியவர் என்று எண்ணப்பட்டனர். மற்ற வகுப்பினர் அலுவல்களில் மருந்துபோல் குறைவாகயிருந்தனர். எந்த இலாகாவிலும் தலைவர்கள் பிராமணரே. கீழ்வேலைக்காரரும் பெரும்பாலும் அன்னவரே. ஆசிரியர் வேலைக்காக நான் மனுச்செய்து, ஒரு பிராமண இன்ஸ்பெக்டர் ஆபீசுக்கு சிபார்சைக் கடிதங்களுடன் பலமுறையும் திருவனந்தபுரத்துக்கு நடந்திருக்கிறேன். ஒருமுறை எனது இனத்தார் ஒருவராலும் அழைத்துச் செல்லப்பட்டேன். 'I shall remember' என்று சொல்லி அனுப்புவது அவர் வழக்கம். நானும் நடந்து நடந்து அலுத்தேன்.

ஒரு உபதேசியார் வேலை கிடைப்பது எளிதாயிருக்கும் என்று எண்ணி அதற்குரியவர்களிடம் செல்லும்படி பலர் எனக்கு அன்று யோசனை கூறினர். மார்த்தாண்டம் என் வீட்டிலிருந்து நான்கு மைல் தொலை. அங்கு அந்நாட்களில் சிங்க்ளேயர் (R. Sinclair) என்று ஒரு மிஷனரி இருந்தார். அங்குள்ள தற்போதைய அழகிய ஆலயத்தைக் கட்டி முடித்தவர் அவரே. என்னைக்குறித்துக் கேள்விப்பட்டுப் பல இடங்களுக்கும் பிரசங்கம் செய்ய அவர் என்னை அழைத்துச் செல்வார். அவருடைய மோட்டார் வண்டியில் என்னை ஏற்றிச் செல்வதை மக்கள் அக்காலங்களில் மிகவியப்புடன் நோக்கினர். நான் உற்சாகமாய்ப் பேசுவதைக் கவனித்த அவர், எனது ஊக்கத்தையும் உணர்ச்சியையும், உண்மையையும் கண்டு, என்னைக் குறித்து நல்லெண்ணம் கொண்டிருந்தார்.

இந்தியக் கிறிஸ்தவர்களை மிஷனரிமார் அக்காலம் உட்காரவைத்து உரையாடுவதில்லை. நிற்கவைத்தே பேசி அனுப்பி விடுவார்கள். அதைப் பலரும் பொருட் படுத்துவதும் இல்லை. அவர்களை இந்திய ஊழியர்கள் எஜமானே (Mastet) என்று அழைக்கத் தயங்கினது மில்லை. இந்தச் சிங்க்ளேயர் என்னை அழைத்துச் சென்று பிரசங்கம் செய்வித்ததுமட்டுமல்ல, வாலிபனு மினும் தன்வீட்டில் எனக்கு இருக்கை கொடுத்து உரையாடுவர். இது பலருக்குப் பொருமையாகயிருந் தது. 1924 எப்ரல் முதல் 1925 எப்ரல் வரைப் பல வேளைகளில் இந்த மிஷனரி என்னை இவ்வாறு உற் சாகப்படுத்தினர்.

1924 எப்ரல் ஸ்ரீ எனது நண்பர் ஒருவர் ஆண்ட வரால் இழுக்கப்பட்டுப் பிடிக்கப்பட்டார். அவர் பெயர் டேவிட். என்னிலும் ஒரு வயது பெரியவர். எனது அண்டை வீட்டுக்காரர். நாங்களிவருமாக ஆன்மீக வாழ்க்கையைக் குறித்து ஒருமனதுடையோ ரய்ப்பேசி ஜெபித்தோம். அவர் இன்றும் நல்ல ஊழியஞ்செய்து நெல்லை அத்தியட்சாதீனத்தில் பல சபைகளைத் துவக்காரணமாயிருந்து வருகிறார். அவரை ஆண்டவர் பொருமை, எரிச்சல் இவற்றை வெல்லும் வல்லமையை யளித்து ஆசீர்வதித்தே வருகிறார்.

1925. ஜனுவரி மாதம். ஒரு செவ்வாய்க்கிழமை வேலை தருவதின் முடிவைத் தெரிவிப்பதாக என்னைத் தனிடம அழைத்தார் சிங்க்ளேயர். முந்தின இரவு முழுவதும் ஜெபத்தில் நண்பர் டேவிடுடன் தரித்தி ருந்து, மறுநாள் பிற்பகல் மூன்று மணிக்கு நாங்கள் இருவரும் மார்த்தாண்டம் பங்களாவுக்குச் சென்றோம். நண்பரை வளாகத்திற்கு வெளியே நிற்கச்செய்து, நான் குறிப்பிட்டபடியே உள்ளே சென்றேன். ஐயரும் என்னை எதிர்பார்த்தே இருந்தார். வழக்கமாய் அளித்த இருக்கை அன்று எனக்கு அளிக்கப்படவில்லை. அவ ருடைய முகத்தோற்றமும் சற்று வேறுபட்டிருந்தது.

உடனேயே என் மனதிலும் இது தேவசித்தமல்ல என்னும் எண்ணம் எழுந்தது. உட்காரச் சொல்லாத ஐயர் வீட்டில், எனது குணத்திற்கும், தன்மதிப்புக்கும் இசைய, ஒரு நாற்காலியை இழுத்து அவரைப் போல் நானும் அமர்ந்தேன். இதை அவர் விரும்பவில்லை. அவர் பேசத்துவக்கவும் யாவும் தெளிவாயின.

'நீ பிரசங்கம் பண்ணுவது ஜனங்களுக்குத் திருப்தியாக இல்லை. வேதசாஸ்திரம உனக்குத்தெரியாது. வீண் கதைகளைப் பிதற்றித்திரிகிற உனக்கு நான் மிஷனில் வேலை கொடுப்பது எப்படி?' என்று ஆத்திரமாய்க் கூறி முடித்தார். அமர்ந்திருந்த நான் எழுந்து "நான் நல்ல பிரசங்கியல்ல. வேத சாஸ்திரமும் நான்படிக்கவில்லை. ஆயினும நீர் கூறின இந்த வார்த்தைகள் உம்முடையவையல்ல. கடவுளோ, அல்லது சாத்தானோ இவற்றை உமது வாய்க்குள் போட்டிருக்கவேண்டும். ஒன்றுமட்டும் உண்மை. கடவுளின்சித்தம் உமக்குக் கீழ் தற்சமயம் நான் வேலை செய்வது அல்ல. வேறு ஏதோ கடவுள் எனக்குக் குறித்திருப்பார். அது எனக்கு இப்பொழுது தெளிவாயில்லை. ஆயினும் நீர் எனக்குத் தருவதாக எண்ணியிருந்த பதினைந்து ரூபாய் ஊதியத்தைவிட பத்துப்பங்கு ஊதியம் பெறும வேலையில் நான் அமருவதை நீரே கண்டு வெட்கப் படுவீர். வணக்கம்" என்று எழுந்து கைகொடுக்கத் தயங்கின அவர் கையையும் பிடித்துக் குலுக்கி வெளியேறினேன்.

அன்றுவரை என்னை விரும்பிய அவரது போக்கில் மாற்றம ஏற்படக் காரணமாயிருந்தவர்கள், அக்காலம் அவரது ஆலோசனைக் காரராயிருந்த பொறுமைக்காரரான ஒரு சில போதகர்மாரே.

எதிர்பார்ப்போடு வெளியே காத்துநின்ற எனது நண்பர், என்கையில் வேலைக்குரிய சீட்டைக் காணாததால் சற்றுத்தயங்கினார். நடந்தவற்றைச் சொல்லி, சற்றுத்தூரத்தில், ஆட்கள் நடமாடாத பனைமரச்சோலை,

டன்றில், அரசினர் உயர்நிலைப்பள்ளி தற்சமயம் இருக்கும் இடத்தில் புகுந்து, முழங்காலூன்றி ஜெபித்தோம்.

'ஆண்டவரே! உமது சித்தப்படிச் செய்வேன். வழி காட்டும்' என்பதே ஜெபத்தின் பொருள். ஆகிலும் நெடுநேரம் இருவரும் ஜெபித்தபின், சஞ்சலத்தையெல்லாம் அவர் பாதம் ஊற்றிவிட்டு மகிழ்ச்சியோடு எழுந்தோம். பிடித்த கொப்பும் முறிந்தது. நின்ற கொப்பும் ஒடிந்ததெனத் தோன்றிற்று. எனினும் எதுவும் தெய்வச் செயலே.

---

# கதிரவன் உதித்தான்

ஏறக்குறைய ஓராண்டுக் காலம் வேலை எதுவும் கிடைக்கவில்லை. வீட்டில் எனது தந்தை தமது குறைந்த வருவாயிலிருந்து செலவு செய்த பொருள் வீணாய்ப் போனதைக் கண்டு, மிக மனம்வருந்தி என்மேல் சினங்கொண்டார். அன்னமுண்ணும் வேளையில் அருகே பார்த்து "இருபது வயதுத் தடிமாடு வேலைசெய்யாமலே ஒற்றைப்போல் சாப்பிட ஆத்திரப்படுகிறதே", என சொல்வார். இதைப் பொருட்படுத்தாமலே, நான் என் என்று நீங்குமென்று ஏங்கித் தியங்கினேன். மேல் வந்து காற்று வாங்கும் மீன் போல் சிலகாட்களில் நான் பாட்டி வீட்டிற்குச் சென்று தங்குவதுண்டு.

ஒருமுறை என் தந்தை நோயுற்று, மார்த்தாண்டம் மிஷன் ஆஸ்பத்திரியில் இருப்பதாக அறிந்து, நான் தங்கியிருந்த (எனது பாட்டி வீடு) கடமலைக்குன்றிலிருந்து ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். நான் சென்ற சமயம் அவர் படுக்கை மீது அமர்ந்திருந்தார். அவர் திடீ

றேன்று தள்ளாடி விழுவது போல் காணப்பட்டே
நான் அவரை ஏந்திப்பிடிக்க அருகில் சென்றேன்.
அவரோ "என்னைத் தொடாதே; நான் இறந்துபோனா
லும் நீ என் உடலைத் தொடக்கூடாது" என்று கூறினர்.*

ஆஸ்பத்திரிக்கு அவசியமான விறகுதேடி வரு
வதை என் கடமையெனக் கொண்டு, தென்னை மரத்
தின் மடல்கள், பாளைகள் போன்றவற்றை சிலவேளை
களில் நானே மரமேறி அடர்த்திக்கட்டி, தலைச்சுமை
யாய் நாலுமைல் சுமந்து செல்லும் வழியில், என்னைக்
கண்டு பலர் ஆச்சரியப்பட்டனர். ஞாயிறில் பிரசங்கி,
திங்களில் விறகு சுமப்போன், செவ்வாய் கெல்குத்து
வோன், இப்படியாக என்னாலியன்ற கடமைகளைச்
செவ்வனே செய்ய எனக்கு யாதொரு அச்சமும்
இருந்ததில்லை. இயேசுநாதரின் சிலுவையை ஏந்தி உதவிய
சீமோனைப்பற்றி அறிந்திராத எனது சிறு பிராயமுத
லே, விறகு சுமந்து களைத்துவரும் வயோதிபர், †சிறு
வர்களது சுமையை நானே விரும்பிச் சுமந்து அதனால்
பலமுறை மகிழ்ச்சியடைந்திருக்கிறேன். இவ்விதமான
வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வது ஆண்டவருடைய
அருளே. (பிலி 4: 12). 'டாக்டர் வகுப்புக்குப் படித்த
வனே விறகு சுமப்பதைப் பாருங்கள்' என்று வேலை
செய்யவெட்கப்படும் தங்கள் பிள்ளைகளுக்கு என்னைச்
சுட்டிக்காட்டுவாருமிருந்தனர்.

இந்நாட்களில்தான் சிங்க்ளேயர் ஐயர் நீர்ப்பு
எனக்குக் கிடைத்தது. ஐயர் அவர்களைப் பேட்டி

---

*அவருடைய இச்சொல் 1944ல் அப்படியே நிறை
வேறிற்று.

†மலைகளில் சென்று காய்ந்த விறகைப்பொறுக்கி
விற்றுப் பிழைத்து வந்த ஏராளமான மக்களை அன்று
வழிநெடுகக் காணலாம். அவர்களின் சுமைகளைத்
தாங்கி நின்ற சுமைதாங்கிக் கற்பாலங்கள் பல இன்று
இளைப்பாறுகின்றன. இன்றும் கன்னியாகுமரி மாவட்
டத்தில் விறகு பொறுக்கிப்பிழைக்கும் மக்கள் பலர்.

கண்ட மறுநாள் எனக்கு அஞ்சலில்* ஒரு செய்தி கிடைத்தது. அதில் எனக்குத் தபாலில் ஒரு ரெஜிஸ்ட்டர் கடிதம் வந்திருப்பதாகவும், அதைப் பெற்றவுடன் அதற்குள்ளடங்கிய விவரத்தைத் தமக்கு அறிவிக்கவேண்டுமென்றும், எனது மாமா மனோன்மணி அவர்கள் திருவனந்தபுரத்திலிருந்து எழுதியிருந்தார்கள். எனக்குத் தபாலில் ஒரு வருஷகாலமாய் எந்தக் கடிதமும் எங்கிருந்தும் வந்ததில்லை. நானும எவருக்கும் எழுதவில்லை. என்னிடம் எழுதக் காசு இருந்ததும் இல்லை. ஆகையால், ரெஜிஸ்ட்டர் கடிதம் என்றதும் எனக்கு வியப்பாகவே இருந்தது. அடுத்தநாள் இந்த அஞ்சல்கார்டை அடையாளமாகக் காட்டித் தபால் ஆபீசில் சென்று, அங்கிருந்தக் கடிதத்தைப் பெற்றுத் திறந்தேன்.

அக்கடிதம் பாம்பேயின் Cowasji Dinshaw & Co., 121, Queen Street என்ற முகவரியுடைய பாரசீகக் கம்பெனியார் அனுப்பியது. அக்கம்பெனியார் ஆப்பிரிக்காவில், டாங்கனிக்கா மாகாண அரசாங்க அலுவலகங்களில் வேலை பார்க்கச் செல்வோருக்கு வேண்டிய ஒழுங்குகள் யாவற்றையும் செய்து கொடுக்கும் பொறுப்பேற்றிருந்தனர். அவ்வெழுத்து, திருவனந்தபுரத்தில் எனது மாமா மேற்பார்வையில் அனுப்பப்பட்டிருந்தது. அக்கடிதத்தில், அங்குள்ள அரசாங்க நிதிநிலையத்தில் நான்காம் வகுப்புக் கிளார்க் வேலை எனக்கு அளித்திருப்பதாகக் குறிப்பிட்டிருந்தனர். அதில், எனக்கு மாதம் இருநூறு ஷில்லிங் சம்பளமும், நாற்பது ஷில்லிங் வீட்டு வாடகையும், என் வீட்டிலிருந்து அவ்வி

---

*அஞ்சல். இது அன்றைய திருவாங்கூர் மன்னரது ஆட்சி எல்லைக்குள் மாத்திரம் மிகச்சுருங்கிய செலவில் செய்திப்போக்கு வரத்துக்காக நிறுவப்பட்டிருந்த இலாகா. தற்காலப் புதுக்காசு ஒன்றரைக்குச் சரியான நாலு காசுக்குக் கார்டும், எட்டுக் காசுக்குக் கூடும் அன்று கிடைத்தன. 1952–ம் ஆண்டிற்கப்பால் இவ்விலாகா தபால் இலாகாவோடு இணைக்கப்பட்டது.

டம் வரையுள்ள ரெயில், கப்பல் இவற்றிற்கு இரண்டாம் வகுப்புக்கூலியும், முப்பத்திமூன்று மாதங்களுக்குப் பின் மூன்றுமாத விடுமுறையும், எழுநூற்று இருபது ஷில்லிங்வரை எட்டும சமபள நிரக்கும், பதினைந்து வருஷம் வேலை செய்தால் அரைப்பங்கு ஓய்வுகால ஊதியமும், மற்றும பல சலுகைகளும் விவரமாய்க் குறிக்கப்பட்டிருந்தன. அதை நான் ஏற்றுக்கொள்ள விரும்பினல், தேவையான உடல்நலச்சான்று இதழும், (Medical Certificate), துறைதாண்டிச் சீட்டும் (passport) கொண்டு செல்லக் கேட்கப்பட்டிருந்தேன்.

நானே வேலைக்கு எங்கும் மனுப்பண்ணியிருந்ததில்லை. ஆப்பிரிக்காவைப்பற்றி நான் நினைத்ததுமில்லை. சிங்க்ளேயர் ஐயரிடம் வீம்புகூறித் திரும்பியபடியே வேலைகிடைத்ததைக் கண்டு ஆச்சரியமும், நம்பிக்கையும், விசுவாசத்தில் உறுதியுங்கொண்டு, கடிதத்தை ஆண்டவர் பாதம் வைத்து, ஆண்டவர் சித்தப்படிச் செய்ய ஒப்புக்கொண்டேன்.

1918 ஆம் வருஷம் சாது சுந்தர்சிங் தென்னுடு வந்து திரும்பினர். அவரைப் பற்றிப் பல புத்தகங்கள் வெளியிடப்பட்டன. அந்நாட்களில் வேறு பல சாதுக்களும் சுயாதீனப் பிரசங்கிமாரும் அலைந்து திரிந்தபோதிலும், அவருக்கிருந்த மதிப்பை எவரும் பெற்றதில்லை. பல இளைஞருக்கு பக்தியில் அவர் ஒரு முன் மாதிரியாய் விளங்கினர். அவர் பெரிய செல்வந்தர் மகன். யாவற்றையும் விட்டுவிட்டு ஏழைக்கோலம் எடுத்தவர். என்னிடம் துறக்க எதுவுமில்லை. எனது மெட்றிக்குலேஷன் படிப்பும், பேசும் வரமும், உடல்நலமும், பிறப்பால் அடைந்த துணிச்சலுந் தவிர ஆண்டவருக்கெனக் கொடுக்க எதுவும் இருந்ததில்லை.

என் பெற்றோருக்கு நான் கடமைப்பட்டவன். அக்கடனைத் தீர்க்காமல் பிரசங்கியாய் அலைவதில் பயனில்லை என்று நன்கறிந்தேன். என்னிமித்தம் தேவ

ஏமம் பழிக்கப்படக் கூடாதே என்றும் மிகக் கவலைப் பட்டேன். ஆகையால் எனது ஜெபங்களில், ஆண்டவர் எனக்கு ஒரு நல்ல வேலையைக் காட்டினால் சிறிது காலம் வேலைசெய்து, ஊதியத்தைத் தகப்பனுருக்குக் கொடுத்துப் பின் வேலையை விட்டுவிட்டுப் பிரசங்கியாய்ச் சாட்சி கூற எண்ணி ஜெபித்ததின் பயனே இக்கடிதம் என்று திட்டமாய் நம்பினேன்.

இக்கடிதம் கிடைத்த வரலாறுவது: எனது மாமா நாகர்கோவிலில் படிக்கும்போது, அக்காலம் அவருடன் உயர்நிலைப்பள்ளியில் படித்த, சத்தியதாஸ் ஐசக் என்ற ஒரு பள்ளித்தோழன், இலங்கையில் தேயிலைத் தோட்டத்தில் தட்டெழுத்தாளராக பதினைந்து ஆண்டு உழைத்தபின், ஆப்பிரிக்காவுக்குச் சென்று அரசாங்க வேலையில் உயர்ந்தோர் எழுத்தராகப் பணியாற்றினர். அங்கு அக்காலம் அதிகாரிகள் யாவரும் ஐரோப்பியர் (either British or South Africans). எழுத்தர் வேலை செய்வோர் அனைவரும் இந்தியர் அல்லது இலங்கையர் போன்ற ஆசியாக் கண்டத்தவர். ஏவலாளர்கள் (peons) யாவரும் ஆப்பிரிக்கர். இந்தப்பொது விதிக்கு விலக்கு இல்லாமலில்லை. சத்தியதாஸ் என்பவர் இவ்வாறு உயர்தர எழுத்தராக, மாதம் 720 ஷிலிங் சம்பளத்தில் டாங்கனிக்கா (Tanganyika) நாட்டுத் தலைநகர் டாறஸலாம் (Dar-es-Salaam) என்னும் பட்டினத்தின் நிதி நிலையத்தில் அப்போது வேலைபார்த்து வந்தார். அவர் மூன்று மாத விடுமுறையில் தம்மூர் (மார்த்தாண்டம்) வந்து போன வேளையில், ஒருநாள் பயணிகள் மோட்டார் வண்டி ஒன்றில் என் மாமனுரைக் கண்டு, இருவரும் பண்டைக்காலக் கதைகளை உரையாடிச் சென்றனர்.

ஆப்பிரிக்காவில் அன்று வேலை கிடைப்பது எளிது என்று அறிந்த என் மாமனுர், தமக்கொரு சகோதரி மகன் வேலையின்றித் திரிவதாயும், எந்தவேலை செய்யவும், எங்கு செல்லவும் அஞ்சாக்குணம் படைத்தவன்

என்றும் என்னைப்பற்றிக் கூறவே, என் பெயரைமட்டும் அவர் குறித்துச் சென்றிருந்தார். இதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. எனது மாமாவும் மோட்டார் வண்டிப்பேச்சைப் பொருட்படுத்தி நினைவில் வைக்கவில்லை.

திரு. சத்தியதாஸ் வேலை செய்த அலுவலகத்தில் ஓரிடம காலியாகவே, அவர் எனது பேரால் மனுச் செய்து, அதை எனக்கென ஒதுக்கி, விலாசம் தெரியாததால் என் மாமன் மேற்பார்வையில், 'ஆர்டர்' அனுப்ப ஒழுங்கு செய்ததாலேயே இந்த அதிசயம் நடந்தது.

அதிசயம் என்பது அறியாமையின் ஒரு கனியே. அறிவுவளராத இளம் பருவத்தில் குழந்தைகளுக்கு எல்லாம் அதிசயமாய்த் தோன்றும். அறிவு உயர உயர அதிசயம் இயல்பாகிவிடும். எல்லாம் அறியும் கடவுளுக்குத் துவக்கமுதலே யாவும் இயல்பும் தெளிவும் ஆம். சிறிது தூரம் மட்டும் காணக்கூடிய இயல்புடைய மனிதர் கண்முன், கடவுள் வழி என்றும் அதிசயமே. இக்கடவுளின் விதியை நம்பி நடப்பதே விசுவாசமாம்.

இயேசு நாதர் ஆச்சரியப்பட்டதாக சுவிசேஷங்களில் இரு காரியங்களைக் குறித்து மட்டும் படிக்கிறோம். மனிதருடைய விசுவாசத்தைக் குறித்தும், அவிசுவாசத்தைக் குறித்தும் அவர் ஆச்சரியம் அடைகிறார் போலும்!

அன்று ரெஜிஸ்ட்டர் கடிதம் கையில் கிடைத்ததும் அத்துடன் திருவனந்தபுரம் நடந்து சென்றேன். இருபத்தெட்டு கல் தொலைவுள்ள அவ்வூருக்குப் பலமுறையும நடந்தே செல்லும பழக்கம் எனக்கு அன்றிருந்தது. மோட்டார் வண்டிகள பயணிகளுக்கென தினம ஒன்றிரண்டு ஓடின. காசில்லாத எனக்கோ காலே தஞ்சம். பலமுறையும் இத்தொலைவை நடந்

பழக்கமுடையவனாதலால் இத்தொலைக்கிடையில் இன்ன மைல், இன்ன பர்லாங்கில் என்ன இருக்கிறதென்று கேட்டால் திருவனந்தபுரத்துக்கும், நாகர்கோவிலுக்கும் இடைப்பட்ட நாற்பத்திரண்டு மைல் தூரத்திற்குள்ளதையும் குறிப்பாய்ச் சொல்லும் திட்டமான அறிவு எனக்கு இருந்தது. அதைப் பலவேளைகளிலும் நண்பருக்குப் பரீட்சித்துக் காட்டுவேன். இப்பழக்கம் தற்காலம் வேத வசனங்களை மனப்பாடம் செய்த முறையிலும் விளங்கிற்று எனலாம்.

---

## எலியாவின் காகம்

என் துன்பநாட்கள் முடிந்ததாக எண்ணினேன். இவ்வோராண்டில் உணவின்றி நான் வாடின நாட்கள் பல. வெட்கத்தால் என் குறைவை ஒருவருக்கும் சொன்னதில்லை. எலியாவைப் போஷித்த கடவுள் அக்காலங்களில் எல்லாம் ஆச்சரியமாய் என்னையும் போஷித்தேவந்தார். இரண்டொரு எடுத்துக்காட்டுகள்.

ஒரு நாள், மலையின்கீழ் என்ற ஒரு சிற்றூரில், ஞாயிறுகாலை ஆராதனை வேளையில் சென்று பின் கூடத்தில் அமர்ந்தேன். எனது மாமனார் என்னைத் தமது வேலை ஒன்றைச் செய்ய அனுப்பியிருந்தார். ஒரு நேர உணவுக்காக ஒரு சிறு வெள்ளித்துட்டும் (ஒரு பணம் = இரண்டரை அணா அல்லது பதினான்கு பைசே) கோயில் காணிக்கைக்காக அதே வடிவத்திலுள்ள ஒரு பைசா பெறுமான நான்கு காசுச் செம்புத்துட்டும் கொடுத்தார். ஆராதனை முடிந்தபின் பக்கத்தூரில் சென்று குறிக்கப்பட்ட வேலையைச் செய்து திரும்பவேண்டுமென்பது அவர் கட்டளை. காணிக்கை வாங்கப்படும் நேரம், நீண்ட கோலில் மாட்டப்பட்ட

பையொன்று என் முன் நீட்டப்படவே, நான் ஆத்திரமாய் எனது சட்டைப்பையில் கை போட்டு எடுக்கவும் வெள்ளிக்காசு கையில் கிடைத்தது. பை நீட்டப்பட்டபடியே என்முன் நிற்கக் கண்டு இனித் துட்டை மாற்றுவது தகுதியல்ல என்று எண்ணி, எனக்கென்று வைத்ததை ஆண்டவருக்கென்று கொடுத்துவிட்டேன். சாத்தான் என்னைப் பகடிபண்ணத் துவக்கிவிட்டான்!

ஆராதனை முடிந்ததும் சபை ஊழியர் ஒரு புதிய ஆள் ஆராதனைக்கு வந்திருக்கக் கண்டு, என்னை வினவி நான் சாட்சி கூறித்திரியும் ஒரு வாலிபன் என்று அறிந்து, ஒரு வேதபாடக் கூட்டத்தில் என்னைப் பேசச் சொன்னார். நான் அதற்கிணங்கவே, கூட்டம் முடியவும் நல்ல மரச்சீனிக் கிழங்கை வேகவைத்துப் பகல் உணவு அளித்து, மாலை ஆராதனையிலும் நான் பிரசங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதற்கும் இணங்கவே, மாலையிலும் தேநீர் அருந்தச் செய்து என்னை வழியனுப்பினார். பின் நான் குறிப்பிட்ட வேலையை முடித்துத் திருவனந்தபுரம் திரும்பினேன்.

இன்னொரு நாள் இரவு ஆராதனை ஒன்றில் பிரசங்கம் செய்துவிட்டு அவ்வூர்க் கோவிலுள்ளேயே உணவருந்தாமல் படுத்து நித்திரை செய்தேன். பக்கத்திலுள்ள ஒரு ஏழைக் கிறிஸ்தவர் இரவு ஒரு கனாக் கண்டு, நான் உணவின்றி ஆலயத்தில் படுத்திருப்பதாக யாரோ தனக்குச் சொன்னதாகக் கேட்டு உடனே விளக்குடன் வந்து, தூங்கிக்கொண்டிருந்த என்னை ஒன்றும் கேளாமலே எழுப்பி அழைத்துச் சென்று உணவளித்தபின் தனது கனவைக் கூறினார்.

வேலை கிடைத்ததால், ஆப்பிரிக்கா போகவேண்டி, துறைதாண்டிச் சீட்டுத் தேடலானேன். பல அலுவலகங்களுக்கும் நாடோறும் நடந்து திரிந்து அலைந்ததின் பயனால், இருத்தெட்டாம நாள் அது எனக்குக் கிடைத்

தது. உடனே நான் வர ஆயத்தமாயிருக்கிறேன் என்று பாம்பேக்குக் கடிதம் எழுதிக் கப்பல் புறப்படும நாளுக்காகக் காத்திருந்தேன்.

1925 மார்ச் 24-ம் தேதி பாம்பேயிலிருந்து எனக்கொரு கடிதம் வந்தது. அதில் நான் 27-ம் தேதி அங்கு இருக்கவேண்டுமென்று எழுதப்பட்டிருந்தது. அக்காலம் திருவனந்தபுரத்திலிருந்து சென்னைக்குச் செல்ல 36 மணி நேரம் பிடிக்கும். ஆகவே 25-ம் தேதி புறப்பட்டாலும், 27 காலைதான் சென்னைக்கு எட்டக் கூடும். ஆகையால் உடனேயே, பாம்பேக்கு "27-ம் தேதி வர இயலாது; வந்து சேரவேண்டிய கடைசி நாளைக் குறிப்பிடவும்" (27th too early, wire latest date) எனத் தந்தி கொடுத்தேன். பின் தோட்டவாரத்திற்கு நடந்து சென்று என் நண்பர்களைக் கூட்டி ஆலயத்தில் இரவு இரண்டு மணி மட்டும் இறைவனைத் துதித்து ஜெபத்தில் தரித்திருந்தோம். என் மூலம் புதிய வெளிச்சமடைந்த ஆறு வாலிபர் அங்கிருந்தனர். "நான் போவது பணம்தேட அல்ல. சிலகாலம் தங்கி, பின் உயர் ஊதியம் வேண்டாமெனத் தள்ளும் ஒறுப்பு மனம் எனக்குண்டு என்று காட்டவும், அதின் மூலம் சுவிசேஷ ஊழியம் செய்ய வாய்ப்படையவும் சிறிது பணம் தேடி என் தகப்பனுருக்குக் கொடுத்துவிட்டுப் பின் ஊழியத்தில் இறங்கவுமே," என நண்பருக்கு எனது திட்டத்தைக் கூறினேன். இருபத்தாறும் தேதி காலை திருவனந்தபுரத்துக்கு எனது ஒரே சிறிய பெட்டியுடன் புறப்பட்டேன். நண்பர் சிலர் எனது கழுத்தைக் கட்டி அழுது வழியனுப்பினர். கால்நடையாக அன்று மாலையில் திருவனந்தபுரம் சென்று சேர்ந்தேன். அங்கு எனக்கு ஒரு தந்தி காத்திருந்தது. அதில் "இருபத்தேழாம் தேதியே கடைசிநாள், தவறினால் வேலையில்லை" (27th latest, failing forfeit appoitment) என்றிருந்தது.

இந்த ஏமாற்றத்தை எப்படித் தாங்குவேன் என்று எல்லாரும் திகைத்தனர். நானோ மேல் வீட்டில் சென்று,

என்று அவர் பாதம் சரண அடைந்தேன். அது எனது பொறுமைக்கு ஒரு சோதனை போலும். உலகம் சிரிக்குமே என்ற எண்ணம் ஒரு பக்கம். என்ன செய்வேன் என்ற கலக்கம் மறுபக்கம். கட்டின மனக்கோட்டை இடிந்ததே என்ற தயக்கம். எல்லாம் நன்மையாக மாறும் என்ற நம்பிக்கை, திசைதெரியாது அலைந்து திரிந்த கப்பலாகிய என்னை அன்று நங்கூரம் போல் காத்தது, (எபி. 6:19). என் காரியங்களை அவரிடம் ஒப்படைத்தபின் மன மகிழ்ச்சியோடேயே கீழிறங்கி வந்தேன். என் முகத்தைக் கண்ட என் பாட்டியும் மாமாவும் ஆச்சரியப்பட்டார்கள். காத்திருப்பதின் அந்தரங்கத்தை அறிந்தவர் கலங்குவாரோ? இவ்வனுபவத்தையே பிற்காலத்தில் நான் எனது "மூசிப்பாற்றும் கீதத்தில்"* எழுதியிருக்கிறேன். அது என் போன்று உள்ளம் நொந்த பலருக்கு மூசிப்பாறுதலை அளித்திருக்கிறது. அதிலுள்ள ஒரு கவியை இங்கு எழுதுகிறேன்.

காம்போதி இராகம் ஆதிதாளம்

**பல்லவி**

நெஞ்சமே என் வீணாய்ச் சஞ்சலம் கொள்கின்றாய்—
தஞ்சம் இல்லா இந்தத் தாரணி மீதினில் . .

**அனுபல்லவி**

அஞ்சேல் உனை விடேன் நெஞ்சம் பதறாதே
என்றோதும் நம் தெய்வம் உன்முன்னிருக்கையில்—நெஞ்

**சரணம்**

காத்திருப்போரெல்லாம் கழுகைப்போல் புதுப்பெலன்
கண்டு மகிழுவர் என்றது பொய்யாமோ,
ஆத்திரமாகாதே ஆண்டவர் வேளைகள்
காத்திருப்போர் அல்லால் யாரும் அறிந்திடார்.— நெஞ்

---

*1929—33 க்குள் இந்நூல் எட்டுப் பதிப்புக்கள் வெளிவந்தன.

பாம்பே பயணத்தை நிறுத்தினேன். அக்காலத்தில் மீண்டும் ஆப்பிரிக்காவுக்கும், பாம்பேக்கும் பல எழுத்துக்களும் தந்திகளும் அனுப்பினேன். அவற்றின் பயனாக S. S. கண்டாலா என்ற வேறொரு கப்பல் பாம்பேயிலிருந்து ஏப்ரல் மாதம் புறப்படுமென்றும், அதில் நான் செல்லலாம எனவும், முன்கூட்டியே எனக்கு அறிவிப்புக் கிடைத்தது. நான் காத்திருந்தது வீணாகவில்லை.

அந்நாட்களில் முதன்முதலாக இரு கால்ச்சட்டைகளும், ஒரு ஜோடிச் சப்பாத்தும் வாங்கி, அவற்றை மாட்டி நடக்கப் பழகிக் கொண்டேன். அதற்கு முன்னால் ஒரு காலும் செருப்புக்கூட நான் அணிந்ததில்லை. இவற்றிற்குப் பிறகு நான் உண்மையாகவே புறப்பட்டேன். புகைவண்டியில் தஞ்சாவூர் மட்டும் இதற்கு முன் சென்றிருந்த பழக்கத்தால் தைரியத்துடனேயே புறப்பட்டேன்.

இரண்டாம் முறையாக வீட்டை விட்டு பாம்பே செல்ல, திருவனந்தபுரத்துக்கு நடந்து போகையில், நெய்யாற்றின்கரையில் இரு வாலிப வழிப்போக்கர் என்னோடு சேர்ந்தனர். அவர்களில் ஒருவன் உத்தியோகத்துக்குப் போக ஆயத்தமாக இரு வெள்ளைக் கால்சட்டைகளைத் தைத்து வைத்திருந்தான். அவ்வேலை அவனுக்குக் கிடையாமற் போகவே, அவை பயனற்றவையாயின. அவனிடம் என் வரலாற்றைக் கூறி, அவற்றை நான் வாங்கிக் கொண்டேன். அவற்றின் விலை மூன்று ரூபாய் மட்டும்.

பாம்பேக்குப் பயணச்சீட்டு வாங்கின பின் வழிச்செலவுக்காக என் மாமனார் கடனாகத் தந்த ஐம்பத்தைந்து ரூபாயில் பத்து ரூபாய் மட்டும் வைத்திருந்தேன். டிக்கட் செங்கல்பட்டு—அரக்கோணமார்க்கம் என்றிருந்தபடியால் மூன்றும் நாள் காலை எட்டு மணிக்கு அரக்கோணத்தில் இறங்கவும், பம்பாய் போகும் வண்டிகள் இரவு ஒன்பது மணிக்குத்தான் சென்னையை

விட்டு வெளியேறும் என்று கண்டு, பகல் வேலை முழுவதும் வீணாய்ப் போவதால் சென்னை சென்று பட்டணத்தையும் பார்த்து விடலாம் என்று சென்னைக்குப் புறப்பட்டேன். சென்னையில் எனக்குச் சமார் நாலு மணிநேரம் இருந்த படியால் தெருத் தெருவாய்க் கால் நடையாய் அங்குமிங்கும் நடந்து, கடைகள், அலுவலகங்கள், ஒய்.எம்.ஸி.ஏ., உயர் நீதிமன்றம் (High Court) முதலிய இடங்களைப் பார்வையிட்டு, கடிதம்மூலம் சற்றுப் பழக்கமிருந்த N.M.S. செக்ரட்டரி மிர். A. சாலோமோன் வீட்டையும் கண்டு பிடித்து என் கதைகளை அவருக்குச் சொல்லிவிட்டு, இரவில் பாம்பே மெயில் வண்டி ஏறினேன். சென்னை ஒய்.எம்.ஸி.ஏ. புத்தகக் கடையில், 'ஜெபத்தின் பொருள்' 'ஊழியத்தின் பொருள்', என்ற இரு ஆங்கில நூல்களை வாங்கி விட்டபடியால், சென்னையை விடுகையில் என்னிடம் இரண்டு ரூபாய் ஆறு அணாதான் இருந்தது.

அக்காலப் பெட்டிகளில் நான்கு நீண்ட இருக்கைகள் மாத்திரமே. அவை முதுகோடு முதுகு தொடக்கூடிய முறையில் நடுவில் இரண்டும், முகத்துக்கு முகம் பார்க்கும் வண்ணம் இரு பக்கங்களிலும் இரண்டுமாக அமைக்கப்பட்டிருந்தன. நான் வசதிக்காக முன்கூட்டியே சென்று, பின் பக்கமாகவும் ஓரமாகவும் சாய்ந்திருக்கக்கூடிய மூலையைத் தெரிந்து அதில் அமர்ந்தேன். தமிழையும், மலையாளத்தையும் தவிர வேறு இந்திய மொழிகள் அன்று எனக்குத் தெரியாது. இருந்தும், சாய்ந்தும், மடங்கிப் படுத்தும் ஓர் இரவு தாண்டிற்று. மறுநாட் காலை குண்டக்கல் என்ற ஊரில் வண்டி அரை மணி நேரம் நின்றது. பயணிகள் காலை உணவு அருந்தினர். நான் இரண்டு ரூபாய் ஆறு அணாவைச் செலவு செய்ய மனமற்று ஒரு அணாவிற்கு வாழைப்பழம் மட்டும் வாங்கித் தின்றேன். தமிழோ, ஆங்கிலமோ பேசக் கூடிய பயணிகள் எவருமே வண்டிக்குள் இல்லை

வேதாகமத்தைப் படிக்கையில் (2 தீமோ. 3:11) 'எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன்; இவை எல்லாவற்றிலும் நின்று கர்த்தர் என்னை நீங்கலாக்கி விட்டார்' என்ற வாக்கியத்தைக் கண்டு அடையாளப்படுத்தி அதின்மேல் தியானம் செய்து மகிழ்ந்தேன். பகல் செல்லச்செல்ல பசியும் மிகுந்தது. ஏறுவாரும் இறங்குவாரும் பலர். சிலர் மாத்திரமே நெடுந்தொலை போவோர். வண்டி, சுமார் பதினெட்டு மைலுக்கொருமுறை சிறிய ஸ்டேஷன்களிலும் நின்று நின்றே சென்றது. வண்டிக்குள்ளிருப்பவர்களுடன் பழக முயன்ற செய்கையால் மட்டுமே கருத்தறிவித்தேன்.

அதே வண்டியில் ஒரு தலைப்பாகையுடன், காதிலிருந்து மேல்மட்டும் பொற்சங்கிலி அணிந்த ஒருவரும், அவருடைய சிறு மகளும் பயணம் செய்துகொண்டிருந்தனர். அவர் ஒரு வட இந்திய மார்வாடி. சிறுபெண் பன்னிரண்டு வயதுக்குட்பட்டவள். தலையில் முக்காடிட்டு தனக்குப் பின்னாக மறுபக்கம் சாய்ந்துகொண்டிருந்தாள். தகப்பன் வண்டி நிற்கும் இடங்களிலெல்லாம் இறங்கி, கண்ட தின்பண்டங்களையெல்லாம் வாங்கி அவள் முன் குவித்து, அவள் மறுத்த போதிலும் கோபித்துத் திணிக்க முயன்றான். நெடுநேரஞ் சென்றபின் அந்தச் சிறு பிள்ளையின் முகத்தை ஒரு முறை நான் காண நேரிட்டது. அவள் தகப்பன் தொல்லை தாங்காமல், பண்டங்களைத் தின்று முடிக்கவும் முடியாமல் தயங்கி, மிகுந்த கலக்கத்துடன் ஒருமுறை முக்காட்டை மாற்றி என்னைப் பரிதாபமாய்ப் பார்த்தாள். யாரும் காணாத நேரத்தில் செய்கை மூலமும் எங்கே, என்ன என்று அர்த்தங் கொள்ளும் இந்திச் சொற்கள் மூலமும், அவள் பாம்பே போகிறுளென்றும், தாய் இல்லையென்றும் அறிந்துகொண்டேன்.

அதற்குப் பின் தகப்பன் கீழிறங்கினவுடன் அவள் தன்பண்டங்களில் சிலவற்றைச் சட்டென மாற்றி என்முன் வைத்து, தயவுசெய்து சாப்பிடுங்கள் என்றுற்

போல தனது மொழியில் கூறிச் செய்கை மூலம் கெஞ்சினாள். இது எலியாவின் காகமே என்று அறிந்து ஆண்டவருக்கு நன்றி செலுத்தி, தந்ததையெல்லாம் உண்டு பசி நீங்கிச் சென்றேன். பம்பாய் சேருமட்டும் அவளே என்னைப் போஷித்தாள். படபடவென்று தன் கதையையெல்லாம் தனித்த ஜோத்தில் சொல்லுவாள். நான் 'உம்' கொட்டினதே தவிர, மொழி தெரியாவிட்டாலும் அக்குழந்தையை சந்தோஷப்படுத்த விரும்பி, அவள் கதையைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டே சென்றேன். கதை கேட்கக் கூலி கொடுத்தது போல் எனக்கு உணவளித்த அச்சிறு பெண்ணை கடந்த நாற்பது ஆண்டுகளில் பலவேளைகளிலும் நான் நினைத்ததுண்டு. மறுமையில் யாரைக் காண விரும்புவாய் என்று கேட்போருக்குச் சிலவேளைகளில் நான் 'அச் சிறுபெண்ணை' என்று கூறும் போது பல நண்பர்கள் ஆச்சரியப்படுவார்கள். மூன்றும் நாள் காலை பம்பாய் சேரவே, டாடர் என்ற இடத்தில் அவள் இறங்கிச் செல்கையில் கடைசியாய் ஒருமுறை முகங்காட்டை மாற்றி 'மெத்த உபகாரம் ஐயா' என்பது போல் புன்னகை செய்து மறைந்தாள். கரும்பு தின்னக் கூலியா என்று நினைத்து நானும் 'விக்டோரியா டெர்மினஸ்' அடைந்தேன்.

ஆங்கிலம் அறியாத வண்டிக்காரருடன் ஒருவாறு பேசி, ஒரு ஹோட்டலில் சென்று கூலி பேசி, நாள் ஒன்றுக்கு ஒரு அறைக்கு ஒரு ரூபாய் விட்டு அறையெனப் பொருத்தி, தகரப் பெட்டியையும், தோற்பையையும் அங்கு வைத்துவிட்டு, பின் நெதர்லான்ட்ஸ் பாங்கில் வேலை செய்த திரு. பத்ரோஸ் ஐசக் என்பவரைக் கண்டு, அன்று மாலை முதல் அவருடன் சென்று தங்கினேன். அவர் எனக்கு வேலை கிடைக்கக் காரணமாயிருந்த திரு. சத்தியதாஸ் ஐசக் என்பவரின் தம்பி. எனக்குக் கடிதமெழுதிய கம்பனிக்கு மறுநாள் சென்று பாஸ்போர்ட் போன்றவற்றைக் காட்டி கப்பற் பயணச் சீட்டைப் பெற்று முன்பணமாக ரூபாய் 25 ம் வாங்கிக் கொண்டேன்.

# கப்பல் பயணம்

ஐந்து நாட்களுக்குப் பின்தான் கப்பல் புறப் பட்டது. கப்பலை அதற்கு முன் படத்தில்தான் பார்த் திருந்தேன். இரண்டாம் வகுப்புச் சீட்டுஉணவுடனு உணவில்லாமலா (with or without food) வேண்டு மெனக் கேட்டிருந்தனர். எட்டு நாட்கள் உணவில் லாமல் எப்படிக் கப்பலில் தங்கக்கூடும் என்று எண்ணி உணவுடன் என்று நான் பதில் கொடுத்தேன். கப்பலில் ஏறின பின் தான் அங்கு இந்திய 'ஓட்டல்கள்' இருப் பதைக் கண்டு கொண்டேன். உணவுடன் கேட்ட வர்களுக்கு ஐரோப்பிய உணவு ஒழுங்காக்கப் பட்டி ருந்தது. சில ஐரோப்பியரும், பல போர்த்துக்கீசிய கோவா ஊராரும், இந்தியனாய் நான் ஒருவனுமாக முப்பத்திரண்டு பேர் மட்டும்தான் 'உணவுடன் சீட்டு' வாங்கியிருந்தோம். 'கண்டாலா' என்னும் அந்தக் கப்ப லில் ஆயிரத்து முன்னூற்று எழுபதுபேர் பயணஞ் செய்தனர்.

கப்பல் கரையை விட்டகலும்போது நண்பர்கள் பலர் தங்களன்பர்களை வழியனுப்பக் கையசைத்து, துணி களை வீசி, வாழ்த்தி அனுப்பினர். நானோ தனித்து நின்றேன். இனித் திரும்பி இந்தியா வருவேனோ என் னும் பயம் ஒரு பக்கம் எழ, நண்பர் யாரும் எனக் கில்லையே என மறுபக்கம் நினைக்க, என் கண்கள் நீரால் நிறைந்தன.

"போதகப் பிதாவுமென் போக்கினில் வரத்தினில், ஆதரவு செய்திடும் கூட்டாளியும் என் தோழனும், எல்லாம் இயேசுவே" என்னும் கவியைப் பாடி ஆறுத லடைந்தேன். கரை தெரியுமட்டும் கரையையே நோக்கி நின்று பின் அறைக்குள் சென்றேன்.

எனது அறையில் நான்கு கட்டில்கள் இருந்தன இரண்டு மேல், இரண்டு கீழ். கீழ்ப்பக்கக் கட்டில்

ஒன்று எனக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மற்ற மூன்றிலும் மூன்று கோவாக்காரர்கள் பல பெட்டி, மூட்டை முடிச்சுகளுடன் வந்தேறினர். பிற்பகல் நாலு மணிக்கு மணி அடித்தது. முப்பத்திரண்டு பேரும் தேயிலைப் பானம் அருந்த மேசையில் கூடினோம். யாவரும் என்னைச் சற்று வேடிக்கையாகவே பார்த்தனர். நான் ஒருவனே கறுப்பு நிறமுடையோன். கரண்டி, முள், கத்தி முதலிய ஆயுதங்களை அதற்கு முன் நான் கையாடிப் பழக்கமில்லாதவனாகையால், சற்றுத் திகைத்த போதிலும், என் அறிவீனத்தை வெளியே காட்ட மனமற்று, மிகுந்த கவனத்தோடு ஓர் உணவு வேளையைத் தாண்டினேன்.

இரவு மணி அடித்தது. யாவரும் கறுத்த சட்டைகளுடனும் 'போ-டை' களுடனும் (bow-tie) வந்தமர்ந்தனர். எனக்கு ஒரே (suit) சூட்தான் இருந்தது. அதையே அணிந்து வந்தமர்ந்தேன். விதம் விதமான பொருட்கள் வைக்கப்பட்டிருந்ததால், எதை, எப்படி உண்ணவேண்டுமென்று அறியாமல் திகைத்தேன். ஆயினும் ஓர் உபாயம் செய்தேன்.

எனக்கு அன்றிரவு ஒன்றும் வேண்டாமென மறுத்து, வெறும் காப்பி போதும் என்றேன். கிடைத்த காப்பியை அரைமணிநேரமாய்க் குடித்தேன். அச்சமயம் பிறர் கத்தி, முள், கரண்டி பிடிக்கும் முறைகளைக் கவனித்துப் படித்தேன். யாரும் கவனியாத வண்ணம் அதைச் செய்தேன். ஆகவே அன்றிரவு பட்டினி. எப்போது விடியும் என்று காத்திருந்தேன். மறுநாள் முதல் மற்றவர்களைப்போலவே, அவர்களைப் பார்க்கிலும் அதிகமாய், கொடுத்த யாவற்றையும் உண்ணக்கூடியவனானேன்.

உணவருந்துமுன், ஒழுங்காக அறைக்குள் நண்பர்கள் கூடிச் சாராயங் குடித்தபின், மேசைக்குப் போவார்கள், எனக்கும் கொடுக்க முயன்றனர். நான் 'நோ, தாங்ஸ்' சொல்லித் தப்பித்துக் கொள்கையில் 'பார்ப்

ரம். ஆப்பிரிக்கா நாமே போகிலும், அங்கு வந்த ன் இதெல்லாம் இல்லாது' என்று கேலி செய்தனர்.

அறையில் மின்சார விளக்கு ஒளிவதற்கு ஒரு பொத் தானும், விளக்கெரிய இன்னொன்றும் இருந்தன. பக் கத்தில் இருந்த வேறொரு பட்டன் எதற்கென்று எனக்குத் தெரியவில்லை. குடிகார நண்பர் பலவேளை அதை அழுத்துவதைக் கவனித்த நான், அது இன்ன தென்று அறியாமல், தனித்திருக்கையில் அதை அழுத் திப் பார்த்தேன். விளக்கெரியவோ விசிறி ஓடவோ செய்யவில்லை. பலமாய் அழுத்தினேன். சிறிது நேரத் திற்குள் ஒரு கப்பற்சேவகன் ஆத்திரமாய் வந்து, கத வைத் தட்டி "என், என்ன வேண்டும்? தொட்டால் போதுமே; ஏன் இப்படிப் பலமாய் மணி அடிக்கிறாய்" என்று கோபத்துடன் முழங்கியபோதுதான் அது அழைக்கும் மணி (calling bell) என்று அறிந்து கொண்டேன். மதியீனத்தினிமித்தம் வெட்கப்பட்ட போதிலும் அதை மறைத்து 'சோடா' கேட்டு வாங் கி குடித்துக் கொண்டேன். நண்பர்கள் குடிக்கும் தெல்லாம் இதைப்போல வருவித்தனர் என்பதை அப் போது அறிந்து கொண்டேன்.

நான்காம்நாள் காலை பத்து மணிக்குக் கப்பல் சேஷெல்ஸ் என்ற பிரெஞ்சுத் தீவில் நங்கூரமிட் டு. நீளமான தேங்காய்கள் காய்க்கும் தென்னை களை அங்கு நான் கண்டேன். பிச்சைக்காரர் நாட்டில் வைத்திருக்கும் நீண்ட கறுத்த பாத்திரம் அத்தேங்காயின் சிரட்டைதானென்பர்.

எட்டாம் நாள் மாலை ஐந்து மணிக்கு, கப்பல் சான்சிபார் (Zonzibar) என்னும் தீவில் நங்கூரமிட் டது. அது ஆப்பிரிக்காவினின்று நாற்பது மைல் தொலையில் உள்ளது. கரையிலிறங்கவே எங்கும் ம் நறுமணம் வீசிற்று. கிராம்பு மரம் வளரும் தீவு து. அத்தீவின் வருவாயில் பெரும பகுதியும் இந்தக் கிராம்பினின்றே கிடைத்தது. துறைமுகத்தில் அது

குவியல் குவியலாய்க் காணப்பட்டது. அது கிடைக்கும் மரம் பதினைந்து முழ உயரமுடையது. தற்போது சோளத்திலும் ஆங்காங்கே அது வளர்க்கப்படுகிறது.

'கம்பாலா' என்னும் கப்பல் தெற்கே போகையில், டார்-எஸ்-சாலாம் (Dar-es-Salaam) துறையைத் தொடுவதில்லை. ஆகையால் அங்கு செல்லவேண்டிய பயணிகள் இத்தீவில் இறங்கி, அங்கிருந்து வாரமொரு முறை மட்டும் செல்லும் ஒரு சிறிய கப்பலில் பயணம் செய்வார்கள். ஆகையால் எனக்கு இத்தீவில் ஆறு நாட்கள் தங்க வேண்டியதிருந்தது. மொழி அறியாத அத்தீவில் இரவு ஏழு மணிக்கு இறங்கி "ஹோட்டல், ஹோட்டல்" என்று மட்டும் கூவி, ஒரு ஆள் இழுக்கும் வண்டியில் (ரிக்ஷா) சத்திரம் ஒன்றை அடைந்தேன். அங்கு இரவு ஒரு மெழுகு வர்த்தி கொடுக்கப்பட்டது. நெல் குவித்த இடத்தில் தூசி வாடையடித்த வண்ணம் ஒரு வாடையும், ஏராளமான கொசுக்களும், சிறிது மனப்பயமும் அவ்விரவு எனது துணைகள். மறுநாட் காலை ஊரைச் சுற்றிப் பார்க்கவே, இந்தியப் பயணிகள் வாடகை கொடாமலே சில நாட்கள் தங்கக் கூடிய குஜராத்தியர் கட்டிய ஒரு தர்மச் சத்திரத்தைக் கண்டு, மீதிய ஐந்து நாட்களும் அங்கு தங்கினேன். செலவைக் குறைக்க எண்ணி, 'ஸ்டவ்' ஒன்று வாங்கி, நானே சமையல் செய்து சாப்பிட்டேன்.

அந்நாட்களில் எனது கடைவாயில் ஒரு பல் முளைத்தது. அது வெளிவருகையில் வாய் நோவெடுத்து முகம் வீங்கிற்று. ஒரு மாலை அப்பட்டணத்தில் ஒரு ஜப்பானியப் பல் வைத்தியரிடம் சென்று அப்பல்லை மூடிய ஊனை கிளறிவிடச் சொன்னேன். அவருடைய பத்தினி கால்ச்சட்டை (பைஜாமா) அணிந்து நின்று அவருக்கு உதவி செய்தாள். அவ்வுடை அன்று எனக்கு மிகவும் புதுமையாய்த் தோன்றிற்று. அந்த அம்மாள் மின் விளக்கை என் வாய்க்குள் காட்டி நிற்க, டாக்டர் ஊசிமருந்தேற்றிச் சதையை அறுத்தார். நான்

இருக்கையிலேயே மயங்கி விட்டேன். புதிய ஊர்; ஊரின் வாடை, அறியாத முகங்கள் இவை யாவும் சேர்ந்து அம்மயக்கத்தைக் கொடுத்தன. மயக்கம் தொடங்கவும் என் உயிர் பிரிவதாகவே நான் நினைத்தேன். மனதின் தன்மையை என்னவென்று சொல்வது? அன்றுதான் பயத்தால் மக்கள் மடிந்து போகவும் கூடும் என்று நான் அறிந்தேன்.

இத்தீவில் முதல் முதல் போரூஸ் (Boras) என்றும், கோஜா (Kwaja) என்றும் அழைக்கப்படும் முஸ்லிம் வகுப்பினரைக் கண்டேன். அவ்வகுப்புப் பெண்களின் தோற்றத்தையும், உடையையும் கண்டு உலகில் நான் கண்ட எவரிலும் மிக்க அழகுப் பொருந்தியவர் இவர்களே என்று நினைத்தேன். முதல் முறை இவர் கள் மனிதர்தானா என்றும் கூட ஐயமெழுந்தது. ஆகாக்கானைத் (Agakhan) தலைவராகக் கொண்ட கூட்டத்தார் இவர்கள். அது கனவுலகம் போலவே அன்று எனக்குத் தோன்றிற்று.

கப்பல் டாறஸலாம் துறைமுகத்தில் மே மாதம் நங்கூரமிட்டது. அந்த ஊர்ப் பெயருக்கு அமைதியின் துறைமுகம் எனப் பொருள். ஆழமான ஒரு பெரிய ஏரிக்குள் சிறு கால்வாய் வழியாகக் கடல் நீரைக் கொண்டு சென்றாற்போல் அது தோன்றும். 1914 ல் முதல் உலக யுத்தம் தொடங்கினபோது ஜார்மானியர் அந்தக் கால்வாயில் ட்றெஸ்டன் (Dresden) என்ற தங்கள் கப்பல் ஒன்றைத் தாங்களே அமிழ்த்தி ஆங்கிலேயக் கப்பல் இததுறைமுகத்தில் நுழையாதபடி அவற்றைத் தடுத்தனர். ஆயினும் அக்கப்பல்கள் உட்புகுந்து பட்டணத்தையும் நாட்டையும் கைப்பற்றின. உள்நாட்டுத் துறைமுகம்போல் இருந்ததால் அங்கிருப்பவருக்குக் கடல் தென்படாது. மூன்று பக்கமும் அடங்கிய தென்னஞ் சோலைகளும் ஒரு பக்கம் பட்டணத்தின் அலுவலகங்களும் காட்சியளித்தன.

# ஆப்பிரிக்காவில்

நான் சென்ற அன்று இரவு, இந்திய நண்பர் பலர் என்னைப் பார்க்க வந்தனர். ஏறக்குறைய யாவரும் மதுவருந்தும் பழக்கமுடையோர். விருந்தளித்து என்னை வரவேற்கையில், மேனாட்டு உயர்ந்த மது வகைகள் பரிமாறப்பட்டன. அங்கும் சிக்கனமாய் வாழ்ந்த பல இந்தியர் இருந்தனர். தங்கள் காசைச் செலவு செய்யாமல் இலவச மதுவருந்துவோர், ஆடம்பரமாகச் செலவு செய்வோர், மிதமாய்க் குடிப்போர், புசிப்போம் குடிப்போம என்ற பிரமாணத்தைக் கடைப்பிடித்தோர், முதலிய பற்பல விதமான இந்திய அலுவற்காரர் அங்கு வாழ்ந்து வந்தனர். விருந்தாளியாய்ச் சென்ற நான் மதுவை ஏற்க மறுத்தது அன்று யாவருக்கும் சிறிது வெட்கமாகவே தோன்றிற்று.

நான் தங்கியிருந்த வீட்டில் ஒரு பிராமண வாலிபனும், எனக்கு வேலையெடுத்துக் கொடுத்த நண்பரும் தங்கியிருந்தனர். ஒருவர் கலியாணமாகாதவர். மற்றவர் நாற்பது வயதுக்கு மேற்பட்டவர். அவருடைய மனைவி மக்கள் இந்தியாவிலேயே இருந்தனர். பணம் தேட முயன்றோர் தனியாகவே சிக்கனமாய் வாழ்ந்தனர். சில இந்தியர் மட்டுமே குடும்பத்துடன் அங்கு தங்கினர். பெரும்பாலோருடைய வாழ்க்கையில் ஒழுக்கம் குறைந்தே காணப்பட்டது. ஐரோப்பியரும் குடித்து வெறித்து ஆடம்பர வாழ்க்கை நடத்தினர். அங்கு ஒரு லூதரன் ஆலயம் இருந்தது. 1918 ல் யுத்தம் முடிந்தபின் அது ஆங்கிளிக்கன் ஆலயமாயிற்று. அங்கே நான் பலவேளைகளில் தனித்து ஜெபிக்கச் செல்வேன். இரண்டொரு மாலை ஆராதனைக்கும் சென்றேன். ஆனால் கறுப்பு நிறமுடையோர் அங்கு ஏற்றுக்கொள்ளப்படாதபடியால் அதைப் பின்பு நிறுத்திவிட்டேன்.

அலுவலக வேலையிலும் சோதனைகள் பல இருந்தன. நான் வேலைசெய்த அரசாங்க நிதி நிலையத்தில்

பணம் கிடைக்கவேண்டிய கம்பெனியார், கண்டிராக்டர்மார் தங்களுக்குரிய 'பில்' பாசாகிவிட்டதாவென்று அறிய வருகையில், நான் அவர்களுக்கு 'உண்டு, இல்லை' என்று கூறி அனுப்புவேன். ஒருமுறை வந்த வியாபாரியிடம் (இந்தியன்) இல்லை என்று சொல்லியும் நம்பாமல், நன்ருய்த் தேடிப்பாருங்கள் என்று நூறு ஷில்லிங் நோட்டு ஒன்றை என் கையில் திணிக்க முயன்ருர். காலதாமதம் செய்து, லஞ்சம் வாங்கியபின் பில்களைக் கொடுப்பது எனக்கு முந்தி அங்கு வேலை செய்தவருடைய பழக்கமாயிருந்தது போலும். பணம் வாங்காமலே பில் கொடுக்கும் ஒரு இந்தியன் வந்திருக்கிருன் என்று வியாபாரிகளுக்குத் தெரிய வரவே, என் உடன் ஊழியர் எனக்கு "டாறஸலாம் ஸெயின்ட்" என்னும் கேலிப்பட்டமும் சூட்டினர்.

மனிதரைக் கொல்லும் சிங்கங்கள் அந்த நாட்டில் உண்டு. ஒருமுறை பட்டணத்திற்குள் வந்து ஒருவனை ஒரு சிங்கம் பீறிவிட்டது. பன்னிரண்டடி உயரமான யானைகளும் அங்குண்டு. பிரபல மிஷனரி டேவிட் லிவிங்ஸ்டன் இறங்கிய துறைமுகம் இதுதான். நாங்கள் தங்கியிருந்த தெருவிற்கு லிவிங்ஸ்டன் தெரு என்றே பெயர்.

நாங்கள் மான்போன்ற மிருகங்களை வேட்டையாட விடுமுறைகளில் செல்வோம். கின்னிக் கோழிகளும், வரிக்குதிரைகளும் அங்குள்ள காடுகளில் வாழ்கின்றன. ஒரு கோழியைக் கண்டால், மேலும் பதினைட்டுக் கோழிகள் அங்கு இருக்கலாம என்று மதிக்கலாம். பதினுறு முதல் இருபது வரை முட்டைகள் போடும். பெட்டைக் கோழிகளுடன் ஆண் கோழிகளும் சேர்ந்து அடைகாக்கும். குஞ்சுகள் பருவமானபின் இரண்டிரண்டாய்ப் பிரிந்து செல்லும். முட்டையிடும் பருவம் மட்டும் தாய்ப் பறவைகளுடனேயே கூடி வாழும். எதிரிகளைக் கண்டவுடனேயே முடித் தப்புவிக்கும். ஆயின், அண்மையில் காண நேர்ந்

தான் அவர்களைப் பார்த்தவண்ணமாகவே மிகவும் விரை வாகப் பின்னுக்கு ஓடும்.

சில மாதங்களில் எனக்கு வேண்டிய உடைகளையும் ஒரு சைக்கிள் வண்டியையும் வாங்கினேன். பணம் சேர்க்கும் காலம் தொடங்கவே 'போதும் திரும்பிப் போ', என்ற சத்தம் என் காதில் விழுந்தது. போராட டம் மிகுந்தது. மூன்று வருஷ வேலை செய்யும் ஒப்பந் தத்தை நானாகவே முறித்தேன். இந்தியாவுக்குத் திரும் பிச் சென்று சுவிசேஷம் கூறி அறிவிக்க விரும்பினேன். இது பைத்தியம் என்றனர் பலர். மேலதிகாரிகள் எனக்கு விருப்பமான வேறு வேலைகள் கொடுப்பதாகக் கூறியும், நான் பிடிவாதமாகப் 'போகிறேன் அனுப்பி விடுங்கள்' என்று கூறியதால் (you silly Asiatic) என்று கூறி என்னைப் பிரித்து விட்டார்கள். ஐந்நூறு ரூபாய் என் கையில் இருந்தது. அத்துடன் இந்தியா திரும்பினேன்.

---

# போகிறேன்

சுமார் ஆறுமாத காலம் மட்டும் நான் ஆப்பிரிக்காவில் இருந்தேன். எனினும் அதில் நானடைந்த அனுபவங்கள் பல. அங்குள்ள இந்திய மக்களின் வாழ்க்கை முறையை விவரிந்துக் கூறின் அதனை இந்நூலைப்படிப்போர் பயனடையார் என நான் கருது வதால் கூறுமல் விடுத்தேன். சோதனைகளாகிய நெருப்பிருல் எனது வாழ்க்கை கருகிக் கறைப்படா வண்ணம் ஆண்டவர் என்னைக் காத்து வெளியேற்றினர்.

1925 அக்டோபர் மாதம் இருபதாம் தேதி பம்பாய் நகருக்குப் கப்பல் வந்தேன். திடீரென்று கப்பலில் எனக்குக் காய்ச்சல் கண்டது. உதவிசெய்வார் ஒரு

ரு மில்லை. அப்பனையே நோக்கிக் கெஞ்சினேன். நான் இராப்பகல் யாதொரு உணவுமின்றியே மூன்று நாட்கள் படுத்திருந்தேன். களைப்பு மிகுதி. கப்பலிலேயே இறந்து போவேனோ எனப் பயந்தேன். "ஆண்டவரே நீர் என்னை உமது ஊழியத்திற்கென்றே அழைத்தீர் என்பதை நான் அறிவேன். இப்போது இக்கப்பலில் இருந்தே நான் உம்மோடு சேர்வது உமது சித்தமானால் அப்படியாகட்டும். நான் ஆயத்தமாக இருக்கிறேன். நான் உமக்காகவே இந்தியாவுக்குப் போகிறேன். என் சுயநலத்திற்கல்ல என்பதை நீர் அறிவீர். உமது சித்தம் நடக்கட்டும்" என்று ஜெபித்தேன்.

இரவு திடீரென்று மயக்கம் வந்து விட்டது. ஓர் அருமையான காட்சி. கனவோ மற்றெதுவோ நான் அறியேன். எதுவாகவும் இருக்கட்டும். அழகிய நட்சத்திரங்களின் கூட்டம். ஏழு நிறத்தைப் பற்றிதான் பள்ளிக்கூடங்களில் படித்திருக்கிறேன். இங்கோ எழுபது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிறம். எண்ணி முடியாத தொகை. கண்ணெட்டாத தொலை. அவைகளுக்கு முன் ஓர் அழகிய வாலிபன். அவனை நான் நன்கறிவேன். என்னுடன் படித்திருந்த ஒரு இளைஞன். சைமல் என்பது அவன் பெயர். அவன் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரியில், சரித்திர ஆசிரியராயிருந்த திரு. ஜி. என். நெகேமியா, எம்.ஏ.,எல்.ற்றி. அவர்களின் மகன். அவன் தாயார் பேரின்பம்நெகேமியா அம்மாள். அவன் பதினாறு வயது நடக்கும்போது திடீரென்று இறந்து போனான். அவனை நான் பார்த்து 'Smile' என்று கூப்பிட்டேன். அவன் சத்தம் தாவும், அவனுடைய அழகிய அங்கியையும் பார்த்த எனக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாயிற்று. 'யாவரும் அங்கே உன்னைப்போல்தானா இருக்கிறார்கள்' என்றேன். அவன் பதில் சொல்லாமல் "நான் கேள்விக்கு விடை சொல்ல வரவில்லை. உன் கஷ்டத்தைப் பார்தத ஆண்டவர் உன்னைத் தேற்ற என்னை அனுப்பினார்", என்றான். நானை சட்டென்று எழுந்து உட்கார்ந்தேன். கப்பலையும்

கட்டில் கொந்தளிப்பையுமே கண்டு இதெல்லாம் கனவே என்று அறிந்தேன். நோய் பறந்தோடிவிட்டது. அந்நேரமே சந்தோஷத்துடன் எழுந்து ஆண்டவரைத் துதித்தேன்.

---

# பிரசங்கியானேன்

நவம்பர் மாதம் முதல் தேதியில் பாம்பே வந்திறங்கி எங்கே போவது என்று தெரியாமல் தவித்து உடனே சென்னைப் பட்டணத்தற்குப் புறப்பட்டு N.M.S. செக்ரட்டரி திரு. சாலோமோன் இடம் சென்றேன். தேவ ஊழியம் செய்வதற்காக வேலையை விட்டு விட்டேன் எனவே அவர் "இதென்ன பைத்தியம்" என்று சொல்லிவிட்டார். எங்கே போவதென்று அறியாமல் தஞ்சாவூருக்கு வந்தேன். கனம் லாம்ப் (Lamb) ஐயர்* அவர்களைக் கண்டு விவரம் எல்லாம் சொன்னேன். பன்னிரண்டு நாள் அவரிடமே தங்கினேன். பின் அவருடைய ஆலோசனையின் பேரில் சென்னைக்கருகிலுள்ள திண்ணனூருக்குச் சென்று சாது ஹென்றி தேவதாஸ், பி.ஏ.,எல்.டி. யைக் கண்டேன். எனக்கேற்ற இடம் அதுவுமல்ல என்று கண்டு, மறுநாள் மதுரைக்கு வந்து அங்கிருந்து மூணாற் மலையில் சகோதரன், திரு. டானியல் ஹாரிஸ் என்பவரைச் சந்தித்தேன். நவமபர் மாதம் இருபதாம் தேதி கூடாரவிளை தோட்டத்தில் என் அனுபவ சாட்சியை மட்டும் சொல்லிப் பின்னால் மூணாற் பாதிரியார் சங். பி. சாமுவேல் ஐயரிடம் மலையில் கடவுள் ஊழியம் செய்ய அனுமதி கேட்கும்படி போனேன்.

அத்தேவ ஊழியன் என்னைக் கண்ட மாத்திரத்தில் 'நீயா பிரசங்கி? நீ என்ன! உன் வயது என்ன?

---

*70 -ம் பக்கம் பார்க்க.

என்று கேட்டார். மிக ஆத்திரத்தோடு 'ஐயா இரண்டு மாதம் மட்டும் இம்மலை நாட்டில் ஊழியம் செய்தபின் போய் விடுகிறேன்' என்றேன்.

ஐயர்: வாலிபர் அலைந்து திரிவது எனக்குப் பிரியமானதல்ல.

சகாயம்: நான் அலைவது தங்களுக்காவது, சபைக்காவது பாரமாயிராது..

ஐயர்: எல்லப்பட்டியில் ஒரு உபதேசிகர் வேலைக் காலியாயிருக்கிறது, அங்கு போகிறாயா?

சகாயம்: வேலைக்க்ாகவோ, பிழைப்புக்காகவோ நான் வரவில்லை. பணம் என் கையிலும் இருக்கிறது.

ஐயர்: ஒரு உபாத்தியார் வேலைக்கு சிபார்சை செய்கிறேன்.

சகாயம்: ஆண்டவர் என்னை அதற்கென்று அழைத்ததாகத் தெரியவில்லை.

ஐயர்: ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்று பேதுருவுக்குச் சொல்லவில்லையா?

சகாயம்: ஆட்டுக்குட்டிகளை மேய்க்க வேறு இடையன் கிடைக்கலாம்.

ஐயர்: ஆவியானவர் அவ்வேலையை இவனுக்குக் கொடு என்று என்னுடன் சொல்லுகிறார். நீ அதற்குக் கீழ்ப்படியக் கூடாதா?

சகாயம்: பேதுருவிடம் கொர்னேலியு வருவதாகச் சொன்ன கடவுள், கொர்னேலியுவிடம் பேதுருவைப் பற்றிச் சொன்னாரே. தங்களிடம் சொன்ன ஆவியானவர் என்னிடம் சொல்லவில்லை.

(ஐயருக்குக் கோபம் அதிகரித்தது)

ஐயர்: இங்கே மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு.

சகாயம்: இரட்சாபெருமானின் இரண்டாம் வருகையைக் கூறி அறிவிக்கும் யோவான் ஸ்நானகனே நான்.

1925 நவம்பர் 20 முதல் 1926 செப்டம்பர் 1[illegible] வரையும், ஆறு மலைப்பிரதேசங்களிலேயே ஊழியஞ் செய்து வந்தேன். கால்நடையாக அநேகமான எல்லாத் தோட்டங்களுக்கும் சென்று ஒவ்வொரு நாளும் ஐந்து நிமிடம் 'பொட்டுப்' Parcel பிரசங்கம் செய்திருக்கிறேன். இடையில் நடந்த சில நிகழ்ச்சிகளை எழுதுவது பயன்தருவதாயிருக்குமென்று எண்ணுகிறேன்.

1926 ஜனவரி 23-ம் தேதி திரு. க. மிஸ்லையன் என்னுடைய சபைக் கமிற்றித் தலைவரிடமிருந்து ஒரு சிபார்சுக் கடிதம் பெற்று ஒரு தோட்டத்திற்குச் சென்றேன். கடிதம் கொடுக்கப்படவேண்டியவர் தன் வீட்டு வேலைக்காக வெளியேறிவிட்டார். அம்மாள் வீட்டிலிருந்தார்கள். காலை முதலே நடந்து, மத்தியானவேளை தாண்டி இரண்டு மணிக்கு அவ்வீட்டிற்குப் போனேன். 'இங்கே யாரும் இல்லை', என்று வீட்டம்மாள் சொல்லி விட்டார்கள். 'அவர்கள் வரட்டும். ஐயாவைப் பார்க்க வேண்டும்' என்றேன். 'இரவு பத்து மணிக்கு மேல் தான் வருவார்' என்றார்கள். 'பரவாயில்லை அதுவரை காத்திருக்கிறேன்' என்று சொல்லி என் தோளில் இருந்த மூட்டையை அவ்வீட்டு மேசைமேல் வைத்துப் பக்கத்திலிருந்த இருக்கையில் அமர முயன்றேன். 'இவ கந்தலுடை வாசம் வாமறும் இருக்கலாம் ஆசைப்பட்டு இங்கே இருக்கக்கூடாது' என்று சொல்லவே, வேத புத்தகத்தை மட்டும் கையில் எடுத்துவிட்டு வெளியே, பக்கமாய் ஒரு புல் மேட்டில் உட்கார்ந்தேன். என் பெலவீனம் என்னைக் கலக்கி விட்டது. என் கண்களில் நீர் நிறைந்தது. பசி மிக அதிகம். அதைப்பற்றி அக்கறை காட்டப்படவில்லை. 'இப்படி ஏன் அநாதையாக என் படைத்தீர் அப்பனே' என்று கதறிவிட்டேன். 'இரட்சகனே, இப்படிக் கஷ்டப்படுத்தவா ஆப்பிரிக்கா வேலையை விட்டு வரச்சொன்னீர்' என்ற போது என் சட்டையின் மார்புப் பக்கம் நனைந்து காணப்பட்டது.

சற்று நேரத்திற்குள் ஒரு சிறு பையன் அப்பக்கமாய் வரவும், 'தம்பி இப்பக்கங்களில் ஏதாவது சாப்பாட்டுக் கடைகள் இருக்கிறதா' என்றுக் கேட்டேன். 'ஒரு மைலுக்கப்பால் ஒரு குச்சுக்கடையில், பழம், வேர்க்கடலை, அதிரசம் முலிதயவை கிடைக்கும்' என்றான். என் கையில் பணம் இருந்தபடியால் அப்பையனிடம் 'இவ்வீட்டில் சென்று என் குடையை எடுத்து வா. எனக்கு வழிகாட்டு உனக்கும் எல்லாப் பலகாரங்களும் வாங்கித் தருகிறேன்' என்றேன். அப்படியே அவன் குடையை எடுக்கப்போய் திருமபும்போது என் மூட்டையையும் கொண்டு வரக்கண்டு, "ஏன்? குடை மட்டும் போதுமே" என்றேன். "எல்லாம் கொண்டு கொடுத்துவிடு" என்று அந்த அம்மாள் சொன்னார்கள் என்றான்.

பிரசங்கமே தேவ ஊழியம் என்று எண்ணின எனக்கு, அக்காலம் வேத அறிவு மிகக் குறைவு. உற்சாகமிருந்த போதிலும் அறிவு இல்லை. பிரசங்கத்தைக் கேட்கிறவர்கள் யாவரும் நன்றாய்ப் பேசுகிறான் என்று சொன்ன போதிலும் என் வேத அறிவைப் பற்றி எனக்கே திருப்தியில்லை.

ஒருநாள் 'மனந்திரும்புங்கள்' என்று பிரசங்கம் பண்ணிக்கொண்டு நிற்கும்போதே ஒரு சகோதரன் வந்து முன் ஆசனத்தில் உட்காரவும் இப்போது வந்த சகோதரனே! நீங்கள் மனந்திரும்புங்கள் என்று சொன்னேன். அவ்வார்த்தை அவருக்குள் கிரியை செய்யவும் தமது இரகசிய பாவங்களையெல்லாம் என்னிடம் சொல்லி அந்நாள் முதலே புது மனிதன் ஆனார். பொய், வஞ்சம் போன்ற தீமைகளையும் ஒரே அடியில் விட்டு, பின்னால் வெகு துன்பங்கள் நேரிட்டபோதிலும் கிறிஸ்து இயேசுவுக்கு உத்தம சாட்சியாய் விளங்கினார்.

மலை நாட்டின் ஊழியத்திற்கு அங்குள்ள சபைத் தலைவர் நான் எதிர்பார்த்த அளவு அனுகூலமாயிருக்க

வில்லை. தேவ நாம மகிமைக்கேற்றவைகளைத் தடுக்க யாரால் கூடும்? என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்து இயேசுவாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு. தனித்த வேலையெல்லாம் அருமையான இயற்கை அமைப்பைக் கண்ணுற்று அது கற்றுக் கொடுக்கும் பாடத்தைக் கருத்தாய்ப் படித்தேன். அதிகநேரம் ஜெபித்தேன். வீடுகளிலும், ஜெபவீடுகளிலும், ஆலயங்களிலும், ஜெபிப்பதைப் பார்க்கிலும் அழகிய வெளிகளின் தனிஜெபம் என்னை அதிகம் அகமகிழச் செய்தது.

---

## மருந்தருந்தாப் பக்தி

மூணாற் மலைகளின் கிழக்குச் சரிவில் காப்பித் தோட்டங்கள் உண்டு. அவற்றில் ஒன்றை ஒரு வாலிபத் தம்பதிகள் மேல் பார்த்து வந்தனர். அவர்களுடன் நான் பழகவேண்டிய காலம் வந்தது. சன்மார்க்க நெறிகளில் அவர்கள் இருவரும் மிகச் சிறந்தவர்களாயினும் ஆவிக்குரியவர்களாய் மாறவில்லை. அவர்களை மாற்றுவதற்கு ஆண்டவர் என்னைக் கருவியாக்கினார். என் ஊழியத்தின் பலனாய்ப் பல ஆடவர் பயனடைந்திருப்பினும் இந்த வீட்டமமாளே எனக்கு ஆவிக்குள் முதல் சகோதிரியாய்க் கிடைத்தார்கள்.

1926 ஆம் ஆண்டையப் பெரிய வெள்ளிக்கிழமை கவனிக்கப்படத்தக்கது. அதற்கு முந்தின இரு தினங்களிலும் கணவனும், மனைவியும் ஆண்டவரால் இழுக்கப்பட்டனர். வீட்டுப்பக்கம் ஓர் அழகிய அருவி. சுற்றிலும் அழகிய காட்டு மரங்கள். மேலும் கீழும் பாறைகள். அவற்றின் மீதே வழிந்தோடும் தண்ணீர். அரைமைலுக்கப்பால் இன்னோர் அழகியத் தேயிலைத்

தோட்டம். இடையில் தலையாறு என்ற அமராவதி. இதைக் கடந்துசெல்ல இரும்பிக் கம்பிகளில் பலகை மாட்டிய ஒரு ஆடுபாலம். அக்காட்சி எவரையும் பரவசப்படுத்தும். யாவரும் உபவாசமாயிருந்து மூவருமாய் மலையேறினோம். காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை அவ்விடமே இருந்தோம். நேரம் கடந்து போனதை நாங்கள் உணரவில்லை. சிலுவைப் பாட்டைத் தியானித்தோம். கீழிறங்கி வரவும், இம்மகிழ்ச்சியைக் கலக்க அவர்கள் குடும்பத்திலுள்ள ஒரு குழந்தைக்கு சுகமில்லை என்ற செய்திவந்து எட்டியது. ஜெபித்தோம். சாத்தானின் சோதனையே என்று அறிந்து தைரியப்பட்டோம்.

மறுநாள் காலை புதிதாய்க் கிடைத்த நண்பர்களை விட்டு நான் பிரியவேண்டியதாயிருந்தது. ஒரு தேயிலைத் தோட்டத்தின் நடுவில் ஒரு மணி நேரமளவும் பேசிக்கொண்டே நின்றோம். பிரிந்துபோக மனமில்லை. கணவனும், மனைவியும், அவர்கள் வேலைக்காரனும் ஒரு பக்கத்திலும், நான் மட்டும் இன்னோர் பக்கத்திலுமாக வெகுநேரம் ஆண்டவரைப்பற்றிப் பேசியபின் ஜெபித்தோம். பின் நான் இன்னோர் தோட்டம் நோக்கி நடந்தேன். என்னால் ஓரடி தூரங்கூட நடக்க இயலவில்லை. மனம் ஏனோ அவ்வளவு பாரமடைந்திருந்தது.

ஏப்ரல் மாதம் 4-ம் தேதி கூடாரவிளை என்னுமிடத்தில் சென்று சகோதரன் ஆரிசிடம் சேரவும், மிகுந்த காய்ச்சல் எனக்குக் கண்டது. மருந்து சாப்பிடாமல் ஜெபத்தையே தஞ்சமாய்க் கொள்ளுவதைப் பற்றி நல்லெண்ணமுடையவனாய் மாத்திரமல்ல, அப்படியிருப்பது பக்திக்கடையாளம் என்றும் அந்நாட்களில் நான் போதிக்கத் தொடங்கினேன். அந்த எனது போதனையைச் சாதனையாக்க வேண்டிய காலம் வந்தது. ஒரு மருந்தும அருந்தவில்லை. காய்ச்சல் சுகமாகவும் இல்லை. என் பாவங்களையெல்லாம் அறிக்கையிட எண்ணினால் அதற்கும் பெலனில்லை. ஊழியம்

செய்யாதது ஒன்றே பாவமாகத் தோன்றியது. அ நண்பர் இக்கொள்கையில் பிடிவாதமுள்ளவர். மலைநா முழுவதும எனக்குச் சுகமில்லையென்று கேள்விப்பட் வருந்தியது. பலர் மருந்து கொடுக்க முன்வந்தன பண உதவி செய்யவும் சிலர் ஆயத்தமாயிருந்தன

நாட்கள் பல சென்றன. மாதமும் ஒன்று ஆன குணமடையவில்லை. பெலவீனம் அதிகரித்துகொண் போனது. மருந்து சாப்பிடுவதைப்பற்றி பலர் சொ லியபோதும் அது அவிசுவாசத்திற்கடையாளம் என் அவர்களை இழிவாய் எண்ணினேன். ஒன்றரை ம மானது. சிறிதும் குணமடையவில்லை. ஆழ்ந்த யோச எழுந்தது. என் நண்பர் பகல்வேளைகளில் பள்ளிக் டத்துக்குப் போய்விடுவார். ஆண்டவர் ஏற்றதோ ஆளைக் கொண்டு வந்தார். ஒரு படித்த வாலிப வேலைதேடி மலைக்கு வரவும், என் நோய்ப் படுக்கை யிலேயே அவர் மனந்திரும்பவும் ஆண்டவர் அரு புரிந்தார். அவரே எனக்குச் செய்யவேண்டிய எல்ல உதவியும் செய்தார். தோட்டி வேலை முதலாய் ம தாரச் செய்ய ஆண்டவர் அவரை ஏவினர்.

மே மாதம் 13-ம் தேதி சண்டவரை என்னும் டத்திற்கு என்னை அனுப்ப ஏற்பாடு செய்தனர். நா பேர் என்னைச் சுமந்து கொண்டுபோய் டாக்டர் ம என்பவரிடம் சேர்த்தனர். இதற்குமுன் ஒருமுறை நான் இவ்விடம் பிரசங்கம் செய்தபோது, ஆண்டவ டாக்டர் மணியைத் தமக்குச் சொந்தமாகப் பிடித்து கொண்டார். அது மட்டுமல்ல. நாங்கள் இருவரும் தஞ்சையில் பள்ளித் தோழர். எல்லா உதவியும் செய்தார். மருந்து மட்டும் அருந்தவில்லை. ஒன்றரை மாதமாக காய்ச்சலினால் வயிற்றில் கட்டியும (enlarged spleen) ஏற்பட்டது. நானும், டாக்டரும் ஊக்கமாய் ஜெபி தோம. சுகத்தைக் காணோம். அக்காலங்களில் பிரசங்க பண்ண என்னைச் சுமந்தும் குதிரைமீதேற்றியுஞ் செல் வார்கள். சால்வையால் இறுக மூடி விறைத்து

கொண்டே பேசுவேன். எனக்கோ சுகமே இல்லை. மூன்று மாதம் ஆகிவிட்டது. உடல் மிக மெலிவானது மட்டுமல்ல, இரத்தம் முற்றிலும் கெட்டுப்போனது. டாக்டர் எனது பிணி மலேரியா எனத் திட்டமாய்க் கண்டுகொண்டபடியால், அதற்குரிய மருந்தைச் சாப்பிட்டே தீரவேண்டும் என அன்போடு வற்புறுத்தினர். இரகசியமாய் யாரும் அறியாமல் கொய்னை (Quinine Bihydrochloride) எட்டு நாட்கள் சாப்பிடவும் சற்று சுகம் தோன்றியது. தினம்பத்து கிரேய்னாக ஒரு மாதம் சாப்பிட்டுப் பூரண சுகமடைந்தேன்.

என் வாழ்க்கையில் இது ஒரு பெரிய பாடம். அனுபவத்தில் வராததைப்பற்றிப் போதிக்கமாட்டேன் என்பது எனது தீர்மானம். இது ஒரு புது அனுபவமாதலால் அந்நாள்முதல் மருந்து சாப்பிடலாகாது என்ற போதனையை அடியோடே விட்டுவிட்டேன். பின்னால் செய்யவேண்டிய ஊழியத்திற்கென்று ஆண்டவர் ஞானமாய் இப்பாடத்தை எனக்குக் கற்றுக் கொடுத்தபடியால் அவரைப் போற்றுகிறேன்.

நோய் சுகமாகிவிட்டது. நாளடைவில் பெலவீனமும் குறைந்தது. கீழ்நாடு நோக்கிச் செல்ல மனதுக்குள் ஆவல் எழுந்தது. தமக்கென்று அழைத்த அந்த நாளிலேயே ஆண்டவர் என்னை மிக வல்லமையாய் பற்பல இடங்களிலும் உபயோகிப்பார் என்று நான் திட்டமாய் நம்பியிருந்தேன். எவ்வாறு என்பதை மட்டும் அறியவில்லை.

# கோலும் தடியும்*

திருநெல்வேலிச் சபைகளைப்பற்றி மிகச் சிறப்பாய்க் கேள்விப் பட்டிருந்தேன். அச்சபைகளுக்குள்ளும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணவேண்டும் என்று ஆசை கொண்டேன். அதற்கிசைய எனது நோய்ப் படுக்கையிலேயே நாசரேத்திலிருந்து இரண்டு நண்பர் என்னை அவ்விடம் செல்ல அழைத்தனர்.

மூன்று மாதமாக (காய்ச்சல் சுகமானபின்) ஜெபித்து வந்தேன். ஆண்டவருடைய வேளைக்காகக் காத்திருந்தேன். "நீர் என்னை அனுப்பாவிட்டால் நான் போக மாட்டேன். பிரசங்கிமார் எத்தனைபேர்களோ கீழ் நாட்டிலுமுண்டு. பண ஆசையினால் சுவிசேஷத்தை அறிவிக்கிற பலர் நிமித்தம் உமது நாமம் தூஷிக்கப் படுவதை நீர் அறிவீர். நானும் அப்படிப்பட்டவர்களில் ஒருவனாகாதபடிக்கு என்னைக் காத்தருளும். நாசரேத்து ஊர்ப் பக்கங்களுக்குப் போவதினால் உமது நாமம மகிமைப்படுமானால் மட்டும் என்னை அனுப்பும். அல்லது வேண்டாம். நீர் மகிமைப்படுவதல்லாமல் எனக்கு வேறு யாதொரு ஆசையும் இப்புவியில் இல்லை" என்றே ஜெபித்தேன்.

மலைநாட்டுக் கிறிஸ்தவர்களுக்கோ என்னை விட்டுவிட மனமில்லை. தமிழ், மலையாளம், ஆங்கிலம் இவைகளில் ஒன்றுபோல் தேறின ஒரு வாலிப ஊழியன் அவர்களுக்குத் தேவையாயிருந்தது. என்னையே எல்லாரும் கோரினர். கீழ்நாடு போகவேண்டாம் எனப் பல கெஞ்சினர். நானோ 'அதெல்லாம் ராஜ காரியம்' என்று மட்டும் சொல்லி ஜெபத்தில் அனுதினமும் என்னை ஒப்புவித்தேன்.

---

*ஆட்டை அரவணைக்கக் கோல்; அதைக்கெடுக்க எண்ணும் எதிரிக்குத் தடி.

இன்னோர் முறை என் ஆவிக்குரிய குழந்தைகளைச் பார்க்கச் சென்றேன். என்னிலும் முதியோர் பலரே எனது பிள்ளைகளாயினர். முற்கூறிய கணவனும், மனைவியும் என்னை ஆவலுடன் எதிர்பார்த்திருக்கவே, திடீரென்று ஒருநாள் அவ்விடமும் சென்றேன். என்னைக் கண்டதும் அவர்களுக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. மறுபடியும் சந்திக்கச் செய்த ஆண்டவரைப் பலமுறையும் துதித்தோம்.

இம்மட்டும் எனது தோழர் யாவரும் ஆண்கள் மட்டுமே. பெயர் குறித்துச் ஜெபிப்பதில் அவர்களை ஒருபோதும் மறப்பதில்லை. விசுவாச வாழ்க்கையில் இளைஞனாதலால் சாத்தானின் தந்திரங்களை நான் நன்கு அறிந்திலேன். என் அன்பு மாயமற்றதாயிருந்தது என்பதற்குக் கடவுளே சாட்சி. பதினெட்டு நாட்கள் நான் அவ்விடம் தங்கினேன். பகல் முழுவதும் வேதவாசிப்பிலும், வியாக்கியானம் பண்ணுவதிலும் கழித்து விடுவோம். ரோமர் நிருபத்தை எட்டு நாட்களில் முடித்த பின்னால் எபிரெயர் நிருபத்தைப் படிக்க முயன்றோம்.

சாத்தான் ஒரு பெரிய தீங்கு செய்தான். அவன் அண்மையிலுள்ள ஆசிரியருக்குள் புகுந்தான். என்னை ஊர் முழுவதிற்கும் சுவிசேஷ ஊழியனாக ஏற்படுத்தும் செய்தி அவ்வாசிரியருக்கு மிக்க கலக்கத்தைக் கொடுத்தது. இத்தீயச் செயலுக்கு எப்படித்தான் சாத்தான் அவரைத் தூண்டினானோ? என்னைப்பற்றி அவர் அக்கணவனிடத்தில் பொய்யான தனது மனதின் வஞ்சகத்தை மெய்போல் பேசி, கணவன் மனைவியருக்கிடையே பிளவை உண்டுபண்ணி விட்டார்.

வாழ்விலும் தாழ்விலும் பிரிக்கக்கூடாத நிலையிலிருக்கும் மனையாளைப்பற்றித் தவறான எண்ணம் கொண்டால் மனிதன் அதைப் பொறுத்துக்கொள்ளமாட்டான். மரணம் ஒன்றைத் தவிர மற்றெதுவும் அவர்களைப் பிரிக்க முடியாதே. அப்படியிருக்க அக்கொடியவன் தன் நாவினால் இதைச் செய்தான்.

எனது அறியாமையின் காலத்திலும் நான் கற்
நெறியில் தவருதவனுகையால் பெண்கள் யாவரையு
சகோதரிகளைப் போலவும், தாயைப் போலவும் கரு
வது எனது பண்பு. தாயைச் சிறு பிராயத்திலே
இழந்தேனுகையால் முதியோரைத் தாய் எனவும் எ
ணுவேன். தாராளமாய்ப் பேசிப் பழகுவது பெ
களோடு கூடாது என்பதை அன்று நான் அறிந்தவ
மல்ல. இந்தச் சமயத்தில் இக்காரியம் நேரிட்டது.

நான் வாலிபன். வயது இருபத்தொன்று. அ
அம்மாள் என்னைப் பார்க்கிலும வயதில் கூடியவ
இளமையின் தோற்றமும் அழகும் மிகுந்தவர். இரு
இடம் தனித்த தோட்டம். வீட்டில் மற்ற ஆட்களு
அதிகம் இல்லை. அவர்கள் என்னேடு எப்போது
பேசிக்கொண்டிருப்பதைப் பலரும் கண்டிருக்கிருர்க
இப்படிப்பட்டத் தருணங்களைப் பார்த்தே இருள
அம்மனிதனுக்குள் புகுந்தான்.

ஓரிரவு மணி ஏழரை. யாவரும் ஜெபத்திற்கா
கூடினேம். கணவனும் அவர் தம்பியும் இன்னும் சி
ரும் வந்தார்கள். ஜெபத்திற்கு ஆத்திரப்படும அ
மாளைக் காணேம். கூடியோர் முகங்களில் ஒரு நி
என்னில் மிக அன்பாயிருந்த கணவனது முக நாடி
வேறுபட்டிருந்தது. நான் யாவருடைய முகங்களை
உற்றுப்பார்த்தேன். இருள் பூமியை மூடியிருந்த
சந்தேகமும் பயமும் யாவருடைய முகங்களிலு
காணப்பட்டன. என்னை ஒருவரும் ஏறிட்டுப் பார்
கத் துணியவில்லை. நான் எழுந்து வீட்டம்மாளை
பார்க்க சமையலறைப் பககமாய்ப் போனேன். அ
கள் தரையில் விழுந்து உருண்டு அழுவ
போல் தோன்றிற்று. எனக்கொன்றும் விளங்கவில்
ஜெபத்தை முடிக்க பின்னல் யாரோடும் ஒரு வார்
தையும பேசாமலே படுக்கையில் சாய்ந்தேன். தூக்
வரவில்லை. முழங்காலிட்டேன். ஜெபிக்க முடியவில்
ஏதோ ஒருவித அங்கலாய்ப்பு என்னையும் பிடித்த

அவ்வீட்டில் ஒரு பெரிய மாற்றம் வருவதாகத் தோன்றியது. பயம் அதிகமானது. எப்படித்தான் அவ்விரவைக் கடந்து மறுநாட் காலையைக் கண்டேனோ தெரியவில்லை.

மறுநாட் காலை எட்டுமணி. அந்த அம்மாள் என்னிடம் வந்து 'சாத்தான் குலைத்துப் போட்டானே' என்றதும் விம்மி, விம்மி அழத் துவக்கினார்கள். நான் புத்தியிலும் உலக ஞானத்திலும் பேதையல்லவே. உடனே யாவற்றையும் புரிந்துகொண்டேன். எனக்குள் உண்டான கலக்கத்தை வெளியே காட்டாமல் அவர்களை ஆறுதல் படுத்த முயன்றேன். 'பொய்க்குக் காலில்லை. அது மற்றோர் காலில்தான் நிற்கக்கூடும். எல்லாம் நன்மைக்கே' என்று பலவாருய்ச் சொல்லி கலங்காதபடித் தேற்றினேன். இதனால், பக்தி பழிக்கிடமாகாதபடி ஆண்டவர் காக்கட்டுமென்று மட்டும் ஜெபிக்கச் சொன்னேன்.

1926 செப்டெம்பர் நாலாம் தேதி மாலை நாலு மணிக்கு அவ்விடத்தைவிட்டு எங்கே போகவென்று அறியாதவனாய் வெளியேறினேன். வெளியேறுமுன் வீட்டார் யாவரும் வந்து கூடினர். புறங்கூறின ஆசிரியரும் வந்தார். நான் ஜெபித்தேன். "அப்பனே! மனிதர் பார்க்கிறபடி நீர் பார்க்கிறதில்லை. காரியங்களின் உண்மையை நீர் நன்ருய் அறிவீர். என்னில் குற்றத்தை நீர் கண்டால் என் தலையில் இடி விழுவது எனக்கு நலமாயிருக்கும்," என்பதே என் ஜெபம்.

உடனே அவ்விடம் விட்டுப் பிரிந்தேன். பிரியும்போது சங். 37:10ஐ ஞாபகப்படுத்தி அழுகையோடும் பெருமூச்சோடும் ஐந்து மைல் நடந்து இன்னோரிடம் சென்று இராத்தங்கி, மறுநாள் பதினெட்டு மைல் நடந்து எனது நண்பர் டாக்டர் மணியிடம் சென்றேன். விவரங்களைச் சொன்னேன். அவரும் மிகவும் கலங்கினார். என் முகத்தில் ஒளியில்லை. எப்போதும் பெரு

மூச்சுத்தான். என்னமாய் முடியுமோ என்ற கலக்கம், எனக்காக அல்ல. இருவருக்கிடையிலிருந்த அன்பு குலைந்து குடும்ப வாழ்க்கை சிதைந்துபோகுமோ என்ற கவலையே. ஆயினும் நம்பிக்கையோடு ஜெபித்தேன். என் மனச்சாட்சியைத் தவிர மற்றெதுவும் அன்று என்னைத் தேற்றவில்லை. நாட்கள் செல்லச்செல்ல தைரியம் அதிகரித்தது. இதன் உண்மையையே ஆண்டவர் சீக்கிரம் விளக்கிக் காட்டவேண்டுமென்பதே என்து ஜெபமாயிருந்தது.

ஆண்டவருக்கே ஸ்தோத்திரம். அனுபவத்தின் வாயிலாகவே பல பாடங்களை மிகத் தெளிவாய்க் கற்றுக்கொடுப்பது எவ்வளவு ஆச்சரியப்படத்தக்கது. எக்காரியத்திலும் இனிமேல் பெண்களுடன் தாராளமாகப் பழக்கம் வைப்பது தேவ நாமமகிமைக்கேற்றதாயிராது என்பதைப் படித்தேன்.

அக்குடும்பத்தை நான் விட்டுப் பிரிந்து சுமார் மூன்று வார காலத்திற்குள், இச்சதியைச் செய்தவர் அச்சிமேநகிதரிடம் சென்று தன் துர்ச்செயலைப்பற்றி அறிக்கையிட்டு மன்னிப்புக் கோரினர். அவனை மன்னித்த அவர், எனக்கு எழுதி, என்னை அழைத்து உண்மையைக் கூறவே, எங்களது அன்பு மேலும் வளர்ந்தது. அவர் பிற்காலம் ஒரு போதகராகி கல்லூழியஞ் செய்தார். அவ்வாசிரியருக்கு அதைக்காணும் வாய்ப்பு இல்லாமல் போயிற்று. அவர் திடீரென்று அவ்வாண்டிலேயே மாண்டுபோனர்.

---

# திருநெல்வேலி ஊழியம் (1927-29)

மூணாற் மலையைச் சேர்ந்த சண்டிவரைத் தோட்டத்தில் நண்பர் டாக்டர் மணி வீட்டில் மலேரியா நோயால் படுத்திருந்த வேளையில், நாசரேத்தூரிலிருந்து கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய இரு நண்பர்கள் அத்தோட்டத்திற்கு வந்தனர். இரவு தங்குவதற்கு அவர்கள் டாக்டர் வீட்டிற்கே வருவது வழக்கம். படுக்கையிலிருந்துகொண்டே நான் வேதத்தை விளக்கி, குடும்ப ஜெபம் நடத்தினேன். இரண்டொரு நாட்கள் இதைக் கவனித்த அந்த இரு நண்பர்களும் தங்கள் ஊருக்கு நான் செல்லும்படி என்னை அழைத்தனர். எனக்குத் திருநெல்வேலி சபைகளைச் சந்திக்க ஆசை உண்டென்றும், அந்தச் சபைத் தலைவர்கள் என்னை அழைத்தால் அதை ஆண்டவர் நடத்துதலாகக் கருதுவேன என்றும் அவர்களுக்குத் தெரிவித்தேன். இவர்கள் இருவரும் தம்மூர் சென்றபின் அக்காலம் நாசரேத்தூரில் குருவாயுழைத்த சங். கானன் திரவியம் கோயில் பிள்ளை, பி.ஏ. ஐயர் அவர்களைக் கொண்டு எனக்கு கடிதமெழுதச் செய்தனர். நானும் ஆண்டவர் நடத்துதலுக்கிசைய வருகிறேன் என்று எழுதினேன்.

1926 செப்டம்பர் 16-ம தேதி தட்டப்பாறை கேம்பில் (Camp) நான் ஒரு நண்பர் வீட்டிற்குச் சென்று சேர்ந்தேன். அங்கு ஒரு பிரசங்கியாரைச் சந்தித்தேன். அவர் பெயர் பாலசுந்தரம். வயது அறுபத்தெட்டு. வைத்தியம் அறிந்தவர். "எமகுட்டிப் பிரசங்கி" என்றும் சிலர் அவரை அழைப்பர். மனைவியை இழந்தபின் தேசாந்தரமாய்ச் சுற்றித் திரிந்தவர். அவர் தம்மை குடகு மலையிலுள்ள ராம்தாஸ் என்ற ஓர் இந்து சந்நியாசியின் சிஷன் என்பார். வேத அறிவு அவருக்கு மிக அதிகம். ஆனால் கையில் வேதபுத்தகம் இருந்ததே இல்லை. கண் பார்வை மங்கும் பருவம். எனினும் அவர் தம் பிரசங்கத்தில் ஏராளமாக வேத வாக்கியங்களை வாசிக்கச் செய்வார். அறுபத்தெட்டு வயது

டைய அவர் இருபத்திரண்டு வயதுடைய என்னை உற்றுநோக்கி தன் வாழ்க்கையின் நோக்கம் நிறைவேறிற்று என்று கருதினதுபோல் என்மேல் மாறாத கட்புக் கொண்டார். படிப்பறியாத அவரிடமிருக்க நுட்பமான வேத அறிவைக் கண்டு ஒருவாறு பிரமித்து அவரை நான் நன்கு மதித்தேன்.

1926 ம் ஆண்டு அக்டோபர் மாதம் இவரை நான் நாகர்கோவிலுக்கழைக்துச் சென்றேன். நாகர்கோவில் சபைக்கு அப்போது போதகர் இல்லை. அக்காலம் திரு. அகிமான் என்பவர் சபையின் சுவிசேஷகராயிருந்தார். அவர் வீட்டில் தங்கி மறுநாட்காலை ஞாயிறு ஆராதனையில் அவரைப் பிரசங்கிக்கச் செய்து, நான் அவர் குறிப்பிட்ட வேத வாக்கியங்களை வாசித்தேன். அக்காலம் உயிரோடிருந்த உடர்திரு. பால் டானியல், எம்.ஏ.,எல்.டி. (எனது முன்னாள் ஆசிரியர்) a mere waste of time என்று அந்தப் பிரசங்கத்தைக் குறித்துச் சொன்னார்.

அன்று மாலை ஆராதனையில் நான், "நானோ பசியினால் சாகிறேன்", என்ற (லூக்கா 15:17) வாக்கியத்தில் பேசினேன். *என்னை நன்கறிந்த பல பள்ளித் தோழர்களும், ஆசிரியர்களும், அதைக் கேட்டு "உண்மையாகவே இவனுக்குள் ஆண்டவர் கிரியை செய்திருக்கிறார்" என்று சொல்லிக்கொண்டனர். அன்று எனது முற்கால வாழ்க்கையைப்பற்றி வினவினவர்களிடமெல்லாம் 'அது ஆண்டவர் காரியம், அவர் சித்தம்' என்று மட்டுமே சொல்லிப் பிரிந்தேன்.

அம்மாதம் 16 ம் தேதி நான் நாசரேத்திலிருக்க வேண்டுமென்பது முன்னொழுங்கு. அதற்கிசைய இந்தச் சந்நியாசியை விட்டுவிட்டு, அவர் எழுதிய 'சமுசயக்

---

*முப்பத்தேழு வருஷங்களுக்குப்பின் இன்றும் (1964), அன்றைய இந்தப் பிரசங்கத்தைக் கேட்ட பலர் அதைக் குறித்துப் பேசிக் கொள்ளுகின்றனர்.

கபிறருக்கும் ஞானத்திறவுகோல்' என்னும் சிறு புத்த கத்தையும், எனது தமிழ் வேதாகமத்தையும் கொண்டு ஓரிரவு நாசரேத்திற்குச் சென்று சேர்ந்தேன். புகை வண்டியை விட்டிறங்கி, விடுதியொன்றில் உணவருந் தியபின், இரவு பத்து மணிக்கு கோவில் பக்கத்தில் தங்கிய திரு. வ. கோயில்பிள்ளை என்பவர் வீட்டை அடைந்தேன். மூணாற் மலையில் என்னைக் கண்டு வினவி நாசரேத் ஐயரைக் கொண்டு என்னை அவ்வூருக்கு அழைப்பித்தவர் இவரே. மறுநாட் காலை நான் ஐயர் அவர்களைக் கண்டு பேச, அன்றுமுதல் மாலைதோறும் மூன்று நாட்கள் ஆராதனையில் பிரசங்கம் செய்ய அவர் ஒழுங்கு செய்தார்.

நான் எங்கு சென்றாலும் முதல் பிரசங்கம் "மனந் திரும்புங்கள்! பரலோக இராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது" என்பதே. குறித்த சமயத்திற்குள் பிரசங்கத்தை நிறுத்தி விடுவேன். எனது குணப்படுதலுக்குக் காரணமாயி ருந்த மலையாளப் பாட்டைத் தமிழில் ஆக்கி* அப் பாட்டை என் பின்னால் சபையாரைப் பாடச்செய்து, எனக்கிருந்த மனமகிழ்ச்சியை அப்பாட்டுக் கவிகள் மூலமாய் விளக்கிச் சொல்வேன். முதலாம் நாள் இரவு இருபது நிமிஷம் எனக்குக் கொடுக்கப்பட்டது.

அக்காலம் நாசரேத்தூரில் இப்போதிருக்கும் ஆல யம் கட்டப்படவில்லை. பனையோலை வேய்ந்த ஒரு கோவில்தான் இருந்தது. ஆலயம் நிரம்பி வழிந்தோட ஜனங்கள் கூடி வந்தனர். குறித்த நேரத்தில் பிரசங் கத்தை முடித்ததால் ஐயர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி யடைந்து இன்னும் கொஞ்சம் கூடப் பேசியிருக்கலாம் என்று 'சர்ட்டிபிக்கேட்' கொடுத்தார்கள். மறுநாள் நாற்பது நிமிஷங்கள் கொடுத்தார்கள். ஜனங்களோ திருப்தியடையவில்லை. மூன்றும் இரவு பிரசங்கம் முடிந்த பின் ஒரு சிறு குழந்தைக்காக ஜெபிக்க என்னை

---

*இயேசு என் அஸ்திபாரம். பக்கம் 61

அழைத்துச் சென்றார்கள். பிரசங்கிமார் குணமாக்கும் வரமுடையவர்களாயிருப்பார்கள் என்பது பொதுமக்கள் எண்ணம் போலும்.

தவிரவும் நாசரேத், மெஞ்ஞானபுரம் முதலிய இடங்களில் 'மருந்தில்லாக் கூட்டத்தார்' சிலர் இருந்தனர். எந்த நோய்க்கும் அவர்கள் மருந்துண்பதில்லை. 'ஜெபத்திலே வைத்திருக்கிறோம்' என்பார்கள். மருந்து அவிசுவாசிகளுக்கே என்பது அவர்கள் கூற்று. இக் கூட்டத்தார் தங்களைச் சற்று பெருமையாய் எண்ணி மற்றவர்களைக் குறை கூறுவார்கள். அவர்களில் சிலர் மருந்தருந்தாவிட்டாலும் கள் குடிப்பார்கள்! இக்கூட்டத்தினரிடம் நான் விழுந்துவிடாதபடி ஆண்டவர் என்னைக் காத்துகொண்டார். பிரசங்கம் செய்து வாழ்ந்த இந்தக்காலத்தில் உடல் சிறிது பெலயீனமடைந்திருந்ததால் மலேரியா திரும்பவும் என்னை அணுகி வைத்தியர்களிடத்துக்கு என்னை ஓட்டிற்று. ஆகையால் நான் அவர்கள் கொள்கையிலிருந்து விலக்கிக் காக்கப் பட்டேன்.

நான் அழைத்துச் செல்லப்பட்ட வீட்டுக் குழந்தை ஒரு போலீஸ் அதிகாரியின் மகள். ஒயிட்ரோஸ் (White Rose) என்பது அவள்பெயர். ஒன்றரை வயதிற்குள் பலமுறையும் நோய்ப்பட்டு முடிவில் குடல் சுரத்தினால் (typhoid) அவதிப்பட்டாள். நான் ஒரு வருடகாலம் மருத்துவம் கற்றதாலும், எனது குடும்பத்தில் குழந்தை வைத்தியம் பரம்பரையாய் இருந்தமையாலும், டாக்டர் மணியுடன் பல மாதங்கள் தங்கியிருந்ததாலும், சாதாரணப் பொது அறிவு எனக்கிருந்தமையாலும், கைநாடிப் பார்த்துப் பிணியாளிகளைப் பற்றிச் சற்று அறிந்துகொள்வேன். ஊழிய ஆரம்பமாகையால் குழந்தை சாகுந் தருணத்திலிருந்ததைக் கண்ட நான் ஆவியிலே எனக்குள் கலங்கி, எனது செய்தியை மக்கள் ஏற்றுக்கொள்ளவும், தங்களை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கவும் அவருக்கு அதின் மூலம் மகிமை

டாகவும், முழுமனதோடே ஊக்கமாய் அக்குழந்தையைக் காப்பாற்றவேண்டும் என ஜெபித்தேன்.

அன்றிரவு அவ்வூர் மிஷன் மருத்துவசாலையின் தலைவர் டாக்டர் வேதபோதகம் அவர்கள் வீட்டிலேயே உணவருந்தச் சென்றேன். அவரது மனைவியும் ஒரு டாக்டர். அவர்கள் "அக்குழந்தை பிழைத்தால் ஆச்சரியந்தான்" என்றனர். மறுநாட் காலை குழந்தை இறந்துபோகவில்லை யென்னும் செய்தி நம்பிக்கை யளித்தது. சின்னாட்களில் குழந்தை குணமடைந்தது. இச்செய்தி ஊரில் பரவவே, யாவரும் கூட்டங்களுக்கு உற்சாகமாய் வந்து கூடினர்.

அந்நாட்களில் திருநெல்வேலிச் சபைகளில் ஆன்மிக வாழ்க்கை குன்றியே இருந்தது. யாவரும் "உவாக்கர் ஐயர் காலத்திற்குப்பின் (1904-13) இப்பொழுதுதான் எழுப்புதல் உண்டாகியிருக்கிறது" என்று கூறத் தொடங்கினர். உவாக்கர் ஐயர் காலத்தில் ஆவிக்குரிய உணர்ச்சி பெற்ற பலர் அக்காலம் அறுபது வயதுக்கு மேற்பட்டோராயிருந்தனர். அவர்களில் சில அருமையான சபைத் தலைவர்களும் இருந்தனர். கனம் எஸ். டேவிட் ஐயர் அவர்கள், வணக்கத்துக்குரிய ஆர்ச்டீக்கன் ஆர். வி. ஆசிர்வாதம் இருவரும் திருநெல்வேலியிலும், பரமானந்தம் ஐயர் சென்னையிலும், மாணிக்கம் ஐயர் மதுரையிலும் பணியாற்றி வந்தனர். இவர்கள் மருந்து போலிருந்தும் சபைத்தலைவர்களில் பலரும் வெறும சன்மார்க்கராயும், கல்விமான்களாயிருந்த சிலர் மறுபடியும் பிறவாதவர்களாயும் இருந்தமையால், சபைகளில் ஆவிக்குரிய உணவுக்குப் பஞ்சம் ஏற்பட்டிருந்தது.

செல்லுமிடமெல்லாம் என்னைத் தேவதூதனைப் போல ஜனங்கள் ஏற்றுக்கொண்டதைச் சில போதகர்கள் அவ்வளவாய் விரும்பவில்லை. 1926 டிசம்பர் மாதத்திற்குள் மூக்குப்பீறி, சாத்தான்குளம், இட்ட

மொழி, இசையன்விளை, இடையன்குடி, புதூர், முத்தலூர், அன்புநகரம், கடாட்சியாபுரம் முதலிய இடங்களில் எல்லாம் சின்னாட்கள் தங்கி ஊழியம் செய்ய எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. ஒலிபெருக்கி இல்லாத அக்காலத்தில் இரண்டாயிரம் மக்கள் கூடினும், எனது சத்தம் யாவருக்கும் கேட்கத்தக்கதாய், வாலிபத்தின் வலிமையும், ஆவியின் உற்சாகமும் உதவின. ஓர் ஊரிலிருந்து நான் மறுஊர் செல்கையில் அவ்வூர் மக்களில் உணர்ச்சியடைந்தோர் பலர் அடுத்த ஊருக்கும் வரத் தொடங்கினர். ஒருமுறை மூன்று வாலிபப் பெண்கள் உற்சாகத்தால் மூன்று மைல் நடந்துவந்து என்னுடன் பேசி சத்தியங்களை மேலும் அறிய விரும்பினர். ஒருமுறை கிடைத்த எச்சரிப்பினால் நான் மிகவும் கருத்துடையவனாய், தனிமையாய்ப் பெண்கள் ஒருவரிடமும் ஒருநாளும் பேசக்கூடாதென்று நிச்சயித்திருந்தபடியால் ஞானமாய் நடந்துகொள்ளும் கிருபையைப் பெற்று, பற்பல வீண் சோதனைகளுக்குத் தப்பினேன்.

1927 ஜனுவரி மூன்றாம் தேதி, அழைப்பின் பேரில் கிறிஸ்தியாநகரம் சென்று சேர்ந்தேன். சங். தேவப்பிரியம் ஐயர் அன்புடன் என்னை ஏற்றுக்கொண்டு, சந்தையடியூர், பண்டாரஞ்செட்டிவிளை, தர்மநகரம். வேதக்கோட்டைவிளை* முதலிய இடங்களில் இந்துக்கள் நடுவில் உழைக்க மிகவும் உற்சாகப்படுத்தினர்.

1881-ம் வருடம் மலையாளத்திலும், நெல்லை நாட்டின் கடற்கரையோரமும், ஒரு எழுப்புதல் உண்டாயிற்று. மாவேலிக்கரையைச் சேர்ந்த ஜஸ்டஸ் ஜோசப் (வித்துவான் குட்டி) என்னும் ஒரு பிராமணப் பிரசங்கியார், ஆண்டவர் 1881 ல் வரப்போகிறார் என்று சபைகளைக் கலைத்திருக்கிறார். அதனால் பலர் தங்கள்

---

*இவ்விடங்களிலெல்லாம், கன்னியாகுமரி மாவட்டத்தின் சாமிதோப்பு என்ற ஊரில் நடைமுறையிலிருக்கும் "முத்துக்குட்டி" வணக்கக்காரராகிய வைணவர் உண்டு.

சொத்துக்களை விற்றுத் தின்றுவிட்டு, வானத்தை அண்ணாந்து நோக்கினர். கடற்கரையோரங்களில் பல காத்திருப்புக் கூட்டங்களும் நடந்தன. முடிவில் அவ்வாண்டில் பிரசங்கிதான் ஆண்டவரிடம் சென்றுவிட்டார். ஆண்டவர் வரவில்லை. இக்கூட்டத்தாருக்கு 81-ம் வருடக் கூட்டத்தார் எனப் பெயர். இவர்களில் சிலர் கிறிஸ்தியாநகரப் பக்கத்திலும் அன்று இருந்தனர். அவர்கள் என்னை வரவேற்று, எனது கூட்டங்களில் பாடி, ஜெபித்து ஊழியத்திற்குதவி செய்தனர்.

ஆப்பிரிக்காவில் ஒருமுறை நான் கனவில், மெஞ்ஞானபுரம் என்னும் ஆலயத்தில் பிரசங்கம் செய்வதாகக் கண்டேன். அந்த மெஞ்ஞானபுரம் இங்கிருந்து மூன்று மைல். உற்சாகமுள்ள பலர் அங்கு சென்று எனக்கழைப்பு வாங்க முயன்றும் பயன்படவில்லை. வெளிக்கூட்டம் வைக்க என்னை ஏவினர். நான், அது தேவ நடத்துதல் அல்ல என்று மறுத்தேன். அங்குள்ள அழகிய ஆலயத்தைக் குறித்துக் கேள்விப்பட்டு அதைப் பார்க்கவென்று ஒருநாள் நான்நடந்து சென்றேன். அன்று செப்பனிட்ட பாதையோ, மோட்டார் வண்டியோ இல்லை. அங்கிருந்த கனம் 'எஸ்'. ஜி. மதுரம், பி.ஏ., அவர்களிடம் என்னை அறிமுகப்படுத்த நண்பர் சிலர் அழைத்துச் சென்றனர். தம்முடைய ஊழியர் பலருடன் பேசிக்கொண்டிருந்த அவர் என்னை வேண்டுமென்றே கவனிக்கவில்லை. எனக்கும், என்னை அழைத்துச் சென்றவர்களுக்கும் வெட்கம் உண்டாயிற்று. முடிவில் நான் அவருக்குத் தோத்திரம் சொல்லி வழியனுப்பிவிட்டு அன்று மாலை அங்குள்ள ஜேன் அம்மாள் வீட்டில் (யாமமுன்சீப் வீடு) தங்கினேன்.

இந்த ஜேன் அம்மாள், ஆண்டவரால் வல்லமையாய்ப் பயன்படுத்தப்பட்டு, மருந்தில்லாக் கொள்கையை நிலைநாட்டிய தாயாரென விளங்கி, 1923-ம் வருடம் மகிமை புகுந்தவர். அலைந்து திரியும் சுயாதீனப் பிரசங்கிகள் சிலர் அவர்களுடைய வீட்டில் இராத்தங்கி,

[illegible] மறுநாட் காலை மீண்டும் [illegible] அடைந்தேன்.

அந்நாட்களொன்றில் ஒரிரவு எனது பொருட்கள் யாவும் (மூன்று வேஷ்டி, இரண்டு ஷர்ட்டுகள், வேத புத்தகம் முதலியன) திருட்டுப் போய்விட்டன. வேத புத்தகம் போனதற்காகத்தான் சற்று வருத்தமடைந்தேன். இதைச் செய்தவன் ஒரு வைத்தியக்காரன் என்பது மறுநாள் வெளியாயிற்று. அது மலைப் பிரதேசம். காலத்தடம் பார்த்துச் சொல்லும் நிபுணர்கள் மூலம் அரைமைல் தூரம் செல்லவும், மலைக்குள்ளிருந்து வெளியே எட்டிப்பார்த்த ஒரு வெள்ளைத் துணியை இழுக்கவே, வேதபுத்தகமும் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து மீட்கப்பட்டது.

---

# கண்ணேடு கண்ணிணை நோக்குதல்

1927 பெப்ரவரி மாதம் அக்காலம் இந்திய மிஷ னரி சங்கச் செயலாளராயுழைத்த சங். ஆர். வி. ஆசீர்வா தம் ஐயர் அவர்கள் என்னைப் பாளையங்கோட்டைக்கு அழைத்தனர். கல்வி மிகுந்த இடமாகையால், சற்று அச்சத்துடன், ஆனல் அதிக ஜெபத்துடனும், மனத் தாழ்மையுடனும் அங்கு சென்றேன்.

சில வாலிபர்கள் ஐயர் அவர்கள் வீட்டில் கூடவே, அவர்களுக்கு வாலிபத்திற்குரிய தூய்மையைக் குறித்துப் பேசி, யாவரும் சேர்ந்து பாளையங்கோட்டை ஊழியத்திற்காய் ஜெபித்தோம். அத்தியட்சர் அப்பா சாமி அவர்களது தந்தையான எட்டையாபுரம் ஜமீன் தாரின் சர்வாதிசாரியும், வழக்கறிஞருமாகிய ருவ் சாஹிப் யல் ஏ. எஸ். அப்பாசாமி அவர்களின் அழகிய 'மனோ ரமா' என்ற மாளிகையின் மேல்வீட்டில் என்னைத் தங்க வைத்தனர். 1918 ல் சாது சுந்தர்சிங் தென்னுடு வந்த போது அங்குதான் தங்கியிருந்தார். இயேசுவைச் சுமந்த கழுதைக்கு வஸ்திரங்கள் மேல் நடக்கும் வாய்ப்புக் கிடைக்கவேண்டியதுதானே. அங்குள்ள ஒய். எம். சி. ஏ. சார்பில் அழைப்புகள் அச்சிட்டு என்னைக்கொண்டு நான்கு கூட்டங்கள் நடத்தினர். ஒளியும் இருளும், ஆத்துமா, பிரமச்சக்கரம் (சிலுவைக்கு அக்காலத்தில் நான் கொடுத்த புதுப்பெயர்) சூரிய யுகம் ஆகிய தலைப் புக்களில் பேசினேன்.

இப்புதிய பெயர்களையும், எனது இளமையையும் குறித்துக் கேள்விப்பட்ட ஒரு பெருங் கூட்டம் நூற் ரூண்டு மண்டபத்தில் கூடிற்று. திரு. பி. ஏ. தங்கசாமி வக்கீல் தலைமை தாங்கினர். இரு வாலிபர் நான் குறிப்பிட்ட வசனங்களைப் படிக்க மேடைமீதிருந்தனர். ஒருமணி நேரம் பேசினேன். முப்பத்தேழு ஆண்டு களுக்குப்பின் இதை எழுதுகையில் அக்கூட்டத்தையும்

பேச்சையும் நினைத்து 'நான் அல்ல, தேவகிருபையே (1 கொரி. 15:10) அதைச் செய்தது' என்று எண்ணுகிறேன்.

எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். அந்த ஆச்சரியம் என் இளவயதாலும், குறிப்பெதுவுமின்றி நெடு நேரம் பற்பல வேதவாக்கியங்களைச் சுட்டிக் காட்டியதாலும், அதிகப் படிப்பு இல்லாவிடினும் எனது பேச்சில் கண்ட நியாயமுறை வாதத்தாலும் (Logical discourse), யாவற்றிலும் மேலாய் எனது ஆவியின் அனல்கொண்ட உண்மையான ஊக்கத்தாலுமே எழுந்ததெனலாம். பல இந்துக்கள் இக்கூட்டங்களில் வந்திருந்தனர். சிலர் முடிவில் சில கேள்விகளை எழுதி அனுப்பினர். ஏற்ற விடை பகரக்கூடிய அறிவு எனக்கில்லையாயினும் ஒருவாறு கூறிப் பிரிந்தேன்.

அந்நாட்களின் ஒரு ஞாயிறில் எனக்கு ஒன்பது கூட்டங்களில் பேச ஒழுங்காயிருந்தது. அதிகாலை முதலே சிறிதும் பெரிதுமான இக்கூட்டங்களில் மிதிவண்டி மீதேறிச் சென்று செய்தி கூறினேன். அன்று சாம் தீமோத்தேயு என்னும் ஒரு வாலிபன் (இப்போது திண்டுக்கல் C.S.I. உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர்) எனக்கு வழிகாட்டியாயிருந்தார். ஓடிஓடி பரலோக இராஜ்ஜியம் சமீபமாயிருக்கிறதென்று பிரசங்கித்தேன்.

ஒரே நாளில் பற்பல கூட்டங்களில் ஒருவர் பேசினால், எல்லா இடத்திலும் அவருக்கு ஒரே வல்லமை இருப்பதில்லை. எனது பெலவீனத்தை நான் உணரத்தக்கதாய் ஆண்டவர் என்னைத் தனியே விட்டுவிட்டதுபோல் தோன்றின வேளைகளும் இருந்தன. அதை மற்றவர்கள் உணர்ந்தார்களோ இல்லையோ நான் அறியேன். என் சுய முயற்சியால் பேசினேனே என்று நான் தயங்கினவேளைகளில், கேட்டோர் தங்களுக்குத் தேவ நா து கிடைத்ததாகச் சாட்சி பகர்ந்ததும் உண்டு. என்னை வல்லமையாய் உபயோகித்தார் என்று

...ண்டுமென்றிருந்த வேளைகளில் நன்றாயில்லை என்பாரும் ...ண்டு. இதுவும் அந்தரங்கமே. ஆண்டவர் வழிகளை ...ிதன் முற்றிலும் அறியக் கூடுமோ?

அக்காலத்து ஏழாம் பிரசங்கம் பரிதிரித்துவ ஆலயத்தின் ...லே ஆராதனையில் இருந்தது. வானம் சற்று மந்தாரமிட் ...ந்தததைக் கண்ட நான் "பெருமழையின் இரைச் ...ல் கேட்கப்படுகிறது" (1 இரா. 18: 41) என்ற எலியா ...ின் கூற்றை வாக்கியமாக எடுத்தேன். மூன்றுமுறை ...க்கியத்தைச் சொல்லவும் உண்மையாகவே ஒரு பெரு ...ழை பெய்யத் துவக்கிற்று. ஆலயத்தில் கூடினோர் ...னைவரும் ஆச்சரியப்பட்டார்கள். இன்றும் அதை ...னைப்பவர்கள் பலர் இருக்கிறார்கள்.

எட்டாம் பிரசங்கம் தற்போது 'சார்ஜென்டு ...றேயினிங் ஸ்கூல்' இருக்கும் (அக்கால் சென்ட் ...ான்ஸ் ஹைஸ்கூலின்) விளாகத்தில் இருந்தது. அது ...ளிக்கூட்டம். எட்டு மணிமுதல் இரவு ஒன்பது ...டும். பரந்த வெளியில் நகரமக்கள் திரண்டு வந்து ...ிருந்து அமர, ஆவி விளக்கொன்றின் (gas light) ...ன் நின்று 'சிலநாளைக்குப் பின்பு இளையமகன் எல் ...வற்றையும் சேர்த்துக்கொண்டு தூரதேசம் போனான்" ...ன்ற வாக்கியத்தை எடுத்து, இளைய மகனை அங்கு ...ங்கும் அலைத்து, ஒன்பது மணிக்குத் தகப்பன் வீடு ...ொண்டு சேர்த்தேன். பல பள்ளிமாணவர் உண்மை ...ாகவே அன்றிரவுமுதல் தந்தை வீட்டை நோக்கி ...ங்கத் துவக்கினர். அன்னவரில் சிலர் இன்றும் திரு ...ல்வேலி நாட்டிற்குள் குருத்துவ ஊழியத்திலும் ஈடு ...ட்டு நல்லூழியஞ் செய்து வருகின்றனர்.

இக்கூட்டத்தில் நான் பேசுவதையும், பெருங்கூட் ...மாக மக்கள் அமைதியாய்க் கேட்டுக்கொண்டிருப் ...பதையும், காலஞ்சென்ற செல்வின் பிஷப் பங்களாவில் ...அன்று அவருடன் தங்கியிருந்த ஒரு இளம் மிஷனரி, ...னக்குப் பின்னாக ஒரு பூவரச மர மறைவில் நின்று ...கவனித்ததையும, யாவற்றையும உற்று நோக்கிக்கொண்

டிருந்ததையும் பிரசங்க மத்தியில் நான் தற்செயலாய்
கண்டேன். "கல்லோடு கண்ணினை நோக்கு ஒப்பி
வாய்ச் சொற்களால் என்ன பயனும் இல", என்
படி எங்களிருவர் கண்களும் அன்றிரவு தம்முள்
குவிப் பார்த்தன. கூட்டம் முடிந்தபின், 'அந்த
ளரி யார்?' எனக் கேட்டு அது ஸ்டீபன் நீல்
என்று அறிந்தேன். அன்று அவருக்கு வயது இரு
பத்தேழு. எனக்கு இருபத்திமூன்று. அதற்குப்பின் ஒன்
பதரை மணிக்கு ஒன்பதாம் கூட்டமும் நடத்திக் க
படைத்து, மறுநாள் நண்பர் சிலருடன் தங்கி இ
பாறுத் தட்டபபாறைக்குச் சென்றேன்.

அங்குள்ள நண்பரிடம் முந்தின இரவு கிடைத்
'காதலினை'க் குறித்துச் சொன்னேன். என் குறிப்பு
கோட்டிலும் எழுதினேன். "உலக முறையில் கடவுள்
என்னை ஒருகாலம் உயர்த்துவார். அதற்கு இந்
ஸ்டீபன் நீல் ஐயர் காரணமாயிருப்பார். எப்பொழுது,
எப்படி ஒன்றும் இப்பொழுது அறியேன்" என்றேன்.
நான் அவருடன் உரையாடினதேயில்லை. 'எப்படி
உனக்குத் தெரியும்' என்ற என் நண்பர்கள் கேள்விக்கு,
என் உள்ளத்தில் உதித்த ஆழமான எண்ணத்தை
மட்டும் ஆதாரமாக்கி 'ஆண்டவர் என்னிடம் சொன்னார்'
என்று அவர்களிடம் கூறினேன்.

1927 ஏப்ரல் மாதக் கன்வென்ஷன். டக்கர்
(Tucker) அம்மாள்புரம் கன்வென்ஷன் என்று அது அழை
யப்பட்டு வந்தது. உவாக்கர் ஐயர் காலத்து உணர்ச்சி
யால் புத்துயிரடைந்த சிலர் அங்கு கூடி ஜெபத்தி
லும், வேதவாசிப்பிலும், அன்னியோன்னியத்திலும்
அப்பம் பிட்குதலிலும் தரித்திருந்தார்கள். வரவர இச
குருமார் ஆவிக்குரிய கூட்டமாய் மாறிற்று. சபையா
சிலரும் அதில் பங்குகொள்வார்கள். நூறுபேருக்கு
கமாய்க் கூடுவதில்லை. வசதிக்கேற்ப, அக்காட்களில்
அக்கூட்டம் பழைய பேட்டையிலேயே நடத்தப்பட்டு
வந்தது. இதின் செயலாளரில் ஒருவர் சன். ஆர்.

ஆசீர்வாதம் ஐயர். அந்த ஆண்டு, அக்கூட்டத்தை நடத்த பிஷப் பெக்கன்ஹாம் உவால்ஷ் பண்டிதரும், அவருக்கு உதவியாக ஸ்டீபன் நீல் ஐயரும் குறிக்கப்பட்டிருந்தனர்.

தந்தைபோன்ற ஆசீர்வாதம் ஐயர் அவர்கள் எனக்குரிய சாப்பாட்டுச் செலவைத் தாம் தருவதாகவும், அங்கு சென்றால் பல குருமாரைச் சந்திக்க வாய்ப்பு ஏற்படுமென்றும், அது இன்னும் பல இடங்களில் உழைக்க ஏற்ற வழி எனக்கு வகுக்கும் என்றும், அந்நியோந்நியத்திற்கும் உதவலாமென்று சொன்னதற்கிசைய நானும் அங்கு சென்றேன்.

மாலை வேளையில் மக்கள் வந்தனர். அவர்களில் பலர் என்னை இதற்குமுன் கண்டிருந்தனர். பலர் என்னைக் குறித்துக் கேள்விப்பட்டுமிருந்தனர். இக்கூட்டங்களில் எப்படியாயினும் என்னைப் பிரசங்கிக்கச் செய்ய வேண்டுமென்று சபையூழியரல்லாத சிலர் விரும்பினர். அவர்கள் நிருவாகிகளை வேண்டியதின் பயனாய், காலை ஐந்து முதல் ஐந்து இருபதுவரை, விருப்பமுடையோருக்கு, 'சகாயம் பிரசங்கியார்' காலைத் தியானம் நடத்துவார் என்று, அன்றிரவு உணவுவேளையில் அறிவிக்கப்பட்டது. இது நிகழ்ச்சி நிரலில் இல்லாதது.

கூட்டத்திற்கு பிஷப் குறித்திருந்த தலைப்புகள் முறையே பாவம், பரிசுத்தம், அன்பு, பலி என்பன. மறுநாட் காலையில், மிகுந்த பயத்துடன் இளைஞனாகிய நான், வேத சாஸ்திரிகள் நிறைந்த அக்கூட்டத்தில் "ஆழத்தின்மேல் இருள் இருந்தது" ஆதி. 1:2 என்ற வசனத்தில் பாவத்தைக் குறித்து ஒரு தியானம் நடத்தினேன். காலை எட்டு மணிக்கு பிஷப்பவர்களின் முதற் பிரசங்கம். நான் சொன்னதையே அவரும் சொன்னார். அவர் படித்திருந்த நூல்கள் எதையும் நான் கண்டதோ, கேட்டதோ, படித்ததோயில்லை. ஆயினும் இருவர் கூற்றும் ஒத்து இருந்ததைக் கண்ட யாவரும் வியப்படைந்தனர்.

இரண்டாம் நாட் காலையில் நான் 'தேவன் வெ... சம் உண்டாகக் கடவது என்றார்', என்ற ஒளி... குறித்துப் பேசினேன். எட்டுமணிக் கூட்டத்தில் ... சுத்தத்தைப்பற்றிய பிஷப்பின் உபன்னியாசமும் ... கூறிமுடித்ததற்கு மிகவும் ஒத்திருந்தது. நான் கு... பிட்ட வேத வசனங்களையே அவரும் குறிப்பிட்டா... இவைகளைக்கேட்ட சிலர், உண்மையுடைய இருவரு... கும் ஒரே ஆவி கற்றுக்கொடுத்திருக்கிறதென்றன... முதிய குருக்கள் சிலர், பொறாமை கொண்டு அ... தியாயிருந்து தனித் தியானம்செய்வதற்கு நான் கட... திய கூட்டம தடையெனக் கூச்சலிட்டனர். அவர்க... கன்வென்ஷன் செயலாளர்களை மிரட்டி இறுதி இரண்... நாட் தியானங்களையும் நிறுத்திப்போட்டனர்.

இது எனக்கு (வாலிபத்தினிமித்தம்) வியப்பையு... வெறுப்பையும், கசப்பையும் கொடுத்தது. குமுறிய ... ஒருவாறு அமர்ந்திருந்தேன். இந்த இரண்டு கூட்... களிலும் ஸ்டீபன் நீல் ஐயர் காண காணாத வண்... மறைவிலிருந்து என்பேச்சைக் கேட்டிருந்தார். நான்... நாள் அவர் என்னை அழைத்து எனது கதைபை... கேட்டார். நான் குணப்பட்டது முதல், நடந்த யாவ... றையும் சுருக்கிச் சொன்னேன். வியப்புடன் கேட்... அவர், என்மேல் பாசங்கொண்டார். அவர் என... சட்டை கிழிந்திருந்ததைக் கண்டு ஐந்து ரூபாய் தந்... ஒரு புதிய சட்டை தைத்துக்கொள்ளும்படிக் கூறி... நானோ அதை வாங்க மறுத்து, இந்த ஊழியத்தி... பணம வாங்குவது கூடாது என்று தீர்மானித்த ... ரத்தையும் சொல்லவே, அவர் ஆச்சரியப்பட்டு ... வாறு வாங்குவது தவறல்ல என்று உபதேசித்த... நான் கேட்கவில்லை. அவர் எனேமல் கொண்... அன்பை இது பெருக்கிற்று என்றே நான் என்... கிறேன்.

சிலநாட்கள் இளைப்பாற மறுபடியும் நான் ... ஆவிக்குரிய இரு குழந்தைகளாகிய ஜான் ஹெ...

திருமதி ராஜம்மாள், அஜூ என்பவர்கள் வீட்டிற்குச் சென்றேன், அங்கிருக்கையில் வி. டி. சகாயம், பெத்தேல், மீனாட்சிபுரம், ஒட்டப்பிடாரம் என்ற முகவரியில் எனக்குத் தபாலில் முத்திரையொட்டாத ஒரு கடிதம் வந்தது. அதைப் பெறுவதா மறுப்பதா என்று தருக்கம் பண்ணியபின் என் நண்பர்கள் இரண்டு அணா கொடுத்து அதை வாங்கினர். அதைத் திறக்குமுன் யாவரும் இது எங்கிருந்து வந்திருக்கலாம் என்று யூகிக்க முயன்றோம். திருமதி அஜூ, இது வெள்ளைக்காரர் கையெழுத்து என்று சாதித்தனர். திறந்து பார்த்தபோது அது ஸ்டீபன் நீல் ஐயர் எழுதியதென்று கண்டோம். அதற்குள் ஐந்து ரூபாய் நோட்டு இருந்தது.

அக்கடிதத்தில், என் பெருமையைக் கண்டித்த அன்பான ஆலோசனைகள் இருந்தன. மேலும் தேவ ஊழியம் நம்மாலேயன்றி நடவாது என்று எண்ணுதல் தவறு (None of us is indispenable to the service of God) என்றும், என்னுடைய போக்குவரத்தைக் குறித்து, நான் அவருக்குக் கடிதம் எழுதிக் கொண்டேயிருக்க வேண்டுமென்றும் கேட்டிருந்தார்.

---

# பேய்களைத் துரத்துவார்கள்

இடம் பாஞ்சாலங்குறிச்சி, ஒட்டப்பிடாரம், திருநெல்வேலி ஜில்லா, பெத்தேல் என்னும் ஒரு வீடும், நாற்பது ஏக்கர் வயல் நிலங்களும். இவற்றின் உரிமையாளர்தான் அஜூ குடும்பம்.

அங்கு அக்காலம் ஒரு மெதடிஸ்ட் ஆலயமும், சிறு சபையுமிருந்தன. அஜூ வீட்டிலிருந்தவர்கள் எழு பத்தைந்து வயதுடைய ஐசக் என்ற டிறில் மாஸ்டர்,

எழுபது வயதுடைய அவர் மனைவி, முப்பத்தொரு வயது டையமகள் ராஜம்மாள், முப்பத்தைந்து வயதுடைய கணவர் ஹென்றி அஜு, பணிவிடையாள் இருபத்தெட்டு வயதுடைய அன்னம்மாள் என்ற விதவை, அவளது ஒரே மகள் ஏழு வயதான சிறுமி, இவர்களைப்பார்க்க வந்த அன்னம்மாளின் தகப்பன் ஐம்பது வயதான கிருவை, இருபத்திமூன்று வயதான சகாயம் பிரசங்கியார் இவர்களே. காலம்: 1927 பெரிய வெள்ளிக்கிழமை பகல்.

பகல் பன்னிரண்டு மணிக்கு அங்கிருந்த மெதடிஸ்டு எப்பிஸ்கோப்பல் ஆலயத்தில் பெரிய வெள்ளி ஆராதனைக்கு இவர்கள் யாவரும வந்திருந்தனர். நான் ஏழு பிரசங்கங்களை முடித்தேன். அன்னம்மாள் ஆராதனை முழுவதும் தூங்கிக்கொண்டேயிருந்தாள். அன்றிரவு குடும்ப ஜெபத்திலும் அவள் அப்படியே தூங்கக் கண்டு, "இதென்ன இவளுக்குப் பேயா பிடித்திருக்கிறது. இப்படித் தூங்குகிறளே" என்று நான் கேட்கவே, அவள் தகப்பன் "ஆம் ஐயா. இவளுக்குப் பேய் உண்டு. உங்களால் துரத்தக் கூடுமானல் பேயை நான் வரவழைக்கிறேன்" என்றார். எனக்கொன்றும் புரியவில்லை. 'வருத்துப் பார்க்கலாம்' எனவே, ஒரு ஓட்டில் நெருப்புத் தழலை வைத்து, இவளை அப்பக்கம் உட்காரச்செய்து, நெருப்பில் சாம்பிராணியைத் தூவவே இவள் முகரூபம் வேறுபட்டு, அவள் தலையைச் சுழற்றி இருந்த இடத்திலிருந்தே ஆடத் துவக்கினள். "இதுதான் பேய்; துரத்துங்கள்", எனவே, நான் அத்துறையில் முன் பழக்கமில்லாதவனுகையால் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்தேன். தவிரவும் பேயையும், அது மனிதரைப் பிடிப்பதையும் நான் நம்பாதவன்.

அரைமணி நேரமளவும் ஆடின அன்னம்மாள் படிப்படியாய ஆட்டத்தைக் குறைத்து பின் எழுந்து விட்டு வேலைகளைச் செய்யச் சென்றாள். வீட்டார் யாவரும் "ஆடும் வேளையில் அவளிடம் பெயர் கேட்கவேண்

டும்". என்று என்னிடம் கூறினர். அடுத்தமுறை ஆடும்போது பார்க்கலாமென்று கூறி, சனி இரவு ஜெப வேளையில் ஆடத்துவக்கினள்இவளிடம் "நீ யார்? உன் பெயர் என்ன?" என்று கேட்டேன். அவள், "நான் கொண்டி ஆண்டிமுத்து. என் ஊர் பாம்பன். நான் அத்திமரத்திலே நான்றுகொண்டு செத்தேன். இவள் அங்கே விறகு பொறுக்க பகல் பன்னிரண்டு மணிக்கு வந்தாள். நான் இவளைப் பிடித்து பதினெட்டு வருடமாய் இவளுக்குள் இருக்கிறேன். பலர் என்னைத் துரத்திவிடப் பார்த்தார்கள். நான் போகவில்லை. இப்போது ஒரு சிறுவன் கையில் அகப்பட்டுக்கொண்டேனே" என்று துடித்தாள்.

அவளை இன்னும் கேள்வி கேட்கவேண்டுமென்று பிறர் யோசனைகூற 'நீ போகிறாயா?' என்றேன். 'ஆம்' என்றாள். 'எங்கே போவாய்?' என, அவள் தன் கையை ஒரு திசைக்குச் சுட்டி, 'அந்தக் கிணற்றில்' என்றாள். 'நீ போ' என்றதும், அவள் விரைவாக எழுந்து, அவ்வீட்டின் கொண்டி மாட்டியிருந்த முன் கதவுகளைப் பிடித்திழுத்துத், திறந்து, ஒரே ஓட்டமாய் ஓடி, வீட்டின் பிற்புறத்தில் பதினைந்து கஜ தூரத்திலிருந்த கிணற்றில் குதித்துவிட்டாள்.

அது நிலாக்காலம். யாவரும் பின்னால் ஓடினோம். அன்று சதுரமானது. கமலைக் கிணறு. பதினைந்து அடிக்குக் கீழ் பத்தடி நீர் இருந்தது. அதின் மூலையோரமாய் உள்ளே இறங்க, பல கற்கள் நீட்டி விடப்பட்டிருந்தன.

அவள் தந்தை சிருபை என்பவர் அவ்ற்றில் கால் வைத்து இறங்கினர். அன்னம்மாளுக்கு நீந்தத் தெரியும். அவள் நீந்திச் சுழன்றாள். தகப்பன் அவளை அக்கற்கள் வழியாய் மேலேற்றினர். அம்மட்டும் நடந்தொன்றும் அவளுக்குத் தெரியவில்லை. பின்பு அவள் "ஏன் என்துணி நனைந்திருக்கிறது?" என்று கேட்டாள்.

யாவரும் கடவுளை மகிமைப்படுத்தினார்கள். அவன் சு
மடைந்தான்.

மறுநாள் கண்டேன். கிருபை தூக்கத்திலிருந்து எழு
ம்பவேயில்லை. காலை ஏழுமணி மட்டும் மரக்கட்டில் ஒ
ன்றில் படுத்து உருண்டுகொண்டே இருந்தார். வீட்டு
த்தலைவர் என்னை நோக்கி "ஐயா, கிருபையைப் பாரு
ங்கள். கொஞ்சம் வித்தியாசமாய்த் தோன்றுகிறது"
என்றார். நான் அவர் பக்கம் சென்று மனதிற்
குள் ஜெபித்து நிற்க, அம்மனிதன் பற்களை
கடிக்கவும் துப்பவும் தொடங்கவே, 'நீ யார்,' என்றேன்.
"தெரியாதா? நான் பேய்," என்றார் கிருபை.

உடனே விவரத்தை வீட்டாருக்குச் சொல்லவே
அவர்கள் எனக்கு இன்னும் பல யோசனைகளைக் கூ
"ஐயா இதை ஊருக்கு வெளியே போகச் சொல்
வேண்டும்", என்றனர். எனது முன் ஒழுங்கின்படி
அன்று நான் வேறு ஊருக்குச் செல்லவேண்டியது.
போகுமுன் கிருபையைச் சீர்படுத்திவிட்டுச் செல்
கிறேன் என்றேன். அடையாளம் காட்டக் கேட்
வேண்டும் என்று வேறு சிலர் சொல்ல, அன்று பல்
பல்லின்றி தனிக்கு பாவனையும் கூட்டிவைத்து
கிருபையைச் சுற்றி 'இயேசுவின் நாமமே' போன்ற
பல பாட்டுக்களைப் பாடச் செய்கையில், கிருபைக்கு
ஆட்டம் வந்தது. பல கேள்விகளைக் கேட்டு 'ஊர் எ
ல்லைக்கு வெளியே அடையாளங்காட்டிப் போ' என்ற
தும் கிருபையார் ஓடினார். வாசலில் கிடந்த கல்லை
பிடுங்கித் தலைமேலிருத்திச் சுமந்துகொண்டே ஓடினா

அவ்வூர் மக்கள் கொட்டி எழுப்பினர். இதற்குள்
அவர்களில் பலரும் வந்து கூடிவிட்டனர். யாவரும் ஓட
த் தொடங்கினர். அன்னையாள் ஒரு குடம் நீரைச் சுமந்
து வந்தாள். நான் வேத புத்தகத்தைக் கொண்டோ
டினேன். எப்பட்டுப ஓடுவார் என்று ஒருவருக்கு
ம் தெரியாது. கால் மைல் தொலைக்கப்பால் ஒரு ம
ரத்தில் கல்லை எறிந்துவிட்டுக் கிருபை கீழே வி

தார். இதைத் தெளிந்து ஜெபிக்க யாவரும் மிக விரும்பினோம். நான் முன் ஒழுங்கின்படியே அம்பாசமுத்திரம் பக்கம் சென்றேன்.

பிரசங்கியார் பேயோட்டியும் ஆகிவிட்டார்! இது என்னில் பெருமையைப் பிறப்பித்தது. நண்பருக்கெல்லாம் இதே பேச்சுத்தான். வாலிபர் சிலரைக் கூட்டி, ஒரு படைமுயற்சி வாரம் ஒழுங்கு செய்து, அதின் தலைவனாய் ஒரு வார வேலைக்குக். கீழ் ஆம்பூர், கருத்தப்புளியூர், கல்யாணிபுரம் முதலிய இடங்களுக்குச் சென்றேன். அன்று என்னுடன் சென்ற சிலர் இன்று போதகர்களாய் உழைத்துவருகின்றனர். ஒரு சாதுவும் (தாமஸ் இரத்தினம) அக்கூட்டத்திலிருந்தார். யாவரும் இருபத்தைந்து வயதுக்குட்பட்டவர்களே. பாட்டும், ஜெபமும், வேத ஆராய்ச்சியும், வெளிப் பிரசங்கமும், இராக்கூட்டமும், தனிநபர் சந்திப்பும்" அன்று வாலிபருக்கு உற்சாகமாகவேயிருந்தன.

எனது அனுபவத்தைக் கூறவே, சாதுவுக்கு இவை பழக்கமாயிருந்தபடியால், அவர் வேறுசில யோசனையும தந்தார். இப்படிப்பட்ட ஆட்களைக் குணப்படுத்துகையில் "நீ இவனை விட்டுப் புறப்பட்டுப் போ என்று சொல்லவேண்டும். திரும்பி வரமாட்டேன் என்று பைபிளில் சத்தியம் பண்ணச் செய்யவேண்டும்" என்ற புதிய யோசனைகளையும் மனதில் கொண்டவனாய் நான் ஒரு வார ஊழியத்துக்குப்பின் மறுபடியும் பெத்தேலுக்கு இளைப்பாறச் சென்றேன்.

வழக்கம்போல் யாவரும் என்னை அன்புடன் வரவேற்றனர். அன்னம்மாள் மட்டும் துக்கமுகமுடையவளாக இருந்தாள். இரவு ஜெபத்துக்கு வர மனமின்றி அவள் சாக்குப்போக்குச் சொல்லத் தொடங்கினாள். அவளை அழைத்துவரவே அன்றும் அவள் ஆடத்தொடங்கினாள்.

அன்றையத்தினம் பெயரைக் கேட்கையில், "நான் ஜாதியில் ஆசாரி. பெயர் பொன்னம்மாள்.

ஊர் கோவில்பட்டி. [illegible]
[illegible]
[illegible]
என்று கதை கூறிவே, [illegible]
செயல்முறைப் பற்றிப் [illegible]
[illegible]

[illegible] தவன் சொல்ல
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
தொடங்கினுள். [illegible]
வெளிப்பேற்றப்பட்டது. [illegible]
[illegible]

[illegible]

அவளைவிட்டுப் பிரிய முடியவில்லை. 'என்னைக் கட்டி விட்டாயே' என்று கதறத் தொடங்கினான். குறித்த அளவு கதறலுக்குப்பின் கட்டிய முடிப்பை அவிழ்த்து அந்தப் பேயையும் துரத்தினேன். பேய் ஓடிற்று.

"விண்ணவரும் பண்ணுடன் கொண்டாடும் நாமம்
வேதாளங் கண்டு பயந்தோடும் நாமம் [—கடும்
இயேசுவின் நாமமே திருநாமம்".

இப்படியாக ஆறு பேய்கள் ஒன்றன்பின் ஒன்றாய் அன்னமாளிடமிருந்து ஓட்டப்படவே, ஏழு பிசாசுகளை இயேசுநாதரும் இப்படித்தான் மகதலேனா மரியாளிடமிருந்து (லூக். 8: 2) ஒவ்வொன்றாகத் துரத்தியிருப்பார் என்று நினைத்தேன்.

முடிவாக, மறுநாள் இரவும் அன்னம்மாள் ஜெபவேளையில் ஆடத்தொடங்கவே, அன்று அவள் மனித ஆவி பிடித்தவளாக அல்ல, ஒரு மிருகம்போலவே தோன்றினாள். அவள் முகரூபம் வேறுபட்டது. குரங்கின் ஜாடை அதில் தோன்றிற்று. அவளுடைய தம்பி ஒருவன் 'அனுமார் சித்தை' வைத்துப் பழகிய மந்திரவாதி. ஒருமுறை அவன் நீண்டகாலம் நோய்வாய்ப்படவே கிருபை மலையாளத்து மந்திரவாதிகளை அழைப்பித்தார். அவர்கள் இது 'சித்துத்தோஷம்' என்றனர். அனுமானைச் சேவித்த இவன் அச்சேவையில் உண்மையாயிராதபடியால் அனுமானே இவனை வதைக்கிறது என்றனர். அனுமான் தங்குவதற்கு ஏற்ற ஓர் ஆள் கிடைத்தால் இவனைச் சுகப்படுத்த இயலும் என்று அவர்கள் கூறவே, கிருபை விதவையான மகள் அன்னம்மாளை ஈடாகக் கொடுக்க உடன்பட்டார். மந்திரவாதிகள் தலைமுடிக் கயிறு வழியாய் அவனிடமிருந்த அனுமானை அன்னம்மாளுக்குள் ஏற்றிவிட்டார்கள்.

அன்னம்மாள் குரங்குபோல ஆடுவதைக் கண்டவர்கள் என்னண்டை வந்து "ஐயா இது அனுமான். இதைக்கொண்டுதான் பிறர் பேயைத் துரத்துவார்கள்.

அனுமானைத் துரத்துவது எளிதல்ல; ஆகையால் அவ இருந்துவிட்டுப்போகட்டும்", என்றனர். நானோ, "அப்படியல்ல. இயேசுநாதர் எல்லா அதிகாரமும் தந்திருக்கிறார். ஆகையால் வழக்கம்போல் இதையும் துரத்துவோம்" என்றேன். விட்டார் அதற்கு இடங்கொடுக்கவில்லை.

எனக்குள் பெருமை நுழைந்தது. இருபத்திமூன்று வயதான வாலிபப் பிரசங்கி, என்னைப்போல் பேய் துரத்துவார் எவரும் இல்லையென்று மனதில் நான் எண்ணவே, வல்லமை என்னைவிட்டு நீங்கிற்று. நெடுநேரம் அன்னம்மாளை ஆடவிட்டு வேடிக்கை பார்த்தோம். ஒருவர் அவளைச் செருப்பால் பலமாய் அடித்தார். அவளுக்கோ ஒன்றும் தெரியவில்லை. பின் நான் வழக்கம்போல மனதை ஒருமுகப்படுத்தி ஜெபிக்க முயன்றும் என்னாலே கூடாமல் போயிற்று. அன்றிரவு அவளை அவள் போக்கிலேயே விட்டுவிட்டோம். காலையில் அவள் எழுந்திருக்கவில்லை. பின் ஒவ்வொருவராய் அவள் பக்கஞ் சென்று 'பிரசங்கியார் போய் விட்டார், எழுந்திரு' என்று சொல்லிக்கொண்டேயிருக்க அவள் எழுந்து விகார முகத்துடன் பிறர் பயப்படும் விதத்தில் நடந்துகொண்டாள். மறுநாள் அவளை அந்நிலைமையிலேயே அவளுடைய சொந்த ஊருக்கு அனுப்பிவிட்டார்கள்.

பெருமையாலுண்டான படுதோல்வி அது. என் மேல் பிறருக்கு நம்பிக்கையிருந்த வேளைதான் பேய் துரத்த என்னாலாயிற்று.* மனதின் வலிமையை மனிதன் இன்னும் முற்றிலும் அறியவில்லை. அவன் சென்ற நாளிலிருந்தே அந்த வீட்டில் பற்பல விபரீத நோய்கள் தோன்றின. முப்பத்தொரு வயதுடைய ராஜம்மாள் டீச்சர் இரவு சொப்பனத்தில் அவளை

---

*இயேசுநாதரும் தம் மக்களுடைய அவிசுவாசத்தின் நிமித்தம் வல்ல செயல் செய்ய முடியாமல் போயிற்று. (மாற்கு 6:5)

கண்டு பயந்து காய்ச்சலாய்ப் படுத்தார்கள். ஆஸ்பத்திரி எதுவுமில்லாப் பட்டிக்காடு அது. ஜெபமே சிகிச்சை. அப்பொழுது அங்கு தெலுங்கு நாட்டிலிருந்து ராஜம்மாளின் மூத்த சகோதரியும் மூன்று பிள்ளைகளும் வந்திருந்தனர். அவர்கள் ஒருவர்பின் ஒருவராய் கடுஞ் சுரமாய்ப் படுத்தனர். வீட்டு வேலைக்கு அன்னம்மாவும் இல்லை. நானே (சொந்த வீடெனப் பழகியதால்) பசாலே அரைப்பதுமுதல் தண்ணீர் எடுப்பது மட்டுமுள்ள பல வேலைகளையும் செய்து கொடுத்தேன்.

வீட்டுத் தலைவர் பணிவிடையாள் ஒருத்தியைத் தேடித் தங்கள் இனத்தார் இருந்த ஊருக்குச் சென்றார். அடைந்த தோல்வியை ஒப்புக்கொண்டு, வெட்கத்துடன் அவ்வீட்டிலிருந்து வெளியேறிவிட நானும் முடிவுசெய்தேன். ஆயினும் உபவாசத்துடன் ஜெபித்தேன். காலையில் படுக்கையில் காப்பியருந்தும் பழக்கமுடைய வீட்டார் அவர்கள். ஒருநாள் 'பெட்' காப்பியை குடித்தபின் நான் மறுபடியும் நித்திரையடைந்துவிட்டேன். அவ்வேளையில் ஒரு நூதனக் கனுக் கண்டேன். அக்கனுவில், குழந்தையையுடைய ஒரு தாய் வேலைசெய்ய வந்து சில நாட்கள் இருப்பதுபோலவும், ஒரு நாள் அன்னம்மாளே திடீரென்று வருவதுபோலவும், வீட்டில் நுழைந்த மாத்திரத்தில் சிறுவன் ஒருவனைப் பிடித்துக் கீழே தள்ளியபின், அறை அறையாகச் சென்று யாவருக்கும் வணக்கஞ் சொல்லி, என்முன் வந்தவேளை நான் அவள் தலையில் கைவைத்து ஜெபிப்பதாகவும் தோன்றிற்று. இதை உடனேயே வீட்டாருக்குத் தெரிவித்தேன்.

அன்று காலை பதினொரு மணிக்கு வீட்டுத்தலைவர் ஒரு குழந்தையையுடைய பணிவிடையாள் ஒருத்தியைக் கொண்டுவந்தார். ஆகையால் எனது கனு அப்படியே நிறைவேறும் என்பதை யாவரும் நம்பினர். மறுநாள், இலங்கையில் அக்காலம தங்கியுழைத்த, ராஜம்மாளின் சகோதரனது மூன்று வயதுள்ள ஒரே மகனுகிய

கிழூட்டன், திடீரென இறந்துபோனதாகத் தந்தி வந்த
தூத்துக்குடிவழி சனிக்கிழமைதோறும் அக்காட்க
கொழும்பிலிருந்து கப்பல் வரும். கிழூட்டனைச் சாவ
கொடுத்த தகப்பன் அவ்வாறே பெத்தேல் வந்தா
அன்று காலை அன்னம்மாளும் திடீரென்று வந்தாள்.
அவளது விகார ரூபம் மாறவில்லை. வீடு அழுகையா
நிரம்பிற்று.

இரவு யாவரும் ஜெபத்துக்காகக் கூடவும் அ
னம்மாள் ஆடத்தொடங்கினள். நான்முழுவதும் உப
வாசத்தில் தரித்திருந்த நான், உடனேயே அவளுடைய
தலையில் வழக்கம்போல் வேதபுத்தகத்தை வைத்
ஜெபிக்க அவள், "நான் இலங்கையை எரித்த அனுமான்;
என்னை இவன் செருப்பால் அடித்தான்; நான் அவ
குழந்தையை எடுத்தேன்; இப்போ நான் போகிறேன்"
என்று மிகுந்த சத்தமிட்டுக் கதறிக் கீழேவிழுந்தாள்.
அனுமான் போய்விட்டான்.

அன்னம்மாள் மறுபடியும் கலியாணஞ் செய்
இன்றும் (1964) உக்கிரமன்கோட்டை என்ற ஊரி
தங்கிவருகிறாள். 1934 ல் இவள் கதையை 'சா
பேயும்' என்ற புத்தகமாக வெளியிட்டிருந்தேன்.

## பேய்கள்

மனதின் வலிமையை முற்கால மக்கள் இக்காலத்தவரை
போல் நன்கறிந்திலர். ஆகையால் பயத்துக்கிடமானவற்றை
பேயால் வந்ததென நினைத்தனர். "பேந்தப் பேந்த விழிக்கிறான்"
என்னும் வழக்கச் சொல்லை நோக்குக. பேயைக் கண்ட
லேற்படும் குணமே பயம். Fear, Fiend என்ற ஆங்கில
சொற்களை நோக்குக. பயத்தால் எழுவதே பேய். இறந்து
போன மக்களின் ஆவி உயிரோடிருப்பவர்களுள் புகும் என்ப
விவிலிய காலத்து மேலை ஆசிய மக்களின் எண்ணம். அவ
களுக்கும், தமிழ்நாட்டு மக்களாகிய திராவிடருக்கும் இக்கொ
கையில் ஒருமைப்பாடு மிகுதி. பண்டைத் தமிழக மக்களுக்கு
அரப்பா, மகேஞ்சாதாரோ மக்களின் பழக்கவழக்கப் பண்ப

களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழர் நடுத்தரைக் கடல் பிராந்தியங்களிலிருந்து இந்நாடு வந்திருக்கக்கூடும் என்று ஒரு சாரார் நினைக்கின்றனர். இதற்கெதிராய் இந்நாடே பண்டு குமரியா என்றும், கொண்ட வனம் என்றும், நாவல் மரங்கள் நிறைந்த நாவலந் தீவு என்றும் (இதுவே ஜம்புதீபம், நாவல்= ஜாமுன்—வடமொழி) கூறுவர் மறுசாரார். நடக்கக்கூடாத காரியங்கள் நடந்ததாகக் கூறும்போது அதனை 'ஜாமபவான் காலத்திலா' என்று மலையாளிகள் கேட்பதை நோக்குக.

இந்தியா, இலங்கை, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா யாவும் ஒரே தரையாயிருந்த காலமுண்டு என்றும், அந்நாட்டிலேயே ஆதிமனிதன் தோன்றினான் என்றும், அவன் மொழி தமிழ் மொழி போன்றதாயிருக்கவேண்டுமென்றும், அத்தமிழரே த்ரமிட, திராவிடர், அறவாடு (தெலுங்கு), அரபியர், Druids (பிரிட்டனின் முற்காலக் குடிகள்) ஸ்பெயின் நாட்டின் Basque என்ற பழங்குடி மக்கள் ஆகியோர் என்றும் அறிஞர்கள் கூறிவருகின்றனர்.

பேய்பிடிக்கும் மனநோய் இவ்வகுப்பினரில் மட்டும் இதே வடிவத்தில் காணப்படுகின்றது இந்தியாவில் ஆரியம் கலந்த பெருங்குடையோர் நடுவில் இந்தப் பேய்பிடித்தல் இல்லை. அங்கு மனநோய்கள் வேறு வடிவங்களில் தோன்றும்.

மந்திரத்தால் பேயை வெல்லலாம் என்பது மக்கள் நம்பிக்கை. அது முற்றிலும் உண்மையே. மந்திரம் என்பது மன்+திறம்—மனத்திறம், அதாவது மனதின் உரம்—வலிமைதான். மனத் திடத்தால் பயத்தை வெல்லலாம் என்பது வெளிப்படை. பயத்தால் வந்த மனப்பேயை மனத்திடனுடையோர் துரத்துவர் என்பது உண்மை. இந்த மனத்திடன் மக்களுக்குப் பயிற்சியாலும், கல்வியாலும், பக்தியாலும் ஏற்படக்கூடும். உங்கள் பிள்ளைகள் எதனால் பேயைத் துரத்துகிறார்கள். (மத். 12:27) என்று இயேசு நாதர் கூறியதையும், நமது கூட்டத்தைச் சேராத ஒருவன் பேயைத் துரத்தக்கண்டு அவனை நாங்கள் தடுத்தோமென்று அவருடைய சீடர்கள் கூறியதையும் (லூக். 9:49) நாம் அறிவோமே.

தம்மை நம்புவோர் பேய்களைத் துரத்த வலிமையடைவர் என்பது இயேசுநாதர் அருளுரை. ஆகையால் இவ்வித மனநோய்களை (எல்லாப் பித்தரோகங்களையும் அல்ல) குணப்படுத்துவது எளிதேயாகும்.

---

# பண்ணையின் ஊழியம்

(அனலுண்டாக்க) ஒற்றனம் போடப்பட்டும், மேல் மூச்சு வாங்கிக்கொண்டும் கிடந்த தாயையும் கண்ணுற்றேன். அழுகையுடன் நின்றுகொண்டிருந்த பெண்களை வெளியே அகற்றிவிட்டு, அவள் கைநாடியைக் கவனித்து, சுருக்கமாய் ஒரு ஜெபம் செய்தேன். அவள் பிழைத்தாள் என்று சொல்லி இரண்டாம் மணி அடிக்கவும் சொன்னேன். கூட்டம் பலர் எழுப்புதலடையும் முறையில் நன்கு முடிந்தது.

அழுகையுடன் பலர் தங்கள் பாவங்களைப் பகிரங்கமாய் அறிக்கையிட்டனர். அக்காலம் உயிரோடிருந்த கோயில்பிள்ளை டீமேக்கரின் வீட்டார் என்னைச் சொந்தப் பிள்ளைபோல் ஏற்று, நான் தங்கியிருக்கத் தங்கள் மேல் வீட்டையும் கொடுத்து, என்னை உபசரித்தனர். அந்த ஊரார் எனக்குப் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல.

1928 ஜனுவரி ஒன்றில் வழக்கப்படிச் சபையார் யாவரும் சேர்ந்து ஐயரைச் சந்திக்கச் சென்றனர். அப்பழக்கம் அந்நாட்களில் கண்ணியமாக நடைபெற்றது. ஊரில் முக்கியமான ஆட்கள், வாழைக்குலை, சீனி, கோழி முதலிய பொருட்களையும், உடைக்கு வேண்டிய பங்கித் துணியையும், சபை ஊழியருக்குக் கொடுத்து அவருடைய ஆசீர்வாதம் பெற்றுத் திரும்புவர். என்னையும் 'சந்திக்க' வேண்டி விருப்பம் தெரிவிக்கவே நான் அது வேண்டாமென மறுத்தேன். ஆயினும் என் தகப்பனரைப்போல் எனக்கு நல்லுபதேசமூட்டிய ஐயர் அவர்கள் 'இப்பொழுது இதற்கு இடங்கொடு' என்றதால், ஊரார் நான் தங்கியிருந்த வீட்டில் மேளதாளங்களுடன் வந்து, பழம், சீனி முதலியவற்றைக் கோயில் பிள்ளை டீமேக்கர் வீட்டாருக்கும் ஒரு வேஷ்டி, சட்டை, சால்வஸ்திரம் முதலியவற்றை எனக்கும் அளித்தனர். அதை நினைத்து

'என்னைப் பலர் புகழ்ந்தால் மகிழேன்
உன்னைச் சுமக்கும் கழுதை நானே!'

என்று பிற்காலம் பாட்டும் எழுதினேன்.

# பாட்டு எழுதுங் காலம்

எங்கு சென்றாலும் 'இயேசு என் ஆல்திபா' என்னும் பாட்டைப் பாடி விளக்கி, ஜனங்களையும் பாடச்செய்து கூட்டங்களை முடிப்பது அக்காலத்தில் என் பழக்கம். எங்கும் இந்தப் புதிய பாட்டுப் பி பலமாயிற்று. அந்தப் பாட்டுக்காகவே ஜனங்கள் கா திருப்பார்கள். சுவிசேஷ ஊழியத்தில் பாட்டு மிக வ வலமையுள்ளதெனக் கண்டு, மேலும் சில புதிய பாட களைத் தெரிந்தெடுக்க முயன்றேன். பண்ணைவிளையி தங்கியுழைத்தபோது ஒருநாள் 'ஆனந்தமே பரமா தமே' என்னும் கீதத்தைத் தமிழில் எழுதி மறு கூட்டத்தில் பாடினேன். யாவரும் ஆசையாய் கேட்டு ஆறுதல் அடைந்தார்கள்.

நான் தமிழ் கற்றதில்லை. பாட்டு எழுதுவதற் ரிய இலக்கண விதிகளையும் அறிந்திருந்ததில்லை. எ னும், உள்ளம் மகிழ்ச்சியால் பொங்குகையில் பாட் தானாகவே வந்தது.

'துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை  
தொண்டர் எமை அண்டி வந்திடினும்  
சொல்லி முடியாத ஆறுதல் கிருபையைத்  
துன்பத்தினூடே யனுப்பிடுவார்'.

இது "ஆனந்தமே பரமானந்தமே" என்ற பாட் ஓரடி. மலையாளத்தில் இந்த ஆழ்ந்த கருத்து இல்லை என அதன் ஆக்கியோன் ஆகிய சாது கொச்சுகுஞ் பிற்காலம் சொல்லுவார்கள். எனக்கு மலையாள இரண்டாம் மொழியாதலாலும், மலையாளம் தமிழை இளம் மொழியாதலாலும், உணர்ச்சிமிகும் இராக களும், உற்சாகமூட்டும் சொற்களும் அதில் அதிக ருப்பதாக எண்ணி, அம்மொழியிலுள்ள கானதீர் பாட்டுக்களில் சிலவற்றை மொழி பெயர்க்க அனு பெற்று அவ்வப்போது புதுப்பாட்டுக்கள் எழுதிப் பா னேன்.

# கனவு

அன்றொருநாள் திருப்புளிங்குடி* என்ற ஸ்ரீவைகுண்டத்திற்கருகாமையிலுள்ள ஊரில் மூன்று நாட்களுக்கென ஐயர் அவர்களால் நான் அனுப்பப்பட்டேன். அது மழைக் காலம். வயல்களின் நடுவில் அமைந்த ஒரு சிறு ஊர் அது. முட்டளவு நீரில் நடந்துதான் ஊருக்குள் போகமுடியும். மக்கள் யாவரும் விவசாயிகளே. இராவேளைகளில்தான் எனது ஊழியம் ஆலயத்தில் நடைபெறும். பகல் முழுவதும் ஆலயத்திற்குள்ளேயே இருந்து வேதம் படித்து ஜெபம் செய்து வந்தேன். அந்நாட்களில் எனது மனதில் ஓர் இருள் தோன்றியது. கடவுளிடமிருந்து செய்தி ஒன்றும் கிடைக்காமலிருந்ததே அவ்விருளுக்குக் காரணம். கடவுளின் அருள் என்னைவிட்டு விலகி நான் தனித்து விடப்பட்டதுபோல் தோன்றிய அந்நாட்களில், நான் சோர்படைந்தேன். மயிரிழந்த சிம்சோனைப் போல் வல்லமையற்றவனாய்த் தோன்றினேன். ஓர் இரவு, கடமையை முடித்ததும் மகிழ்ச்சியில்லாமல் தூங்கினேன்.

கூட்டம் முடிந்தபின் அவ்வூர் உபாத்தி-உபதேசியார் (Teacher-catechist) வீட்டில் உணவருந்தச் சென்றேன். அது ஒரு குடிசை. ஒரே அறைதான். சமையலறை, படுக்கையறை யாவும் ஒன்றே. குடிசையின் நான்குபுறமும் சதுப்பு நிலம். வீடெங்கும் ஈரம். ஒரு பலகையிலமர்ந்து உணவருந்த முயலவே குடிசைக்குள்ளும் சிறு தவளைகள் பல துள்ளி விளையாடின. எனது இலைநோக்கியும் சில வந்தன. குவித்த அன்னத்திற்கு மேலும் குதித்தன. உபாத்தியார் இடதுகையால் அவற்றைப் பிடித்து எறிந்துகொண்டே வலது கையால் உணவருந்திக்கொண்டிருந்தார். எனக்கு அப்பழக்கம இல்லாதபடியால் சற்றுத் தயங்கினேன்.

---

* இதுவும் புறநானூற்றுச் சிறப்புப் பெற்ற ஊராகும்.

எப்படியோ நான் அருவருப்பைப் அடக்கி உணவு உண்டு பின் ஆலயத்திற்குள் படுக்கச் சென்றேன்.

ஆப்பிரிக்கா ஞாபகம் பலமாய் அன்று எழுந்தது. 'நீ ஒரு மடையன்' என்று காதிற்குள் கறுப்பன் (பிசாசு) ஓசையாய் முழங்கினன். இதற்குமுன் சிற்சில வேளைகளில் காதிற்குள் முணுமுணுத்தவன், அன்றிரவு என்னை வெகுவாய் அலைக்கழித்தான். பிரசங்கத்தில் தேவ வல்லமை இருந்ததில்லை. சூழ்நிலையும் முன் கூறியபடி. சோர்பும மிகுதி. ஏன்தான் வந்தேன் என்றாற்போல் தயங்கி, ஜெபிக்க முயன்றும் இயலாதவனாய், படுத்து உருண்டு முடிவில் நித்திரைக்குள்ளானேன்.

அன்றிரவு ஒரு கனவு கண்டேன்.. நினைவிருந்தே கனவு வரும். எனினும் அதையும் கடவுள் தமது சித்தத்தை வெளிப்படுத்தும் முறையாகச் சிலவேளை உபயோகிக்கிறார். நாலரை வயதில் இழந்த என் தாயாரை அக்கனவில் கண்டேன். அவருடைய புகைப்படம் எதுவுமில்லை. எனினும் உருவம் எப்போதும் என்முன் தெளிவு. என் தாயார் என்னைக் கையிலெடுத்து உயர்த்தி கன்னத்தில் முத்தமிட்டு "சகாயம் இந்த ஊழியத்தை விட்டுவிடாதே. ஆண்டவர் காண்கிறார். உனக்கு மிகுந்த பலன்கிடைக்கும்" என்று கூறிவிட்டுச் சென்றாற்போல் அக்கனவில் தோன்றிற்று. திடீரென்று நான் விழித்து, ஆலயத்திற்குள்ளிருந்த மணி இரண்டு அடித்ததைக்கேட்டு, யாவும் கனவேயென்று அறிந்து கொண்டேன். எனது சோர்பும், களைப்பும் மறைந்தொழிந்தன. அதற்குப்பின் இந்நாள் மட்டும் (முப்பது தெட்டாண்டுகள்) நான் என் தாயாரைக் கண்டதில்லை. ஆப்பிரிக்காவைத் திரும்பிப் பார்த்ததும் இல்லை.

# வாசல் திறந்தது—மெஞ்ஞானபுரம்*

குறிக்கப்பட்ட நாளொன்றில் ஸ்ரீவைகுண்டத்திற்குப் போய் டாக்டர் வேதமுத்து என்பவர் வீட்டில் இரவு தங்கியிருந்தேன். அக்காலம் பண்ணைவிளையிலிருந்து மெஞ்ஞானபுரம் ஐயராக மாற்றப்பட்டுச் சென்ற சங். டி. எஸ். டேவிட் ஐயர் அவர்களும் அங்கு இராத் தங்க வந்தார். குடும்ப ஜெபத்திற்காக 'மாலைத்தியானம்' நானே படித்தேன். ஐயர் அவர்கள் ஜெபித்தார்கள். நான் வாசித்த முறையை அவர் மிகவும் விரும்பினார். அவர் எபிரேயம், கிரேக்கு மொழிகள் அறிந்தவர். வேதாகம மொழிபெயர்ப்புக் கமிற்றியின் அங்கத்தினர். நேர்மையான ஊழியர். யாவராலும் மதிக்கப்பட்டவர். என்னுடன் சில வார்த்தைகள் பேசினவுடனேயே மெஞ்ஞானபுரத்திற்கென்னை ஊழியத்திற்காயழைத்துத் தேதியும் குறிப்பிட்டார்.

1928 மார்ச் மாதம். ஞாயிறு மத்தியான ஆராதனை. மெஞ்ஞானபுரம் ஆலயம். சகாயம் பிரசங்கியார்.

---

*அவ்வூர் ஏழுமைல் விட்டம் கொண்ட ஒரு வட்டமான பாலைவனத்தைத் தொட்டிருக்கிறது. மண்மாரி பெய்ததென்றும், தேரி மணலுக்குள் பேரூர் ஒன்று புதைந்து கிடக்கிறதென்றும் அங்குள்ள மக்கள் பரம்பரையாய் நம்பிவருகின்றனர். இப்பாலைவனத்திலும் பனைகள் உண்டு. தனித்தியானத்திற்கு ஏற்ற இடமாக அது விளங்கிற்று. மானாடு இங்கிருந்து இரண்டு மைல். அது இன்று ஒரு சிற்றூர்தான். தமிழகத்தின் பன்னிரு நாடுகளில் ஒன்றான இதின் இப்பெயருக்குப் பெரிய நாடு என்றபொருளிருக்கவேண்டுமாதலாலும், இவ்வூர் தேரிக்கரையிலேயே இருப்பதாலும், தேரிக்குள் புதைந்துகிடக்கும்பேரூர் இந்நாட்டின் தலைநகராயிருக்கவும்கூடும். புதைபொருளாராய்ச்சி இலாகா இந்தத் தேரியைத் தோண்டுங்கால் பல உண்மைகள் வெளிப்படலாம். இறந்தோரை அடக்கம் செய்த கூனிப பானைகளாகிய தாழிகள் கண்டுபிடிக்கப்பட்ட ஆதிச்சநல்லூர் இங்கிருந்து பதினைந்துமைல். கொற்கையும் பத்து மைல்தான்.

பிரசங்கப் பொருள் சுவேபு. மூன்று மாத ஊழியம் அமைதியும், ஜெபமும், தனித்திருத்தலும் எனக்கதிகப் பிரியம். அந்த ஊரும் அதற்கேற்றதாயிருந்தது.

பாட்டுகள் சில எழுதிக் கூடினோரைப் பாடச்செய்ய முயன்றேன். அக்கம்பக்கத்து ஊர்களுக்கும் ஐயரவர்கள் என்னை அனுப்பினார். ஜனங்கள் அக்கூட்டத்துக்கு அயலூர்களிலிருந்தும் வந்தனர். நூற்றுக்கணக்கானபேர் மெஞ்ஞானபுரத்திலிருந்து, வெள்ளாளவிளை முதலிய ஊர்களுக்கு நாடோறும் இரவு வந்தனர். பன்னிரண்டு மணிக்குக் கூட்டம் முடிந்தும் அவர்கள் பாடிக்கொண்டே மூன்று மைல் நடந்து செல்லும் காட்சியை இன்னும் நான் மறக்கவில்லை. அவர்களும் மறந்திரார்.

அந்நாட்களின் ஊழியத்தைக் குறித்துச் சாட்சியாக ஒரு நண்பர் பேசக் கேட்போம்.

## கண்டேன், கேட்டேன்

(திருமதி ரூபி மதுரம், திருச்சி.)*

"ம.தி. வி டி. சகாயம் ஐயர் 1927 முதல் '29 வரை மெஞ்ஞானபுரத்திலும், சுற்றுக் கிராமங்களிலும் பிரசங்கியாராக ஊழியம் செய்து வந்த நாட்களில் நான் அவரை நன்கு அறிவேன். அவர் அந்தக் காலங்களில் ஒரு பிரபலப் பிரசங்கியாராக விளங்கினர். அந்தக் காலத்தில் வயோதிபரும், பெரியோரும், வாலிபரும், சிறுவர்களும் அவரைச் சகாயம் பிரசங்கியார் என்று அழைப்பார்கள்.

---

*அன்று உயர்நிலைப்பள்ளி மாணவியாயிருந்த இச்சகோதரியின் பெற்றோர் என்னைத் தங்கள் மகன் எனவே நடத்தினர். அவர்கள் வீட்டிலேயே பலநாட்கள் தங்கியிருந்திருக்கிறேன். இப்பொழுது இவர்கள் பாராளுமன்ற உறுப்பினரும், திருச்சி நகரசபைத் தலைவருமாயிருந்தவரும், குருமருந்து சாலையின் உரிமையாளருமாகிய டாக்டர் ஈ. பி. மதுரம் அவர்களின் மனைவி.

முதன் முதலாக அவரைக் குறித்து எனக்கு அறிவித்தவர், எங்கள் வீட்டில் வண்டிக்காரராகப் பணியாற்றிய தானியேல் நாடார் என்பவர். விடுமுறை நாளில் என் சகோதரியும் நானும், நாசரேத்துப் புகை வண்டி நிலையத்திலிருந்து வீட்டிற்கு வண்டியில் வரும்போது 'அம்மா அலுப்பாக இருக்கிறது என்று நீ போய்ப் படுத்துத் தூங்கிவிடக்கூடாது. நம் ஊரில் ஒரு மலையாளச் சிறுவன் வந்து பிரசங்கங்கள் செய்கிறார். அவருக்கு 19 வயதுதானிருக்கும். பிரசங்கமோ ரொம்ப விசேஷமாகச் செய்கிறார். சில சமயம் கூட்டம் முடிய கிட்டத்தட்ட 12 மணியாகிவிடும்' என்று சொன்னார். உடனே என் சகோதரிக்கும், எனக்கும் இந்தப் பெருத்த குடிகாரர் இப்படி ஒருவரைக் குறித்து சாட்சி சொல்லுகிறாரே, நாமும் அந்தப் பிரசங்கம் கட்டாயம் கேட்க வேண்டும் என்று தீர்மானம் செய்துகொண்டு, கூட்டத்திற்குப் போனோம். அவர் சொன்னதுபோலவே அவருடைய பிரசங்கங்கள் ரொம்ப விசேஷித்தவைகளாயிருந்தன. நாங்கள் விடுமுறைக்குப் போயிருந்த காலம் பரிசுத்த வாரம். ஒவ்வொரு நாளும் கோயிலுக்கு முன் கூட்டம் நடைபெறும். 7.30 அல்லது 8 மணிக்குக் கூட்டமென்றால் 6.30 மணியிலிருந்தே ஜனங்கள் கூட ஆரம்பித்துவிடுவார்கள். பாட்டுகள் பாடிக்கொண்டே இருப்பார்கள். அங்கு கொஞ்சம் இந்து மக்களும் இருந்தார்கள். அவர்கள் வைராக்கியமுள்ள இந்துக்களாய் இருந்தபோதிலும், சகாயம் பிரசங்கியாரின் பிரசங்கத்தைக் கேட்க வந்து கூடிவிடுவார்கள்.

பிரசங்க நேரம் வந்ததும், பிரசங்கத்துக்கு முன்னால் புதுப்புதுப் பாட்டுகள் சொல்லிக் கொடுப்பார். மெஞ்ஞானபுரத்தில் முதல் முதலாக அவர் கற்றுக் கொடுத்த பாட்டு 'இயேசு என் அஸ்திபாரம், ஆசை வைக்கவரே' என்பது. இந்தப் பாட்டு எண்ணிறந்த மக்களைப் பரவசப்படுத்தியது. பரவசப்படுத்தக்கூடிய இன்னும் அநேக கீதங்களையும் கற்றுக் கொடுத்தார்.

அவைகளில் 'இன்பமேறும் கானான் நாடதில்', 'இன்பக் கானானுக்குள் ஏழை செல்ல', 'சமயமாம் ரதத்தில் நான் மோட்ச லோகம் போகிறேன்' போன்ற பல பாட்டுகள் இன்றைக்கும் என் ஞாபகத்திலிருக்கின்றன. மூன்று நான்கு வயதுச் சிறுவர்கூட அப்பாட்டுகளைப் பாட நான் கேட்டிருக்கிறேன்.

இவர் ஊழியஞ் செய்த காலத்தில் ஒரே நாளில் நாலு ஐந்து பிரசங்கங்கள் செய்வார். வாலிபருக்கு, வாலிபப் பெண்களுக்கு, தாய்மாருக்கு, பொதுவான ஜெபக்கூட்டம் என்னும் பல பிரசங்கங்களை உற்சாகமாகச் செய்வார். ஆண்டவர் தாமே அதற்கு வேண்டிய பெலனை அவருக்கு அருளிச் செய்தார். மெஞ்ஞானபுரத்தைச் சுற்றியுள்ள வெள்ளாளன்விளை, உடன்குடி, மாணிக்கபுரம், பூலிகுடியிருப்பு, வள்ளியம்மாள்புரம், கல்லுவிளை முதலிய இடங்களில் போய் ஆவிக்குரிய கூட்டங்களை நடத்திவைத்தார். அவர் ஊழியஞ் செய்யப்போன இடங்களுக்கெல்லாம் மெஞ்ஞானபுரத்து மக்கள் — ஆண்கள், பெண்கள், பெரியோர், சிறியோர் திரள் கூட்டமாய் இயேசுவானவரோடு அவருடைய சீஷர்களும், ஜனங்களும் சென்றவண்ணம் போய் வந்தோம். கூட்டம் முடிந்து திரும்பி வரும் சமயம் 'ஆனந்தமே பரமானந்தமே', 'இன்ப மேறும் கானான் நாடதில்', 'சமயமாம் ரதத்தில் நான் மோட்சலோகம் போகிறேன்' என்ற பாட்டுகளை ஆரவாரத்தோடு பாடிக்கொண்டு வருவோம். இஸ்ரவேல் ஜனங்கள் செய்த கானான் பயணம்போல், இது எங்கள் யாவருக்கும் இருந்தது. கூட்டம் முடிந்தபின் திரள் திரளாக ஜனங்கள் மெஞ்ஞானபுரக் கோயிலின் முன்வந்து நின்று பதினொன்று பன்னிரண்டு மணி ஆனாலும், பாட்டுப் பாடி, பிரசங்கியார் ஜெபம் செய்து முடித்த பிறகுதான் அவரவர் வீடுகளுக்குச் செல்வோம். நேரம் போகிறதே எங்களுக்குத் தெரியாது. அவ்வளவு எழுப்புதலாயிருக்கும்.

வெள்ளாளன் விளையில் நடந்த கூட்டங்களில் இவர் இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்துக்குச் செய்த பிரயாணத்தைப் பரமகானானின் பிரயாணத்திற்கு ஒப்பிட்டுப் பத்துநாட்கள் பேசினார். இவர் ஓர் வாக்கு வல்லமையுள்ள, வைராக்கியப் பிரசங்கியார். பரிசுத்தாவியின் நிறைவோடும், அனலோடும், ஆவியின் உற்சாகத்தோடும், யாருக்கும அஞ்சாதபடித் தைரியமாகக் கண்டித்தும் பேசுவார். எப்பேர்ப்பட்ட குருக்களானாலும், படிப்பாளிகளானாலும், உத்தியோகஸ்தர்களானாலும் தைரியமாகச் சத்தியத்தை எடுத்துக் கூறுவார். பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் குருமார பக்கம் திரும்பி, குருவானவரே! கர்த்தருக்கு உகந்த உத்தம ஊழியம் செய்கிறீர்களா? என்று அஞ்சாமல் கேட்பார். அவருடைய வாலிபப் பிராயத்தின் உத்தம, வைராக்கிய ஊழியமானது, இயேசு கிறிஸ்துவானவரின் பரிசுத்த ஜீவியமபோல் காணப்பட்டது. இவர் ஊழியஞ் செய்த இடங்களிலெல்லாம், அதிகமாகத் தன்னைப் பற்றின சாட்சி, இரட்சிப்பு, பாவ மன்னிப்பு, ஒப்புக்கொடுத்தல், சாட்சியின் ஜீவியம், இயேசுவின் வருகை, பரலோக இராஜ்யம் முதலியவற்றைக் குறித்துப் பிரசங்கங்கள் செய்தார். சாலமோனின் உன்னதப் பாட்டு, பிரசங்கியாருக்கு அதிக இஷ்டமான ஓர் புத்தகம். அவைகளிலிருந்து அநேக பிரசங்கங்கள் செய்தார்கள். அவைகளனைத்தும் ஞான அர்த்தம் உள்ளவைகளாயிருந்தன. பிலிப்பியர் 3 ம் அதிகாரம் அவருக்கு அதிகப் பிரியம். அவர் ஆண்டவரின் வல்லமையோடும், ஒத்தாசையோடும ஊழியஞ் செய்து வந்தார். ஓர் பலத்த வாக்கு வல்ல விசுவாசி. ஆண்டவர் அவரை வல்லமையாக உபயோகித்தார் என்பதைப் பின்வரும் சந்தர்ப்பங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

1 ஒரு ஓய்வுநாள் இரவு வெள்ளாளன்விளையில் ஜெபக்கூட்டம் நடத்திக்கொண்டிருந்தபோது, மேகங்கள் திரண்டு, வானம் இருண்டு மழை பெருந்துளிகளாய் விழ ஆரம்பித்தவுடன் 1இரா. 18:41 ம் வசனத்தைச்

சொல்லி, எலியா சொன்னபடி பெருமழை பெய்த
ஆனால், இப்போது ஆண்டவர் மழை பெய்யாதபடி
காக்க வல்லமையுள்ளவராயிருக்கிறார் என்று சொல்
இரண்டு நிமிஷம் மௌன ஜெபம் செய்து, வைராக்கி
முள்ள விசுவாசத்தோடு, ஒருவரும் எழும்ப வேண்டா
இது சாத்தானின் சேஷ்டம், மழை வராது என்
கட்டளையிட்டபோது மேகம் கலைந்துவிட்டது. ம
யும் பெய்யவில்லை. நாங்கள் எங்கள் வீடுகளுக்குச்
தோஷமாகத் திரும்பிவந்தோம். எப்போதும்போ
அன்று கூட்டம் ஒழுங்காக நடந்தது. அன்று ஆ
டவரின் பிரசன்னம் அங்கிருந்தபடியால் பிரசங்கியாரி
முகம் பிரகாசமாகத் தோன்றினது. கூட்டம் முடி
வுடன், அநேகரும் அதைப்பற்றிச் சொல்லக் கேட்டே

2. பூவி குடியிருப்பு என்கிற இடத்தில் அ
பிரசங்கம் செய்தபோது, வானத்திலிருந்து ஒரு பெரி
வெளிச்சம் ஆலயக் கோபுரம்வரை நேரே இறங்
பின் கோபுரத்தின் இடது பாகத்தின் நேராகப் போ
மறைந்தது. நானும், என் பக்கத்திலிருந்த ஆசிரியர்க
என் சகோதரி, என்கூடப் படித்த மாணவிகள் யா
ரும அதைப் பார்த்தோம். திட்டமாக அது வெள்
வீழ்ச்சி அல்ல என்பது எங்களுக்கு நன்றாகத் தெரி
தது. அன்றையத்தினத்திலும் பிரசங்கியாரை ஆண்
வர் விசேஷித்த வல்லமையுள்ள பிரசங்கம் செய்யுமா
உபயோகித்தார். அக்கூட்டத்தில் பங்குபெற்ற நாங்க
ஆண்டவரின் பிரசன்னத்தை நன்றாக உணர்ந்தோம்

3. எப்பேர்பட்ட படிப்பாளிகளுக்கும் அஞ்சா
படி வசனத்தை எடுத்துக் கூறுவார். அதினால் மெ
ஞானபுரம் கோயிலுக்குமுன் கூட்டங்கள் நடத்தி
சமயம, படிப்பாளிகள் தொந்தரவு கொடுக்கத் திட்
மிட்டிருந்ததை ஏற்கனவே தெரிந்துகொண்டு, அ
ருக்குக் கடவுள் கொடுத்த பிரசங்கத்தின் வல்லமையா
"தான கர்த்தருக்குள் பி.ஏ." என்றும, அதில் தேறின
தான் உலகப்பட்டம் பெறலாமென்றும் கண்டிப்பாய்

பேசுவதைக் கேட்டதும், கலகம் செய்யும் நோக்கத்தோடிருந்தவர்கள் உடனே கூட்டத்தைவிட்டு எழும்பிப் போய்விட்டார்கள்.

4. மெஞ்ஞானபுரத்தின் பக்கத்தில் ஒரு இடத்தில் இரவு கூட்டம் நடத்திக்கொண்டிருந்தபோது, ஆவியின் அனலோடு வல்லமையாகப் பிரசங்கம் செய்தார். அப்போது கலா. 4:29 எடுத்துப் பேசினார். அப்போது உண்மையற்ற ஜீவியம் செய்யக்கூடாது என்று சொல்லி, குடியனே! வெறியனே! உன்னை ஆண்டவர் பார்த்துக் கொண்டிருக்கிறார். நீ பனையில் கள் போட்டு, கள்ளத்தனமாகச் சாப்பிட்டாயானால் கீழே விழுந்து சாவாய், நீ மரத்திலிருந்திறங்கமாட்டாயென்று கண்டித்து வைராக்கியப் பிரசங்கம் செய்தார். இரவுக் கூட்டம் முடியப் பதினொன்று, பதினொன்றரை மணி ஆயிருக்கும். விடியற்காலை இரண்டு மணியிலிருந்து நாலு மணிக்குள்ளாகப் பனையிலிருந்து விழுந்து படுகாயமடைந்த இரண்டு, மூன்றுபேரை என் தகப்பனாரிடம்* சிகிற்சை செய்யுமாறு கொண்டுவந்தார்கள். காலையில் பிரசங்கியாருக்குத் தெரிவிக்கப்பட்டது. அவரே வந்து அவர்களுக்காக ஜெபம் செய்துவிட்டுப் போனார்.

அக்காலத்தில் இவர் தன்னை வெறுத்து, ஒறுத்து நடந்தார். இவர் லௌகீக ஆடம்பரத்தை வெறுத்தவர். கலியாணக் காட்சிகளைக் காண விரும்பமாட்டார். அப்படிப்பட்ட ஒருநாள் தனக்கு வாக்கூடாது என்று அடிக்கடிச் சொல்லுவார். பெண்கள் யாரையும் நோக்கிப் பார்க்கமாட்டார். யாரோடும் அனாவசியமாகப் பேசவுமாட்டார். அவர் ஊழியத்தின் வாலிபப்பிராயம் உத்தமமானது. இவரால் எல்லா இடங்களிலும் மகத்தான ஊழியம நடைபெற்றது. ஒருநாளும் இவருடைய ஊழியத்திற்குத் தடை வந்ததில்லை. அநேகம் பெற்றோர் இவரைத் தங்கள் மகனைப்போல நேசித்தார்கள். எங்

---

*டாக்டர் தியோடோற் டேவிட், எல்.எம்.பி, மெஞ்ஞானபுரம்.

ஜனக்கூட்டத்தில் ஒரு காளை வெருண்டு ஓடி, படுத்து நித்திரைசெய்த சிறுவர் சிறுமிகளைத் தாண்டி, ஏறக்குறைய நூறு கஜ நீளமாயிருந்த கூட்டத்தைக் கலைத்தது.

கூட்டம் அமைதலற்ற முறையில் போய்விடுவது எவருக்கும் பிரியமில்லை. எத்தனை பிள்ளைகளை மாடு மிதித்ததோ எனப் பெற்றோர் கலங்கினர். இந்தப் பரபரப்பை அடக்கும்படி நான் உரத்த சத்தமாய் ஐத்திகு தூங்கிவிழுந்த (அப். 20:9) கதையைச் சொன்னேன். அது கூட்டத்தைக் கலைக்கச் சாத்தான் செய்த முயற்சி. பிரசங்கம் நீண்டுபோனதாலேதான் இவன் தூங்கி விழுந்து செத்தான் என்று துரோவாவூரார் பவுலைக் குற்றப்படுத்த எண்ணியிருக்கலாம். உயிர்ப்பிக்கப்பட்ட வாலிபனைக் கொண்டுவரவே, கூட்டத்தினர் தூக்கம் கலைந்தது. பின்னும் வெகுநேரம் பவுல் பிரசங்கித்தார். இக்கதையை விளக்கி, மிகத் தைரியமாய் "யாரேனும் மிதிக்கப்பட்டிருந்தால் அவர்களை இங்கே கொண்டு வாருங்கள். இந்நேரமே சுகமளிக்கச் செய்கிறேன்" என்று அறைகூவி நின்றேன். இந்தத் தைரியத்தை இறைவனே கொடுத்தார்போலும். ஜனங்கள் அங்குமிங்கும் பார்த்தும், ஒருவருக்கும் ஒரு சேதமும் படாததைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். "கூட்டத்தை முடிப்போமா? இன்னொரு பிரசங்கம் வேண்டுமா?" என்றேன். 'ஐயா பேசுங்கள்' என்றனர். நான் மறுபடியும் தொடங்கி இரவு ஒருமணிக்கு முடித்தேன். ஒலிபெருக்கி ஒன்றுமில்லாக் காலத்தில் ஐந்து மணி நேரம் தொடர்பாய்ப் பேசின நாள் அதொன்றே. ஒருவரும் சலித்துப்போகவுமில்லை.

எனது பிரசங்கத்தின்போது யாரேனும் கொட்டாவி விட்டாலோ, நடுவில் எழுந்து போய்விட்டாலோ, உடனே பிரசங்கத்தை நிறுத்திவிடுவேன். பிரசங்கம் முடிந்தபின்பும், 'கொஞ்சம் பேசமாட்டாரா' என்றே பலரும் சொல்லிப் போவார்கள். தங்களை ஆண்டவர் சேவைக்கென்று ஒப்புக்கொடுத்த வாலிபர் கூட்டம்

ஒன்று அக்காலம் எழுந்தது. பெண்கள் பலரும் அழுது ஜெயித்துச் சாட்சிக் கூறினாலும், நான் அவர்களிடம் நெருங்கிப் பழகாமல், வாலிபச் சகோதரரை மட்டும் அதிகமாகத் திடப்படுத்த முயன்று, அடுத்தவூர் சென்ற பின்பும் அவர்களிடம் கடிதமூலம் தொடர்பு வைத்திருந்தேன்.

அன்றிரவே இரண்டுமணிக்குப் புறப்பட்டு நாசரேத்துக்குத் தேரி வழியாய் நடந்து சென்றோம். என்னை வழியனுப்பப் பத்தொன்பது வாலிபர்கள் என்னுடன் தேரியில் எழுலைமல் நடந்து வந்தார்கள். அவர்களில் ஒருவர் போலீஸ் இலாகாவில் வேலை பார்த்து, ஓய்வுபெற்று, நாகர்கோவிலில் வீடு கட்டித் தங்கிவரும் மெஞ்ஞானபுரத்துக்காரரான திரு. ஜே. டி. டேவிட்.* வழிநெடுகப் பாட்டுப்பாடி, நாலு மணிக்கு நாசரேத்தூர் எட்டி, ஆறரைக்குப் புகைவண்டியேறவே பல வாலிபர்கள் அழுதார்கள். நானும் அழுதேன்.

மெஞ்ஞானபுரம் நண்பர்கள் நான் அவ்வூரை விடும்போது என் கையில் பத்து ரூபாயைத் திணித்தார்கள். நான் வேண்டாமென்று எவ்வளவோ மறுத்தபோதிலும் என்னை விடவில்லை. அவர்கள் நடுவில் ஊழியம் செய்த காலத்தில் நான் எழுதிக் கற்றுக் கொடுத்த பாடல்கள் பத்தை "மூசிப்பாற்றும் கீதங்கள்" என்ற தலைப்பில் ஐந்நூறு பிரதிகள் அவர்கள் கொடுத்த ரூபாய்க்கு அச்சிட்டு ஓரணா விலையில் விற்க அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். அவை ஒரே நாளில் விற்றுப்போயின.

---

*திருமதி றூபி மதுரம் அம்மாளின் அண்ணன்.

விண்ணப்பம் சாமுவேல் என்ற இன்னொருவர் ஆசிரியப்பணி செய்துகொண்டே என்னுடன் கொண்டத் தொடர்பை நினைப்பூட்ட "சகாயம் தொடக்கப்பள்ளி" என்ற பள்ளியை மெஞ்ஞானபுரத்துக்கருகிலுள்ள கூழையன் குண்டு என்ற ஊரில் நிறுவினர்.

Wandering preacher 1925—1929.



Missionary to Gonds 1941—50.

p. 230.

# கதவும் விரோதமும்*

ஓயா வேலையாலும், அண்மையில் கிடைத்த அமோக வெற்றியாலும் பெருமைக்கு ஆளாகிவிடாதபடிச் சற்று மறைந்திருக்க வேண்டித் திருப்பத்தூர் ஆச்சிரமத்துக்குச் சென்று ஒரு மாத காலம் அங்கு தங்கினேன். சங்கத்தை மூட்டை கட்டி வைத்துச் சேவையில் ஈடுபட முயன்றேன். அது எனக்குப் பிடிக்கவில்லை. எனினும் எனக்கு வேண்டிய சரீர இளைப்பாறுதல் அங்கு கிடைத்தது.

அங்கு தங்கின ஒரு மாதக் காலத்தில், ஆச்சிரமக் கொள்கைகளைக் குறை கூற முயன்றேன். தூதனைச் சீடனைத் தலைவனாகத் தெரிந்துகொள்ளலாகாதென்பதின் கருத்தை நான் அன்று அறிந்திலேன் (1தீமோ 3:2). அங்கு நான் மிக விரும்பியவை, மாலைவேளைகளில் நடந்திருக்கும் 'சத்தியா'வும், அமைதியுமே.

ஏன் தானிங்கு வந்தேன் என்று எண்ணத் துவக்கின காலத்தில், நாகர்கோவிலிலிருந்து (Ben Sam) பென்சாம் என்ற ஒரு வாலிபன் அங்கு வந்து சேர்ந்தார். அவரை ஆண்டவருக்கு நேராய் நடத்தும் கிருபையைப் பெற்றேன். பிலிப்புவைத் தெற்கே கொண்டுசென்ற ஆவியானவர், எத்தியோப்பிய அண்ணகன் கந்தாகேயின் மந்திரியுடன் இணைத்தாற்போல் இதுவும் நடந்தது. (அப். 8:29). மனம் சோர்ந்து வாழ்க்கையில் நம்பிக்கையற்று இருந்த அந்த வாலிபன், அந்நாட்களில் தன்னை ஆண்டவர் கையில் ஒப்புவிக்கும் கிருபை பெற்றதும், இருவரும் மகிழ்ச்சியுடனே பிரிந்தோம். இன்று பென்சாம், பி.ஏ.,பி.டி. ஒரு போதகர்.

ஆச்சிரமத்திலிருந்து எங்கு போவது என்று தெரியாது தவித்த வேளையில், சிவகாசி ஐயாவர்கள்† என்

---

*1கொரி. 16:9. அப். 19:30-32.
†சங். எஸ். வி. தேவதாஸ்.

ளைப்பற்றிக் கேள்விப்பட்டு, சாட்சியாபுரம் தவச உற்சவத்திற்குச் செல்ல அழைத்தார். மூன்று காரியங்கள் என்னை விரும்பியழைப்பதற்குக் காரணங்களாயிருந்தன போலும்! எனது இளமைப் பருவ உற்சாகம், கறைபடாத (பெயர் கெடாத) வாழ்க்கை, பணத்தை நாடாமை. பலகாலமாய் அவ்வூர் செல்லவேண்டுமென்று நான் விரும்பி ஜெபித்ததாகவும், ஆண்டவர் பெருங் காரியங்கள் அங்கு செய்வார் என்று வெளிப்படுத்தியிருப்பதாகவும் அவருக்கு எழுதி, சிவகாசி அழைப்பை ஏற்றுக்கொண்டு 1928 ஆகஸ்டில் அங்கு சென்றேன்.

சாக்ஷியாபுரம், ஸி.எம்.எஸ் மிஷனரிமாரால் கூடு... துடன் தெரிந்துகொள்ளப்பட்ட இடம். அவ்வூர் ... சேஷ ஊழியத்திற்கு நடுவிடம் என எண்ணப்பட்டு, சிவகாசியைப் பிடிப்பதற்கென்று ஊருக்கு வெளியே தெரிந்துகொள்ளப்பட்டது. சிவகாசியில் ஒரு ... சபை இருந்தது. தவச உற்சவத்தைச் சிறப்பாகக் கொண்டாட பல ஊர்களிலிருந்தும் மக்கள் மாட்டு வண்டிகளில் வருவர். மூன்று நாட்கள் கூடாரப் பண்டிகையாகவே கொண்டாடுவார்கள். பிரபலப் பிரசங்கிமார் அழைக்கப்படுவார்கள். அதிகப் பணம் செலவு செய்து பாட்டுக் கச்சேரிகளும் நடத்துவர்.

அந்த ஆண்டில் என்னையும், வேதநாயகம் சாஸ்திரியாரையும் அழைத்திருந்தனர். ஏறக்குறைய நாலாயிர மக்கள் கூடிப் பிரிந்தனர். பல ஊராரும் தங்கள் தங்கள் ஊர்களுக்கு என்னை அழைத்தனர். ஆண்டவர் அனுப்பினால் வருவேன் என்று சொல்லி அனுப்பினேன். சாக்ஷியாபுரம் ஊழியம் முடிந்ததும், சிவகாசியில் சின்னாட்கள் தங்கும்படி என்னை அழைத்தனர். நானும் சென்று வேலை தொடங்கினேன். இரவு தோறும் ஏழுமுதல் எட்டரை வரை அங்குள்ள ஆலயத்தில் ஒரு பிரசங்கம். நாடோறும் இது நடக்கவே, சில நாட்களுக்குள், ஆண்டவர் என்னைச் சில மாதங்கள் அங்கு தங்கும்படிக் கூறியிருக்கிறார் என்றேன். விசுவாசிகள் அதினிமித்தம் மகிழ்ந்தார்கள்.

மேற்கு இரத வீதியில், ஒரு தனி வீட்டில் என்
..த் தங்கச்செய்து, எனது காரியங்களைக் கவனிக்க
..த்தினநாடார் என்பவரை நியமித்து, உணவு வசதி
..ளைக் கவனிக்க ஒரு பாட்டியையும் அமர்த்தினார்கள்.
பகல் முழுவதும் தனித்தனி ஆட்களோடு பேசுவதும்,
..டிப்பதும், ஜெபிப்பதும். இரவு, ஆலயத்தில் ஒரு பிர
..ங்கம்.

கூட்டங்களுக்கு உயர் குடும்பங்களைச் சேர்ந்த
..பண்கள் பலர் வரத்தொடங்கினர். அவர்கள் இந்துக்
..ளே. விதவைகள் பலரும் மற்றோருமாய்த் தினம் மூன்
..றுக்கதிகமான பெண்கள் கோவிலுக்கு வந்து போ
..வதை நகர மக்கள் கண்ணுற்றுப் பொறுமையால் எழுந்
..ர்கள். அங்கே உபத்திரவம் உண்டாகுமென்றும்,
..வில் தேவநாமம் மகிமைப்படப் போகிறதென்றும்
..ன் சொல்லியிருந்தபடியால், ஜனங்கள் அதைரியப்பட
..வில்லை.

பெண்கள் ஆலயத்திற்கு வரக்கூடாதபடித் தடுக்க
..வ்வூரார் பல முயற்சிகளைக் கையாண்டனர். அவை
..ோலவியுறவே, இந்தப் பிரசங்கியைக் துரத்தி
..டால் எல்லாம் சீராய்ப்போம் என்று, சிலர் துணிச்
..டன் முன்வந்தனர். துண்டுப் பிரசுரங்களைக்
..ண்டு என்னைப் பயமுறுத்தவே, இதைப் படித்த
..ரும் வேடிக்கை பார்க்க வந்தாற்போல் ஆலயத்
..க்கு வர ஆரம்பித்தனர். பயமுறுத்தலுக்கு நான்
..ப்படாததால், பொல்லாதவர்களை எழுப்பி விட்டு
..ன்னை அடித்தோட்ட எண்ணினர். ஆனால் அம்மு
..ற்சிகளும் பயன்பெறவில்லை.

விடியற்காலம் ஐந்து மணிக்கே எழுந்து ஊருக்குப்
..போயிருந்த ஒரு கிணற்றிற்குச் சென்று குளித்து
..வதைக் கண்டவர்கள், வழியில் வாழைத்தோட்டங்
..ல் எனக்காய்ப் பதிவிருந்தனர். ஆண்டவர் என்னை
..சரித்து அவர்கள் கைக்குத் தப்புவித்தார்.

ஓரிரவு, சின்னத்துரை நாடார் வீட்டில் ஜெப கூட்டம் நடத்தவே, அவர்கள் வீட்டை வளைந்துகொண் டனர். என்னைப் பிடிக்கவேண்டுமென்பதைவிட, எந்தெந்தப் பெண்கள் இக்கூட்டங்களுக்கு வந்திருந்தனர் என்பதை அறிந்து அவர்களுக்கு இன்னல் செய்வதே முக்கிய நோக்கம். கொல்லைப்புற வழியாகவும், மேல் வீடு வழியாகவும் வந்திருந்த பெண்கள் அனைவரையும் நண்பர்கள் கடத்தி அனுப்பிவிட்டபின், ஐயரவர்களும், நானும், வேறுசில ஆண்களும் மட்டும் அடைபட்டி ருந்தோம். கற்களைச் சரமாரியாய் வீசிக் கதவைத் தாக்கினார்கள். அமளியும், ஆரவாரமும் மிகுந்தன. இரவு பதினொன்றரை மணிக்குப் போலீசார் வந்து என்னை மீட்டு, இருபுறமும் காவலோடு வீடு சேர்த் தனர்.

## ஆத்ம தத்துவம்

அவ்வருடம் நவம்பர் மாதம் பதினொன்றாம் தேதி மாலை ஏழு மணிக்குக் கிறிஸ்தவர்களுடைய மண்ட பத்தில் 'ஆத்ம சாந்தி' என்னும் தலைப்பில் அவ்வூர் இந்து சிநேகிதருக்கு ஓர் உபன்னியாசம் செய்ய ஒப்புக்கொண் டேன். ஆத்மாவைப்பற்றி யாதொன்றும் கூறாது, அதன் உற்பத்தி, தொழில், ஆதி, இடை, பாகுபாடுகள் இவற் றைக் கூறச் சமயம அதுவல்ல என்றெண்ணி, 'சாந்தி' என்பதைப்பற்றி மட்டுமே சுருக்கிக் கூறினேன்.

கூடினோர் தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட் டனர். நாங்கள் சொல்வதின்னதென்றறியாமலே சிலர் நெடுநேரம் சொற்பொழிவு செய்தனர். சிலர் எனது சாக்ஷி 'கேவலம்' என்றனர். பலர் பின்னிருந்து அமளியுண்டாக்கினர். ஆசனபதி, பிரசங்கம் 'தத்வார்த் தமாயில்லை' என்றார். வேறு சிலர் அன்றையத்தினத்

விஷயத்தையொட்டி யாதொன்றும் கூருது, தங்கள் வாயில் வந்தபடியெல்லாம் கிறிஸ்து சமயத்தைப் பழிக்கவும், இந்து சமயத்தை மெச்சவும், என்னைக் குறித்து அற்பமாய்ப் பேசவும் தலைப்பட்டனர். அன்றிரவே வெட்கத்தால் தலைகவிழ்ந்தோடிவிடுவேன் என்று பலரும் எண்ணத்தக்கதாகக் கூட்டம் தாறுமாருய் முடிந்தாற்போல் தோன்றிற்று.

'எல்லாம் நன்மைக்கே' என்று கருதி, நான் இவைகளில் யாதொன்றைக் குறித்தும கவலைப்பட்டிலேன். இதைக் கண்ணுற்ற சிலர், அம்மாதம் இருபத்திரண்டாம் தேதி 'பகிரங்கக் கேள்விகள்' என்னும் தலைப்பில் ஆயிரம் ஒற்றைத்தாள் பிரதிகள் அச்சிட்டு, தெருக்களிலும், பலவிடங்களிலும் பரவச் செய்தனர். அதின் விபரமாவது:

சில நாட்களாய் இச்சிவகாசியில்
கிறிஸதுவ மதப் பிரசாரஞ் செய்துவரும்
மலையாளம் சாது கனம் V. D. சகாயம் அவர்களிடம்
சிவகாசி ஹிந்து மத பிரசார சபையாரால்
ஆத்மாவைப்பற்றிக் கேட்கப்படும்

## பகிரங்கக் கேள்விகள்

ஐயா சாது அவர்களே!

தாங்கள் (11-11-28) ஞாயிற்றுக்கிழமை "ஆத்ம சாந்தி" என்னும் அரிய விஷயத்தைப்பற்றிப் பிரசங்கிப்பதாய் பகிரங்கப்படுத்தி, ஆத்மாவைப்பற்றி சிறிதும் விளக்கிக் காட்டாமல் சாந்தியைப்பற்றி மாத்திரம் தவறுதலான காரணங்களால் கூறி, கூட்டத்தைக் குழப்பத்தில் முடியும்படிச் செய்தது யாவரும் அறிந்ததே.

அந்தச் சமயத்தில் சில நண்பர்கள் ஆத்மாவைப் பற்றிக் கூறும்படித் தங்களைக் கேட்ட கேள்விக்குத்

தங்கள் "ஆத்மாவைப்பற்றி நான் இங்கு கூறவேண்டிய அவசியமில்லை. (சப்ஜக்ட் என்னவோ?) கூறுவதற்கும் பைபிளிலிருந்து ஆதாரம் காட்டுவதற்கும் என்னால் முடியும், என்னிருப்பிடத்திற்கு வரவேண்டுமென்று" சொன்னது தங்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

தாங்கள் தங்கள் இருப்பிடத்தில் வைத்துக் கூறுவது யாவருக்கும் தெரியாததால், ஆத்மாவைப்பற்றிய கீழ்க்கண்ட கேள்விகளுக்கு, நீங்களேனும், அல்லது வேறு எந்தக் கிறிஸ்தவரேனும் பைபிள் ஆதாரத்துடன் இது கண்ட ஒரு வாரத்திற்குள் பதில் தயாரித்துப் பகிரங்கமாக, விளம்பரவாயிலாக பலருக்குத் தெரியும்படியாகச் செய்யவேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

## கேள்விகள்

1. ஆத்மா எங்கும் நிறைந்தது என்பதற்குப் பைபிள் ஆதாரமுண்டா?

2. ஆத்மா எல்லா வஸ்துக்களிலும் கலந்திருக்கிறதென்பதும், அந்த வஸ்துக்கள் ஆதமாவைத் தாக்காமலிருக்கிறதென்பதையும காட்ட பைபிள் ஆதாரமுண்டா?

3. ஜீவர்கள் இறந்தாலும், பிறந்தாலும், ஆத்மா இறப்பதுமில்லை, பிறப்பதுமில்லை என்பதுபற்றிய சப்தமேனும் பைபிளில் உண்டா?

4. ஆத்மா அழிவற்றதென்றும், அதைச் சூழ்ந்துள்ள மாய்கையும், மாய்கையின் பிதிர்களான தூல சூக்கும, பூதமும், அண்டபிண்ட சராசரங்களும் அழியக்கூடியதென்றுங்கூற பைபிள் ஆதாரமுண்டா?

5. ஆத்மா, காயபேதம், இடபேதம், காலபேதமற்றதெனக் கூற உங்கள் பைபிளில் பார்க்கமுடியுமா?

6.. ஆத்மா அன்பின் மயமாயும், அறிவின் மயமாயும் பரிணமிப்பதையாகிலும் தெளிவாகப் பைபிளில் கூறப்பட்டிருக்கிறதா?

7. ஜீவாத்துமாவுக்கும், பரமாத்மாவுக்குமுள்ள பேதாபேதங்களை உங்கள் பைபிளில் காணமுடியுமா?

8. ஆத்மா முக்காலங்களிலுமுள்ளதாயும், சுயப்ரகாசமாயும், ஆனந்தமயமாயுமுள்ளதென்பதைப் பைபிள் கூறுகிறதா?

வைகாசி. சி. பா. மீனாக்ஷிசுந்தர நாடார்,
22-11-28, ஹிந்துமத பிரசார சபை பிரசிடெண்ட்.

இந்த நோட்டீஸ் வெளிவந்தபின், அம்மட்டும் என்னை அறியாதவரும், இது யார், என்னவென்று விசாரித்து, ஆலயத்திற்கு வரவும், வெளியே நின்று ஒழுங்காய்க் கேட்கவும் தொடங்கினர். உயர் குடும்பங்களைச் சேர்ந்த பல பெண்கள் வந்தனர். அவர்களில் சிலர் ஞானஸ்நானமும் பெற்றனர். கிறிஸ்து மார்க்கத்தையும், ஊழியரையும் கேலிசெய்து, பயமுறுத்தும் கடிதங்கள் பல எனக்கு வந்தன. சுவரொட்டிகள் பல தோன்றின. எனது உயிருக்கு ஆபத்து நேரிடக்கூடிய தருணங்களும் ஏற்பட்டன. இருபத்தி மூன்று வயது வாலிபனைபடியாலும், ஆண்டவரே என்னை நடத்துகிறார் என்ற தைரியத்தாலும், உயிரை ஒருநாளும் ஒரு பொருட்டென்று நான் எண்ணவில்லை. இதைக் கண்ட சிலர், இவன் மலையாளத்து மந்திரம் கற்றவன் என்றனர்.

சிலர் மந்திரவாதி ஒருவனைக்கொண்டு எனக்குக் கெடுதிசெய்ய முயன்றனர். அவன் முயற்சிகள் பயனற்றுப்போயின. கலக்கமுற்ற மந்திரவாதி " அவன், பூஜை செய்யும் மூர்த்தி, என் மூர்த்தியைவிட வலுக்கொண்டதாகத் தெரிகிறது. மலையாளத்து ஆளல்லவா" என்று சொல்லிப் பின்வாங்கிப் போனான்.

பெண்கள் பகிரங்கமாய்த் திருநீறு பூசக் கட்டாயப்படுத்தப்பட்டனர். அதை மறுத்தவர் இம்சைக்குள்ளாயினர். இப்படியிருக்க, மேற்கூறிய பகிரங்கக்

கேள்வியை எழுப்பியவர் ஒருநாள் கால் தவறி விழுந்த இடத்திலேயே இறந்துபோனார். அவரைத் தூண்டி விட்டு எதிர்த்து நின்ற செல்வந்தர் ஒருவரும் தன் இளவயதிலேயே இறந்துபோனார். இவை ஊருக்குள் பரபரப்பையும், விசுவாசிகளுக்குள் தைரியத்தையும் கொடுத்தன.

சில மாதங்களுக்குப்பின் கிறிஸ்தவ வாலிபர் சிலர் எனக்கு விரோதமாய் எழுந்தனர். அதில் கை காட்டினவர் திடீரென்று தற்கொலை புரிந்தார். இப்படியாகத் தேவ வசனம் மிகுந்த வல்லமையோடும், அடையாளங்களோடும் பரவிற்று.

எவராலும் அடக்கமுடியாமல், பிசாசு பிடித்துக் கிடந்த ஒரு பெண், நடந்துசென்ற என்முன் ஓடோடி வந்து காலில் விழுந்து மூர்ச்சையடைந்தாள். இதைக் கண்ட மக்கள் சூழ நிற்கவே நான் ஜெபம் செய்தேன். அவள் சுய புத்தியடைந்து எழுந்து சென்று கடவுளை மகிமைப்படுத்தினாள். ஆயினும் பேயோட்டும் வரத்தை நான் விரும்பவில்லை, விருத்தி செய்யவுமில்லை.

இப்படி ஆறு மாதங்கள் அங்கு தங்கிவரவே, 'ஆத்ம தத்வம்' என்ற நூல் வெளிவந்தது. இருபத்தி நான்கு வயதில், வேத அறிவும், புற அறிவும் குறைந்த இளமைப் பருவத்திலேயே அதை எழுதக் கிருபை செய்த ஆண்டவரின் வழிகள் ஆச்சரியமானவை. அதின் சாரமாவது:

ஆவி, ஆத்துமா, சரீரம் (1 தெச. 5:23, எபி. 4:12) என்ற மூன்றும் சேர்ந்தவனே மனிதன். ஆவிக்குரிய வேலை கடவுளுடன் தொடர்புகொள்வது. "நான், என்"போன்ற உணர்வை அளிப்பது ஆன்மா. உலகுடன் தொடர்பு கொள்வது உடல். ஆன்மா தன் உடலுக்கு அடிமைப்படுகையில் சாவையும், தேவ ஆவியால் நடத்தப்படுகையில் சாவாமையையும் (நித்திய ஜீவன்)

பெறுகிறது. ஆன்மா, "சாவீர்கள்" என்ற மெய்யை மறந்து, "சாவதேயில்லை" என்ற பொய்யை மெய்யெனக் கொண்டதால், (ஆதி. 3:3,4) "தொடாதே, புசியாதே" என்ற கட்டளைகளை மீறிற்று. பொய்யறிவைப் பற்றுதலே ஆவிக்குள் மாயம். அதின் கனியே ஆன்மாவின் காமம் (இச்சை). (2பேது. 1;4) இச்சையின் விளைவே ஆணவம் (மீறுதல்). மனிதன் மெய்யறிவு பெறுவதே கடவுளின் நோக்கம். அதற்கென்றே திருக்குமாரன் சிலுவையேறினர். (பிதாவே இவர்களுக்கு மன்னியும்... அறியாதிருக்கிறார்களே') லூக். 23:34. அறிவதே ஜீவன். யோவா. 17:3). ஏறினவரை விசுவாசிப்பதின் மூலமே (ஏற்றுக்கொள்வதின் மூலம்) மனிதன் "ஜீவ முக்தன்" ஆகிறான். யோவா. 1:12, 3:16, எபே. 3:17. இதுவே அருளின் (கிருபை) வழி.

*மாதிரிக்காக அந்நூலிலிருந்து ஒரு பகுதியைக் கீழே தருகிறேன்.*

> *"இப்பாதை வழியே நடக்கப்பெற்ற சிலாக்கியம், தங்கள் கிரியைகளால் உண்டாகவில்லை என்பதைக் கண்டவுடனே, அவர்கள் ஏகோபித்து, கர்த்தருக்கு ஸ்தோத்திர பலிகளையிட்டு, மறுபடியும் "அவர் கிருபை என்றுமுள்ளது" என்று பாடி மகிழுவார்கள். செங்கடல் தாண்டியவுடன், மோசேயின் சகோதரி மிரியாமுக்குள்ளுண்டான சந்தோஷத்திற்கு மேலான சந்தோஷம் இங்கு உண்டாகும்.*
>
> *இவர்கள் சந்தோஷத்தைக் கண்ணுறும் மற்றோரும், இவர்களைப் பார்த்துக், 'குருடராயிருந்தவர்கள் இவர்களல்லவா! பிச்சை கேட்டுக்கொண்டிருந்த சப்பாணிகள் இவர்களல்லவா!' என்று, ஆச்சரியப்பட்டு நிற்கையில்; இவர்கள் மறுமொழியாய், 'நாங்கள்தான் இயேசுவைச் சிலுவையிலறைந்த துரோகிகள், ஆயினும் இரக்கம் பெற்றோம். அவர் எங்களுக்குள் உயிர்த்தெழுந்தார், எங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போகிறார், மாற். 16:7. நாங்கள் அவரது அடிகளை முத்தமிடப் போகிறோம், என்று களிப்பார்கள்.*

நீங்கள் இவ்வளவு சந்தோஷமாய்ப் போகும் இடம் எது என்று யாரேனும் இவரைக் கேட்டால்,

ஸ்தலம் ஹா மகா விசேஷம்
பலன் என்ன மதுரம்
வேண்டாமே இப்பூவுலகம்
அல்லவே என் நகரம் என்று பாடி,

நண்பரே! இப்போதே நாம் தேவ புத்திரராகி விட்டோம். ஏனெனில் கிறிஸ்துவின் ஆவியை நாங்கள் 'கிருபை'யால் பெற்றோம். அதே ஆவி யால் நடத்தப்பட்டும் வருகிறோம். இனி எங்களுக்குப் பயம் இல்லை. ஏனெனில் கடவுளை எமது பிதாவாககிக் கொண்டோம். ரோம. 8:10-15. இனிமேல் எப்படியாவோம் என்பது தெளிவாய்த் கிரகிக்கக்கூடியதல்ல ஏனெனில் இப்பொழுது அடைந்த நிலைமை சற்றுமுன் எங்கள் கனவிலும தோன்றவில்லையே. இவ்வளவு, நொடிக்குள் 'புழுதியிலும, சாமபலிலும் கிடந்து புரண்ட அசுத்தராம எங்களைக் கைதூக்கியெடுத்து, அதிபதிகளோடும இராஜாக்களோடும் உட்காரச்செய்த' 1 சாமு. 2:8. 'கிருபை' இன்னும் எங்களில் என்னென்ன விசேஷித்த மாறுதல்களை உண்டுபண்ணுகிறதோ அறியோம். ஒன்று திட்டம். 'நன்மையுசம் வருகையில் நாங்களும பூரணவாய் நன்மை வடிவமாகிய அவர் சாயலையே அடைந்து அவருக்கு ஒப்பாயிருப்போம்.' 1 யோவா. 3:2. என விடைபகர்வார்கள்.

ஆ! கிருபையின் பாதை எவ்வளவு அழகாயிருக்கிறது. அதில் நடப்போரிடையில், உயர்வு தாழ்வு இல்லை. எவரும் பெருமை கொள்ளுகிறதுமில்லை. ஏனெனில், அவர்கள் பிரயாசத்தின் பயனல்லவே இப்பாக்கியம். கிரியைகளினாலுண்டானதாயிருந்தால், கிருபையினாலல்லவே. ரோம. 11:6. கிருபையினாலேயாகுமானால் கிரியை செய்

வோருக்குப் பெருமைக்கிடமில்லையே. இவ்வழங்கிய வழி நடப்போர் கவலையீனத்தால் வலதிடதுபுறம் சாயும்போது, 'வழி இதல்ல' என்றும், நேர்வழி நடந்து செல்லுகையில் 'வழி இதுவே, இதிலே நடவுங்கள்' என்றும் சொல்லுகிறவரின் சத்தத்தை தையும் கேட்பார்கள். ஏசா. 30:21.

துக்கமே இப்பாதையில் இல்லை. சகல தீமைக்கும் காரணமாகிய இச்சையை இவ்வழியே நடப்பவரில் காணக்கிடையாது. அவர்களில் ஒருவனும் தனக்கென்று உழைக்கிறதுமில்லை, பிழைக்கிறதுமில்லை. ரோம. 14:7. 'யாவரும் தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைக்கிறார்கள்.' 2 கொரி. 5:15. முன் இருளிலிருக்கையில் இவர்கள் இடறியதுபோல, இனிமேல் இவர்கள் இடறுகிறதில்லை. ஏனெனில் மெய்யான வழிகாட்டி "இதோ உலகத்தில் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்." மத். 28:20 என்று கூறும் சத்தம் ஒவ்வொரு நொடிப் பொழுதிலும் இவர்கள் காதுகளில் விழுந்துகொண்டேயிருக்கிறது.

இப்பாதை ஒருவேளை இருளும், மறுவேளை வெளிச்சமுமாயிருப்பதில்லை. சாயுங்காலமும், விடியற்காலமும் இனி இவர்கள் ஜீவியத்தில் மாறி மாறி வருவதில்லை. ஆதி. 1:5, 8, 13, 18, 23, 31. ஏனெனில் இவர்கள் ஆறு நாட்களையும் கடந்து, இருளற்ற, இரவு பகலற்ற (கங்குல்பகலறநின்ற) ஏழாம் நாளில் பிரவேசித்துவிட்டார்கள். சகரியா 14:7. இனி இவர்களுக்குச் சூரியனும், சந்திரனும் (வானஜோதிகள்) வெளிச்சம் கொடுக்கத் தேவையில்லை. அவைகளைப் படைத்த கர்த்தர் இவர்கள் மேல் உதயமாகிவிட்டார்.

சஞ்சலம் நிறைந்த துக்க நாட்கள் முடிந்து போயின, ஏசாயா 60: 19. ஞானவிளக்கு எரிய

ஆரம்பித்துவிட்டது. இனி நித்தியமட்டும் வேறு வெளிச்சம் தேவையில்லை. நித்திய வெளிச்சம் இயேசுவாய் இவர்களில் விளங்கி நிற்கிறது. ஏசாயா 60:20 அடிக்கப்பட்ட (சிலுவையிலறையப்பட்ட நன்மை வடிவமே) ஆட்டுக்குட்டியே இவர்களை நடத்துகிற விளக்கு. வெளி. 21:23;22:5. இன்றும், என்றும், சதா காலங்களிலும் இவர்கள் சரீர இச்சைகளால் ஆளப்படுகிற பிரஜைகளையல்ல, அவைகளை ஆண்டு நடத்துகிற இராஜாக்களாகவும் ஆசாரியக கூட்டமாகவும் விளங்குகிறார்கள். 1 பேது. 2:9

இழந்துபோன அரசகிரீடம் இவர்களுக்கு மறுபடியும கிடைத்தாயிற்று. ஆவி ஸ்தானத்தில் அவிந்துபோன விளக்கு, மறுபடியும் ஏற்றிவைக்சப்பட்டாயிற்று. கர்த்தர் இவர்களிலிருந்த சீயோனை மறுபடியும் தெரிந்துகொண்டு, அதை 'என்றென்றைக்கும்' தமது வாசஸ்தலமாகும்படி விரும்பினார். சங். 132:13,14. மனிதர் விருப்பத்தினாலல்ல, தமது சுய இஷ்டத்தினாலேயே (கிருபை) இப்படி விரும்பினார். இனி ஒரு சாபமுமிராது. சாபத்திற்குரியவன் (தீங்கன்) இவரைக் கண்டவுடனேயே ஓடிவிட்டான். ஆகையால் இவர் அங்குள்ள யாவரையும் ஆசீர்வதித்து, பசியுள்ளோரைத் திருப்தியாக்குகிறார். அதின் மனிதரை ஆசாரியராக்கி, அவர்களுக்கு, ஆவி மாயையினின்று விடுவிக்கப்படுதலாகிய இரட்சிப்பை உடையாக உடுத்துகிறபடியால், அவர்கள் மிகவும் கெம்பீரிக்கிறார்கள். சங். 132:15,16.

இம்மட்டும் இவர்களை ஒடுக்கிய ஆசை முதலிய பகைவர்கள் வெட்கி, நாணி, தலைகுனிகிறார்கள். ஏனெனில் இனி அவைகளுக்கு இவர்கள் மேல் வல்லமையில்லை. 'கிருபையினால்' அபிஷேகம் பண்ணப்பட்ட தொண்டருக்கு ஒரு விளக்கை

ஆயத்தம் பண்ணினவுடன், அவர்கள் தலைமீது இரீடம் வைக்கப்பட்டு, பூக்கள் செடியை அலங்கரிக்குமாப்போல் இவர்களையும் சிறப்பிக்கிறது. சங். 132 : 17,18.

பாதாள திசையாகிய மாம்ச ஸ்தானத்தில் புதைந்துபோன நன்மை வடிவம், அங்கிருந்து முளைத்து, பூவுலகின்கண் ஏறக்குறைய நாற்பது நாளளவும் தொண்டருக்குக் காட்சியளித்து, பின் யாவரும் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கையில், பரலோகத்துக் கெடுத்துக்கொள்ளப்பட்டு, பிதாவின் வலது பாரிசத்திலுட்கார்ந்தார். தாம் பாதாள உலகில் செல்கையில் அங்கு தம்முடன் மரணத்தில் ஐக்கியப்பட்டவர்களையும் அவர் தூக்கி உன்னதங்களிலே உயர்த்திவிட்டார். எபே. 1:3.

அவர் முன்னோடியதைக் கண்டு, இப்பாதை நடக்க முயன்றவர்களும் தைரியமாய் உன்னதத்திற்கேறி வருகிறார்கள். தீங்கனின் சத்துவங்களைத் தமது மரணத்தினாலே ஜெயித்து, ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினால் கட்டுண்டவர்களை விடுதலையாக்கினதினிமித்தம் இவரால் மீட்கப்பட்டவர்கள், ஆனந்தக் களிப்புடன் பாடி, சீயோனாகிய ஆவி ஸ்தானத்திற்கு நடந்து வருகிறார்கள். ஏசா. 35:10. வழியில், ஆத்தும ஸ்தானத்திற்கும், ஆவி ஸ்தானத்திற்குமிடையில் மரண இருளின் பள்ளத்தாக்காகிய அழுகையின் பிளவு இருப்பினும், இவர்கள் சீயோனுக்குச் செல்லும் மகிழ்ச்சியினால் இப்பள்ளத்தாக்கை உருவ நடந்து, அதைச் சந்தோஷமான நீரூற்றுகளாக மாற்றிக் கொள்ளுகிறார்கள். சங். 84:5-7."

* * *

இருபத்தொரு பாட்டுகளுடைய முசிப்பாற்றும் கீதங்களின் இரண்டாம், மூன்றும்பதிப்புகள் இந்த மாதங்களில் வெளிவந்து விற்பனையாயின. எங்கும் சகாயம் பிர

சங்கியார்பெயர் உயர்ந்தது, ஒங்கினது. ஓயா அழைப்புகள் பல ஊர்களிலிருந்து குவிந்தன. இந்தப் பெருமையை வெல்லச் சிலகாலம் அறியாத இடம் போகவேண்டுமென்று விரும்பினேன். 1929 பெப்ருவரி பன்னிரண்டாம் தேதி சிவகாசியைவிட்டுப் புறப்பட்டேன்.

---

# மாராமன் கன்வென்ஷன்

இது உலகின் கிறிஸ்தவக் கூட்டங்களில் மிகப் பெரிது. கேரளத்தின் பம்பையாற்றின் மணலில் இது ஆண்டுதோறும் நடத்தப்படும். சிறியன் கிறிஸ்தவர்களின் சீர்திருத்தச் சபையாகிய மார்த்தோமா மக்கள் வருடமொருமுறை கூடி, எட்டு நாட்கள் தங்கி, மகாநாடு கொண்டாடுவார்கள். ஒரு முறையாவது நான் அக்கூட்டங்களைக் காணவேண்டுமென்று விரும்பினேன். அதற்கு அதுவே தக்கவேளை என்று எண்ணி, எட்டு நாள் கூட்டங்களுக்கும் தங்க வசதி செய்தபின், ஒரு திங்கள் மாலை அங்கு சென்று சேர்ந்தேன். வளருவதற்குரிய வாய்ப்புகள் எனக்குக் கிடைக்கவேண்டுமென்பதே என் விருப்பம். அங்கு முதிர்ந்த கிறிஸ்தவ அனுபவம் பொருந்தினோரைக் கண்டு கலந்துகொள்ளலாமென்றும் நினைத்தேன். இன்னார் என்று என்னை எவருக்கும் தெரியப்படுத்தாமல் நான் தங்கிவரவே, மறுநாள் எனக்கு அறிமுகமான சாது கொச்சுகுஞ்சு என்ற ஊழியரைக் காண நேர்ந்தது. இவர் நாற்பது ஆண்டுகளாய் அச்சபைக்கு ஆன்மீக அனலூட்டின ஒரு பெரியார்.

விரிவான வேத அறிவு, ஜெப வாஞ்சை, உண்டியில் கட்டுப்பாடு ஆகியவற்றைக் கொண்டவர். தினம் ஒருவேளை மட்டும் உண்பவர். பத்து நாளுக்கொருமுறை அந்த ஒருவேளைச் சோற்றையும் தசமபாக

மென்று விட்டுவிடுவார். மருந்துண்ணார். அதைக் குறித்தும் சிலவேளைகளில் உயர்வாய்ப் பேசுபவர். பள்ளிக்கூடப் படிப்புக் குறைந்தவர். இவரை 1926-ம் ஆண்டு மண்டைக்காடு என்னுமூரில் முதன்முதலாய்க் கண்டு, அவர் மலையாளப் பிரசங்கத்தைத் தமிழில் மொழி பெயர்த்தேன். தமிழில் அவரது கருத்தைத் தெளிவாக்கியதைக்கண்ட அவர், என்பேரில் அதிகமான விருப்பங்கொண்டிருந்தார். அவர் மலையாளத்தில் எழுதியிருந்த பாட்டுகளில் சிலவற்றை நான் தமிழில் பெயர்த்து, முசிப்பாற்றும் கீதத்தில் தொகுத்திருக்கேன். அவரை அறியாத திருநெல்வேலி நாட்டிற்கும அவரை அறிமுகப்படுத்தி, 1928-ல் அவரை அழைக்கச் செய்திருந்தேன். சிவகாசியில் தங்கியிருந்த நாட்களிலும் படிதப் போக்கு வைத்து, ஜெபிக்கக் கேட்டிருந்தேன்.

அவர் செவ்வாய் மாலையில் என்னை மாராமண்ணில் கண்டு, அன்றிரவு தமது வீட்டிற்கு அழைத்துச்சென்றார். ஒரு தோணியில் ஏறி இரண்டு மைமல் ஆற்றில் மிதந்து சென்று, இராத்தங்கி, மறுநாள் கூட்டங்களுக்காகத் திரும்பினோம். குறிக்கப்பட்ட பகல் பிரசங்கங்களைத் தவிர, சில்லறைப் பிரசங்கிமார் ஆங்காங்கே இடைவேளைகளில் வெளிக் கூட்டங்கள் நடத்துவார்கள். புதன்கிழமை வெளிக்கூட்டத்தில் இவர் என்னைப் பிரசங்கிக்கும்படிக் கேட்டுக்கொண்டார். நான் தமிழிலே பேச, தமிழறிந்ததாக எண்ணின ஒருவரை மலையாளத்தில் மொழிபெயர்க்க ஏற்படுத்தினார்கள். எனக்கும மலையாளம் தெரிந்தபடியால் அவர் என் கருத்தைச் சொல்லத் தயங்குவதைக்கண்டு, ஒன்றொருதடவை சாதுவை நோக்கவே, அவரும் ஏற்றுயோசிக்கலானார். சிறிது நேரத்தில் நான், மொழி பெயர்த்த நண்பரை மாற்றி, மலையாளத்திலேயே பேச ஆரம்பித்தேன்.

எனது மலையாளத்தைக் கேட்டவர்கள் ஆச்சரியப் பட்டார்கள். அது எளிதும, தூயதும் பிழையற்றது

மாய் இருந்தது. தமிழைப் பார்க்கினும் மலையாளமே எனக்கு எளிது. நான் பேசி முடித்தபின், மறுநாள் அதே வேளையில் நான் பேசவேண் என்ற அறிவிப்பு கொடுக்கப்பட்டது. முதல்நாள் ஆயிரம்பேர் கூடியிருந்தனராம், இரண்டாம் நாள் இரட்டிப்பான கூட்டம் உனது பாட்டினைச் சொல் என்று (சாது என் கேட்டுக்கொண்டார்.

நானும் அவ்வாறே இம்மட்டும் இப்புத்தகத்தில் நீங்கள் படித்ததில் பெரும்பாகத்தைச் சுருக்கி ஒரு மணி நேரம் பேசினேன். 'இவன் மலையாளி, தமிழ் வேஷம் போட்டிருக்கிறான்' என்றார் சிலர். 'டேவ் இன்றும் கிரியை செய்கிறார்' என்றார்கள் பலர். எப்படியும் அந்நாளில் எங்கும் ஒருவித பரபரப்பு ஏற்பட்டது. நமது இந்தியரில் அனுபவமுடைய சத்தமுடைய தொண்டர்கள் இருக்க, ஐரோப்பிய, அமெரிக்கப் பிரசங்கிகளை இறக்குமதி செய்வானேன் என்று சிலர் கூற, சகாயத்தைப் பந்தலில் பேசக் கேட்க வேண்டுமென்று வேறு சிலர் எண்ண, இவற்றைக் கவனித்த நான் வெள்ளி காலையிலேயே அவ்வூரை விட்டுவிடத் திட்டமிட்டேன்.

மறுநாள் காலைக் கூட்டத்தில் இருவர் பேசினர். ஒருவர் சங். ஸ்டீபன் நீல் ஐயர்.* சில மாதங்கள் மேனாடு சென்று திரும்பிய அவரிடம், நான் தமிழில் சுகசெய்தி விசாரிக்க, அவர் 'எனக்குத் தமிழ் தெரியாது' என்றார். ஆங்கிலத்தில் நான் தொடங்கவே "ஆங்கிலத்தை மறந்துவிட்டேன்" என்றார். மலையாளத்தில் நான் கேட்கவே புன்னகையுடன் அம்மொழியிலேயே பதிலளித்தார். சொற்ப காலத்திற்குள் அவர் அம்மொழியையும் கற்றுவிட்டார். அவரிடம் நான் பேசி

---

*உலகில் இன்று இவர்போல் பலமொழிப் புலமை வாய்ந்தோரும், நுண்ணறிவுடையோரும் இல்லையென்றே கூறலாம்.

வருகிறேன் என்று விடைபெறவே, அவர் நம்மைப் பகல் ஒன்று மணிக்குப் பார்க்கும்படிக் கேட்டுக் கொண்டார். நானோ பன்னிரண்டு மணிக்கே வெளி யேறத் தீர்மானித்திருந்தேன். அவர், "இன்று தங்கி மறுநாள் போகலாம். வசதியாய் உன்னோடு பேச விரும்புகிறேன்" என்றார்.

அன்று மாலை நான் அவர் தங்கியிருந்த அறைக்குச் சென்று உட்கார்ந்து "என்னை அழைத்த காரியம் என்ன என்று நானே சொல்லட்டுமா" என்று அவரைக் கேட்டேன். புன்னகையுடனும், ஆச்சரியத்துடனும் "சொல்" என்றார். "எனக்கு நீர் ஏதோ ஒரு திட்டம் வகுத்திருக்கிறீர். எனது படிப்பை அதிகப்படுத்துவதற்கானதுபோல் தோன்றுகிறது. எங்கே, எந்தப் படிப்பு என்பது தெரியவில்லை", என்றேன்.

நீல்: "அது உனக்கு எப்படித் தெரியும்?"

சகாயம்: "பாளையங்கோட்டையில், பூவரசு மரத்தின் கீழ், 1927 பெப்ருவரி இரவிலே இதை அறிந்து பலருக்குச் சொல்லியிருக்கிறேன்."

கல்லூரியில் இரண்டாண்டுகள் (அக்கால இன்டர்மீடியேட் அல்லது எப்.ஏ.) என்னைப் படிக்க வைக்க அவர் யோசித்திருந்ததாகக் கூறியபோது, அவ்வாலோசனையை நான் கவ்விப்பிடிக்க முயலாது, கர்த்தர் நடத்தினால் கீழ்ப்படிகிறேன் என்றுமட்டும் சொல்லிப் பிரிந்தேன்.

அநுபவத்தில் என் தந்தையெனத்தகும் சாது சாக்குஞ்ஞுவை அன்றிரவே கண்டு, காரியத்தைச் சொல்லவே, அவர், "இது சாத்தானுடைய தந்திரம், நீ செல்லுமிடமெல்லாம் பாவிகள் மனந்திரும்புகிறார்கள், இந்துக்கள் மந்தையில் சேருகிறார்கள். இதினின்று உன்னைப் பின்வலித்துவிட்டால் அவன் காரியம் ஜெயிக்கும். ஆகையால் சாத்தான் நீலுக்குள்ளிருந்து பேசுகிறான், எச்சரிக்கை." என்றார்.

நீல் ஐயர், எனக்கு யோசிப்பதற்கு மூன்று மாத தவணை கொடுத்து, நான் அவருடைய உதவியை ஏற்றுக்கொள்ள விரும்பினால், மே மாதத்துக்குள் தெரியப்படுத்தவேண்டுமென்றும், விரும்பாவிடில் வேறொருவருக்கேனும் அவ்வுதவியை அவர் அளிக்க விரும்புவதாயும் சொல்லி அனுப்பினார். நானோ அதைக் குறித்து யோசித்து, ஜெபித்து, ஆலோசனை கேட்டு இரண்டு மாதங்கள் ஓடின. 'கர்த்தருடைய பிள்ளைகள்' என்று சொல்லிக்கொண்ட பிரசங்கிமார்களே என் நண்பர்கள். அவர்களில் படித்தவர்கள், இந்த யோசனை கடவுளால் உண்டானதென்றும், மற்றவர்கள் இதைப் பிசாசின் தந்திரமென்றும் கூறினர். இதை ஏற்றுக்கொள்ளுமாறு எனக்கு நல்லாலோசனை கூறினவர்கள் சகோ. டி. எஸ். டேவிட் ஐயர், கனம் ஆர். வி. ஆசீர்வாதம் ஐயர் ஆகியோரே. பதில் எழுதவேண்டிய காலம் வந்தபோது நான் எழுதினதாவது:

"சிறுவன் கையிலிருந்த ஐந்து அப்பமும், இரண்டு மீன்களும் அன்பர் கைவழிச் செல்கையில் ஐயாயிரம் பேருக்குப் போதுமானதாயிற்றே. அச்சிறுவன் மறுபடியும் வீடு திரும்பி, மேலும் சில மீன்களைக் கொண்டு வந்து கொடுப்பதால் விசேஷம் எதுவும் உண்டாகாதே!" இது உலகக் கல்வி குறைந்த என்னுடைய நண்பர்கள் கூறின கூற்றின் சாரம். இக்கடிதத்தை எழுதி விட்டு, என் பிரசங்க ஊழியத்தைத் தொடர்ந்து நடத்தி மே மாதம், மூணார் மலையில், சண்டவரை என்னுமிடத்திற்குச் சென்று, எனது நண்பர் மணி வீட்டில் தங்கியிருந்தேன்.

மே மாதம் இருபதாம் தேதி, எனக்கு ஒரு கடிதம் நீல் ஐயரிடமிருந்து வந்தது. அதில் "உன்னுடைய உவமையை உனக்கே திருப்பிக் காட்டுகிறேன். ஐந்து அப்பம் மட்டுமிருந்தாலும், ஐயாயிரம்பேர் பசியாறியிருக்கலாம். ஆனால் மீனில்லாவிட்டால் ருசியாய்ப் புசித்திருக்க முடியாது. நான் உனக்குக் கொடுக்க விரு

பும் இந்தக் கல்லூரிப் படிப்பு இரண்டு மீன்களுக்குச் சரி. காலேஜ் ஜூன் மாதம் மூன்றும் தேதி திறக்கிறது. விரும்பினால் வந்துசேர். அல்லது செக்கைத் திருப்பி அனுப்பு" என்று எழுதி, ஐம்பது ரூபாய் செக் அனுப்பியிருந்தார்.

நானும், டாக்டர் மணியும்,* அவர் மனைவியும், இதைக் குறித்து ஜெபித்து, அவர்கள் இருவரும் 'இது தேவசித்தமே, உடன் புறப்பட ஆயத்தப்படவேண்டு' மென்றனர். வேதத்தின்மூலம் உணர்த்தப்பட்டதால் இது தேவ சித்தமென்று நிச்சயித்து, உடனே சிவகாசி சென்று ஆலுவாய்க் காலேஜுக்குப் பயணமானேன்.

---

# கல்லூரி மாணவன்

எனக்கு வயது இருபத்தைந்து. என்னுடன் படித்த யாவரும் பதினைந்து முதல் பதினேழு மட்டும் பருவமுடையவர்கள். நாலு வருடம் பிரசங்கியெனத் தமிழ் நாடெங்கும் அறியப்பட்டிருந்தபின், மாணவனாய் மாறுவது எளிதாயிருக்கவில்லை. தமிழ் நாட்டின் கல்லூரி ஒன்றில் சேர்த்தால் என்னைப் பிரசங்கம் செய்ய

---

*இவர் 1929 ஏப்ரல் 29 ல் சுரண்டையில் அன்பும் மையை திருமணஞ் செய்து மூணாற் மலைக்குத் திரும்பவே ... 18 ல் நானும் அங்கே சென்றேன். அக்டோபர் 1? ல் அவர் திடீரென்று இறந்துபோனார். அவர் மனைவி 1930 பெப்ரவரியில் ஒரு பெண்குழந்தையைப் பெற்று ...ளையங்கோட்டையில் சாரடக்கர் பள்ளியில் இம்மட்டும் ...லைபார்த்து வருகிறார்கள். அப்பெண்குழந்தை பி. ...ஏ. எஸி., பி. ற்றி. கற்று இன்று இருகுழந்தைகளின் தாயாகச் சென்னையில் மிஸிஸ் மைக்கலாய் வாழுகிறது.

பலர் அழைப்பர் என்றும், படிப்பைக் கவனிக்க இட லாதேபோமென்றும் எண்ணியே, என்னை எவரும் அறி யாத இடத்தில் நீல் ஐயர் சேர்த்தார். ஆசிரியரில் சிலர் என்னிலும் வயது குறைந்தவர்களே. அக்கல் லூரியில் நான் ஒருவனே தமிழன். ஆகையால் எனக் குத் தமிழன் என்றே பெயர் வைத்துவிட்டார்கள். 'இங்கு வந்தது ஆண்டவர் சித்தமா, என் சித்தமா, என்ற சந்தேகம் எழுந்து, பலவேளையும் என்னைக் கலக் கிற்று. நினைத்து நினைத்துக் கண்ணீர் சொரிந்து தவறி விட்டேனோ என்று கலங்கின நாட்கள் பல. ஓயாமல் வேதபுத்தகத்தையே படிப்பதும், தியானிப்பதும், தனித்து ஜெபிப்பதும், அப்போதும் இன்பமாகவேயி ருந்தது. ஆயினும் முழுமனதோடும் அறிவோடும் ஆண்ட வரில் அன்புகூர மேற்படிப்பாகிய வாய்ப்பைப் பெற்ற நான் அதை இன்னமும் பயன்படுத்தாமல், வெறும் பர வச உணர்ச்சியையே சார்ந்து சில மாதங்களைப் போக்கு வதற்குள் முதற்பரீட்சை நெருங்கிவிட்டது.

கலப்பையில் கை வைத்தபின் திரும்பலாகாது என்ற வசனத்தை யுணர்ந்து, இளமாணவருக்கு முன் வெட்கப்படாதபடிப் படிக்கத்தொடங்கி, ஆத்திரமாத்தி ரமாய்ப் பாடங்களைப் படித்துப் பரீட்சையும் எழுதி னேன். உயர்நிலைப் பள்ளியில் கணக்கைச் சிறப்புப் பாடமாக்கிக்கொண்டு பெயர் பெற்றவன் நான்*. ஆயினும் எனது பிற்கால ஊழியத்திற்குத் தேவையான தத்துவ சாஸ்திரம் படிக்க எண்ணி, தருக்க நூல் கலந்த சரித்திரப் பாடத்தைத் தெரிந்துகொண்டு, கருத்தாய்ப் படித்து, ஒருவாறாய் முதற் பரீட்சையில் தேறினேன். ஆறு ஆண்டுகளுக்கு முன் படித்து விடப்பட்ட மலை யாளத்தை இரண்டாம் மொழியாகக் கொண்டபோதி லும், அதிலும் சிறப்பாகவே எழுதியிருந்தமையால் ஆசி ரியர் என் நடையை மாதிரியாக மற்ற மலையா

---

*ஒருமுறை கணக்கில் நூற்றுக்கு நூற்றிப்பன்னி ரண்டு மதிப்பெண் கிடைத்தது.

மாணவருக்குப் படித்துக் காட்டினர். எளிய நடை
யில் பிழையின்றி எழுதும் ஆற்றலும், வயது, உலக
அறிவு, முயற்சி ஆகியவைகளும் எனக்கிருந்ததால்,
அம்மொழியிலும் முதல்வனாகத் தேறினேன்.

மாராமன் வெளிக்கூட்டத்தில் நான் பிரசங்கித்த
தைக் குறித்துக் கேள்விப்பட்ட சில மாணவர்கள்
அந்நாட்களில் ஆலுவாயில் படிக்க வந்தனர். சில
மாதங்களுக்குள் அங்கும் 'நான் ஒரு பிரசங்கி' என்ற
அறிவு வந்தெட்டினும், நான் பாடங்களைப் படிப்பதி
லேயே காலத்தைப் போக்கினேன். பிரசங்க ஊழி
யத்தை மறந்தவன்போல் என்னைக் கட்டுப்படுத்தியுங்
கொண்டேன்.

அந்நாட்களில் விடுமுறைக் காலங்களில் முன்ன
தாகவே ஒழுங்குசெய்த விசேஷக் கூட்டங்களுக்காகத்
திருநெல்வேலிச் சபைகளைச் சந்தித்து, நண்பரை வினவி
நட்பை வளரச் செய்தேன். அப்படிப்பட்ட ஒரு விடு
முறைக் காலத்தில், தூத்துக்குடி செல்லவே, அங்கு
புதிதாகச் சில நண்பர்கள் ஆண்டவரால் எனக்களிக்
கப்பட்டனர். என்னைத் தங்கள் சொந்தப் பிள்ளை
போல் பார்த்த சில தாய்மாரும், சகோதரிகளும் அங்
கிருந்தார்கள்.

க்டிதமெழுதுவதில் ஒழுங்காயிருந்து, நண்பர் பல
ரின் அன்பைக் காத்துக்கொண்ட அந்நாட்களில், பல
முறையும் தங்கள் முகவரி இல்லாமல் எனக்கு வந்த
கடிதங்களில் ரூபாய் நோட்டுகள் இருந்தன. அவ்வாறு
ஐந்து, பத்து என்று பலமுறையும், நூறு ரூபாய்
நோட்டு ஒரு முறையும் வந்தது. சிலவேளை கையெ
ழுத்திலிருந்து அனுப்பின ஆட்களைத் தெரிந்துகொள்
வேன். எனக்குப் பணம் அனுப்பியதால் தங்கள் இன்
னல்கள் குறைந்ததாகவும், வாணிகம் தழைத்ததாகவும்
பலர் பிற்காலம் என்னிடம் சொல்லியிருக்கின்றனர்.

நீல் ஐயர் எனக்கென்று இரண்டு ஆண்டுகளுக்
காக ஒதுக்கி வைத்த ரூபாய் எழுநூறு மட்டும். ஆபி

னும் அந்த ஆண்டுகளில் என் செலவு ஆயிரத்து இரு நூறு என்று கண்டேன். எஞ்சிய ஐநூறும் இப்படித்தான் கிடைத்தது. முதல் ஆண்டு முடிவில் நடந்த ஒரு நிகழ்ச்சியை அக்காலத்திலேயே ஒரு பாட்டாக எழுதினேன். (முசிப்பாறுதல் கீதம் நான்காம் பதிப்பு, 29-ம் பாட்டு.)

1930 ஜூன் மாதம். இரண்டாம் வருடப் பீஸ் கொடுக்கப் பணம் என்னிடமிருந்ததில்லை. நீல் ஐயரும், 'எனது நீரூற்று வற்றிப் பாறை தட்டிவிட்டது. எப்படியாவது நீ போய்ச் சேரத்தவறுதே. கிடைத்தவுடன் உதவிசெய்வேன்' என்று எழுதிவிட்டார்.

அன்று நான் சிவகாசியிலிருந்து புறப்பட்டேன். இளைஞன் ஒருவன், தன்னையும் மலையாள நாட்டைப் பார்க்க அழைத்துச் செல்லக் கேட்டதால், அவனுடன் சாத்தூர் சென்று, திருநெல்வேலிக்கு இரண்டு பயணச் சீட்டுகளை வாங்கி வண்டியேறினோம். வண்டி மணியாச்சி வரவே, என் மனதில், 'நீ தூத்துக்குடிக்குப் போ' என்ற தொனி எழுந்தது. அங்கு செல்லவேண்டிய முகாந்தரம் எதுவும் இல்லை. மனப்போராட்டம் வலுத்தபின், உள்ளெழுந்த உணர்ச்சியை நம்பி, வேறு சீட்டு ஒன்று வாங்கி, என்னுடன் வந்த தம்பியை நேரே சென்று எனது பெட்டியுடன் பாளையங்கோட்டையில் எனக்காகக் காத்திருக்கச் சொல்லி, மாலை மூன்றரைக்கு மறுவண்டியேறச் சென்றேன். சீட்டை வாங்கியபின்னும் போராட்டம் தீரவில்லை. அச்சமயம் வண்டியும் நகர்ந்துவிட்டது. அதைப் பிடிக்க ஓடினேன். என்னைக் கண்ட அந்த வண்டியின் பரிபாலகர் (Guard) சிகப்புக் கொடியால் வண்டியை நிறுத்தி ஓடிச்சென்ற என்னைத் தனது பெட்டியில் ஏற்றினார்.

அவர் ஞானம் என்னும் பெயருடைய கிறிஸ்தவர். என்னை அறிந்தவர். நான் செல்லும் நோக்கத்தைக் கேட்கவே, எனது கதையைச் சொல்லி, அவர் கேட்ட விவிலியக் கேள்விகளுக்குப்பதில் சொல்லிக்கொண்டே

தூத்துக்குடி சேர்ந்தேன். ஷண்முகப்ரச் சபையின் போதகர் சங். டி. கே. ஆற்தர் ஐயர் தற்செயலாய் என் னைக்கண்டு மிக மகிழ்ச்சியுற்று, அங்கு நான் தங்கியுழைத்த ஒருவாரக் கூட்டங்களுக்குப்பின், எழாம்நாள்காரன் ஒரு வன் வந்து தமது சபையைக் கலைத்துவிட்டதாகவும், நான் அன்றிரவு ஒரு பிரசங்கஞ் செய்யவேண்டுமென வும் கேட்கவே, நானும் அப்படியே செய்தேன்.

இரவு தங்கவேண்டிய மேல்வீட்டுக்கு ஒன்பதரை மணிக்கு நான் தனித்துச் செல்லவே, ஏணியேறும் வழியில், கீழே தங்கியிருந்த எவரோ என்னை 'ஐயா ஒருநிமிஷம் வந்துபோங்கள்' என்றழைத்தனர். முன் பின் அறியாதவரது அந்த அழைப்பு என்னைத் திடுக்கிடச்செய்தது. அரைக்கதவு திறந்திருக்க, ஒரு நாற்பது வயதான தாயும், இருபது வயதான மகளும் உள் நிற்கக்கண்டு, நான் ஒரு காலை வாசலுக்குள் வைத்தபடியே, 'என்ன காரியம்' எனக் கேட்டேன். தந்தைக் கடுதாசியில் பொதியல் ஒன்றை எனக்களித்துப் 'போய்விடுங்கள்' என்றனர். நானும் மேல் வீட்டில் ஏறி, பழக்கமான நண்பருடன் இராத்தங்கி, காலை ஐந்தரை மணிக்கு வண்டி நிலையஞ் சென்று, திருநெல் வேலிக்கு வண்டியேறினேன். தட்டப்பாறைப் பக்கம் செல்லவே, முந்தின இரவு கிடைத்த பொதியலைப் பரிசோதிக்க, அதில் காவணு, ஒன்று, இரண்டு நாலு, எட்டு அணுத்துட்டுகள், ரூபாய் நோட்டுகள், யாவுமாக ரூ. 101-0-3 இருக்கக்கண்டு, இப்பாட்டை எழுதினேன்.

### பல்லவி

வசு ராஜா உனைநினைக்க ஏழையென் செய்தேன்.

### அனுபல்லவி

என்னை நேசித்த நின் பாசமென் சொல்வேன்—வசு

### சரணங்கள்

1. காசெனக்குத் தேவையென்று கண்டதினுலே, காட்டிலொரு காகத்தை நீர் கருதி வைத்தீரோ,

2. கையிலுமக் கில்லையன்று காசொன்று தானும்
கயவன் எனக்கீந்த காசுக்கிடெனச் சொல்வேன்.

x x x

வருடப்பீஸ் எண்பது ரூபாயையும் கொடுத்தேன். படித்தேன். பாடினேன். மகிழ்ந்தேன்.

---

# பட்டப்படிப்பு

இடைக்கல வகுப்புத் தேர்வு எழுதினபின், வேனிற்கால விடுமுறைக்காக இலங்கைக்குப் போயிருந்தேன். தெமோதரை, பதுளை, பசரு முதலிய மலைகளில் பிரசங்க ஊழியம் செய்துவரவே, பரீட்சையில் வெற்றிபெற்ற செய்தியைச் செய்தித்தாள் மூலமாய் அறிந்துகொண்டேன்.

இனி B.A. Honours படிக்காமல் விடக்கூடாது என்ற அவா எனக்குள் மிகவே, நீல் ஐயருக்கெழுதிச் சம்மதம் கேட்டேன். அவர் இதற்குமேல் உதவிசெய்ய என்னால் இயலாது; ஆண்டவர் உன்னை நடத்திடுவார் போ என்றார். தத்துவம் படிக்கப், போட்டிப் பரீட்சையில் கலந்துகொள்ள, 1931 ஜூலை மாதம் சென்னைக்குச் சென்றேன். அக்காலம் சென்னைக் கிறிஸ்தவக் கல்லூரித் தலைவராயிருந்த பண்டிதர் ஹாக் (Hogg) அவர்களை நான் பேட்டி கண்டபோது, ஆங்கில இலக்கியம் படிக்கலாமெனக் கூறவே, நான் தத்துவம் படிக்க விரும்புகிறேன் என்றேன். அவர் 'நீ ஏன் தத்துவம் படிக்க விரும்புகிறாய்' எனக் கேட்டார். 'எனது படிப்பு, சுவிசேஷ ஊழியத்திற்கு மட்டுமே' என்று தெரிவிக்கவே, அவர் மகிழ்ச்சிகொண்டு நான் விரும்பிய வகுப்பில் என்னைச் சேர்த்தார். போட்டிப்

The first meeting of the South Travancore Christians in Madras. Organised 1932. p. 187

பரீட்சையில் முதற் பரிசாகக் கிடைத்த நூற்றிருபது ரூபாயும் முதல் வருடச் சம்பளம் கட்டப் போதுமான தாயிருந்தது.

முற்காலத்தில் செய்த ஊழியங்களில், பணம் கொடுத்தாலும் வேண்டாமென்று நான் உதறித் தள்ளினதைக் கண்ட பல நண்பர்கள், தாராளமாய் எனக்கு இப்பொழுது உதவிசெய்ய முன்வந்தனர். மூன்று மாதத்துக்கு ஒருமுறை, விடுமுறைக்காகத் திருநெல்வேலி வந்து திரும்புகையில், சுமார் முந்நூறு ரூபாயாவது என் கையில் வந்து சேரும். சில வேளைகளில் பொன் நகைகளும் கிடைக்கவே, அவற்றை விற்று ரூபாயாக்கிப் பாங்கில் போட்டுச் செலவு செய்தேன். 1929 ல் படிக்கச் சென்ற நாள்முதல் பாங் கணக்கு மூலமாகவே சம்பளமும், மற்றச் செலவுகளும் செய்து வந்தேன். இன்றும் அது தொடருகிறது. பாங்கில் ஒரு நாளும் பணம் குறைந்ததில்லை. அன்றுடக அப்பம் தரும் கருணாகரன் இன்றும் என்னை அப்படியே நடத்தி வருகிறார்.

ஒருமுறை கிடைத்த பொருட்களில், ஒரு குழந்தைக் காப்பு, ஒடிந்த சில மோதிரங்கள், ஒரு பதக்கம் முதலிய சில நகைகள் இருந்தன. சென்னை பூக்கடைப் பக்கமுள்ள நகைக் கடைகளில் அவற்றிற்கு விலை கேட்டுக்கொண்டு திரியவே, இரகசியப் போலீசார் என்னைத் தொடர்வதைக் கண்டேன். இவை எங்கிருந்து கிடைத்தனவெனக் கேட்டபின், உண்மையைச் சொன்னால் பலர் இன்னல்களுக்குள்ளாவார்கள். 'ஆண்டவரே இரட்சியும், கேள்விக்கிடமாக்காதேயும்', என்று ஜெபித்தேன். அவ்வமயம் அவ்வழி வந்துகொண்டிருந்த காலேஜ் ஆலயக்குரு சகோ. பால் நேசமணி தம்பதிகளைக் கண்டு, அவர்களையழைத்துப் பேசி நிற்கவே, போலீசார் இவன் திருடனல்லவென்று என்னை விட்டுப் போய்விட்டார்கள். படித்து முடிக்குமளவும் எனக்குப் பணம் குறையவில்லை. இன்றும் குறைய

வில்லை. பலருக்கு உதவிசெய்யும் முறையிலும் ஆண்டவர் நடத்திவந்தார், வருகிறார்.

நான் பெற்ற நன்மைகளை ஒருநாளும் மறவேன். நான் பிறருக்குச் செய்தவற்றை மறப்பதில் இன்னும் வெற்றிபெறவில்லை. சென்னையில் முதல் வருடத்திலேயே S.C.M. முதலிய கிறிஸ்தவ இயக்கங்களில் அதிகப் பங்கெடுத்து 1931 ல் மாணவருக்குள் ஒரு கூட்டுறவை நிறுவினேன். அதின் அக்கால அங்கத்தினர் ஜான் துரைசாமி (இவர் N.M.S. பொதுக் காரியதரிசியாகி 56 ல் பிரிந்தார்). உளநூல் வல்லுநர் ஜி. டி. போவான், கனகராஜ் ஜான்சன், (இவர் மேனாடு அனுப்பப்பட்டுத் திரும்பி வந்தபின் திடீரென்று 1942 ல் இறந்துபோனார்). லுத்தரன் சபையைச் சேர்ந்த எல். டபிள்யூ. சவரிமுத்து முதலியோர்.

பர்மாவிலிருந்து, டயர் (Dyer) என்ற அமெரிக்க மிஷனரி ஒருவர் ஆண், பெண்களான பதினைந்து வாலிபரை இந்தியாவுக்கு 1931 ம் வருஷம் கூட்டி வந்து, சென்னையில் பத்து நாட்கள் கூட்டங்கள் நடத்தினர். அந்தப் பர்மா காஸ்பல் டீம் நாடெங்கும் சுற்றித் திரும்பிற்று. கிளிப்பிள்ளைபோல் சொன்னதையே சொல்லி, போகுமிடமெங்கும் அவர்கள் சாட்சி பகர்ந்தார்கள். அவர்கள் நாகர்கோவில், மார்த்தாண்டம் முதலிய இடங்களுக்கும் போக சென்னையில் இருந்து கொண்டே நான் ஒழுங்கு செய்தேன். சென்னையில் உள்ள எல்லா ஆலயங்களிலும், கிறிஸ்தவ நிலையங்களிலும் அவர்கள் சாட்சி பகர்ந்தார்கள்.

பர்மாக்காரரை இந்தியர் அதிகமாகக் கண்டிராதபடியாலும், பெண்கள் தலைமுடி கட்டும் முறை விநோதமானதாலும், 'நீக்ரோ ஸ்பிரிச்சுவல்ஸ்' என்ற பாடல்களை அழகாய்ப் பாட அவர்கள் கற்றிருந்தபடியாலும், கொஞ்சம் கொஞ்சம் அவர்கள் அடைந்திருந்த ஆண்டவரின் அன்பிற்கு சாட்சி பகரப் பழக்கப்பட்டிருந்தமையாலும், ஒரேயிடத்தில் ஒரு நாளுக்குமேல் தங்

காதபடியாலும், செய்தித்தாட்கள் மூலமாய்ப் பேரிய விளம்பரம் கொடுக்கப்பட்டபடியாலும், தேவாவியின் நடத்துதல் இருந்தபடியாலும் அவர்கள் செல்லுமிடமெங்கும் ஒருவித உற்சாகம் அக்நாட்களில் எழுந்தது. நாகர்கோவிலுக்கு அவர்கள் வருகையில் நானும் அவர்களுடன் வந்து மார்த்தாண்டம், திருவனந்தபுரம் முதலிய இடங்களில் ஊழியத்தில் பங்குபெற்றேன். சென்னையிலும் இதுபோல் காஸ்பல் டீம்கள் தோன்றின. ஒருவரையொருவர் கண்டு படிக்கும் இவ்வுலக வாழ்க்கையில், நலமானதைப் பற்றிக்கொள்வதில் தவறில்லை.

அவ்வாண்டிலேயே தென் திருவாங்கூரிலிருந்து சென்னையில் தங்கியிருந்த மாணவர்கள் பலரையும், வேலையிலமர்ந்த குடும்பங்களையும் கூட்டிச் சேர்க்கும் ஒரு முயற்சி எடுத்து, யாவரும் ஒன்றாய்க் கூடித் தேநீர் அருந்தி, புகைப்படமும் பிடித்தோம். அவ்வருடம் சங். பால்நேசமணி ஐயர் அதற்குத் தலைவரெனத் தெரிந்தெடுக்கப்பட்டார். பின் ஆண்டுதோறும் அக்கூட்டம் கூடி அன்னியோன்னியத்தைக் காத்துவந்தது.

அக்நாட்களில் கிறிஸ்தவ மாணவரியக்கத்திலும் (S.C.M.) நான் ஈடுபட்டு, வாலிபர்கள் நன்முறையில் செயல்பட வழிகாட்டினேன். விடுமுறை காலங்களில் சமூக நலத்தொண்டு புரிய சின்னஞ்சிறிய ஊர்களைத் தெரிந்து, மாணவர்களுடன் பன்னாட்கள் அங்கு தொண்டுபுரிந்து, படிப்பில்லா ஊர்களுக்குப் பல துறைகளிலும் முன்மாதிரி காட்டினோம். 1932 ஏப்ரல் மாதம் பதினாறுபேர் வட ஆற்காடு ஜில்லா ராணிப்பேட்டைப் பக்கம் உள்ள ஊர்களுக்குச் சென்றோம். அதற்காகப் பொதுமக்களிடமிருந்து கொஞ்சம் பணப்பிரிவும் செய்தோம்.

காங்கையனூர் என்ற ஊருக்குச் சென்று, கல்வி, சுகாதாரம், மருத்துவம, கைத்தொழில், ஆராதனை முதலிய பல துறைகளில் மக்களுக்கு அறிவூட்டினோம். காலையிலெழுந்து கடவுளைத் தொழுதபின், ஆறுமணி

முதல் பத்துமணிவரை (கிராமத்தார் வேலைக்கு வயல்க ளுக்குப் போகுமுன்னால்) யாவருக்கும் போதனை செய்தோம். வீடுகளில் வேலையின்றி இருப்போரைச் சந்திப்பது எங்களது அடுத்த பணி. சிறுவர்களைக் கூட்டிக் குளிப்பாட்டுவதும், புண்களுக்கு மருந்து போட்டு, கடுநோயாளிகளை ஆஸ்பத்திரிகளுக்கனுப்புவ தும், இராப் பள்ளிக்கூடங்களில் எழுதப் படிக்கக் கற்றுக்கொடுப்பதும், ஒளிப்படம் மூலம் இவைகளின் மேன்மையை விளக்குவதும் நாடோறும் நாங்கள் செய்துவந்த வேலைகளாகும். இயேசுவின் நாமத்தை உயர்த்திக் கூறியும், பாடியும், ஊர்வலம் வந்தும், சுறு சுறுப்புடன் பற்பல துறைகளில் உழைக்கப் பழகின அந்நாட்கள் பலருக்கு உற்சாகமாயும், வழிகாட்டியா யும் இருந்தன. இன்றைய S V.M. (Students Voluntary Movement) இதினின்றே பிறந்தது.

அந்நாட்கள் ஒன்றில் எனக்குக் காய்ச்சல் கண் டது. மலசுத்தி செய்தும, பட்டினிகிடந்தும் அது நீங் கவில்லை. ஐந்து நாட்களாய்ச் சிற்சில பக்குவஞ் செய் தும் காய்ச்சல் குறையாததால் ராணிப்பேட்டை ஆஸ் பத்திரிக்குச் சென்று நாலு நாட்கள் தங்கினேன். எனக்கு மலேரியாக் காய்ச்சல் உண்டென்று நான் சொன்னதை நம்பி எனக்கு மருந்து கொடுக்கப்பட் டது. ருசியும், பசியும் இல்லாததால் கிடைத்த உண வைப் பக்கத்தில் அதிக நோயின்றிப் படுத்திருந்தவர் களுக்கு அளித்தேன்.

சுமார் ஐம்பது வயதான ஒருவர் என் பக்கத்தில் படுத்திருக்க, அவரிடம் பெயர் கேட்டதில், தன் பெயர் மத்தேயு என்றும், அடிபட்டதால் சிகிற்சைக்கு வந்த தாகவும் சொன்னார். "உம்மை அடித்தவர் மாற்குவா" என்று நான் கேட்கவே, "இல்லை ஐயா, யோவான்" என்றார். சுரம் கண்ட பத்தாம் நாள் வேலூரில் ஒரு விசேஷக் கூட்டத்தில் நானே பேசவேண்டியிருந்தது. அன்று எனக்குச் காய்ச்சல் நூற்றுமூன்று டிகிரி. பீடத்தில் சாய்ந்து நின்றுகொண்டே செய்தி கூறினேன்.

வெளிக்கூட்டம் ஒன்றில் எனக்கு முன் பேசின சிலரைக் கேட்டவர்கள், உறுமிக், கனைத்துக் கேலிசெய்தனர். எனது முறை வரவும், நான் தைரியமாய் 'உறுமும், கனைக்கும் மக்கள் எவரேனும் என்னுடன் குஸ்திபோட ஆயத்தமா' என்று கேட்டேன். அப்படி இல்லாதிருந்தால் பொறுமையுடன் கேட்க அவர்களை வேண்டி, எனது சாட்சியைக் கூறினேன். அவர்கள் பலமுறையும் கைதட்டி என்னைப் பாராட்டினர்.

பதினாலு நாட்களாகியும் காய்ச்சல் விடாததைக் கண்ட நானே, இளைப்பாறுதலுக்காக எனது நண்பரான போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜே. டி. டேவிட் என்பவரிடம்* (விழுப்புரம் பக்கம், கஞ்சனூர் என்னும் ஊர்) சென்று, மூன்று நாட்கள் தங்கினேன். காய்ச்சல் விடாதபடியால் அவருடைய ஆலோசனைப்படியே சென்னைக்குப் புறப்பட்டேன். கல்லூரி டாக்டர் இரண்டு நாள் கவனித்தபின் என்னை சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்தார். காய்ச்சல் கதையெல்லாம் சொல்லி, குடல் ஜுரத்துக்கு (Typhoid) மருத்துவம் செய்யக் கேட்டேன். இரத்தச் சோதனையில் நான் சந்தேகித்தது உண்மையெனக் கண்ட டாக்டர்மார் என்னை அன்புடன் கவனித்தனர்.

விடுமுறை காலமானதால் நண்பர் எவரும் அங்கில்லை. பத்துப் பவுன் எடையுள்ள ஒரு பொன் சங்கிலியை இரண்டு சுற்றாக என் இடுப்பில் அக்காலம் அணிந்திருந்தேன். நான் இறந்துபோனால் அடக்கச் செலவுக்காக அந்தப் பயன்படுத்தவேண்டுமென்றே அணிந்திருந்தேன். எனது உடைகளை மாற்றி, உடலைச் சுத்தம் பண்ணுகையில் தாதிமார் இதைக்கண்டு மேலதிகாரிக்குத் தெரிவித்தனர். எனது நோய் மரணத்துக்கேதுவானதாலும், இனத்தார், நண்பர் எவரும் எனக்கங்கில்லாதபடியாலும், எவரேனும் இதைக் கழற்

*பக்கம் 160.

நக் கொண்டுபோய்விடக்கூடும் என்ற பயத்தாலே இப்படிச் செய்திருக்கக்கூடும். என்னுடைய மூ சியை விசாரித்துக் கிறிஸ்தவக் கல்லூரிக்குத் தெரி னர். அங்கு இருந்து டாக்டர் பாய்ட் (Dr. Boyd) மறுநாள் காலையில் வந்து என்னைக் கண்டு விவரத் யறிந்து, கோடையில் கோத்தகிரியில் தங்கியிருந் கல்லூரித் தலைவர் டாக்டர் ஹாகு (Dr. Hogg) க்கு தெரிவித்தார். பாய்ட் எனக்குப் பாடம் கற்பித்தவர் நான், 'பிலாசபி ஹானர்ஸ்' படிப்பவன் என்ற அ ததாலேயே, டாக்டர் ஹாகுக்குத் தெரியப்படுத்தினார். ஹாக், என்னை நன்கறிந்திருந்த கல்லூரி உப தலை (Vice-Principal) திரு. ஜே. டி. ஆசிர்வாதம் அவ ருக்கு அறிவித்தார். அவர் என்னை வந்து காண நான் அவரிடம் பொன் கொடியைக் கழற் கொடுத்து, இறந்துபோனால் செய்யவேண்டியவை சொல்லி ஒழுங்குசெய்தேன். வெகு சாதாரணமா நான் பேசினதைக் கேட்டு அவர் ஆச்சரியப்பட்டார்.

அந்நாட்களில் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட் டிருக்கும் நவீன மருந்துகள் (Antibiotics) இல் குடல் ஜுரத்திற்கு மருந்தில்லையென்றும், பராமரிப்பு தான் (nursing) ஏற்ற பரிகாரம் என்றும் அந்நாட்க ளில் மக்கள் எண்ணினர். எனக்குச் செய்யப்பட்ட வைத்தியமுறை, நாடோறும் இரண்டுவேளை உடல் த தம் (sponge bath) செய்தல், மலச்சிக்கல் நீங்க ல யில் கிளிசறின் எனிமா கொடுத்தல், திரைத்த பாலு முட்டை வெள்ளைக் கருவும் கலந்த உணவு நீர், (whey and albumen water) நம்பிக்கையூட்டக்கூடிய கு மருந்து.

ஆஸ்பத்திரியில் படுத்திருந்த நாட்கள் ஐம்ப தைந்து. நாற்பத்தைந்தாம் நாள் எனக்கு வந்த ஒரு கார்டில், ஒரே சொல் எழுதப்பட்டிருந்தது. காங்கிர ஜுலேஷன்ஸ் (Congratulations). அனுப்பியவர் பெய ரைக் கண்டு, நான் கோபப்படுவதற்குமுன் எழுதி

ருந்த ஹானர்ஸ் பிரிலிமினரி (Honours Preliminary) பரீட்சையில் வெற்றிபெற்றிருக்கிறேன் என்ற விபரம் அறிந்துகொண்டேன். லூக். 15 ல் வருகிற "சந்தோஷப்படுவான் அல்லவா" என்ற சொற்களின் உண்மையை நன்கு அறிய இது உதவிற்று.

எப்படியெனில், அத்தேர்வில் ஒப்பேறுவது எனக்கு எளிதாகயிருந்தும், வெற்றிச் செய்தி என் மனதிற்குள் ஒரு பெரிய மகிழ்ச்சியின் ஊற்றைத் திறந்துவிட்டது. அது பெருக்கெடுத்து அடக்கமுடியா இன்பத்தைக் கொடுத்தது. அம்மகிழ்ச்சியில் பங்குபெறும் நண்பரோ எனக்கு அங்கு இல்லை. வழக்கம்போல் மிஸ் பின்ட்டேர் என்ற ஒரு சட்டைக்கார (Anglo Indian) நர்ஸ் என்னைக் கவனிக்க வந்தார்கள். அவர்கள் என்னைக் குளிப்பாட்டி, பல் துலக்கி, காய்ச்சல் அளவு, நாடித் துடிப்பு, மூச்சு வாங்குதல் முதலியவற்றைக் குறிப்பிட்டபின், மருந்தையும் கொடுத்து மறு நோயாளிக்கு நேராகப் புறப்பட்டார்கள். அம்மட்டும் எனது மனதிற்குள்ளிருந்த போராட்டம் இவ்வளவு என்றில்லை. சொல்லவா சொல்ல வேண்டாமா? சொல்லிப் பயன் என்ன? என்றிவ்வாறு நெடுநேரம் போராடியபின் அடக்கமுடியாமல், தலையணையின் கீழிருந்த கார்டை எடுத்து, அந்த நர்சுக்குக் காண்பித்தேன். அவர்கள் அதைப் படித்துப் பார்த்துவிட்டு, 'கிரம்பச் சந்தோஷம்' என்று மட்டும சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்.

நானோ, என் இன்பத்தில் பங்குகொள்ளும் நண்பர் கிடையாது தயங்கினேன், நெடுநேரத்துக்குப்பின் தோட்டி ஒருவன் வந்து தன் கடமையைச் செய்து போனான். அவன் படிப்பறியாதவன். 'பரீட்சையென்றால் என்னவென்றே அறியாதவன். எனது மகிழ்ச்சியின் திரட்சியால் 'ராமா நான் பாஸ் பண்ணிவிட்டேன்' என்றேன், 'அப்படியாச்சாமி' என்று அவனும் போய்விட்டான். சிநேகிதர்களையும், அயல்வீட்டுக்காரிகளையும அழைத்துக் காசைக் கண்டுபிடித்துக் களிகூர்ந்த

மாதுபோல், நான் சந்தோஷத்தால் பித்தனைப் போலாகி விட்டேன்.

சுவிசேஷ ஊழியம் செய்தல் இவ்வாறே இருக்க வேண்டும் என்ற உண்மையை இன்றும் சொல்லிவருகிறேன். இயேசுவை இன்னார் என்று அறியாத உலக மனிதர் சபைகளை நடத்த முன்வருவதைக் காண்கையில், ஆண்டவரை ருசித்த மக்கள் ஆச்சரியப்படுவதில் என்ன விந்தை! ரூபாய் கொடுத்தாலும் பிரசங்கிகள் கிடைப்பதில்லை. வாய்ப்பூட்டுப் போடப்பட்டு உண்மையைச் சொல்ல அஞ்சும் ஊழியர் எத்தனை? குலைக்க மாட்டாத ஊமையான நாய்கள்போன்ற காவற்காரரால் சபைக்குக் கெடுதியே உண்டாகிறது*.

மூன்றுமுறை இந்தக் காய்ச்சல் திரும்பத் திரும்ப வந்தது. டாக்டர்மார் காலைவேளைகளில் வந்து 'இவன் இன்னும் உயிரோடிருக்கிறானே!' என்று தங்களுக்குள்ளே ஆச்சரியப்பட்டனர். சற்றுப் பழகின ஒரு கிறிஸ்தவ டாக்டரிடம் 'நான் சாகவேமாட்டேன். நான் செத்தால் ஆண்டவர் அறிவிலிதான். அவர் என்னில் ஏராளமான முதல் முடக்கியிருக்க, அதற்குரிய பலனைக் காணுமுன் சாவதெப்படி?' என்று என் கதையைச் சொன்னேன். முடிவில் படிப்படியாகக் குணமடைந்து வரவே, எழுபது நாட்களுக்குப்பின் சிறிது உணவருந்த முயன்று, சோறு சாப்பிட்டேன். எண்பத்தைந்தாம நாள் வெளியேறினேன்.

கடைசி சில நாட்களில் எங்குபோகவென்று தெரியாமல், பல இடங்களுக்கும் கடிதம் எழுதினேன்.

---

*"அவனுடைய காவற்காரர் எல்லாரும் ஒன்றும் அறியாத குருடர்; அவர்கள் எல்லாரும் குலைக்க மாட்டாத ஊமைநாய்கள்; படுத்துக்கொண்டு பிதற்றுகிற நித்திரைப்பிரியர்; திருப்தியறியாத பெருவயிற்று நாய்கள். இவர்களோ மேய்ப்பர்? இவர்களுக்கு அறிவுமில்லை, உணர்வுமில்லை, அவர்களில் ஒவ்வொருவனும் தன் தன் வழியிலே போகிறான். ஒவ்வொருவனும் தன் தன் லாபத்தையே நோக்குகிறான்" ஏசாயா 56: 10-11.

Graduated 1934.
p. 197.

Married Siromani Yesuadian 1935
p.196.

அதிகப் பயணம் செய்யாமல், நல்ல இளைப்பாறுதலும், உணவும், பராமரிப்பும் கிடைக்கக்கூடிய இடத்தைக் காட்டும்படி நான் ஜெபித்தேன். பாங்கில் போதிய பணம் இருந்தது. இதற்குள் மாணவர் சேவையும் முடிந்தது. நண்பர்கள் கல்லூரிக்கு வரத்துவிட்டார்கள். பலர் என்னைச் சந்திக்க வந்தார்கள். அதில் ஒருவர், தனக்குப் பழக்கமான ஒரு நண்பரைச் சுட்டிக்காட்டி, அவரும் என்னை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருப்பதா கத் தெரிவித்தார்.

இக்காட்களில் அந்நோய் என் வந்ததெனக் கேட்டு 'உன் பாவம்', 'உன் பெருமை', 'உன்னைப் புடமிடத் தான்' எனப் பலர் எனக்குக் கூறினர். நானோ, யோபு வைப்போல், 'பாவஞ்செய்யவில்லை' என்று கூறி, அவர் களுடைய கருத்தை மறுத்தேன். 'நான் செய்த குற் றத்தை ஆண்டவர் சொல்லட்டும்' என்றேன். ஆயி னும பெருமையுடன் அல்ல; பாவமே நோயை உண் டாக்குகிறது என்ற உபதேசம தவறு என்பதை வற் புறுத்தவே அப்படிச் செய்தேன். 'இனிமேல் அறிவாய்' (யோவான் 13:7) என்ற வாக்கு நிறைவேறும் என்று நம்பினேன். காத்துமிருந்தேன்.

1900 ம் ஆண்டு, திருநெல்வேலி நாட்டிலிருந்து, பாத்தி–உபதேசியார் வேலைக்காக ஆசிரியப் பயிற்சி பெற்ற தம்பதிகள், சென்னை வெஸ்லியன் மிஷனில் வேலைபார்த்துவந்தனர். 1920 ல் டேவிட் எனவடியான் என்ற அந்த உபதேசியார, ஐயர் பட்டம பெற்றார். அத்தம்பதிகள் 1932–ம் வருடம் சென்னைக்குப் பன்னிரண்டு மைலுக்கப்பால் இருக்கும் ரெட் ஹில்ஸ் (Red Hills) என்ற ஊரில் தங்கியிருந்தனர். மேரி தங்கம்மாள் என்ற ஐயர் அம்மாள் உண்மையாகவே தங்கமாய் விளங்கினார்கள்.

இவர்களுக்கு ஆறு பிள்ளைகள். அவர்களில் நான்கு பேர் அக்காட்களில சென்னையில் படித்துவந்தனர்.

முதல் மகன் சங். எட்வின் எச்வடியான்* சபைக் குருவாய் வேலே செய்துவந்தார். அன்னியரை உபசரித்தலும், தானதர்மம் பண்ணுதலும் இந்த அம்மாளின் சிறந்த குணங்கள். 'ஐயர் சாதாரணமான ஆள்தான், அம்மாள்தான் விசேஷம்' என்பர் அவர்களை அறிந்தோர் யாவரும். இந்த மேரிதங்கம்மாள், டோனுவூர் கார்மிக்கேல் அம்மையாருக்கு வலது கைபோலவும், அனுதைகளேச் சேர்க்கும் வேலையை ஆரம்பிக்கக் காரணமாயும் இருந்த பொன்னம்மாளின் இளைய சகோதரி.

பொன்னம்மாளைக் குறித்துக் கார்மிக்கேல் அம்மையார் புத்தகமொன்று எழுதியுள்ளார். பொன்னம்மாள் ஒன்றரைவயதுக் குழந்தையுடன் விதவையாய் அங்கு சென்றவர்கள். அக்குழந்தையே இன்று எழுபது வயதுடைய மிஸ். பி. சற்குணர் என்ற இந்தியத் தலைவியாகிய பரிபூரணம். (பரிப்பக்கா என்றே அவர்களைக் கூறுவர்). ஆங்கில நூற்களில் கார்மிக்கேல் அம்மையார் இவர்களை 'Perfection' என்ற புனை பெயரால் குறிப்பிட்டிருக்கின்றனர்.

நன்கறிந்த யாவரும், குணத்தில் பொன்னம்மாளை வெறும் பொன்னாகவும், தங்கம்மாளையோ சுத்தத் தங்கமாகவும் கருதினர். தங்கம்மாள் எவரையும் நம்பும் அன்பு படைத்தவர். பதினைந்து வயதுமுதலே வருடமொருமுறை வேத புத்தகத்தைப் படித்து முடித்தவர்கள். கணவனுடைய சபை ஊழியத்தில் பெருங்காரியங்களேச் செய்து, மக்களின் அன்புக்குரிய இஸ்ரவேலின் தாய் என்று சென்னை வெஸ்லியன் மிஷனில் அறியப்பட்டவர்கள்.

---

*இவர் சென்னை மெதடிஸ்ட் மிஷனில் இவரது தந்தையைப் போலவே 35 ஆண்டுகாலம் போதகராய் நல் ஊழியஞ்செய்து, சென்னையில் ராயப்பேட்டை சபையிலும், பின் மைலாப்பூரிலும் (St. Lukes) வேலேசெய்துவரவே 1963 செப்டெம்பர் 17ல் மறுமை எய்தினர்.

அக்காலம், நல்ல பெரிய புதிய மிஷன் வீட்டில் ரும் அம்மாளும் மட்டுமே தங்கியிருந்தபடியால், ன்னை ஏற்றுக்கொள்ள அவர்கள் ஆயத்தமாயிருந்த னர். ஐயர் அவர்களே இதை ஆஸ்பத்திரியில் வந்து டாக்டருக்குத் தெரிவித்தார்கள். கிறிஸ்டியன் காலேஜ் அக் காலத்தில் டவுணிலேயே இருந்தது. டாக்டர் ஜான் துரைமையார் கல்லூரி விடுதி மாணவர்களை மிக அன் புடன் கவனித்துவந்தார். என்னை அவர்களுடைய வீட் டில் சென்று நாட்கள் தங்கச்செய்து, பின் பள்ளி யிலிருந்து ஏழு மைலுக்கப்பால் நெட்டூரிலுள்ள மேற்கூறிய ஐயர் வீட்டுக்குத் தனது காரில் அனுப்பிவைத்தார்கள்.

ஞானவடியான் ஐயர் வீட்டில் ஒரு செல்லூர்ப் பசு இருந்தது. கிறிஸ்தவர்கள் வீட்டிலிருந்து அந் நாட்களில் இந்துக்கள் எவரும் பால் வாங்குவதில்லை. தனையால் ஏராளமான பாலும், போதிய பராமரிப்பும் எனக்கு அங்கிருந்தது. ஐயர் வெளியே போகும்போது, அம்மாள் தன்னை ஆண்டவர் நடத்திவந்த முறைகளை யும், தான் பட்டபாடுகளையும் விவரமாய் எனக்குச் சொல்வார்கள். தாயின் அன்பு இன்னதென்று அறி யாது எனக்குக் கிடைத்த பல தாய்மார்களில் இவர்க ளும் ஒருவராயினர்.

நான் அங்கு சென்ற நாட்களில், இன்னொரு வாலிபனும் சுகவீனமாயிருப்பதாகச் சொல்லி அவர்க ளால் பராமரிக்கப்பட்டு வந்தான். அவன் ஒருநாள், ஐயர் அவர்கள் உபதேசிமார் சம்பளத்துக்காக வாங்கி வைத்திருந்த சம்பளப் பணத்தில் ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்துக்கொண்டு போய்விட்டான். இரண்டு வருடங்களுக்குப்பின், அவன் சீர்ப்பட்டு இந்த அறிக் கையைச் செய்தபொழுதுதான், பணம் போன வகை அவர்களுக்குத் தெரியவந்தது. அம்மட்டும் அவனைச் சந்தேகிக்கவும் இல்லை. அப்படிப்பட்ட வெள்ளைநெஞ் சம் படைத்தவர்கள். அறிக்கையிட்டவனோ அப்பணத் தைத் திருப்பிக் கொடுக்கவில்லை.

என் கதையையும் படிப்படியாய் அவர்களுக்கு நான் சொல்லிவந்தேன். படிக்கவேண்டாம் என்று டாக்டர் சொல்லியனுப்பியதால், அந்நாட்களில் பாடப் புத்தகங்களைப் படியாமல், வேதம் வாசிப்பதிலும், பாட்டு எழுதுவதிலும், ஞாயிறுதோறும் பக்கத்தூர் ஆலயத்தில் பிரசங்கம் செய்வதிலும் இரண்டு மாதங்களைப் போக்கினேன்.

ஒருநாள் அவ்வூர்ச் சபையில் தவசு உற்சவம் நடந்தது. மோனகன் ஐயர் அதை நடத்தினார்கள். காணிக்கை சேகரிக்கும்போது, ஐயர் அம்மாள் ஒரு உண்டியல் தகரத்தைக் கொடுத்தார்கள். அதை உடைத்துப் பார்க்கையில், நூற்றுப்பதிமூன்று ரூபாய் இருந்தது. சபையார் கொடுத்தது இருபத்திரண்டு ரூபாய் மட்டுமே. காணிக்கை கொடுப்பதில் அவர்களுக்கிருந்த ஆர்வத்தை இது காட்டிற்று. சென்னை பட்டணத்தில் படித்துவந்த நாலு பிள்ளைகளும் வார இறுதியில் றெட்ஹில்சுக்கு வருவார்கள். அவர்களைப் பார்க்கிலும், என்னையே அதிகமாய்ப் பேணிவந்ததைக் கண்ட மக்கள், பொருமை கொள்ளக்கூடுமே என்று கூட நான் சிலவேளைகளில் நினைத்தேன். அம்மாளின் நல்ல குணம் பிள்ளைகள் யாவரிடத்திலும் ஓரளவு காணப்பட்டதால் அவர்களும் பொருமைகொள்ளாது எனக்குத் தொண்டு செய்துவந்தார்கள்.

சிரோமணி என்ற இவர்களுடைய முதல் மகள் அக்காலம் இங்கிலாந்தில் ஆசிரியப் பயிற்சிக்காகவும், மிஷனரி ஊழியப் பயிற்சிக்காகவும் பதினெட்டு மாதங்கள் மேனாட்டில் தங்கியிருந்தனர். நான் இவர்கள் வீடு செல்வதற்கும் நாலு மாதங்களுக்கு முன்னமே போயிருந்த மகள் வாரத்திற்கொருமுறை பெற்றோருக்கு எழுதும் கடிதத்தைப் படிக்கும்போதெல்லாம், மகளின் குணத்தைத் தாயார் அதிகமாய்ப் புகழ்ந்து பேசுவது இயல்பு. நான் அறிந்த நாலு பிள்ளைகளும் நற்குணசாலிகளே. ஆயினும் அவர்கள் ஒருவரும் தன் மூத்த மகளுக்கிணையல்ல என்பார்கள் ஐயர் அம்மாள்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் ஆசிரியப் பயிற்சியில் தேறி, 1933 ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் இருபத்தைந்தாம் நாள் அந்த மகள் திரும்பிவந்தனர். ஒருவருடம் ஈக்காடு மெதடிஸ்ட் மிஷன் கைத்தொழிற் சாலையில் உழைத்தபின், தென்னிந்தியா முழுவதிலும் நிற்கும் வாலிபப் பெண்கள் சங்கங்களை திறவ முதல் இந்தியச் செயலாளராக நியமிக்கப்பட்டனர். அவர் தமை 1935 ஜூன் மாதம் சகாயம் பிரசங்கியாருக்கு மனைவியானர்கள். "இனிமேல் அறிவாய்" என்பதன் கருத்து இதுவே.

1934 மார்ச் மாதம் என் படிப்பு முடிந்தது. மாகாணத்து முதல் மாணவன் என்ற பதவி கிடைக்கலாம என்று பலர் என்னைக் குறித்து எண்ணினர். இடைக்காலத்து நோயும், கலியாணப் பேச்சும் இருந்தபோதிலும் மாகாணத்தில் இரண்டாம் மாணவனாக ஆண்டவர் கிருபையால் வெற்றிபெற்றேன்.

படிப்பு முடிந்ததும பிரசங்கியாக அலையவே நான் எண்ணங்கொண்டேன். நீல் ஐயர் 'கடவுள் உன்னை நடத்துகிறபடி கீழ்ப்படி' என்ருர். சபைக்குள்ளே என் வேலைசெய்ய விரும்பியும், போதகர் ஊழியத்தை அன்று விரும்பவில்லை. அவ்வாறே உழைத்துச் சபையைச் சீர்திருத்த விருப்பங்கொண்டேன. இவ்விருப்பத்தை நீல் ஐயருக்கும் தெரிவித்தேன்.

1934 மேய் முதல், ஆறு மாத காலங்கள் ஒரு சுழற்சல ஊழியனுக நெல்லை நாட்டில் புளியங்குடி என்ற ஊரில் தங்கி, அங்கிருந்த சபைக்குப் புத்துயிர் ஊட்டியும், இராப்பள்ளிக்கூடம் வைத்துப் பெரியோருக்கு எழுத்தறிவு புகட்டியும், வாலிபரைக் கூட்டி நர் சுத்தம் செய்தும், தீண்டாமை ஒழிப்பு முதலிய பல வேலைகளிலும் ஈடுபட்டேன். என்னை ஆதரித்த ஐயர்கள் தோர்ணக்கல்லுக்கு என்னை ஒரு மிஷனரியாக அனுப்ப விருப்பங்கொண்டு, பிஷப் அசரியாவுக்கும் எழுதினர்கள்.

என்னைப் படிக்கவைத்த நண்பர்களே தோர்ணக்கல் ஊழியத்திற்குப் பண உதவிசெய்ய முன்வந்தபடியால், இந்திய மிஷனரிச் சங்கம் என்னை அனுப்ப எல்லா ஒழுங்குகளையும் செய்தனர். 1935 ஜனுவரி மாதம் தோர்ணக்கல்லுக்குப் புறப்பட்டேன். சென்னையில் செல்லவும், அங்கு பிஷப் அசரியாவிடமிருந்து எனக்கு வந்த கடிதத்தில், அவ்வொழுங்கை அவர் விரும்பவில்லை என எழுதியிருந்தார். ஆகையால் நானும் அது தேவசித்தமல்ல என்று எண்ணி, பர்மாவுக்குச் சென்றேன். ரங்கூன், மோல்மீன் ஆகிய இரண்டு பட்டணங்களிலும் இருபத்தெட்டு நாட்கள் தங்கி, முப்பத்தைந்து பிரசங்கங்கள் செய்தேன். அங்கிருந்து பினாங் போக யோசித்துக்கொண்டிருக்கையில், நீல் ஐயர் திருநெல்வேலியில் என்னை ஒரு ஊழியனாக ஏற்றுக் கொள்ளத் தாம் விரும்புவதால், உடனே திரும்பிவர எழுதவே, நான் திரும்பினேன்.

மாத வருமானமுள்ள நிலையான ஊழியம் செய்யத் தொடங்கின பின்தான் கலியாணம் செய்வதென்று நாங்களிருவரும் திட்டமிட்டிருந்தோம். நிச்சயதாம்பூலம் 1934 ஏப்ரல் இரண்டாம் தேதி பரீட்சை முடிந்த மறுவாரமே நடைபெற்றது. 1935 ஜூன் ஐந்து, காலை 9 மணிக்கு கலியாணம்.

என்னைச் சபைக்குள் நுழையவிடக்கூடாதென்று நெல்லை சபைத் தலைவர்கள் சிலர் சூழ்ச்சி செய்தனர். தங்கள் ஊழல்களைக் கண்டிக்கலாம என்றும், தங்களைப் பார்க்கிலும் நான் முன்னேறிவிடவும கூடும் என்ற பயமுமே அவர்களை இப்படிச் செய்ய ஏவிற்று. அவ்விதச் சூழ்ச்சிகள் இந்நாள்மட்டும் ஓய்ந்தபாடில்லை. துர்க்குணம மட்டுமே என்னை எதிர்த்தது எனலாம். முடிவில் 1935 மேய் மாதம நீல் ஐயர் 30 ரூபாய் வேலையொன்றைப் புதிதாய் நிறுவி, பிஷப் வெஸ்ற்றன் (F. J. Western) தமது பணத்தில் மாதம் 30 ரூபாய் எனக்கென்று ஒதுக்கி, ஆக 60 ரூபாய் ஊதியத்தில்

என்னை நியமித்தனர். அந்த வேலை எனக்கென்றே அப்போதைய அத்தியட்சரவர்களாலும், நீல் ஐயாவர்களாலும் புதிதாய் உருவாக்கப்பட்டது. இதற்குப் பல தடைகள் எழுப்பப்பட்டன. ஸ்ரீவைகுண்டத்தில் பரீட்சிக்கும் முறையில் (Experiments in Evangelism) சுவிசேஷ ஊழியம் செய்வதே எனது வேலை.

ஜூன் மாதம் பாளையங்கோட்டையில் திருமணம் நடந்தது. சீதனம் ஒன்றுமில்லை. நண்பர்களுதவியால் எல்லாச் செலவுக்கும் போதிய பொருட்கள் வந்து குவிந்தன. நண்பர்கள், உணவும், வீணை, ஜலதரங்கம், புல்லாங்குழல் முதலிய இன்னிசை விருந்தும் இலவசமாகவே கிடைக்கச் செய்தனர். இந்திய உடையையே திருமணத்திற்கு அணிந்தேன். தமிழிசையிலேயே ஆராதனை நடத்தச் செய்தேன். டி. எஸ். டேவிட் ஐயரும், துரைராஜ் ஐயரும் ஆராதனை நடத்த, நீல் ஐயர் பிரசங்கம் செய்ய, பிஷப் தாலிகொடுக்க, நற்கருணை ஆராதனையுடன் திருமணம் நடந்தது.

பெண்ணும், மாப்பிள்ளையும் நேரே கன்னியாகுமரிக்குச் சென்று மூன்று நாட்கள் தங்கவேண்டுமென்பது ஒழுங்கு. அதற்கிசைய ஒரு புதிய சிறு மோட்டார் வண்டியில் புறப்பட்டோம். காவற்கிணறு தாண்டி, தனித்த பாதையில் கன்னியாகுமரிக்குப் பதி மூன்று மைல் தொலை இருக்கையில், காற்றடைத்த உருளை இரும்பாணியேறிக் கிழிந்தது. வேறு போக்கின்றி, மாலைவேளையில் இரண்டுமைல் நடந்து, அடுத்த ஊர் போய்ச் சேர்ந்தோம். ஓட்டையை அடைக்க வழியில்லாதிருந்தும், மோட்டார் ஓட்டியின் திறமையால் காற்று அடித்து அடித்து, மெல்ல மெல்ல இரவு ஒன்பதுமணிக்குக் கன்னியாகுமரி சேர்ந்தோம்.

மூன்று நாட்களுக்குப்பின் எனது மாமனார் வீட்டார் யாவரும் அங்கு வந்துசேர்ந்தனர். ஒருநாள் தங்கியின் தோட்டவாரம் சென்று அங்கும் இரண்டு

நான் தங்கி, ஜூன் பத்தாம் தேதி ஸ்ரீவைகுண்டம் சேர்ந்து, குடும்ப வாழ்க்கை தொடங்கினோம்.

அளவின்றிச் செலவுசெய்த கைகள் இப்பொழுது கணக்குப்பார்த்துச் செலவு செய்யவேண்டியதாயிற்று. பல நண்பர்கள் எங்களுக்கு அவசியமான யாவற்றையும் கொடுத்தார்கள். வீட்டுக்குரிய பணிமுட்டுகள், பாத்திரங்கள், அடுப்புமுதல் அகப்பைவரை யாவும் நாங்கள் பெற்றுக்கொண்டோம். இரண்டு மாதகாலம் நாடோறும் வியப்புறும் விதத்தில் பொரித்த மீன், பலகாரம் முதலிய யாவும் தூத்துக்குடியிலிருந்து அனுப்பப்பட்டுவந்தன.

திடீரென்று உதவிசெய்த நண்பர் வீடுகளில் தடைகள் தோன்றவே, எலியாவின் நீரூற்று வற்றிப்போயிற்று. அதற்குப்பின் அறுபது ரூபாய்க்குள், மாதம் ஐந்துரூபாய் என் தகப்பனாருக்கும், ஐந்துரூபாய் காணிக்கைக்குப்போக மிஞ்சியதில் எங்கள், எல்லாச் செலவுகளையும செய்யமுடிந்தது. அந்த நாட்களில் ஒரு ரூபாய்க்கு ஆறுபடி அரிசி கிடைத்தது.

இந்திய முறைகளில் ஆராதனைக்குரிய பாடல்களைத் தயாரிப்பதும், சபையாரைப் பழக்குவதும், சுவிசேஷ ஊழியத்திற்குச் சபையை நடத்துவதும் எனக்கு உற்சாகமாயிருந்தன. ஏனாதி நாத நாயனார் பிறந்ததாகக் கூறப்படும் ஆள்வார்தோப்பு என்ற ஊரிலுள்ள சபையில் இவ்வேலைகள் சிறப்பாக நடந்தன. அவ்வூரார், வீட்டிற்கு ஒரு ஆளும், கால்படி அரிசியும், அரை அணாவும் வாரந்தோறும் கொடுக்கத் தாங்களே ஒப்புக்கொண்டனர். தங்கள் ஊரைச்சுற்றிய கிராமங்களில் சனிக்கிழமைதோறும் சென்று, பிரித்த அரிசியைக் கொண்டு, குறித்த ஊரில் முன்னதாகவே போசனம் சமைத்து, ஆண்கள் கூடி, மாலை ஏழுமணிமுதல் பத்து அல்லது பதினொரு மணிமட்டும், பிடில், ஆர்மோனியம், மிருதங்கம முதலியவற்றின் துணையாய் பாடிப் பிரசங்கம் செய்வோம. இரவு பன்னிரண்டு

ணிக்குப்பின் போசனமருந்தி மூன்று, நாலு மைல் ...ந்து, தங்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிச் ...ல்வோம். நான் செய்த இந்த ஒழுங்கால் சபைகள் ...ல இதைத் தொடரவும், போதகர் உதவியின்றியே ...விசேஷ ஊழியம் செய்யவும் பழக்கப்பட்டன.

...படித்த இந்நூல்களுக்கேற்றமுறையில் வேதத்தை ...ளக்கிக் கூறும் சொற்பொழிவுகள், பாமர மக்களுக் ...கேற்ற கதை தழுவிய பிரசங்கங்கள், ஆராதனையில் ...திருத்தங்கள், வேதாகமப் பாடவகுப்புகள் போன்ற ...ற்பல துறைகளில் சிறிதளவு ஆய்வு நடத்தியபோதி ...ம், திருநெல்வேலிச் சபைக் குருக்கள் பலரும் இந்த ...வேலையை வீண் செலவெனக் கருதினர்.

1930 மார்ச் மாதம் பத்தொன்பதாம் தேதி என் ...ன் குடும்ப வாழ்க்கையின் முதற் கனி தோன்றிற்று. ...கோடு மெதடிஸ்ட் மிஷன் ஆஸ்பத்திரி. இரண்டு ...ஆங்கிலேய டாக்டர் அம்மான்மார். ஒரு இந்தியர். ...ன் கொழுந்தி* நாலாம் லேடி டாக்டர். பன்னிரண்டு ...ணிக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது என்னும் செய்தி ...கிட்டிற்று. பன்னிரண்டரைக்கு அவ்வூர்த் தபால் ...ப்படுவதற்குள், செய்தியை நண்பர்களுக்குத் தெரி ...க 'டைப்' அடித்துக்கொண்டிருக்கவே, இன்னொரு ...வர் வந்து 'குழந்தை அழவில்லையாம்' என்று தெரி ...க, நான் பிரசவ அறைக்கு விரைந்தேன். ஏழரை ...தல் எடையுள்ள அக்குழந்தையை உயிர்ப்பிக்க ...டிற்குக் கொண்டு வந்துகொண்டிருந்தனர்.

இதில் ஆண்டவருடைய இரகசியம் விளங்கவில்லை. ...றும் முன் ஒழுங்கின்படி, மறுநாள் சேவத்தில்

---

*எமிலி கமலம் என்ற இவர், திருச்சபைச் சரித்தி பேராசிரியர் சங். டி. ஏ. கிறிஸ்துதாஸ், B.A., L.T., ., M.Th. ஐயரவர்களை 1936 ஜூன் 6 ல் மணந்து, ... று பிள்ளைகளின் தாயாகி, 1964 ஜூலை 28 ல் சேரும் ...ல் இறந்துபோனார்கள்.

ஊழியர் கன்வென்ஷன் கூட்டங்களுக்குப் புறப்...
டேன். போகும் வழியில் யோவான் 18:11ஐப் படி...
கவே, ஒரு புதிய முறையில் துன்பத்தின் இரகசி...
அன்று எனக்குப் புலப்பட்டது. பிதா கொடுக்...
பாத்திரம் அவர் குடித்த பாத்திரமே. இத்தபாத்...
அவர் ருசித்தபின் மட்டுமே நமக்குக் குடிக்கத் த...
கிறார். நஞ்சிட்ட பாத்திரத்தை ஒருநாளும் அவர் தார...
ஆகையால் சந்தோஷத்தோடே அதைப் பருகப் ப...
குதல்வேண்டும். 2 கொரி. 12:10.

---

## என்.எம்.எஸ். செயலாளர்

1937 ஜனுவரி மாதம் N.M.S. செயலாளரா...
நான் நியமிக்கப்பட்டு, சென்னைக்குச் சென்றபோது...
திருநெல்வேலியில் சிலர் மகிழ்ச்சியுற்று, வாதை நீ...
ததெனக் கருதினர். எங்கு போகிறோம் என்று அ...
யாமல் நாங்களும் கீழ்ப்படிந்து சென்னை சென்றோ...
தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடப் பகுதிகளு...
குரிய ஒரே முதல் செயலாளராக, தென்னிந்தியா மு...
வதும் சுற்றித் திரியவேண்டிய வாய்ப்பு எனக்கு...
கிடைத்தது. ஒருவகையில், தேசாந்திரப் பிரசங்கியா...
வேலை, மறுபடியும் கிடைத்ததெனலாம்.

1937 மே பத்தாம் தேதி எங்கள் இரண்டா...
குழந்தை கருணை சிலாவதி நக்காடு ஆஸ்பத்திரியிலே...
பிறந்தாள்.

இதற்குமுன், நான் கேளாமலே எனது செ...
குரிய பாவையும் கடவுள் அனுப்பித் தந்தார். அ...
மேல் பாரத்தைப் போடுவோரை நடத்தும் ஆச்சரிய...
மான முறைகளை நானும் நன்கறிந்திருந்தேன். N.M.S.

சங்கத்தின் ஊழியங்களைச் செல்வனே செய்வதிலும் இவ்விஷயமாக முறைகளை நுழைக்க முயன்றேன். சுவிசேஷ ஊழியத்திற்காகச் சபைகளை அழைக்கவும் ஏற்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

N M.S. அலுவலகத்தில் பணம் வருவதைப் பொறுத்தே எனது ஊழியத்தின் வெற்றியை மக்கள் நிறுத்தனர். எங்கு சென்றாலும் "கொடுங்கள்" என்பதே என் பல்லவியாயிற்று. அதைக்குறித்து நான் வெட்கப்படவுமில்லை. இந்திய சுதேச மிஷனரித் திருச்சபையை இயற்றும் பணியும் அந்நாட்களில் எனக்குக் கொடுக்கப்பட்டது. மாதம் இருபதுநாள் பிரயாணமும், பத்துநாட்கள் அலுவலக வேலையும் எனக்குக் கொடுக்கப்பட்டது. பட்டம்பெறாத ஊழியன் ஆனதால் பல சபைகளில் ஆராதனைகளில் பிரசங்கிக்க எனக்கு இடங் கொடுக்கப்படவில்லை. பொறுப்பாளர்கள், ஆராதனைக்குப்பின் கூட்டம் நடத்த அனுமதித்தனர். முக்கியமாய் ஆங்கிலிக்கன், லுத்தரன் சபைகளில்தான் இந்த ஏற்பாடு இருந்தது. என்றாலும அவர்களில் சிலர் பழக்கத்தை ஒதுக்கிவைத்து, என்னை உபயோகிக்கத் தயங்கவில்லை.

ஒருமுறை மூணார் மலையைச் சேர்ந்த தேயிலைத் தோட்டம ஒன்றில் இரவு கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அதனால் பகல் முழுவதும் நான் உபாத்தியாயர் வீட்டில் தங்கியிருக்க நேரிட்டது. மாப்படி வித்தைக்காரன் ஒருவன் பல நற்சாட்சிப் பத்திரங்களுடன் அதே தோட்டத்திற்கு வந்து, தனக்கு ஒரு கூட்டம் ஏற்படுத்த முயன்று, நான் தங்கியிருந்த வீட்டிற்கு வந்தான். என்னிடம் அவன் கதையைச் சொல்லவே, காரியத்தை அறிந்த நான், நானும் அவனைப்போலப் பணம் சேர்க்கும் தொழிலில் ஈடுபட்டே அங்கு போயிருந்ததாகத் தெரிவித்தேன். எங்கள் இருவருக்கும் நடந்த பேச்சைப் படிப்பது விநோதமாயிருக்கும்.

செப்படி வித்தைக்காரன்: ஐயா நான் அயலூர் வாசி. இன்றுதான் நான் இங்கு வந்திருக்கிறேன்.

N.M.S. செக்ரட்டறி: எனக்கும் அயலூர்தான். இன்றுதான் நானும் இங்கு வந்தேன்.

செ.வி.: நான் ஒரு தொழிலாளி.

செக்: நானும் ஒரு தொழிலாளிதான்.

செ.வி: நான் மேசை வேலைகள் காட்டுவேன்.

செக்: நானும் மேசைமுன் நின்றுதான் என் தொழிலைச் செய்துகொண்டு வருகிறேன்.

செ வி.: எனக்கு நாட்டு வேலையும், இங்கிலீஷ் வேலையும் தெரியும.

செக்.: எனக்குத் தமிழ், மலையாளம், இங்கிலீஷ் வேலைகள் தெரியும.

செ.வி.: எனக்கு ஐம்பது ரூபாய்மட்டும் ஒரேநாளில் சிலவேளை கிடைக்கும.

செக்.: எனக்கு நூறுரூபாய் நோட்டு கிடைத்த நாட்களும உண்டு.

இதைக்கேட்ட வித்தைக்காரன் என்னையும் ஒரு வித்தைக்காரனென்றே நினைத்து, எனக்குமுன் தன் வித்தைகள் பலிக்காது என்று எண்ணி, ஒருவருக்கும் சொல்லாமலே தோட்டததை விட்டுப் போய்விட்டான். இராக்கூட்டத்தில் இக்கதையைச் சொல்லி யாவரையும் சிரிக்கவைத்தேன். பல புதிய நண்பர்களது தொடர்பும், பணமும் சப்பாதித்தேன்.

ஓர் ஐயர், தமது ஊரில் நான் சென்றதை விரும்பவில்லை. கூட்டம் ஒழுங்குபண்ணவும் முன்வாவில்லை. அங்கு ஒரு போடிங் ஸ்கூலும, அதின தலைவியாக ஒரு ஐரோப்பிய மாதும இருக்கவே, நான் அவர்களைக் கண்டு, பள்ளிக்கூடததில் பெண் பிள்ளைகளுக்கு அரைமணி நேரம் பேச ஒழுங்குசெய்தேன்.

"N.M.S. சங்கமதை
என் மீதினில் கொண்டு தினம்
என் கடமை செய்திடவே
ஏற்ற பெலன் தாருமையா."

என்ற கவியை ஒரு கார்டில் அச்சிட்டு, "வாரு மையா போதகரே" என்ற இராகத்தில் அதைப் பாடக் கற்றுக்கொடுத்தேன். இது 'என்' சங்கம். இது 'எம்' சங்கம். 'எனக்கு' இதைப் பேணும் கடமையுண்டு, இவ்வாறு உண்மையை விளக்கிச் சொன்னேன். அன்று மாலை ஊர் முழுவதும் தெருக்களில் இந்தப் பாட்டைக் கேட்டு, ஊராரும், போதகரும் நான் உழைக்க வழிதிறந்தனர்.

ஒரு பட்டணத்திலுள்ள பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரி, மருத்துவத்தாதியர் விடுதிகள் யாவற்றையும் சந்தித்து, எட்டுமுறை ஒரே நாளில் பேசி, இரவு பத்துமணிக்கு நான் ஒரு வீட்டின் முன் வராந்தாவில் படுத்திருந்தேன். இரவு பதினொருமணிக்கு ஏதோ ஒருவர் கதவைத் திறப்பது கண்டு 'யார்', எனக் கேட்கவே, அது பிழைப்புக்காய் வேடிக்கை பேசும் (ventriloquist) ஒரு குருடன் என்று கண்டேன். அவன் முன்னொருநாள், அந்த மனிதன், குருவிச் சத்தம், நாய் குரைத்தல், மாமிமார் மருமகள் சண்டைபோன்ற பல பேச்சை எழுப்புவதைக் கேட்டிருக்கிறேன்.

படுக்கைக்கு அங்கு இடங்கொடுத்தபின், அன்று அவர் சென்ற இடங்களைக் குறித்து விசாரித்தேன். நான் சென்ற இடங்களில் அவரும் சென்றதாகவும், 17 ரூபாய் 8 அணா தனக்குக் கிடைத்ததாகவும் கூறினார். எனக்குக் கிடைத்ததோ 3 ரூபாய் 8 அணா மாத்திரம்!

1938 பெப்ரவரியில் கோட்டயத்திற்குச் சென்று ஒரு பெரியார் துணையால் வாடகைக்கார் ஒன்று அமர்த்தி, நண்பர் ஒருவருடன் நான் முழுவதிலும்

பெரியோரைக் காண்பதிலும், பணம் திரட்டுவதிலும், குறிக்கப்பட்ட கூட்டங்களில் இடையிடையே பேசுவதிலுமாய்ப் பதினாறு மணிநேரம் செலவழித்தேன். இவ்வாடகைக்குச் சரியான பதினெட்டு ரூபாயே பிரிவாயிருக்கக்கண்டு, வெட்கமும், துக்கமும், கோபமுமடைந்தேன்.

அவ்வூரில், 1500 ரூபாய் மாதச் சம்பளமுள்ள கலியாணமாகாத பெரியார் ஒருவர் தான் வளர்த்த நாய் ஒன்றிற்கு மாதம் 50 ரூபாய்க்குமேல் செலவு செய்துவந்தார். சங்கத்தின் வரலாறு, நோக்கம், வசதியம், தேவை யாவையும் நான் தெளிவுற வெளிப்படுத்தியபின், "இதில் எனக்கு நம்பிக்கையில்லை" என்று அவர் கூறி என்னை அனுப்பிவிட்டார். சிலர் பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல் பேசி அனுப்பினர். வேறு சிலர், "உனக்கு வேறுவேலை செய்யக்கூடாதா, இப்படி பிச்சையெடுப்பது வெட்கமல்லவா" என்றனர். பல் வைத்தியர்கள் பற்களைப் பிடுங்குவதுபோல் முயன்று எனக்குப் பதினெட்டு ரூபாய்க் கிடைத்தது.

இவ்வாறு முயன்று, அலைந்த அக்கால், என்னுடன் படித்த ஒரு நண்பர் தாம் தலைமைதாங்கி நடத்தும் தாழ்த்தப்பட்ட கிறிஸ்தவ விடுதிக்குப் பணம் சேர்த்துத் திரிவதைக் கண்டேன். அவர் தன் கதையைக் கூறக் கேட்ட நான், என்னை அடியாமல் விட்டு விட்டதற்காக ஆண்டவரைத் துதித்தபின், எனது பங்காக ஒரு சிறு உதவியும் அவருக்களித்து மகிழ்ந்தேன். ஒரு நாய் எச்சிற் இலையை நக்கி நிற்கவே, இன்னொரு நாய் வந்து இலையில் ஒன்றுமில்லாததால் முதல் நாயின் உதட்டை நக்கினதாம். 'இலை நக்கி நாயுட செறி நக்கி நாய்' என்று மலையாளத்தில் ஒரு பழமொழியும் உண்டு.

கோட்டயத்திலிருந்து மாராமன் கன்வென்ஷனுக்குப் பேச்சாளராகச் சென்றேன். அங்கு கூடியிருந்த முப்பதாயிரம் மக்கள் மத்தியில் கலைச்சுவை கலந்த பிரசங்கத்தால் மலையாளக் கிறிஸ்தவர்களின் சுயாபிமா

மையச் சுட்டிக்காட்டி அவர்களைத் தட்டி உணர்த்தி
னேன்.

எனது மலையாளப் பேச்சில் தமிழ் மணம் சற்
றேனும் கமழவில்லை. மலையாளக் கிறிஸ்தவர்கள் நடு
விலே ஈராண்டுகள் நான் தங்கியிருக்க நேர்ந்ததால்,
(ஆலுவாயில்) அவர்கள் பெலமும், பெலவீனமும்,
மொழியும், மொழியின் அழகிய சிலேடை நடையும்
ஒரு தனி மலையாளியைப்போல நான் அறிந்திருந்தேன்.
மாராமன் கன்வென்ஷன் பிரசங்கத்தில் சொல்லவேண்
டியதைத் தாராளமாயும், நேரடியாயும் சொல்லிவைத்
தேன்.

அவர்கள் சுவிசேஷ ஊழியத்தில் அசைந்திருந்தால்
கூட இதற்குள் இமயம் தாண்டியிருக்கலாமே! அவர்
கள் பொதுவாகக் கொடுக்கும் பண்பு குறைந்தவர்கள்.
பிரசங்கம் கேட்கமட்டும் இருந்துகொடுப்பார்கள். இச்
சால் மலையாள மொழியில் நகைச்சுவையை வெளிப்
படுத்தும். அக்கூட்டத்தில் இப்படிச் சொல்லவே
யாவரும் புன்னகை பூவினர். முகச்சவரம் செய்பவன்
முன் அசையாதிருப்பதுபோலவே மூன்று, நான்கு
மணிநேரம் சூடான ஆற்றுமணலில் பிரசங்கம் கேட்க
இருந்துகொடுப்பார்கள்' எனவே, அன்று ஒரு பெரிய
கைத்தட்டு எனக்குக் கிடைத்தது. கன்வென்ஷன் கூட்
டங்களில் கையடிப்பது வழக்கமல்ல. இருபத்தேழு
ஆண்டுகளுக்குப்பின், இன்றும் அதைக்கேட்ட பலர்
'தமிழன் ஒருவன் நம்மைக் கேலிபண்ணினான்' என்
கின்றனர்.

1939 மேய் மாதம் ஒற்றைக்கல் மண்டபம்
என்ற ஊட்டியில் ஒரு மாதம் தங்கினேன். எனது
மனைவி Y.W C.A யோடு தொடர்புகொண்டிருந்த
படியாலும், சமையல், விருந்தினரை உபசரித்தல் ஆகி
யவற்றில் இயற்கையாகவே தாயாரிடமிருந்து மிகத்
திறமை பெற்றிருந்தபடியாலும், Y.W.C.A. கூட்டத்
தார் ஆண்டுதோறும் கோடையில் கூடிய மகாநாடுக

ளுக்கு (Hostess) உபசரிப்பாளராக அவர்களை அமர்த்தனர். 1938 முதல் 41 வரை நான்காண்டுகள் தொடர்பாக அங்கு சென்றனர். எனக்கும் ஆண்டுதோறும் ஒரு மாதம் அங்கு தங்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்நாட்களில் அங்குள்ள சபைகளிலும், கூட்டங்களிலும் N.M.S. சங்க வேலையைக் குறித்துப் பேச முடிந்தது.

1938 ம் வருடத்தில் நண்பர் ஒருவர் உதவியால் ஸ்காத்லாந்து (Scotland) நாட்டிலிருந்து படம் காட்டும் கருவி (Projector) ஒன்று வாங்கினேன். N.M.S. அலுவலகத்திலிருந்து பழைய படங்கள் சிலவற்றைத் தேடிப் பொறுக்கியும், புதிய பலவற்றை நானே புகைப்படம் பிடித்தும, சங்கச் சரித்திரத்தை ஒருவாறு தொகுத்து வேலைகளை விளக்க நூறு படங்களைச் சேர்த்தேன். அவற்றை ஒரு அங்குலப் பருமனுள்ள சுருளாக்கி (Film-strip) அதை மின்சாரம் இருந்த இடமெல்லாம் உபயோகித்தேன். அதில்லாத இடங்களில், மோட்டார் கார் பாட்டரி ஒன்றில் தொடுத்து வெளிச்சமெடுத்தும் படம் காட்டினேன். முடிவில் நானே ஒரு சிறிய பாட்டரி (Battery) வைத்து ஆங்காங்கே அதை நிரப்பி (Charge) உபயோகித்தேன். எனக்குத் தெரிந்தமட்டும் ஒரு இந்தியன் கையில் அப்படிப்பட்ட (Projector) கருவி அந்நாட்களுக்குமுன் இருந்ததில்லை என்று எண்ணுகிறேன்.

இப்படியாகக் கொடுக்கப்பட்ட வேலையை முழுமனதோடு செய்ய முயன்றபோதிலும் எனது வாழ்க்கை N.M.S. செக்ரட்டரி வேலைதான் என்று தோன்றவில்லை. இரண்டு ஆண்டுகள் செல்லவும், சலிப்பு தோன்றியது. போகுமிடமெல்லாம் நல்ல பிரசங்கி என்ற பட்டம். சங்கத்துக்குப் பண வருமானம் பெருகியது. என்றாலும் சகாயத்தின் மனதிற்கு நிம்மதியில்லை. அக்காலம் நான் கிறுகிய பிறந்தநாள் நன்கொடை முறை இந்நாள்வரைக்கும் சங்கத்தால் கையாளப்படவில்லை. கனியால் மரத்தை அறியலாம்.

புதிய முறைகளில் சோதனைகள் எழாததால் நான் எதிரியற்ற வீரன்போல் சுற்றித்திரிந்தேன். என் பெலனைப் பெருக்கக்கூடிய தடைகளைக் காணாததால் சோர்ந்து போக ஆரம்பித்தேன்.

1938 டிசம்பரில் அகில உலக மிஷனரிச் சங்கத்தின் இரண்டாவது மாநாடு தாமபரத்தில் கூடிற்று. மாநாடு கூடுமுன் பல மாதங்கள் தாம்பரம் வருகின்றதென்ற பல்லவிகளும், கூட்டங்களும், பேச்சுகளும ஆங்காங்கே நடந்தன. மாநாடு முடிந்தபின் 'தாம்பரத்திற்குப்பின்' (Post Tambaram) என்று சில மாதங்கள்! இப்படியாக மாநாடு கூடுவதே திருச்சபையின் வாணாள்போல் தோன்றிற்று. அப்படிப்பட்ட ஒரு கூட்டம் 1939 மேய் மாதம் 'ஊட்டி'யில் ஒரு சில நாட்கள் கூடினது. பிஷப் அசரியா, தேசியக் கிறிஸ்தவக் கழகச் செயலாளர் டாக்டர் ஹாட்ஜ் (Dr. Hodge) போன்றவர்கள் பேசினபின் கேள்வி கேட்டவர்களில் சகாயம் பிரசங்கியாரும் உண்டு. எனது கேள்விகள் கேலிச்சுவையுடன் குறும்புக்காகக் கேட்டவைபோல் தோன்றினும, அறிந்தோருக்கு அவற்றின் கௌரவம் நன்கு விளங்கினது.

ஒரு இரவு கூட்டம் முடிந்தபின் ஆறுபேர் சுற்றியிருந்த உணவு மேசையில் டாக்டர் ஹாட்ஜ், பிஷப் அசரியா, இன்னும சிலருடன் எனக்கும இடம் கிடைத்தது. பிரசங்கப் பொருளைத் தொடர்ந்து சபைத் தலைவர்களின் குறைகளை வெளிப்படுத்த நான் துணிச்சல் கொண்டேன். என்னை வாயடைப்பது எளிதல்ல என்பது அவர்களுக்குத் தோன்றிற்று. பிஷப் அசரியா என்னை முன்பே நன்கு அறிந்தவர். தம்மிடம் வேலைக்கு வேண்டாமென்று நான்கு ஆண்டுகளுக்குமுன் எனக்குக் கடிதம் எழுதியவர். என்னை இன்னார் என்று அறியாத ஹாட்ஜ், உண்டபின் என்னைத் தனியே அழைத்து, தம்பி நீ குருத்துவ ஊழியத்துக்கு வெளியே நிற்பது நல்லதல்ல. உன்னைப்போன்றவர் சபைக்குள்

லிருந்து பொறுப்பு ஏற்பது அதிகப் பிரயோஜனமாகும் என்றார்.

ஆங்கிலிக்கன் சபையில் அபிஷேகிக்கப்பட்ட குருமார் ஏராளமாயிருந்தாலும், சபையை நடத்தி வழிகாட்ட வாய்ப்பில்லாதிருக்கின்றனர். இதையறிந்த நான் 1926-ல் ஆங்கிலிக்கன் சபையில் ஒரு அங்கமானேன். திருநெல்வேலி பிஷப் டப்ஸ் (Tubbs) கைலாசபுரம் சபையில் எனக்குத் திடப்படுத்தல் கொடுத்தனர். அக்காலம் குருப்பட்டம் பெறுவதைப்பற்றியும் யோசிக்கலானேன். என் உயர்வுக்காக அல்ல, சுவிசேஷத்தின் பரவுதலுக்காக!

நான், டாக்டர் ஹாட்ஜினிடம், நானும் சிலகாலமாய் இதைக்குறித்து யோசித்து வருவதாகவும், ஆண்டவர் தெளிவாய் வழிநடத்தினால் கீழ்ப்படிவேன் என்றும் கூறினேன். அன்றிரவே பிஷப் அசரியாவையும் கண்டு, அவரை அந்தவாரத்தில ஒருநாள் கோத்தகிரியிலுள்ள அவருடைய வீட்டில் சென்று காணவும் ஒழுங்குசெய்தேன்.

ஒரு வியாழன் காலையில் நான் செல்வதாக பிஷப்புக்குக் கடிதம எழுதி, குறிப்பிட்டபடியே காலை பத்து மணிக்கு அங்கு சென்று சேர்ந்தேன். புதன்கிழமை அவர் எனக்கு அனுப்பிய பதிலில் நான் குறிப்பிட்ட நாள் வெள்ளி என்று எண்ணி, அந்நாள் தாம் உதகமண்டலத்திற்கு வரப்போவதாகவும், ஆகையால் அந்நாள் தனக்கு வசதியாயிராதென்றும் எழுதியிருந்தார். அக்கடிதம் கிடைப்பதற்குள்ளேயே நான் அவரிடம் சென்று நின்றேன். வீட்டிலிருந்த அவர், என்னைச் சற்று தூரத்திலிருந்த அவரது தனி அலுவலக அறைக்கு அழைத்துச் சென்று, என் கதையை ஆதிமுதல் கூறும்படிக் கேட்டார். நான் சுருக்கமாகச் சொல்ல முயன்றேன். கேட்கக் கேட்க அவர் அதிகத் தாற்பரியம் கொண்டார். இதற்குள் உணவு மணியடித்தது

உடனே இருவரும் வீடுசென்று உண்வருந்தினோம். மறுபடியும் அலுவலக அறைக்குள் நுழைந்து கதையைத் தொடர்ந்தோம். பிற்பகல் ஒன்று காற்பதுக்கு ஊட்டி செல்லும் 'பஸ்' அங்கிருந்து புறப்படும். அன்று மாலை நான்கு மணிக்குள் எனக்கு ஊட்டியில் இருக்க வேண்டிய கடமையும் இருந்தது. ஒன்று இருபது மட்டும் அவருக்கு யாதொன்றும் தெளிவாய்த் தோன்றவில்லை. அப்புறம் அவர் என்னிடம் கொண்டர்* (Gondwana) நாட்டைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறயா எனவும், தெரியாது என்று பதிலளித்தேன்.

C.M.S. சங்கம், மத்திய மாகாணத்தில் உள்ள காட்டு ஜனங்கள் மத்தியில் 1880 முதல் 1938 வரை வேலை செய்துவந்தது. அதின் ஆரம்பச் சரித்திரம் மிகவும் விசித்திரமானது. 1842ம் வருடம் ஜெர்மன் லுத்தரன் சபையைச் சேர்ந்த அறுவர், திராவிட மக்கள் எனக் கருதப்படும் அந்தக் கொண்டர் மத்தியில் உழைக்க வந்தனர். அவர்கள் மத்தியில் நருபதை ஆறு உற்பத்தியாகும் இடமாகிய அமர்கண்டம் என்பதற்கு பதினெட்டு மைல் தொலையில் காஞ்சியா என்னும் ஊரைத் தெரிந்தனர். அவர்கள் அங்கே தங்கள் கைகளாலேயே மரம் வெட்டி, குடிசை போட்டு உற்சாகத்துடன் பெப்ருவரி மாதம வேலை ஆரம்பித்தனர். ஒருவர் டாக்டர், ஒருவர் எஞ்ஜினீயர், ஒருவர் ஆசிரியர், ஏனையோர் பிரசங்கிகள்.

ஜூன் மாதத்திலே கண்ட காலராவினால் டாக்டர் முதலாவதாக இறந்துபோனார். ஏனையோரில் நாலு பேர் ஒரே வாரத்திலே மடிந்தனர். கதையைச் சொல்லுவதற்காக ஒருவர் மட்டும் தப்பினார். இக்கதை

*கொண்டர் என்ற சொல் தமிழே. குன்று, மலையாளத்தில் குந்நு என்றும். தெலுங்கில் கொண்டா என்றும் ...யும். பெண்கள் தலைக்கட்டையும், மர உச்சியையும் கொண்டை என்று கூறுவதுண்டு. குன்றுகளில் தங்குபவர்களே கொண்டர்.

பலநாட்களுக்குப்பின் ஜபல்பூருக்கு எட்டிற்று. கர்
சியா அங்கிருந்து நூற்றிஇருபது மைல்களுக்கப்பா
லது. இச்செய்தியைக் கேள்விப்பட்ட C.M.S. சங்
கத்தார் 1880 ல் தங்கள் மிஷனரிமாரை இங்கு அனுப்
பினர். அவர்கள் நல்ல பங்களாக்களை மண்ட்லா,
பட்பரு, தேவூரி, மர்பா என்ற நாலு இடங்களில்
கட்டினர். மண்ட்லா ஒரு ஒடுக்கமான ரெயில் பாதை
யின் அற்றம். பட்பரு அங்கிருந்து பத்து மைல்.
தேவுரி காட்டுவழியகாப் பட்பருவிலிருந்து பதினெட்டு
மைல். மர்பா அறுபது மைல்.

அனுதைகளைச் சேர்த்து, திருமுழுக்களித்து, சபை
யை ஆரம்பித்த மிஷனரிமார், திரண்ட பணம் செல
செய்தும் முடிவில் சோர்ந்துபோய் 1938 ல் இறுதி
யாய் வெளியேறினர். 500 கிறிஸ்தவர்கள் 27 இடங்
களில் 5,000 சதுரமைல் காட்டிற்குள் ஆங்காங்கே
சிதறிக் காணப்பட்டனர். இவர்கள் நடுவிலுள்ள ஊழி
யத்தை என்ன செய்வதென்று C.M S ஆலோசிக்கவே,
பிஷப் அசரியா அக்காலத்தில் தோர்ணக்கல், சென்னை,
நெல்லை அத்தியட்சாதீனங்களைக் கலந்து, தென்னாட்டி
லிருந்து ஊழியர்களை அனுப்பிப் பார்க்க எண்ணங்
கொண்டார்.

தென்னிந்தியாவில் நாடார் மக்கள் மத்தியில் சுவி
சேஷம எளிதில் பரவி வளர்ச்சியுற்றதாலும், கோண்
டர்கள் திராவிடர் என்பது உறுதியானதாலும், இங்கு
போல் அங்கும் சபை வளரக்கூடும் என்று பிஷப்
அசரியா எண்ணி, சென்னை பிஷப் வாலர் (Waller),
நெல்லை பிஷப் ஸ்டீபன் நீல் இவர்களுடன் கலந்து
தென்னிந்திய கொண்டுவானு மிஷன் (S I. Gondwana
Mission) என்ற ஒன்றை நிறுவ முன்வந்தார்.

இக்கதையைச் சொல்லி முடித்து நீ இப்படிப்பட்ட
இடத்துக்குப் போக விரும்புவாயா என்று கேட்டார்.
இது சாமானிய எளிய ஊழியமல்லாதபடியால், என்னை
ஆண்டவர் நடத்துவதாகத் தோன்றுகிறது என்று

னரிடம் சொல்லி, ஒன்று சேர்ப்பதற்கு கட்டிக்கும்
...ப்பட்டேன்.

அன்று மாலை இரண்டு மணிநேரம் என் கல்
லூரியை நடத்திச் சென்று காண்பித்திருப்பதைப்
பின்... ஒரு கோவில் அருகில் தங்கியிருந்
தார். அவர் பிஷப் ... என்று சொல்லி ஆட்
களை அனுப்பிவிட்டு, அவருடன் அவர் பேசவேண்
டிய விஷயங்கள் ... சென்றேன். வீட்டுக்குள்
...ழைந்ததும் வேலையில் அவர் என்னை நோக்கி, 'கொண்டு
வந்துள்ளதைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?' என்று
கேட்டார். பிஷப் அசரியா, என் அவைக் கல்லூ
ரியைக் குறித்து யாருக்கும் அப்போது சொல்லவேண்
டாம் என்று கூறியிருந்தார். நான் அன்று காலை
...தில் நடந்த காரியத்தை அவருக்குச் சொல்
லியும், அவர் இது தேவனித்தமாயிருக்குமோ என்று
எனக்குத் தோன்றுகிறது என்றார்.

மகாராஜன் வெள்ளிக்கிழமை அன்று மூன்று பிஷப்
புகளும் உதவையில் கூடி யோசித்தனர். எல்லா பிஷப்
புகளும் என்னை கண்டித்திருந்தனர். அவர், 'நம்மையும்
...அனுப்புவதற்குச் சகாயம் செய்தவன்தான். ஆனால் அவ
...க்கு சபையைப்பற்றிய அறிவும், குருத்துவ ஊழி
யத்தைக் குறித்த மதிப்பும், ஆவிக்குரிய பழக்கமும்
...றைக் குறைவானதால், இக்குறைகளைப் பரிசோதித்தபின்
...அவனை அவ்வூழியத்திற்கு ஏற்றவன். ஆயினும்
...ரு பரைபாகிலும் அனுப்புவோம்' என்று கூற
அவ்வாறே தீர்மானித்தனர்.

# தோர்ணக்கல்

மா இலைகளை மடக்கி கோர்த்துக் கட்டும் கோர்வைக்குத் தோரணம் என்று பெயர். வழியருகிலுள்ள ஒரு குத்துக்கல்லில் ஒரு தோரணம் கட்டியிருந்ததைக் கண்ட தமிழன் ஒருவன் தோரணக்கல் என்றானாம், அதினின்றே இப்பெயர் வந்தது என்பர்.

அது ஒரு சிறு ஊர்தான். ஐதராபாத் முஸ்லிம் மன்னர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அன்றைய ஐதராபாத் இன்று இல்லை. இந்துக்களால் நிரம்பிய அந்நாடு சிறுபான்மையரான முஸ்லீம்களால் ஆளப்பட்டது. வண்டிப் பாதைகள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், தபால் ஆபீஸ்கள் போன்ற யாவும் மிகமிகக் குறைவாயிருந்த காலம் அது. ஆஸ்பத்திரி, பள்ளி இவற்றை மிஷன் நடத்த கிறிஸ்தவர்கள் அனுமதிபெற்றிருந்தனர்.

அந்நாட்டிற்கு இதற்குமுன் ஒருமுறை நான் சென்றிருந்தேன். அன்று N.M.S. சங்கத்தின் வேலைகளைப் பார்க்கவே நான் சென்றேன். மல்லம்பள்ளி என்னும் ஊரில் என் சிறு மூட்டை முடிச்சுகளோடு இறங்கி, பக்கத்திலிருந்த ஒரு தபால் நிலையத்திற்குச் சென்றேன். நான் செல்லவேண்டிய ஊருக்கு என் சுமைகளைத் தூக்கிச் செல்லவும், எனக்கு வழிகாட்டவும் ஒரு ஆள் தந்து உதவும்படி அந்த ஆபீஸ் தலைவரைக் கேட்டேன். அந்தத் தபால் மாஸ்டருக்கு ஆங்கிலம் தெரியாது. அவர் உருது மட்டும அறிந்த முஸ்லிம். எனக்கு அன்று உருதுவ, தெலுங்கும் தெரியாது. ஆகையால் மிகப் பாடுபட்டு என் கருத்தை அவருக்குத் தெரிவித்தேன். அவர் சிறிதுணர்ந்து, பக்கத்திலிருந்த ஒரு கிராமத்தானை அழைத்து என்னுடன் அனுப்பினார். ஏறக்குறைய இரண்டு மணி நேரம் நாங்கள் நடந்து, குறிக்கப்பட்ட இடம் சென்று சேர்ந்தோம். நான் கொடுத்த கூலியை அம்மனிதன் வாங்கத் தயங்கினான். காரணம் கேட்டதில், முஸ்லீம்கள்

(ஆளுபவர்கள்) சொன்னால் கூலியின்றி அந்த வேலையைச் செய்வது பிறர் கடமையென்று நான் அறிந்தேன். ஒருவன் உன்னை ஒருமைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால் அவனுடன் இரண்டு மைல் தூரம் போ என்ற (மத். 5:41) போதனை இப்படிப்பட்ட கூலியில்லா வேலைக்குக் கொடுக்கப்பட்ட ஆலோசனைதான்.

நாட்டின் செழிப்பான பாகங்களை முஸ்லீம்கள் அன்று தமக்குச் சொந்தமாக்கியிருந்தனர். இந்துக்கள் அவர்களுக்குப் பாட்டம் செலுத்தி வாழ்ந்தனர். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் அடிமைகளாகவே வாழ்ந்துவந்தனர். தற்பொழுதும் அவ்வாறே வாழ்ந்துவருகின்றனர். தாழ்த்தப்பட்ட மக்கள் நடுவில் மிஷனரிமார் உழைக்க நைசாம் மன்னர் தாராளமாய் இடம் அளித்திருந்தபடியால், உயர் ஜாதியினரின் தொந்தரவின்றிக் கிறிஸ்து மார்க்கச் சபைகள் பல அங்கு தோன்றின.

1939 ஆகஸ்டு மாதம் N.M.S. வேலையை விட்டுவிட்டு நாங்கள் தோர்ணக்கல்லுக்குப் பிரயாணமானோம். அக்காலம் பிஷப் அசரியா என்னைக் குருத்துவ ஊழியத்திற்குப் பயிற்றுவிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 1903 ல் திருநெல்வேலியில் தோன்றிய இந்திய மிஷனரி சங்கமே (I.M S) இந்தியாவில் ஒரு மொழி பேசும் கிறிஸ்தவ மக்கள் பிறமொழி பேசும் மக்கள் மத்தியில் முதன்முதலாய் உழைத்து சபை நாட்ட முன்வந்தது. 1900 ம் ஆண்டில் நாகர்கோவில் கிறிஸ்தவர்கள், தென் திருவாங்கூர் எல்லைக்குள் சுவிசேஷ ஊழியம் செய்ய ஹோம் மிஷனரி சொஸைட்டி (H.M S) என்ற முதல் இந்திய மிஷனரி சங்கத்தை நிறுவினர். 1902 ல் யாழ்ப்பாணத்திலும் இத்தகைய ஒரு சங்கம் நிறுவப்பட்டது. இவற்றைக் கண்ட பிஷப் அசரியா I M S ஐ நிறுவ ஏவப்பட்டார். இவற்றைக் கண்ட நண்பர் பதினாறுபேர் செருமபூரில் கூடி 1905 டிசம்பர் 25 ல் N M S. சங்கத்தை நிறுவினர்.

இங்கு நான் இரண்டு வருடம் தங்கிப்படித்தேன். வகுப்புகள் யாவும தெலுங்கு மொழியிலேயே நடத்தப் பட்டன. நான் ஆங்கில நூல்களைப் படித்தேன். எதிர் பாராத வேளைகளில் என்னைப் பரீட்சை எழுதச் செய் தனர். காலை, மத்தியானம, மாலை மூன்றுவேளையும் ஆராதனைக்குப் போகவேண்டும். பலரும் பயத்தினிமித் தமே அப்படிச் செய்தனர் என்று நினைக்கிறேன்.

1939 அக்டோபர் இருபத்தோன்றில் எங்கள் முதல் ஆண்குழந்தை பிறந்தது. அனுமக்கொண்டா என்ற ஊர, காசிப்பேட்டைக்கும வாரங்கல்லுக்குமிடை யிலிருக்கிறது. பாப்டிஸ்ட் மிஷனுக்குரிய ஒரு ஆஸ் பத்திரி அங்கிருக்கிறது. டாக்டர் காறமன் என்பவர் அக்காலம அங்கு இருந்தார். இன்று அவர் பிரபல வேலூர் ஆஸ்பத்திரித் தலைவராயிருக்கிறார். அவரிடமே நாங்கள் சென்று இருபது நாட்கள் தங்கித் திரும்பி னோம். பிரசவச் செலவு ரூபாய் நூற்றிஇருபதையும் பிஷப் அசரியாவே கொடுத்துதவினர். பிறந்த சிறுவ னுக்கு நீல் பிஷப்பை ஞாபகப்படுத்த ஸ்டீபன் என்ற பெயரை அவனுக்குக் கொடுத்தோம. பிஷப் அசரியா அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்.

நாங்கள் செல்லவேண்டியது இந்திமொழி பேசு மிடமாதலால், அம்மொழியை எங்களுக்குக் கற்றுக் கொடுக்க ஆசிரியர் ஒருவரை நியமித்தனர். அவருக்கு இந்தியும், தெலுங்குமதான் தெரியும். எனக்கு, தமிழ், மலையாளம், ஆங்கிலம் தெரியும. ஆகவே விநோதமான இந்தப் படிப்பில் இந்தியும், தெலுங்கும் ஒரே வேளை யில் கற்கும வாய்ப்புக் கிடைத்தது. என்னுடன் வேறு இருவரும இந்தி கற்றனர். அவர்களில் ஒருவர் தெலுங்குப் போதகர். மற்றவர் மறையியல் கற்று முடித்தவர். தமிழும், உருதுவ அறிந்தவர். அவர்கள் இருவரையும் 1940 ஜனுவரியில் கோண்டுவானுவுக்கு அனுப்பிவைத்தார்கள்.

பிஷப் அசரியா சங்கீத புத்தகத்தை மாணவர்களுக்குக் கற்பித்தார். அவ்வகுப்புக்கு மட்டும் நானும் ஒழுங்காகச் சென்றுவந்தேன். தெலுங்கிலே நடத்தப் பட்டபோதிலும் கருத்தை ஒருவாறு அறிந்துகொண்டேன்.

இந்த இரண்டாண்டுகளில் எனக்குக் கிடைத்த பயிற்சி வாயை மூடிக்கொண்டிருக்கப் படித்ததே. சகாயம் பிரசங்கியாரை ஒரு பிரசங்கமும் செய்யவிடாமல் சும்மா இருக்கச் செய்தனர். இது பிஷப் அசரியாவின் திறமையைக் காட்டும். நான் சிலவேளைகளில் அடக்கமுடியாதவனாய் புரண்டு உருளமுயன்றேன். வெளியுலகத்திற்கு என்னைப்பற்றித் தெரியாத முறையில், நான் மறைந்திருக்கப் பிஷப் என்னைப் பழக்க முயன்றார்.

தனித்தனியாக ஆட்களைக் கண்டு பேசுவதிலும், ஜெபத்திலும, வேத ஆராய்ச்சியிலும் அக்காட்களைக் கழித்தோம். சில வேளைகளில் பிஷப் என்னைத் தமது சுற்றுப்பிரயாணங்களில் அழைத்துச் செல்வார், அவர் செல்லுமிடமெல்லாம் பொதுவாகத் திடப்படுத்தல், ஆலயப் பிரதிஷ்டை போன்ற ஏதேனும் விசேஷ நிகழ்ச்சி இருக்கும். சிற்சில வேளைகளில் வழக்குத் தீர்ப்பதும் அவர் வேலை. அவருடைய முறைகளை நானும் படிக்க வேண்டுமென்பதே அவர் நோக்கம்.

1903 ம் ஆண்டு திருநெல்வேலி சபையார் நிறுவிய இந்திய மிஷனரிச் சங்கம் மானுகொண்டா தாலுகாவில் உழைத்ததின் பயனாய் அன்று பத்தாயிரம்பேர் அங்கு படிப்படியாகக் கிறிஸ்தவர்களாயினர். கிறிஸ்தவக் குழந்தைகளின் படிப்புக்காக, தோர்ணக்கல்லில், ஆண்களுக்கும், பெண்களுக்குமுரிய இரண்டு தங்குசாலைப் பள்ளிகள் நிறுவப்பட்டன. அத்துடன் ஒரு சிறிய ஆஸ்பத்திரியும், போதகப் பயிற்சி பெறவோருக்குரிய வீடுகளும் அடங்கிய மிஷன் விளாகமும் அமைந்ததோடு, பிற்காலம் 1938 ல் அழகிய அத்தியட்சாதீன ஆலயமும் அங்கு உயர்ந்தது.

பிஷப் அசரியா 1912 முதல் 1945 வரை அங்கேயே தங்கி, அவ்விடத்தை உலகமறியச் செய்தார். அசரியா பிஷப் மூலம் தோர்ணக்கல் சிறப்படைந்தது. ஆலயத்தைக் கட்டுவதற்குரிய ஏற்ற கருத்துக்களும், செலவுக்குரிய பணமும் அவர் முயற்சியின் பலனைக் கிடைத்தன. ஜன்னல் ஏதுவுமின்றி இந்திய முறையில் வாசல்களையே திறப்பாகக்கொண்ட கோயில் அது. இருபுறமும் அகன்ற திண்ணைகளையுடையது. முன்புறம் பெரிய விளாகமும் சுற்றிலும் கற்கோட்டையும், உள்ளே பூந்தோட்டமும் அந்த ஆலயத்தின் சிறப்புகளாகும். கிறிஸ்தவக்கோயில் என்பதைக் காட்ட கோபுரமீது மினுங்கும் வெள்ளைச் சிலுவைகள், முஸ்லீம் ஆட்சியில் கட்டப்பட்டதென்பதை உணர்த்த இரண்டு இஸ்லாமியக்கோபுரங்கள், இந்தியாவில் கிறிஸ்தவம் வேரூன்றுகிறதென்பதைக்காட்ட ஆலயத்தினுள் பன்னிரண்டு கற்றூண்கள், ஒவ்வொரு தூணிலும் ஊமத்தம் பூவினின்று வெளிவந்த வாழைக் கூம்பு.*

மக்கள் கும்பல் கும்பலாய் சபைக்குள் ஏற்றுக் கொள்ளப்பட்ட காலம் அசரியா பிஷப்பின் காலம்தான். இந்துக்களில் உயர் வகுப்பினர் என்று எண்ணப்பட்டவர்களும், முஸ்லீம்களுக்கு அஞ்சி நடந்தனர். ஆகையால் அவர்களில் கீழ் வகுப்பினர் கிறிஸ்தவர்களாவதற்கு அன்று ஐதராபாத் அரசாங்கம் தடையாய் இருக்கவில்லை. ஓர் ஊரார், கிறிஸ்து மார்க்கத்தைப் பற்றிய வாஞ்சை காட்டினுல் கருத்துள்ள ஒரு ஊழியனை அங்கு அனுப்புவர். அவர் காரியங்களைக் கவனித்து, அண்மையிலுள்ள சபைக்குரு, சேகரத்துப் போதகர் (Deanery Chairman) வழியாய் அத்தியட்சர்வரைக்கும் தெரியப்படுத்துவார். அக்காலம செயல்பட்ட முறை இது.

---

*இது சாவினின்று வாழ்வு வருவதைக் காட்டுவது. நஞ்சையுடையது ஊமத்தம். சாவாமையைச் சுட்டுவது வாழை.

அத்தியட்சர் பல காரியங்களையும் கேட்டு விசாரித்து அங்கு ஒரு வேலைக்களத்தை திறவக் கட்டளை கொடுப்பார். பல மாதங்கள், அல்லது சில ஆண்டுகள் இந்த ஊழியர் அங்கு தங்கி, முதல் வினவிடை வேதக் கதைகள் முதலியவற்றை அவர்களுக்குக் கற்பிப்பார். இந்துப் பழக்கவழக்கங்களிலுள்ள விக்கிரக ஆராதனை போன்றவற்றைத் தவிர்க்க அவர் ஒழுங்கு செய்வார். நாடோறும் வேலைக்குப் புறப்படும் முன்னும், மாலையில் திரும்பிவந்தபின்னும் மக்களைக் கூட்டி வழிபாடு செய்யப் பழக்குவார். ஆயத்தகாலம் முடிந்த பின் ஞானஸ்நானத்திற்கு ஒழுங்குசெய்வார். புதிய கும்பல்களுக்கு அத்தியட்சரே சென்று தீட்சையளிப்பார். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு முன்னேயே அவர்களுக்காக அங்கே சபைக்குச் சொந்தமான ஒரு சிறு விளாகமும், அதில் புல் வேய்ந்த ஒரு கோயிலும் இருக்கும். காலஞ் செல்லவே பெரிய கற்கோவில்கள் சில கட்டப்பட்டன.

அங்குள்ள மக்கள் பெரும்பாலும் மாலா, மாதிகா, என்ற இருவகுப்பைச் சேர்ந்தவர் ஆவர். தமிழ் நாட்டில் இவர்களைப் பறையர், சக்கிலியர்* என்பர். இரு வகுப்பினரும் பிறரால் தாழ்த்தப்பட்டவர்கள் என்று எண்ணப்பட்டபோதிலும் மாலா வகுப்பினர் அடுத்த வகுப்பினரை மிகத் தாழ்வாய் எண்ணுவர். முதல் வகுப்பார் வயல் வேலை செய்பவர். மாதிகா வகுப்பார் தோல் வேலை செய்பவர். வறுமையின் கொடுமையால் மாதிகா வகுப்பினர், செத்த மாடுகளையும் தின்று, தோலைப் பதனிட்டு, விற்றுக் காலங்கழித்து வந்தனர். இரு வகுப்பினருமே மாடு தின்பர். ஆனால் ஒரு வகுப்பார் கொன்று தின்பர். மற்றவர் தானாய் செத்ததையும் தின்பர்.

---

* இச் சொல்லுக்கு ஆறும் குலம் எனப் பொருள. 'ஷஷ்குலி'யே 'சக்கிலி' ஆயிற்று.

பல் இடங்களில் உபதேசியார் வீடும், ஆராத குரிய இடமும் ஒன்றாகவே இருந்தது. பிஷப் அசரி பலமுறை கூறிய ஒரு கதையை நான் கேட்டிரு றேன். அவர் நற்கருணை பரிமாற ஒரு வீட்டி அறையை ஆயத்தப்படுத்தி, இரும்புப் பெட்டி அடுக்கி மேசைபோலாக்கி, ஆராதனை நடத்துகை அவர் தலைக்குமேல் முந்தின நாள் கொல்லப்பட் மாட்டின் பாதி உடல் தொங்கி நின்றதாம். என் சரீரம் என்ற பிரதிஷ்டை வசனத்தை அவர் கையில் மக்கள் சிலர் ஆசையோடே தொங்கும் டுக் காலை நோக்கிப் பார்த்தனராம். நானும் அ தங்கிய இரண்டு ஆண்டுகளில் ஓரிருமுறை தொ விடப்பட்ட மாட்டின் மணத்தை நுகர்ந்திருக்கிறே

கும்பலாய் மக்களை முழுக்காட்டிச் சபையி சேர்ப்பதைக் குறித்து ஒருமுறை பிஷப் ஐயாவி நான் குறை கூறத் தலைப்பட்டேன். அன்று அ கேட்ட கேள்வி (இது 1940 ல்) இன்றும் (19 என் காதுகளில் ஒலிக்கிறது. "ஓய்! தகப்பனி அன்பையுணர்ந்தா கெட்ட குமாரன் வீடு தி பினான்? அவன் பசி. (தம் வயிற்றைத் தட்டிக்கொண்டே) பசியல்லவா அவனைத் துரத்தி வீடு சேர்த்தது? பின் தகப்பன் அன்பை வரவர அறிந்தான் என குமே", என்றார். அதற்கிசைய பற்பல இடைஞ்ச களைக் குறைக்கவும், நீக்கவும் கும்பலாய்ச் சபையி சேரும் மக்கள் இருந்தனர். படிப்படியாய்த் தொழு கல்வி, பழக்கம், போதனை இவற்றால் அவர்கள் வெளி சம் அடைந்து, கடவுளின் அன்பை ருசித்து, இன் கிறிஸ்தவ மக்களாய் ஒளிவீசுகின்றனரே!

அதேவேளையில் வெறும் பிண உணர்ச்சியால் றுடன் சேர்ந்து கிறிஸ்தவராகும் கும்பல்கள் சில, படியே பின் திரும்பிப்போவதையும் நாம் காணக்கூடும்.

பயிற்சிக்காகத் தோர்ணக்கல்லில் நாங்கள் நாட்களில், வம்பாடிகள் என்ற ஒரு வகுப்பின

நூற்றுக்கணக்கில் சேர்த்ததைக் கண்டோம். அவர்கள் மராட்டி, இந்தி, தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளின் கலவையொன்றைத் திசைச் சொல்லாய்ப் பேசி வருபவர். குருவிக்காரர்போல அலைந்து திரியும் மக்களுக்கொத்த ஆடையையும், பழக்கவழக்கங்களையும் கொண்டவர்கள். அவ்வினத்தாரில் நாற்பத்திமூன்று பேரடங்கிய ஒரு புதுக் கூட்டத்துக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்ட வேளையில் எங்களையும் அத்தியட்சர் அழைத்துச்சென்றார். அது தோர்ணக்கல்லுக்கு மூன்று மைலுக்கருகில் இருந்தபடியால், இந்தி படித்துக்கொண்டிருந்த நாங்கள் இந்தி ஆசிரியருடன் அங்கு சென்றோம். ஞானஸ்நானம் பெற வந்தோரிடம் சில கேள்விகளை எளிய இந்தியில் கேட்கும்படி இந்தி ஆசானிடம் அத்தியட்சர் கோரினர். கேள்வியையும் தாமே ஆங்கிலத்தில் கேட்டார். 'நமது கர்த்தாகிய இயேசு நமக்காக என்ன செய்தார்?' (ஹமாராப்றபு ய[illegible]க்கிறிஸ்த் அமாரேலியே கியா கியா?) என்பதுவே கேள்வி. மூன்று முறை இதைக் கேட்டார். யாரும் பதிலே கூறவில்லை. திரும்பத் திரும்பக் கேட்கவே ஒரு வயோதிப மாது கோபமாய், "கியா கியா, குச் [illegible]ி." (என்ன செய்தார். ஒன்றும் இல்லை) என்று கூறவும், இந்தியறிந்த யாவரும் பெருஞ்சிரிப்பில் மூழ்கினர். என்ன சொன்னள் என்ற விடையை பிஷப்புக்குச் சொல்லவும், அவரும் கூடவே சேர்ந்து விழுந்து விழுந்து சிரித்தார். இது 1940 ல் நடந்தது. இக்கூட்டத்தினர் பெரும்பாலரும் 1947 க்குப்பின் பின்வாங்கிப் போயினர்.

கிறிஸ்தவம் இந்தியமயமாவதைக் காண தோர்ணக்கல்லே அக்காலம் ஏற்ற இடம். கேட்பதற்கும், பாட்டுக்கும் தெலுங்கு மிக ஏற்றதும், இனிமையுமானது. ஒவ்வொருவரும் தத்தம் மொழியைப் பேணிப் போற்றினும், பிற மொழிகளுக்குரிய மதிப்பைக் கொடுப்பதுவே நன்று. தெலுங்கு, தமிழுக்குப் பிந்தினது. அதின் இலக்கியம் தமிழைப்போல் சிறந்ததும் அல்ல. என்

ழ்லும் சுவை மிகுந்தது. மிஷப் அசரியர் தெலுங்கு இராகங்களை ஆலய ஆராதனைகளில் பாடப் பல முயற்சிகள் செய்து வெற்றிபெற்றவர். அவர் ஆங்கிலிக்கன் சபையின் அத்தியட்சராக பட்டம் பெற்றவர். அச்சபையின் ஜெபப்புத்தக ஒழுங்கைப் பரிபாலிக்கக் கடமைப்பட்டவர். எனினும் குருட்டுத் தனமாய்க் கிளிப்பிள்ளைபோல் ஜெபங்களை ஒலிப்பதில் அதிகப் பயனில்லை என்பதை நன்கறிந்தவர். காலை மாலை ஜெபங்களில் ஜெபப்புத்தகத்தில் பாடும்படிக் குறிப்பிடப்பட்டவையும், மேனாட்டு இசைகளில் இன்றும் பல ஆலயங்களிலும் பாடப்படுகிறவைகளுமான பல பாடல்களைத் தெலுங்கு இசையில் அமைத்து சபையாரைப் பாடப் பழக்கினவர் அவர். 'Te Deum', 'Jubilate Deo' 'Venite', 'Nunc Dimittis' போன்ற பாடல்களை அழகிய இசையில் அமைத்து, அன்று அவர் பாடச்செய்ததை, இன்றும் அங்கொடெங்கும் பிறர் பின்பற்றிவருகின்றனர். இந்திய மொழிகளில் ஞானப்பாட்டுகள் என்ற கீதங்களை ஆங்கில இராகத்தில் பாடுவதை அவர் வெறுத்தார். தமது கிராமச் சபைகளில் கீர்த்தனைகளையே பாடவேண்டுமென்று கட்டளையிட்டார்.

'கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி' என்ற 95-ம் சங்கீதம் 'ரண்டி யுல்லா கிஞ்சி பாடுதமு' என்று முதல்முதல் தோர்ணக்கல்லுக்குச் சென்ற I.M.S. மிஷனரி பாக்கியநாதன் சகோதாரால் எழுதிப்பழக்கப்பட்டது. இன்று அந்த இராகம் தமிழ் இசைத் தட்டில் (தேவபிதா எந்தன்) அமைந்துள்ளது. அன்று அதின் இனிமையைப் புதிதாய்ச் சுவைத்த நான், எனது இந்தி ஆசானைக்கொண்டு அதே இராகத்தில் 95-ம் சங்கீதத்தை இந்தியில் பாட்டாக்கி, (பரமபிதாக்கி ஸ்துதி கரேங்) இந்திச் சபைகளில் நுழைத்தேன். அது கோண்டர் நாட்டுச் சிறு மந்தை (இது பின் விரிவாய்க் கூறப்படும்) பின் சொத்தாகி, அங்கிருந்து ஜபல்பூர் வரை சென்று பரவிற்று. அதில் பலரது கைப்பட்டு அப்பாட்டுத் திருந்தியபோதிலும், இராகமும், சொற்களும் பெரும்

மாறுதலடையவில்லை. 1961 ல் புது டில்லியில் நடந்த அகில உலகத் திருச்சபை மன்றக் கூட்டங்களில் இந்தியக் கிறிஸ்தவக் கீர்த்தனைகள் சில, பல மொழிகளிலுமிருந்து தொகுக்கப்பட்டு, அங்கு பாடப்பட்டன. அவற்றில் ஒன்று அன்று, 1941 ல் தோர்ணக்கல்லில் வைத்து நாங்கள் எழுதிய 95-ம் சங்கீதம் என்பதைக் கண்டபோது எனக்கிருந்த மகிழ்ச்சியும், ஆச்சரியமும் சிறிதல்ல.

சபை ஊழியரைப் பயிற்றுவிக்கும் ஒழுங்கில் அசரியா பிஷப் கையாடியுள்ள சில முறைகள் சிறந்தவை. கலியாணமாகாதவரை ஊழியராய்த் தெரிந்தெடுப்பதில்லை. அவர்கள் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் பயிற்சியில் தேறியிருத்தல்வேண்டும். அவர்கள் பயிற்சிக் காலத்தில் அதிகச் சிக்கனமாய் வாழப் படித்தல் வேண்டும். சில ஆண்டுகளில், குருத்துவ ஊழியத்துக்குரிய கூறுகள் அவர்களில் எவரிலேனும் காணப்படின், அவர்கள் தெரிந்துகொள்ளப்படுவர். அவர்கள் கிராமச் சூழ்நிலையிலேயே பயிற்சி பெறுவர். ரெயில்பாதையொன்றைத் தவிர, மின்சாரமோ, மோட்டார் வண்டிப் பாதைகளோ இல்லாத தோர்ணக்கல்லில் அவர்களுக்கு முறையியல் பயிற்சி ஒழுங்காக்கப்பட்டது. இரண்டு குடும்பத்தார் ஒரு கூரைக்குள் கூடி வாழத்தக்க முறையில் சேர்த்துக் கட்டப்பட்ட பதினைந்து கூரைவீடுகள் அங்கிருந்தன. அவற்றுள் அவர்களைத் தங்கச்செய்தார். ஆலயத்தைச் சுற்றிலும் ஊழியர் வீடுகள் இருந்தன. நாடோறும் காலை, மாலை ஆராதனைக்கு யாவரும் செல்லுதல் வேண்டும். நடுப்பகலில் நடந்த மன்றாட்டுக் கூட்டத்துக்கும் செல்ல பிள்ளைகளைத்தவிரப் பெரியவர் யாவரும் எதிர்பார்க்கப்பட்டனர்.

திருமறை மாணவர் மாலைத் தொழுகையில் அன்றோத வாசிப்புப் பாகத்தைச் சபைக்கு விளக்கி, பத்து நிமிஷத்திற்குள் ஒரு போதனை கொடுக்கவேண்டும். அத்தியட்சர் ஊரிலிருக்கும்போது அவர் எல்லா ஆராதனைகளுக்கும் ஒழுங்காக வருவார். ஆராதனை நடத்துவதற்

குரிய தங்கள் நாள்வந்து போகுமட்டும், மாணவர் நடுக்கத்தோடு இருப்பர். வகுப்புகள் யாவும் தெருவி லேயே நடத்தப்பட்டன. ஆங்கில அறிவு வற்புறுத்தப் படவில்லை. மாலைவேளைகளில் கூடி விளையாடும் பந்தாட் டம் இருந்தது. இவ்விதமாக ஒரு நாளின் இருபத் நான்கு மணி நேரமும் பிஷப் கண்முன் மாணவர் வாழ்க்கை மூவாண்டு இருந்து முடிவடையும். இந்த கண்டிப்பான கட்டுப்பாடு யாவருக்கும் வாழ்க்கை முழுவதற்கும் உதவிற்று.

நாங்கள் தோர்ணக்கல்லில் சேர்ந்த காலம் 1939 ஆகஸ்டு. செப்டம்பரில் இரண்டாம் உலக யுத்தம் தொடங்கியது. அத்தியட்சர் அந்நாட்களில் [illegible] இல்லை. தொடங்கின யுத்தம் உடனடியாக முடிவு பெறத்தக்கதாக அவர் திரும்பி வந்தவுடன் ஒவ்வொரு நாளும் இரவு ஒன்பது மணிக்கு ஒரு விசேஷ [illegible] ருட்டு ஜெப முறைமையை நிறுவினர். ஆண்கள் யாவரும், பெண்கள் சிலரும் இதற்கு ஒழுங்காகச் சென்றபோதிலும், நான் போகவில்லை. இதைக் கண்ட பிஷப், என்னை அழைத்து, நான் ஜெபத்திற்கு செல் லாததற்குக் காரணம் கேட்டார். எதியோப்பியாவை விழுங்கிய இத்தாலியாவும், மஞ்சூரியாவை விழுங்கிய ஜப் பானும் இந்த யுத்தத்தில் பங்குகொண்டு, அவர்கள் விழுங்கியதைக் கக்கவேண்டியது கடவுள் சித்தமென் றும், அதற்குமுன் அந்த யுத்தத்தை நிறுத்த ஜெபிப்பது புத்தியீனமென்றும் நான் தைரியமாய்க் கூறினேன். அப்படியா நினைக்கிறீர் என்று அவரும் சிந்தைசெய்து சென்றுவிட்டார். மூன்று மாதமளவும் இந்த மன்றாட்டு ஜெபம் தொடரப்பட்டுப் பின் கைவிடப்பட்டது. யுத்த மும் மும்முரமாகி 1945 மட்டும் நீண்டுசென்றது.

நாட்களும், மாதங்களும் அங்குள்ள யாவருக்கும் பறந்து சென்றபோதிலும் எனக்கோ, அவை மெல்ல மெல்ல நகருவதாய்த் தோன்றின. எனக்குப் போதிய வேலையில்லாததே அதற்குக் காரணம். காலை இந்திப் படிப்புக்குப்பின் எஞ்சிய நேரம் எனக்குப் [illegible]

வாய்த் தோன்றிற்று. பிஷப் கொடுத்த புத்தகங்களைப் படிப்பதும், அவருடன் வேளாவேளைகளில் உரையாடுவதும் சிறிது உற்சாகத்தைக் கொடுத்தன. பிற மாணவருடன் நானும் பரீட்சை எழுதவேண்டுமென்று, முன்னறிவிப்பின்றியே சொல்லி, கேள்வியை ஆங்கிலத்தில் எனக்களிக்க பிஷப் ஒழுங்குசெய்வது வழக்கம். தைரியமாயும், மகிழ்ச்சியாயும் அவற்றை எழுதுவேன்.

இப்படியிருக்க, 1940 செப்டம்பர் இருபத்திரண்டில், எனக்கு வேறு சிலருடன் அரைப்பட்டம் கொடுக்கப்பட்டது. அம்மட்டும் கதரையே உடுத்துவந்த நான் அந்நாட்களுக்குப்பின் அங்கி அணியத் தொடங்கினேன். பட்டம் பெற்றவர் யாவரும் அவ்வுடையிலேயே ஆராதனைகளில் காணப்படவேண்டும் என்பது கண்டிப்பான ஒழுங்கு. நானும் அதனைப் பின்பற்றிவந்தேன். அரைப்பட்டம் (டீக்கன்பட்டம்) கொடுக்கப்பட்டபின், ஞாயிறு ஆராதனைகளிலும், நற்கருணை பரிமாறுவதிலும் பங்குபெறுவது உதவிக் குருக்கள் கடமை. எனக்குக் கேள்வி மூலம் தெலுங்கு கொஞ்சம் தெரிந்தபோதிலும், வாசிக்கக் கற்றுக்கொள்ளுதல் பயன் தருமென்று நம்பி, திருப வாக்கியத்தை முதலில் கிளிப்பிள்ளைபோலவும், பின் அறிவுடனும் வாசிக்கக் கற்றுக்கொண்டேன்.

கோடைகால விடுமுறையில் ஆண்டுதோறும் (1938 முதல் 1941 மட்டும்) மூன்று மாதம் என் மனைவி Y.W.C.A. சங்கத்தாரால் உத்தகமண்டலத்துக்கு அழைக்கப்பட்டதுண்டு. அக்காலம் எனது மாதச்சம்பளம் எண்பது ரூபாய் மட்டும். அப்பொழுது முதல் மகள் கருணும், மகன் ஸ்டீபன் ராஜசேகரனும் இருந்தனர்.

1941 ஏப்ரல்—மே மாதங்களில் இப்படி உதகமண்டலம் செல்லவே, நானும் ஒரு மாத ஓய்வுக்கு அவர்களுடன் அங்கு தங்கினேன். என்னைப் பலமுறை அவர்களுடன் நன்கறிந்த அவ்வூர் சபைப் போதகர்கள், தங்களில் நன்கறிந்த அவ்வூர் சபைப் போதகர்கள், தங்கள் ஆலயங்களில் பிரசங்கம் செய்ய அழைத்தனர்

வாய் திறக்கமுடியாமல் தோர்ணக்கல்லில் குழந்
கொண்டிருந்த என் உள்ளம், அதின் பாரத்தை ஆல
யப் பிரசங்கத்தில் வெளிப்படுத்தினது.

தொடக்கமுதலே முன் திட்டமிடப்பட்டதாயிரா
மல், சூழ்நிலைகளைக் கவனித்து, ஆவியானவரின் ஏவு
லின்படி, பொருளை முன்னமே குறிப்பிட்டுக் கொடுத்
திராத வேளையில் அப்போதைக்கப்போது கிடைத்ததைக்
கொடுப்பதே எனது பிரசங்கமுறை. இன்றும் இம்
முறையையே கைக்கொள்ளுகிறேன். இது ஆயத்த
மில்லாமல் பிரசங்கம் செய்வது அல்ல. நான் முழு
தும் வேதம் என் தியானம். கிடைக்கும் நல்ல நூல்
கள் யாவையும் படிப்பேன். பலருடன் கலந்துகொள்
ளுகையில் கிடைக்கும் நல்ல கருத்துக்களை வேதவியாக்கி
யானங்களாக மாற்றுவேன். செய்தித் தாள்களின் செய்
திகளையும், அரசியல் சூழ்நிலைகளையும், அக்காலத்தில் மனி
தர் உள்ளத்தில் எழும் பிணக்குகளையும் நானும்
ஆராய்ந்து, என் முற்கால அனுபவத்திற்கேற்றவாறு ஒரு
முடிவுக்கு வருவேன். ஆசையோடு கூடிவரும் மக்க
ளுக்கு எதைப் பகிர்ந்து கொடுப்பேன் ஆண்டவரே
என்று ஓயாமல் ஜெபிப்பேன். குறிப்பு எதுவும்
கையாடாவிடினும், யாவற்றையும் மனதிற்குள் ஒழுங்கு
படுத்திக்கொள்வேன். குறித்த நேரம் வருகையில் அல்
லது அதற்குச் சற்று முந்தியே ‘இன்று இதைக் குறித்
துப் பேசு’ என்ற சத்தம் எனக்குள் கேட்கும். சில
வேளை இச்சத்தம் பிரசங்க மேடையில் ஏறுமட்டும் தென்
வாய்க் கிடையாமலும் போகும். ஆயினும், இம்முறை
யைக் கடந்த நாற்பது வருடமாய் ஆண்டவர் ஆசீர்
வதித்து வருகிறார்.

அன்றொருநாள், உதகையில் புனித தோமா ஆல
யத்தில், காலை பதினொரு மணிக்குப் பிரசங்கம் செய்
யச் சென்றேன். பல மாதங்களாய் வாய் திறவாத
ஊமையனாய்க் குமுறின என் உள்ளம், பாடமாக
வாசிக்கக் கேட்ட பிலேயாமின் கழுதையைப்பற்றியே

சேவையெனத் திட்டமிட்டது. இந்தியா கழுதைபோன்று. பிலேயாம் பிரிட்டன். யுத்தத்தில்* இந்தியாவும் சேரவேண்டும் என்று அது விரும்புகிறது. காந்தி போன்றோர் வேண்டாம் என்கிறார்கள். கழுதைக்கு இருக்கும் புத்தி, அதின்மேல் ஏறினவனுக்கு இல்லை என்ற கருத்தில், சமாதானப் பிரபுவின் சுவிசேஷத்தைக் கூறினேன். சென்னை அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் சிலர் அந்த ஆராதனையிலிருந்தனர். என் பேச்சு அவர்களுக்கு இராஜ துரோகமெனத் தோன்றிற்று. விடுமுறை முடிந்து நாங்கள் தோர்ணகல்லில் சேர்ந்த சில நாட்களுக்குள், பிஷப் அசரியாவிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் கிடைத்தது.

அவர் ஆண்டுதோறும் கோடைகாலத்தில் தன் வீட்டாரோடு கோத்தகிரியில் அவருக்கிருந்த வீட்டில் தங்குவது வழக்கம். என் பிரசங்கத்தைக் குறித்த காரியங்கள் திரித்தும், பிணைத்தும், கூட்டியும் அவருக்குக் கூறப்பட்டதின் விளைவே இக்கடிதம். உடனேயே அதற்கு ஏற்ற விளக்கம் கூறவேண்டுமென்று எழுதியிருந்தார்.

கடிதம் கண்டதும் வீட்டில் கலக்கம் மிகுந்தது. பிஷப் என்றால் அக்காலம் ஏகாதிபதியே. அவருடைய சொல்லுக்கு மிஞ்சி எதுவும் நடவாது. பெயரளவில் பல கமிட்டிகள் இருந்தாலும், அவர் மனங்கொள்ளாவிடில் காரியம் எதுவும் செயல்படாது. 'நான் திரும்பிவந்தபின் இதைக்குறித்துத் திட்டமாய் விசாரிப்பேன்' என்று நான் எழுதின விளக்கத்துக்குப் பதில் வந்தது.

பத்து நாட்களுக்குப்பின் அவரும் வந்தார். என்னை அழைத்து, நெடுநேரம் பல காரியங்களைக்

---

*இரண்டாம் உலக யுத்தத்தில் ஹிட்லர், பிரான்ஸைப் பிடிக்க மாகினோ (Maginot Line) கோட்டையை உடைத்த சிக்கலான காலம் அது.

குறித்து விசாரித்தார். குருப்பட்டம் பெறுவதைக் குறித்த எனது கருத்தை, அக்காட்களில் கண்பருக்கு நான் திறந்து சொல்வது வழக்கம். "ஆண்டவர் என்னை முன்னமே தெரிந்துகொண்டார். அவருடைய பரிசுத்தாவியையும் தந்து நடத்துகிறார். இப்பொழுது பிஷப் கைவைப்பதினால் எனக்கு சபைக்குள் திட்டவட்டமான ஊழியத்தை நடப்பிக்கும் அதிகாரம் கிடைக்கிறதேயன்றி, பரிசுத்தாவி கிடைப்பதில்லை" என்பதே நான் கூறின கருத்து. இதையும் எவரோ பிஷப்புக்குத் திரித்துக் கூறியிருக்கின்றனர். என் கருத்தை அவரிடமும் தைரியமாகக் கூறவே, அவர் கலக்கமடைந்தார். எனது தவறை நான் உணருமாறு வெகுவாய் வாதாடினார். அவர் கூற்றை நான் ஒப்புக்கொள்ளாதது மட்டுமல்ல, வேத ஆதாரங்களுடன் எனது கருத்தே உண்மையானது என்றும் விளக்காட்ட முயன்றேன்.

1941 ஜூலை 27 ஞாயிறில், எனது முழுப்பட்ட ஆராதனையென்று பிஷப் குறிப்பிட்டதை, நான் எனது நண்பர்களுக்கு எழுதி ஜெபிக்கும்படிக் கேட்டிருந்தேன். மேற்கூறிய பேச்சுவார்த்தை அதற்கு ஐந்து நாட்களுக்கு முந்தின செவ்வாய்க்கிழமை நடந்தது. நெடுநேரப் பேச்சுக்குப்பின் பிஷப் என்னிடம் "நீர் கூறுவது திருச்சபை உபதேசத்துக்கு மாறுபட்டது. ஆத்திரமாய் எவர்மேலும் கைகளை வைத்தல் அத்தியட்சருக்குத்தகாது. எனக்கு ஒரு பெரிய சந்தேகம் எழுகிறது. இந்தக் கருத்தை நீர் மாற்றுமட்டும் உமக்குப் பட்டம் கொடாமலிருப்பதுவே நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது. இதைக்குறித்து ஆலோசித்துப் பதில் கூறும்", என்று சொல்லிமுடித்தார். அதற்குப் பதிலாக நான், "ஐயா! இதைக்குறித்த எனது கருத்தை ஐந்து நாட்களுக்குள் மாற்றக்கூடுமென்று எனக்குத் தோன்றவில்லை. அதற்காக நாமிருவரும் காத்திருக்கத் தேவையும் இல்லை. கடவுளுக்குச் சித்தமானால் நான் போதகராக உழைப்பேன். அல்லது முன்போலவே சகாயம்

ரேசங்கியாராய் எனக்கவர் அளித்த பொறுப்பை நிறை வேற்றுவேன். இதைக்குறித்து எனக்கு மனவருத்தம் எதுவுமில்லை" என்று கூறினேன்.

அடுத்தபடி என்னசெய்வதென்று இருவருக்கும் ஒன்றும் தோன்றவில்லை. எனது தைரியத்தையும், உண் மையையும் கண்ட அவர், என்னை வெகுவாய்ப் பாராட்டி "ஆண்டவர் உமது ஊழியத்தை ஆசீர்வதிப்பார். ஆயி னும் நீர் படிக்கவேண்டிய ஒரு பாடம் உண்டு. அது என்னவெனில், உமது மேலதிகாரிகள் உமக்கிடும் கட் டளைகள் ஒருவேளை தவறாயிருந்தாலும், எதிர்பேசாமல் அவற்றிற்குக் கீழ்ப்படிவதாகும். அவ்வாறு செய்தால் அவர்களே தங்கள் பிழையை உணர்ந்து சீக்கிரம் அக் கட்டளையை மாற்றிவிடுவர். அவர்களோடு தருக்கம் செய்வது நல்லதல்ல", என்று கூறிமுடித்தார்.

1941 ஜூலை 27 ல் பட்டமளிப்பு ஆராதனை நடந் தது. நான் தெலுங்கில் சுவிசேஷ வாக்கியம் படித் தேன். ஆராதனைக்குப்பின் பிஷப் வீட்டிலேயே அவர் எங்கள் குடும்பத்துக்கு விருந்தளித்தார். எனது மாம னார் டேவிட் ஏசுவடியான் ஐயர் அவர்களும் அன்று அங்கு வந்திருந்தனர். அவரும், பிஷப்பும் மெஞ்ஞான புரத்தில் வகுப்புத் தோழர்கள்.

நாங்கள் செல்லுமிடத்தில் தேவையான எல்லாப் பணி முட்டுகளும் இருந்ததால், நாங்கள் துணியும், புத்தகமும் தவிர வேறெதுவும் கொண்டுசெல்லத் தேவை யில்லை என்று அத்தியட்சர் கூறினார். அதனால் எங்கள் பணிமுட்டுகளனைத்தையும் பலருக்கு இனமளித்து, ஒரே ஒரு அடுக்குப்பெட்டியை (Chest of drawers for senti- mental reasons) யும், சில பனைநார்க் கட்டில்களையும் மட்டுமே எடுத்துச்சென்றோம்.

---

# கொண்டர் நாடு செல்லுதல்

1941 ஜூலை 29 ல், எனது முப்பத்தேழாம் வய தில், இரு குழந்தைகளுடனும், ஒரு பணிவிடைச் சிறு மியுடனும நாங்கள் தோர்ணக்கல்லைவிட்டு 'மண்ட்லா' வுக்குப் புறப்பட்டோம். தமிழ், மலையாளம், ஆங்கிலம் தவிர இந்தியும், தெலுங்கும் கொஞ்சம்தான் அன்று நான் அறிந்திருந்தேன். ஆகையால் பிரயாணத்திற்குத் தேவையான மொழியறிவு இல்லாவண்ணமே புறப் பட்டோம்.

நாகப்பூர் ஆங்லிக்கன் அத்தியட்சாதீனத்தில் அன்று இருபத்திமூன்று குருக்கள் இருந்தனர். மொத் தக் கிறிஸ்தவர்கள் நாலாயிரத்துக்குக்குறைவே. பன் னிரண்டு குருக்கள் பிரிட்டிஷ் துருப்புகளுக்குரிய 'சாப்ளேன்' வேலைசெய்தனர். அவர்கள் காயடீ, ஜபல் பூர், மௌ, ஆஜ்மீர், நாகப்பூர் போன்ற இடங்களின் இராணுவத்துடன் தொடர்பு கொண்டவர்கள். அவர் கள் ஊதியம் இந்திய துரைத்தனத்தாரிடமிருந்து (Indian Ecclesiastical Establishment) வந்தது. 1947 ல், இந்தியா விடுதலை அடைந்தபின் இது கலைக் கப்பட்டது. இவர்களை மேற்பார்த்த பிஷப்புக்கு தலை மைச் 'சாப்ளேன்' என்ற வகையில் ஊதியமும், கவர் னருக்கும, தலைமை நீதிபதிக்கும் அடுத்த மூன்றும் கௌரவப் பதவியும், வேறு பல சலுகைகளுமிருந்தன. அவருக்குக் கொடுக்கப்பட்ட அரண்மனை உண்மையில் ஓர் அரண்மனையாகவே இருந்தது.

ஆங்லிக்கன் சபையில் உலகமெங்குமுள்ள பிஷப் மாருக்கு அடிப்படை ஊதியம் அளிக்கும் (Colonial Bishopric Endowment Fund) நிதி ஒன்று நிறுவி, அது அக்காலம் வட்டிக்காக கானடா ரெயில்பாதைக் கம் பெனியில் போடப்பட்டிருந்தது. ஆண்டுக்கு பவுன் 800, (மாதம் ரூ. 900) சம்பளமாக அந்த நிதியிலிருந்து அவர்க ளுக்குக் கிடைக்கும். அன்று அங்கு உழைத்த பிஷப்புக்கு

எல்லாமாக மாதம் ரூ. 2,600 ஊதியம் இருந்தது. வெள்ளைக்காரச் சாப்ளேன்களுக்கு ஆயிரம் ரூபாயும், வேறு பல சலுகைகளும் இருந்தன.

இந்த நாகப்பூர் ஆதீனத்தில் மூன்று மிஷனறிக் களங்கள் இருந்தன. அவைகள் தெற்கே சாந்தா (மராட்டி மொழி), வடக்கே (நாங்கள் சென்ற) கோண்டுவானு B.C.M.S. நடத்திய, சாகர் என்பவைகளே. இவற்றுள் கோண்டுவானுவில் மாத்திரம் 527 பேர் இருந்தனர். சாந்தாவில் 400 பேர், ஜபல்பூர் புனித பவுல் சபையில் 350 பேர். எஞ்சிய இடங்களில் வெள்ளைக்காரரும், ஆங்கிலோ இந்தியருமாய் 500 பேர். ஆதீனத்தின் ஏனைய மக்கள் ஆங்காங்கே சிறு சிறு கூட்டங்களாகச் சிலபேர் மட்டும் தனிச்சபை, ஆலயம் இவை இல்லாத இடங்களில் இருந்தனர்.

இரவு ஒன்பதரை மணிக்கு நாங்கள் புகைவண்டியில் புறப்பட்டோம். மறுநாட் காலை பத்து மணிக்கு நாகப்பூர் சேரவே, நாகப்பூர் பிஷப் ஹார்டி (Hardy) எங்களைச் சந்தித்து வரவேற்றார். அங்கு வண்டி மாறிப் பகல் ஒன்றரை மணிக்குக் கோண்டியா சந்திப்பைச் சேர்ந்தோம். அங்கு இறங்கி, சிறிய (Narrow Gauge) இருப்புப்பாதை வழியாகப் பயணஞ்செய்தோம். சகட வண்டிபோல ஆடி ஆடி, வளைந்து வளைந்து மாலை நான்கு மணிக்கு நைன்பூர் என்ற சந்திப்பை அவ்வண்டி அடைந்தது. நைன்பூர், கொண்டர் மிஷனைச் சேர்ந்த ஓர் ஊர். அங்கு ஒரு தொடக்கப் பள்ளியும், ஐந்து ஆசிரியர் குடும்பங்களும், ரெயில்வேயில் உழைத்த சில கிறிஸ்தவக் குடும்பங்களும் இருந்தன. மிஷன் ஆசிரியர்கள் எங்களைச் சந்திக்க வந்தனர். அவர்களில் எவருக்கும் ஆங்கிலம் தெரியாது. எங்களுக்கு இந்தி படிக்கத்தெரியுமாயினும், பேசும் பழக்கமிருந்ததில்லை. ஆகவே முதன்முதல் அவர்களுடன் எங்கள் கருத்தை எப்படியோ வெளியிட்டு வண்டி மாறினோம்.

மண்ட்லா அங்கிருந்து பிரியும் பாதையின் முடிவு இருபத்தேழு மைல்தான். காட்டிலிருந்து தேக்கு, கடுக்காய், பீடித் தொழிலுக்குரிய இலைக்கட்டுகள் போன்றவற்றைக் ஊர்நாடு கொண்டுசெல்வதற்கென்று அமைக்கப்பட்ட பாதையே அது. பொருள் ஏற்றும் வண்டிகளும், ஆளேறும பெட்டிகளும் ஒன்றுகவே இணைக்கப்பட்டிருந்தன. மூன்றுமணி நேரத்தில் இருபத்தேழு மைலையும் தாண்டினேம். இரவு எழரை மணிக்கு எங்களுடனே படித்து அரைப்பட்டம் பெற்று, சிலமாதங்களுக்கு முன்னேயே அங்கு அனுப்பப்பட்டிருந்த ஒரு நண்பரால் வரவேற்கப்பட்டோம்.

அது மழைக்காலம். குழந்தைகள் தூங்கிவிட்டனர். ஊர், ரெயிலடியிலிருந்து இரண்டுமைல். இடையில் நருபதை ஆறு. அதில் ஒரு கற்பாலம். வெள்ளப் பெருக்கில் அப்பாலம் மூழ்கிவிடும். அதற்குமேல் பதினைந்து அடிமட்டும் உயரதில் வெள்ளம் பாயும். ஒரு குதிரைவண்டியில் நாங்களும, வேறு மூன்று வண்டிகளில் சாமான்களுமாய் இந்த இரண்டு மைல் தொலைக்கும கொடுத்த கூலி ஒரு ரூபாய் மட்டுமே. அது 1941. இரவுவேளையில் நாங்கள் மண்ட்லா பங்களா சென்று சேர்ந்தோம. அது எங்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருந்தது. ஒரு அழகிய மாளிகை. அவ்வூரிலேயே அதுதான் அழகும், வசதியும் பொருந்தியது. கலக்டர், போலீஸ் தலைவர் வன இலாகாத் தலைவர் மூவரும் அன்று ஆங்கிலேயரே. அவர்களுக்குரிய துரைத்தன வீடுகள்கூட இவ்வளவு வசதிபொருந்தியனவாயிருந்ததில்லை.

எங்களை வரவேற்ற உடன் மிஷனறிக்கும் தமிழ் தெரியுமாதலால், இரவு தமிழிலேயே குடும்ப ஜெபம செய்து மகிழ்ந்தோம். மறுநாள் காலை வளாகத்தைப் பார்க்கையில் எனக்குள் எழுந்த மன மகிழ்ச்சிக்கு ஒரு அளவில்லை. எங்கும் ஒருமுழ உயரத்தில் வளர்ந்து நின்ற புல், ஒட்டு மாமரங்கள், வேறு பலவித உயர்ந்த

மரங்கள். சாலையின் இரு கரைகளிலும் வளர்க்கப்பட்ட ஆலமரங்கள் யாவும், நான் பிறந்து வளர்ந்த கன்னியாகுமரி ஜில்லாவை ஞாபகப்படுத்தின. நருபதை ஆறு, கால் மைல் தொலையில், அப்பட்டணத்தின் மூன்று பக்கங்களிலும் வளைந்தோடினது. எனது வீட்டினருகே ஓடும் ஆறும், திருவட்டாற்றின் முப்பக்கங்களிலும் சுற்றியபின், ஒருமைல் ஓடி, அங்கும் முக்கோணத்தில் வளைந்து ஒழுகுகிறது. மண்ட்லாவின் நருபதை எனது வீட்டையும், நாட்டையும் எனக்கு ஞாபகப்படுத்திற்று.

அந்நாட்களில் எனக்குள் எழுந்த எண்ணங்களுக்கும், பகற் கனவுகளுக்கும் ஒரு எல்லையில்லை. ஆபிரகாமைப்போல நானும் இடம்பெயர்ந்து, கன்னியாகுமரி, நெல்லை நாடு, சென்னை, தோர்ணக்கல், 1500 மைல் தொலைக்கப்பால் மண்ட்லா, வந்து சேர்ந்தேன். எத்தனை காலம், என்ன செய்யப்போகிறேனோ என்ற எண்ணங்கள் என்னைப் பரவசப்படுத்தின.

மண்ட்லா சபையில் ஐம்பதுபேர் மட்டும் இருந்தனர். கருங்கல்லால் அரசினரால் ஆங்கிலேயருக்கென்று கட்டப்பட்ட ஒரு அழகிய சிறு ஆலயமும், அதைக் காப்போனுக்குரிய வீடும தனியாக வளாகத்திற்குள் இருந்தன.

மண்ட்லா ஒரு ஜில்லாவின் பெயர். பரப்பளவு 5,000 சதுரமைல். மொத்த ஜனத்தொகை ஐந்து லட்சமமட்டும். தலைநகர் பெயருமம மண்ட்லா என்பதே. ஜில்லா முழுவதிலும் 120 மைல் மட்டுமே கல் பதித்த ரோடுகள். மற்றவை காட்டுப் பொருட்களைக் கடத்திசெல்லும் மாட்டு வண்டிகள் மட்டும் செல்லக்கூடிய மண்பாதைகள். பாரமேற்றும் லாறிகளும் அப்பாதைகளில் சிலவேளைகளில் செல்லும். வருடத்தில் ஆறுமாத காலம் மழையினிமித்தம் அவை பயனற்றவை. வெள்ளைக்கார அதிகாரிகள் மண்ட்லாவில் தங்கி இருந்

தமையால் அச்சிறு ஊரின் பாதைகளைக் கில் பாதை களாக்கியிருந்தனர்.

இந்த ஜில்லாவில், 27 இடங்களில் 527 கிறிஸ்தவர்கள் இருந்தனர். மண்ட்லாவில் ஐம்பதுதான். என் வீட்டார் நான்குபேர். என்னைப்போன்ற இன்னொரு மிஷனரியும் அங்கு இருந்தார். அவர் வீட்டார் இரண்டு. உபதேசியார் மனைவி மக்கள் எழுவருடன் ஒன்பது. கல்லறைத்தோட்டக் காவற்காரன் வீட்டார் எழுபேர். மிஷன் உதவிபெற்று உயர்நிலைப் பள்ளியில் படிக்கத் தங்கியிருந்த ஆஸ்டல் மாணவர் ஐந்து. சமையல்காரி குடும்பத்தில் மூன்று. ஒரு கிறிஸ்தவப் போலீஸ் சிப்பாயின் குடும்பத்தில் ஐந்து, பங்களாக்கள் இரண்டிற்கும் காவற்காரர் குடும்பத்தில் ஆறு. மிஷனுதவியால் பிழைத்த குருடன் ஒருவன் வீட்டார் ஐந்து. ஏனையவர்கள் ஐரோப்பிய அதிகாரிகள். அவர்கள் ஆண்டில் கிறிஸ்துமஸ், புதுவருடம், ஈஸ்டர் ஆகிய மும்முறை மட்டும ஆலயத்திற்கு வருவர்.

பட்பரு என்னும் ஊர் அங்கிருந்து எழுமைல். அதுதான் மிஷனுக்குரிய தலைமை இடம். அங்கு அக்காலம் ஏழாம வகுப்பு மட்டுமுள்ள ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. ஏறக்குறைய நாற்பது பிள்ளைகள் ஜில்லாவின் பலபாகங்களிலிருந்து கொண்டுவந்து சேர்க்கப்பட்டு, இலவச உணவு, உடை, புத்தகம் யாவும் பெற்று அங்கு படித்துவந்தனர். ஏழு ஆசிரியர் குடும்பங்கள், ஒரு போதகர், ஒரு உபதேசியார், காவல்காரன், தண்ணீர் எடுப்பவன், கம்பவுண்டர் இப்படியாக யாவரும் மிஷன் சம்பளம்பெற்று வாழ்ந்த குடும்பங்கள். தேவுரி, ரதன்புர், மர்பா என்ற மூன்று இடங்கள் அங்கிருந்து முறையே 30, 15 ,60 மைல் தொலையிலிருந்தன. அவ்விடங்களில்தான், விவசாயம் செய்த ஏழைக் கிறிஸ்தவக் குடுமபங்கள் சில இருந்தன.

ஆலய ஆராதனைக்கு வராத சிலரைக் கேட்டால் "உங்களுக்குச் சமபளம் கிடைக்கிறது. போகிறீர்கள்

எனக்கும் மாதச்சம்பளம் தந்தால் வருகிறேன்" என் பார்கள். தென்னாட்டில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர் களைக்கொண்ட சபைகளிலுழைத்த என்னை, ஆண்டவர் இப்படிப்பட்ட இடத்துக்கு அனுப்பி, அங்கேயே பத் தாண்டுகள் தங்கும்படிச்செய்தார்.

---

# கொண்டர் நாட்டு ஊழியம்

1942 ம் ஆண்டு வேலைக்களங்கள் யாவற்றையும் சுற்றிப்பார்க்க ஒருநாள் புறப்பட்டேன். அவ்வழியில் ஒரு லாறி நாள்தோறும் ஒருமுறை ஓடும். அது மாலை மயங் கும வேளை மண்ட்லாவிலிருந்து புறப்பட்டது. நானும் என்னுடன் ஆட்கள் நான்குபேரும் பதினைந்து நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களுடன் புறப்பட் டோம். உபதேசியார் ஒருவர். சமையல்காரன் ஒரு வன். சுமக்கும் கூலியாள் இருவர். 26 மைல் மட்டும் அந்த லாறியில் சென்றோம். அதின் பெரும்பாகத்தில் பெட்டைமுடிச்சுகள் ஏற்றப்பட்டிருந்தன. பின் பக்கம் முழுவதும் சாக்கு மூட்டைகள். ஓட்டுபவனுடைய இடப்பக்கத்தில்ஒருவர் வசதியாயிருக்கக்கூடிய ஆசனம். அவனுக்குப்பின் இரண்டு மரப் பெஞ்சுகள். இவற்றில் ஒவ்வொன்றிலும் நாலு அல்லது ஐந்து ஆட்கள் உட் காரக்கூடும். ஏறுவதோ பத்து ஆட்கள்வரை. நாலணா அதிகம் கொடுத்தால் முதல் இடம் கிடைக்கும். அதை முன்கூட்டியே ஒழுங்குசெய்திருந்தபடியால் எனக்கு அது கிடைத்தது.

தென்னிந்திய மிஷனரிமார் செல்லுமுன், 1938 வரை C.M.S. மிஷனரிமார் மண்ட்லா ஜில்லாவில் நான்கு இடங்களில் தங்கியிருந்தனர். அவர்கள் சாப்

ளேன் வேலையும் செய்தபடியால் கலக்டர், D.F.O., S.P. ஆகியவர்களுக்குரிய சில சலுகைகள் இவர்களுக்கும் கிடைத்தன. நாங்கள் சென்ற காட்களில் பழைய பழக்கத்தையொட்டி சிற்சில சலுகைகள் எங்களுக்கும் கிடைத்தன. அவற்றில் ஒன்று ஆங்காங்கு காட்டில் கட்டப்பட்டிருந்த தங்குசாலைகளில் மூன்று நாள் மட்டும் இலவசமாகத் தங்குவது. அதற்கிசைய அன்றிரவு எட்டு மணிக்கு வண்டி நின்ற ஊரிலிருந்த தங்குசாலையில் (Dak Bungalow) நாங்கள் இராத்தங்கினோம்.

அங்கு கோடை, மாரி, குளிர் என்ற மூன்று காலங்களும திட்டவட்டமாய் இருந்தன. கோடையில் வெயிலே வெயில். 115° மட்டும் செல்லும். மாரியில் மழையே மழை. ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் 60 அங்குல மழைபெய்யும். இதற்கடுத்தது குளிர் காலம.

நான் சென்றது குளிர்காலம். தமிழ் நாட்டாருக்கு அந்தக் குளிரை விவரிப்பது எளிதல்ல. குளிரென்றால் அதுதான் குளிர். 0° F. வரை தட்பநிலைச் செல்லும். காலை பத்து மணி மட்டும் அக்குளிர் தொடரும். மறுநாட்காலை எனக்கொரு குதிரையை வாடகைக்கு அமர்த்தினர். அதின்மேல் அமரக்கூடிய ஒழுங்கான சேணம் இல்லை. கோணிகளையும், சமுக்காளங்களையும் பரப்பி, நாடாக்களால் கட்டி, கால் மிதிகளை இருபுறமும் தொங்கவிட்டு, 'பரமார்த்த குருவை' சீடர்கள் ஏற்றினதுபோல என்னையும் ஏற்றிவைத்தனர். கடிவாளத்தை என் கையில் கொடுத்தனர். மற்றவர்கள் தங்கள் தோள்களில் மூங்கில் தடியின் இருபுறமும் மூட்டைகளைத் தொங்கவிட்டு நடக்கத்தொடங்கினர்.

குதிரையேறிப் பழக்கமில்லாத எனக்கு இந்த நூதன வாகனம் புதுமையாயிருந்தது. ஒருவாறு சமாளித்தேன். ஒருமணி நேரத்தில் இரண்டு மைல் தூரம

வீதம் இப்பயணி நகர்ந்தது. சிலவேளைகளில் உபதே சியார் கடிவாளத்தைப் பிடித்துக் குதிரையை நேர் வழியில் நடத்த, குதிரைக்குரியவன் பின்னிருந்து அதைத் துரத்த, நான் கால்களால் அதின் வயிற்றைத் தட்ட கண்டவர் பலர் வேடிக்கை பார்த்தனர். எப்படியும் நண்பகலுக்குள் எட்டுமைல் தாண்டினேம்.

மழைக்குப்பின் காட்டுப்பாதையில் ஓடைகள் பல புதிதாய் ஆங்காங்கே தோன்றும். இதுபோன்ற இடங்களில் நான் குதிரையிலிருந்து இறங்கி, குதிரையை மறுகரை நடத்தி, நானும் தாண்டியபின் சவாரியைத் தொடருவேன். அங்கு ஊர்கள் மிகக் குறைவு. 32 மைல் செல்லவேண்டிய எனது வழியில் பத்து சிறு ஊர்கள்தான் இருந்தன. சிலவற்றில் பதினைந்துக்கு மேற்படாத குடிசைகள், மற்றவைகளில் பத்துக்கும் குறைவு. ஒவ்வொரு ஊரிலும் தரைமட்டத்திலேயே கட்டப்பட்ட ஒரு சத்திரம். இதனைச் 'சட்டி' என்று அழைப்பர். அதின் சுவர்கள் மூங்கிலைக் கீறிப் பிணைத்தவை. புல் வேய்ந்த கூரை. மூங்கில் தட்டையால் சத்திரத்தை மூன்றாகப் பிரித்திருப்பர். ஒன்று சமையலறை, ஒன்று படுக்கையறை, மூன்றாவது குதிரை அறை. படுக்கை அறை பத்தடி நீளமும், எட்டடி அகலமுமுள்ளது. மற்றவை இதைப்பார்க்கிலும் சற்றுச் சிறியவை.

அன்று பகல் பன்னிரண்டு மணிக்கு ஒரு 'சட்டி'யை அடையுமுன் என் உடல் நோவெடுத்தது. ஊரில் எட்டியவுடன் அவ்வூர் தலையாரி அறிந்ததால், அவன் ஏதோ அரசாங்க அதிகாரி என்று நினைத்து அங்கு வந்துசேர்ந்தான். அவனுடைய உதவியால் ஊரிலிருந்து கட்டிலொன்றைப் பெற்றோம். அது சணல் கயிறால் பின்னப்பட்டது. கயிறு தொய்ந்துபோனால் இழுத்து இறுக்குவார்கள். நான் கொண்டுசென்ற ஜமக்காளம், மெத்தை முதலியவற்றை அதின்மேல் பரப்பி என்னைப் படுக்கவைத்தபின், உணவு சமைக்க

யாவரும் முயன்றனர். உடல் வலியைப் போக்க உபதே சியார் எனது கைகால்களை அமுக்கித் திருமினர். இந்த திருமுதல் தொண்டர்களுடைய பெரிய சிகிற்சையாம். எந்த நோய்க்கும் அவர்கள் செய்யும் முதல் சிகிற்சை கடுகெண்ணெய்யைத் தடவித் திருமுவதே. அது தமிழ் நாட்டு வைத்தியர்களும, வர்மாணிகளும் செய்வது போலவே தோன்றும. திருமுவதால் தசைகள் அடைந்த சோர்பு மாறி, நல்ல தூக்கமுண்டாகும. புதுப் பெலனும் கிடைக்கும. அன்று நான் அதும் பால் அயர்ந்து தூங்கி, இரண்டு மணிக்குப் பகலுண வுக்காக எழுப்பப்பட்டேன்.

அதற்குள் உபதேசியார் ஊருக்குள் சென்று ஒரு அணுவுக்கு ஒரு கோழிக்குஞ்சும், (6 மாதக்குஞ்சு) அரை அணுவுக்கு அரைப்படிப் பாலும் வாங்கி வந் தார். சமையல்காரன் நல்ல வாசனையுள்ள சிறு புல்ல ரிசிச் சோற்றுக்கு, கோழியை எனக்காகக் கறியாக்கி, தனக்கும், ஏனையவர்களுக்கும கோதுமை அடைகளைச் செய்தான். நான் மாலைத் தேயிலைக்குப்பதில் பாலைக் குடித்தபின், மறுபடியும் பயணம தொடர்ந்தோம். உபதேசியார் மெய்க்காவலுக்காக எனது துப்பாக்கியை நிரப்பி, என் கூடவே வந்தார். அது புலியும், வேங் கையும் நிறைந்த காடு. வழியில் ஏதோ உறுமல் கேட் டது. சத்தத்தைக் கேட்டதும் கோபித்து ஆரவாரம செய்தோம்.

இரவு குதிரையிலிருந்து இறங்கியபின், வெந்நீரில் என்னைக் குளிப்பாட்டி, என் உடலைத் திருமி, கோதுமை ரொட்டியையும், இறச்சிக் கறியையும் புசிக்கக்கொடுத் தார்கள். ஊரில் ஒரு துரை வந்திருக்கிறூர் (பாதிரி சாகிப் என்றுதான் நான் அறியப்பட்டிருந்தேன்) என்றதால் ஆண்களும், பெண்களுமான ஊர் மக்கள் ‘சட்டி’முன் தங்கள் மத்தளத்துடன் கூடினர்.

---

# கொண்டர் நடனம்

அம்மக்களுக்கு ஆட்டம் மிகப் பிரியம். குளிர் காலத்தில் அவர்கள் விறகைக் கூட்டி, எரியவைத்து அந்நெருப்பினருகே ஆண்கள் ஒருபக்கமும், பெண்கள் மறுபக்கமும், மத்தளக்காரன் நடுவிலுமாக நிற்க; பாடகன் பாட்டைத் துவக்குவான். அது நம் நாட்டு வில்லுப்பாட்டைப் போலிருக்கும். பொருள் உள்ளதும், பொருளற்றதுமான சொற்களை அப்போதைக்கப்போது இணைக்கும் 'ஆசுகவி' பாடுவாரும் அவர்களில் உண்டு. ஆண்கள் பாடி முடித்தபின், பெண்கள் அதையே திருப்பிப் பாடுவர். தெரிந்த பாட்டானால் அடுத்த அடியைப் பாடுவர். பாடுகையில், பாடுவோர் யாவரும் ஒன்றுபோல் குனிந்து அடிவைத்து, மத்தளக்காரன் நிற்கும் இடத்திற்கு நேராய் நடந்தும், நடித்தும் செலவர். சென்றவாறே பின்னாக வருவர். ஆண்கள் பெண்கள் வரிசைக்கு இடையில் பதினைந்து அல்லது இருபது அடி தூரம் இருக்கும். பாடல்கள் ...வையாயினும், அவற்றில் சிற்றின்பச் சுவை மலிந்திருக்கும். 'பால் இருக்குது, பழமிருக்குது, கறிஇருக்குது நீ வருவாயா?' என்ற ஆண்கள் கேள்விக்கு 'அதெல்லாம் வேறு ஆளைப்பார், நான் வரமாட்டேன்' என்றுபோலப் பதிலிருக்கும்.

வெளிச்சத்திற்காய் எனக்கிருந்த 'பெட்ரோமாக்ஸ்' விளக்கை அன்று கொடுத்து உதவினேன். நான் ஆட்டத்தைக் கண்டவாறே கட்டிலில் படுத்துத் தூங்கிவிட்டேன். அதற்குமுன் உபதேசியாரிடம் 'நான் தூங்கப் போகிறேன், அவர்கள் பிரிந்து போகும்வேளை இவர்களுக்கு இதைக்கொடும்,' என்று ஒன்றோ இரண்டோ ரூபாயைக் கொடுத்தேன். ஆட்டம் நேரம் செல்லச் செல்ல விறுவிறுத்தது. போதும் போங்கள் என்றாலும் போகார். நான் தூங்கி இடையில் எழுந்தபோது மணி சுமார் மூன்று. ஒன்பது மணிக்குத் தொடங்கின ஆட்டத்தை அவர்கள் அப்பொழுதும் நிறுத்தவில்லை. இப்

பாடல் ஒரு மைல் தொலையளவு கேட்கும். குன்றுகளில் மோதி, எதிரொலியாகப் பாடுகின்ற இடத்திலேயே, வேறெங்கோ பாடுவதைப்போன்றும் கேட்கும். சிலவேளையில் இவர்கள் இராமுழுவதும் ஆடி, காலையில் நேரே வயல்களுக்கும், தங்கள் வேலைகளுக்கும் போய் விடுவதும் உண்டு.

அவர்களுடைய சில பழக்கவழக்கங்கள் நமக்கு நல்ல முன்மாதிரியாகும். கீரை வகைகளை அவர்கள் ஏராளமாய் உண்பர். அவைகளைச் சேர்த்து, உலர்த்திக் கோடைகாலத்துக்காகப் பத்திரப்படுத்தியும் வைப்பர். புளியை அவர்கள் தொடுவதேயில்லை. புளிப்புக்குப் பதிலாக உலரவைத்த மாங்காய்ச் சீவல், தயிர்போன்றவைகளைப் பயன்படுத்துவர். என்ன சாப்பிட்டாய் என்றால் 'டால்பாத்', 'கோஸ்த் சாவல்' (பருப்பும் சோறும், இறச்சியும் சோறும) என்பர். சோற்றைப்போல அதே அளவு பருப்பும், காய்கறி, கீரை வகைகளையும உண்பர். அவர்கள் நடுவில் நீரிழிவு நோய் குறைவு. ஆனால் கெட்ட நோய்கள் (Venereal diseases) அதிகம். நல்லமுறையில் வைத்தியமசெய்ய அறியாவிடினும், காட்டு மூலிகைகளைச் சாமானிய நோய்களுக்குத் திறம படக் கையாடுவர்.

ஒருநாள் பல்வலியால் நொந்த எனக்கு ஒரு பூவை, மெல்லும்படிக் கொடுத்தனர். மென்ற இடத்தின் ஊனும், வாயின் உட்பக்கமும் கொக்கேன் ஊசி போட்டவண்ணம் மரத்துப்போயின. பல் வலியும் தற்காலிகமாய் நின்றுபோயிற்று.

கொண்டரில் ஆண்களைவிடப் பெண்கள் சுயாதீனப் பிரியர். இவர்களைத் தமிழினத்தார் என்று நினைக்கவும் ஏதுவுண்டு. இவர்கள் திருமணமுறை விநோதமானது. தலைவன் தலைவியைக் காட்டில் காண, கண்ணால் இருவரும் தம கருத்தை வெளியிட, அவர்கள் தனியே காட்டில் சென்று, யாரும் அறியாதொரு நாள் கழிக்க, உற்றார் அவரைத் தேடிச்சென்று, ஊரார் அறி

பப் பெரும் பறைசாற்றி, முருங்கைக் காலில் செப் விளக்கேற்றி, தலைவன் தலைவியின் கையைப் பிடித்து, இருவர் முந்தியையும் ஒருங்கே இணைத்து, யாவரும் காண எழுமுறை சுற்றி, வளையல் பல தலைவியின் கரங்களி லணிந்து, ஊனும், கள்ளும் ஒருங்கேயுண்பர். இந்த அலங்கார மணம், சிறிதொரு நாட்களில் சின்னாபின்ன மாகிப்போவதும் உண்டு. ஒரே வேளையில் ஒரே மனைவி (One at a time) என்பது கொண்டர் பழக்கம். பழந் துணிகளைக் களைந்து மாற்றுவதுபோல், தலைவன் தலைவி யையும், தலைவி தலைவனையும் விட்டுவிடுவர். பெரும்பா லும் பெண்களே இதை மிகவும் விரும்புவது. விட்டு விட்டவர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறவன் (ள்) ஊருக் குப் புறம்பாக்கப்படுவான் (ள்). ஊனும், கள்ளும் கலந்த விருந்தைத் தண்டனையென ஊராருக்குக் கொ டுத்தால் அக்குற்றம் நீங்கும். இதுவே பொதுமுறை.

---

## சபைச் சந்திப்பு

முன் கூறியவண்ணம் நான்கு நாட்கள் பயணஞ் செய்து, முப்பத்திரண்டு மைல் தூரத்தையும் கடந்து, சனிக்கிழமை மர்பா என்ற வனது வேலைக்களம் சென்று சேர்ந்தோம். அங்கு கொண்டர் இனத்திலி ருந்து படித்து, எனக்கு இந்தி ஆசானாய்த் தோர்ணக் கல்லுக்கனுப்பப்பட்ட ஒரு அரைப்பட்டம் பெற்றவர் அழைத்துவந்தார். பல ஆண்டுகளுக்குமுன் 1920 ல் இந்த வேலைக்களத்தில், ஆங்கில மிஷனரி ஒருவர் குடும் பத்துடன் தங்கியிருந்தார். அவர் பெயர் பிறைஸ். (Price) வேட்டையில் நிபுணர். 99 புலியைக் கொன்றவர் என்ற பட்டப்பெயர் அவருக்கு இருந்தது. உண்மை யிலேயே அவருக்குப் புலிவேட்டையாடுவதும், அவற் றின் தோலைப் பதனிட்டுச் சுவரை அலங்கரிப்பதுமே

அதிக விருப்பம். அங்கிருந்த பங்களா ஒன்பது கட்டுடையது. அதில் வாழ்ந்துவந்த நாட்டுப் அக்காலம் அதின் இரண்டே அறைகளை வீடாகப் பயன்படுத்தினர். மற்ற அறைகளில் வேலைகளின் அங்கு வரும் கலெக்டர் போன்ற காரிகள் எங்கள் அனுமதியின்பேரில் கொட்ட கிச் செல்வர்.

1941 டிஸம்பர் பதினைந்தாம் தேதி, மிஷன் ஆஸ்பத்திரியில் எங்கள் இரண்டாம் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு அத்தியட்ச பெயரையும் சேர்த்து டேவிட் அலெக்சாண்டர் ஞானஸ்நானங் கொடுத்தார். பிறக்குமுன் பத்து ளாய், பிஷப் ஹார்டி அரண்மனையில்தான் எனது வியும், மூத்தின இரண்டு பிள்ளைகளும் தங்கியிருந்

மறுநாள் காலை, ஓய்வுநாளாராதனைக்கு கிறிஸ்தவர்கள் சுமார் 40 பேர் வந்தனர். ளுக்கு நான் நற்கருணை ஆராதனை நடத்தினே பாதிப்பேருக்குமேல் எழுத்தறியாதவர்களே. புரிந்துகொள்ளும் முறையில் எளிய சில உண்மை கூறினேன். ஆராதனை முடிந்ததும் பற்பல வழக்குகள் விசாரிக்கத் தூண்டப்பட்டேன். வற்றை அவர்களே தீர்மானித்துக்கொள்ள விட்டு டேன்.

மூன்றும் நாள் அவ்வூரார் என்னைப் பெருமை படுத்த எண்ணி, வேட்டையாடுதல் ஒன்றை ஒழுங்குசெய்தார்கள். என் வேட்டைத் திறமை காட்டுகிறேன்!

போலீஸ் இன்ஸ்பெக்டரான நண்பர் ஒருவருட 1930 ல் நான் சிலநாட்கள் தென்னாற்காட்டு வில் வரஞ்சரம் என்ற ஊரில் தங்கியிருந்தேன். நாட்களில் துப்பாக்கிச் சுடப்பழகி, சில பறவை மட்டும் சுட்டிருக்கிறேன். கொண்டர் துப்பாக் சுடத்தெரியாதவர்களை மதிப்பதில்லை. அதிலும்

உயிர்ப் பாதுகாப்புக்காகவும், மதிப்புக்காகவும் ஒரு துப்பாக்கி வைத்திருந்தேன். பெரிய வேட்டைக்குரிய விருப்பமும், திறமையும் எனக்கில்லை. ஆனால் எதிர்பாராத நிலையில் அவ்வூர் மக்களின் விருப்பத்திற்கிசைய நான் அன்று வேட்டைக்குச் செல்லவேண்டியதாயிற்று. என்னுடன் இரு வேட்டைக்காரரும், (வெடிகளுடன்) அவர்களுக்குதவியாக இருபத்தைந்து பேரும் கலந்து கொண்டார்கள். அரைமணி நேரத்திற்குள் ஒரு கலைமான் நான் நின்ற இடத்துக்கருகில் வந்தது. எனக்கும் அது சென்றுகொண்டிருந்த இடத்துக்கும் நடுவில் ஒரு பள்ளத்தாக்கு இருந்தது. எனது துப்பாக்கி எண்பது கஜ தூரத்துக்குமட்டும பாயக்கூடியது. அந்த மான் அதற்குச் சற்று அப்பால் சென்றது. மானைக் குறி வைக்க, அது சற்றுத் தூரத்தில் சென்றதால் பயனில்லை என்றெண்ணி, துப்பாக்கியைத் தரைக்கு நேராய்த் திருப்பி விசையைத் தளர்த்திவிட எண்ணுகையில், கை தவறி அது வெடித்துவிட்டது. அவ்வழியாய்ச் சென்று கொண்டிருந்த காட்டுக் காவலாளன் ஒருவன் காதில் இச்சத்தம் விழவே, அவனும் இதென்ன என்று பார்க்க வருகையில் கைதவறிய கதையை வெட்கத்துடன் அறிக்கையிட்டேன்.

அங்கிருந்து இரண்டுமைல் தொலை நாங்கள் நடந்தபின் ஒரு புதரில் என்னை இருத்தி "நிச்சயமாகவே இந்த வழியாக விலங்கினம் வரும். எச்சரிக்கை" என்று சொல்லிச் சென்றனர். மரங்களில் ஆங்காங்கே காட்டு மிருகங்களைக் கலைப்பதற்கு அவர்கள் தட்டும சத்தம கேட்கத் தொடங்கிற்று. முடிவில் சத்தமேயில்லை. நான்கு அடி உயரமான ஒரு ஆண் மான் ஓடிக் களைத்துப்போய் மெல்லமெல்ல அசைந்து அங்கு வந்து கொண்டிருந்தது. நான் அதைத் தூரத்திலே கண்டேன். சுடுவதற்கு எழுந்து ஆயத்தமாய் நின்றேன். ஒரு மனிதன் நடப்பதைப்போல அது நகர்ந்து என் முன் வந்தது. எனக்கும் அதற்கும் பத்தடி தூரம்கூட இல்லை. நான் துப்பாக்கியை உயர்த்தினேன். விசையை

இழுத்தேன். சில நிமிடங்களில் அது என் பக்கம் வழி யாகவே சென்றது. குறிவைக்கவே தேவையில்லை. துப்பாக்கியால் எட்டி அடித்தால்கூட உடலைத் தொடக் கூடிய அத்தனை அண்மையில் அது சென்றது. பொறியை இழுத்தேன், இழுத்தேன், பலமாய் இழுத்தேன். வெடி தீரவில்லை. மானும் நகர்ந்துகொண்டேயிருந்தது. தூர இடங்களிலிருந்து என்னைக் கண்டவர்கள் யாவரும் இதென்னவென்று ஆச்சரியப்பட்டு நின்றார்கள். இதற்குள் மானும் கடந்துவிட்டது. என் வெடி தீரவில்லை என்பதை அப்பொழுதுதான் நான் உணர்ந்தேன். பெருவிரலால் குதிரையை இழுத்த நான், அவ்விரலை அதிலிருந்து எடாமல் அழுத்திக்கொண்டே சுண்டுவிரலால் விசையை இழுத்திருந்தேன். எனவே இதை வெளியே சொல்வது வெட்கமாயிற்றே என்று சும்மாயிருந்துவிட்டேன். வேட்டையில் புலி என்று எளனம் செய்யக்கூடிய நிலைமையில் எனது வேட்டைத் திறமை விளங்கிற்று!

அவ்வூரில் எருமைப் பால் மிகுதியாய்க் கிடைத்தது. ஒருபடிப் பால் விலை ஒரு அணாதான். ஆகையால் பால் வாங்கி அதைக் காய்ச்சி, பால் கட்டி ஆக்கி, வேறுசில பொருட்களையும் சேர்த்தோம். அங்கு கிடைத்த இன்னொரு பொருள் சிரோஞ்சா என்ற ஒரு விதையாகும். இது காட்டிலுள்ள ஒருவிதப் பழத்தின் விதை. அதை ஒவ்வொன்றாய் உடைத்தெடுப்பது எளிதல்ல. உடைத்தபின் கிடைப்பது அதிகச் சுவையும், சத்துமுள்ள பருப்பு. இந்நாட்களில் ஒரு ராத்தல் பத்து ரூபாய்வரை விலைபெறும். இவற்றையும் சேர்த்துக்கொண்டு மண்ட்லா திரும்பினோம். திரும்பி வருகையில் ஒரு வரிப்புலியை வழியருகே கண்டோம். அது மனிதரைக் கண்டு பயந்தோடவில்லை. வெறும் வாயை மென்றுகொண்டேயிருந்தது.

இன்னொரு பயணத்தில் புலியொன்று இரண்டு அழகிய குட்டிகளுடன் பாதையில் படுத்து அவைக்

ளுடன் விளையாடிக்கொண்டிருந்தது. மோட்டார் அதற்குப் பத்தடித் தொலையில் நிறுத்தப்பட்டபோதிலும் அது அசையவில்லை. பின் வண்டியிலிருந்தவர்கள் ஒவ்வொருவராய்க் கீழிறங்கவும், குட்டிகள் ஒரு பக்கமும், தாய் மறுபக்கமுமாய்ப் பிரிந்தன. சிறிது நேரத்துக்குப் பின் அவை ஒன்றுசேர்ந்து நகர்ந்துசென்றன. ஒரு முறை வேட்டைக்குச் சென்ற என் உபதேசியார் இரு மான்களை ஒரே இடத்தில் கண்டு சுட்டார். ஒன்று ஓடிவிட்டது. ஒன்று அவ்விடத்திலேயே நின்றபடியால் செத்து விழுந்தது. அதை எடுத்துவரச் சென்ற போது, அது பெண்மான் என்றும், இரு குட்டிகளை அப்பொழுதுதான் ஈன்றது என்றும் கண்டு, அக்குட்டிகளையும் கொண்டுவந்தார். ஆணும், பெண்ணுமான அக்குட்டிகளை ஆட்டுடன் பழக்கிப் பால் குடிக்க வைத்து, இராமன், சீதை என்று பெயர் வைத்து ஆறு மாத காலம் நாங்கள் வளர்த்தோம்.

மண்டலே சென்ற முதல் மாதத்தில் நான் ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்தேன். என் உடன் மிஷனரி அதை இந்தியில் மொழிபெயர்த்தார். அடுத்த மாதம் இந்தியில் ஆராதனை நடத்தத் தொடங்கினேன். ஜெபப் புஸ்தகத்தைப் படித்துச் சாக்கிரமெந்துகளை நடத்த அறிவு பெற்றேன். பிழை வந்தபோதிலும் மூன்று மாதத்தில் நானே இந்தியில் பிரசங்கம்செய்தேன். ஒரு வருட இறுதிக்குள் பிழையின்றிப் பிரசங்கம் செய்யும் திறமை பெற்றேன். ஒன்றரை வருடத்தில் அறுபது மைலுக்கப்பாலிருந்த ஜபல்பூர் புனித பவுல ஆலயத்தில் பெரிய வெள்ளிக்கிழமையன்று ஏழு திருமொழிகளின் பேரில் இந்தி மொழியிலே பிரசங்கம்செய்தேன். அங்குள்ள கிறிஸ்தவர்கள் ஆர்வத்தோடே கேட்டு, இறைவனை மகிமைப்படுத்தத்தக்க நிலையில் தெளிவாகப் பேசினேன்.

மனநூல் கூறும் ஒரு உண்மையை உணர்வது இதைப் படிப்போருக்கு உதவிசெய்யும். அவ்வுண்மை, காலமும், தொலையும் மனிதருள்ளத்தில் கிரியைசெய்யும்

முறையைப்பற்றியதே. நடந்து செல்லும் ஒரு குறிப்பிட்ட தொலையில் வீடு, மரம், நடமாட்டம் இவையிருப்பின், நடப்போருக்கு அது பெருந்தொலையாகத் தோன்றும். என்றாலும் சிலகாலம் சென்றபின் அத்தொலையை மதிப்பிடுகையில் அதின் உண்மையான நீளத்திலும் அது மிகக் குறுகினதாக மனதில் தோன்றும். அவ்வாறே வேலை எதுவும் செய்ய வாய்ப்பில்லாதபோது காலம் நீண்டதாய்த் தோன்றும். நிகழ்ச்சிகள் நிறைந்த காலமோ விரைவாக ஓடுகிறதெனத் தோன்றும். ஆயினும் பிற்காலத்தில் இங்கும் இவற்றின் தன்மை மாறுபட்டதாகவே தோன்றும். நிகழ்ச்சிகளால் நிரம்பாத வெறும் சமயம் குறுகிய காலம் போலவும், அவை நிரம்பின குறுகிய காலம் நெடுங்காலம் போலவும் தோன்றும்.

மேற்கூறிய பொது விதிக்கிணங்க, நாங்கள் கொண்டர் நதியில் உழைத்த ஒன்பது ஆண்டுகளும் இன்று வெகு குறுகின காலமாகத் தோன்றுகின்றது. கூறுவதற்குரிய ஊழியம் எதுவும் அங்கு நடைபெறவில்லை. எனது கிருபையின் தாலந்துகள் உபயோகமற்றவை போலத் தோன்றின. கறவலாடுகளின் பின்னாகத் தாவீதைப் பொறுமையுடன் நடக்கச் செய்தவர் எனக்கும் பொறுமையைக் கற்றுக்கொடுக்கவே அக்காட்டில் வைத்துப் பழக்கினார் என்று இன்று நன்றியறிதலோடே ஒப்புக்கொள்ளுகிறேன்.

மண்ட்லா சென்ற இரண்டு ஆண்டுகளுக்குப்பின் மிஷன் ஊழியத்தின் எல்லாப் பொறுப்புகளும் எனது கையில் கொடுக்கப்பட்டன. எனது மேற்பார்வையில் ஒரு மிஷனறியும், மூன்று கொண்டர் நாட்டுப் போதகர்களும், நாற்பது வேறு ஊழியர்களும் இருந்தனர். நாற்பது அனாதைகளடங்கிய நடுத்தரப் பள்ளி ஒன்றும் இருந்தது. மிஷனின் மொத்தச் செலவு மாதம் மூவாயிரம் ரூபாய். மிஷன் கமிற்றிச் செயலாளரும், உதவிப் பொக்கிஷதாரும், பொக்கிஷத்தைச் செலவு செய்பவரும் நானே. இம்முறையில் ஏற்படக்கூடிய சோதனை கிருபை பெறாத மக்களுக்கு மிகப் பெரியதென்று எவரும் ஒப்புக்கொள்வர். வருடமொருமுறை ஏறக்குறைய மூப்பதாயிரத்துக்கதிகமான செலவுக் கணக்கைப் பரிசோதித்த ஆடிற்றர்மார் வியப்படைந்தனர்.

சபை ஊழியர்களைத் தவிர அங்கு மற்றவர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள். ரசீதுகள் யாவும் பெரும்பாலும் விரலடையாளம பதித்தவைகளாக இருந்தன. இன்னான் இன்னானுடைய விரலடையாளமென்று ஒருவன்தான் அதின் பக்கத்தில் எழுதவேண்டும். நாங்கள் தங்கியிருந்த வீட்டை புல்லால் வேய்வதற்கு ஆயிரம் ரூபாயாகும. மிஷன் கணக்குகள், யாவரும காணக்கூடியமுறையில் திறந்த புத்தகமொன்றில் ஒவ்வொன்றும் எழுதப்பட்டுவந்தன. எனது மனைவி ஞானமணி அம்மாள்தான் செலவுகளைச் செவ்வனே செய்து, கணக்குகளை ஒழுங்காக வைத்திருந்தார். இச்செலவுகள் யாவும் யாவரும் அறியத்தக்க வண்ணம் செய்யப்பட்டன. இது எங்களைப் பல சோதனைகளுக்கு விலக்கிக் காத்தது.

அன்று எனது சம்பளம் ரூ. 120. வேறு படிகளும சேர்ந்து ரூ. 250 கிடைத்தது. செலவு குறைந்த

காட்டுப் பிரதேசமாகையால் அதில் நல்ல ஒரு பாகத்
தைச் சேமிப்பதற்குரிய வாய்ப்பு இருந்தது. ஆனால்
சேமிப்பதுவே பாவம் என்றாற்போல், யாவற்றையும்
செலவுசெய்யும பழக்கமுடைய குடும்பத்தினின்று வந்
தவர் எனது மனைவி. இப்பழக்கத்தை நல்முறைப்
படுத்த எண்ணி, பலருக்கு உதவிசெய்வதில் அக்கால
வருவாயைச் செலவுசெய்தோம. கையிலோ, பாங்
கிலோ ஒருநாளும் ஐம்பது ரூபாய்க்குமேல் இருந்த
தில்லை. பரலோகத்தில் பொக்கிஷம் சேர்க்கும் முறை
இதுவே. இம்முறையால் இதுவரைக்கும் கடவுள் எங்
களைக் கைவிடவுமில்லை.

இக்காலத்தில் ஜபல்பூரில் கானன் புச்சர் என்ற
ஒரு ஆங்கில மிஷனரி தொண்டர் மிஷனுக்குரிய நிதி
யாளராக இருந்தார் நான் அவருக்கு உதவி நிதியா
ளராக வேலைக்களத்தில் இருந்தேன். அவர் அன்று
எழுபத்திமூன்று வயதுடையவர். ஒருநாள் அவர்
என்னை பாங்குக்கு அழைத்துச் சென்று, அறிமுகப்
படுத்தி, ஏறக்குறைய ஒருமாதச் செலவுக்குரிய பணத்
தை எனது பெயருக்குச் செலுத்தி, இனி மாதந்தோ
றும் நீயே செக் மூலம செலவுசெய் என்று கூறினர்.
அன்று அப்படியே ஆயிரத்து எழுநூறு ரூபாய் எடுத்து
அவருடன் வண்டியேறி நான் செல்லவேண்டிய
மண்ட்லா மோட்டார் நிலையத்துக்குப் போனேன்.
ஒரு வாரத்துக்குமுன் மிஷன் செலவுக்காக அவரிடமி
ருந்து அவசரக் கடனாய் இருநூறு ரூபாய் வாங்கியி
ருந்தேன். போகும வழியில் இரண்டு நூறுரூபாய்
நோட்டுக் கொடுத்து, அக்கடனைத் தீர்த்தேன். நேர
மில்லாததால் அதற்கு ரசீது பெற்றுக்கொள்ளவில்லை.

மாதங்கள் சில சென்றன. மிஷன் பாங்குக்
கணக்கு ஜபல்பூரிலிருந்து விஜயவாடாவுக்கு மாற்றப்
பட்டது. எங்கள் கணக்குகள் யாவும் தோர்ணக்கல்
பிஷப்புக்கு அனுப்பப்பட்டு, விஜயவாடா பாங்கிலிருந்து
எங்களுக்குப் பணம் அனுப்பப்பட்டது. ஆண்டிறுதி

யில் கணக்குப் பரிசோதகர்கள் பார்வையிடவே, அதில் இருநூறு ரூபாய் நான் கொடுக்கவேண்டியதெனக் கண்டு அத்தொகையைக் குறித்து எனக்கு எழுதினர். இப்போது மாதங்கள் பல சென்றுவிட்டன. கிளைத் துப் பார்த்தபின் ரசீது வாங்காமல் கொடுத்த ரூபாய் தானிது என்பது தெளிவாயிற்று. ஒரு கமிற்றிக் கூட்டத்தில் கானன் புச்சர் என்ற மிஷனரியும் இருக்கவே, இக்காரியத்தைக் குறித்து அவரிடம் கேட்டேன். அவருக்கு ஞாபகமே இல்லை.

அன்றிரவு எங்களுக்கு நித்திரை வரவில்லை. இருநூறு ரூபாய் நினைக்கமுடியாத தொகை. அதற்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல. என்றாலும் ஆத்திரத்தில் பிரயாண மத்தியில் கொடுத்த இரண்டு நோட்டுகளும் அவருடைய கணக்கில் சேராமல் விடப்பட்டதே சிக்கலுக்குக் காரணம். கர்த்தர் கபடற்றவர்களைக் காக்கிறார் என்ற நம்பிக்கையில் மறுநாட் காலை அம் மிஷனரிக்குக் கடிதமொன்று எழுதி, விவரம் யாவற்றையும் கூடியமட்டும் ஞாபகப்படுத்தினேன். அதில் "முறைப்படி இந்த ரூபாய்க்கு நானே பொறுப்பு. போக்குச் சொல்ல எனக்கு இடமில்லை. ஆயினும் நீங்கள் உங்கள் பணப்பெட்டியைப் பார்வையிட்டு, அதனுள் உங்கள் கணக்கினுள் சேராத இருநூறு ரூபாய் அதிகமாகக் காணப்படுமானால், அது நான் கொடுத்த ரூபாய் என்று கொள்ளவும். அது கிடைக்காவிட்டால் நானே அதைக் கொடுத்துத் தீர்க்க ஒப்புக்கொள்ளுகிறேன்" என்று எழுதியிருந்தேன். இக்கடிதத்தை அனுப்பிய மூன்றாம் நாள் சங். புச்சர் ஐயரிடமிருந்து பதில் வந்தது.

"உமது கடிதம் கிடைத்தவுடன் நான் என் இரும்புப் பெட்டியைப் பரிசோதித்தேன். பயனற்றவை என்று ஒரு மூலையில் ஒதுக்கி வைத்திருந்தச் சில கடிதங்களைக் கண்டேன். அவற்றுள் ஒரு வெறுங் 'கவறில்' இரண்டு நூறு ரூபாய் நோட்டுகள் யாதொரு குறிப்பு

மின்றிக் காணப்பட்டன. அவை நீர் தந்த ரூபாயாகத் தான் இருக்கவேண்டும். இச்செய்தியை நான் தோர்ணக்கல் காரியாலயத்துக்கும் தெரிவிக்கிறேன்". இக்கடிதத்தைக் கண்டதும் நாங்களும், அங்குள்ள ஊழியர் யாவரும் ஆண்டவரைத் துதித்தோம்.

---

# நோய்கள்

*1943 டிசம்பர் மாதம், புதிய குதிரை ஒன்று வாங்கி, அதை வண்டியில் பூட்டிப் பழக்கினேம். சிறிது பழகவே, பட்பருவின் காட்டுப் பங்களாவிலிருந்து ஒரு நாள் ஏழு மைல் ஓட்டி மாண்ட்லாவுக்குச் சென்றோம். எங்கள் முதல் மகன் ஸ்டீபனும் வண்டியில் ஏறிக்கொண்டான். கம்பளிச் சட்டைகள் அவனுக்குப் போடவில்லை. குளிர்ந்த காற்று நெஞ்சில் மோதியடிக்கவே, மூன்றும் நாள் அவன் மிகுந்த ஜுரம் கண்டு படுத்தான். இரண்டு நாட்கள் அங்குள்ள கம்பௌண்டர் தந்த மருந்துகளைக் கொடுத்தும் குணமடையாததால், இது நிமோனியாவாக இருக்கலாம் என்று சந்தேகித்து, டாக்டர் உள்ள மண்ட்லாவுக்குச் செல்ல எண்ணினேம். அவனிருந்த நிலைமையில், குதிரைவண்டியில் அவனை ஏழு மைல் கொண்டு செல்வது அறிவாகத் தோன்றவில்லை. வேறு வசதிகளுமில்லை. மண்ட்லா ஜில்லாவின் வன இலாகாத் தலைவர் ஒரு சட்டைக்காரர். அவருக்கு ஆள் அனுப்பவே, அவர் தமது மோட்டாரைக் கொண்டுவந்து, எங்களை மண்ட்லாவுக்குக் கூட்டிச் சென்றார். வேண்டிய சிகிற்சை செய்தோம். கந்தகம் கலந்த மருந்துகள் (Sulfa drugs.

---

*எனது உபயோகத்திற்கென்று ஒரு குதிரையும், வண்டியும் முன்பு கொடுக்கப்பட்டிருந்தன.

Antibiotics) அந்நாட்களில்தான் கடைகளில் வரத் தொடங்கின. ஒரு வாரத்தில் நிம்மோனியா முதிர்ந்தது. காய்ச்சல் குறைந்தபாடில்லை.

ஓரிரவு எட்டு மணிக்கு அவனது உயிர் பிரியும் குறிகள் தோன்றின. முன்னொரு காலம் அங்குழைத்த ஆங்கில மிஷனரி ஒருவரின் மூன்று குழந்தைகளின் கல்லறைகள் அங்குள்ள கல்லறைத் தோட்டத்தில் வரிசையாய் இருக்கின்றன. அவற்றைக் காணும்போதெல்லாம், அடுத்த கல்லறை எங்கள் குழந்தைக்காக இருக்கலாமோ என்ற ஐயம் எழாமலில்லை. அந்நாட்களில் அவ்வூருக்கு ஜபல்பூரிலிருந்து மாவட்ட மருத்துவ அதிகாரி வந்திருந்தார். அவர் தமிழ்நாட்டுப் பிராமணர். தற்செயலாக அவருடன் சிறிய பழக்கம் எனக்கேற்பட்டது. அவரை வரவழைக்கவே அவர் குழந்தையை நன்ருய்ப் பரிசோதித்தார். மருந்தையும் மாற்றினர். அமைதியாய் அவனைத் தூங்க வைக்கக் கூறினர். ஆண்டவர் கரத்தில் அவனைக் கொடுத்துவிட நாங்கள் தைரியம்பெற ஜெபித்தோம். அவருடைய சித்தம் எதுவாயினும் அதை ஏற்றுக்கொள்ள ஆயத்தமானேம். அந்நேரமுதல் குணமடையும அறிகுறிகள் தோன்றின.

1937 மேய், 10-ம் நாள் பிறந்த எங்கள் முதல் மகள் கருணையை எங்கே பள்ளிக்கனுப்புவது, என்ற கேள்வி எழுந்தது. ஒரு ஐரோப்பிய இராணுவ அதிகாரியின் உதவியால், அவளை இருநூறு மைல்களுக்கப்பால் நாகப்பூரில் உள்ள ஆங்கிலேயர் பள்ளியில் படிக்கவைக்க பிஷப் ஹார்டி (Hardy) 1942 ஜூன் மாதம் ஒழுங்கு செய்தார் கிண்டர்கார்ட்டன் வகுப்பில் படித்துவந்த அவள் திடீரென்று நோய்ப்பட்டு அங்குள்ள ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தாள். ஒரு திங்கட்கிழமை காலை எட்டரை மணிக்கு வந்த கடிதத்தில், மகளை ஆஸ்பத்திரியில் வைத்திருப்பதாகவும், நிலைமை மோசமானல் தந்தியனுப்புவதாகவும் எழுதியிருந்தனர். ஒன்பது மணிக்கு, 'நிலைமை மோசம். உடனே புறப்படுங்கள்' என்று தந்தி வந்தது.

ஸ்டீபன் இன்னும் பூரண சுகமடையவில்லை. பதி ெனாரு மணிக்கு, அவனையும் இரண்டு வயதான டேவி டையும் கொண்டு, நாகபுரிக்குப் புறப்பட்டோம். நூற்றியெண்பது மைலும் செல்லப் பதினெட்டு மணி நேரமானது. எங்கள் பிள்ளையை உயிருடன் கண்டால் போதுமென்ற ஜெபத்தோடேயே சென்றோம். காலை ஐந்து மணிக்கு ஆஸ்பத்திரியை அடைந்ததும், அவன் மரித்துப்போகவில்லையென்று அறிந்து, ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினோம். ஒரு மாதமாக அவன் அங்கு வைக்கப்பட்டிருந்த விவரமும் அப்பொழுதுதான் தெரிய வந்தது. நோய் இன்னதென்று கண்டுபிடிக் கப்படவில்லை. படுக்கையண்டை சென்ற என்னை அவன் கண்டதும், புன்னகை மட்டும் செய்து, இந்தியிலேயே 'வயிறு வலிக்கிறது' என்று மாத்திரஞ்சொல்லிக் கண்களை மூடிக்கொண்டான். கை நாடியைப் பார்த்த நான் அவன் சாகுந்தருவாயிலிருப்பதை நன்கறிந்து, தாயாரி டம 'கருணையைக் கடவுள் கரத்தில் ஒப்புவிக்கும் வேளை நெருங்கிற்று' என்றேன். பிறர் காணாத இடங்களில் சிலவேளை சென்று அழுதேன். என் மனைவிக்குத் தைரியங் கூறி, ஸ்டீபனையும கவனித்து, சிறிய டேவி டையும் தூக்கி நடந்து, யாவருக்காகவும் இடைவிடா மல் ஜெபித்தேன்.

வயிற்றில் அறுவை சிகிற்சை செய்யலாமா என்ற யோசனையை டாக்டர்மார் என்னிடம் கேட்டனர். "இரணவைத்தியத்தைத் தாங்கக் குழந்தைக்குப் பெலன் இல்லை. ஒருவேளை அபாயமாகலாம். வேறு எல்லாம் செய்து முடிந்தாயிற்று" எனவே, நான் ஆண்டவர் அருளிய கிருபையால் "போனால் போகட்டும். செய்ய வேண்டியதைச் செய்வோம்" என்று டாக்டர்மாருக் குத் தைரியம் கொடுத்தேன். மயக்கமருந்து கொடுக்கு முன் நான் அவன் தலையில் கைவைத்து, "பயப்படாதே, அப்பா இங்கேதான் இருக்கிறேன்" என்று தைரியம் கூறி ஜெபித்தேன் அறைக்கு வெளியே நாங்களிரு வரும் உட்கார்ந்து கவலையோடு ஜெபித்தோம். "ஒப்பு

கிக்கிறோம். உமது சித்தம் ஆகட்டும்; ஆனாலும் குழந்தையை நாங்கள் நேசிக்கிறோம் என்பதை நீர் அறிவீர்” என்று கெத்செமனே முறைப்படி ஜெபம் செய்ய முயன்றோம்.

“அப்பா, அப்பா” என்ற கூச்சல் இருமுறை கேட்டது. நான்கு டாக்டர்மார் அங்கு நின்றனர். வயிற்றை அறுத்தபின் “யாதொன்றும் வித்தியாசமா யில்லை. மூடிவிடுவோம்” என்று மூவர் கூறினர். வயிற்றை அறுத்த டாக்டர் மிஸிஸ். ஊசி அகுஸ்தீன் (இவர்கள் சிரோமணியின் பள்ளித் தோழி, தமிழ் நாட்டார்.) அப்பன்டிக்ஸை (appendix) எடுத்துவிடு வோம் என்று அதை மாற்றினர். அப்பொழுது பிற் பகல் ஒன்றரை மணி. மூன்று டாக்டர்யாரும் தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றுவிட்டனர். குழந்தையை அதின் அறைக்குக் கொண்டுசென்றனர். மேல்மூச் சும், விக்கலும் தொடங்கின. டாக்டர் அகுஸ்தீனும் சாப்பாட்டிற்காகச் சென்றிருந்தால் ஒன்றும் செய்தி ருக்க இயலாது.

குழந்தை சாகிறதென்ற நிலைமையை அறிந்து கொண்டோம். ஒரு கையில் நாடித்துடிப்பு நின்று போயிற்று. மறு கையில் மட்டும் மெல்லத் துடித்தது. பிறபகல் ஒன்றரைமுதல் மூன்று மணி மட்டும் டாக்டர் அம்மாளும், தாதிமாரும் இரத்தக்குழாய் தென்பட்ட இடங்களிலெல்லாம் ஊசி மருந்தேற்றினர். அதற்குப் பின் சிறிது நம்பிக்கை ஏற்பட்டது. ஐந்து நாட்கள் மட்டும் அந்நிலையிலேயே இருக்க நேரிட்டதால், என்ன மாய் முடியுமோ என்று யாவரும் திகைத்துக்கொண் டேயிருந்தோம் செயற்கை முறையிலேயே உணவு செலுத்தப்பட்டது. முடிவில் குழந்தை தப்பிற்று.

இந்த நாட்களில் உணவுக் குறைவு, தூக்கமின்மை, கவலை இவற்றால் தொய்ந்துபோன எங்களை மலைநாட் டில் கிடைத்த மலேரியாக் காய்ச்சல் தாக்கிற்று. அதற்கும் சிகிற்சை பெற்று வெகுநேரம் படுக்கையி

லேயே இருந்தோம். இரண்டு வயதுச் சிறுவன் டேவி டும் மலேரியாவில் படுத்தான். இவ்வாருகக் குடும்பத்தின் ஐந்துபேரும் நோயாளிகளாய்ப் படுத்திருக்க, நாங்கள் விட்டுவந்த பன்னிரண்டு வயதுப் பணிப்பெண் மண்ட் லாவிலே நிம்மோனியாவால் கஷ்டப்படுவதாகச் செய்தி வந்தது. சொர்ணம என்ற அப்பெண் என் குடும பத்திலுள்ளவள். அவளைப் பத்திரமாய்த் திருப்பிப் பெற்ருேரிடம் ஒப்புவித்தல் எங்கள் கடமை. எங்கள் யாவருடைய நோயைப்பார்க்கிலும் அவளைப்பற்றிய செய்திதான் அந்நாட்களில் எங்களை அதிகமாய்க் கலக் கிற்று. அந்த இரண்டே மாதங்களில் என் தலைமயிர் திடீரென்று நரைத்துவிட்டது.

இந்த நிலைமையிலும் யோபுவின் பொறுமையை ஆண்டவர் எங்களுக்களித்தார். கடவுளின் சித்தத்திற் குப் பரிபூரணமாய்க் கீழ்ப்படிவதை ஆண்டவர் அந் நாட்களில் எங்களுக்குக் கற்றுக்கொடுத்தார். கிறிஸ் மஸ், புது வருடம இவற்றை ஆஸ்பத்திரியிலேயே கழித் தோம். பல நண்பர்களிடமிருந்தும் வாழ்த்துதற் கடி தங்களும், செய்திகளும ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந் தன. அவற்றில் ஒன்று நல்நினைவுக்குரியாரான கானன் புச்சர் அனுப்பியது. அவருக்குப் பதில் எழுதுகையில் 'எங்களுக்கு இது மகிழ்ச்சியற்ற பண்டிகை' என்று எங்கள் நிலையை எழுதித் தெரியப்படுத்தினேன். அவர் அதை அறிந்து, ஆச்சரியமான இந்தப் பொறுமையை அளித்த ஆண்டவருக்கு நன்றியறிதலாகத் தாம் ஒரு காணிக்கைக் கொடுப்பதாகவும், அதை நானே பெற்றுக் கொள்ளவேண்டுமென்றும் வருந்தி எழுதி, நூறு ரூபாய் அனுப்பியிருந்தார். 'யெகோவாயீரே' என்பது தமது பிள்ளைகளுடைய வாழ்க்கையில் என்றும் உண்மையே.

இரண்டு மாதங்கள் ஆஸ்பத்திரியில் தங்கியபின் மறுபடியும் மாண்ட்லா அடைந்தோம். 1943 ஜுன் வரை பிள்ளைகளை வீட்டிலேயே வைத்திருந்து, கருணை வைத் திருப்பவும நாகப்பூருக்கு அனுப்பினேம்.

# பிள்ளைகளின் படிப்பு

கருணை ஒன்றரை ஆண்டு நாகப்பூரில் படித்தபின், அவளுக்குக் கிடைத்த உதவி திடீரென்று நின்றுவிடவே, அவளை அங்கு மேலும் அனுப்ப எங்களால் கூடாமல் போயிற்று. ஆகையால் அவளையும், ஸ்டீபனையும் தமிழ் நாட்டிலிருந்த எங்கள் உறவினரிடம் அனுப்பி, தஞ்சை சென்னை, ஈக்காடு போன்ற இடங்களில் படிக்கவைத்தோம். ஈக்காடு என்ற கிராமப்பள்ளியில் படித்த ஸ்டீபன், பெற்றோரிடமிருந்து இளவயதிலேயே பிரிக்கப்பட்டதால், அவனுக்கேற்பட்ட மனப்போராட்டம், அவன் தேர்ச்சிக்கும, குணத்துக்கும் அனுகூலமாயில்லை. வருடத்திற்கு இருமுறை குழந்தைகளைச் சென்னையிலிருந்து அழைத்துவர ஏற்பட்ட செலவும், வசதியின்மையும் அற்பசொற்பமல்ல. வெகு நாட்களுக்கு முன்னேயே எழுதி, ஒழுங்குசெய்து, நண்பர்களைக் கண்டுபிடித்து, அவர்களுக்குரிய செலவுகளைக் கொடுத்து, ஆயிரம மைல் யுத்தகால நெருக்கடியில் ரெயில் வண்டியேறி அந்நாட்களில் பட்ட பாட்டை விவரித்தல் எளிதன்று.

“ஆண்டவரே எங்கள் பிற்காலம் எங்கே? உமக்கு ஊழியம் செய்ய எங்களை எங்கே கொண்டுசெல்லப் போகிறீர்” என்றே நாடோறும் ஜெபிக்கத் தொடங்கினோம். கொண்டர் நாட்டு ஊழியத்தில் வெற்றி ஏற்படவில்லை. ஏற்படக்கூடிய சூழ்நிலையும இல்லை. அச்சபைகளில் ஆவிக்குரிய தனி ஜெப வாழ்க்கை, வேத வாசிப்பு, தியானம முதலியன குறைந்தே காணப்பட்டன. மிஷனிலிருந்து சம்பளம் வாங்கிப் பிழைப்போரே கிறிஸ்தவர்கள் என்பது அவர்கள் கருத்து. அங்குள்ள நிலைமை தென்னாட்டுப பழக்கத்திற்கு முற்றிலும வேறுபட்டது.

சீரான குடும்ப வாழ்க்கை கிறிஸ்தவத்திற்கு இன்றியமையாதது. ஆடுமாடுகளும், புள்ளினங்களும தம் இனங்களைப் பெருக்கியபின் அவற்றை நெடுகாலம்

பராமரிக்கவோ, பழக்கவோ வேண்டியதில்லை. மக்கள் இதற்கு மாறுபட்டவர்கள். பிறந்த குழந்தை 'ஆளாக' இருபது ஆண்டுகளுக்குமேல் ஆகின்றன. இக்கெடுவின் காலமுழுவதும் தாய்தந்தையர் ஒத்துழைப்புத் தேவை. ஆகையால் ஒரே மனைவியுடன் கூடி வாழ்வது இன்றியமையாதது. இப்பழக்கம இல்லாத கொண்டர்களிடம் கிறிஸ்தவம் எவ்வாறு தழைக்கும்?

எலியாவின் நீரூற்று வற்றிப்போயிற்று. 1 இரா. 17: 7. C.M.S. சங்கம், கொண்டர் நாட்டு ஊழியத்தைத் தென்னிந்தியப் பிஷப்மாரிடம் ஒப்புவிக்கையில், ஒரு மிஷனறிக்குரிய தொகையைச் சில ஆண்டுகளுக்கு ஒழுங்காகத் தருவதாகவும், அதற்குப்பின் வருடம் ஆயிரம் ரூபாய் வீதம் குறைத்து, எழு வருஷங்களில் தங்கள் உதவியை முற்றிலும் நிறுத்தி விடுவதாகவும் ஒப்பந்தம் செய்திருந்தனர். இதை ஏற்று எடுத்தவர் பிஷப் அசரியாதான். இந்த உதவி ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து ஐந்தாம் ஆண்டு குறையத் தொடங்கினது. அம்மட்டும் வந்துகொண்டிருந்த பணத்தைத் திட்டமான குறிக்கோளின்றியே செலவுசெய்தனர். நான் ஒருமுறை இதைச் சுட்டிக் காட்டி "ஐயா, இம்முறையில் இவ்வூழியம் தொடர இயலாது. ஆகையால் இப்பொழுதே பிற்காலத்துக்குரிய திட்டம் வகுப்போம்" என்றேன். பற்பல பெரிய இயக்கங்களில் ஈடுபட்டுச் செயலாற்றிய பிஷப் அவர்களுக்கு, கொண்டர் மிஷனைக்குறித்துக் கவனம் செலுத்தப் போதிய நேரமில்லாது போயிற்று.

ஆலோசனை கூறின என்னை அவர் கடிந்துகொண்டு, "நீர் உம்முடைய வேலையைப் பாரும். மிஷனுடைய பிற்காலத்தைப்பற்றிக் கவலைப்படுவதற்கு உமக்கு அவகாசமில்லை" என்று வெடுக்கெனக் கூறிவிட்டார்.

பிஷப் அசரியா எனக்குத் தகப்பனைப்போன்றவர். ஆன்மீக வளர்ச்சியில் முதிர்ந்தவர். எனது மதிப்புக்

குரியவர். அன்புக்கும் பாத்திரர். மிகுந்த திறமை சாலி. ஆங்கில மிஷனரிமார் அவருக்குமுன் நடுங்கு வர். நீண்ட பார்வையும், பக்தியும் பூண்டவர். ஆயி னும் ஓரளவு பெலவீனம் அவரிலும் இல்லாமலில்லை. பெருந்தலைவர்களுக்கேற்படும் சோதனையே அது: யாவற்றையும் தானே நடத்தவேண்டுமென்றும், (அவர் திறம்பட நடத்தும் ஆற்றல் பெற்றவர்) பிறர் தமக் குக் கீழ்ப்படிதல் ஒன்றையே செய்யவேண்டுமென்றும் உள்ள ஆங்லிக்கன் பிஷப்மாரின் போக்கையுடையவர். அவர் காலத்துக்குப் பின் அத்தலைமை பீடம் அம்மு றையில் அமையாதேபோயிற்று.

திருமணப் பத்திரம் எழுதுகையில், பெயர், வயது, இனம், அதிகாரம், தேசம், தாலுகா போன்ற குறிப் புக்களை போதகர் கலியாண வீட்டாரிடம் கேட்டுப் பதிவு செய்வது இயல்பு. ஒரு போதகர் இப்படிப் பட்டக் குறிப்புகளை நிரப்பிவரவே, அதிகாரம் என்ற சொல்லைப் புரிந்துகொள்ளாத சபையாள், "ஐயா அதி காரம் தாவீது டீக்களுக்குத்தான்" என்றானாம். அவ் வாறே அன்றும் அதிகாரம ஆங்கிலிக்கன் பிஷப்மா ருக்கே. அவர்கள் நல்லவர்களாயின் யாவும் நன்முறை யில் நடைபெறும்.

1944 டிசம்பர் 18ல் எனக்குக் கிடைத்த தந்தி ஒன் றில், என் தகப்பனார் மரணத்தருவாயில் இருக்கிறார் என்ற செய்தி கிடைத்தது. 1945 ஏப்ரில் மாதம் எனக்கு மூவாண்டுக்கொருமுறை கிடைக்கவேண்டிய 'பர்லோ' லீவு உண்டு. எங்கள் நான்காம் குழந்தையை அந்நாட்களில் எதிர்பார்த்தோம். இத்தந்தி கிடைத்தவு டன் மூன்று வயதான டேவிடுடன் புறப்பட்டுச் சென்னை சேர்ந்து அங்கு படித்துக்கொண்டிருந்த இரு பிள்ளை களையும் அழைத்துக்கொண்டு நெல்லைக்கு வண்டியேறி, அங்கிருந்து எழுபது ரூபாயில் கார் ஒன்று அமர்த்தி தோட்டவாரம் சென்று சேரவே, தகப்பனாரை அடக் கம் செய்து இருபத்துநாலு மணி நேரமாயிற்று என்று

அறிந்தோம். கோபத்தில் அவர் கூறின சொற்கள் என் நினைவிற்கு வந்தன. (89-ம் பக்கம் பார்க்கவும்.)

இப்பிரயாணத்தின் நடுவில் நாகப்பூர் ரெயிலடியில் அசரியா பிஷப்பைத் தற்செயலாகக் கண்டு விவரம் தெரிவிக்கவே, அவர் "நீர் சென்று உடனே திரும்பி வந்துவிடும். பின் ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து ஐந்தாம் வருடம் ஏப்ரில் மாதம் சென்று இரண்டு மாதத்துக்குப்பின் புதுக்குழந்தையுடன் வரலாம். வேலை முக்கியம்" என்று ஆலோசனை கூறினார்.

தோட்டவாரத்தில் மூன்று நாட்கள் மட்டும் தங்கியபின் நாங்கள் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று சோமராசன்பேட்டையிலிருந்த எனது மைத்துனர் டாக்டர் மத்தியாஸுடன் சிலநாட்கள் தங்கினேம். அங்கிருந்து தஞ்சாவூரிலிருந்த எனது இன்னொரு மைத்துனரிடம் குடும்பத்தை ஒப்படைத்துவிட்டு, நான் மாத்திரம் தனியாக மண்ட்லா புறப்பட எண்ணினேன்.

1945 ஜனுவரி 1ல் பிஷப் அசரியா இறந்துபோன செய்தி நாடெங்கும் பரவியது. எனது விளக்கும் அதோடு அணைந்ததெனத் தோன்றிற்று. அடிக்கடி அபிப்பிராய வேற்றுமை காட்டினும், என்னை அவர் நேசித்தார். மதித்தார். என்னிடம் ஆலோசனையும் கேட்டார். கொண்டர் மிஷன் தொலைந்தது என்று மனதில் திட்டமாயுணர்ந்தேன்.

ஜனுவரி 4-ம் தியதி தோர்ணக்கல்லில் இறங்கி, அவருடைய சமாதியைப் பார்த்துவிட்டு "காரிருளில் ஓடி காட்டுமேன்" என்றவாறு மண்ட்லா சென்று சேர்ந்தேன். போகும் வழியில் நாகப்பூர் பிஷப்பைச் சந்தித்தேன். அவர், "சகாயம்! எனக்கொன்றும் திட்ட வட்டமாகத் தெரியவில்லை. கொண்டர் மிஷன் பண நிலைமை, எதிர்காலம் இவற்றை நினைக்கையில் எனக்கு மகாக் கலக்கமாயிருக்கிறது" என்று கூறினார். National Christian Council அதிகாரிகள், அசரியா

பிஷப்பைக்குறித்து ஒரு மதிப்புரை எழுதி, அவர்கள் பத்திரிகைக்குக் கொடுக்க என்னைக் கேட்டனர். பலர் பல கோணங்களில் அவர் வாழ்க்கையைப் புகழ்ந்து எழுதினாலும், எனது மதிப்புரையே யாவராலும் வெகுவாய்ப் பாராட்டப்பட்டது.

இஸ்ரவேலுக்கு இரதமும், குதிரைவீரருமானவர் விழுந்துவிட்டார். எழுபதாம் வயதில் வேலையைச் செய்துகொண்டே ஆயுதமணிந்தவராய்ப் போர்க்களத்திலேயே அவர் மாண்டார். இந்தியத் திருச்சபை என்றும் இப்பெரியாருக்குக் கடமைப்பட்டுள்ளது. தம்போன்றத் தலைவர்களைத் தோற்றுவிக்கத் தவறின ஒரு குறையையே தவிர, வேறொரு குறையையும் அவரில் நாம் சுமத்துவதற்கில்லை.

---

## கன்னாகிய அலக்சந்தர்

எனது வேண்டுகோளுக்கிணங்க, எனக்குதவியாக, ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து நாலாம் ஆண்டு ஜூன் மாதம் ஒரு தமிழ்ப் போதகர் கொடுக்கப்பட்டார். அவர் வந்த ஐந்தே மாதத்திற்குள், நான் என் தந்தையின் மரணநிமித்தம் என் ஊருக்குத் திரும்பினேன். அவரைப் பழக்கியபின் இரண்டுமாத விடுமுறைக்குச் செல்லலாமென்றும், ஆகையால் உடனடியாகத் திரும்பி வரவேண்டுமென்றும் அசரியா பிஷப் எனக்குக் கட்டளையிட்டிருந்தார்.

அவ்வாறே ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தி ஐந்து ஏப்ரில் பிற்பகுதியில் ஒருவாறு காரியங்களை ஒழுங்குபடுத்தி, நான் மறுபடியும் சென்னைக்குத் திரும்பினேன். செய்யவேண்டிய வேலைகள், ஏற்படக்கூடிய

சேர்தலைகள், அவற்றை உருவாக்கும் ஆட்கள், தீர்ப்பதற்குரிய வழிவகைகள் யாவற்றையும் அந்தரங்கக் குறிப்பாக எழுதி (Confidential) என் உடன் ஊழியரிடம் கொடுத்துச் சென்றேன்.

ஜூன் இரண்டாம் தியதி, ஈக்காட்டில் எங்கள் கடைசி மகள் வசந்தா பிறந்தாள். அம்மாதம் விடுமுறை முடிந்து நாங்கள் மண்ட்லா திரும்பினோம். இந்த இரண்டே மாதத்தில் காரியங்கள் யாவும் தலைகீழாக மாறித் தோன்றின. நான் எழுதிக்கொடுத்த அந்தரங்கக் குறிப்புகள் யாவற்றையும், அந்தந்த ஆட்களுக்கு எடுத்துக்கூறி, நாட்டைக் கைப்பற்ற அப்சலோம் கையாண்ட முறையில், இந்நண்பரும் திறமையாய்ச் செயல்பட்டார்.

எங்கள் அன்னியோன்னியம் முறிந்துபோயிற்று. 'வைத்தியனே உன்னையே குணமாக்கு' என்றபடி மிஷனறிகளாய் உழைக்கச் சென்ற இரு தமிழ்க் குடும்பங்கள், அந்த நெடுந்தொலையில் பிறர் பழிப்புக்காளாயின. அன்றும், இன்றும், என்னைக்குறித்த பல குறைகளைச் சிலர் கூறினும், எனது மனைவியைக்குறித்து என்றுமே எவரும தீய மொழிகள் எதையுஞ் சொன்னதில்லை. எனது ஊழியத்தின் வெற்றிக்கெல்லாம் காரணம் பெரும்பாலும் எனது மனைவியே. பக்தியுள்ள பெற்றோருக்குப் பிறந்து, செல்வம் அதிகமில்லாக் குடும்பத்தில் வளர்ந்து, யாவரும் தன்னைப்போலவே இருப்பார் என்று எவரையும் எளிதில் நம்பி, சூதுவாது அறியாத சிரோமணி அம்மாள் உண்மையிலேயே பக்தியையும், தன் தாயின் அன்பையும், உபசரிப்பையும் ஒருங்கே பெற்று வளர்ந்தவராவர்.

மறைக்கவேண்டிய யாதொரு கணக்கும் எங்களிடம் இருந்ததில்லை. எல்லா மிஷன் கணக்கையும பகிரங்கமாய் எழுதிவந்ததும், வரவு செலவு யாவற்றையும் நடப்பித்ததும் என் மனைவியே. நான் பொக்கிஷதாரராகக் கையொப்பம் மட்டுமிடுவேன். ஒருநாள் உத

விப்போதகருடைய கணக்குப் புத்தகத்தை (Ledger) ஏழு மைலுக்கப்பாலுள்ள பட்பருவிலிருந்து என் மனைவி திருடிவரச்சொல்லி, அதனை எடுத்துக்கொண்ட தாக அவர் குற்றஞ்சாட்டினார். உடனடியாக அப் புத்தகத்தை அனுப்பவேண்டுமென்றும் கடிதம் எழுதி னார். எங்களுக்கொன்றும் தெரியாதென்றபோதும் கேட்கவில்லை. அவர் ஒரு சிறுவனை அறையில் அடைத்து, அடித்து, அப்புத்தகத்தை அவன் எடுத்து என் மனைவி யிடம் கொடுத்ததாகக் குற்ற அறிக்கையையும் அவனைக் கொண்டு எழுதச் செய்தார். எங்களது மகன் டேவிட் அப்பொழுது மரணத்தருவாயிலிருந்தபோதிலும் இந்தக் காரியமே எங்களுக்கு அதிகக் கவலையைக் கொடுத் தது. இரவும், பகலும் கவலையும், கண்ணீரும் ஜெபமுமே.

நடந்ததென்னவெனில், அவரிடம், ஒழுங்காய் மர்பா விலிருந்து மாதமொருமுறை வந்த மிஷன் தபால்காரன், மர்பா போதகருக்கு எடுத்துச் செல்லும்படி, இவர் கொடுத்த புத்தகங்களுடனே, தவறுதலாக அப்புத் தகத்தையும் எடுத்துச் சென்றதால், அப்புத்தகம் அறு பது மைல் தொலைக்குச் சென்றுவிட்டது. அங்குள்ள போதகர் உடனே ஒரு ஆள்மூலம் அப்புத்தகத்தை எனக்கு அனுப்பி, அதைப் பட்பருவிலிருந்த அதின் உரி மையாளருக்கு அனுப்பிவைக்க எழுதினார். மிக்க மகிழ்ச்சியுடன், அவரது கடிதத்தையும, புத்தகத்தையும் அனுப்பிவைத்தேன். தமிழ் மிஷனரியோ இதை நம்பா மல், இதெல்லாம் சிரோமணியின் சூழ்ச்சிதான் என்று இறுதிவரைச் சாதித்தார். முடிவில் இக்கதை நாகப்பூர் பிஷப்வரை எட்டவே, அவர் உண்மையை அறிந்து அந்நண்பரை எச்சரித்து, மன்னிப்புக்கோரச் செய்தார்.

மண்ட்லா மிஷனை எப்படி நடத்துவதென்ற கேள் வியை பிஷப் ஹார்டி என்னிடம் கேட்கத்தொடங்கி னார். காரியங்களை நன்கறிந்த நான், என்னைத் திருப்பி அனுப்பிவிட்டு, அடுத்த மிஷனறியை மாத்திரம் வைத்து வேலையை நடத்துமாறு யோசனை கூறினேன். எனக்கு

மாதம் ரூ. 300 செலவாயிற்று. அவருக்கோ ரூ. 150 மட்டுமதான். மிஷனுக்கு லாபம் வருவிக்குமமுறையில் இதைக் கூறியும், அத்தியட்சர் அதற்கிணங்கவில்லை. அடுத்தவரை அங்கிருந்து மாற்றிவிட்டு, மிஷனைச் சீர்திருத்தவேண்டிய ஆலோசனை கூற என்னைக்கேட்டார்.

1947 ல் இந்தியா விடுதலையடையவிருந்தது. அது, பிஷப்யாருக்கு இந்திய அரசாங்கத்திலிருந்து அளிக்கப்பட்டுவந்த சபபளத்தைப் பாதித்தது. பிஷப் ஹார்டி; ரூ. 2600 சம்பளம பெற்றவர். வெறும் ரூ. 1,000 த்தில் வாழ்க்கை நடத்துவது இயலாது என்று நினைத்து, அவர் வெளியேற எண்ணினர். மேலும் சபை ஐக்கியத்திற்கு (formation of the C.S.I.) அவர் ஆதரவு அளியாதிருந்தார். ஆகையால் C.S.I. உருவானபோது அதுவும தனது கொள்கைக்கு மாறுபட்டது என்று கருதித் தாய்நாடு செல்லத் திட்டமிட்டார்.

பட்பருவில் நாங்கள் தங்கியிருந்த பங்களாவைப் புல் வேய்வதற்கு ரூ. 1,000 செலவாகிவந்தது. பணம் குறைந்துபோன அந்நாட்களில் இத்தனை தொகையைச் செலவுசெய்வது சரியல்லவென்று எண்ணி அதை அவ்வருடம் நிறுத்திவைத்தோம். மிஷனின் வருங்காலப்போக்கு இன்னதென்று அறியும்வரைப் பணத்தை விரயக்கலாகாது எனப் பிஷப்புக்கும் ஆலோசனை கூறினேன். கூரை வேயாததால் அவ்வாண்டு மழைக்காலத்தில் வீடு முழுவதும் ஒழுகத் துவக்கிற்று. அறுபது அங்குல மழை மூன்றே மாதங்களில் அங்கு பெய்யும். அவ்வருடம மழை எங்களை மிகுதியாய்த் தாக்கிற்று. ஒழுகாத இடங்களைத் தேடிப்பிடித்து ஒதுங்கி ஒதுங்கி வாழ்ந்த அம்மாதங்களை என்றும் மறவோம.

பிஷப் அசரியா இறந்த காலத்திலிருந்தே, C.M.S. உதவித்தொகை வருடத்திற்கு ரூ.1,000 வீதம் குறையத் தொடங்கியது. 1947 ம் வருடம் வெறும் ரூ.3,000

மட்டும் கிடைத்தது. என்ன செய்வதென்ற கேள்வியையும், வழிகாட்டும் பொறுப்பையும் பிஷப் என்மேல் போட்டார். நாற்பது உடன் ஊழியர் அன்று மிஷனில் வேலைசெய்தனர். பல திட்டங்களை யோசித்து, முடிவில் ஒருநாள், பிஷப் பட்பருவுக்கு வந்தவேளையில், (வருடமிருமுறை வருவார். திடப்படுத்தலுக்காக ஒரு முறையும், ஒருவாரம ஊழியர் பயிற்சிக் கூட்டம் நடத்த இரண்டாம் முறையும் வருவர்.) யாவரையும் கூட்டி வைத்துப் புதிய திட்டத்தை வெளியிட்டோம்.

நாற்பது ஊழியரில் போதகர், உபதேசிமாரைத் தவிர, ஏனைய இருபத்தேழு பேருக்கு வேலையில்லை என்றோம். வேலையில்லாதோர்களுடைய பெயர்களை வாசித்து முடித்ததும ஒவ்வொருவரும கதறி அழத் துவக்கினர். அன்று நானும் சத்தமிட்டு அழுதேன். சற்று தூரத்தில் இருந்த அறைக்குள் சென்று "ஆண்டவரே இதற்காகவா என்னை இங்கு கொண்டுவந்தீர். பல குடும்பங்கள் பிழைப்பற்றுப் போவதைக் காணவா என்னைத் தெரிந்துகொண்டீர். இத்தனை பாடுகளைப் பட்டும, ஆத்துமாக்கள் சேரடையவோ, சபை வளரவோ காணும பாக்கியம் எனக்கு கொடுத்துவைக்கவில்லையே. இமமட்டும் எவரையும் கெடுக்க எதுவும் செய்யாத நான் இன்று இத்தனை குடும்பங்கள் கவலைக்குள்ளாகக் காரணமானேனே", என்றுசொல்லிக் கண்ணீர் சிந்திக் கதறினேன். பிறர் காணுவண்ணம் அழுது முடித்தேன்.

அழுகை என் கவலையை மாற்றிற்று. சஞ்சலத்தை அன்னைப்போல் ஊற்றிவிட்டேன். அடக்கி வைப்பதைப் பார்க்கிலும் அழுதல் நல்லது. கண்களை அது துலக்கும். மனதை மாற்றியமைக்கும். அழுகைக்குப் பின் ஆறுதல் தோன்றும். அன்றும அவ்வண்ணமே பாயிற்று. மிஷனரியாரை நம்பிப் பிழைத்தவர்கள் அவ் ஊழியர்கள். கழுகு தன் குஞ்சுகளுக்கு இரைதேடிக் கொடுத்துக் கூட்டைக் கலைக்கும் வண்ணம் (டபர்

32:14) இச்செய்கையும் அச்சபைக்குத் தேவைப்பட்டது. படிப்புக் குறைந்த பல ஊழியர் வேளாண்மைத் தொழிலை மேற்கொண்டனர். செழித்த வளம்பொருந்திய நாடு அது. குடியேற்றப்படவேண்டிய சுறுசுறுப்புடைய மக்கள்தான் அங்கு தேவை. வன இலாகா, புகைவண்டி இலாகா, தொழிற்சாலைகள் (ஜபல்பூரில்) இவற்றில் வேலைபெறுவதற்குரிய ஒழுங்குகளைப் பலருக்குச் செய்தேன். மிஷன் வேலையில் சொற்ப ஊதியம் மட்டும் பெற்ற அவர்கள் பிற்காலம் பணவசதியடைந்து வாழ்ந்தனர். அதுவரையிலும் ஆண்டவர் என்னை அங்கேயே வைக்கச் சித்தங்கொண்டார்.

---

## சாப்ளேன் அழைப்பு

என்னை நன்கறிந்தவரும், எங்களுடன் தங்கிப் பழகியவரும், என் உடன் போதகருமான ஒருவர், அந்நாட்களில் ஆஸாம் மாகாணத்துக்கு அத்தியட்சராய் நியமிக்கப்பட்டார். அவர் அந்நாட்களில் சிட்டகாங் (கிழக்கு வங்காளம்—தற்போது பாகிஸ்தான்) என்ற ஊரில், ஆங்கிலேயர்களின் சபைக்கு எங்களை அழைத்தார். சம்பளமாக 300 ரூபாயும், பிள்ளைகளின் படிப்புக்கு அலவன்சும், மற்றும் பல சலுகைகளும் தருவதாக வாக்குப்பண்ணினார். இதைக்குறித்து, ஜெபித்து ஆலோசித்தோம். அவ்வேலை வேண்டாம என்பது மதியீனம் எனப் பலருக்குத் தோன்றிற்று. விலையான ஊழியம். பட்டண வாழ்க்கை. நாகரிக உலகம். படித்தோர் மத்தியில் உழைப்பு. கொண்டர் காட்டு ஊழியத்திற்கு முற்றிலும் வேறுபட்டவை. கவர்ச்சிகரமானவை. ஆயினும் கடவுளின் தெளிவான நடத்துதல் கிடைக்கவில்லை. வேண்டாமென்று உதறித்தள்ள-

ஆண்டவரே எங்களுக்குப் பெலனளித்தார். இதைக் குறித்துக் கேள்விப்பட்ட நாகப்பூர் பிஷப், என் துணிச்சலையும், தைரியத்தையும் பாராட்டினார்.

எங்களை மண்ட்லாவுக்குக் கொண்டு சென்றவர் கடவுளே. அங்கிருந்து அவரே எங்களை வெளியேற்ற மட்டும் நாங்களாகவே விலக விரும்பலாகாது என்பது எங்கள் திட்டம். நல்ல நடுப்பிராயத்தை, (35—45) வெளிப்பார்வைக்குப் பயன் ஏதுமற்ற முறையில் காட்டிலேயே கழித்தோம். தெற்கே திரும்புவோம் என்ற நம்பிக்கையே இல்லை. இனிய தமிழ் மொழியைப் பேசும வாய்ப்பு இல்லாத துயரம் அடிக்கடி என்னைக் கலங்கப் பண்ணிற்று. ரேடியோ ஒன்று வாங்கி வெளி உலகத்துடன் தொடர்புகொள்ள விருப்பம் இருந்தபோதிலும், வாய்ப்புக் கிடைக்கவில்லை.

அந்நாட்களில், பத்திரிகைகள், புத்தகங்கள் இவற்றைத் தாராளமாய் வாங்கிப் படிப்பதில் என் நேரத்தைப் போக்க முயன்றேன். இளமையில் தமிழ் மொழி கற்க வாய்ப்பற்றிருந்த எனக்கு, அந்நாட்களில் தாய் மொழிப் பற்று அதிகமாய் எழுந்தது. தவிரவும் பல மொழி ஆராய்ச்சியில் அதிக விருப்பும் உண்டாயிற்று. பண்டைத் தமிழகத்தைப் பற்றிய பல நூல்களைப் படித்து மகிழ்ச்சியடைந்தேன். மலையாளம், தெலுங்கு, இந்தி மொழிச்சொற்களுடனே தமிழ் சொற்களை ஒப்பிட முயன்றேன். இந்தியில் கண்ட தமிழ்ச் சொற்களைத் துருவிப் படித்தேன. இவற்றின் பயனாய் நான் முன் கண்டிராத ஒரு புதிய கருத்து எனக்குள் உதித்தது. அது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்துக்கு முற்றிலும் வேறுபட்டதாய் இருந்ததால், அதை ஆராயவும முயற்சி எடுத்தேன்.

ஊமையன் கண்ட கனுப்போல எனதுள்ளக் களிப்பு பெருக்கெடுத்தது. சொல்லிமுடியாத ஒரு இன்பம் கலைபறிவினலும் உருவாயிற்று. எனது குணப்படுதலின் நாட்களில் எனக்கிருந்த மகிழ்ச்சிக்கீடாகவே

இம்மகிழ்ச்சியும் தோன்றிற்று. ஆயினும் எனது கருத்தைப் பிறருடன் கலந்துகொள்ளும் வாய்ப்பற்ற அந்தக் காட்டில், நான் தனிமையாகவே மனத்தேன் குடித்து வெறித்தேன் எனலாம். எதைச் செய்தாலும் அதை முழுமனதோடு செய்தல்வேண்டும் என்ற என சிறுபிராயத்தின் குணம் இன்றும் என்னை விட்டில்லை.

வருடம் இருமுறை நாகப்பூருக்கு வந்து செல்லும் கடமை அக்காலம் எனக்கிருந்தது. அவ்வேளைகளில் அங்குள்ள தமிழ் நாட்டைச் சேர்ந்த இஸ்லோப் கல்லூரித் தலைவரான பண்டிதர் டி. ஜி. மோசஸ் முதலியோருடன் நெருங்கிய தொடர்புகொண்டு, தமிழைப் பற்றிய எனது புதுக் கருத்தைக் கூறும தருணமொன்றைத் தேடினேன். அந்த நண்பருதவியால் அத்தருணமும வாய்த்தது. நாகப்பூர் பல்கலைக்கழகத்தின் இந்தி, மராத்தி, சமஸ்கிருதம் இவற்றின் பேராசிரியர் யாவரையும், துணை அமைச்சரையும் (Vice Chancellor) மற்றும பன்மொழியறிவு பெற்ற சிலருமாகப் பதின்மூன்று பெரியாரைப் பண்டிதர் மோசஸ் தமதில்லத்தில ஒரு இரவு அழைத்துக் கூட்டி, எனது கருத்தை அவர்களுக்கு விளக்கிக் கூறுமாறு கேட்டார். நான் மிக மன மகிழ்ச்சியுடன் அதற்கு இசைந்தேன்.

அன்றைய என் துணிச்சலைக் குறித்து இன்றும் நான் ஆச்சரியப்படுகிறேன். நூல் நிலையங்களையும் பேரறிஞரையும துணையாகக் கொண்ட இந்த வல்லவர்களுக்கு, காட்டிலேயே பல்லாண்டுகள் தங்கியுழைத்த நான் எவ்வாறு என் கருத்தைக் கூறவேண்டும் என்று திகைக்கவில்லை. கருத்து ஒன்று மனதைக் கொள்ளைகொள்கையில், கிடைக்கும் வலிமை சேனைதைப் பார்க்கிலும் வைராக்கியமுள்ளது. திரளான தண்ணீர்கள் அதை அவிக்க இயலாது. வீட்டின் பொருளெல்லாம கொடுத்தாலும் அது அசட்டை பண்ணப்படும். (உன். 8:6,7) பரந்த அறிவுடையோரைப் பார்க்கிலும், ஒரே காரியத்தில் ஆழ்ந்த அறிவுடையோர்

வலிமை பெற்றுத் தோன்றுவர். என்னை ஆட்கொண்ட எண்ணம் என்னைப் பித்தனைப்போலாக்கிற்று எனலாம்.

அத்தேனேப் பட்டணத்தின் மார்ஸ் மேடையில் நின்ற பவுலைக்குறித்து 'இந்த வாயாடி* என்ன சொல்லப்போகிறான்' என்று நினைத்தவண்ணமே, அவ்வறிஞர்களும அன்று அங்கு கூடினர் எனலாம். என்னைக் குறித்து அவர்கள் எவரும், முன் கேள்விப்பட்டதில்லை. தங்களை அழைக்க டாக்டர் மோசஸ் என்பவரின் (இவர் இன்று, அனைத்துலகத் திருச்சபை மன்றத்தின் ஆறு தலைவர்களில் ஒருவர்) அழைப்பை மதித்து மட்டுந்தான் அவர்கள் வந்தனர்.

வழக்கம்போல் குறிப்பெதுவுமின்றியே மனத்துள் கருத்தை வரிசைப்படுத்தி அவர்கள் முன் என் சொற்பொழிவை ஆற்றினேன். என்னை அறிமுகப்படுத்தியவா எனது மிஷனறி ஊழியத்தைக் குறித்துச் சொல்லியபின், மொழிகளைப்பற்றிய எனது கருத்னதத் தாம் அதிகமாய் மதித்தவராதலால், பிறரும அதைக் கேட்டறிய அவர்களை விருந்துக்கழைததாகக் கூறினர். தாழ்மையாய் என் உரையைத் தொடங்கினேன். எனது வாழ்க்கையின் ஒரு சிறுபாகத்தைக் கூறியபின் எனக்கு நேரம் போகாதிருந்த வேளைகளில் நான் சற்றதும் முடிவுகட்டினதுமான சில கருத்துக்களைக் குறித்துச் சொன்னேன். அவை புரட்சிகரமானவை. அவைகளிலுள்ள குறைகளைக் கூறி அந்த அறிஞர்கள் எனக்கு உதவி செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டேன்.

சொற்பொழிவு வலிமை பெறுவதற்கு, அதனை ஆற்றுவோர், கேட்போருக்கொன்றும் தெரியாது என்று கருதினாற்போல், பொருளைத் தெளிவாக்க முயலவேண்டும். இந்தத் துணிச்சல் அறிவின் குறைவினின்று

*கிரேக்க மொழியில் இச்சொல் 'பொறுக்கி' என்று பொருள்படும். பற்பல இடங்களில் அலைந்து, அறிஞர் பலரின் சொற்களைப் பொறுக்கி உரையாடும் மக்களுக்கு இப்பெயர் வந்தது.

எழலாகாது. ஐயமேதும் மனதில் நிழலிடுகிறதெனப் பிறர் கண்டால், நம் பேச்சு பயனற்றுப் போகும். தெரிந்த உண்மைகளை முழுமனதோடே ஊக்கமாய் எடுத்துரைக்கவேண்டும். அன்று நான் இம்முறைகளையே கையாடினேன்.

"எனது கருத்துத் தவறாயிருக்கலாம். எனினும் அதை மறுக்க நானே இயலாதவனாயிருக்கிறேன். ஆகையால் என் கூற்றைத் தவறெனக் காட்டவே உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இக்கூற்றின் சிக்கல்களைக் கண்டபின் அவற்றை மேற்கொள்ளும் முறைகளை நான் காண முயலுவேன். நான் மொழியறிவில் பண்டிதனல்ல, போதிய ஆற்றலும் அற்றவன். எனது கூற்று உண்மையாயிருப்பின் மொழிப் பயிற்சியையே துறையாகக்கொண்டு உழைக்கும் உங்களில் சிலர் இம்முயற்சியில் தேற முன்வருதல்வேண்டும்" என்றேன். யாவருடைய கண்களும் என்மேல் நோக்கமாயிருந்தன.

அந்தச் சொற்பொழிவாற்றி இன்று பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. நாகர்கோவிலில் வந்தபின் அத்துறையில் ஈடுபட வாய்ப்பும் வேளையும் இல்லாதே போயிற்று. ஆகையால் அன்றையப் பேச்சின் சுருக்கத்தை இங்கெழுதுகிறேன். அதைப்பற்றித் தனி நூலொன்று எழுதும் திறமையோ, நேரமோ விருப்பமோ இன்று எனக்கில்லை. மக்கள் மனந்திரும்புவதும், சபை வளருவதும், தூய ஆவியால் நடத்தப்படுவோரின் எண் பெருகுவதும், நான் அன்பிலே வேரூன்றி வளருவதுமே இன்றைய எனது விருப்பமும், வாஞ்சையும். ஆயினும் எனது கருத்து மறைந்து போகலாகாதென்ற விருப்பத்தினாலேயே இங்கு இதை எழுதுகிறேன். இது ஒரு வெறும் நெருப்புக்குச்சு ஆகலாம். இதினின்று பெரும் விளக்கைப் பிறர் கொளுத்தக் கூடும்.

நானோ இதைக்குறித்து அளவுக்கு மிஞ்சிப் பெருமை பாராட்டுவதற்கு அவ்வளவு மதியீனனல்ல

அன்று ஒருமணி நேரம் நான் ஆங்கிலத்தில் உரையாடினேன். அரைமணி நேரம் பல கேள்விகளுக்கு விடையளித்தேன். பின் யாவரும் "காரியம் இப்படியாயிருக்கிறது" என்றதுபோல வீடுகளுக்குத் திரும்பினர். நானும் மண்ட்லா சென்றேன்.

சென்னை கார்டியன் பத்திரிகை இதைக் குறிப்பிட்டு, 'தமிழினின்று சம்ஸ்கிருதம் கடன்கொண்டவில்லை'! என்ற தலைப்பில் குறிப்பொன்று எழுதியது. என் மனதின் பாரமும் நீங்கிற்று. சொல்லவேண்டியதைக் கேட்கவேண்டியவர்களுக்கு ஏற்ற முறையில் சொன்னேன் என்ற திருப்தி நெடுங்காலமாய் என்னைப் பெருமைகொள்ளச் செய்தது.

---

# இதைப் படிக்க வேண்டாம்

பின் இழுத்தால் முன்னாக ஓடும் பன்றிகளைக் கப்பலில் ஏற்றுவதற்கு, வாலைப்பிடித்துப் பின்னாக இழுப்பதுபோலவே, இதைப் படிக்கவேண்டாம் என்ற தலைப்பின் கீழ் எழுதுகிறேன்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் இவ்வுலகில் தழைத்து வாழ்ந்த நன்செய் (திருந்திய) மொழிகளாகிய (Matured Languages) எபிரேயம், கிரேக்கு, லத்தீன், சமஸ்கிருதம், தமிழ் இவற்றில், இன்றும் எம்மாறுதலுமின்றி அடிப்படையில் அன்றுபோல் நிலவும் ஒரே மொழி தமிழேயாம். ஏனைய மொழிகள் உருவழிந்து, பெருவித மாறுதலுக்குட்பட்டு, பேச்சு வழக்கற்றுப் போயின. தமிழோ பேச்சிலும், எழுத்திலும் அதிக வேற்றுமையின்றி, நல்ல வல்ல மொழியாய் இலங்கி வாழ்கின்றது.

ஒவ்வொரு மொழியும் அதைப் பேசுவோருக்குப் பொன்மொழியேயாம். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு. தமிழைத் தேன்போன்ற மொழியெனத் தமிழர் போற்றினர். தென் மொழியே தமிழ்ப் பெயர் என்பதுவே மிகப் பொருந்தும். தென்மொழியெனப் பெயர் வருவதற்கு காரணம் வடமொழியொன்று இருந்ததுவே. இவற்றைத் தவிர வேறு எம்மொழியும் இடையில் இருந்ததில்லை என்பது இதன் கருத்தல்ல. வடமொழிக்குச் சமஸ்கிருதம் என்று பெயர். அதன் பொருள், 'திருத்தியமைந்த' 'செயற்கை முறையில் தேறிய' என்பதே. பிற சொற்களைத் தாராளமாய் எடுத்தும், அவற்றை மாற்றியமைத்தும் தனது சொல்லாக ஆக்கிக்கொள்வதே அம்மொழியின் அன்றையப் பணி. ஆங்கில மொழி திருத்தியமைந்து மூன்று ஆண்டுகளேயாகின்றன. தற்போதும் பல மொழிகளின் சொற்கள் அதில் சேர்க்கப்படுகின்றன. முற்காலம் சமஸ்கிருதமும் இம்முறையிலேயே செயல்பட்டது.

தமிழின் சிறப்பு மூவகையானது. அது முதுமை வாய்ந்தது. அதின் முதுமைக்குச் சான்று அதின் இலக்கியமே. இலக்கியத்தினின்றே இலக்கணமெழுகின்றது. இலக்கணம வகுக்க இலக்கியம் தேவை. தமிழின் இலக்கணத்தில் தொல்காப்பியம் சிறப்பானது. அதைப் படிக்கையில், அதற்கு முந்திய இலக்கியங்களின் தன்மையும், விரிவும நன்கு தென்படும். தருக்கத்துக்கிடமில்லாவண்ணம், தொல்காப்பியத்தின் காலம் கி.மு. வில் வைக்கப்படுகிறது. அன்றும் அதில் வடசொற்கள் சில காணப்பட்டன. தமிழின் முதுமைக்கு இந்த இலக்கணமொன்றே போதிய சான்றாகும். பாணினி, (சமஸ்கிருத இலக்கணம் வகுத்தோன்) அத்தேனே பட்டணத்தில் சோலோன், விவிலியத்தின் ஏசாயா தீர்க்கர், இவர்கள் மூவரும் கி.மு. 7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். முறையே இவர்கள் மொழி, குடியரசு, பக்தி இவற்றிற்கு வெகுவாய் உதவினவர்கள். இந்தியாவின் பிராமணர் அப்ராஹாமின்

[illegible] (Brahm, Brahmman, Brahmin) [illegible]

[illegible]

பொழுது என்ற சொல் தமிழின் வேர்மையைக் குறிக்க உதவுகிறது. கணியம், வடிவை ஆய்வும் இலக்கண ஏட்டுகளில் சூரியனைக் காட்டுக்கொண்டு, 'பொழுது ஆற்றலின் போல் இருக்கையில், இரண்டு பாகம் நாள் ஒப்பின், என்றிவ்வாறு தமிழர் கூறுவர். இன்றும் ஏட்டுகளில் சிலர் இவ்வாறே சொற்களைக் குறிப்பிடுகின்றனர். அப்பொழுது, இப்பொழுது, எப்பொழுது என்ற சொற்களிலுள்ள பொழுது, சூரியனையே குறிக்கும். இருளைப் பொழிக்கின்ற (தள்ளுகின்ற) சூரியன் பொழுது எனப்பட்டது. இச்சொற்கள் 'மலையாள மொழியில் திரிவையில் அப்போள், இப்போள், எப்போள் என்று மாறியும், 'போள்' என்ற அசை, வேர்ப்பொருள் (root) இன்றியே நிற்கும். வேர் சொல்லை தமிழ் மொழியிலே காணவேண்டும். இதே சொற்கள் தெலுங்கில் அப்புடு, இப்புடு, எப்புடு என்று திரிவதில், பொழுது- போள், புடு என்ற திரிவதையும் [illegible] இன்னும் வடக்கே இச்சொற்கள் பாலியில் காணலாம். [illegible] என்ற இந்தியிலும், உருதுவிலும் அப், தப், கப்,

திரிந்துவரினும், அச்சொற்கள் தமிழினின்று சென்றன என்பது தெளிவு.

அப் = இப்பொழுது
கப் = எப்பொழுது } இந்தி, உருது.
தப் = அப்பொழுது

தமிழின் இரண்டாம் சிறப்பு அதின் தாய்மையாகும். சுந்தரம் பிள்ளையின் "கன்னடமும் களி தெலுங்கும், கவின் மலையாளமும், துளுவும் உன்னுதரத்து உதித்து எழுந்தே ஒன்று பலவாயின" என்பது, தன் சிறப்பை நிலைநாட்டுவதற்காகவே எனப் பிறர் கொள்ளக்கூடும். மலையாளம் இன்னும் அடிப்படையில் தமிழின் திசைச்சொல்லேயாகும். பஞ்ச திராவிடத்துள் இது சேர்க்கப்படாமையே அம்மொழியின் இளமையைக் குறிக்கிறது இன்றும் தெலுங்கு வித்வான் பரீட்சைக்கு 'தமிழில் மூலம் (root) காண்க' என்பது ஒரு கேள்வியாகும். தமிழில் வழக்கற்ற சொற்கள் பிறமொழிகளில் கொள்ளப்படும்.

(எடுத்துக்காட்டு)

பறை சாற்றுதல் = பற—மலையாளம்
செப்பு = செப்பு—தெலுங்கு
புகல்வாய் = போலோ—இந்தி.

"பேச்சு"த்தான் speech ஆயிற்றே! இம்முறையில் தமிழினின்று இந்திக்குச் சென்ற ஆயிரம் சொற்களை அக்காலம் நான் குறித்து வைத்திருந்தேன். இவ்வாறு பொழுதுபோக்கின கதையை அன்றிரவு நண்பர்களுக்கும் கூறினேன்.

மூன்றாவது சிறப்பு, தமிழின் தூய்மை. பிறமொழியின் உதவியின்றியே தமிழ் தன் காலில் நிற்கும் தகுதியுடையது. எண்ணிறந்த தனித் தமிழ்ச் சொற்கள் சோம்பலால் மட்டும் தமிழரால் கைவிடப்படுகின்றன. நோய் (sick) சீக்கு ஆயிற்று. இந்தி நுழைந்தால்

பீமாரி*யுமாகும்! வறியவன் கடன்படுவது இழுக்கல்ல. செல்வந்தன் கடன்படுவதுவே இழுக்கு. தேவையின்றிப் பல வடசொற்களைத் தமிழில் வழங்கிய முறை அகன்று, தனித் தமிழ் எழுதும் ஆர்வம் இந்நாட்களில் தோன்றியிருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

வடமொழியாளர் சமஸ்கிருதத்துக்கு மாறுபட்டதை 'ப்ராக்ருதம்' என்றனர். இச்சொல்லுக்கு 'இயல்' என்றே பொருள். தமிழ் ஒரு இயல் (Natural) மொழி. இதை விளக்குவதற்கு அதின் மெய்யெழுத்துக்கள் ஒலிக்கும் முறையைக் காண்க. தொண்டையினின்று எழும் 'க' நாக்கு மேல்வாயுடன் தொடுகையில் எழும் 'ச' நுனி நாக்கு மேல்வாயோடு தொடுகையில் எழும் 'ட', அது மேல் பல்வரிசையைத்தொட்டெழும்'த', இதழ்களினுதவியால் தோன்றும் 'ப' முதலிய வல்லினங்களும், இவை பிறக்குமிடங்களினின்றே முறையே தோன்றும் ங ஞ ண ந ம ஆகிய மெல்லினங்களும, எளிய வடிவத்தில் இயல்பாகவே தோன்றியொலிக்கின்றன. சிறு குழந்தைகள் தங்கள் வீட்டாரை முறை கூறி அழைக்கும் சொற்கள் யாவும் 'அ' வில் தொடங்கி அக்கா, அச்சா (மலையாளம்) ஆஞ்ஞா, அண்ணா, அத்தை, ஆத்தா, அம்பா, அம்மா, அப்பா எனத் தோன்றும் இம்முறை உலகின் வேறெந்த மொழியிலும் இவ்வாறு அமைவதில்லை. இச்சொற்களுக்கு ஈடான சொற்கள், நீங்கள் அறிந்த ஏதேனும் பிறமொழிகளில் இருக்கின்றனவா எனத் துருவிப் பாருங்கள்.

தமிழகத்தைப்போல இந்தியாவில் இன்று இந்தி எதிர்ப்பு இயக்கம் பிற இடங்களில் எழாததற்குக் காரணமும் இதுவே. தமிழில் இன்று பல வடசொற்கள் புகுந்திருக்கின்றன. அவைகளின்றித் தமிழில் எழுதுதல் இயலாதென்பாரும உளர். பிற பல மொழிகளுக்குத் தமிழ்த்தாய் ஏராளமான தனது சொற்களைக் கடனளித்திருக்க, தான் மட்டும வடமொழியி

---

*பீமாரி ( बिमारी ) = நோய்.

னின்று கடன்படுவானேன் என்ற கேள்விக்குப் விடை காணுதல் வேண்டும்.

பண்டு நம்நாடு நெசவுத் தொழிலில் சிறப்புற்று, இங்கிருந்து அயல் நாடுகளுக்கு ஆடைகளை ஏற்றுமதி செய்தது. மேனாட்டார் பிற நாடுகளிலிருந்து பருத்தியைத் தங்கள் கப்பல்களிலேற்றி, பல்லாயிரம் மைல் தொலைவிலிருந்த தம் நாடு கொண்டு சேர்த்து, அங்குள்ள ஆலைகளில் அவற்றை நூலும் துணியுமாய் மாற்றி, அவற்றில் பகட்டான நிறங்களைப் பூசி, அத்துணிகளை அப்பிறநாடுகளுக்கே, திருப்பிக் கொண்டுவந்து, உயர்ந்த விலைகளில் விற்றனர்; விற்கின்றனர். நம்மில் பலரும் பிறநாட்டுத் துணிக்கேதுவும் ஈடல்ல என்று கூறும் வகையில் அந்நாட்டார் நம்மை ஏமாற்றிவிட்டனர். நாளடைவில் இந்த மயக்கம் தெளிந்து, நாமே ஆலைகளை நிறுவி, நமது பருத்தியைப் பஞ்சு, நூல், துணி, ஆடை முதலியவைகளாக மாற்றிப் பிறநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கிறோம்.

இவ்வாறே அன்றைய ஆரியப் பிராமணர் நடைமுறையில் நிலவியிருந்த தமிழினின்று சொற்களைக் கடன் கொண்டு, திருடி, உருவைமாற்றிப் புதியதெனக் காட்டி, தமிழர்களைக்கொண்டே அவற்றை மறுபடியும் அவர்களிடமிருந்து வாங்கிப் பிழைப்பவர்போலாக்கிக் கடன் கொடுத்தவனைத் தங்கள் சூழ்ச்சியால் கடன் பட்டோனைப்போலாக்கி வாழ்ந்தனர். அவர்கள் பெருமை பாராட்டும வடசொற்கள் பலவற்றை அறிவாகிய பூதக் கண்ணாடியால் ஆராய்ந்துபார்த்து, அவற்றின் திறத்தைக் களைந்து, கலவையை அகற்றியபின் பலவேலைகளிலும் நாம் காண்பது நமது வீட்டுப் பொருளாகிய தனித் தமிழ்ச் சொற்களே.

நமது தூய சொற்களைப் பிறர் திருடி உருத்தெரியாமல் செய்ய அவர்களுக்கு உதவின பலமுறைகளில் ஒன்று தமிழ் சொற்களை 'ற்'கரம் சேர்த்து மாற்றுவதே. பவழம்—பவளம்—ப்ரவளம்—பிறவாளம். சட்

டம்—விறுத்தம், வல்—வலையம்—வளையம், குவலயம்—உருண்ட உலகம், பூகோளம் (வ) Globe. இன்றும் சிற்றூர்களில் பார்ப்பனர் பேச்சைச் சுட்ட 'கறும், புறும்' என்று மக்கள் கூறுவதின் காரணமும், வடமொழியில் காணப்படும் திரண்ட றகர ஒலியேயாகும்.

வட்டம் என்ற சொல்லைச் சிறிதாராய்வோம். வட்டத்தினின்றே 'விறுத்தம்' எழுந்ததென நாம் கூறின், அவர்கள் 'விறுத்தமே' மூலவடிவம் என்றும், உச்சரிக்கத் தெரியாத நீங்களே அதை வட்டமென்றீர்கள் என்றும் கூறலாம். இது பெரும் மயக்கம் தரும் கூற்றெனத் தோன்றும். இச்சிக்கலைத் தீர்க்க ஏற்றமுறை எதுவெனில் வடமொழியின் சந்தேகத்திற்கிடமான (தமிழா—சமஸ்கிருதமா) சொற்களின் மூலவடிவமெது என்று காண முயல்வதே. அவ்வாறு துருவும்போது வடமொழியில் ஏராளமான சொற்களுக்கு மூலவடிவமெதுவுமின்றி அவை 'தத்பவம்' (தானுபியங்குவது—காரணமின்றிப் பெயர்கொடுப்பது) என்பர். அந்நாளில் இந்தக் குறையையே பண்டிதர்களுக்கு நான் பல எடுத்துக்காட்டுகளுடன் விளக்கினேன். விறுத்தம் என்பது வட்டத்தினின்று திரிந்து செல்லாத வடமொழியானால், அது பொருள் குறிக்க இயலாத சொல்லேயாகும்.

வள்—வள்ளி, வளையல், வளையம், வள்ளம்=ஓடம். வணக்கம்—வணரி, வண்டி, வடை, வட்டு (வட்டமான சிரட்டையிலூற்றி எடுக்கும் கருப்புக்கட்டி. இதுவே வட்டமென்ற பொருள் கொண்ட சக்றம் ஆகி, சக்கரை, சக்கர், Sugar ஆயிற்று).

விறுத்தம் வட்டமாயிற்றென்றால்
விறுஷ்டி =செழிப்பு, பூரிப்பு
விறுத்தன் =வயதுசென்றவன்
விறுச்சிகம் =தேள்
விறுத்தி =வளர்ச்சி

போன்ற வடமொழிச் சொற்களின் பொருளைக் கவனித்தால், அவற்றில் பொருத்தமும் ஏதுமில்லை. இவை போன்ற பலமுறைகளில், வடமொழி தூய தமிழ்ச் சொற்களை மாற்றி தன்னுடையதெனக் கூறும்.

'உ' வில் தொடங்கும் சொற்கள் உயர்வைக் காட்டும். உதயம், உம்பரம், உபரி, 'ஊப்பர்' (இந்தி) அப்பர் (upper) ஆங்கிலம். 'ஷ'சேர்ப்பது இன்னொரு முறை. உதயம்—உஷா, உஷஸ் ஆகும். பக்கம்=பக்ஷம். பக்கி=பக்ஷி பங்க்=சிறகு (இந்தி) செட்டைகளுள்ளவை.

கூட்டம்=கோஷ்டம், கோஷ்டி (வடமொழி) கும்பல் குவிதல்—உயர்ந்து தோன்றல், கும்பம் (வடமொ) குடம்—கடமாயிற்று.

இவ்வாறாக ஏனைய தமிழ் சொற்கள் பல்வற்றின் உருவத்தை மாற்றி (வடமொழி) தன்னுடையதெனக் காட்டி, தமிழரை மயங்கவைக்கின்றது. பஞ்ச பூதங்களின் பெயரிலும் தமிழையே வடமொழி கடைப்பிடித்தது. அம்பு—வளைந்து தோன்றும் கடல்; நீர், அப்பு—(வ).

தீ, கற்களை உரசித் தேய்ப்பதாலெழுவது. தேய்வினிருந்து எழுந்தது தீ. இதுவே வடமொழியில் 'தேயு' ஆயிற்று. அக்கினி என்ற வட சொல்லுக்கு அக்=மலை மலைபோலத் தோன்றுவதெனப் பொருள். எரியும் தீ அடி விரிந்து, நுனி கூர்ந்து தோன்றுவதால் அதை அக்னி என்றனர். தமிழர், தேய்வினின்று தோன்றின அதைத் 'தீ' எனமட்டும் கூறினர்.

சுரம், இராகம், தாளம் என்பன இசைக் கலைக்குரிய சொற்கள். இவற்றை சுரம், ராக், தால் என்றே வடமொழி கூறும். வேய்ங்குழலில் நெருப்பால் சுட்ட துளைக்குச் சுரை என்று பெயர். 'சுர்ர்' என்று எரிந்து துளைக்கும். அத்துளையினின்று பிறக்கும் ஓசை சுரம் (சுரையினின்றெழுவது) எனப்பட்டது. தாள் (கால்) தாளம். காலால் தட்டும் முறை. பாடுகையில் தாளம்

கொட்டுவது. தாஸன் — அடிமேலடி வைப்பவன். அடிமை. எஜமான் இட்ட கட்டளையைச் செய்வோன். தாசி—தாளம் கணித்து ஆடுபவள். கணிகை (கூத்தி) இராகம்—அராகம். அர் என்ற ஒலி—இரைந்தொலித்த 'அர்' என்ற ஓசையில் இரைவது அரசமரம், உயர்ந்த மரம்—உயர்ந்த மனிதன். அரசுபோன்றவன் அரசன். ராசன், ராஜன், ராஜா, ராஜ்யம, ராயன்—Royal. Rex.*

கண் என்னும் சொல்லைத் தலை மாற்றிக் கூறி ஆக்—அக்ஷ—அக்ஷம்' என்றனர். சாறு (Juice). ரசம் ஆனது ரஸ். கண்ணால் மதிப்பிடுவது கணித்தல்—கணியான்—கணிப்பவன். நாள் பார்ப்பவன். கணிதம் (வ) கணக்கு; கண்ணால் எச்சரித்தல்—கண்டித்தல், அதுவே ஆங்கிலத்தில் Condemn. குணி, Multiply, கண்ணியம், கணிசம், கண்காணி, நோக்கு, கண்ணோக்கு—Gnokee (Greek), ஞானம் Knowledge. கண் செயல்படும் முறை இவற்றில் தெளிவு.

மூப்பக்கங்களைக் கொண்ட மூக்கு இருப்பது முகம். மூக்கைப்போல முன் நிற்பவன் முன்பன், முக்யன் (வ—மொ).

வடமொழி, சொற்கள் பலவற்றைப் பிறமொழிகளினின்று கடன்கொண்டபோதிலும், தமிழினின்றே இன்றியமையாத சொற்கள் அங்கு சென்றிருக்கின்றன. ஆரியன் தமிழ்நாடு வந்து சேருமளவும் அவனது அறிவு தேர்ச்சியடையவில்லை. தமிழினின்றே அவன் தன் மொழியையும், கலைகளையும், சமயக் கோட்பாடுகளையும் வளர்த்தான். யாவும் ஒன்றே என்ற அத்வைதக் கொள்கையை நிலைநாட்டிய சங்கராச்சாரியரும் Monist (இவர் கேரளாவில் உள்ள காலடியில் பிறந்தவர்.) கடவுள் வேறு, மனிதன் வேறு என்ற இருமைப்பாட்டை

*மேற் கூறியவற்றில் சில ஞா. தேவநேயப்பாவாணர் எழுதிய ஒப்பியன் மொழி நூலிலிருந்தும் எடுக்கப்பட்டவை.

விளக்கிய ராமனுஜாச்சாரியரும் Dualist. (செங்கல்பட்டிலுள்ள சிறிபெரும்பத்தூர்), யாவும் பலபல என்று (Pluralist கொள்கைக்குரிய) மாதவாச்சாரியரும் (இவர் பிறந்தது உடுப்பி, தென்னாட்டிலேயே பிறந்ததை நோக்குக. இன்று வடமொழியாளர் தாமே ஆசான் எனப் பெருமைகொண்டுப் பிறரை ஏமாற்றுகின்றனர். இத்துறையில் பெருவிருப்புக்கொண்டோர் மேற்கூறியவற்றை ஆராய்தல் மிகப் பயன் தரும். நிறுத்துவோம், இந்தப் பேச்சுப் போதும்.

---

# அழிவுக்கு முன்னுன அகந்தை

1948 ல் நாகப்பூர் பிஷப் ஹார்டி வேலையைவிட்டுத் தாய்நாடு சென்ருர். அந்த அத்தியட்சாதீனத்தில் அன்று நாலாயிரம் கிறிஸ்தவர்கள்கூட இல்லை. இவர்கள் மத்தியப்பிரதேசமெங்கும் சிதறியிருந்தனர். அரசாங்க உதவிபெற்ற சாப்ளேன்கள் 1947 க்குப்பின் நியமிக்கப்படவில்லை. இந்திய வரிப்பணம அவர்கள் ஊழியத்திற்கு அதுவரையிலும உதவினது. ஆங்கில அரசு செல்லவேவ அவர்களும் சென்றுவிட்டனர். நாகப்பூர் மண்டலத்தையே பங்குவைத்து, பிறவற்றுடன் இணைக்க ஒரு யோசனையை பிஷப் ஹார்டி அன்று கொண்டுவந்தார். ஆயினும் அது ஒப்புக்கொள்ளப்படவில்லை.

அவர் என்னை வெகுவாய் மதித்தார். நேசித்தார். அவர் பிரிந்துசெல்லுமுன் சபைகளை நடத்துவதைக் குறித்த நல்லாலோசனைகளை எனக்குக் கூறினர். அவர் சென்றபின், புதிய பிஷப் தெரியவேண்டிய காலம் வந்தது.

டயோசீசன் கௌன்சில் அங்கத்தினர் எவரே னும் ஐந்துபேர் சேர்ந்து ஒருவர் பெயரை 'நாமினேட்' செய்யலாம். தேர்ந்தெடுப்போர் பதினாறுபேர்கொண்ட ஒரு சிறு குழு. (Electoral body) அதில் எட்டுபேர் போதகர்மார், எட்டு அதீட்சிதர். போதகர்மாரில் நானும் ஒருவன். நான் அன்று வழிதவறினேன். எனது பெயர் 'நாமினேட்' செய்யப்படுவதற்கு முயன்றேன். அது நான் செய்த பாவம். அது மட்டும் நான் ஆண்டவர் நடத்துதலுக்குக் கீழ்ப்படிந்தே வந்தேன். இதில் அவர் என்னை நடத்தவில்லை. எனி னும் அனுப்பாதிருந்தும் ஓடமுயன்றேன். (எரே. 23:21) உலக மக்களுக்கு இது தவறல்ல. குணப்படாத ஊழி யருக்கும இது குற்றமாகாது. ஆண்டவர் அன்பை அறிந்தும், அவரால் நடத்தப்பட்டும் வருவோர் அடி பிசகுதல் பெரும்பாவமாம். அதிக அடி அடிக்கப்பட அது காரணமாகும். ஒட்டுப்பிடிக்க ஓடி நடப்போரை ஆண்டவர் இன்று அடிக்கவில்லையே எனச் சிலர் திகைக் கக்கூடும். மனச்சாட்சியை மழுக்கினோருக்கும், பிழைப் புத் தொழிலாய் மட்டும் போதக ஊழியத்தை ஏற்றுக் கொண்டோருக்கும் இது பாவமாகாது. தெரிந்து கொண்ட பிள்ளைகள் தவறும்போது அவர்களைச் சீர்ப டுத்தவேண்டி ஆண்டவர் அவர்களைத் தண்டிப்பார். (ஆமோ. 3:2) மற்றவர்கள் தண்டனைக்குள்ளேயே இருப்பதை நாளானது வெளிப்படுத்தும்.

எனது மனைவி என்னைத் தடுத்தும் அன்று நான் அவர்கள் பேச்சுக்கிணங்கவில்லை. பெருமை என்னை விழப்பண்ணிற்று. தனி ஜெபத்திற்குப் பதில் சுயவலி மையில் நம்பிக்கை வைத்தேன். அத்தாலேயே அச் சோதனைக்குள் வீழ்ந்தேன். எனது நாமினேஷன் பேப்பர் செல்லுபடியாகாததால் (invalid) தள்ளப்பட் டது. நானும் வெட்கத்திற்குத் தப்பினேன். அதற்குப் பின் நான் சற்று ஆறி அமர்ந்தேன். பிஷப்பாகுதல் தான் வாழ்க்கையின் முடிவு என்று எண்ணுதே, என் பதையே ஆண்டவர் எனக்கு அன்று போதித்தார்.

நான் அதைப் படித்தேன். இனியொருமுறை படிக்கத் தேவையில்லை.

நாகப்பூர் ஆதீனத்திற்கு ஆறுபேர் போட்டியிட்டனர். மூன்று ஆங்கிலேயர், ஒரு ஆங்கிலோ-இந்தியர், இரண்டு இந்தியர். எட்டுப் போதகர்களின் காமினேட் செய்யப்பட்ட நாலுபேர் இருந்தார்கள். ஆகையால் ஒட்டு வெற்றிபெறாது என்று நான் திட்டமிட்டேன். அப்படியே அது ஆயிற்று. இருதாத்தாசிலும் $\frac{2}{3}$ ஓட்டு கிடைக்கவேண்டும். அது இயலாதது. டில்லி சுப்றீம கோர்ட்டு நீதிபதியாகயிருந்த விவியன் போஸ் (அன்று நாகப்பூர் டயோசிசன் கௌன்சில் அங்கத்தினர்) தேர்தலை நடத்தினர். முடிவில் ஓட்டு தோல்வி என்பதை அறிக்கைசெய்தார்.

அடுத்தப்படியாக 'மெட்ருப்போலிட்டனுக்கு'* எழுதித் தமக்குப் பிரியமான யாரையேனும் நியமிக்க அவருக்கு அதிகாரம் கொடுத்தோம். போட்டியிட்ட ஆறுபேரில் குறைந்த ஓட்டுக் கிடைத்த ஒரு வெள்ளைக்காரரை அவர் நியமித்தார். அவர் பெயர் ஜார்ஜ் சிங்கர். நல்ல பிரசங்கி தன்னைப்போல் பிரசங்கிப்பவர் எவருமில்லையென்ற எண்ணமும்கொண்டவர். மனைவியும எம்.ஏ. பட்டமபெற்றவர். அவருடைய அபிஷேகத்துக்கு நானும தலையில் கைவைத்தேன்.

---

* இந்தியாவிலுள்ள இந்தியா, பாகிஸ்தான், பர்மா, சிலோண் (C.I.P.B.C.) திருச்சபையின் பிரதம அத்தியட்சர். அவர் கல்கத்தா பிஷப்.

# யோசேப்பை அறியாத பார்வோன்

புத்தகம் திருடியதாக என் மனைவியைக் குற்றப் படுத்திய தமிழ் மிஷனறி முன்னமேயே மாற்றப்பட்டு விட்டார். அவர் வெள்ளைக்கார மிஷனறியால் படிக்க வைக்கப்பட்டவர். வெள்ளைக்காரரைப் பிரியப்படுத்தும் கலையில் கைதேர்ந்தவர். புதிய பிஷப் தேர்தல் நடந்த வுடனேயே அவருடன் கடிதம் மூலம் தொடர்புகொண்டு தனது காரியங்களைக் கவனித்துக்கொண்டார். நானோ ஒரு "மூடன்". உள்ளதை உள்ளதென்று சொல்லிப் பழகினவன். நலமென்று நினைத்ததை ஒருநாளும் கைவிடாதவன். ஆகையால் என் நேர்மையினிமித்தம வாழ்க்கை முழுவதும பல எதிரிகளை வரவழைத்தவன். அதனால் பலமுறையும் பல பாடுகள் பட்டவன். ஆயினும் முடிவில் யாவற்றையும் நன்மைக்கேதுவாய் ஆண்டவர் நடக்கச்செய்வதைக் கண்டுவருபவன்.

புதிய பிஷப்பைக் காணச் செல்லவுமில்லை, கடித மெழுதவுமில்லை. என் கடமையைச் செய்துகொண்டிருந்தேன. பிஷப் அபிஷேகத்துக்கடுத்தநாளில் பல கமிற்றிகள் கூடின. அவற்றில் முக்கியமான யாவற்றிலும நானும், என் மனைவியும் அங்கங்களாயிருந்தோம். அபிஷேகம் முடிந்தபின் நாங்கள் இருவரும பிஷப்பையும், அவர் மனைவியையும் கண்டு தனித்தனியாய்ப் பேசினோம். பின் நான் என் மனைவியிடம "இவர் புதுமாதிரி பிஷப்; என்னைத் தொலைக்க அவர் கொண்டிருக்கும் விருப்பம் அவரது கண்களில் தலைங்குகின்றது" என்றேன். அதற்கு என் மனைவி "அந்த அம்மாளும் ஒருமாதிரிதான். பொதுவாக வெள்ளைக்காரர் இப்படி இருக்கமாட்டார்கள். ஆனாலும் பார்ப்போம்" என்றார்கள்.

என் ஆலோசனையின்பேரில், நானே அழைத்து எனக்குதவியாகத் தெரிந்துகொள்ளச்செய்த அந்த நண்பர் மண்ட்லா மிஷனைவிட்டு வெளியேறின உடனேயே

திரும்பவும் அவ்விடத்துக்கு வர வெகுவாய் முயன்றார். சிலகாலம் மட்டும் அவர் கையில் மிஷன் பொறுப்பை விட்டுச்சென்று திரும்புவதற்குள் அவர் தன்னூரிலே வீடும் கட்டி, வயலும் வாங்கிவிட்டார். அந்தத் திறமை எனக்கில்லாததைக் குறித்து நான் வருந்தப் படுவதில்லை! அறுபது வயதாகிய எனக்கு இதுமட்டும் வீடுமில்லை, வயலுமில்லை, தென்னைமாத் தோப்புமில்லை. இல்லாததைக் குறித்து நான் வருந்துவதுமில்லை. (அப். 20:24)

1936 ல் சாது சுந்தர்சிங், எனது நண்பர் ஒருவருக்கெழுதிய கடிதத்தின் இறுதியில் இந்த வாக்கியத்தைக் குறிப்பிட்டிருந்தார். பிறரிடமிருந்து வரக்கூடிய இன்னல்களைப் பொருட்படுத்திக் கவலைகொள்ளுவது ஊழியனுக்கழகல்ல. இவ்வுலக வாழ்க்கையை (ஆயுளை) உணவாலும், உடற்பயிற்சியாலும், மருந்தாலும், மன உறுதியாலும் நீட்ட முயலும் மானிடர், தங்கள் பண்புக்கு இழுக்கு வாராவண்ணம் நடந்துகொள்வதன்றோ சிறப்பு. தான் செத்து மீன்பிடித்தாற்போல் உலகமுழுவதையும் மனிதன் ஆதாயப்படுத்தினாலும் தன் பெயரைக் கெடுக்கும் குணச் சீர்கேட்டால் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்துவானாகில் நித்திய இழுக்கும், பிறர் பழிப்புமன்றோ வந்துசேரும். இதை உணராது வாழும் மனிதர் வெறும் இருகால் விலங்குகளன்றோ? இவைகளில் ஒன்றைக்குறித்தும் நான் கவலைப்படுகிறதில்லை. என் பிராணனையும் நான் ஒருபோதும் அருமையாய் எண்ணினதுமில்லை. கலியாணமாகாத பிரசங்கியாயிருக்கையில் மட்டுமல்ல, நாலு பிள்ளைகளின் தந்தையும், இரண்டுகுழந்தைகளின் பேரனுமாயிருக்கிறபோதிலுங்கூட (அட்டைப் படம் ii-ம் பக்கம் பார்க்க) இன்று அந்த இலக்கை விடவில்லை.

மரிக்கப்போகும் நோயாளியை முடிவுமட்டும் பராமரிக்க நியமிக்கப்பட்ட தாதியாகவே ஆண்டவர் என்னைக் கொண்டர் நாட்டுக்கழைத்துச்சென்றார். அங்கு

அந்தவேலை வெற்றிபெறுமென்ற என் அபிப்பிராயத்தை தைரியமாய்ப் பலமுறையும் அதிகாரிகளுக்கு விளக்கிக் கூறியிருந்தேன். இந்தப் புதிய பிஷப் தன்னை எல்லா வேண்டியதற்கு மிஞ்சி எண்ணியவர். நடந்தகால அனுபவத்தை ஒதுக்கித் தள்ளியவர். கோள் கேட்க விரும்பியவர். பெருங்குணங்கள் அவரில் மலிந்து காணப்படவில்லை.

"பட்டரு மிஷன் வேலை குன்றிப்போவது சகாயத்தினால்தான். என்னை அங்கு அனுப்பினால் யாவையும் சீர்படுத்திவிடுவேன்" என்று வீடும், வயலும் கிடைத்தவர் பிஷப்புக்குச் சொல்லவே, கமிற்றிக் கூட்டத்திலேயே திடீரென்று பிஷப் நான் சில மாற்றங்களைச் செய்யப்போகிறேன். அதில் ஒன்று சகாயத்தை மாற்றுவது என்றார். நானும், என் மனைவியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தோம. எல்லாம் நன்மைக்கே என்று முடிவுகட்டினோம். அங்கு யாரை அனுப்புவேன் என்பதைப் பின் தெரியப்படுத்துவேன் எனக் கூறினார். ஒன்பது ஆண்டுகள் காட்டிலே தங்கின எங்களுக்கு வேறு எந்த ஊராயினும் அது நல்லதே என்ற மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆயினும் மாற்றம்செய்த முறை தவறு. பொதுவாக இதைககுறித்து சம்பந்தப்பட்டவர்களிடத்தில் முன் ஆலோசிப்பது வழக்கம். தவிரவும் நான் அங்குள்ள அனுபவம்வாய்ந்த போதகர்களில் ஒருவன். புதிய பிஷப் யாவற்றையும் புதிய முறையில் செய்யத்துணிந்தார்.

இது 1949 பெப்ருவரியில் நடந்தது. இதற்குள் நாங்கள் இனித் தமிழ்நாடு காண்பதரிது எனக் கருதிப் பிள்ளைகளை இந்தி மொழியிலேயே படிக்க வைத்திருந்தோம். கருணை நாள்தோறும குதிரைவண்டியில் பதினாலு மைல் பிரயாணஞ்செய்து மண்ட்லாவில் இரண்டாம் படிவம படித்துவந்தாள். பட்டருவிலேயே ஸ்டீபன் நான்காம் வகுப்பிலும், டேவிட் மூன்றாம் வகுப்பிலும் படித்துவந்தார்கள்.

இரண்டொரு நாட்களுக்குப்பின் 'உன்னை ஐயம்பூருக்கு மாற்றியிருக்கிறேன்' என்ற ஆர்டர் வந்தது. அதுவே அந்த அத்தியட்சாதீனத்திலுள்ள ஐநூற்றி அறுபதுபேர்கொண்ட பெரிய சபை. கோர்ட்டு வழக்குகளும் அச்சபையிலுண்டு. எங்கள் மாற்றத்தைக் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைந்தபோதிலும், அங்கிருந்த கிறிஸ்தவர் பலரும் 'இனிமேல் எல்லாம் போய்விடுமே' என்று கலங்கினர். ஒரு வாரத்துக்குப்பின் எனக்கு வேறொரு கடிதம் வந்தது. 'நீ நெடுநாளாய்க் காட்டிலிருப்பதால் உன்னை ஒரு Refresher Courseக்கு அனுப்புகிறேன். கல்கத்தாவில் பிஷப்ஸ் காலேஜுக்கு ஒருமாதம பயிற்சிக்காகப் போ' என்று பிஷப் அக்கடிதத்தில் எழுதியிருந்தார். படிப்பு எனக்கு அதிகப் பிரியமானதால் அதை மிக மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு, கல்கத்தா சென்று, அங்கு ஒரு மாதத்தில் இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும் வந்திருந்த முப்பது போதகர்களுடன் பழகினேன்.

கல்கத்தாவில் தங்கியிருந்த நாட்களில் நாகப்பூர் பிஷப் பட்பரு விலாசத்துக்கெழுதிய மூன்றும் கடிதத்தை எனது மனைவி பார்த்துவிட்டுக் கலங்கி அதை எனக்கனுப்பி 'ஆத்திரமாய் ஒன்றையும் செய்யவேண்டாம்' எனவும் குறிப்பிட்டிருந்தார். இந்தியாவிலுள்ள பல ஆங்கிலிக்கன் பிஷப்மாருக்கும முன்னமே நான் அறிமுகமானவன். எனையவர்களை இந்த ஒரு மாதத்தில் அங்கு கண்டு பழகினேன். வகுப்புகளை அவர்களே நடத்தினர். கேள்வி நேரத்திலே நறுக்கான கேள்விகேட்பதிலும், அவர்களுடைய சொற்பொழிவுகளில் விடப்பட்டவற்றை எடுத்துக்கூறுவதிலும் எனக்கதிக உற்சாகமிருந்தது. இரண்டொரு நாட்களில் அவர்கள் யாவருமே தங்கள் பிரசங்கத்தை முடித்தவுடன், 'இப்பொழுது நமது நண்பர் சகாயம் விட்டுப்போனதைச் சொல்வார்' என்பர். அந்நாட்களில் காட்டிலிருந்து வெளியேறினதாலுண்டான பட்டண வாழ்க்கை எனக்கொரு புதிய உற்சாகத்தையளித்தது.

ஒரு மாதத்திற்குப்பின் பட்டரு சென்ற மூட்டை, முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு ஜூன் மாதம் ஜபல்பூர் சென்றுசேர்ந்தோம்.

---

## ஜபல்பூர்

இது சாத்பூரா மலைத்தொடருக்கு வடபுறத்திலிருக்கும் பெரு நகர். அன்று இந்தியாவின் மையம் என்று எண்ணப்பட்டது. யுத்த தளவாடங்களைச் செய்யும் பற்பல ஆலைகள் அங்குண்டு. அவற்றைப் பத்திரப்படுத்தி வைக்கும் மருந்தறைகளும் பல. நாட்டின் பல பாகங்களிலுமிருந்து வந்து, பயிற்சிபெற்ற போர்ச் சேவகரும் அங்கு உண்டு, அவர்களில் கிறிஸ்தவர்களும் இருந்தனர். அவர்களுக்குரிய ஆராதனை தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். நூறு ஆண்டுகளுக்கு முன் ஆங்கில இராணுவத்திற்கு சமையற்காரராய்ச் சென்ற இந்துக்களான தென்னாட்டுத் தமிழர் பலர் தென்னிந்தியப் பேய்க்கோவில்களையும் வைத்து வழிபடுகின்றனர்.

C.M.S. சங்கம் நல்ல கட்டடங்களுடைய பதினாலு ஏக்கர் இடத்தைப் பட்டணத்தின் நடுவில் வைத்திருந்தது. டிசைப்பிள்ஸ் மிஷனைச் சேர்ந்த பல ஆலயங்களும், மெதடிஸ்ட் மிஷனைச் சேர்ந்த மூன்று சபைகளும் பட்டணத்திற்குள்ளேயே இருந்தன. தென் ஆசியாவின் மெதடிஸ்ட் எப்பிஸ்கோப்பல் சபையின் மறையியல் கல்லூரியும் அங்கேதான் இருக்கிறது. அதில் ஒரு நல்ல நூல்நிலையமும் உண்டு.

ஜபல்பூரில் நாங்கள் எங்கள் பிள்ளைகளை ஆங்காங்குள்ள பள்ளிகளில் சேர்த்தோம். ஆங்கிலோ இந்தியன் சபையும் அங்குண்டு. அதிலும் வேளாவேளைகளில் நான் உதவிசெய்தேன். வேலைகளை உடனடியாகத் தொடங்கி நடத்தமுயன்றோம். நாள்தோறும் காலை ஆராதனைக்கு நானும், கோயில்கூட்டியுமே கூடி யாவும் வாசித்துமுடிப்போம்! மிதிவண்டியிலேயே சபையைச் சந்தித்தேன். மாலை வேளைகளில் இருவருமாய் வீடுகளைச் சந்திப்போம்.

தமிழ்ச்சபை ஒன்றையும் அந்நாட்களில் நிறுவி ஒருவரை டீக்கனாக* அபிஷேகம் பெறச் செய்தோம். எனக்கு லெயோனாட் மறைபியல் கல்லூரிக்குச் சென்று சொற்பொழிவாற்றும் வாய்ப்பும் கிடைத்தது. டிசைப்பிள்ஸ் சபையும், மதடிஸ்ட் சபையும், இறையியல் கல்லூரியும், Y.M.C A.யும, தென்னிந்திய மக்களின் கூட்டுறவுச் சங்கமும (இது ஜாதிமத அடிப்படையில்லாத தமிழர் சங்கம) என்னைப் பயன்படுத்தின.

நர்சிங்பூர், இட்டார்ஸி, அர்தா போன்ற அயல் இடங்களுக்குச் சர்ப்பிளேனாகவும நியமிக்கப்பட்டபடியால், மாதமொருமுறை அவ்விடங்களுக்குச் சென்றேன். அர்தா அங்கிருந்து இருநூறு மைல்களுக்கப்பாலிருந்தது. ஜபல்பூரில் நாங்கள் தங்கியகாலம் வெறும் பத்து மாதம மட்டும. காட்டிலோ ஒன்பது வருடங்கள். ஆயினும் ஜபல்பூரில் குறுகிய காலத்தில் செய்த ஊழியமே அதிகம் என இன்று தோன்றுகிறது. இது ஏற்கனவே கூறப்பட்ட உளநூல் விதியின் இயல்பேயாம்.

அன்றொருநாள் தமிழ்நாட்டின் கடை கோடியிலிருந்தவர்கள் ஆகாய விமானத்தில் வந்து ஒருவாரப் பிரசங்கம் செய்துபோக என்னை அழைத்தனர். பிஷப்

---

*அரைப்பட்டம் பெறும் போதகர்களுக்குரிய பெயர். தென் திருவாங்கூரிலுள்ள டீக்கன் அல்ல.

புக்கு அதைத் தெரிவித்து அனுமதியளிக்க வேண்டிக் கொண்டேன். அவர் எழுதின பதில் சற்று வேடிக்கையாயிருந்தது. "உன்னால் கன்வென்ஷன் கூட்டங்களுக்கேற்ற பிரசங்கம் ஆயத்தப்படுத்த சொற்பகாட்களுக்குள் இயலுமா?" என்ற கேள்வியிலிருந்தே நான் பேர்வது அவருக்குப் பிரியமில்லையென்று அறிந்துகொண்டேன். தவிரவும் அத்தகையப் பிரசங்கத்தைச் செய்ய அவராலேயே கூடும் என்ற கருத்தும் தொனித்தது.

ஆங்லிக்கன் பிஷப்மாரும் தாம் விரும்பியபடி எச்சபைக்கும் போக இயலாது. சபைக்குருவின் அழைப்பின் பேரிலேயே செல்லுதல்வேண்டும். ஜபல்பூரின் ஆங்கிலச் சபைச் சாப்ளேன் அன்று பிஷப் தேர்தலுக்கு நின்றவர்களில் ஒருவர் ஆனதால் அவரும் தனது சபைக்கு இவரை அழைக்கவில்லை. அங்குள்ள ஒரு உயர்நிலைப்பள்ளி விழாவுக்கு இவர் தம்மை அழைக்கச்செய்து, 1949 அக்டோபர் நான்காம் தேதி தாம் ஜபல்பூருக்கு வருவதாக எனக்கொரு கார்டும் எழுதினார்.

அக்கடிதத்தை நான் பொருட்படுத்தத் தேவையிருக்கவில்லை. என்றாலும பிஷப்பாயிற்றே என்றெண்ணி அவரைச் சந்திக்கச் சென்றேன். தூரத்திலேயே அவர் என்னைக் கண்டதும உள்ளே போய்விட்டார். நானும் சிறிது காத்துநின்ற கதவைத் தட்டவே, புகைக்குழாய் இழுத்தவாறே, தீமை செய்ய விரும்பிய பார்வையுடன் வீடு அறையில் வந்து அமர்ந்தார். அவர் மனைவி. என்னைக் கண்டும், காணாததுபோல பக்கத்து அறைக்குள் நுழைந்தார். அது காலை எட்டரை மணி. உணவு அருந்தி முடித்தவேளை. குளிர்காலம். அவருக்கு வணக்கம் செய்தேன். ஆங்கிலப் பேச்சு தொடங்கிற்று.

பிஷப்: "நீர் ஏன் வந்தீர்?"

சகாயம்: "உமது கார்டைக் கண்டுதான் வந்தேன். மற்றப்படி உம்மைக் காணவேண்டிய தேவை எனக்கு ஒன்றுமில்லை".

புகை இழுத்தவண்ணமே எழுந்து அறைக்குள் சுற்றி, அங்குமிங்கும் நடந்துவந்து, பிலாத்துவைப்போல் மறு படியும் ஆசனத்திலமர்ந்தார். என்னை உட்காரச் சொல்லாதிருந்தும் நாற்காலி ஒன்றில் நான் அமர்ந் தேன்.

பிஷப்: "அண்மையில் நடந்த இடமாற்றத்தில் சார்ஜ் ஒப்புவித்த விவரம் எனக்கறிவியாத 'குரு நீர் ஒரு வரே."

[என் மனம் ஒரு துடிப்புத் துடித்தது. பட்டபரு வின் பொருட்கள் பணக்கணக்கு யாவுக்கும் விபரம் எழுதி, நானே 'டைப்' அடித்து மூன்று சுவடிகள் எடுத்து, சார்ஜ் எடுத்தவரும நானும அம்மூன்று பிரதி களிலும் கையொப்பமிட்டு, சாட்சியும் வைத்து ஒரு சுவடியை அங்கேயே வைக்கச்சொல்லி, ஒன்றை பிஷப் புக்கு அனுப்ப ஒழுங்குசெய்து, பிஷப் ஆலோசனையின் பேரில் கொண்டர் பாதிரியார் ஒருவரிடமே ஒப்புவித்து வந்தேன். அவரே அவ்வூரின் போஸ்ட் மாஸ்டர். நான் தபாலில் அனுப்புவதற்குப் பதில் அவரை அனுப் பச்சொல்லி வந்தேன். அவர் அனுப்பவில்லையென்பது மூன்று மாதத்திற்குப் பிறகு அன்றுதான் தெரியவந் தது.

பாக்கிஸ்தான் உருவாகி சிந்திகள் ஆயிரக்கணக் காய் அகதிகளாய் வந்துகொண்டிருந்த காலம் அது. அவர்களைத் தங்கவைக்கும முகாம்களை ஒழுங்குசெய்ய கலெக்டர்மார் கேட்கப்பட்டிருந்தனர். மண்ட்லா கலெக்டர் என்னிடம் வந்து, அழிந்துபோகவிருந்த பட்டபரு பங்களாவைத் தாங்கள் பழுதுபார்த்துக்கொள் வதாகவும், மாதம் இருநூறு ரூபாய் வாடகை தருவ தாகவும ஒப்புக்கொண்டு அனுமதி கோரினர். இதை நான் பிஷப்புக்கெழுதி அழிந்துபோகும் நிலைமையிலி ருக்கும் பல கட்டிடங்களை சர்க்காருக்குக் கொடுப்ப தால் அகதிகளுக்குதவியும, நமக்கு இலாபமுமாகும என்று யோசனைக் கூறியிருந்தேன்.

[இதைக்குறித்த விவரங்களைத் தமிழ்ப் பாதிரியார்களுக்கு அவருடைய ஒற்றர்கள் தெரியப்படுத்தினர். அவரும் பிஷப்புக்கு எழுதினார். என் ஆலோசனை மிக நல்ல தென்று பிஷப் மகிழ்ச்சியுடன் தெரிவித்தும், மூன்றும் நான் அதை மறுத்துத் தந்தியனுப்பினர். இந்நாட்களில் நான் கல்கத்தாவிலிருந்தேன்.]

சகாயம்: ஐயா, நான் நீர் சொன்னமுறையில் சார்ஜ் கொடுத்திருக்கிறேன். நகலை உமக்கனுப்பவும் ஒழுங்குசெய்திருந்தேன். என்னிடமிருக்கும் நகலை நான் இன்றே கொண்டு தருகிறேன்.

பிஷப்: அங்குள்ள இரும்புக் கட்டில்கள் எங்கே?

சகாயம்: எந்தக் கட்டில்கள்? இரும்புக் கட்டில்கள் இருபத்திநான்கு ஆஸ்பத்திரி கட்டிடத்திலேயே உண்டு. வேறுசில அங்கேயே உண்டு. சில விற்கப்பட்டன.

பிஷப்: இரும்புப் பெட்டிகள் எங்கே? (Iron Safe)

சகாயம்: மண்டலா பங்களாவில் ஒன்றும், பட்பரு பங்களாவில் ஒன்றும் இருக்கின்றன. வேறு இரண்டை விற்பனைசெய்தேன்

ஐயா, நீங்கள் இன்னும் பட்பரு போகவுமில்லை. அங்குள்ள காரியங்களை நேரடியாய்ப் பார்க்கவுமில்லை. பழைய குறிப்புகளைப் படிக்கவுமில்லை. என்னை முன்பின் அறியாத நீங்கள் சிறிதே பொறுத்திருக்கலாகாதா? நானும் இங்கேயேதானிருக்கிறேன். நீங்களும் புதிய பிஷப்பாக வந்திருக்கிறீர்கள். நாம் ஒருவரையொருவர் அறிவதற்குமுன் ஏன் வீண் ஆத்திரம் கொள்ளுகிறீர்கள்?

பிஷப்: உம்மை எனக்கு நன்றாகத் தெரியும்.

சகாயம்: எப்படித் தெரியும்?

பிஷப்: நீர் இந்த அத்தியட்சாதீனத்தின் பிஷப்பாக வர ஆசைப்பட்டீர் அல்லவா?

சகாயம்: அதில் என்ன தவறு இருக்கிறது? இப்பார ஆசைகொண்ட ஏழுபேரிலும், குறிப்பாக உம்மி லும் நான் எந்த விஷயத்திலும் கீழ்ப்பட்டவ னல்ல என்று எண்ணுகிறேன். உமது சாமிநே ஷன் பத்திரத்தில் ஒரு குருதானும் கையொப்பம் இடவில்லையே. எனக்கோ இரண்டுபேர் இருந் தார்களே.

பிஷப்: நான் வந்தது கடவுளாலே ஆனது.

சகாயம்: நீர் வெள்ளைக்காரர். மெட்ருப்போலிட்டன் உம் இனத்தார். ஆகையால் நீர் பிஷப்பானீர், கடவுள் உம்மைப் பிஷப் ஆக்கினால் நீர் இப்படி நடக்கமாட்டீர்.

பிஷப்: நீர் உமது வேலையை ராஜினமா செய்துவிட் டுப் போகலாமே.

சகாயம்: நானல்ல. இது என் நாடு. நான் இங்கே இல்லாவிட்டால் இந்நாட்டில் இன்னொரு பகுதி யிலேயே இருப்பேன். நீரோ உமது நாட்டுக்குப் போகவேண்டியது வரும். (1952 ல் அப்படியே ஆயிற்று) நீர் ஒரு விருந்தாளி என்பதை மறந்துபோ கலாகாது. உமக்கு என்னைப்பற்றி ஏதாகிலும் குற்றச்சாட்டு இருந்தால் அதைத் தகுந்த முறையில் கூறி, கோர்ட்டைக் கூட்டி, என்னை விசாரித்து, முறையே தண்டிக்க முயலாமல் ஏன் இந்த வீண் வழக்கு?

பிஷப்: ஆம். உம்மை டிஸ்மிஸ் செய்யவேண்டிய காலம் வரும்.

சகாயம்: நான் சென்றுவருகிறேன்; ஜெபம்பண்ணி அனுப்புங்கள்.

துன்மார்க்கன் போடும் வெளிச்சமும் பாவமே. நானும் வீடுதிரும்பி விவரங்களைத் தெரிவித்தேன். வரு வது வரட்டும் என்று எங்கள் வேலையைச் செய்து கொண்டேவந்தோம்.

மண்ட்லா மிஷனில் மிஷனரிமாருக்குரிய ஐந்து நல்ல பங்களாக்கள் இருந்தன. யாவிலும் ஏராளமான பணிமுட்டுகளுமிருந்தன. அங்கு தென்னிந்திய மிஷனரிகள் 1941ல் நாலுபேர் இருந்தார்கள். 1948ல் ஒருவராயினர். மண்ட்லா பட்டணத்தில் மட்டுமே இரண்டு மிஷன் பங்களாக்கள் இருந்தன. அவற்றில் ஒன்றைப் பணிமுட்டுகளை மாற்றியபின் வாடகைக்குக் கொடுத்திருந்தோம். 1947 க்குப்பின் தேவையில்லாத சாமான்களை விற்பனைசெய்ய நான் அதிகாரப்படுத்தப்பட்டிருந்தேன். அதற்கிசைய கணக்குகளில் மாதந்தோறும் ரூ. 200, 300 என்று வருவாய் காண்பித்துக்கொண்டிருந்தேன். தேக்கு மரத்தால் செய்த அழகிய சாமான்கள் பல மலிந்த விலைக்கே கொடுக்கப்பட்டன. தேக்கு மரம் நிறைந்த அந்தக் காட்டில் அக்காலக் கிரயம் கன அடிக்கு எட்டணாமுதல் இரண்டரை ரூபாய்வரையாகும். இந்த விற்பனைக்குரிய ஒழுங்குகள் ஒன்றையும புதிய பிஷப் அறிந்தாரில்லை. அறிய முயலவுமில்லை. அவர் சொல்வார் பேச்சிலே ஆட்சி நடத்த முயன்றவர்.

எப்படியும், 1949 அக்டோபர் மாதம்முதல் என்ன வருமோ என்றறியாத குருடனைப்போல் பயத்துடனும், நடுக்கத்துடனும ஒவ்வொருநாளும் என் கடமையைச் செய்துவந்தேன். ஜபல்பூர் சபை சண்டை சச்சரவு நிறைந்த சபை. தமிழ்நாட்டார் சிலர், சபைச் சொத்துக்காக வீண் வழக்குகளைத் தொடுப்பினும், அவர்கள் ஆலயம் தொழுவதை நிறுத்துவதில்லை. ஆனால் அங்கோ அப்படியல்ல. சபைக்கெதிராய் வழக்குத் தொடுத்தவர்கள் தேர்தல் அன்று மட்டுந்தான் ஆலயம் வருவார்கள்.

ஆங்லிக்கன் சபைக் குருக்களுக்கும் பின்பலம் மிகுதி. பாஸ்டரேட் கமிற்றிக்கு ஐந்துபேர் தெரிந்து கொள்ளப்படுவர். போதகர் ஆலோசனைப்படி வேறிருவரைப் பிஷப் 'கோ ஆப்ட்' செய்வார். கமிற்றிகளின்

தலைவருக்கு ஒரு ஓட்டும், சரிபாதியாயிருந்தால் மற்றொன்றும் (Casting Vote) உண்டு. நான் அங்கு சென்ற காலங்களில் மூன்றுபேர் போதகர் பக்கமும், இரண்டு பேர் எதிர்பக்கமும் இருந்தனர். அவர்களில் எதிர் பக்கத்தினர் கமிட்டிக் கூட்டங்களுக்கு மட்டும்தான் வருவார்கள். ஆகையால் தடையெதுவுமின்றிக் காரியங்கள் நடந்தன.

1950 ஜனுவரி இருபத்தெட்டில் எனது நாற்பத்தாறும் பிறந்தநாள் வந்தது. அதைச் சிறப்பாகக் கொண்டாட விரும்பி, அக்காலம் அங்கு நடந்த மறையியல் மகாநாட்டில் வந்த பல பெரியாரை அழைத்து ஒரு விருந்துசெய்தோம். ஜட்ஜ் செஞ்சையா, சக்கரைச் செட்டியார், டாக்டர் அப்பாசாமி (பிஷப்), எஸ். டபிள்யூ. சவரிமுத்து யாவரும் எனது முன்னாள் நண்பர்களே. ஐரோப்பியர் சிலரும், சபையின் தலைவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

ஜனுவரி முப்பதாம் தேதி பாஸ்ட்ரேட் கமிட்டித் தேர்வு நடந்தது. அம்முறை எதிர்கட்சியில் நாலு பேர் வந்துவிட்டனர். சபையோடு ஒத்துழைக்கும் ஒருவரே வெற்றிபெற்றார். இந்த விவரத்தை மறுநாளே பிஷப்புக்கெழுதியனுப்பினேன். 1950 பெப்ருவரி முதலாம் தேதி நாஷனல் கிறிஸ்டியன் கௌன்சிலின் மகாநாடு நாகப்பூரில் நடந்தது. அதிலும் நான் அங்கத்தினன். ஆகையால் அன்று காலை நாகப்பூர் சென்று சேர்ந்தேன்.

கூட்டம் தொடங்குமுன் அண்மையில் தங்கியிருந்த பிஷப்பைப் பார்க்கச் சென்றேன். அக்கூட்டத்துக்கு நான் சென்றது அவருக்குப் பிரியமல்ல. ஆயினும் அனுமதி தாராமலிருக்க அவர் விரும்பவில்லை. தேர்தல் முடிவு, தபாலில் அன்று பகலில்தான் அவருக்குக் கிடைக்கவிருந்தது. நான் என் கையில் ஒரு நகலை வைத்திருந்தேன். குளிர் மிகுந்த நாள் அது. காலை எட்டுமணிக்கு அவர் அறையின் வெளியே நின்றேன்.

கண்ணாடி ஜன்னல்வழி அவர் என்னைக் கண்டார். கதவைத் திறந்தார். உட்சென்ற நான் ஆசனத்திலமர்ந்து தேர்தல் முடிவைக் காண்பித்தேன்.

பிஷப்: இது யார்? இது யார்? இவர்கள் நல்லவர்களா?

சகாயம்: யாவரும் ஜபல்பூர் திருச்சபை அங்கத்தினர் தான். யார் நல்லவர், யார் கெட்டவர் என்பதைக் கடவுளே அறிவார்.

பிஷப்: இவர்களைக்கொண்டு சபையை நடத்த உம்மால் இயலுமா?

சகாயம்: நடத்தலாமென்று நம்புகிறேன்.

பிஷப்: எனக்கென்ன யோசனை கூறுகிறீர்?

சகாயம்: ஒன்றும் கூற விரும்பவில்லை.

பேச்சு முடிந்தது. நானும் கூட்டத்திற்குச் சென்றேன். பல பிரிவுகளாய்ப் பிரிந்து ஆலோசனை நடத்தினோம். பிஷப்பும் ஒரு குழுவில் இருந்தார்.

அன்று மாலை தேயிலை நேரம். ஒரே அறையில் நானும், சென்னையிலிருந்து வந்த இரண்டு நண்பர்களும் தங்கியிருந்தோம். ஒருவர் பிஷப் செல்லப்பா. (இந்த வரலாற்று நூலுக்கு முகவுரை எழுத ஒப்புக்கொண்டிருந்த இவர், புத்தகம் வெளியாவதற்குள் 1964 ல் மறைந்துவிட்டார்.) அன்று அவர் பிஷப்பாகவில்லை. மற்றவர் காலஞ்சென்ற பால் ராமசேஷன் ஐயர். இருவரும் நாகப்பூரின் புதிய பிஷப்பைக் குறித்து என்னை விசாரித்தனர். நான் விட்டுக்கொடுக்காமல் பதிலளித்தேன். பின் அவர்களே பற்பல கருத்துக்களைக் கூறினர். ஒருவர் "இவர் ஒரு புனிதர், அல்லது ஒரு இழிஞன் என்று நினைக்கிறேன்" என்றார். நான் 'ஆமென்' என்றேன்.

நாங்கள் யாவரும் தேநீர் அருந்திக்கொண்டிருந்தோம். பிஷப்பும் அக்கூட்டத்தில் உண்டு. அவரவருக்கு வேண்டியதை எடுத்து உண்ணும் முறையில்

விருந்து நடந்தது. நான் அவர் முகத்தைப் பார்க்க விரும்பாமல் ஒதுங்கி, ஒதுங்கி அமர்ந்தேன். அவரோ என்னைத் தொடருவதுபோலத் தோன்றிற்று. கடைசியாக அவர் அறைக்கு வெளியே சென்றார். கதவை அடைத்ததைக் கண்ட நான் கதவுப்பக்கம் நோக்கினேன். உடனே கதவைத் திறந்து என்னை வெளியே அழைத்தார். நானும் சென்றேன்.

பிஷப்: நான் உமக்கு நோட்டீஸ் கொடுக்கிறேன்.

சகாயம்: (இன்னதென்று திட்டமாய் விளங்காமலே) "சந்தோஷம்" என்றேன்.

பிஷப்: இதோ ஒரு கடிதம்.

சகாயம்: மிக்க நன்றி.

கடிதத்தை அறைக்குள் கொண்டுபோய்ப் படித்தேன்.

Dear Mr. Sahayam,

I have decided after much thought and prayer and after consultation with my Archdeacon to ask you to return to your old Diocese. I am giving you three months' notice of this transfer. .......Upon your leaving I shall be glad to give you a letter to the Bishop of your own diocese if you so desire, or to any other Bishop to whom you may decide to apply for work.

Yours sincerely,
Sd.

Feb. 1-1950.

அதிக ஜெபத்துக்கும், யோசனைக்கும்பின், எனது ஆர்ச்டீக்கன் ஆலோசனையுடன், நான் உம்மை உமது பழைய அத்தியட்சாதீனத்துக்குத் திரும்பிப்போகக் கேட்டுக்கொள்ள நிச்சயித்திருக்கிறேன். இந்த இட

மாற்றத்திற்கு மூன்று மாதத் தவணை தருகிறேன். ........நீர் போகையில், உமக்கு விருப்பமானால், உமது சொந்த அத்தியட்சாதீன பிஷப்பிற்கு அல்லது வேறெந்த பிஷப்பிடம் வேலை தேட நினைக்கிறீரோ அவருக்கு ஒரு எழுத்துத் தருவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பெப். 1–1950.

(கையொப்பம்)

பெப்ருவரி ஒன்றும் தேதி மாலை இக்கடிதம் கிடைத்தது. இரண்டாம் தேதி கமிற்றிக் கூட்டங்கள் முடிந்தன. என்ன செய்வதென எனக்கொன்றும் அப்பொழுது தோன்றவில்லை.

அன்று இராத்திரி இராஜாவுக்கு நித்திரை வரவில்லை. ஆகாஸ்வேரு அரசன் தூங்காத காரணம் என்ன? எஸ்தர் 6:1. கடவுளே அவனுக்கு நித்திரையை வரவிடவில்லை போலும். தன் உயிரை முன்னொரு நாள் காத்துத் தப்புவித்த மொர்தேகாய்க்கு யாதொன்றும் செய்யப்படாதபடியால் ஆகாஸ்வேருக்கு நித்திரை வரவில்லை.

எனக்கும் அன்றிரவு நித்திரை வரவில்லை. அறையில் தங்கிய இரு நண்பர்களும் கடிதத்தைப் பலமுறைப் படித்துவிட்டு "இது டிஸ்மிஸ் ஆர்டரா? ட்ருன்ஸ்பர் ஆர்டரா? இந்தப் பாதகனை பிஷப் ஆக்கவும் செய்தார்களே?" என்று கூறி அனுதாபங் காட்டினர். இருவரும் என்னையும், என் மனைவி வீட்டாரையும் நன்கறிந்தவர்கள். ராமசேஷன் ஐயர் சென்னை மெதடிஸ்ட் மிஷனில் முக்கியமானவர்களில் ஒருவர். எனது மாமனார் ஏசுவடியான் ஐயருடன் உழைத்தவர். செல்லப்பா என் பருவத்தவர். திறமை மிக்கவர். சில குணங்களில் என்னையொத்தவர். அவர்கள் இருவரும் எனக்காறுதல் சொல்லத் தேவைப்படவில்லை. நான் 'சகாயம் பிரசங்கியார்' அல்லவா? முசிப்பாற்றுங் கீதங்களை எழுதியவன் அல்லவா? அதில் ஒரு பாட்டைப் பாடமுயன்றேன். இராகமோ எழவில்லை.

காம்போதி

ஆதிதாளம்.

பல்லவி

நெஞ்சமே என் வினைச் சஞ்சலங்கொள்கின்றாய்த்
தஞ்சமிலாவிந்தத் தாரணி மீதினில்

அனுபல்லவி

அஞ்சேல் உனைவிடேன் நெஞ்சம் பதறாதே
என்றோதும் நின் தெய்வம் உன்முன்னிருக்கையில் —
நெஞ்

சரணங்கள்

துன்பப் பெருக்கிலே சோர்வேதும் அடையாதே
அன்பர் அறியாமல் யாதும் வரவிடார்
இன்பக் கானானுக்குள் இலைரேலை நடத்திடச்
செங்கடல் பிளந்தோன் என்றமுன் தோழரே — நெஞ்

2

எரியும் நெருப்புனை எப்பக்கம் சுற்றினும்
வெங்கிடாதே அதில் ஈசன் தோன்றவாரே
முட்செடிபோல் நீயும் பற்றியெரிகினும்
மோசமடைந்திடாய், சாமபலுமாகிடாய் — நெஞ்

இது, 1928ல் மெஞ்ஞானபுரத்தின் கீழ்ப்புறத்தில் அமைந்த தேரி மணலில் மாலை வேளைகளில் தனித்தியானம் செய்த ஒருநாளில் நான் எழுதிய பாட்டு அதை அன்றிரவு அங்கு கூடினவர்களுக்குப் பாடக் கற்றுக் கொடுத்தேன். எண்ணிறந்த மக்களை இது ஆற்றித் தேற்றித் தைரியப்படுத்த உதவிற்று. அன்றோ அதை இயற்றிய நான் அதைப் பாட முயல்கையில் எனது குரலானது எழவில்லை. கண்களில் நீர் பெருக்கெடுத்தது. இரவில் மற்ற நண்பர் இருவரும் அதே அறையில் அயர்ந்து நித்திரைசெய்கையில, கண்ணீரோடு கதறிய என் உள்ளத்தின் ஏக்கத்தை எவரும் அறிந்திலர். 'நீங்கள் விழித்திருக்கக்கூடாதா' என்ற . இயேசுநாத

சின் நெஞ்சமெனே கேள்வி ஒரு புதியமுறையில் அன்று என் மனதைப் பிரகாசிப்பித்தது. நான் விம்மி விம்மி அழுதேன். சிரோமணியை நினைக்கையில் என்னால் பொறுக்கக்கூடவில்லை. கள்ளமறியாத வெள்ளை நெஞ்சம், உலகமறியாத எளிய உள்ளம். இந்த அடியைத் தாங்குமோ என்றே அஞ்சினேன்.

நாங்கள் கலியாணஞ் செய்யுமுன்னேயே என்னை மணந்தால் இன்னல்கள் வருமென்று எச்சரித்திருந்தேன். 'சிலுவை எனக்குப் பழக்கம். உனக்கோ புதுமையாயிருக்குமே', என்று 1933 ம் வருடம் நான் கூறியதும், எழுதியதுமான சொற்கள் அவ்விரவில் உடனெடுத்து என் கண்கள்முன் ஆடின. வயது எனக்கு நாற்பத்தாறு. நாலு, எட்டு, பத்து, பன்னிரண்டு வயதான நாலு குழந்தைகள். சொந்த வீடு என்றொன்று இல்லை. பிறந்து வளர்ந்த ஊர் ஆயிரத்தி ஐந்நூறு மைல்களுக்கப்பால். பத்தொன்பதாவது வயதினின்றே ஒண்டியாய் வெளியேறினேன். எத்தனையோ இன்னல்களைச் சகித்தேன். சுவிசேஷத்துக்காய் வெகு பாடு பட்டேன். பொருள் சேர்க்கவும், ஒதுக்கிவைக்கவும் விரும்பாமல், அன்றுடக அப்பம அளித்தவர் அளித்துக்கொண்டேசெல்வார் என்று நம்பி, என் பணத்தைப் பிறருக்கென்றே செலவுசெய்தேன். இவற்றை நினைக்க நினைக்க என உள்ளம குமுறினது. நெஞ்சு உடைந்துவிடுமோ எனத் தோன்றிற்று. விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன். சங். 27:14.

அன்றிரவு நான் விழித்திருந்தேன். யாவும் நன்மைக்கே ஆண்டவர் செய்வார என்றேன். தாயை இழந்த என்னை அமமட்டும நடத்தினர். இருபது வயதில் பசியும பட்டினியுமாய் நாட்களைக் கடக்கச் செய்தார். ஆப்பிரிக்கா போகும் வழியில் பெரிய ஏமாற்றமடையச் செய்தவர்; சிவகாசியில் சத்துருக்களின் கைக்கு விலக்கி என் உயிரைக் காப்பாற்றியவர்; பல்லாயிரம் ரூபாய் தந்து படிக்கவைத்தவர்; எண்பத்

தைந்து நான் கடுநோயினின்று காப்பாற்றியவர்; I.M.S. மிஷனரி வேலையைக் கடைசி நேரத்தில் தடுத்தவர். இந்தமுறையும் என்னைக் கைவிடார் என்ற நம்பிக்கை தோன்றினும் அதைச் சகிக்க என்னால் இயலவில்லை.

---

# இன்னலில் மின்னல்

மக்கள் பல முறைகளில் கலக்கமுறுகின்றனர். இக்கலக்கத்திற்குக் காரணம் தாங்களே என்பதை அறிவதே முதற்கடமையாகும். இன்னல்களை ஆதாம் ஏவாள் பாவத்திற்கு இழுத்துச் செல்லுதல் எவருக்கும் பலன் அளிப்பதில்லை. அந்த ஆதாம் ஏவாள் நம் ஆதிப் பிதாக்கள் மட்டுமல்ல, நாமே என்பதை மறந்துபோதல் பயன் தராது. நமது குணங்களின் கோணல்கள், அவற்றை ஒப்புக்கொள்ள மனமற்றுப் பிறரைப் பழிசாட்டுதல், ஒத்துழைத்தோர் முடிவில் ஒருவரையொருவர் காட்டிக்கொடுத்தல், காரியம் முடிந்த பின் இணைப்புப் பிரிதல், சந்தேகமும் பயமும் மனச்சாட்சியின் வாயிலில் சுடரொளிப் பட்டயம்போல் விசிகிற்றல், குறையையகற்ற நாமே செய்யும் சுய முயற்சி, அம்முயற்சி அற்பமானதென்று கடவுளால் தள்ளப்படுதல், அவர் நியமித்த அநாதிகால விமோசனப் பாதை, இவை யாவும் அன்றும், இன்றும், என்றும் மானிட வாழ்க்கையில் நாம் காணும் உண்மைகளாக ஏதேனைப் படம் பிடித்துக் காட்டும் முறையில் விளக்கம்பெற்று நிற்கின்றன. நன்மை செய்தால் மேன்மையில்லையோ என்னும் கேள்வி எக்காலத்திலும் கேட்கப்படவேண்டியதே. செய்யாவிடில் பாவம் கடிநாய்போல் வாசற்படியில் படுத்திருந்து, குறித்த காலத்தில் குற்றவாளியைத் தொடர்ந்து பிடித்து, முடிவில் கூலியாகிய மரணதண்டனையும் கொடுத்தே தீரும். ரோமர் 6: 23.

எனினும் எல்லா இன்னல்களும் தன் சுய பாவத்தினால் வருவதுமல்ல. இதை நாம் நன்கறிதல் வேண்டும். சிலர், நோய் குணமாக்குதலைக்குறித்த பொய்யுபதேசமொன்றை இந்நாட்களில் பரப்பிவருகின்றனர். கடவுள் எல்லாம் வல்ல இறைவன். ஆகையால் நோயைக் குணமாக்க அவரால் கூடும். அன்பு நிறைந்தவர், விசுவாசிக்கிறவர்களுக்கு உதவிசெய்ய மனமும் உள்ளவர். சித்தமுண்டு சுத்தமாகு என்று குஷ்டரோகிக்குக் கூறினாரல்லவா? ஆகையால் நோய் சுகமாகாவிட்டால் அவிசுவாசமே அதற்குக் காரணம் எனப்போதித்து அலைகின்றனர். இது வேதம் நமக்குப் போதிக்கும் உண்மையல்ல. வேதப்புரட்டரின் அறியாமை, அல்லது துர்க்குணம் இவற்றின் கூற்றேயாகும்.

பாவம் செய்யாதிருந்தும் கர்ப்பத்திலிருந்த ஒரு குருடனைக்குறித்து பரி. யோவான் 9-ம் அதிகாரத்தில் படிக்கிறோம. அவன் கதையை உற்று ஆராய்கையில் ஆண்டவர் நமக்கருளும ஆழமான சில போதனைகள் உள. அவையாவன:

1. அவன் குருடனாய்ப் பிறந்ததற்கும், அதற்கு முன் அவனோ, அவன் முன்னோரோ நடந்துகொண்ட வாழ்க்கைக்கும் இடையில் யாதொரு தொடர்பும் இல்லை. வ. 3. பிறப்பால் அவனும் பாவியே; அவனது பெற்றோரும பாவிகளே. ஆனால் பாவத்திற்கும் (இவ்வரலாற்றில், குருடனாய்ப் பிறப்பதற்கும் தொடர்பு எதுவும இல்லை. இவ்வாறே, சீலோவாம் கோபுரம் இடிந்து விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றது, அவர்கள் செய்த பாவத்தால் அல்ல. லூக். 13: 4. பாவம் செய்வதற்கும, நோய் துன்பத்திற்குமிடையில் ஒருகாலும் ஒரு தொடர்புமேயில்லை என்பது இதின் கருத்துமல்ல. இந்தக் காரியத்தில் மட்டும் அவற்றைச் சேர்க்க முயல்தல் பயன் தாராது என்பதே ஆண்டவர் சொன்னதின் கருத்து. எவ்வாறெனில், நாய்களுக்கெல்லாம் நான்கு கால்கள் உண்டு; ஒரு மேசையைச்

சுட்டிக்காட்டி இதற்கும் நாலு கால்கள்; ஆகையால் இதுவும் ஒரு நாய் என்பது நியாயமாகாது. அவ்வாறே பாவம் இன்னலைப் பிறப்பிக்கும். எனினும் எல்லாத் துன்பங்களும் பாவத்தினாலானவை அல்ல. இயேசுநாதரின் சிலுவைப்பாடுகளின் நடுவில், நாமோ பாவஞ்செய்து ஏற்ற தண்டனையை அடைகிறோம், இவரோ தீமையானதொன்றையும் நடப்பிக்கவில்லையே என்ற திருடனின் சாட்சியின் பெரிய உண்மையை நாம் மறந்து போவதேன்?

2. சீஷர்கள் கேட்ட கேள்வி பயனற்றது என்பதே ஆண்டவர் கூறின விளக்கம். அறிவின் அடையாளம் ஏற்ற கேள்விகளைக் கேட்கப்படித்தலே. 'அம்மா நாற்காலிக்குக் கால்களிருந்தும் அது ஏன் நடக்கவில்லை, என்ற குழந்தையின் கேள்விக்குப் பதில் சொல்ல எவராலாகும்? இவ்வாறே சீடர்கள் கேள்வியும் என்க. இயேசுநாதரோ, இக்குருடன் காரியத்தில் ஏற்ற கேள்வியைக் கேட்கக் கற்பித்து, "இவனது அக்கால நிலைமைக்கும், அதற்கு முந்தின காலத்திற்கும் தொடர்பென்ன" என்றல்ல, "இதுவே இவன் முடிவா, அல்லது இவனது நிர்ப்பந்த நிலைமைக்கு ஏற்ற ஏதேனும் உட்கருத்தோ, அதை மேற்கொள்ளும் போக்கு வழியோ உண்டா" என்று கேட்கச்செய்து, அதற்கு விடையாக, "இது முடிவல்ல; இதில் தேவகாபம் விளங்கும் மீட்பின் கிரியை துவக்கப்படும்" எனக்கூறி, அக்கிரியையை நடப்பித்தார்.

தாம செய்யப்போகும் கிலவாமான மனுக்குல ஈடேற்றத்திற்கு இக்குருடனை எடுத்துக்காட்டாக ஆக்க விரும்பி, அறிவீனம் நிறைந்த மனதிற்கு அறிவூட்டும ஒளி அவரே (வச. 5) எனக்கூறி, களிம்பைக் கண்ணில் பூசிக் கழுவச்செய்து, குணமாக்கினபின் அவனைப் பிறரின் சந்தேகத்திற்கும, பிரச்சனைகளுக்கும் (வச. 8, 9, ஆளாக்கினர். தேவ ஆவியைப் பெற்றவர்களை, அன்று மதுபான வெறிகொண்டவர்கள் எனப் பழித்தவண்ணம (அப். 2: 15) இன்றும் ஆண்டவரை ருசித்த மக்கள்

பிறருக்கு இடறலாயிருந்து வருவதை நாம் பலரும் கண்டுவருகிறோமே.

3. அவனைப் பரிசேயரிடத்தில் கொண்டுபோனார்கள் (வா. 13). யாருமே சட்டைசெய்யாத குருடன் பெரியோர் கவனத்திற்கு இப்பொழுது ஆளாகிறான். தலைவர்கள் முன் நிறுத்தப்பட்டு விசாரிக்கப்படுகையில் அவன் அவர்கள் நடுவிலும பிளவு ஏற்படுத்தும் ஊழியன் ஆகிறான். இயேசுவைப் பாவி என்று அவர்கள் தீர்த்து விடவே, 'அல்ல' என்று இவன் வாதாடினான் (வா. 16). ஆகையால் இவன் கூற்றை ஏற்றோர் சிலர் எழுந்தபடியால் அங்கு பிரிவினை உருவாயிற்று.

அடுத்தபடியாக "பாவியல்ல என்றால் இயேசு யார் என்று நினைக்கிறாய்" என்று இவனைக் கேட்கவே, அவரைத் தீர்க்கதரிசி என்கிறான். வ. 7. (அவன் அறிவும் விசுவாசமும வளருவதைக் கவனிக்கவும்). அதன்பின் பெற்றோர்முன் விசாரணை நடக்கிறது. முடிவொன்றுங் காணாது மறுபடி இவனிடம் வினவ, இவன் ஒருபடி வளர்ந்து வ. 27 "அவர் என் குரு, நான் அவர் சீடன்" என்றும், தனது மதிப்புக்குரிய பெரியார் என்றும், ஆசான் என்றும், மெய்வழி காட்டும் போதகர் அவரே என்றும் சாட்சி பகர்ந்தான்.

4. எதிரிகள் மோசேயுடன் இயேசுவை ஒப்பிடமுயலவே, இந்தப் பிரசங்கியோ அவர்கள் வாயை அடைத்துப், அவரைத் "தேவபக்தியுள்ளவர், கடவுள் சித்தத்தைத் தலைமேலேற்றுச் செய்துமுடிப்பவர்; கடவுளிடமிருந்தே வந்தவர்" வா. 31, 32 எனச் சரமாரியாய் விடை பகருகிறான்.

5. யூதர் அவனைச் சபைக்குப் புறம்பாக்கிவிட்டனர். வ. 34. விசுவாசத்தினிமித்தம் பாடுபட்ட இந்த வீரனைச் சந்திக்க, இயேசுநாதர் மறுபடியும் நெருங்கி, தமது சுய உருவத்தை அவனுக்கு வெளிப்படுத்த எண்ணி, தாமே தேவனுடைய குமாரன் என்று காட்

டும் முறை ஆச்சரியமானதன்றோ! வ. 35, 37. முடி
வில் அவன் ஆண்டவரே எனக்கூறி அவரைப் பணிந்து
கொண்டான். வ. 38.

பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளுகிறவர் எளியவர்களை உயர்த்தும் முறைக்கு இவனை ஏற்ற ஒரு பொருட்பாடமாக்கி, பெருமைக்காரர் (யாவும் அறிவோம் என்று நினைத்து இறுமாப்புப் பிடித்தவர்கள்) உண்மையில் ஒன்றுமறியாத குருடர்களாய் நிலைத்திருக்கவும், ஒன்றும காண இயலாத பிறவிக்குருடர்—தாழ்மையுற்றோர்—இயேசுவை உள்ளபடிக் கண்டு, மகிழ்ந்து, உழைத்துப் பாடுபட்டு விசுவாச வளர்ச்சிபெற்ற வீரராகவும் மாறச் சித்தங்கொண்டார்.

மின்னல் ஒளி தோன்றாத இன்னல் இவ்வுலகிலில்லை. காரணமெதுவுமில்லாமல் பற்றி எறியும் முட்செடியைச் சற்றும் வெந்துபோகாதிருக்கச் செய்வது, அதற்குள்ளிருந்து உனக்குத் தமது காட்சியை அளித்து, உனது பாதரட்சையைக் கழற்றி எறியச் செய்தபின், தமது தூதை நீ கேட்கச் செய்யவும், பெற்ற கட்டளையை நிறைவேற்றும் வலிமையை உனக்களித்து, ஆடு மேய்த்த உன்னை மக்களை நடத்தும் நாயகனாய் மாற்றி அமைக்க, மிகுந்த ஆவலோடு காத்துக்கொண்டிருக்கும உன்னத அன்பரின் பிரசன்னம ஒன்றேயாகும். யாத். 3: 1–10. ஆகையால என் ஆத்துமாவே! நீ ஏன் எனக்குள் கலங்குகிறாய்? எல்லாம் இருள் போற்றோன்றிலும, முகாந்தரமின்றி நீ பகைக்கப்படினும், இவனே பாவியென்றுன்னைத் தீர்ப்பினும், அகற்றும அகற்றும் என்று கூச்சலிடினும், அன்னியர் முன்னிழுத்துச் சென்றுன்னைச் சோதிப்பினும், உனது தூய வாழ்க்கையினிமித்தம் உனக்கெதிர் நிற்கவியலாமையால் உன்னை ஊருக்குப் (கமிற்றிகளுக்கு) புறம்பாக்கினும், பிறர் அகக்கண்களைத் திறக்கும்பொருட்டு (அப். 26: 18) உனது புறக்கண்களையே சிலகாலங் குருடாக்கிவைத்து, (அப். 9: 8) தம்மை உனக்குள் வெளிப்படுத்தி, (கலா. 1: 15) தமக்குள்ளே

ஊழியனுக்கிறவரின் அழகிய அருளின் பெருக்கத்தை நன்றியுடன் மனமுருக நினைந்து, அவர் பாதம் பணிந்து மகிழ நீ தயங்குவானேன்?

(இது 1960 அக்டோபர் மாதத் 'தேசோபகாரி' யில் வெளிவந்தது.)

---

# யோசேப்பை அறியாத பார்வோன் II.

நாகப்பூரில் N.C.C. கூட்டங்கள் யாவும் முடிந்த பின்னரே நான் திரும்பினேன். ஒரு உபகுழுவுக்குச் செயலாளராக நான் நியமிக்கப்பட்டு குறிப்பெழுதியிருந்தேன். அதை நன்றாய் எழுத என்னால் அன்று கூடவில்லை. முன் ஒழுங்கின்படியே பெப்ருவரி மூன்றில் இட்டார்சி என்னுமிடத்தில் ஒரு நற்கருணை ஆராதனை நடத்த இரா முழுவதும் ரெயில் பிரயாணஞ்செய்து, அங்கு சென்று அந்த ஆராதனையையும் நடத்தினேன். அந்த ஆங்கிலோ—இந்தியன் சபைக்கு அன்றைய என் நிலைமையைக்கூறிச் சிலுவையின் தாற்பரியத்தை விளக்கினேன். அநியாயத்தைச் சகிப்பதைப்பற்றிய ஒரு கருத்தை வலுவாய்க்கூறிவிட்டு, காலை பத்து மணிக்குப் புறப்பட்டு, பிற்பகல் மூன்றுமணிக்கு ஜபல்பூர் சென்றுசேர்ந்தேன்.

நேரே வீட்டுக்குப்போய் விவரத்தைச் சொல்ல எனக்குச் சற்றுத் தயக்கம் ஏற்பட்டது. என் மனைவிக்கு இதைக் கூறுகையில் பிறரும் இருந்தால் நல்லது என்று எண்ணி, நேராக அவ்வூரில் எனது நண்பரான கானன் ஜான்சன் என்ற சாப்ளேன் வீட்டுக்குச் சென்று, அவருக்குக் காரியங்களைச் சொன்னேன்.

“மாபாவி சொன்னதைச் செய்துவிட்டானே” என்றார் அந்தப் பாதிரியார். அவர் அன்று கலியாணம் செய்யாதவர். பிஷப் தேர்தலில் தோல்வியுற்றவர். ஐமபது வயதானவர். ‘அடுத்த குறி நீர்தான்’ என்று அன்று நான் அவரை எச்சரித்தேன். (சில மாதங்களுக்குள் அப்படியே ஆயிற்று.) பின், ஒருவரையொருவர் தேற்றினோம.

அவரது மோட்டாரிலேயே இருவருமாய் எங்கள் வீடு சென்றோம் ஒன்றுமறியாத மனைவி புன்னகையுடன் வரவேற்க, பிள்ளைகள் நால்வரும் “க்யா லாயா, க்யா லாயா” எனக் கூறிச் சூழ்ந்தனர். அக்காலம அவர்களுக்குத் தமிழே தெரியாது. ‘என்ன கொண்டு வந்தீர்கள்’ என்பதே அதன் பொருள். பிஷப் கொடுத்த இனும் கொண்டுவந்த நான், அவர்களை அப்புறப் படுத்தவே, படிப்படியாய் என் நண்பர் காரியத்தை விளக்குமுயன்றார் தான் கடிதத்தையும் காட்டினேன். என் நண்பர் “கவலைப்படவேண்டாம மிஸிஸ். சகாயம், கடவுள் நடத்துவார்.” என்று பல ஆறுதல் மொழிகளைக் கூறிச்சென்றார்.

ஓயாத அழுகையும், கண்ணீரும் எங்கள் பங்காயிற்று. நண்பர் பலருக்கு இச்செய்தி நம்புவதற்குரியதாயில்லை. அவர் கடிதத்தின் விந்தை யாதெனில், அதைப் படிப்பவர்கள் அதை ஒரே வேளையில் டிஸ்மிஸ் ஆர்டராகவும, ட்ரான்ஸ்பர் ஆர்டராகவும கருதக்கூடியதே. இடமாற்றமென்றால் எந்த ஊருக்கு என்று குறிப்பிடவில்லை. எனது சொந்த அத்தியட்சாதீனம் எதுவென்று காட்டப்படவில்லை. நான் பிறந்து வளர்ந்தது தென் திருவிதாங்கூரின் லண்டன் மிஷன் சபை. திடப்படுத்தல் பெற்றது திருநெல்வேலியின் C.M.S. சபை. நெல்லையை விட்டபின் வேலைபார்த்தது ஒரு அத்தியட்சாதீனத்திற்கும் சொந்தமல்லாத N.M.S. போதகாபிஷேகப் பயிற்சியும், அபிஷேகமும தோர்ணக் கல்லில். என்னை நாகப்பூருக்கனுப்பிய கமிட்டி அங்கத்தினர் நெல்லை, வடதிருவாங்கூர், சென்னை, தோர்

ணைக்கல் ஆகிய ஆங்லிக்கன் திருமண்டலங்களின் அத்தியட்சர்மார். ஆகவே எனது சொந்த டயோசிஸ் நாகப்பூர்தான்.

இந்தச் சிக்கலைத் தீர்க்க நான் தோர்ணக்கல்லுக்கும், சென்னை, டெல்லி அத்தியட்சர்மாருக்கும் எழுதினேன். அவர்கள் யாவரும் ஒன்றுபோல, "உமக்கு வேலைதர இயலும். ஆனால் நீர் எங்கள் ஆதீனத்துப் போதகரல்ல" என்று எழுதினார்கள். இக்கடிதங்களைப் பெறுவதற்குள் நாட்கள் சில சென்றன.

## சிற்சில கடிதங்கள்

நாகப்பூர் பிஷப்புக்கும் ஒரு கடிதம் அனுப்பினேன். அதில் "நான் நாகப்பூருக்குச் சொந்தமான குருதான். எனக்கு வேலைதேடித்தருவது நாகப்பூர் பிஷப்பின் பொறுப்பே" என்று யாவற்றையும் தெளிவாய் எழுதினேன். அக்கடிதத்தைக் கண்ட பிஷப், மார்ச் இருபதாம் தேதி அனுப்பிய பதில் அதிக விந்தையாயிருந்தது. "நாகப்பூரில், பெப்ருவரி முதலாம்தேதி நான் நேரடியாக உமது கையில் கொடுத்த கடிதத்தைப் பெற்றுக்கொண்டதை இப்பொழுதுதான் நீர் ஒப்புக்கொண்டிருக்கிறீர். அக்கடிதத்தின் தீர்மானத்தை நான் மாற்றவே முடியாது*. தோர்ணக்கல்தான் உமது டயோசிஸ். உமது எதிர்கால ஆதரவு நிதியை(Provident Fund) அங்குதான் நாங்கள் அனுப்புகிறோம். மத்திய திருவாங்கூர் பிஷப் ஜேக்கப் என் வேண்டுகோளுக்கி

*மிகுந்த ஜெபத்துடனும், யோசனையுடனும், ஆர்ச்டீக்கனோடு கலந்தபின்னும் எழுதியதல்லவா!

ணங்க உமக்கு ஒரு வேலை தந்திருக்கிறார் என்பதை நான் ஞாபகப்படுத்துகிறேன்†.

ஏப்ரில் மாதத்திற்குப் பின்னால் உமக்கு இங்கே வேலையில்லை என்பதை ஊர்ஜிதப்படுத்தவே இக்கடிதம் எழுதுகிறேன். நீர் கடந்த மூன்று வருடமாய் 'லீவ்' எடாதபடியால் உமக்கு ரூ. 600 தர ஒழுங்குசெய்கிறேன். ஏப்ரில் முடியுமுன் நீர் இடத்தை விட்டுவிட்டால் மட்டுந்தான் அதைத் தருவேன். நீர் உமது குடும்பத்துடன் போய்ச் சேரவேண்டிய இடத்துக்குப் பிரயாணச் செலவும் தர ஒழுங்குசெய்கிறேன். வீட்டைக் காலிசெய்து சாவியைக் கொடுத்தபின்தான் இதைத் தருவேன்.

யாவற்றையும் கவனித்தால் உமக்களிக்கப்படும் இவ்வுதவி மிகுந்த தாராளமானது என்பதை நீரே அறிவீர் என்றும் நம்புகிறேன். தென்னிந்தியாவில் உமக்கு வேலைகிடைக்க நீர் எடுக்கும் முயற்சிகளில் என்னால் இயன்றவரையில் நானும் உதவிசெய்வேன்."

(கையொப்பம்)

மேற்கண்ட கடிதத்தின் தொடக்கத்தில், ஜேக்கப் பிஷப் இவரது சிபார்சையில் எனக்கு வேலைதர வாக்குப் பண்ணியிருப்பதாகவும், கடிதத்தின் முடிவில் அவரும் என்னுடன் சேர்ந்து வேலைதேட முயல்வதாகவும் எழுதுவது, தூரத்தும் நாய்களோடும் தப்பியோடும் முயலோடும் சேர்ந்து ஓடுவது போன்றதன்றோ? இனி பிஷப் ஜேக்கப் அவர்கள் எழுதிய இரு கடிதங்களையும் படிப்போம்.

---

†இது உண்மையல்ல. இயேசுநாதரைக் கொலை செய்யத் திட்டமிட்ட யூதத் தலைவர் அதற்கெனச் சாட்சிகளைத் தேடிக் குற்றப்பத்திரத்தை ஆயத்தமாக்கிய அதே முறைதான் அன்று எனக்கும் கையாடப்பட்டிருந்தது.

கோட்டையம், 15-3-1950.

"அண்மையில் பிஷப் சிங்கற் உம்மைப்பற்றி என்னிடம் சொன்னார். இங்கு 1951 ஏப்ரில் முதல் ஒரு வேளை ஒரு தமிழ்ச் சபைக்கு ஆள் தேவையிருக்கலாம். இந்த வருஷத்துக்குள் நாம சந்தித்துப் பேசி, இருதிறத்தாருக்கும் திருப்தியாயிருந்தால் உமக்கு வேலை கொடுப்பதைக் குறித்து யோசிக்கலாம் என்று நான் அவருக்குச் சொன்னேன். அதற்குமுன் உமக்குத் திட்டமான வாக்குத்தா என்னல் எப்படிக்கூடும்?"

சி. கே. ஜேக்கப் (பிஷப்).

இவர் மார்ச் பதினேழில் எழுதிய வேருெரு கடிதமும் வந்தது. அதில்,

"உமது வயது. எத்தனை வருட ஊழியம். பட்டம் பெற்ற தேதி. விவாகமானதா இல்லையா? மனைவி கல்வியறிவுபெற்றுப் பட்டம் பெற்றவரா? வேதசாஸ்திரம் கற்ற இடம், இப்பொழுது வாங்கும் சம்பளம். C.S.I. யில் சேர விருப்பமா." என்பவை கேட்கப்பட்டிருந்தன. இதுவே அவரது கடைசிக் கடிதம்.

அவர் 1928 முதலே என்னை அறிந்தவர். பிரசங்கியாய் அவருடைய வீட்டில் நான்கு நாட்கள் தங்கியிருந்திருக்கிறேன். 1938 ல் என். எம். எஸ். செக்ரட்டரியாக ஒருவாரம் அவர் வீட்டிலேயே தங்கி அவர் செய்த ஒழுங்கில் சபைகளைச் சந்தித்துமிருக்கிறேன். 1945 ல் அவருடைய பிஷப் அபிஷேக ஆராதனையில் (சென்னையில்) அவர் தலைமேல் கைவைத்தவர்களில் நானும் ஒருவன்.

இந்தியாவில் ஏறக்குறைய எல்லா பிஷப்மாருக்கும் வேலைக்காக நான் எழுதி முடித்து நாடோறும பதிலுக்காய்க் காத்திருந்தேன். அவர்களில் சிலருடைய கடிதங்கள் மிகக் கவனிக்கப்படத்தக்கவை. அவர்கள் எல்லோரிடமிருந்தும் எனக்கு வந்த முதற் கடிதங்கள் நம்பிக்கைக்குரிய முறையிலேயே இருந்தன. ஆனல்

பின்னுல் வந்த கடிதங்கள் முற்றும் விபரீதமாயிருந்தன. அதற்குக் காரணம் இக்கடிதங்களின் இடையே அவர்களுடன் நாகப்பூர் பிஷப் கலந்துகொண்டதே என நான் யூகித்துக்கொண்டேன்.

மெட்ருப்போலித்தன், கல்கத்தா,
C.I.P.B.C. (ஆங்லிக்கன்). பெப். 14-1950.

"வங்க மொழி உமக்குத் தெரியர்ததால் இங்கு உமக்கு இடமில்லை. ஆனுல் தெலுங்கு நாட்டில் நந்தியால் வட்டத்தில் நாற்பதினுயிரம் கிறிஸ்தவர்கள் மத்தியில் போகவிருப்பமா? அங்கு எங்களுக்குக் குருக்கள் மிகக் குறைவு."

ஜார்ஜ், கல்கத்தா.

"தெலுங்கு மொழி எனக்குத் தெரியும். ஆகையால் விருப்பம்தான்" என்று பதில் எழுதினேன். அதற்கு அவர் கொடுத்த பதில்:

மார்ச் 27-1950, கல்கத்தா.

"மார்ச் இருபத்திநான்காம் தேதி நீர் அனுப்பிய கடிதத்தைக் குறிதது உமக்கு நந்தியால் வட்டத்தில் எந்தவேலையும் தரக்கூடாமலிருப்பதைக் குறித்து வருந்துகிறேன். அங்குள்ள நிலவரம் ஊழியர்களை அதிகரிக்கச்செய்யத் தற்காலம் இடம் தருகிறதில்லை."

ஜார்ஜ், கல்கத்தா.

கல்கத்தாவில், 1949 ல் ஒருமாதகாலம் நான் பயிற்சிக்காகச் சென்ற நாட்களில் இவர் எங்களுக்கு வகுப்புகள் எடுத்ததால் என்னை நன்கறிந்திருந்தார்.

இந்நிலையில் "C S.I.யைச் சேர்ந்த மெடக் ஆதீன பிஷப் உயிட்டேகர் (Whitaker) உமக்கு வேலை தந்திருப்பதாக அறிந்து தான் மகிழ்ச்சியடைகிறேன்" என்று நாகப்பூர் பிஷப் மீண்டும் ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதைப்பற்றி ஒன்றுமே எனக்குத் தெரி

[illegible] 14, [illegible]

ஷமாக நான் அப்படிச் செய்துவருகிறேன்.* இந்த அத்தியட்சாதீனத்தை விட்டு அவர் (சகாயம்) போய் விடவேண்டுமென்ற எனது முடிவு மிகுந்த ஜெபத்துக்குப்பின்செய்த ஒன்று. எனது ஆர்ச் டீக்கனும் இக் காரியத்தில் என்னுடன் ஒத்துக்கொண்டிருக்கிறார்."

கையொப்பம்

ஏப்ரில் மாதத்தில் நாங்கள் ஜபல்பூரைவிட்டு வெளியேறவேண்டியிருந்தது. அதுவரையிலும் வேலைக்குரிய யாதொரு வாசலும் திறக்கப்படவில்லை.

## முடிவுபரியந்தம் உண்மை

கொலைத் தீர்ப்பிடப்பட்ட ஒரு கைதி மரணவேளைக்காய்க் காத்துக்கொண்டிருக்கையில் உண்ணவும் உடுக்கவும் கவலைப்படமாட்டான். நானோ என் கடமைகளைச் செய்துகொண்டே வந்தேன். ஜபல்பூரில் நாங்கள் உழைத்த காலம் வெறும் பத்து மாதங்கள் மட்டுமே. அதற்குள் அங்கு தொடங்கிய பற்பல புதிய வேலைகளில் ஒன்று வீட்டு ஜெபக்கூட்டங்கள் நிறுவப்பட்டதே. இப்பழக்கம அங்கு அதற்குமுன் இருந்ததில்லை. மக்கள் அதை விரும்பினர். வியாழன் இரவுதோறும் முன்னறிவிப்பின்படி, ஒரு வீட்டில் இக்கூட்டம் நடத்தப்பட்டது. அவற்றில் பொதுச் சபையாருக்கு ஜெபிக்கவும் எதாகிலும் பேசிப் பழகவும் வாய்ப்புகள் கிடைத்தன. மார்ச் மாதத்தில் ஒரு வியாழன் இரவுக் கூட்டத்தில் நான் பிரசங்கம் செய்துகொண்டே நிற்கையில்

---

*அவர் பிஷப்பாகவந்து ஒராண்டாகிறது. எனக்கு 'ட்ரூன்ஸ்பர்' ஆர்டர் கொடுத்து அப்பொழுது மூன்று மாதங்கூட ஆகவில்லை.

என் மனதில் ஒரு புதிய வெளிச்சம் வீசிற்று. "அதி!" என்ற சத்தம் மனதுள் எழுவே கீழ்ப்படிக்க நான் கூறின வார்த்தைகளாவன:

"இங்கே இருபதுபேர் கூடியிருக்கிறீர்கள். எனக்கு வேலையில்லாமல் போயிற்று என்பது உங்களுக்குத் தெரியும். ஆயினும் இது நன்மைக்கேயென்று நான் நம்புகிறேன். இது கடவுளின் ஏற்பாடுதான். வேறு எங்கோ அதிகப் பயன் தரும் ஊழியத்தைச் செய்ய அவர் என்னை இங்கிருந்து கொண்டுபோகிறார். என் மனக்கண்முன் ஒரு பெரிய கோயிலைக் காண்கிறேன். அது மிகப் பெரிய சபை. இரண்டாயிரம்பேர் ஒரே நேரத்தில் அதின் ஞாயிறு ஆராதனைகளில் வந்து போவார்கள். ஆண்டவர் அச்சபைக்கே என்னைக் கொண்டுபோகிறார்" என்று நாகர்கோவில் ஆலயத்தைப்பற்றிச் சொல்லி முடித்தேன். இது 1950 மார்ச் மாதம்.

கூட்டம் முடியவே என் மனைவி "இதென்ன உங்களுக்குப் பைத்தியமா?" என்று கேட்டனர். நாகர்கோவில் நிலவரத்தைப்பற்றி நான் ஒன்றுமறிந்திராத அந்நாட்களில் இப்படித் தைரியமாய்க் கூறக் காரணம் என்னவென்பதை இயற்கை அறிவுமட்டும் படைத்தவர்கள் அறியார். என்னை அறியாத சபைத்தலைவர்கள் (பிஷப்மார்கள்) அன்று இந்தியாவிலேயே இருந்ததில்லை. யாவருக்கும் நான் வேலைக்காக எழுதியுமிருந்தேன்.

நாகப்பூர் பிஷப் எனக்கு இடமாற்ற உத்தரவு கொடுத்தபோது தருவதாக ஒப்புக்கொண்ட சிபார்சைக் கடிதத்தைத் தரவேயில்லை. அதைக்குறித்து நான் எழுதிக்கேட்டபோதெல்லாம அவர், "உமக்கு வேலை தர முன்வருபவர்களை எனக்குத் தெரியப்படுத்தவும்" என்று எழுதிக்கொண்டேயிருந்தார். இதனால் அவருடைய விருப்பம் நிறைவேற ஏற்ற வாய்ப்பு அவருக்குக் கிடைக்கவாயல்லவா? இதுவும் ஆண்டவர் சித்தமே.

இதற்குள் நாகப்பூரிலிருந்து தாயகம் சென்றிருந்தவரும், என்னை ஏழு ஆண்டுகளாய் கண்கறிந்தவருமான

பிஷப் ஹார்டிக்கு எழுதி ஒரு பொர்சுக் கடிதம் கேட்டிருந்தேன். ஹார்டி பிஷப் உடனேயே பதிலெழுதி "சகாயம்! நீர் உமது பிஷப்பைக் குறைகூறுதேயும். கடவுளை நம்பிக் காத்திரும். நான் உமக்காக நாள்தோறும் மும்முறை ஜெபித்து வருகிறேன். நீர் கேட்ட கடிதமும் அனுப்புகிறேன்" என்று எழுதினார். அக்கடிதமாவது:

GARGRAVE VICARAGE,
SKIPTON,
YORKSHIRE,
13th February 1950.

The Rev. V. D. Sahayam served with me in the Diocese of Nagpur for most of the years during which I held that see. He was through out on the Staff of the Gondwana Mission in Mandla District.

I found him a man of more than ordinary ability, energy and resilience; endowed with an active mind; a ready and interesting speaker and preacher; prepared to face difficulties, and to undertake responsibility. I also found him a friend.

ALEC O. HARDY.
*Assistant Bishop of Bradford.*

(நான் நாகப்பூர் ஆதீனத்தின் பொறுப்பேற்று நடத்திய காலத்தின் பெருமபாகத்திலும் வி. டி. சகாயம் ஐயர் என்னுடன் உழைத்து வந்தார். அவர் மண்ட்லா ஜில்லாவின் கோண்டுவாணு மிஷனில் அக்காலம் தொடர்ந்து ஊழியராக இருந்துவந்தார்.

சாமானிய மனிதரைவிட அதிகத் திறமையும், வலிமையும், எவ்வித எதிர்பிற்குஞ் சலியா மன உரமும், ஓயாது அறிவை நாடும் வரமும், நினைத்தவுடன் சுவை

பட்டப் பேசவும், பிரசங்கிக்கவும் இயலும் ஆற்றலும், பொறுப்பை ஏற்கையில் ஏற்படும் இன்னல்களைச் சகிக்கும் குணமும் உடையவராக நான் அவரைக் கண்டேன். அவர் எனக்கு ஒரு நண்பருமாவர்.

அலக் ஓ. ஹார்டி.)

இந்த நற்சான்று இதழின் நகல்களை அனுப்பியே அன்று நான் வேலைக்காகப் பலருக்கும் மனுச்செய்திருந்தேன். அப்படியிருந்தும் மனிதனை நம்புவது வீண் என்பதை ஆண்டவர் எனக்குக் காட்ட விரும்பினார். வேதபுத்தகத்தின் வாக்கியங்களை எண்ணினால் அதின் நடு வாக்கியங்கள் 118-ம் சங்கீதம் 8-ம், 9-ம் வசனங்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதிக வேலையற்றவர்கள் எண்ணிப் பாருங்கள். வேத வினாக்களுக்கு விடை தேடும் பெண்களும், பிள்ளைகளும் இதைச் செய்து மகிழட்டும். அவை நடு வாக்கியங்களோ, அல்லவோ எனினும் அவற்றின் கருத்து வேதத்தின் நடுநாயகமானதே.

"மனுஷனை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்பதே நலம். பிரபுக்களை நம்புவதைப் பார்க்கிலும் கர்த்தர்பேரில் பற்றுதலாயிருப்பதே நலம்."

---

# நாகர்கோவில் வந்தேன்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பது ஏப்ரல் மூன்று முதல் பத்து வரை அவ்வருடத்தின் பரிசுத்த வாரம். அந்நாட்களில் நாகப்பூர் பிஷப் என் சபையில் ஆவிக்குரிய கூட்டங்கள் நடத்தத் தாமே தீர்மானித்து அங்கு வந்து, தங்கியுழைத்தார். என் மன நோவை

மிகுதியாக்க விரும்பித்தான் அப்படிச் செய்தாரோ என்பதைக் கடவுளே அறிவார். அந்நாட்களில் ஆலயத்தில் எல்லா ஒழுங்குகளையும் செய்துகொடுத்த நான் என் காரியங்களைக்குறித்து அவரிடம் வினவவில்லை. கூடிய மட்டும் முகங்கொடாமல் மறைந்து நடந்தேன். அடுத்த பங்களாவிலேதான் அவர் தங்கியிருந்தார். அவருடைய பிரசங்கங்களைக் கேட்ட சபையார் பலர் "இவ்வளவு அழகாய்ப் பிரசங்கம் செய்கிற இவர் நம்முடைய பாதிரியாரை ஏன் இப்படிச் சித்திரவதை செய்கிறார்" என்று வியந்தார்கள்.

அந்நாட்களில் அவருடைய மனதில் ஒரு ஐயம் இருந்தது. நான் அந்த வீட்டையும், வேலையையும் விட்டுப் போகாமல் இருந்துவிடுவேனோ என்ற ஐயமே அது. ஆகையால் ஏப்ரில் பத்தாம் தியதி ஈஸ்டர் இரவு ஒன்பது மணிக்கு, அவர் எழுப்புதல் கூட்டங்கள் நடத்தியபின், நாகப்பூருக்குத் திரும்பும்போது எனது வீட்டின் பக்கத்தில் வந்து நின்று, என்னைப் பெயர் சொல்லி அழைத்தார். என் மனைவி, "மனம் பதறி ஒன்றும பேசவேண்டாம்" என்று என்னை எச்சரித்து அனுப்பினார். அது நிலாக்காலம். நூறு கெஜ தூரத்தில் வேறு சில வீடுகளும் இருந்தன. ஒரு மாமர நிழலில் நின்று "எப்போ போகிறீர்" என்று கேட்டார். அவ்விடத்தை விட்டுவிடுவதற்கான எல்லா ஒழுங்குகளையும் செய்துகொண்டிருந்த நானோ, "நீர் மறுவேலை பார்த்துத் தந்தவுடனே" என்று பதிலுரைத்தேன். உரத்த சத்தமாய்ப் பேசினதைப் பலர் பார்த்து நின்றனர். மனமுடைந்துபோன நானும் அவருக்கு ஒரு பிரசங்கம் செய்தேன்.

"இம்மட்டும் என் ஆண்டவர் எனக்களித்த வெளிச்சத்துக்கு நான் கீழ்ப்படியாதவனாக இருக்கவில்லை. உமது நெஞ்சில் கைவைத்து நீர் இப்படிச் சொல்ல இயலுமா பாரும்" என்றேன். முகத்தைத் திருப்பிக் கொண்டே இருட்டிலே அவர் மறைந்துவிட்டார்.

நாலும் விடுவந்து, வழிகாட்டும் என்று ஜெபித்து முடித்தேன்.

ஏப்ரல் இருபத்தைந்தில் நாலு குழந்தைகளுடனும், அநாதையாய் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்து இரண்டுமுதலே எங்களுடன் தங்கியிருந்த சங்கர் என்ற சிறுவனுடனும் நாங்கள் ஜபல்பூரை விட்டுப் புறப்பட்டோம். போகுமிடம் இன்னதென்று அறியவில்லை. சங்கர், புத்தி தடுமாறிய தனது தாயுடன் பிச்சையெடுத்து நடந்தவன். தாய் இறந்துபோனபின் பத்து வயதான அச்சிறுவனை ஒரு மிஷனரி அம்மாள் கண்டெடுத்து பட்பருவின் அனாதைச் சாலைக்கு அனுப்பினர். இவனும் புத்தி குறைந்தவன். படிக்க இயலாதவன். கொண்டர் மிஷன் திருத்தியமைக்கப்பட்டபோது அநாதைசாலை மூடப்பட்டது. அப்பொழுது இவனை ஏற்றுக்கொள்வார் எவருமில்லாததால் அவன் திரும்பவும் பிச்சையெடுக்க நேரிடுமே என்று எண்ணி அவனை எங்கள் குடும்பத்தில் ஒரு அங்கமாகவே இம்மட்டும் வைத்திருக்கிறோம். புத்தி குறைந்தவனாயினும் அவன் உண்மையுள்ளவன். ஜெபப் பழக்கமுடையவன். நாள்தோறும் இந்தி வேதாகமம் படிப்பான். சோம்பல் என்றால் இன்னதென்று அறியாதவன். பேதமையாய்ப் பேசி (அரண்மனைக் கோமாளிபோல) எங்களது நெருக்கடியான வேளைகளிலும், நாங்கள் எங்களை மறந்து மகிழும் முறையில் தன்னையறியாமலே நடந்து கொள்ளுபவன். ப்ரேம்தாஸ் எனப் பெயர் வைத்து இவனை நான் திருமுழுக்காட்டினேன்.

நான் பிறந்து வளர்ந்த வீட்டிலும், ஊரிலும் போவது பயனற்றது. திருச்சிராப்பள்ளிக்கு டிக்கட் வாங்கினோம். ஜபல்பூர் தமிழ்க் கிறிஸ்தவர்கள் யாவரும், இந்திக் கிறிஸ்தவர்கள் பலரும் ரெயிலடிக்கு வந்தனர். தங்கள் விளையாட்டுத் தோழரை விட்டுப் பிரிய நேரிட்டதால் எங்கள் பிள்ளைகள் அழுதனர். சபை

யார் பலர் "இந்த நிலைமையில் போகிறார்களே" என்று ஏங்கினர். நாங்களும் அழுகழுது அனுப்பப்போயி னும், அத்தனை அன்பு பாராட்டியவர்களை நினைத்து ஆறுதலடைந்தோம். அழகிய ஒரு 'Eversharp' பென் ஒன்றையும், 'கடிகாரம்' ஒன்றையும் அம்மக்கள் அன் பளிப்பாக எங்களுக்களித்தனர். வழியில் நூறும் மைலில் மைன்பூரில் எங்கள் கொண்டர் காட்டு ஊழியரில் சில ரும், நாகப்பூரில் எங்கள் காலத்தில் ஞானஸ்நானம பெற்று நல்ல உயர் வேலையிலிருக்கும் ஒரு நண்பரின் குடும்பமும், சாந்தாவில் (மூன்னூறு மைல்) நாங்கள் மாப்பிள்ளை பார்த்துக் கலியாணம செய்துவைத்த தம்பதிகளும், தோர்ணக்கல்லில் (எழுநூறு மைல்) தமிழ் நாட்டின் பழைய நண்பர் சிலரும், சென்னையில் சிரோமணியின் அண்ணன் மகன் வின்சென்றும் எங் களைச் சந்தித்தனர். 28-ம் தேதி காலை திருச்சிராப் பள்ளி வந்து சேர்ந்தோம்.

அன்றும், இன்றும் திருச்சியில் எனது கொழுந்தி ஒருவர் குடும்பமும், மைத்துனர் இருவர் குடுமபங்களும் இருக்கின்றன. இளைய மைத்துனர் டாக்டர் மத்தி யாஸ். அவர் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து ஆறு முதல் சோமராசன் பேட்டை என்ற ஊரிலேயே தங் கியிருக்கிறார். அது திருச்சியிலிருந்து மூன்று மைல் தொலையிலிருக்கிறது. அவர் மனைவி மேரி அம்மாள் சங். S. V தேவதாசன் ஐயர் மகள். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்து எட்டில், நான் சிவகாசி யில் ஆறுமாதம் தங்கியுழைத்த நாட்களில் அவரும் அங்கிருந்தார். ஆத்தும தத்துவம் என்னும என் முதல் புத்தகத்தை முழுவதும எழுதி அச்சகத்தனுப்பினவர் அவரே. அன்று மேரி அமமாள் கல்லூரியில் படித் துக்கொண்டிருந்தார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பத்து ஆறில் எனது மைத்துனருக்கு அவரைப் பெண்ணாக ஒழுங்கு செய்யக் கடவுள் எனக்குக் கிரு பையளித்தார்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பது ஏப்ரில் இருபத்து எட்டு முதல் ஜூன் இருபத்து எட்டு மட்டும் எழு பேராடங்கிய எங்கள் குடும்பம் இந்த டாக்டர் வீட்டிலேயே தங்க நேர்ந்தது. மருந்தும், விருந்தும் மூன்றுநாள். நாங்களோ அழையா விருந்து. பிறருக்குப் பாரமான முறையில் வந்த விருந்து. சலிப்பில்லாமல் இக்குடும்பதை அறுபதுநாள் அருமையுடன் உபசரித்த அந்த மேரியம்மாளை ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக. தன் புருஷனுக்கு மிகவும் அருமையான சகோதரியின் குடும்பம். தனக்குக் கலியாணம் செய்து வைத்தவர் குடும்பம். சகாயம் பிரசங்கியார் குடும்பம். இம்மூன்றில் எது மேரியம்மாளுக்கித்த அன்பின் உபசரணையைத் தூண்டிற்றென்ற கேள்விக்கு ஏற்ற பதில், சிவகாசியில் பலபாடுபட்டுச் சுவிசேஷத்தை வல்லமையாக் கூறி உழைத்த தூய வாலிபன் சகாயம்பிரசங்கியாரே என்பதுவே.

நாடோறும் பிடில் வாசித்துப் பாடுவோம். இரவு குடும்ப ஜெபத்தில் ஒரு சிறு தியானமும் செய்வோம். தபால் அவ்வூரில் நண்பகல் பன்னிரண்டு மணிக்கு வரும். தபாலுக்காகக் காத்துக் காத்திருந்து கண் பூத்துப்போயின. மேற்கூறிய அத்தியட்சர்மாரின் கடிதங்கள் பலவும் அந்நாட்களில்தான் வந்து எட்டின. ஜூன் மாதம பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்க்கவேண்டும். ஸ்டீபனுக்கும், டேவிடுக்கும் தமிழே தெரியாது. ஆகையால் ஒரு ஆசிரியரை வைத்து அவர்களுக்குத் தமிழ் கற்றுக்கொடுத்தோம். சகாயம் பிரசங்கியாரை அறிந்த சபைகள் ஞாயிறுதோறும என்னைத் திருச்சிராப்பள்ளிக்கிழுத்தன.

பற்பல யோசனைகளை நண்பர் கூறினர். அவற்றில் ஒன்று நாகப்பூர் பிஷப் செய்த அநியாயத்தைச் சபைகள் அறியும்படியும், இனிமேல் வேறு யாருக்கும் அவர் இவ்வாறு செய்யாதிருக்கவும், இயல்நீதிக்கு மாறான (Natural justice) இந்தப் போக்கைக் கண்

டிக்கவும் நான் முயலவேண்டுமென்பதாகும். வேறு யாருக்கேனும் இப்படிச் செய்திருந்தால் நான் அவருடன் போராடுவது நியாயமாகலாம். எனக்காக வாதாடுவது நல்லதல்ல என்று நினைத்தேன். எப்படியும் இனிச்செய்யவேண்டியதென்ன என்பதைக்குறித்து ஆலோசிக்கவும், குமரி மாவட்டத்தில் என் இனத்தாரைப் பார்த்துப் போகவும் நான் தனியாய் மேய் மாதம் 3ம் தியதி நாகர்கோவிலுக்கு வந்தேன்.

நீதிபதியாய் (District Munsiff and 1st class Magistrate) பணியாற்றி ஓய்வு பெற்றிருந்த எனது மாமா (தாயாரின் தம்பி) திரு. பி. ஜி. மனோன்மணி, B A., B L. நாகர்கோவிலிலேயே அக்காலம் தங்கியிருந்தார். கெட்டகுமாரனாய் நான் பள்ளியை விட்டோடின அந்நாளில் எனக்குதவி செய்தவரும், வெயிலிலே குனிந்து நிற்கப்பண்ணின என் தந்தையைக் கண்டித்தவரும் இவரே. எனது கடிதங்கள் யாவற்றையும் அவர் நன்கு படித்தார். கதை முழுவதையும் கேட்டார். மறைக்க என்னிடம் ஒன்றுமில்லாதபடியால் யாவற்றையும நன்கு விளக்கி ஆதாரங்களும் காட்டினேன்.

தன் சகோதரியின் மகனை நான், நாற்பத்தைந்து வயதில் நாலு குழந்தைகளுடன் வேலையில்லாமல் தவிப்பதைக் கண்டதால் மட்டுமல்ல ஒரு பிஷப் இப்படிச் செய்வது அநீதி என்ற விறுவிறுப்பும், எரிச்சலும் கொண்டு அந்த பிஷப் பேரில் வழக்குத் தொடுக்கப் பிராதொன்றை அவர் ஆயத்தப்படுத்தினார். நாகப்பூருக்கே நான் சென்று இந்த வழக்கை அங்கேயே தொடுப்பதற்கு வேண்டிய ஊக்கமளித்தார். தனக்குத் தீர்ப்பெழுதும் பழக்கம்தான் மிகுதியென்றும், மனுவெழுதுவதற்கு வழக்கறிஞரே ஏற்றவர் என்றும் கூறி, அவர் எழுதின இந்தக் கைப்பிரதியைக் காட்ட என்னை திரு. ஏ. நேசமணி வக்கீலவர்களிடம் அனுப்பி வைத்தார்.

நானும் அவ்வாறே மறுநாள் மாலை ஐந்து மணிக்கு நாகர்கோவில், பெரின்பத்தெருவில் அக்காலம் தங்கி

வந்த திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரும், சிறையை அனுபவித்தவருமான, அரசியல் வாதியுமான திரு. ஏ. நேசமணி, பி.ஏ., பி.எல்., எம்.பி. அவர்களை விட்டிற்குச் சென்றோம். எழுத்தாளர்கள் யாவரும் என் கையிலிருந்தனர். வெளி வாசலுக்குத் தாண்டி வீட்டில் எல்லோரும் வேலை யில் என் மனதில் ஒரு எண்ணம்: "ஐயையோ! நேசமணி யெல்லாம் போடுவதா என் வேலை" என்று எழுந்தன. அச் சந்தர்ப்பத்தில் நான் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை.

அநியாயத்தை எதிர்ப்பதா, சகிப்பதா என்ற கேள்வி கிறிஸ்தவர்களுக்குப் போராட்டமாக எழும். பிறர் எதிர்ப்பர். சிலர் வேறு போக்கொன்றுமின்றிச் சகிப்பர். கடவுளடி நாடும் மக்களோ தயங்குவர்; நினைப்பர. சுய வசிமை, மனித உதவி இவற்றை நம்பி வாழ்வோரும் எதிர்ப்பர் அது நியாயமுமாகும். ஆயினும், "பாவிகளால் செய்யப்பட்ட இவ்வித விபரீ தங்களைச் சகித்த" இயேசு நாதரையே நினைத்துக் கொள்ள அழைக்கப்பட்ட விசுவாசிகள், ஊமையர் போலிருந்து சகிப்பதுவே அவர்களுக்கு ஏற்ற கடமை யாகும். ஊமையும், செவிடுமான ஒரு வாலிபன் காலில் மாட்டு வண்டி ஏறி பாதம் நசுங்கிவிட்டதை நான் ஒருமுறை கண்டேன். வாலிபன் கண்களில் நீர் பெருகிக், கன்னங்களில் வடிந்தது. ஆயினும் அழுகைக்கு வேண்டிய சொற்கள் அவனில் எழவில்லை. அன்று நான் சிறுவன். அவனுடைய நிலைமையைக் கண்ட நான் அலறி அழுதேன்.

"ஏன் என்னை அடிக்கிறாய்? தகாதனதை நான் செய்ததுண்டானால் அதை ஒப்புவி" என்ற ஆண்டவருடைய மொழிகளின் கருத்தையும் நாம் உணர்தல் வேண்டும். குற்றவாளியானதினால்தான் அடிக்கப்படுகிறார் என்று பிறர் எண்ணக்கூடும். அடிக்காதே என்று அவர் சொல்லாமல், அடிக்கக் காரணத்தைக் கூறுமாறே கேட்டார். அவ்வாறே நாமும் நமது குற்றமின்மையைப் பிறர் அறியும் வகையில் நடந்துகொள்ளக் கடமைப்பட்டுள்ளோம். ஆயினும் இது ஆவேயும், வேலை

யையும், சூழ்நிலையையும் பொறுத்தே இருத்தல் வேண்டும்.

அந்நேரம் வக்கீல் வீட்டிலில்லை. அதுவும் கடவுள் சித்தமே. மனைவி கோலேன் அம்மாள் அன்பாய் என்னை விசாரிக்கவே ஏற்ற விடைகூற எனக்குக் கூடிற்று. அவருடைய மகள் ஸில்வி அம்மாள் அன்று ஜபல்பூரில் இருந்தார்கள். அடிக்கடி நாங்கள் அவர்கள் வீட்டிற்கும், அவர்களும் கணவனும் எங்கள் வீட்டிற்கும் சென்றுவந்ததைப்பற்றி கூறிவிட்டுக் வெளியேறினேன். அந்த மகளைத் திருமணம் செய்திருந்த தயாசிங் என்ற வாலிபரின் தந்தையான திரு. டி. ஏம். ஜேசுதாஸ் சுவிசேஷகரின் வீடும் அத்தெருவிலேயே இருக்கிறது. அவர் வீட்டில்சென்று பிள்ளைகளின் விவரத்தைக் கூறினேன். அவர் அங்கில்லை. அவர் ஆலன் மண்டபத்தில் ஒரு கூட்டம் நடத்தப் போயிருந்தார். நான், கையிலிருந்த 'றெக்கார்டு'களுடன் அம்மண்டபத்திற்குச் சென்றேன். ஒருவர் கதாப்பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்.

கூட்டத்தின் முடிவில் தலைவரைக் கண்டு என் பெயரைச் சொல்லவே 'நீங்கள் வட இந்தியாவில் எங்கோ போய்விட்டீர்களாமே' என்றார். கூட்டத்தில் வந்திருந்த சிலர் சபையின் மூக்கன்மார். திரு. சத்தியதாஸ் ஜட்ஜ், திரு. டி. ஜாஷ்வா ஆசிரியர் போன்றோர். அது ஒரு புதன்கிழமை. சுவிசேஷகர் என்னிடம் 'ஞாயிற்றுக் கிழமை ஒரு பிரசங்கம் பண்ணக்கூடுமா?' என்று விசாரிக்கவே, நானும் 'ஆகட்டும்' என்று சொல்லிப் பிரிந்தேன்.

மறுநாள் நெய்யூரில் என் தங்கை மிஸிஸ். சரோஜினி ஜோசையா வீட்டில் சென்று இராமுழுவதும் வரலாற்றைச் சொன்னேன். ஞாயிறு காலையில் ஒப்புக் கொண்டபடியே நாகர்கோவிலுக்குத் திரும்பி வந்து எபி. 12:1 ல் பதினைந்து நிமிஷம் பிரசங்கம்செய்தேன். ஆங்கிலிக்கன் முறை, சிறு பிரசங்கம் செய்தல். ஆரா

தலை முடியவே ஜனங்கள் ஏமாந்துபோய் (ஒரு ஜெபமே அங்கு பதினைந்து நிமிஷம் இழுக்கும்!) இன்னும் கொஞ்சம் பேசியிருக்கலாமே என்றனர். திடீரென்று ஜபல்பூரில் மார்ச் பதிமூன்றில் கூறிய மொழிகள் ஞாபகத்திற்குவரவே, பிறகு பேசுகிறேன் என்று சொல்லிவிட்டு நான் என்.எம்.எஸ். செக்ரட்டறியாய் உழைத்த நாட்களில் பழகியிருந்த ஜே. டி. பிரெடரிக் தம்பதிகளைக் காணச்சென்றேன்.

நாகர்கோவில் சபையில் அந்நாட்களில் போதகர் எவரும் இல்லை. முன்னாள் போதகர் சங். ஜெ. ஈ. கேசரி ஐயர் 1948 ல் சேகரத்துப் போதகராய்ப் போய்விட்டார். அது சாக்கிரமெந்துகளை முக்கியமாகக் கொண்ட சபை அல்ல. ஆகையால் போதகர் இல்லாக் குறையை மக்கள் அந்நாட்களில் அதிகமாய் உணரவில்லை. அத்தேனே பட்டணத்தார்போல நவினப் பிரசங்கங்களைக் கேட்கவேண்டுமென்பதே அவர்கள் விருப்பம். அருளுரைகளை நிகழ்த்துவது யாராயினும் அவர்களுக்கு அதைக்குறித்து அதிகக் கவலையில்லை. 'The pulpit must shine', (பிரசங்கம் கவர்ச்சியாயிருக்கவேண்டும்) என்று அடிக்கடிக் கூறுவது அவர்களில் சிலருடைய பழக்கச் சொல். எனவே ஜேசுதாஸ் சுவிசேஷகர் என்னைப் பிரசங்கிக்க அழைத்ததில் வியப்பொன்றுமில்லை.

எனது பிரசங்கத்தைக் கேட்ட மக்களுக்கு என்னிடம் விருப்பம் உண்டானது முறையே. மறுநாளிலே நான் திரும்பி திருச்சிராப்பள்ளிக்குச் சென்றுவிட்டேன். ஒருநாள் நம்பிக்கை, மறுநாள் சோர்பு என்ற வண்ணம் நாட்கள் பல தாண்டின. நாகர்கோவில் சபைக்குள்ளே ஒரு சிறு பரபரப்பு ஏற்பட்டது.

அக்காலம் தென் திருவாங்கூர் திருமண்டலத்தின் தலைவரான பிஷப் லெக் மேனாடு சென்றிருந்தார். உப ஆசனபதியாக சங். ஜே. ஈ. கேசரி ஐயர் நியமிக்கப்பட்டிருந்தார். லண்டன் மிஷன் சபைகள் தங்கள் போதகர்

மாரைத் தெரிந்துகொள்ளும் முறை சற்று விநோதமா னது. எழு டீக்கன்மாரைக் கொண்ட சபைக்கமிற்றி, தாங்களாக ஒரு போதகரைக் குறிப்பிடவேண்டும். அவரை அழைத்து மேடையிலேற்றி, அவர் பிரசங்கத்தை மதிப்பிடுவது அடுத்தபடி. இப்படிப் பலர் 'புல்பிட்' ஏறி இறங்கியபின், அவர்களில் ஒருவரைக் குறித்து இந்த எழுபேரும் ஒரு முடிவுக்கு வருவர். அவர்கள் யோசனையை சபைக்குத் தெரிவிப்பர். சபைக் கூட் டம் பொதுவான அங்கீகாரத்தை அளித்தபின், கமிட்டி திட்டவட்டமான நடபடி எடுத்து, சம்பளம், படி, சலுகை இவற்றைக் குறித்து அவருடன் பேச்சு வார்த்தை நடத்தும். பெண்பேசுவதுபோன்ற இந்த முறையிலும் நன்மையில்லாமலில்லை.

திருச்சிராப்பள்ளிக்கு நான் சென்றபின் என்னி டம் அக்கரைகொண்ட என் மாமனர் மனோமணி மூன் சிப் எனக்கு "நாகர்கோவிலுக்கு ஒருவரைப்பற்றி உனக்கு நோக்கம் இருக்குமானல், நீ இங்கு வந்து சில நாட்கள் தங்கி, கூட்டங்களில் பேசி ஜனங்களுக்கு அறிமுகமாகவேண்டும். ஒரே பிரசங்கத்தால் காரியம ஆவதில்லை" யென்று எழுதினர்.

தென்னிந்திய சபையின் மாடரேட்டர் பிஷப் ஹாலீஸ் அந்நாட்களில் மேனடு சென்றிருந்தார். செல் லுமுன் "உடமை எங்காவது ஏற்றுக்கொள்ளக்கூடும். ஆனல் ரூ 250 சம்பளம் இங்கு ஒரு போதகருக்கும் கொடுக்கப்படுவதில்லை" என்று எழுதியிருந்தார். அவர் நாகப்பூர் பிஷப்பை நன்கறிந்தவர். என்னையும் 1930ல் இருந்தே அறிந்தவர். அப்படியே பிஷப் லெக்கும் "நல்ல சம்பளம் கொடுக்கக்கூடிய சபைகள் சில இங்கு உண்டு. ஆனலும் அவற்றில் வேலை கிடைப்பது எளி தல்ல. சபையார்தான் போதகரைத் தெரிந்துகொள்ள வேண்டும். இவ்விதமான 'ட்ரான்ஸ்பர்' நோட்டீசைக் கொடுக்கக் காரணமென்ன என்று என்னிடம் கேட் டால், எனக்குத் தகுந்த பதில்சொல்ல ஏதுவில்லையே" என்று எழுதினர்.

"பிரசங்கம் பண்ணுவது தேவையானால், மறுபடியும் ஒருமுறை நாகர்கோவிலுக்கு வருவது எனக்குப் பிரியம்தான்" என்று நான் என் மாமனாருக்குத் தெரிவித்தேன். 1950 ஜூன் பத்தொன்பதுமுதல் இருபத்தைந்துவரை சிற்சில கூட்டங்களில் பிரசங்கிக்க இரும்பவும் நான் நாகர்கோவிலுக்கு வந்தேன். இருபத்தைந்து ஞாயிறு காலை ஆராதனையில் "இந்த வீண் செலவு என்னத்துக்கு" என்ற மத். 26:8 ல் இருபது நிமிஷநேரம் பேசினேன். இந்தப் பெண்தான் எனக்கு வேண்டுமென்று ஒற்றைக் காலில் நிற்கும் வாலிபர் போல் அன்று நாகர்கோவில் சபையார் ஏகோபித்து என்னை விரும்பினர்.

ஜூன் இருபத்தாறும் தேதி திங்கள் மாலை சபைக் கமிற்றி கூடி, என் பெயரைச் சபைக்குச் சொல்லத் திட்டமிட்டது. இச்செய்தி இருபத்தேழாம் தேதி தந்தி மூலம் திருச்சியில் எனக்குக் கிடைக்கவே, ஜூன் இருபத்தெட்டில் நாங்கள் புறப்பட்டு இங்குவந்து முதல் மகனை மட்டும் டதி ஸ்கூலில் சேர்த்துவிட்டு, ஏனையோர் என் வீட்டார் குடும்பங்களில் ஆகஸ்டு இருபத்திநான்கு மட்டும் நெய்யூர், கொற்றிகோடு, (என் தம்பி ஏசுதாஸ் ஐயர் அங்கு போதகர்) தோட்டவாரம், காட்டாக்கடை (என் தமக்கை திருமதி ஞானத் தங்கம்மாள் ஏனோஸ் குடும்பத்துடன் அமரவிளையை விட்டுவந்து இங்கே வாழ்ந்து வருகின்றனர்.) ஆகிய இடங்களில் தங்கினோம்.

ஆகஸ்டு பதிமூன்றில் சபைக் கூட்டத்தில் தேர்வு நடந்தது. மூன்றில் இரண்டு பாகத்தார் ஓட்டுச்செய்யவேண்டும். அவர்களில் முக்கால்பங்கு ஓட்டு சாதகமாக இருக்கவேண்டும். அப்படியானால் மட்டுமே போதகர் தெரிந்துகொள்ளப்படுவார். என்னுடைய "தேர்தல் சீட்டுகள் எண்ணப்பட்டதில் மொத்தம் எண்ணூற்றி ஆறுபேர் ஓட்டுச் செய்ததாகவும், எழுநூற்றி எழுபத்திமூன்றுபேர் சாதகமாகவும், பதினெட்டுபேர் பாதகமாக ஓட்டு செய்ததாகவும், பதி

வைத்து முட்டுகள் தள்ளப்பட்ட[illegible]ன்றும் அறிவிக்கப்பட்டது.” அப்படியே 1950 ஆகஸ்டு இருபத்தேழு காலை பத்துமணிக்கு நான் நாகர்கோவில் சபைக்கு ஊழியக்காரனாய் கடவுளாலேயே குறிப்பிடப்பட்டு, அனுப்பப்பட்டு, வந்து சேர்ந்து, நியமிக்கப்பட்டேன்.

ஒருமுறையாகச் சொன்னால் சிலுவைப்பாடுகள் முடிந்தன. ஈஸ்டர் காலை வந்தது. 1950 கிறிஸ்மஸ் இரவு நாகர்கோவிலைச் சேர்ந்த வாலிபர் பலர் தெருக்களில் பாடியலைந்து மகிழ்ந்தனர்.

“மண்டைக்குத்து காய்ச்சலுக்கு மருந்துக் கஷாயம்
நாகர்கோவில் சபையாருக்கு வி. டி. சகாயம்”

என்ற வரிகளே அவர்கள் பாட்டின் பல்லவி.

ஆகாதென்று தள்ளப்பட்ட சகாயமே இந்நாட்டுச் சபைகளிலெல்லாம் பெரிதாக எண்ணப்படும் நாகர்கோவில் சபைக்கு மேற்கூறிய வகையில் போதகரானார். இது கடவுளாலேயே ஆயிற்று. உலக மனிதர் கண்களுக்கு இது ஆச்சரியமாக இருக்கிறது.

முதலாம் பாகம் முற்றிற்று.

---